# நாடி வாகடம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 414

# நாடி வாகடம்

## (நாடியும் நோய் கணிப்பும்)

*(தொகுப்பு நூல்)*

*சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர் :*

சித்த மருத்துவ கலைஞர்

டாக்டர். **மு. சௌரிராஜன்.**

சித்த மருத்துவ ஆராய்ச்சியாளர்,

சென்னை - 600 030

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**

**சரசுவதி மகால் நூலகம்,**

*தஞ்சாவூர்.*

*2007* விலை : ரூ. *160-00*

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : நாடி வாகடம் (நாடியும் நோய் கணிப்பும்) |
| பதிப்பாசிரியர் | : டாக்டர். மு. சௌரிராஜன் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 414 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : பிப்ரவரி, 2007 |
| தாள் | : டி. என். பி. எல். 18.6 கி. கி. |
| நூல் அளவு | : 24 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 456 |
| படிகள் | : 500 |
| எழுத்து | : 11 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : மெலிந்த அட்டை |
| பொருள் | : மருத்துவம் |
| விலை | : ரூ. 160/- |

# வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழிச் சுவடிகளின் கருவூலமாகவும் பன்மொழி நூல்களின் களஞ்சியமாகவும் திகழ்ந்து வருவது நம் சரசுவதி மகால் நூலகமாகும்.

இலக்கியம், மருத்துவம் முதலிய பல்துறைகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான சுவடிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்த நூலகம், அவற்றுள் அருமைவாய்ந்த வற்றைத் தக்க நுண்மான் நுழைபுலச் சான்றோர்களைக் கொண்டு பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது. இவ்வெளியீட்டுப் பணியின் தொடர்ச்சியாக **நாடி வாகம்** எனும் இந்நூல் இரண்டாம் பதிப்பாக தற்பொழுது வெளிவருகின்றது.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" - குறள்

நாடி வாகடம் எனும் இம்மருத்துவ நூல், மருத்துவர் திரு. மு. சௌரிராஜன் அவர்களால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. சித்தமருத்துவ முறைகளுள் ஒன்றான நாடி பார்த்து அதன்வழி மருத்துவ நலம் பேணுதல் குறித்து இந்நூல் அமைந்துள்ளது.

குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை உள்ளவர்களின் நாடி பார்த்து, நோய் என்ன என்று தெரிந்து அதற்கேற்ற மருந்துகளைக் கொடுத்து செய்யும் சிகிச்சை முறைக்குப் பெயர்தான் சித்தவைத்திய முறை.

நாடி பார்ப்பதினால், வியாதிவரக் காரணங்கள், அவ்வியாதியின் குணங்கள், அதனால் மனித உடம்பில் ஏற்படும் குண, குறி மாறுபாடுகள் இவைகளை அறிந்துகொள்ளமுடியும்.

இந்நூல் வெளிவர நிதியுதவி வழங்கிய நடுவண் அரசுக்கும், இந்நூலினை நன்முறையில் பதிப்பித்தளித்துள்ள பதிப்பாசிரியர் மருத்துவர் திரு. மு. சௌரிராஜன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலினை கணினியில் அச்சிட்ட கணினி பிரிவினர் அனைவருக்கும், இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவனசெய்துள்ள நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) வகிக்கும் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்கள்.

இம்மருத்துவ நூற்பதிப்பு, சித்த மருத்துவ வல்லுநர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் பெரும் பயனளிக்கும் என நம்புகின்றேன்.

**சா. விஜயராஜ் குமார்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

*தஞ்சாவூர்*
*13-2-2007*

*க. **அன்பழகன்**, எம். ஏ.,*
*கல்வி அமைச்சர்*

*தலைமைச் செயலகம்*
*சென்னை - 600 009*
*நாள் 31-3-2000*

# அணிந்துரை

***நாடி வாகடம்*** *என்னும் இந்த அரிய சித்த மருத்துவ அடிப்படையான **நாடி விளக்க நூல்** புகழ்பெற்ற தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தின் கொடையாக என் அன்புக்குரிய சித்த மருத்துவக் கலைஞர் திரு. மு. சௌரிராஜன் அவர்களது ஆர்வமிக்க முயற்சியால் நூலாக இயற்றப்பட்டு வெளிவந்துள்ளது. சித்த மருத்துவத்துறை வல்லார், நோய் முதல் நாடும் பணியில் மனித உடலியற்கையில் தோன்றும் வேறுபாட்டைக் கூர்த்தறிய இன்றியமையாததாகும். நாடி பற்றிய இந்நூல் மிகவும் பயனுடையதாகும்.*

*தொல்லுலக மாந்தருள்ளும் தொல்லினமாகத் தோன்றி, நானில - நாகரிகம் கண்டு, முத்தமிழ் மொழியினில் இலக்கிய இலக்கணம் கண்டு, நுண்கலைகள் பலவும் வளர்ந்து, மனித மன உணர்வின் சிறப்பினைத் தெளிந்து அகமும், புறமும் வகுத்து, மானிட வாழ்க்கை ஒழுக்கத்தால் உயர்வது தெளிந்து முப்பாலாம் வள்ளுவம் வழங்கிய தமிழ் இனத்தின் அறிவியல் தேர்ச்சிக்குச் சான்றாக விளங்குவது **சித்த மருத்துவம்.***

*தற்சார்பு உணர்வின் பற்றறுத்த திறத்தால், உண்மை தெளியும் உள்ளுணர்வு ஓங்கிய சித்தர்கள் கண்டறிந்து உணர்த்திய இந்த மருத்துவம், தலைமுறைகள் பலப்பலவாகப் பயன்படுத்தப்பட்டு, நோய் நீக்கவும், உடல் நலம் பேணவும் துணையாகியுள்ளது. நவீன அறிவியல் சாதனங்களால் அலோபதி முதலான மருத்துவ முறையால் பெறும் சிகிச்சையால் அடையும் நீடித்த பயனைவிடச் சிறந்த பயன் தருவதுடன், எதிர்மறை (ஒவ்வாமை) விளைவு ஏற்படுத்தாததும், நீடித்த நல்வாழ்வுக்குத் துணையாவதும் சித்தமருத்துவ முறையின் பெருமையாகும்.*

தகுந்த மருத்துவரை அறிந்து தரமான மருந்துகள் கிடைக்கப் பெற்று, உரிய பத்தியத்தையும் ஏற்றுப் பொறுமையோடு சித்த மருத்துவத்தைக் கைக்கொள்ளும் தெளிவுடையார் நல்ல பயன் பெறுவர். இன்றைய தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களும், நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர்க்காடு வீராசாமி அவர்களும், சித்த மருத்துவம் வளரவும், மக்கள் அதன் பயன் பெற்று நல்ல சிகிச்சை பெறவும் ஏற்ற பல திட்டங்களை அரசின் சார்பில் நிறைவேற்றி வருவதை அறியாதார் இல்லை. எனினும், சித்த மருத்துவர்கள் பலரும் நோயாளிகட்குத் தகுந்த சிகிச்சையும் தரங்குன்றா மருந்தும் கிடைக்கச் செய்வதிலும். நோயாளிகட்குத் தெளிவான நம்பிக்கை ஏற்படச் செய்வதினாலுமே இந்த மருத்துவத்தை மக்கள் விரும்பி நாடித் தேடிவரும் நிலை வளரும் என்பதை மறத்தலாகாது.

***நோய்நாடி, நோய்முதல் நாடி அதுதணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் செயல்.***

என்னும் குறள் ***நாடி*** என்னும் சொல்லை எந்த வகையில் எல்லாம் பயன்படுத்தியுள்ளது என்பதைச் சிந்திப்பார் சித்த மருத்துவ முறையின் ***உயிர்நாடி நாடியே*** என்பதைத் தெளிவர். நோயாளியின் கைநாடியில் மருத்துவர் மூன்று விரல்களைப் பதித்து அது துடிக்கும் வகை கண்டு, நோய் ஏற்படுவதற்கு மூலமாகும், வாதம், பித்தம், கபம் மிகுவதும் குறைவதும் உள்ளத்தால் நாடி அறிந்து, அதைத் தணிக்கும் முறையினை மருத்துவ அறிவால் நாடி, நோயாளிக்குப் பொருந்துமாறு, சிகிச்சை மேற்கொள்ளலாகும் என்பதால் நாடியின் முதன்மை அறியலாம். வளி முதலா எண்ணிய மூன்றையும் **நாடி**யைப் பயன்படுத்தியுள்ளார், திருவள்ளுவர்.

இந்த நூலில் நாடியும் நோய்க் கணிப்பும் குறித்து 500 க்கு மேற்பட்ட குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. நாடியின் உற்பத்தி என்னும் தலைப்பில் 60-க்கும் மேற்பட்ட விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. வேறுபட்ட நோய்களில் நாடி பேசும்வகை (Various aspects of pulse in different dises) என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

திரிநாடிகளின் இயல் என்னும் உள்தலைப்பில் தொடங்கி, நாடியை நாடி அறியும் வகையை விரித்து, அதனால் தெளியலாகும் நோயின் தன்மையை விவரித்துள்ளது மிகவும் பயனுடையதாகும். இந்நூலில் வரும் மேற்கோள்கள் பலவும், சித்த மருத்துவருக்குத் தெளிவளிக்கும் சிறப்புடையன.

இந்தச் சிறப்பான விளக்கம் தரும் நாடி பற்றிய நூல் (நாடி வாகடம்) அச்சேறுதற்கு உரிய மூல ஏட்டினைக் காத்து அளித்த தஞ்சை சரசுவதி மகால் நம் நன்றிக்குரியது. இந்த நூலை வெளிவரச்செய்வதில் கடமை உணர்வுடன் அரும்பணியாற்றி யுள்ளவர் டாக்டர். எம். எஸ் ராசன் (மு. சௌரிராசன்) ஆவார்.

மூலிகைத் தோட்டம் அமைப்பதில் மிகுந்த பயிற்சியும், ஆர்வமும் கொண்ட டாக்டர் ராசன், இந்த நூலை வெளியிடுவதிலும் முனைந்து செயற்பட்டுள்ளது நமது பாராட்டுக்குரியதாகும். சித்தமருத்துவரும், அந்த மருத்துவத்தில் ஆர்வமுடையோரும், சித்த மருத்துவத்துறை மாணவர்களும், இந்த நூலைத் தவறாது படித்தும், பயின்றும், பயன்படுத்திக் கொள்ளத் தவறலாகாது என்று விழைகிறேன்.

க. அன்பழகன்.

மரு. பேராசிரியர்.
**அ. மு. பசியுத்தின் அகமது,** M. D. (S)
துணை இயக்குநர்.

எய்ட்ஸ் மற்றும் புற்றுநோய்,
ஆராய்ச்சிப் பிரிவு,
அறிஞர் அண்ணா,
இந்திய மருத்துவமனை,
அரும்பாக்கம்,
சென்னை - 600 106

# அணிந்துரை

***இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து***
***அதனை அவன்கண் விடல்*** - வள்ளுவன் வாக்கு

தமிழர்களாகிய நாம் எண்ணி எண்ணி பெருமைப்படக் கூடிய சிறந்த அறிவியல் தத்துவமுறையே சித்த மருத்துவம் ஆகும்.

***நோய்நாடி, நோய்முதல் நாடி அதுதணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் செயல்*** - என்ற குறளோடு

தனி மருந்தியல் அதிகாரத்தைத் தந்த வள்ளுவன் வாக்குப்படி எண்வகைத் தேர்வுகளாலும் அதில் சிறப்பாக நாடி இயலையும் கொண்டு நோய் கணிக்கும் முறையே சித்த மருத்துவம் ஆகும். இது தற்கால நவீன மருத்துவ நோய் கணிக்கும் முறைக்கு எள்ளளவும் குறைந்ததல்ல. அதனினும் பல படிகள் உயர்ந்த முறை. பரிசோதனைச் சாலைகளின் முடிவுகளின்படி ஆளுக்கு ஆள், நாட்களின் முறைகள், கணிப்புகள் மாறுபடும். ஆனால், நாடியினை முறையாகக் கற்றுக்கொண்டவர்களின் கணிப்பு எந்த வகையிலும் மாறுவதில்லை. நாடியைக் கொண்டு முழுமையான கணிப்பு அறிந்தவர்கள், கற்றதை மற்றவர்களுக்கு விளக்குபவர்களின் எண்ணிக்கை அரிதாகிக்கொண்டே போகிறது. சித்த மருத்துவக் காவலர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் அடித்துக் கூறுவது எல்லாம் ஒவ்வொரு வைத்தியன் மறைவுக்குப்பின் ஒவ்வொரு சிறப்பான மருத்துவ முறையும் மண்ணுக்குள் புதைக்கப்படுகிறது அல்லது எரியூட்டப்படுகிறது. ஒரு சில வைத்தியர்கள் மட்டுமே, தான் கற்றதை பிறருக்குப் பயன்படும்படி நூலின் வாயிலாக வெளிக்கொணர்கின்றனர்.

நோய் கணிப்பில் நாடியும் நோய் கணிப்பும் எல்லோரும் எளிதில் கண்டுபிடிக்க இயலாத ஓர் சிறந்த அறிவியல் முறை. அப்பேர்ப்பட்ட சிறந்த முறையான நாடி இயலை நூல் வழியாக உலகத்தார் அனைவருக்கும் தெரிந்துகொள்ளும்படி பதிப்பிப்பது என்பது எளிதான காரியம் அல்ல. இந்நூலின் பதிப்பாசிரியர் மிகச் சிறந்த சித்த மருத்துவக் குடும்பத்தின் வழிவந்தவர். வாய் திறந்தாலே *18* சித்தர் பாடல்களும் தாளநயத்தோடும், பொருள் விளக்கத்துடனும் ஒப்புவிக்கக்கூடியவர். இன்றளவும் குருகுலம் வைத்து சித்த மருத்துவ செயல்முறைகளை சித்தமருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும், சித்த மருத்துவத்தின்பால் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளவர்களுக்கும் மாலை தோறும் இலவச வகுப்புக்கள் நடத்திக்கொண்டிருக்கின்றார்.

தற்போது சித்த மருத்துவ பட்ட மேல்படிப்பில் புதிதாக இரண்டுதுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே நான்கு துறைகள் (குணபாடம், மருத்துவம், மருத்துவச் சிறப்பு, பிள்ளைப் பிணி மருத்துவம்) உள்ளன. புதிதாக ஆரம்பித்த துறைகளில் நோய் நாடல் துறையும் ஒன்று. அனைத்துத் துறைகளிலும் நோய் நாடில், நாடி இயல் இருப்பினும் நோய் நாடல் துறை சிறப்பாக நாடி இயலை மையமாகக் கொண்டது. அம்மாணவர்களுக்கும், பட்டப் படிப்பு மாணவர் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களுக்கும், பாடநூலாக வைக்கக்கூடிய தகுதி பெற்ற நூலாகும்.

இந்நூல் சித்தவைத்தியம் அறிந்த அனைவருக்கும் காலம் காலமாகப் பாதுகாத்துவைக்கவேண்டிய பெட்டகம் ஆகும். அவரின் இந்த சீரிய முயற்சி தொடர்ந்து இதனைப் போன்ற பல சித்தமருத்துவ ஆராய்ச்சி நூல்களை வெளியிட எல்லாம் வல்ல இறைவன் அருளும், அவருக்கு நீண்ட ஆயுளும், வலிமையும் தர வேண்டுகிறேன்.

வாழ்க தமிழ் ! வளர்க சித்த மருத்துவம் !

சென்னை
*11-2-2000*

பேராசிரியர்
அ. மு. பசியுத்தின் அகமது

**மரு. புது. செயப்பிரகாசு நாராயணன்**, M. D. (S)
சிறப்பு மருத்துவப் பேராசிரியர்.

அரசு சித்த மருத்துவக் கல்லூரி,
சென்னை - 600 009
11-2-2000

மரு. சௌரிராஜன் அவர்கள் எழுதிய **நாடி வாகடம்** (நாடியும் நோய் கணிப்பும்) நூலை ஆர்வத்தோடு படித்தேன். மருந்து என்ற அதிகாரத்தில் தெய்வத்திருவள்ளவர் முதன்மையாகச் சொன்ன குறள் :

***நோய்நாடி, நோய்முதல் நாடி அதுதணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் செயல்*** - என்ற குறளோடு

என்பதே. நோய் நாடுவதற்கான வழிமுறைகளாக நம்முடைய சித்தர்கள் வகுத்துக் கொடுத்த வழிமுறைகள் எட்டு.

*நாடி பரிசம் நாநிறம் மொழி விழி*
*மலம் மூத்திரம் மருத்துவர் ஆயுதம்*

என்பார் தேர சித்தர். அந்த எண்வகையான வழிமுறைகளிலும் தலையாயது நாடிக் கணிப்பு.

இன்றைக்கு நாடியினால் நோயைக் கணிக்கின்ற ஆற்றல் படைத்தவர்களும் - இவ்வாறு தன் ஆற்றலை வெளிப்படுத்தி மற்றவர்களுக்குக் கற்றுத்தரும் ஆற்றல் படைத்தவர்களும் மிக மிகக்குறைவு. மனதை ஒருநிலைப்படுத்தி புலன்களைச் சரியாக நெறிப்படுத்துகின்ற ஆற்றல் படைத்த சித்தர்களும் அவர்கள் வழிவந்தவர்களும் நாடிக் கணிப்பில் விற்பன்னர்களாக திகழ்ந்ததில் வியப்பில்லை.

இன்றைய நிலையில் சித்த மருத்துவர்களும் எளிய மற்றும் துல்லியமாக நோய்க் கணிப்பிற்கு வழிசெய்கின்ற ஆய்வுக்கூட அணுகுமுறைகளை நம்பியிருக்கின்றனர். எனினும், ஒவ்வொரு சித்த மருத்துவரும் நோய்க் கணிப்பின் இன்றியமையாமையை உணர்ந்திருக்கின்றனர்.

மருத்துவர் சௌரிராஜன் சிறந்த நூல் அறிவும், அனுபவ அறிவும் நிறைந்தவர். தமிழ் உணர்வு படைத்தவர்.

என் தமிழ்ப்பற்றின் காரணமாக என்மீது பற்றுக்கொண்டு 25 ஆண்டுகளுக்கு முன்னால் அவர் எழுதிய சித்த மருத்துவச் சுடர் நூலுக்கு நான் அணிந்துரை எழுதவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அந்த நூல் வெளிவந்தபோது சித்த மருத்துவத்தில் எங்களையெல்லாம் வளர்த்துக் கொண்டிருக்கிற தாயாக நாங்கள் கருதிக்கொண்டிருக்கின்ற பேராசிரியர் அன்பழகன் அவர்களுடைய அணிந்துரையும் இடம் பெற்றிருந்தது. நான் எதிர்பாத்தது போலவே சித்த மருத்துவச் சுடர் பெரும் அளவிற்கு மருத்துவர்களுடைய வரவேற்பைப் பெற்றது. எண்ணங்கள் சரியாக இருக்கின்றபொழுது இயற்கையும் முழுமையாக நம்மோடு ஒத்துழைக்கும் என்று இதயபூர்வமாக நம்புகிறவன் நான். சித்த மருத்துவச் சுடர் எழுதியதற்காகத் தமிழக அரசால் மரு. சௌரிராஜன் சிறப்பிக்கப்பட்டார்.

இன்று பல சித்த மருத்துவப் பட்டதாரிகளுக்கு தான் கற்றறிந்த சித்த மருத்துகளின் செய்முறைகளைக் கற்றுத் தருகின்றார். நாடியைப் பற்றி அமைந்துள்ள நூல்கள் எண்ணில. அவற்றின் மொத்தப்பிழிவையும் மருத்துவர் சௌரிராஜன் இந்த நூலில் நல்ல முறையில் தொகுத்துத் தந்திருக்கிறார்.

நாடியின் இயல் (Definition) இயல்பான செயல்பாடு, (Physiology), நோய் நிலையில் நாடி (Pathology) நோய் கணிப்பில் நாடி (Prognosis) நோய் தீரும், தீரா நிலையில் நாடி (Prognosis) ஆகியவற்றை இந்நூலைப்போன்று தெள்ளத் தெளிவாகத் தொகுத்துச் சொல்லுகின்ற நூல் வேறெதுவும் கிடையாது.

நாடிக்கணிப்பைப் பற்றிய நூல் அறிவை வளர்த்துக் கொள்ள விரும்புகின்ற ஒவ்வொரு சித்த மருத்துவரும் இந்நூலைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

சித்த மருத்துவ உலகமும் மக்களும் மருத்துவர் சௌரிராஜனுடைய திறமைகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்ற கவலை எனக்கு 25 ஆண்டுகளுக்கு முன்பும் இருந்தது; இப்போதும் இருக்கிறது.

தமிழ் வாழ, தமிழ் மருத்துவம் வளர தொடர்ந்து தொண்டாற்றும் மருத்துவர் சௌரிராஜனுடைய முயற்சிகள் வெல்ல எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு* - பாவேந்தர்

சென்னை
*11-2-1999*

புது. செயப்பிரகாசு நாராயணன்,



# பதிப்பாசிரியர் உரை

தமிழ் மொழியில் அனைத்து மக்களுக்கும் பயன் அளிக்கக்கூடியது ஒன்று உண்டென்றான் அதுவே மருத்துவக் கலையாகும். தமிழ் மருத்துவக் கலைக்கு சித்த மருத்துவம் என்று பெயர். இக்கலை மக்களை பாதுகாக்கவே வளர்ந்து வருகின்ற உன்னதக்கலை. மருத்துவக் கலைக்கு நிகராக வேறு எந்தக் கலையும் ஒப்பிட இயலாது. மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சாதி, மதம், மொழி, இனம் ஆகிய வேற்றுமைகளை எல்லாம் கடந்து அனைத்து வயதினருக்கும் நல்வாழ்வு அளிக்க வல்லது தமிழ் மருத்துவக்கலை என்றால் அது மிகையாகாது.

நம் நாட்டில் மருத்துவக் கலையை வளர்த்த சித்தர்கள் மருத்துவ ஆய்வுடன் நின்று விடாமல், மக்கள் உடல்நலம் பெற்று, நல் அறிவையும் பெற்று, மெய்ஞானம் அடைய நல்வழி காட்டியுள்ளனர். ஏற்றதாழ்வு இருப்பினும், மனித குலம் ஒன்றே என்ற உயர்ந்த அடிப்படைத் தத்துவத்தின் மகத்துவத்தைத் தெள்ளத் தெளிவாக விளக்கியுள்ளார். சித்த மருத்துவ முறைகளை வகுத்தவர்களில் அட்டமாசித்தி பெற்ற பதினெட்டு சித்தர்கள் சிறப்புடையோர் ஆவார். இவர்கள் நாடியைப் பற்றி நன்கு தெரிந்து, மனிதனுக்குள்ள மூன்று குணங்களைத்தான் திரிதோஷம் என்று சொன்னார்கள். நோய் கண்ட மக்களுக்கு, அவர்கள் சரீரத்தில் வந்திருக்கும் முறைகேடான குறிகுணம் மாறுபாடுகளை அறிந்து, உணர்ந்து சொல்லும் முறைதான் நாடி பார்த்தலாகும். அதாவது நோயாளிகளின் கையைப் பிடித்து, நரம்புகளைத் தொட்டு, திரிதோஷ நிலைகளை முறையே வாத, பித்த, கபம் (நீர், நெருப்பு, காற்று) ஓட்டங்களின் நிலையை அறிந்து, உணர்ந்து, தெரிந்து நோயைக் கணிக்கும் முறையே நாடி பார்த்தலாகும்.

குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை இப்படியாக நாடி பார்த்து, நோய் என்ன என்று தெரிந்து அதற்கேற்ற மருந்துகளைக் கொடுத்து செய்யும் சிகிச்சை முறைப் பெயர்தான் சித்தவைத்திய முறை.

நாடி பார்ப்பதினால், வியாதிவரக் காரணங்கள், அவ்வியாதியின் குணங்கள், அதனால் மனித சரீரத்தில் ஏற்படும் குண, குறி மாறுபாடுகள் இவைகளை அறிந்து கொள்ளமுடியும்.

நாடி பார்ப்பது மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து இதுவரை இதுபோன்ற ஒருநூல் ஏதும் வெளிவரவில்லை. 569 தலைப்புகளில் அரிய பல கருத்துக்களைக் கூறும் **நாடிவாகடம்** என்னும் இந்நூல் பல சித்த மருத்துவ நூல்களில் சிதைந்து இருந்தவைகளைக் கோர்வையாக முழுமையாகச் சேர்த்து எழுதப்பட்டுள்ளன. மேலும், மூலப்படியின் ஏட்டில் காணப்பட்ட பல பிழைகளை முடிந்த அளவு திருத்தி எழுதப்பட்டுள்ளன. இருப்பினும் நாடி பார்த்து நோய் கணிக்க நேர்முகமாக, வழிவழியாகவே பயிற்சி பெறும்போதுதான் அதன் சிறப்பினை உணரமுடியும்.

இந்நூலில் வரும் சித்தர் பாடல்களுக்கு என்னால் தெரிந்த அளவிற்குப் பொருள் எழுதியுள்ளேன். இதில் ஏதேனும் தவறு உள்ளதாக வாசகர்கள் தெரிவித்தால், அதை திருத்தி அடுத்துவரும் பதிப்புகளில் வெளியிட வசதியாக இருக்கும்.

தற்காலம் தமிழ்நாட்டில் சித்த மருத்துவம் எல்லோராலும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டுவருகின்றது. அதை உணர்ந்த அரசும், சித்த மருத்துவக் கல்லூரிகளை நிறுவி, சித்த மருத்துவப் பட்டதாரிகளை உருவாக்கி வருகின்றது. அப்படி சித்த மருத்துவத்தில் பட்டப் படிப்புப் படிக்கும் மாணவர்களுக்கு நாடியைப் பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ள இந்நூல் பெரிதும் பயன்படும் என்று

கருதுகிறேன். நாடி சம்பந்தமாக முறையாக மாணவர்கள் தெரிந்துகொள்ள இந்நூலை சித்த மருத்துவக் கல்லூரிகளில் ஒரு பாடமாக வைக்க ஆவன செய்ய அரசிற்கு என் வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய தமிழக கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ., அவர்களுக்கும் சென்னை அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை துணை இயக்குநர் பேராசிரியர் மரு. அ. மு. பசியுத்தின் அகமது, எம். டி. (சி) அவர்களுக்கும், சென்னை அண்ணா நகர் இந்திய மருத்துக்கல்லூரி சிறப்பு மருந்தியல் துறைப் பேராசிரியர் மரு. புது. செயப்பிரகாசு நாராயணன், எம். டி., (சி) அவர்களுக்கும், இந்நூலைப் பதிப்பிக்க அனுமதி அளித்து வெளியீட்டாளர் முகவுரையும் வழங்கியுள்ள தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர், பெருமதிப்பிற்குரிய உயர்திரு. முனைவர். மூ. இராசாராம், இ. ஆ. ப., அவர்களுக்கும், இப்பதிப்பு நூல் வெளியீட்டின் பல்வேறு நிலைகளிலும் தேவையான உதவிகளை அக்கரையுடன் செய்து தந்த சரசுவதி மகால் நூலகத்தின் நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம், எம், ஏ., அவர்களுக்கும், நூலகர் மற்றும் பதிப்பு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம்.எல்.ஐ.எஸ்., அவர்களுக்கும் ஏனைய அலுவர்களுக்கும் நன்றி.

இந்நூலை நன்முறையில் அச்சேற்றித் தந்துள்ள சிதம்பரம் ஸ்ரீவேலன் பிரஸ் உரிமையாளர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினை இங்கு பதிவு செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சென்னை
31--2000

**மு. சௌரிராஜன்,**
சித்த மருத்துவக் கல்லூரி.

# பொருளடக்கம்

## நாடியும் நோயக்கணிப்பும்


| | |
|---|---|
| வாதமாய் படைத்து | 1 |
| வாதப் பொருள் - வாதம் - செயல் | 5 |
| நோயின் அடிப்படையில் வாதம் | 6 |
| பித்த வன்னியாகக் காத்து | 7 |
| சேட்ப சீதமாய்த் துடைத்து | 11 |
| சன்னி அல்லது முக்கூற்றநிலை | 13 |
| நாடியின் தத்துவம் | 21 |
| நாடி | 22 |
| எண்வகைத் தேர்வு | 24 |
| தசநாடி | 28 |
| இரவில் நாடி அறிதல் | 30 |
| நாடியின் இடங்கள் | 30 |
| நாடியின் நிறம் | 30 |
| முப்பற்றுகள் | 30 |
| குணம் - 3 | 30 |
| வினை - 2 | 31 |
| விகாரம் - 8 | 31 |
| நாடியைப் பரிசோதிக்கும் இடங்கள் | 32 |
| நாடிகளைப் பரிசோதிக்கும் விவரம் | 32 |
| நாடி பார்க்கும் மாதவகை | 33 |
| நாடி பார்க்கும் விவரம் | 33 |
| ஆண்களுக்கு நாடி நடக்கும் விதம் | 33 |
| பெண்களுக்கு நாடி நடக்கும் விதம் | 33 |
| பஞ்சபூத நாடிகள் இருக்குமிடத்தின் விவரம் | 33 |

| | |
|---|---|
| தேகத்தில் வாத, பித்த, சிலேத்துமம் இருக்கவேண்டிய நிதானம் | 34 |
| ஒரு நிமிடத்திற்கு நாடி நடக்கும் பிரமாணம் (அளவு) | 34 |
| நாடிபேதா பேதம் | 34 |
| மனிதர் வயதின் விவரம் | 34 |
| சரீர கட்டளை விவரம் | 35 |
| வாத தேகக் குறிகள் | 35 |
| பித்த தேகக் குறிகள் | 35 |
| சிலேத்தும தேகக்குறிகள் | 36 |
| வாத, பித்த, சிலேத்தும நிலைகள் | 36 |
| வாத, பித்த, சிலேத்துமத்தின் இயல்பு | 36 |
| வாத, பித்த சிலேத்துமக் காலம் | 36 |
| நோயாளிகளின் தேகம் முதலான குறிகள் | 36 |
| வாதத்தின் கூறு | 37 |
| பித்தத்தின் கூறு | 37 |
| சிலேத்துமத்தின் கூறு | 37 |
| குரு நாடி இருக்குமிடம் | 38 |
| குருநாடியின் குணம் | 38 |
| நாடிகள் கீழும், மேலும் மீறி ஓடும் விதம் | 38 |
| நாடி தொந்திப்பு | 39 |
| சிலேத்துமத்தில் வாத நோயானால் | 45 |
| சிலேத்துமத்தில் பித்தம் | 45 |
| நாடிகள் நடக்கும் விதம் | 45 |
| நாடி பாக்கும் இடங்கள் | 45 |
| நாடி பார்க்கும் விதம் | 45 |
| நாடி பார்க்கும் மாத வகைகள் | 46 |

| | |
|---|---|
| நாடியை அறியும் விதம் | 46 |
| பஞ்சபூத நாடிகள் இருக்குமிடத்தின் விவரம் | 47 |
| ஒரு நிமிடத்திற்கு நாடி நடக்கும் அளவு | 47 |
| நாடியின் பேதா பேதங்கள் | 48 |
| மனிதர்களின் வயதின் விபரம் | 48 |
| சரீர கட்டளை விவரம் | 48 |
| வாத சரீரத்தின் குறிகள் | 49 |
| பித்த சரீரத்தின் குறிகள் | 49 |
| கப சரீரத்தின் குறிகள் | 49 |
| வாத, பித்த, கப நிலைகள் | 49 |
| வாத, பித்த, கப காலங்கள் | 50 |
| நோயாளியின் தேகம் முதலான குணங்கள் | 50 |
| வாதத்தின் கூறு | 50 |
| பித்தத்தின் கூறு | 51 |
| கபத்தின் கூறு | 51 |
| குரு நாடி இருக்குமிடம் | 51 |
| குரு நாடியின் குணம் | 52 |
| நாடிகள் கீழும், மேலும் மீறி ஓடும் விதம் | 52 |
| நாடியின் தொந்திப்பு | 53 |
| நாடியின் குறிகள் | 55 |
| மரணத்தின் குறிகள் | 57 |
| மரணகாலக் குறிப்பு | 60 |
| நாடியைக் குறிக்கும் தாதுவின் விளக்கம் | 62 |
| உருத்தோற்றம் | 63 |
| நாடியின் மாத்திரையளவு | 72 |
| நோய் என்பதென்ன? உண்டாகும் விதம் எங்ஙனம்? | 89 |
| வாத-பித்த-ஐய தோடங்களின் நிலை | |

| | |
|---|---|
| (வைத்தியசார சங்கிரகம்) | 95 |
| வளி-அழல்-ஐய தோடங்கள் அடங்குமிடம் | 95 |
| வாத-பித்த -ஐயம் உடல் நிறம் | 95 |
| மரணக்குறியைக் காட்டும் உடல் நிறம் | 96 |
| மூவகை நாடிகளை ஆராய்ந்து அறியும் விதம் எங்ஙனமெனில் | 97 |
| பஞ்ச நாடிகள் | 99 |
| ஆண், பெண் இவர்களுக்கு முறையே வலது, இடது கை நாடியைப் பார்ப்பது நல்லது | 100 |
| புருடருக்கு வலது கரமும், பெண்களுக்கு இடது கரமும் நாடியை ஆராய்வது ஏன்? | 102 |
| புருடருக்கு நாடி நடை கூறுமிடத்து | 103 |
| பெண்களுக்கு நாடிநடை கூறுமிடத்து | 104 |
| நாடி ஆராய்ச்சியில் முக்கிய கவனிப்பு | 105 |
| நாடி எண் வகைத் தேர்வுகளில் நாடியின் கணிப்பைப் பிரதானமாகக் கூறுவதேன் | 106 |
| நாடி நடை மாத்திரையின் இலக்கணம் | 110 |
| வாத பித்த தொந்தம் | 112 |
| வாத ஐய தொந்தம் | 112 |
| பித்த வாத தொந்தம் | 112 |
| பித்த ஐய தொநம் | 112 |
| ஐய வாத தொந்தம் | 113 |
| ஐய பித்த தொந்தம் | 113 |
| பிணியை நாடியாலறிந்து ஊட்டுமருந்தை சிறந்ததெனல் | 114 |
| நாடி நடையளவையறிய உபாயம் | 115 |
| நாடி கணிப்பால் நோய் தணியுறு கிரமம் அறிய உபாயம் | 115 |
| பஞ்சபூத நாடி அல்லது பஞ்ச நாடி என்றாலென்ன? | 117 |

குரு நாடி பற்றிய விளக்கம் 119

குரு நாடி இருப்பிடம் 121

பரிபூரண நாடி நூல் 122

குருநாடியின் தன்மையால் நோய்களைக் குறிக்கும் குணம் 124

முத்தோடங்களின் குணம் 129

வாத தோட வன்மையை நீக்கக்கூடிய ஆறு எதிர்க்குணங்களாவன 130

பித்த தோடவன்மையை நீக்கக்கூடிய ஆறு எதிர்க்குணங்களாவன 130

ஐயம் வன்மையடையும்போது உண்டாகக்கூடிய ஆறு குணங்களாவன 131

முத்தோடகுணம் 131

நாடியைப் பற்றிய விளக்கம் நாடியால் பிணி வராமையும் வருகையும் அறிவதெங்ஙனம்? 135

தாதுக்கள் மூன்றும் (நாடிகள் மூன்றும்) தினந்தோறும் சிறப்புறுங்காலம் 136

நாடிகள் மூன்றும் வாரங்களில் மாறி நடந்தாலுண்டாகும் பிணியின் தோற்றம் 138

தாதுக்கள் (நாடிகள்) மூன்றும் மாதங்கள் தோறும் சிறப்புறும் சமயம் 139

நாடி நடை காணப்படாமை (சதக நாடி) 141

நாடி நடை சரியாகத் தோற்றாத சில நிலைமைகள் 143

வளி நாடி (வாதம்) மிகுதியால் வரும் குறி குணங்கள் அல்லது நோய்கள் 145

அழல் நாடி (பித்தம்) மிகுதியால் வரும் குறி குணங்கள் அல்லது நோய்கள் 148

பித்த ரோகியின் பொதுக்குறி குணங்கள் 149

ஐய நாடி (கபம்) மிகுதியால் வரும் குறி
குணங்கள் அல்லது நோயாகள் 150

தொந்த நாடிகள் மிகுதிப்படின் உண்டாகும்
பொதுக்குறி குணங்கள் 151

வாத ஐய தொந்த நாடிக் குறிகுணங்கள் 155

பித்த வாத தொந்த நாடிக் குறிகுணங்கள் 156

பித்த ஐய தொந்த நாடிக் குறிகுணங்கள் 157

ஐய வாத தொந்த நாடிக் குறிகுணங்கள் 158

வாத மிகுதியுடன் உஷ்ணமும் சேர்ந்தால்
உண்டாகும் குறிகுணம் 160

பித்த மிகுதியுடன் உஷ்ணமும் சேர்ந்தால்
உண்டாகும் குறிகுணம் 160

ஐய மிகுதியுடன் உஷ்ணமும் சேர்ந்தால்
உண்டாகும் குறிகுணம் 161

வாத மிகுதியுடன் வாயு கூடினாலுண்டாகும் குறிகுணங்கள் 162

பித்த மிகுதியுடன் வாயு சேர்ந்தாலுண்டாகும் குறிகுணங்கள் 162

ஐய மிகுதியுடன் வாயு சேர்ந்தாலுண்டாகும் குறிகுணங்கள் 163

வாத மிகுதியுடன் சீதளமும் சேர்ந்தாலுண்டாகும்
குறிகணங்கள் 163

பித்த மிகுதியுடன் சீதளம் சேர்ந்தாலுண்டாகும்
குறிகுணங்கள் 164

ஐய மிகுதியுடன் சீதளமும் கூடினாலேற்படும் குணங்கல் 164

வளி, அழல், ஐயம் ஆகிய மூன்று தோடங்களும் கூடி ஏக
காலத்தில் பேதித்து தின்றாலுண்டாகும் குறிகுணங்கள் 165

சாத்தியா சாத்திய தொந்த நாடிகளிவை எனில் 166

அசாத்திய நாடியும் மரண குறிகுணங்களும் இவையெனல் 166
அமிர்தமுண்டும் சாகுதல் குறி 166
குறியடையாள நாடி 168
சில மரணக்குறிகள் 175
அசாத்திய நாடி 175
மரணக்குறி குணங்கள் 177
சந்நிபாத சுரங்களில் உண்டாகும் தோடக்குறி குணங்கள் 178
சந்நிபாத அசாத்திய குறிகுணங்கல் (வேறு) 180
அசாத்திய குறிகுணங்கள் அல்லது மரணக்குறி குணங்கள் 180
மரணக்குறிகள் (வேறு) 184
மரணக்குறி குணங்கள் (வேறு) 186
எந்தெந்த நோய்களில் இளைப்புடனே அதிசாரம், சுவாசம் விக்கல், இந்நான்கும் சேர்ந்து தோன்றினால் அசாத்தியமாகும்? 186
அதிசார நோயில் (பெருங்ழிச்சல்) உண்டாகும் தோடகக்குறி குணங்கள் 187
எந்தெந்த நோய்களில் இளைப்புடனே சுவாசம், விக்கல், இம்மூன்றும் சேர்ந்து தோன்றினால் அசாத்தியமாகும்? 188
எந்தெந்த நோய்களில் மிகுந்த வாயு தோன்றினால் மரணமாகும்? 189
எந்தெந்த நோய்களில் சிறுநீர் அதிகரித்தாலும், குறைந்தாலும் தீது என்பர் ? 190
மேக ரோகத்திலுண்டாகும் தோடக்குறி குணங்கள் (இளைப்பு, சுவாசம், விக்கல், வீக்கம், மயக்கம் இவைசேர்ந்தாலுண்டாகில் சாவு நிச்சயம் என்பர் மேகரோகத்தில்) 190

மாந்த நோயிலுண்டாகும் தோடக்குறி குணங்கள்
(இளைப்பு, சுவாசம், விக்கல் உண்டாயின் மரணமாம்) 192
பெரும்பாட்டிலுண்டாகும் தொடக்குறி குணங்கல் 193
குன்ம ரோகத்திலுண்டாகும் தோடக்குறிகுணங்கள் 193
சோபை நோயிலுண்டாகும் தோடக்குறிகுணங்கள் 194
சுர நோயிலுண்டாகும் தோடக்குறி குணங்கள் 195
அத்தி சுரத்திலுண்டாகும் தோடக்குறி குணங்கள் 195
சயரோகத்திலுண்டாகும் தோடக்குறி குணங்கள்
(இளைப்பு நோய்) 196
மரணக்குறி குணங்கள் (வேறு) சதக நாடி 197
சாத்திய சாத்திய நாடிக்குறி குணங்கள் (சதக நாடி)
பற்றிய சில பொதுவான அபிப்பிராயம் 200
நோய்கள் அசாத்தியமாகிலும் குணமாகவேண்டின்
கீழ்க்கண்ட விதிகள் நலமெனவும் கூறியுள்ளார் 200
அவத்தை பத்திய விவரம் (திரட்டு நாடி) 202
அவத்தைப் பத்து (வேறு) (வல்லாதியின் நாடி) 204
முக்குற்றவியல் 205
வளி (வாதம்) 205
வாதத்தின் (வளி) வடித்தன்மை 205
வளி வாழுமிடம் 205
வளி இயற்கைப் பண்பு 205
வளி உடலில் செய்தொழில் 206
வளியின் பிரிவுகள் (வாதம்) 206
வளியைப்பற்றிய பிறநூலுடையார் மற்றய
புத்தகங்களின் கொள்கைகளாவன 209
அழல் (தீ, அனல், பித்தம்) 210

தீயின் வடிவத்தன்மை 210
அழல் வாழுமிடம் 210
அழலின் இயற்கைப் பண்பு 211
அழல் உடலில் செய் தொழில் 211
அழலின் பிரிவுகள் 211
ஐய வடிவத்தன்மை 212
ஐயம் வாழுமிடம் 212
ஐயத்தின் இயற்கைப் பண்பு 212
ஐயம் உடலில் செய் தொழில் 213
ஐயத்தின் பிரிவுகள் 213
இரு குற்றக் கலப்பு 214
முக்குற்றம் 214
வாதத்தின் இருப்பிடம் 215
பித்தத்தின் இருப்பிடம் 215
ஐயத்தின் இருப்பிடம் தொழில் முதலியன 216
முக்குற்றங்கள், உடற்தாதுக்கள் 7 இவற்றின்
சேர்க்கையால் உண்டாகும் வேற்றுமை 216
தன்னிலை 217
தன்னிலை வளர்ச்சி 217
வேற்று நிலை வளர்ச்சி 217
தன்னிலை வளர்ச்சியின் இலக்கணம் 217
வளி தன்னிலை வளர்ச்சி- முதுவேனில் பருவம் 217
அழல் 218
ஐயம் 218
முக்குற்றங்கள் கால இயல்பைக் கடந்து நிற்கும் வேளை 218
வளி, அழல், ஐயம் மூன்றும் வேற்று நிலை

வளர்ச்சியினின்றும் தன்னிலைப்படும் இலக்கணம் 218

வளி, அழல், ஐயம் ஆகிய முக்குற்றங்களே எல்லாப் பிணிகளுக்கும் காரணமெனல் 219

யாக்கையின் இயற்கை இலக்கணம் 219

வாத தேகியின் இலக்கணம் 220

பித்த தேகியின் இலக்கணம் 220

கப தேகியின் இலக்கணம் 221

ஐய உடலினன் பண்புகள் 222

வளி, அழல், ஐயம் கலப்புக் குற்றம் முதலிய தேகக்குறிகள் (வேறு) 223

வாத தேகியின் இலக்கணம் 223

வாத பித்த தேகக்குறி 224

வாத ஐய தேகக்குறி 224

பித்த தேகக்குறி 225

பித்த வாத தேகக்குறி 225

பித்த ஐய தேகக்குறி 225

ஐய தேகக்குறி 226

ஐய பித்த தேகக்குறி 226

ஐய வாத தேகக்குறி 227

வளி, அழல், ஐயம் என்னும் முக்குற்றங்களின் மிகுதி, குறைவு இவற்றின் பண்புகள் கூறுவாம். 227

வளி மிகு குணம் 227

வளி குறை குணம் 228

அழல் மிகு குணம் 228

அழல் குறை குணம் 229

ஐயம் மிகு குணம் 229

ஐயம் குறை குணம் 229

உடற் தாதுக்கள் 7 (உடற்கட்டு) 230
சாரம் மிகு குணம் 230
சாரம் குறை குணம் 230
செந்நீர் மிகு குணம் 231
செந்நீர் குறை குணம் 232
ஊன் மிகு குணம் 232
ஊன் குரை குணம் 232
மலம் 233
உடல்வன்மை 234
சத்துவம் முதலிய முப்பண்புகளையுடைய உடலினார் இயல் 235
பதினான்கு வேதங்கள் அல்லது விரைவுகள் 235
அபான வாயு 236
தும்மல் 237
இடுப்பு வலி 237
சிறுநீர் 238
மலம் 238
கொட்டாவி 238
பசி 238
நீர்வேட்கை (தாகம்) 238
காசம் (இருமல்) 239
இளைப்பு (ஆயாசம்) 239
நித்திரை (தூக்கம்) 239
வாந்தி 239
விழிநீர் 240
சுக்கிலம் 240

| | |
|---|---|
| சுவாசம் | 241 |
| உடற்றீ விளக்கம் | 241 |
| சமாக்கினி | 241 |
| விஷமாக்கினி | 241 |
| தீக்ஷாக்கினி | 241 |
| மந்தாக்கினி | 241 |
| ஐவகை நிலங்களும் பிணிகளும் | 242 |
| குறிஞ்சி நிலம் | 242 |
| முல்லை நிலம் | 242 |
| பாலை நிலம் | 242 |
| நெய்தல் நிலம் | 242 |
| மருத நிலம் | 242 |
| ஐந்திணைக் குணத்தின் தொகுப்பு | 242 |
| மருந்துண்ணும் காலம் | 243 |
| வேறு வயித்தியக் குறள் | 243 |
| பிணியாளன் தலைவைத்துப் படுக்கவேண்டிய திசை இன்னதெனல் | 244 |
| எண்வகைத் தேர்வு அல்லது பிணியறி முறைமை | 244 |
| பொறி | 244 |
| புலன் | 245 |
| வினா | 245 |
| எண்வகைத் தேர்வுகளாவன | 245 |
| இருமல் | 246 |
| விழி | 246 |
| அவற்றின் விளக்கம் | 246 |
| மலம் | 246 |

| | |
|---|---|
| நீர் | 246 |
| சுக்கிலம் | 246 |
| கண் | 246 |
| காது | 246 |
| மூக்கு | 246 |
| நா (வாய்) | 246 |
| மெய் | 246 |
| மயிர் | 247 |
| நகம் | 247 |
| உதடு | 247 |
| நெற்றி | 247 |
| பல் | 247 |
| புருவம் | 247 |
| அண்ணம் | 247 |
| மெய் (தோல்) | 247 |
| செவி | 247 |
| சரிதை | 247 |
| மலக்குறி | 248 |
| மலப்பரிசோதனை (தேரையர் யமகம்) | 248 |
| மலக்குறியால் சாதல் சாவாமையறிதல் | 249 |
| சாதல் குறி | 249 |
| மலத்திலுண்டாகும் சுரக்குறியும் சாக்குறியும் | |
| சுரக்குறி | 248 |
| சாதல் குறி | 250 |
| முக்குற்றங்களின் மெய்நிறம் | 250 |
| மெய் நிறத்தால் சாதலையறிதல் | 250 |

| | |
|---|---|
| இயற்கனவே இது விவரம் கூறப்பட்டுள்ளது | 251 |
| ஊறு, பரிசத்தால் சாதலையறிதல் | 251 |
| வியர்வை - ஐவகை | 252 |
| முக நிறமும் முக்குற்றங்களும் | 253 |
| பல்லின் நிறத்தால் முக்குற்றமறிதல் | 253 |
| வாய் நீர் பரீட்சை | 253 |
| வாய்நீர் | 253 |
| எச்சில் (வேறு) | 254 |
| சுவையைக்கொண்டு சாதல் குறியறிதல் | 255 |
| சொல் ஒலியும் முக்குற்றங்களும் | 256 |
| ஒலியினால் சாதல் குறியறிதல் | 256 |
| கண்ணின் குறி | 257 |
| காதின் தோற்றத்தால் முக்குற்றம் அறிதல் | 257 |
| (மூக்கு) ரணத்தன்மையால் சாதலையறிதல் | 257 |
| சுக்கிலத்தன்மை | 258 |
| உறுப்புகளின் துடிப்பினால் சாதல் குறியறிதல் | 259 |
| இது நிற்க, சாதல் குறி (வேறு) | 259 |
| சிறுநீர் பரிசோதனை | 259 |
| நீர் நிறக்குறி | 259 |
| நிறக்குறி, நெய்க்குறி நிச்சயத்திற்குரிய நீர் இலக்கணம் | 259 |
| நோயுற்றோர்க்கு அவ்வித (மேற்கண்ட விதி) விலக்காம் | 260 |
| நீரின் பொதுக்குணம் | 260 |
| நிறத்தொகை | 260 |
| ஒவ்வொரு நிறத்திலும் காணும் உட்பிரிவுகள் | 261 |
| மஞ்சள் நீர் விகற்பம் | 261 |
| சீரண அபக்குவ நீர் நிறம் | 261 |

| | |
|---|---|
| மிகு வெம்மையால் உண்டாகும் நீர் நிறம் | 261 |
| குட்டைத்தரத்திற்குரிய நீர் நிறம் | 261 |
| அதிவுட்டிண நீர் நிறம் | 262 |
| முன்னிலும் அதிவுட்டிண நீர் நிறம் | 262 |
| செம்மைநிற நீர் வேற்றுமை | 262 |
| இரத்தம் பொங்கிய நீர் நிறம் | 262 |
| மிகு ரத்தம் கொதிப்பாலுண்டாகும் நீர் நிறம் | 262 |
| முன்னிலும் அதிகமாகப் பொங்குதலாலுண்டாகும் நீர் நிறம் | 263 |
| பச்சை நீர் வேற்றுமை இயல் | 263 |
| சீதள நீர் நிறம் | 263 |
| விஷத்தாலுண்டாகும் சீதள நீர் நிறம் | 263 |
| மிகு சீதள நீர் நிறம் | 264 |
| வாத, பித்த, கபங்களைக் கெடுக்கும் நீர் நிறம் | 264 |
| மேற்கூறிய மும்மலங்களை மிகவும் அதிகமாகக் கெடுக்கும் நீர் நிறம் | 264 |
| கருமை நீர் நிற வேற்றுமை | 265 |
| காமாலை நோயைத் தரும் நீர் நிறம் | 265 |
| உதிரக் கெடுதி நீர் நிறம் | 265 |
| உதிரத் தழுக்கைக் காட்டும் நீர் நிறம் | 265 |
| வெண்மை நீர் நிற விகற்பம் | 266 |
| சுத்த சீதள நீர் நிறம் | 266 |
| சிலேத்துமத்தின் கொதிப்பு நீர் நிறம் | 266 |
| க்ஷயம் நீர் நிறம் | 267 |
| கருப்பவிரணம் நீர் நிறமும் தன்மையும் | 267 |
| கபம் - சந்நிவாதம் | 267 |
| உப்புறையாதது | 267 |

| | |
|---|---|
| வெப்பம் (கொடிய வெப்பநோய் நீர்) | 268 |
| குண்டிக்காய் துர்ப்பலம் நீர் | 268 |
| தீராத நோய் நீரின் தன்மை | 268 |
| நிற இலக்கணம் (மாதாந்தரம்) வாதபிணி | 268 |
| பித்தப் பிணி | 269 |
| பித்த காமாலை நீர் | 269 |
| கபப் பிணி நீர் நிறம் | 269 |
| தொந்தப் பிணி நீர் நிறம் | 270 |
| மேகரோகம், மகாரோகம் இவைகளின் நீர் நிறம் | 270 |
| சுரப்பிணி நீர் நிறம் | 270 |
| அசாத்திய நீர் நிறம் | 270 |
| நிறை இலக்கணம் | 271 |
| நீர்ப்பை, இந்திரிய விழி இவற்றின் மிக்க பலவீனத்தைக் குறிக்கும் நீர் | 271 |
| மும்மலங்களின் கெடுதி நீர் | 271 |
| இயற்கை நீர் இலக்கணம் | 272 |
| சிறுநீர்ப்பை நாளப்புண்ணீர் மணம் | 272 |
| உட்டிண ரோக நீர் மணம் | 272 |
| உதிரம் மிகுதியாலுண்டாகும் நீர் மணம் | 272 |
| பித்த சுபாவக் கெடுதி நீர் மணம் | 273 |
| சரீரப்பசைக் கெடுதி நீர் மணம் | 273 |
| நுரை இலக்கணம் | 273 |
| காமாலை நீர் நுரையின் நிறம் | 274 |
| வாதம் முதலிய முக்குற்றங்களும் வன்மை குறையும் | 274 |
| நீரின் நுரை இலக்கணம் | 274 |
| பாண்டுநோய் உற்பத்தியைக் காட்டும் நீரின் எஞ்சல், எஞ்சிலிலக்கணம் | 274 |

| | |
|---|---|
| வாதம் என்னும் வளிநீர் நெய்க்குறி | 275 |
| கபம் என்னும் ஐய நீர் நெய்க்குறி | 275 |
| தொந்த தோட நெய்க்குறி | 276 |
| முக்குற்ற நெய்க்குறி | 276 |
| தீரா நோயின் நெய்க்குறி | 277 |
| தீரும் தீரா நோயின் நெய்க்குறி | 278 |
| கரும சாந்தியின் பயன் | 279 |
| நீர்க்குறி | 279 |
| அபிப்பிராயங்கள் (வேறு) | 280 |
| (வேறு) நீர் நெய்க்குறி (அறுசீர் விருத்தம்) | 280 |
| தீர்தல், தீராமைகளைக் குறிக்கின்றது (வேறு) ஆசிரிய விருத்தம் | 283 |
| அறுசீர் விருத்தம் வாத, பித்த, காமாலை நீர்கள் | 283 |
| கப நீர் நிறம் - வாதம், பித்தங்களின் நெய்க்குறி (வேறு) அறுசீர் விருத்தம் | 284 |
| கபம், முக்குற்றம், சாத்தியம், அசாத்தியங்களின் நெய்க்குறி | 284 |
| கௌதமர் - தேரர் நெய்க்குறி பற்றிய கருத்து வேற்றுமை | 285 |
| தீரா நோயின் நெய்க்குறி (வேறு) | 286 |
| தீரும் நோயின் நெய்க்குறி (வேறு) | 286 |
| தீரும் நோயின் நெய்க்குறி (வேறு) | 287 |
| தாமத சாத்திய நெய்க்குறி | 288 |
| தீராத நோய் நெய்க்குறிகள் (வேறு) | 288 |
| சந்நிவாத நோய் தீரும் நெய்க்குறி | 290 |
| தீரும், தீரா நோய்களின் நெய்க்குறி (வேறு) | 290 |
| தீரா நெய்க்குறி, தீரும்குறி (வேறு) | 291 |
| சுர நீர் விகற்பம் (வேறு) | 291 |
| வெகு மூத்திரக்குறி இலக்கணம் | 292 |

| | |
|---|---|
| மேக நீர் விகற்பம் (வேறு) | 292 |
| மூத்திர விலக்கணம் (வேறு0 | 293 |
| நீர்க்குறிச் சிறப்பு | 293 |
| இரத்த மிகுதி நீர் இலக்கணம் | 294 |
| பித்த கோப நீர் நிறம் | 294 |
| சேத்தும கோப நீர் நிறம் | 294 |
| வாத கோப நீர் நிறம் | 295 |
| இரத்த மிகுதி பித்தவாதக் கலப்பு நீர் | 295 |
| மக்கள் ஆண்டுக்குத் தக்க நீரின் மாற்றம் | 295 |
| உட்டின நீர் (வேறு) | 296 |
| முறைக்காய்ச்சல் நீர் | 296 |
| மூன்று நாள் மாறல் சுர நீர் (கபால உட்டிண நீர்) | 296 |
| தலைகனப்பும், மயக்கமும் காட்டும் நீர் | 297 |
| இடத்தலை நோய் நீர் | 297 |
| வலத்தலை நோய் நீர் | 297 |
| காய்ச்சலுடன் மார்பு நோயைக்காட்டும் நீரின் நிறம் | 297 |
| நீர்க்குண்டிக்காயில் கல்லிருப்பின் அதனை உணர்த்தும் நீர் | 298 |
| இரத்த தொந்தி வியாதி, ஈரல் சுரம் இவற்றைக் காட்டும் நீர் | 298 |
| இதயநேய் நீர் | 299 |
| நெய்க்குறி (வேறு) | 299 |
| நெய்க்குறிக்குரிய நீரைச் சேகரிக்கும் நேரம் | 299 |
| இரத்த மிகுந்த வெப்பு நீர் நெய்க்குறி | 299 |
| இரத்தக் குறைவு நீர் நெய்க்குறி | 300 |
| பித்த மிகுதி நெய்க்குறி | 300 |
| சீத மிகுதி நெய்க்குறி | 300 |
| அசாத்திய நீர் நெய்க்குறி | 301 |
| முலைப்பால் நீர்க்குறி (தீரும்-தீரா நோயறிய) | 301 |

| | |
|---|---|
| பன்றிக் கொழுப்பால் மரணமறிய (வேறு) | 301 |
| குருதிக்குறி (தீரும் - தீராமை) | 302 |
| மூத்திர நிறப் பரிட்சை (வேறு) | 302 |
| நோயினைப் பற்றிய விசாரணை | 302 |
| எண்வகைத் தேர்வு பற்றிய குறிப்புகள் | 303 |
| நாடி | 303 |
| பரிசம் | 303 |
| நா | 304 |
| நிறம் | 304 |
| மொழி | 304 |
| விழி | 304 |
| மலம் | 305 |
| நீர் | 305 |
| நிறம் | 305 |
| மணம் | 305 |
| கலப்பு | 305 |
| நுரை | 306 |
| எஞ்சல் | 306 |
| தடவை | 306 |
| நிறை | 306 |
| சத்து (சுவை) | 306 |
| நெய்க்குறி | 306 |
| நோய் வரலாற்றுக் குறிப்பு | 307 |
| நோயினனைப் பற்றிய விசாரணை | 307 |
| நோயினனின் தத்துவ இயல்பு | 309 |
| தேகவன்மை | 309 |
| தீயின் தன்மை | 309 |

| | |
|---|---|
| மனோவிகற்பம் | 309 |
| தூக்கம் (இதுபோன்ற ஏனைய குறி குணங்கள்) | 309 |
| நோய் நிலைமை | 309 |
| நோய் வரலாற்றுக் குறிப்பு | 311 |
| நோயினனைப்பற்றிய விசாரணை அல்லது வினாதல் | 311 |
| பொறியால் தேர்தல் | 312 |
| தூது லட்சணம் | 319 |
| தூது லட்சணம் (வேறு) | 320 |
| மருத்துவன் செயலால் நன்மை தின்மையறிதல் | 320 |
| தூதனாலறிந்து கொள்ளவேண்டிய தீராத குறிகள் | 321 |
| தொடுகுறி (வேறு) | 322 |
| நோய் முதலாடல் திரட்டு | 322 |
| சித்த மருத்துவ நோய் நாடல் | 323 |
| மணிக்கட்டை நூல் | 326 |
| நோயின் சாரம் | 326 |
| பத்து விரற்கடை | 327 |
| ஒன்பதே முக்கால் | 327 |
| ஒன்பதரை | 327 |
| ஒன்பதேகால் | 327 |
| ஒன்பது | 327 |
| எட்டேமுக்கால் | 328 |
| எட்டரை | 328 |
| எட்டேகால் | 328 |
| எட்டு | 328 |
| ஏழேமுக்கால் | 328 |
| ஏழரை | 329 |
| ஏழேகால் | 329 |

| | |
|---|---|
| ஏழு | 329 |
| ஆறேமுக்கால் | 329 |
| ஆறரை | 329 |
| ஆறேகால் | 330 |
| ஆறு | 330 |
| ஐந்தேமுக்கால் | 330 |
| ஐந்தரை | 330 |
| ஐந்தேகால் | 330 |
| ஐந்து | 331 |
| நாலேகால் | 331 |
| நாலரை | 331 |
| நாலேமுக்கால் | 331 |
| நாலு | 331 |
| பதினொன்று | 332 |
| நோய் முதனாடல் திரட்டு | 332 |
| கிருமிகள் (புழுக்கள் அல்லது பூச்சிகள்) பற்றிய விளக்கம் பூச்சிகளுண்டாகும் விதம் | 335 |
| குடற்கிருமிகளின் பொதுக்குறி குணங்கள் | 335 |
| குருநாடி நூலில் கூறிய கிருமியும் அதனால் உண்டாகும் நோய்களும் | 336 |
| கிருமியாலுண்டாகும் பவுத்திரம் வரலாறு | 338 |
| கிருமியாலுண்டாகும் குட்டம் வரலாறு | 339 |
| கிருமியால் வரும் நோய்கள் (வேறு) குருநாடி நூல் | 339 |
| கிருமியாலுண்டாகும் கிராணி வரலாறு | 340 |
| பிணி தொகுப்பு | 341 |
| பிணிகளின் முதற்காரணம் | 346 |

சிற்சில நோய்களுக்கு முதற்காரணம் கூறுகிறார் (தேரையர்) 346
ஒட்டு நோய்கள் (Contagious Diseases) 348
உயிரனல் அல்லது உயிரக்கினி அல்லது
சீவாக்கினி அல்லது குக்கியனல் என்பதென்ன? 349

## நாடியும் நோய்க்கணிப்பும்

முக்கிய கவனிப்பு 351
நாடி ரூபம் 352
பித்தம் 353
கபம் 353
நோயுற்ற காலங்களில் கவனிக்கவேண்டிய குறிப்புகள் 354
ஜன்மம் 354
நாடி ஞானபோதினி 355
நோயாளிகளின் நாடிகுணம் 355
சுதந்திர நாடி 356
சப்த தாதுக்களாவன 357
நாடி குணம் 357
இதற்குச் சிகிச்சை 358
நாடி நிர்ணயம் (தீர்க்கநோய் நாடி குணம்) 363
கற்பனை 370
வாதநாடி 372
பித்தநாடி 373
கப நாடி 373

## நாடிகளின் உற்பத்தி

நாடியின் உற்பத்தி 377
ஸ்திரி - புருஷ - நபும்சக நாடிகள் 377
பிராணவாயு செல்லும் மார்க்கம் 378

ஸூத்ர பஞ்சகம் 378

சிரைகள் 378

தமநிகள் 379

இடை, பிங்களை, ஸுஷுமுனை 381

மூச்சின் முறை 381

ஆயுள் 382

ஆயுட்காலத்தில் கப, பித்த, வாதங்கள்
மிகுந்திருக்கும் வருஷங்கள் 383

மனிதன், பசு, குதிரை, யானை இவைகளுக்கு
நாடி பார்க்கும் விதம் 383

நாடிகளைக் கொண்டு தோஷங்களையும்,
வியாதிகளையும் அறிதல் 383

நாடி பார்க்கும் விதம் 384

நாடியின் ஸ்தானங்கள் அல்லது நாடியின் நடை
தெளிவாய்த் தெரியும் இடங்கள் 384

தன் ஸ்தானத்தை விடாதிருக்கும் கால் நாடியைக்
கொண்டு அறியப்படும் நிலைமைகள் 385

கழுத்து நாடியைக்கொண்டு அறியப்படுபவை 385

மூக்கின் அடியிலுள்ள நாடியைக் கொண்டு அறிவது 385

வயதுக்குத் தகுந்தபடி வியாதியின் சாத்தி,
அசாத்தியத்தை அறிவதற்கான நாடிகள் 385

காலநிலைக்குத் தகுந்தபடி நாடி மாறும் வகை 386

ஆறுசுவைகளாலும் நாடி மாறும் விவரம் 386

இரண்டு சுவை கலந்து உட்கொள்வதால்
நாடி மாறும் விதம் 387

ஒன்றுக்கொன்று விரோதமான சுவைகள் 387

அறுசுவை அருந்த காலம் 388

| | |
|---|---|
| சீவநாடி | 388 |
| சீவ நாடியின் தன்மை | 390 |
| சாத்திய நாடி (வியாதி குணமாகக் கூடியதை காட்டும் நாடி | 390 |
| அசாத்திய நாடி (வியாதி குணமாவது அரிது என்பதைக் காட்டும் நாடி | 390 |
| ஆயுளின் முடிவைக் கூறும் நாடி | 391 |
| வியாதியின் நிலையைக் கண்டறிய முடியாத நிலை | 391 |
| தெளிவாக நாடியை அறியக்கூடிய நிலை | 391 |
| நாடியின் விசேடம் | 391 |
| விரல்களில் வரிசையும், தோடங்களின் வரிசையும் | 392 |
| ஆயுட்காலத்தின் பல பகுதிகளில் கைபார்க்கும் முறை | 392 |
| நாடிகளுக்குரிய கதிகள் | 392 |
| இரண்டு தோடங்கள் சேர்ந்திருக்கும்பொழுது நாடியின் கதிகள் | 392 |
| ஸந்நிபாத (மூன்று தோடங்களும் சேர்ந்து) நாடி | 393 |
| அசாத்திய சந்நிபாத நாடி | 393 |
| நாடிகளின் பெயர்கள் | 394 |
| ஆறு சக்கரங்களின் விபரம் | 394 |
| ஆறு சக்கரங்களின் நிலைகள் | 394 |
| பத்து நாடிகளின் நிலை | 394 |
| நமது உடம்பிலுள்ள கலை முதலிய உறுப்புகள் | 395 |
| கலைகள் ஏழு | 396 |
| ஆசயங்கள் தங்குமிடங்கள் | 396 |
| தாதுக்கள் | 397 |
| தாது மலங்கள் | 397 |
| உப தாதுக்கள் | 398 |

ஏழு தோல்கள் 398
ஏழு தோல்களில் உண்டாகக்கூடிய நோய் 399
தோடங்கள் 399
வாதத்தின் ஐந்து வகையும் வருமாறு 400
பித்தம் 401
கபம் 401
ஸ்நாயு முதலியவைகளின் நிரூபணம்,
ஸ்நாயுக்கள் தசைக்கயிறுகள் 402
அஸ்திகள் 402
மர்ம ஸ்தானங்கள் (இடங்கள்) 403
உடம்பின் உட்புறமுள்ள உறுப்புகள் 403
பஞ்சபூத உற்பத்தி 404
பூதங்கள் குறைவதால் ஏற்படும் குணா குணங்கள் 405
பஞ்சபூதங்களிலிருந்து வாத, பித்த, கபங்களின் உற்பத்தி 405
பஞ்சபூதங்களிலிருந்து ஏழு தாதுக்களின் உற்பத்தி 405
பஞ்சபூதங்கலிருந்து அறுசுவைகளின் உற்பத்தி 405
பஞ்சபூதங்களின் நிறங்கள் 406
அவயவங்களிலுள்ள பஞ்சபூத குணங்கள் 406
ஜீவராசிகளில் பஞ்சபூதத்தின் தன்மை 407
பஞ்சபூதங்களுக்கு உரிய காலங்கள் 408

# நாடியின் நோய்கணிப்பு

## திரி நாடிகளின் இயல்

### வாதமாய் படைத்து

உலகம் என்ற சொல் இந்த மண்ணுலகை மட்டும் குறிக்கும் சொல்லாகப் பயன்படுகிறது. ஆனால் இவ்வுலகம் சூரியனும், திங்களும் இன்னும் அண்டவெளியில் கண்ணுக்குத் தெரிபவைகளும், தெரியாதனவுமாக எண்ணற்ற கோள்களை உள்ளடக்கி இருக்கிறது. இக்கோள்கள் எல்லாம் எப்போது உண்டானவை என்று எவராலும் கூற இயலாது. அப்படி இனம்தெரியாத காலத்தில் படைக்கப்பட்ட கோடிக்கணக்கான கோள்களிலும் இவ்வுலகம் ஒன்று. ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி சூரியனிலிருந்து சிதறி விழுந்த ஒரு துண்டுதான் இந்த உலகம் என்றாலும், அந்தச் சூரியன் எப்போது உண்டாயிற்று என்று அறுதியிட்டு கூறஇயலவில்லை. எனவே இவ்வுலகம் உண்டானபின் அதில் உயிர் தோற்றம் எப்போது ஆரம்பமானது என்பதையும் அறுதியிட்டு கூற இயலாது.

பூமி வெறும் நெருப்புக் கோளமாக இருந்தபோதிலும், அதனைச் சுற்றியுள்ள வெளியில் காற்று மண்டலம் இருந்திருக்கிறது. இப்போது அக்காற்று மண்டலம் இருக்கிறது. இந்த காற்று மண்டலத்தில் உள்ள வாயுதான் கோளங்கள் தோன்றவும் மற்றும் அனைத்து ஆக்கப்பாடுகளுக்கும் காரணமாக இருக்கிறது.

பூமியானது நெருப்புப் பிழம்பாய் இருந்தபோது என்ன நிகழ்ந்ததென்று அறுதியிட்டுக் கூறமுடியுமா அது குளிர்ந்து இறுகியபின் பலமாற்றங்கள் அமைந்திப்பதைக் காண்கிறோம். மேல்பாகம் மட்டுமே குளிர்ந்திருக்கின்றது. உள்ளே இன்னும் அந்த நெருப்புக்குழம்பி இருப்பதால்தான் பல இடங்க்ளில் பூகம்பங்கள் உண்டாகின்றன.

எனவே, பூமியின் மேல்பாகம் குளிர்ந்து இறுகியபின், பூமியைச் சுற்றிலுமுள்ள காற்று மண்டலத்திலுள்ள வாயுக்களின் கூட்டுறவால் ரசாயன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும்.

நவீன அறிவியல் கூற்றுப்படி பூமியைச் சுற்றியுள்ள வெளியில் பலவித வாயுக்கள் கலந்திருப்பதாக அறிகிறோம். அவற்றில் மிக முக்கியமானவை(1) பிராணவாயு, (2) நீதுருவாயு, (3) நீர்வாயு, (4) கரியமிலவாயு என்பனவாம்.

உயிருக்கும் உயிர் இயக்கத்திற்கும் ஆதாரமான வாயு, பிராணவாயு ஆகும். தாயின் கருப்பையிலிருந்து வெளிவந்த குழந்தை நிலத்தில் விழுந்தவுடன் தாயினிடமிருந்து குழந்தை பிரிக்கப்படுகிறது. அப்படி பிரிக்கப்பட்ட பிறகு அக்குழந்தை வாய்திறந்து அழுகிறது. அது அழாவிட்டால் இறந்துவிடும் என்பது அனுபவம். தாயின் கர்ப்பப்பையில் இருக்கும்வரை தாயின் வாயிலாகப் பெற்றுவந்த பிராணவாயுவை, தன் வாயின் வழியாகப் பெறக்கூடிய நிர்பந்தம் உண்டாகிவிட்டது. அதனால் அது வாயைத்திறந்து அழும்போது அண்டவெளியின் காற்று குழவியின் வாய் வழியாகச் சென்று, புப்புசக் கண்ணறைகளில் நிரம்பி நெஞ்சறையை பிரிக்கிறது. விதானம் தாழ்ந்து உயர்கிறது. இதயம் சுருங்கி விரிகிறது. குருதி (இரத்தம்) உடல் முற்றும் பரப்பப்படுகிறது. ஒருமுறை இந்த இயக்கம் ஆரம்பமானவுடன், இறைவனால் அக்குழந்தையின் உடம்பில் தரிக்கச் செய்யப்பட்ட உயிர் (வாயு) அவ்வியக்கத்தைக் கைகொள்கிறது. இதிலிருந்து அண்டவெளியிலுள்ள காற்றும், அதில் நிறைந்திருக்கும் பிராண வாயுவும் உயிரியக்கத்திற்கு எவ்வளவு இன்றியமையாதது என்பது விளங்கும்.

அண்டத்திலுள்ள இவ்வாயுதான் படைப்பிற்கு ஆதாரமானது என்பது சித்தர்களின் கொள்கை. அதனாலேயே தேரையர் என்ற சித்தர் வாதமாய்ப் படைத்து, பித்தவன்னியாய் காத்து, சேட்ப சீதமாய்த் துடைத்து என்று கூறியிருக்கிறார்.

இக்கருத்தை நவீன அறிவியல் கூற்றுப்படி ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஒரு உயிர் ஒரு ஒற்றை விலம் உள்ள உடம்பில்

இயங்கவேண்டுமானால் மேலே கூறிய பிராணவாயு, நீதறுவாயு, நீர்வாயு, கரியமிலவாயு ஆகிய நான்கும் இன்றியமையாதன என்பது அறிவியலின் முடிவு.

வாய் என்ற சொல்லே வாயு என்பதன் அடிப்படையில் பிறந்ததாகத் தோன்றுகிறது. ஏனெனில், குழந்தை பிறந்ததும் அக்குழந்தையின் முதல் இயக்கத்திற்கு வெளிக்காற்றானது முதன் முதலில் உட்புகும் வாய் அமைந்திருப்பது என்று, மற்றும் ஆகாய வெளியில் சதாசலனமுறும் வாயுவினால் உண்டாகும் ஓம் என்ற பிரணவ ஒலிபோல், வாய்க்குள்ளும், குரல்வளையிலும் உள்ள வெளியில் சலனமுறும் வாயுவினால் ஒலி பிறக்கிறது. இவ்வாறு சொல்லுக்கு ஆதாரமாக இருக்கின்ற வாயு செயலுக்கும் ஆதாரமாகயிருக்கிறது. செயலுக்கு உருவம் வேண்டும். உருவத்தைக் கொடுப்பது தசை. தசைக்கு ஆதாரமாயிருப்பது நைட்ரஜன் வாயு தொடு உணர்வு என்னும் ஸ்பரிசத்திற்கு ஆதாரமாக இருப்பது நரம்புகள். ஐம்பூதக் கொள்கைப்படி, தொடு உணர்விற்கு ஆதாரமாக இருப்பது வாயு. எனவே தசைகள், நரம்புகள் ஆகிய செயல்படு கருவிகளுக்கு ஆதாரமாயிருப்பது வாயு. ஆகவே, இயக்கத்திற்கு ஆதாரம் வாயுவாகும்.

குழந்தை பால் குடிக்கும்பொழுதும், பெரியவர்கள் நீர் பருகும்பொழுதும், உணவை மெல்லுவதற்கும் வாய் அசைவுறும் பொழுதும், பிறகு அவ்வுணவை விழுங்குவதற்குத் துணையாய் இருப்பது வாயு. விழுங்கப்பட்ட உணவு உணவுக்குழல் வழியாகக் கீழ்நோக்கி அலை அசைவுகளால் தள்ளப்படு வதற்கும், விழுங்கப்பட்ட உணவை இரைப்பைத் தன் தசைகளால் புரட்டுவதற்கும் ஆதாரம் வாயு.

கன்மேந்திரியங்கள் என்று சொல்லப்படும் கை, கால், வாய், எருவாய், கருவாய் ஆகியவை செயல்படும் கருவிகள் ஆதலால் அப்பெயர் பெற்றன. இவைகள் செயல்புரிவதற்கு ஆதாரமாய் இருப்பது வாயு. கைகளும், கால்களும், தசை நரப்புகளால் ஆக்கப்பட்டு அதிகம் செயல்புரியும் வாய்ப்பைப் பெற்றதாலேயே அவை வாயுவின் கூறாக சித்தமருத்துவத்தில் கூறப்படுகிறது. வாயினின்று ஒலி பிறப்பது வாயுவினால்தான்.

கருப்பையிலிருந்து குழந்தை வெளியே தள்ளப்படுவதற்கு ஆதாரமாய் இருப்பதும், ஆண்-பெண் சேர்க்கையின்பொழுது விந்தை வெளியேற்றக் காரணமாயிருப்பதும் அதனால் உண்டாகும் ஸ்பரிச இன்பத்தை உடல் முற்றும் பரப்பக் காரணமாயிருப்பதும் வாயுவாகும். அதனாலேயே தோல் ஸ்பரித்தில் ஆதாரமாகவும், ஸ்பரிசத்திற்கு வாயு ஆதாரமாயும் உள்ளதாகக் கூறப்படுகிறது.

மலத்தைக் கழிப்பதும், சிறுநீரை இரத்தத்திலிருந்து பிரிப்பதும், சலப்பையை நிரப்புவதும், பின்னர் சலவாகியின் வாயிலாக வெளியேற்றுவதும் வாயுவின் செயலாகும். இதயம், புப்புசம், விதானம் ஆகியவை இயங்குவதற்கு ஆதாரமானது வாயுவாகும். இரத்தம் காற்றோட்டத்திற்குத் துணைபுரிவதும் வாயுவாகும். நாம் விழுங்கப்பட்ட உணவு வயிற்றிலிருந்து குடலுக்குத் தள்ளப்படுவதும் மீண்டும் அங்கிருந்து கழிவுப் பொருளாக வெளியேற்றப்படுவதும் வாயுவால்தான்.

எனவே, பிறந்த குழந்தையின் முதல் இயக்கத்திலிருந்து ஆரம்பித்த வாயுவின் இயக்கம் அக்குழந்தையின் அன்றாட இயக்கங்கள் அனைத்திற்கும் காரணமாக இருக்கிறது. எனவே, இவ்வியக்கத்திற்கு ஆதாரம் வாயுவும், அது செயல்படும் இடமாகிய வெளியும் ஆகிய இரண்டும் சேர்ந்த வாதம் என்ற தத்துவமாகும்.

வேறொரு வகையாகச் சொன்னால் பிராணவாயு இல்லாமல் எந்த உயிரினமும் வாழமுடியாது. நீர் இல்லாமல் எந்த ஒரு உயிரினமும் தனது உணவை செரிப்பித்து கழிவுப் பொருள்களை வெளியேற்ற இயலாது. ஒளியும், வெப்பமும் உயிர் வேதியல் மாற்றங்களுக்கு இன்றியமையாதவை. மண்ணின் கூறுடைய பருமையில்லாமல் எவ்வுயிரினத்திற்கும் உருவம் கிடைக்காது. இவை எல்லாவற்றிற்கும் மூலகாரணம் அண்டவெளியிலுள்ள வாயு, இடம் துரம் வெளியும், வாயுவும் ஐந்து மூலக்கூறுகளுக்கும் ஆதாரமாக இருக்கின்றன.

## வாயுப் பொருள் - வாதம் - செயல்

அண்டவெளியில் உண்டான மேலே குறிப்பிட்ட ஐந்து பெரும் மூலப்பொருள்களும் பிண்டமாகிய உடம்பிலும் இருக்கின்றன. இந்த ஐந்து மூலக்கூறுகளை வளி, அழல், ஐயம் (வாதம், பித்தம், கபம்) என்ற தத்துவங்களாகப் பரிணமிக்கின்றன. இவை உயிருக்கு ஆதாரமான தத்துவங்கள் ஆதலால் உயிர்த்தாதுக்கள் எனப்படுகின்றன. உடலுக்கு ஆதாரமாக ஏழு தாதுக்கள் பரு உடலுக்கு உருவம் கொடுப்பதாலும் இயங்குவதற்கு ஆதாரமாக இருப்பதாலும் உடல் தாதுக்கள் எனப்பட்டன.

அண்டத்திலிருந்து பிண்டமாக பரிணமித்த வாயு பிண்டமாக மட்டுமின்றி, பிண்டத்திலுள்ள இடைவெளிகளில் வாயுவாகவும் செயல்படுகிறது. அப்பொழுது அது வாதம் அல்லது வளி என்ற தத்துவமாகக் கருதப்படுகிறது.

இவ்விதமாக ஒரு மாத்திரையில் செயல்படுவது வாதம் என்ற தத்துவம், முன்பு கூறியபடி வாயுவின் உதவியால் அசைகின்ற வாய் உணவை மெல்லுகிறது. வாயுவின் துணையில் நாவானது துழாவிக் கொடுக்கிறது. கபத்தின் கூறாகிய உமிழ்நீர் உணவுப் பொருள்களைக் கரைத்து பகுதிகளாக்க உதவுகிறது. இவ்வாறு அரைக்கப்பட்ட உணவு விழுங்கப்படுவது வாயுவின் துணைகொண்டே. விழுங்கப்பட்ட உணவு, உணவுக்குழல் வழியாகக் கீழே அலை அசைவுகளால் இறக்கப்படுவது வாயுவின் துணைகொண்டுதான். வயிற்றை அடைந்த உணவுப்பொருள் வயிற்றுச் சுவர்பேசிகளால் பிசையப்படுவது வாயுவினால்தான். வயிற்றில் உற்பத்தியாகும் செரிமான நீர்களினால் பக்குவப்பட்ட உணவு மீண்டும் குடலுக்குள் தள்ளப்படுகிறது. அப்படி தள்ளுவதற்குத் துணைபுரிவதும் வாயுதான். சிறுகுடலில் மீண்டும் செரிமானம் செய்யப்பட்ட உணவு குடலுறிஞ்சிகளால் உறிஞ்சப்பட்டு மீதமுள்ள சக்கைப் பெருங்குடலுக்குத் தள்ளப்படுகிறது. சக்கைப் பொருளில் உள்ள நீர் உறிஞ்சப்பட்டு சக்கையானது மலமாக வெளியே தள்ளப்படுகிறது. இத்தனைக்கும் ஆதாரம் வாயுவாகும்.

இவ்வாறு அண்டத்தின் படைப்பிற்கு ஆதாரமாகி எல்லா செயல்களுக்கும் பிண்டத்தில் காரணமாயிருக்கும் வாயு, சுவாசத்திற்குப் பயன்படும்போது பிராணவாயுவாகவும், கீழ் நோக்கி செயல்படும்போது அபான வாயுவாகவும், உடல் முழுவதும் குருதியைப் பரப்புகின்ற செயலைச் செய்யும்போது வியான வாயுவாகவும் மேற்குறித்த செயல்கள் இயற்கையளவில் மிகாமலும், குறையாமலும் செயல்படும் தன்மையை சமான வாயு என்றும் இன்ன பிறவுமாக சித்த மருத்துவத்தில் கூறப்படு கிறது. இவைபோக இன்னும் ஐந்துவகை வாயுக்கள் அவற்றின் தொழில்களும் கூறப்படுகின்றன. எவ்வாராயினும் உயிருக்கு ஆதாரமான பிராணவாயுவாக உள் நுழைந்து பல்வேறு நிலைகளில் செயல்புரியும்போது, பல்வேறு பெயர்களைப் பெறுகின்றது.

## நோயின் அடிப்படையில் வாதம்

இயற்கையாக ஒரு மாத்திரை அளவில் செயல்படும் வாதம் உணவாதி செயல்களால் கூடவோ, குறையவோ செய்யலாம். எளிதில் செரிக்காத உணவுகள், கிழங்கு வகைகள் போன்றவற்றை அளவிற்கு அதிகமாக உட்கொள்வதால், உட்கொள்பவனுடைய செரிமானத்திற்கு அதிக அளவுள்ள உணவு செரிபடாமல் நிற்கும். அப்போது அது புளித்து நுரைக்கும். உடனடியாக அங்கே வாயு உற்பத்தியாகும். இவ்வாயு தனக்கே உற்பத்தியாகி அலைபாயும் தன்மையில் பல திசைகளிலும் பாயும். மேல்நோக்கியோ, கீழ்நோக்கியோ, பக்கங்களிலோ சென்று வயிற்றின் சுவர்களில் இருந்து சுரக்கும் சீரணநீரை வறட்டும் உறுப்புகளின் ஊடே சென்று மோதும். வயிற்றையே கலக்கும் வயிற்றுப் பேசிகளை அசைக்கும். இதன் காரணமாக அசீரணமந்தம், பேதி, வயிற்று வலி முதலியன உண்டாகலாம். இந்நிலைகள் மாறாமல் மேலும் மேலும் வாயு உற்பத்தி அதிகமானால் இரத்தத்துடன் கலந்து திசுக்களுக்கும், தசைகளுக்கும் செல்லலாம். இவ்வாறு செல்லுகின்ற வாயு கொஞ்சம் கொஞ்சமாக சேர்ந்து அடர்த்தி அதிகமாகி ஆங்காங்குள்ள தசைகள், தசைநார்கள், நரம்புகள் முதலியவற்றினூடே உலவினால் வலி, குத்தல், நரம்புகள் ஸ்தம்பிக்க வைத்துவிட்டால் வாதநோய் என்று சொல்கிறோம்.

ஸ்தம்பிக்கவைக்கின்ற வாயு, இரத்த ஓட்டத்தைக் குறிப்பிட்ட இடத்தில் தப்பிக்கவைத்தல் அவ்விடத்தில் தசைகளுக்கு உணவில்லாமல் அது சூம்பிப்போகலாம். வயிற்றிலேயே அதிகம் நின்று குடல்களுக்குச் சென்று அருகிலுள்ள தசைகளைக் கெடுக்கும் வல்லமையைப் பெற்றிருக்கலாம். அப்பொழுது அங்கே புண் உண்டாகலாம். அல்லது வயிற்று பேசிகளிலுள்ள சுரப்பிகளில் ஹைட்ரோகுளோரிக் அமிலம் மற்றும் பெப்சின் போன்ற அமிலங்களை அதிகம் சுப்பதற்குத் தூண்டலாம். அதனால் புண்ணுண்டாகலாம்.

வாயுவிற்கு உலர்த்தும் வன்மையுண்டு. அபான வாயுவாகப் பெருங்குடலிலே செயல்படும்போது அளவில் மிஞ்சி மலத்தை உலர்த்தி மலச்சிக்கலை உண்டாக்கலாம். பெருங்குடல் இறுதியில் கழிவுப் பொருள்களிலுள்ள நீரை உறிஞ்சுவதற்குத் துணைபுரிவதும் இந்த அபான வாயுதான். உறிஞ்சும் தசைகள் பலமற்றுப் போனாலும் அபானவாயுவின் இயற்கைத் தன்மையில் மாறுபட்டு இருந்தாலும் உறிஞ்சும் வல்லமை குறையும். அதனால் கழிவுப் பொருள்களிலுள்ள நீர்த்துவம் கூடி, மலம் கொளகொளத்து வரும். மலத்தை வெளியேற்றுவது அபானவாயு.

எனவே, வாயுவால் உண்டான பொருள், வாயுவால் பல நிலைகளில் இயக்கப்பட்டு இறுதியில் வாயுவால் வெளித்தள்ளப் படுகிறது. இதிலிருந்து வாயுவே வாதமாக எல்லா இயக்கங் களுக்கும் காரணமாக இருக்கிறது என்பது தெளிவாகிறது.

## பித்தவன்னியாய்க் காத்து

உயிரின் மூன்று சக்திகளில் காக்கும் சக்தி பித்தமாகும். குருதி ஓட்டத்திற்குக் காரணமாகிய வாயு, வாயுவின் கூறாகிய உயிரிக் காலாக குருதியுடனேயே செல்கிறது. ஒவ்வொரு விலத்திற்கும் சென்று தகனம் என்ற ரசாயனக்கிரயை புரிகிறது. இக்கிரிகையின் பொழுது வெப்பமும் சக்தியும் உண்டாகின்றன. இக்கிரியை தொடர்ந்து இடையறாது நடந்துவருவதால்தான் உடலின் வெப்பநிலை குறிப்பிட்ட 98.4 $^{\circ}$F அளவில் சீராக இருக்கிறது. இந்த உயிர்க்கால் தன் இயக்கத்தை நிறுத்திக்கொள்கின்ற வாய்ப்பு

ஏற்பட்டால் அல்லது மாறுபட்டுச் செயல்பட்டால் உடல் வெப்பத்திலும் மாறுதல் ஏற்படுகின்றது. பங்கு மிகப்பெரியதும் அண்டத்திலுள்ள இந்த உயிர்க்காலின் பங்கு மிகப்பெரியதும் அண்டத்திலுல்ள இந்த உயிர்க்கால் பிண்டத்தில் செயல்படும் பொழுது பிண்டமாகிய உடலில் கண், உயிர் இயங்குவதற்கு ஏதுவாகின்ற காரணத்தால்தான் உயிர்க்கலென்றும், பிராணவாயு என்றும் பெயர்களைப் பெற்றது. கருவியாக அமைந்திருப்பது உடல். அக்கருவியைச் செயல்படுத்தவைக்கும் மின்சாரம் போன்றது உயிர். அவ்வுயிர் உடல் இயங்க இன்றியமையாதது. உயிர்க்கால் கருவியில் சிறு கோளாறு ஏற்படினும் மின்சாரம் கோளாறு செய்வதுபோல் உயிரும் அக்ககோளாறுகளை உடலின் வாயிலாகவும், நாடிகளின் வாயிலாகவும் காட்டும். முடிந்த வரையில் செயல்பட முயற்சிக்கும்.

குறிப்பிட்ட அளவில் வன்னியாகிய வெப்பம் இருந்து கொண்டேயிருந்தால்தான் உயிர் உடலில் இயங்கமுடியும். அதற்கு அடிப்படையான குருதிச்சுற்றோட்டமும், தகனம் என்ற கிரியையும் நடைபெறவேண்டும். இவ்விரண்டுக்கும் ஆதாரமானது பிராண வாயுவாகும். உடல் வெப்பம் குறைந்து உடல் குளிர்ந்தால் உயிரியக்கம் நின்றுவிடும்.

பித்தம் என்ற சக்தி உடல் முழுவதும் இயங்கும் ஓர் சக்தி. இச்சக்தி தன் இயற்கையான செயலுக்குத் தடை, உடலின் எப்பாகத்தில் ஏற்படினும் அதற்குரிய குறிகுணங்களைக் காட்டும்.

குருதியின் வாயிலாக உடல் முழுவதும் பித்தம் செயல் பட்டாலும், பித்தத்திற்கு ஆதாரமான குருதியை உடல் முழுவதும் பரப்பும் செயலை, வாயுவின் துணைகொண்டு இதயம் செய்கிறது. அதனால் இதயமும் பித்தம் வாழுமிடமாகக் கொள்ளப்படுகிறது. வயிற்றிலுள்ள சீரண நீர்களெல்லாம் உற்பத்தியாவதற்கு ஆதாரமாக இருப்பது குருதியாகும் அப்படி உற்பத்தியான சீரண நீர்கள் வன்னியின் செயலாகிய பக்குவப்படுத்துதலைச் செய்கின்றன. பெரும்பாலும் வயிற்றில் உண்டாகும் சீரண நீர்கள் புளிப்புச் சுவையுடைய அமிலத் தன்மை வாய்ந்தவை. புளிப்பு பித்தத்தின்பாற் பட்டதால் வயிறும் பித்தம் வாழுமிடமாகக்

கொள்ளப்படுகிறது. ஆயினும் வளி அழல், ஐயமாகிய 1, ½, ¼ என்ற அளவில் உடல் முழுவதும் தான் செயல்படுகின்றன. வயிற்றிலும் அப்படியே ஆயினும் பசித் தீயாகிய வன்னி உண்டாகுமிடம் வயிறு. அதனைச் சடராக்கினி என்றும் சொல்கிறோம். எனவே அடிப்படையிலும் வயிறு பித்தம் வாழும் இடமாகக் கொள்ளப்படுகிறது. வயிற்றிலுள்ள ஈரல் பித்த நீரைச் சுரக்கிறது. வயிறு HCl பெப்சின் போன்ற அமிலங்களையும், நொதிகளையும் சுரக்கிறது. இந்த எல்லா அமிலங்களும் நொதிகளும் உணவை பக்குவப்படுத்துவதற்காகவே சுரக்கின்றன. இராசயன மாற்றம், வன்னியாகிய வெப்பம் அல்லது நெருப்பின் துணையின்றி நிகழாது. வெறும் நீரினாலோ வெறும் காற்றினாலோ மட்டும் ரசாயன மாற்றம் நிகழாது. எனவே, பித்தம் வாழும் இடமாக வயிறு கருதப்படுகிறது.

புப்புசக் கண்ணறைகளிலுள்ள பிராணவாயு தன் சக்தியால் குருதியைத் தூய்மைப்படுத்துகிறது. அங்கும் பிராணனும், குருதியும் பங்கு பெறுவதால் பித்தம் வாழுமிடமாகக் கருதப்படுகிறது.

ஒரு பொருளை மலிமைமற்றுத் தூய்மைப்படுத்த வேண்டுமானால் அது நெருப்பால்தான் முடியும். நெருப்பிற்கு ஆதாரமாகிய உயிர்க்கால் இதற்குத் துணைபுரியவேண்டும். தேவையற்ற பொருள்களை அகற்றித் தூய்மைப்படுத்தி இயற்கை உடல் வெப்பத்தை நிலைநிறுத்தின் களாகிய பிராணனும், ஆகையால் "பித்தவன்னியாய்க் காத்து" என்று தேரர் கூறினார். தகனம் என்ற கிரியையின் பொது சக்தியும் சூடும் பிறக்கின்றன. சூடு இல்லையேல் சக்தியில்லை. எனவே, சூடும் சக்தியும் கொடுத்துக் காப்பதனால் குருதியும் பித்தத்தின் தன்மை உடையதாகக் கூறப்பட்டுள்ளது.

கண்ணுக்கு ஒளி கொடுப்பது பித்தம். நெருப்பின் பாற்பட்டது ஒளி, வன்னியாகிய பித்தம் கண்ணின் ஒளிக்கு ஆதாரம். ஒளி என்பது தோலுக்கு உண்டு. தேஜஸ் என்று வடமொழியிலும், Austure என்று ஆங்கிலத்திலும் சொல்லுவார்கள். இந்த ஒளியைக் கொடுப்பதும் பித்தமாகும்.

நவீன விஞ்ஞானக் கூற்றுப்படி (Bile Pigments) என்ற பித்த நிறமிகள் தான், பித்தத்தின் மற்றொரு இருப்பிடமாகக் கருதப்படுகிற ஈரலில் தோன்றும் பித்த நீரில் உள்ளன. இப்பித்த நிறமிகள்தான் தோலுக்கு ஒளியைக் கொடுக்கின்றன. எனவே, தோலுக்கு ஒளியைக் கொடுப்பது பித்தம் என்பதும் நிலை நிறுத்தப்பட்டது.

இப்பித்தம் தருகின்ற உடல்நிறம் அல்லது ஒளி பித்தத்திற்கு எனச் சித்த மருத்துவத்தில் சொல்லப்பட்ட மஞ்சள், சிவப்பு ஆகும். இந்த அடிப்படையில் அமைகின்ற உடம்பு பித்த உடம்பாக அமைகிறது.

கோழி முட்டையில் இருக்கின்ற மஞ்சள் கரு அதிலுள்ள உயிருக்கு உணவாக இருந்து பாதுகாக்கிறது. அது பித்தத்தின் பாற்பட்டது. ஏனெனில் மஞ்சள் கருவிலிருந்து எடுக்கின்ற அன்டத்தையும், கபத்தின் இருப்பிடமாகிய நாக்கு அசைவற்றுப் போனால் அங்கே தடவப்படுகிறது. நாக்கின் அசைவைத் தடைப்படுத்தியது வாதம். வாதத்தின் இயற்கைச் செயலைத் தடைப்படுத்தியது கபம். அக்கபத்தைப் போக்கி வாதத்தைத் தன்னிலைக்குக் கொணர்வது பித்தத்தின் தன்மை பெற்ற மஞ்சள் நெய்யாகும்.

பிராணவாயுவையும் அயச்செந்த வளத்தையும் சுமந்து செல்லும் குருதிச் சிவப்பணுக்களின் தோற்று ஒடுக்கங்களுக்கு இருப்பிடமாயிருப்பது பித்தம் வாழுமிடங்களில் ஒன்றாகக் கருதப்படும் ஈரல் ஆகும். உடலின் இரசாயனக் கூடம் என்று சொல்லப்படுவது ஈரலாகும். இரசாயனக் கூடத்தில் தேவைப் படுவது வன்னியாகிய அனல். உடலில் உண்டாகின்ற இரசாயன மாறுதல்களும் உடலை இயற்கையாகக் காப்பதற்கேயாகும். அக்காப்புத் தொழில் தடை ஏற்பட்டால் படிப்படியாக அது உடலையும் பின்னர் உயிரையும் பாதிக்கும். எனவே, காப்பது பித்தமாகும்.

பித்தமானது அதிகரித்தால் அது உடம்பு முழுவதையுமே தான் தாக்கும். உடம்பு முழுவதுமே எரிச்சலை உண்டுபண்ணலாம். அல்லது பலவீனமான பாகத்தை மட்டும் தாக்கலாம், வறட்சியை உண்டுபண்ணலாம்.

உடம்பு எப்பொழுதும் இயற்கை வெப்பநிலையைவிட அதிகமாக இருப்பதுபோல் உணர்வுண்டாகும். பித்தம் வயிற்றைத் தாக்கினால் அதிக பசி, வயிற்றில் எரிச்சல், புளித்த ஏப்பம், ஓக்காளம், வாந்தி முதலியவற்றை உண்டாக்கலாம். பித்த நீரை அதிகமாகச் சுரக்க வைக்கலாம். காமாலை நோயை உண்டாக்கலாம். சுரத்தை உண்டாக்கலாம். இன்சுலின் என்ற நொதியை அதிகம் சுரக்கச் செய்யலாம். வயிற்றிலுள்ள செரிமான நீர்கள் அதிகம் சுரக்கலாம்.

## *சேட்ப சீதமாய்த் துடைத்து*

எப்பொருளும் நீரின் உதவியின்றிச் சுவையூட்ட இயலாது. எனவேதான் சுவைக்கு இருப்பிடமாகிய உமிழ்நீர் சுரக்கின்ற நாவைக் கபத்தின் தன்மை பொருந்தியது என்றனர் சித்தர்.

ஒரு மண் கட்டியை நீரில் போட்டால் அதன் உருச்சிதைந்து நீரில் கரைந்து போகிறது. சீனியை நீரில் போட்டால் அது நீரில் கரைகிறது. அது நுண்பகுதிகளாகப் பிரிகிறது. பகுதிகளாகப் பிரிவதுதான் பொருளுக்கு அழிவு. நாம் உட்கொள்ளும் உணவு பற்களால் அரைக்கப்பட்டதற்கும் வாய்பாயிருப்பது உமிழ்நீர். அப்படி எடுத்துச் செல்லப்பட்ட உணவு பல மாற்றங்களை அடைவதற்கு வாதமும், பித்தமும், கபமுமாகிய மூன்று சக்திகளும் காரணமாகும். செரிமானம் முடிந்த இறுதியில் கழிவுப் பொருள்கள் வெளியேற்றப்படுகின்றன. இவை பெரும் பான்மையிம் சிறுநீர், வியர்வை, மலம் ஆகியவையாக வெளியேர்றப்படுகின்றன. கபத்தின் தன்மையுடைய நீரே இவற்றிற்கு வாய்ப்பாக உள்ளது. 'மலத்தின் மூலமாக வெளியேற்றப்படும்பொழுது, நீர்த்துவமே இல்லாவிட்டால் மலம் சூரணமாக வந்து விழும். சிலருக்கு மலச்சிக்கல் ஏற்படுவதற்கும் இது காரணம். கபம் என்ற தத்துவம் கால்

மாத்திரையிலும் குறைந்துவிட்டது என்று பொருள். அக்கபம் தன் இயற்கையளவில் குறைவதற்குக் காரணமாகப் பித்தம் அல்லது வாதம் என்ற தத்துவங்களாகவும் இருக்கலாம். எவ்வாறு எனில், வாதம் என்ற தத்துவம் தன்னியற்கையளவில் மீறினால் வறட்சி உண்டாகும். தன்மையினால் கபத்தைத் தனக்கே உரிய வெப்பத்தின் அதிகரிப்பால் கபமாகிய தத்துவத்தைக் குறைக்கலாம். எனவே, கபம் என்ற தத்துவம் தன்னளவில் மிகவும் குறையவும் வாத பித்தங்களும் காரணமாக இருக்கலாம். ஆனால் கபம் என்ற தத்துவம் தன் இயற்கையாளவான கால் மாத்திரையில் செயல்படும்போது, அதன் தன்மையாகிய நீரின் உதவிக்கொண்டு அழித்தலாகிய கழிவு வேலையைச் செய்கின்றது. சுருங்கக் கூறின், உடம்பிலுள்ள கழிவு மண்டலம் கபத்தினாலேயே நடைபெறுகின்றது.

உடம்பில் கழிவு வேலையானது சீராகக் கால் மாத்திரை அளவில் நடந்துகொண்டேயிருக்கும் போது உடல் சீராக இருக்கிறது. கபம் என்ற தத்துவம் எக்காரணத்தாலாவது கால் மாத்திரையில் குறைந்தால், கழிவு வேலைகள் தடைப்படு கின்றன. அவ்வாறு வேண்டிய பொருள்கள் குருதியிலேயே தங்கி உடம்பில் நச்சுத்தன்மையை அதிகரிக்கும். அதேபோல் கபம் என்ற தத்துவம் தன்னளவில் மிகுந்தாலும், அதற்குரிய குணங்களுள்ள நோய்கள் உண்டாக ஏதுவாகலாம். இதன் விரிவைப் பின்னர் பார்ப்போம்.

மனிதனின் உடல் அவனுடைய வயதின் நிலைக்கேற்ப உள்ளது. மனிதனின் ஆயுளை மூன்றாகப் பிரித்து, முதல் பகுதி வாத காலமாகவும்; இரண்டாவது பகுதி பித்த காலமாகவும்; மூன்றாவது பகுதி கப காலமாகவும் சித்தமருத்துவம் கூறுகிறது. ஒரு மனிதன் இயற்கையோடியந்த நல்வாழ்வு வாழ்ந்தவரின் வாதகாலமான முற்பகுதியில் எல்லாத் தத்துவங்களும் வளரும். இரண்டாம் பகுதியான பித்த காலத்தில் வளர்ந்த தத்துவங்கள் பாதுகாக்கப்படும். மூன்றாம் பகுதியாகிய கப காலத்தில் எல்லாத் தத்துவங்கலும் சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பிக்கும். தத்துவங்கள் குறையக் குறைய அவ்வுடம்பில் செயல்பட்டுவரும் ஆன்மா, அவ்வுடம்பில் செயல்படமுடியாத நிலையை

அடைகின்றபோது செயல்படாது அடங்கிவிடும். இதனையே மரணம் என்று சொல்லுகிறார்கள். இறுதியில் உயிர் அடங்கும் பொழுது, தொண்டையில் கபம் கட்டி பிராணவாயு உட்செல்லும் வெளிச் செல்லவும் வழியின்றிக் கபம் அழிவுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

பெருங்குடலானது மலத்திலுள்ள மிகுதியான நீரை நன்கு உறிஞ்சமுடியாத நிலையில், அபான வாயுவும், தன்னளவில் மிகுந்தால், அதிசாரம் என்ற நோய் உண்டாகிறது. சாரம் உடலுக்குச் சேராமல் நீர் நீராகக் கழிந்தால் அதிசாரம் கிரகணி போன்ற கழிச்சல் நோய்கள் வருகின்றன. உடம்பிலிருந்து மிக அதிகமான நீர் வெளியேறிவிடின் மரணம் உண்டாகக் கூடும். இந்த நிலையில் உணவின் சாரத்தை வெளியேற்றுவது இயற்கைக்கு அதிகப்பட்டு நின்ற கழிவு நீரேயாகும். மலத்தோடு உள்ள அதிகப்படியான கழிவு நீரே; உணவில் சாரத்தை வெளிக் கொணரும் கருவியாக உள்ளது. இயற்கையாகச் செயல்படும் அபானவாயு அதனை வெளியேற்றுகிறது. இயற்கைக்கு மாறுபட்டு அதிகப்படியான நீர் இருப்பதால் அபானவாயு அதனை வெகு வேகமாக வேண்டாத பொருளாக வெளியேற்று கிறது. எனவே, இங்கும் நீரின் கூறாகிய கபம் அழித்தலுக்கும் ஆதாரமாயிருக்கிறது.

## *சன்னி அல்லது முக்குற்றநிலை*

முக்குற்ற நோயில் உடல் மிகவும் குளிர்ந்துபோய்த் தான் இறுதிநிலை உண்டாகும் எனச் சொல்லப்படுகிறது. இந்த நோயாளிக்கு உடல் குளிர்வதும், குளிர்ச்சியான வியர்வை உண்டாவதும் மரணக் குறியாகச் செயல்படுகிறது. குளிர்ந்த வியர்வையை மரண வியர்வை என்றே சொல்வது வழக்கம். முக்குற்றத்தில் உடல் குளிர்ந்தால் உடனடியாக பித்தத்தை ஏற்ற, உடலில் சூடு உண்டாக்குதல் மரபு. அப்படிச் சூடுண்டாக்கா விடில் மரணம் உண்டாகலாம். எனவே வியர்வையும் உடலின் சில்லிட்ட நிலையும் கபத்தின் மிகுதியைக் காட்டும்.

வளி, அழல், ஐயம் மூன்று உயிர் தாதுக்களும் தங்கள் இயற்கை அளவில் ஒரே நேரத்தில் மிக அதிகமாயினும், மிகக் குறையினும் முக்குற்றநிலை அல்லது சன்னி என்று சொல்லப் படுகிறது.

இம்முக்குற்ற நிலைக்கு முதற்காரணமாயிருப்பது கபம் என்ற தத்துவம் என்பது சித்தர் கொள்கை. ஏதாவது அகப்புறக் காரணங்களால் அழித்தல் சக்தியாகிய கபம் தன்னிலை வளர்ச்சி அடைந்து பின் வேற்று நிலை வளர்ச்சி அடையும்போது அதனைச் சீராகப் பித்தமும் எழும். துணைக்கு வாதமும் எழும். இதுவே இயற்கையாகவே முக்குற்ற நிலைக்கு மூலகாரணம் கபம்.

உடல் முழுவதும் எப்போதும் பரவி ஓடிக்கொண்டிருப்பது குருதி. இது நீர்த்துவமானது. இதன் ஓட்டம் எக்காரணத்தாலாவது தடைப்பட்டால் தகனம் என்ற இரசாயனக் கிரியை நின்று போகும். இது நின்றுபோனால் உடலில் இயற்கைச் சூடு குறையும். உடற்சூடு குறைய ஆரம்பித்தால் கபத்தின் ஆதிக்கம் அதிகமாகிறது. கபத்தின் ஆதிக்கம் அதிகமானால் உடல் குளிர்ந்து விறைத்து போகலாம். எந்தச் சிகிச்சைக்கும் வசப்படா விட்டாலும், உயிர் அடங்கிவிடும். எனவே, கபமே அழிவுக்குக் காரணம் என்று தெளிவாகிறது.

வயிற்றிலுள்ள சீரண நீர்கள் எல்லாம் பித்தத்தின் தொழிலையும், கபத்தின் தொழிலையும் புரிகின்றன. உணவுப் பொருள்களை நீர்த்துவமாக நின்ற பகுதிகளாகப் பிரிக்கும் வேலையில் கபத்தின் செயலையும் இரசாயன முறையில் பக்குவப்படுத்தும்போது பித்தத்தின் வேலையையும் செய்கின்றன. குருதியில் வாத, பித்த, கபம் எனும் மூன்று தத்துவங்களும் உள்ளன. உயிர்த் தத்துவங்களாகிய இம்மூன்றும் உடல் முழுவதும் 1, ¼, ½ என்ற விகிதத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குருதியானது நீர்த்துவமாய் இருப்பதால் கபத்தின் தன்மையையும், அதில் பிராணவாயு கலந்து எல்லா விடங்களுக்கும் ஓடிச்செல்வதால் வாயுத் தன்மையையும் சிவப்பு அணுக்களைத் தாங்கிச் சென்று விடங்களில் தகனக்கிரியை செய்து வெப்பம் சப்தி ஆகியவற்றைக் கொடுப்பதால் பித்தம் என்ற

தன்மையையும் பெறும். எனினும், உடற்கூடு ஒரே சீராக இருப்பதற்கும் உடலைக் காப்பதற்கும் ஆதாரமாய் இருப்பதனால் பித்தம் வாழுமிடமாகக் கொள்ளப்பட்டது.

குருதியிலுள்ள வெள்ளை அணுக்கள் பாதுகாப்புக்காகப் போராடி அழிந்து வெண்மையான சீழாக வெளிவரும்போது கபத்தின் தன்மை அங்கே பிரதிபலிக்கிறது. தற்காலம் பேசப்படும் குருதிப் புற்றுநோய் (Blood cancer)க்குக் காரணமாய் இருப்பது இயற்கையளவுக்கு அதிகமாக வெள்ளை அணுக்களே ஆகும் என்று கூறப்படுகிறது.வெள்ளை அணுக்கள் அளவோடிருக்கும் போது அழிவை அவையே உண்டாக்குகின்றன. கபத்தின் இறுதித் தன்மை அங்கே பிரதிபலிக்கிறது.

தூய்மைக்கு எடுத்துக்காட்டாக இருக்கும் வெண்மை அழிவுக்கு ஆதாரமாகவுள்ளது. மருத்துவத்தில் கழிவு மண்டலம் என்று உடல் தத்துவத்தில் சொல்லப்படுவது கபத்தின் செயலே யாகும். இங்கே தேவையற்ற பொருள்கள் வெளியேற்றப்பட்டு உடல் தூய்மை செய்யப்படுகிறது. வியர்வை, சிறுநீர் ஆகியவற்றின் வாயிலாகத் தேவையற்ற பொருள்கள் வெளியேற்றப்படுகின்றன. அந்தந்த உடல் வன்மைக்கும், செரிமானத் திறனுக்கும் ஏற்றாற்போல் உண்ணப்படும் உணவிலுள்ள சாரங்கள் கிரகிக்கப்படுகின்றன. மீதியுள்ளவை கழிவுப் பொருளாகக் கழிகின்றன. அதே கழிவுப் பொருள் தாவரங்களுக்கு உணவாக்கப்படுகிறது. இதிலிருந்து தெரிவது நம்மால் செரிக்கப்பட முடியாத பொருள்களும் கழிவுப் பொருள்களாக வெளியேற்றப்படுகின்றன. இதனாலேயே அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்ற பழமொழி ஏற்பட்டதுபோலும்.

வள்ளலாரின் அருள்வாக்குப்படி விந்துவே ஒரு கழிவுப் பொருளாகும். மண வாழ்வில் ஈடுபட்டோர்க்கு பதினைந்து நாட்களுக்கொருமுறை விந்து கழிக்கப்படவேண்டும். சித்த மருத்துவத்தின்படி, விந்து மிகுந்தால் அதனால் நோயுண்டாகும். மலம் கழிவுப்பொருளாக வெளியேறுவதற்கு நீர் மிக முக்கிய பங்கேற்கிறது. உடல் மலங்களாகக் கருதப்படும் மூக்குச்சளி,

கண்பீளை, வியர்வை, சிறுநீர் முதலியனவும் கபத்தின் தன்மையாகிய நீர்த்துவத் தன்மைக் கொண்டு வெளியேற்ற வேண்டியவற்றை வெளியேற்றிச் சுத்தப்படுத்துகின்றன. இந்தக் கழிவு வேலை கால் மாத்திரையளவுக்கு மிகுந்தாலும் குறைந்தாலும் நோயுண்டாகும்.

எடுத்துக்காட்டாக, கபத்தை அதிகமாக்கும் தன்மையுள்ள உணவாதி செயல்கள் இச்சாதி செயல்களாலும் அண்டத்தின் மாற்றத்தாலும் ஒருவனுக்கு முதலில் லேசாக மூக்கு நீர் பாய்தல் உண்டாவதாக வைத்துக்கொள்வோம். அம்மனிதரின் உடற்கட்டு களின் வன்மையைப் பொறுத்து எதிர்ப்புச் சக்தியிருந்தால் தானாகச் சரியாக்கிவிடலாம். அல்லது மருத்துவம் செய்தால் சரியாகிவிடலாம். மருத்துவம் செய்யாமல் விட்டபின், மேன்மேலும் கபம் விருத்தியாகும்படியாக உணவாதி செயல்கள் அமைந்து இயற்கை எதிர்ப்புவன்மையும் குறைந்துவிட்டால் வேறு கோளாறுகளும் தொடரலாம். காய்ச்சல், தலைவலி முதலியனவும் உண்டாகலாம். நாள் செல்லச் செல்ல மூக்கில் நீராகப் பாய்ந்து கொண்டிருந்து தடித்து மூக்குச்சளியாக மாறலாம். அந்தச் சளி புப்புசங்களிலும் இறங்கி நெஞ்சுச் சளியாக மாறலாம். மருத்துவம் செய்யாமல் விட்டாலோ அன்றி மருத்துவத்துக்கு வசப்படாவிட்டாலோ, நெஞ்சச் சளியாக உள்ளது (இரைப்பிருமல் (சுவாசகாசம்) நோயாக மாறலாம். இறுதியில் உடல்வன்மை மிகவும் குறைந்தபோது, கபத்தின் அழித்தல் தன்மைக்கு உட்பட்டு இளைப்பு நோயாக (சயம்) மாறலாம்.

கபம் என்ற தத்துவம் அதிகமாகும்போது மற்ற இரு உயிர்த் தாதுக்களும் கபத்தைத் தன்னிலைக்குக் கொண்டுவர முயலும் என்று முன்பே கூறினோம். பித்தம் தன் வெப்ப சக்தியால் கபத்தைக் குறைக்கவும் முயலும். இம்மூன்று குற்றங்களின் மிகுதியைத் தாங்கும் வல்லமை உடம்பிற்கு இல்லாதுபோனால், நோய் வலுப்படுகிறது. மிகுந்த அழிவினால் அதிக சுரமும், வாதத்தினால் மிகு உடம்பு வலியும், தசைகளின் வலியும் கபத்தினால் புப்புசத்திலும் மூச்சுக் குழல்களிலும் தொண்டையிலும் மூக்கிலும் அதிக சளி உண்டாதலுமாகிய குறி குணங்கள் உண்டாகலாம். இரு புப்புசங்களுக்கிடையிலுள்ள

இதயம் சளியின் பாரம் கொண்ட புப்புசத்தினால் அழுத்தப்படும். உயிர்க்கால், புப்புசங்களுக்கு வந்து நிறைகின்ற வாய்ப்புக் குறைகிறது. அதனால் குருதியின் தூய்மையாகும் நிலை பாதிக்கப்படுகிறது. குருதியில் கழிவுப் பொருள்கள் அதிகமாகி அதனை நஞ்சாக்குகின்றன. இதயமும் திணறுகிறது. தகனம் என்ற இரசாயனக் கிரியை தடைபடுகிறது. அதனால், காக்கும் பித்தமாகிய வன்னி குறைந்து கபத்தின் ஆதிக்கம் அதிகமாகி உடல் குளிர்ந்துபோகும். மருத்துவம் செய்யின் குறி குணங்கள் மாறி உடல்நிலை மாறலாம். இல்லையேல் கபத்தின் அழிவுத் தன்மையால் உயிர் அடங்கிவிடக்கூடும். எனவே, மூன்று உயிர்த் தாதுக்களில் அழிவுக்கு உரியது ஐயமாகிய கபமாகும்.

கபமானது ஐந்து வகையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கபமானது தனது நீர்த்துவத் தன்மையால் கால் மாத்திரைக்கு உண்டான அளவு கழிவாகிய அழிவு வேலையைச் செய்து கொண்டிருக்கும்போது உடல் நன்னிலையில் இருக்கும் கழிவு வேலை மிகுந்தாலும் குறைந்தாலும் கபதத்துவம் பாதிக்கப்பட்ட தாகப் பொருள். எனவே, அதற்குரிய குறி குணங்களைக் காட்டி நோயுண்டாக்கும் மூட்டுகளில் உள்ள நீர்ப்பொருள் கபத்தின் பாற்பட்டதாகும். அந்த நீர் எக்காரணத்தாலாவது குறையும்போது மூட்டுக்களில் வறட்சியுண்டாகி மூட்டுக்களை மடக்கவும், நீட்டவும் இடைஞ்சலுண்டாகும். அந்த நீர் அதிகமானாலும் வலியும், நீட்ட மடக்க இடைஞ்சலும் உண்டாகும். நாவில் சுரக்கின்ற உமிழ்நீர் தேவையானபோது தேவையான அளவு சுரத்தால் செரிமானம் நன்றாயிருக்கும். வறட்சி உண்டானால் சுவை தெரியாமல் போகலாம். செரிமானத்திற்கும் இடையூறு உண்டாகும். அதேபோல் உமிழ்நீர் அதிகமானாலும் சுவை மாறித் தோன்றும். நா வழுவழுப்புண்டாகும். ஏற்கனவே பித்தம் அதிகமானதால் அதனைச் சரிகட்டுவதற்காக உயர்ந்து குற்றமடைந்த நீராகவும் அவ்வுமிழ் நீர் இருக்கலாம். எனவே, அச்சமயம் பித்தத்திற்குரிய ஓக்காளம், வாந்தி முதலியன உண்டாகலாம்.

வியர்வை அதிகம் உண்டாயினும் நோயேயாம். சாதாரண காலத்தில் மிக அதிக வியர்வை உண்டாவது கபத்தின் மிகுதியையே காட்டும். வியர்வை அறவே அற்றுப்போயினும் நோயாம்.

சிறுநீர் அளவுக்கு அதிகமாயினும் குறையாயினும் நோயாம். சுக்கிலம் குறைந்தாலும் கூடினாலும் நோயாம்.

கபம் என்பது உடலில் ஆங்காங்கே நீர்ப்பசையையும், நெய்ப்புப் பசையையும் தேவையான அளவு தந்து கொண்டிருப்பது. கபத்தின் கூறான கொழுப்பு குருதியில் மிகுந்தால் இதயநோயை உண்டாக்கி மரணத்தைத் தரும். உடலின் பாகங்களில் மிகுந்தால் அதிதூல ரோகத்தை உண்டாக்கும். குருதி அழுத்தத்தை உண்டாக்கி மரணத்தையும் உண்டாக்கலாம்.

கொழுப்புக் குறைந்த உடல் ஒல்லியாக வறட்சியோடு வெப்பத்தோடு கூடிய உடலாகத் தெரியும். கபம் குறைந்தால் பித்தத்தின் ஆதிக்கம் அதிகமுள்ள உடம்பாக இருக்கும். வாத உடம்பும் வறட்சியோடு கூடித் தெரிந்தாலும் நிறம் கருமையாய் இருக்கும்.

கப உடம்பு மினுமினுப்போடு தசைப்பிடிப்போடு தொட்டால் சில் என்றிருக்கும்.

உமிழ் நீரில் தொடங்கி வயிற்றில் குடல்களிலும், ஈரல், மண்ணீரல், கணையம் ஆகியவற்றிலும் உற்பத்தியாகும் நொதிகளான சீரண நீர்கள் எல்லாம் கபத்தின் பாற்பட்டவை. உணவுப் பொருளைப் பகுதிகளாக்க அவை உதவுகின்றன. அவற்றினால் இரசாயன மாறுபாடு உண்டாகும்போது பித்தமாகச் செயல்படுகின்றன. நீர்த்துவம் கபத்தன்மையையும் இரசாயன மாற்றம் உண்டாக்கும் தன்மை பித்தம் என்ற தன்மையையும் கொண்டுள்ளன.

மூளை, மூக்கு, வாய், தொண்டை, வயிறு ஆகியவற்றில் நீர்த்துவமுள்ள சவ்வுகள் உள்ளன. இவை சளிச் சவ்வுகளாகும். இச்சவ்வுகள் அளவான தடிப்போடு இருக்கும்போது அதனதன் இயற்கைச் செயல்கள் ஒழுங்காக நடைபெறும். இன்றேல் நோயாம்.

மூக்கிலுள்ள சளிச்சவ்வு தடித்தாலோ அன்றி ஒவ்வாமையினால் அழற்சியுண்டானாலோ நீர்ப்பாய்ச்சலும் மூக்கு அடைப்பும் வர ஏதுவுண்டு. தொண்டையில் தடிப்பேற்படின் குரல் கம்மல், இருமல் ஆகியவை உண்டாகும். வயிற்றின் உட்சுவர்களிலுள்ள சளிச்சவ்வுகளில் தடிப்பேற்பட்டால் மந்தம் உண்டாகும். சீரான நீர்கள் உற்பத்தியாவது தடைபடும். அதனால் மந்தமுண்டாகும்; அசீரணமுண்டாகும்; வயிற்று வலி உண்டாகலாம். இதுவே கபகுன்மம் எனப்படும். செரிமானத்திற்கு இன்றியமையாத செரிமான நீர்கள் சரிவரச் சுரக்காததினால் அரைகுறையாகச் செரிமானம் செய்யப்பட்ட உணவு வெளித்தள்ளப்படும்போது அசீரண பேதி (செரியாக் கழிச்சல்) உண்டாகும்.

மதுமேகம் என்ற நோயில், சிறுநீரில் சர்க்கரைச் சத்து சேர்ந்து வெளியாகிறது. சர்க்கரை இனிப்புச் சுவையுண்மையால் அது கபத்தின் பாற்பட்டது. கபத்தின் பாற்பட்ட சர்க்கரைச் சத்து கபத்தின் கூறாகிய சிறுநீரின் வாயிலாக வெளியேற்றப்படுகிறது. இந்த நிலைக்குக் காரணம் பித்தத்தின் கூறாகிய கணையநீர் (இன்சுலின்) என்ற நொதியின் சுரப்புக் குறைந்தோ அல்லது முழுமையாகவோ இல்லாமல் போய்விடுவதாகும்.

மதுமேக நோயினால் உடம்பின் சத்து நாளுக்கு நாள் குறைந்து கொண்டேவருகிறது. சிகிச்சைக்கு வசப்படாவிட்டால், மதுமேகத்தின் பத்து அவத்தை நிலைகளுக்கும் ஆளாக்கி இறுதியில் மரணத்தை விளைவிக்கும்.

இளைப்பு நோய் கபத்தின் மிகுதியால் உண்டாவதாகும். கபத்தை விருத்திசெய்யும் உணவாதி செயல்களால் கபமானது புப்புசம், மூட்டுகள் ஆகிய இடங்களைப்பற்றி உறுப்புச் சேதத்தை உண்டாக்கி இறுதியில் கொல்லவும் செய்கிறது.

புற்றுநோய் எனப்படும் நோய்க்குக் காரணமாகவுள்ளது வாதமும், கபமுமாகும். கபத்தின் அழித்தல் சக்தியால் அழிவுற்ற இரண்டுங்கெட்டான் நிலையிலுள்ள விலங்கள் (cells) வாதத்தின் மிகுதியால் விறைந்து வளர்வதே புற்றாகும். இப்புற்று நோய் உயிர்க் கொல்லியாகும் கபத்தினால் உண்டான புற்று கபத்திற்கே உரிய அழித்தல் தன்மையைப் பெற்றிருப்பது காண்க.

குருதிப் புற்றுநோய் (Blood cancer) என்பது குருதியின் வெள்ளைப்புற்றுக்கள் அதிகமாகி அதனால் உண்டாவது. அளவோடிருந்தால் காப்புப் படையாக உதவும் வெள்ளை அனுக்ககள் அளவுக்கு மிஞ்சும்போது அழிவை உண்டாக்கு கின்றன. கபத்திற்குரிய நிறத்தின்படி வெள்ளையனுக்கள் கபத்தின் பாற்பட்டன.

எந்த நோயுமில்லாமல் இயற்கையாய் மரணம் அடைபவர்கள் தொண்டையில் இறுதிக்கபம் கட்டி, மூச்சு நின்று உயிர் அடங்குகிறது. அதற்குமுன் சில்லிட்ட வியர்வை உண்டாகிறது. உயிர் அடங்கியபின் உடல் குளிர்ந்து கபத்தின் ஆதிக்கம் வந்துவிடுகிறது. குறிர்ந்த அவ்வுடல் வெகுவிரைவில் கெட்டு அழிந்துவிடும். அதுவரை காத்தல் சக்தியைப் பெற்றிருந்த உயிர் காத்து வந்ததுபோய், உயிர் செயல்படாமல் அடங்கி விடுவதால் காக்கும் சக்தியும் போய்விடுகிறது. எனவே, கபத்தின் அழித்தல் ஆதிக்கம் வந்துவிடுகிறது.

இயற்கையாக ¼ மாத்திரையில் செயல்படும் கபம், உடலிலுள்ள கழிவு மண்டலத்திற்கு உறுதுணையாகிறது. சிறுநீர், மலம், வியர்வை ஆகியவற்றின் வாயிலாகத் தேவையற்ற பொருள்களை வெளியேற்றும் பணியைச் செய்கிறது. இப்பணியில் குறைவேற்படின் அன்றாடம் கழிக்கப்பட வேண்டிய கழிவுப் பொருள்கள் குருதியுடன் சேர்ந்து குருதியை நச்சுத்தன்மை அடையவைக்கிறது. (Renal failure) என்ற நோயில் முறையாகச் சிறுநீரில் கழிக்கப்படவேண்டிய யூரியா என்ற உப்பு குருதியில் கலந்து வெளியேறாமல் நிற்கிறது. இது மரணத்தை எளிதில் உண்டுபண்ணும் வியாதியாம்.

கைகால் ஆகிய உறுப்புக்களில் பெரியகாயம் ஏற்பட்டு அவை நச்சுத்தன்மை அடைகின்றபோது, கபத்தின் தன்மையுடைய சீழே அங்கு நஞ்சாகிறது. அச்சீழ் உற்பத்தி அதிகமாக ஆக, நச்சுத்தன்மை அதிகமாகிறது. இதுவே, மரணத்தையும் உண்டாக்கலாம்.

எல்லாத் தாவரங்களுக்கும் வளர்வதற்கு நீர் அவசியம். நெல்லுக்கு நீர் நிறைந்து ஓடிக்கொண்டிருக்கவேண்டும். ஆனால்

பல தாவரங்கள் நீர் அதிகமாக நின்றால் வேர் அழுகி கெட்டுப் போகின்றன. எனவே, கபமாகிய நீர் ஒவ்வொரு உயிருக்கும் குறிப்பிட்ட அளவே தேவை.

கபத்தின் கூறாகிய சுக்கிலம் அளவுடன் கழிந்தால் நோயில்லை. அளவுக்கு அதிகமானாலும், கழியாமலே இருந்தாலும் நோயுண்டாகும். எலும்பிலுள்ள மூளை அதிகம் விரையமானால் **எலும்புருக்கி** எனும் நோய் உயிர்கொல்லி நோயாகக் கருதப்படுகிறது. உடம்பிலுள்ள நீர்த்துவம் எவ்வகையில் அதிக அளவில் சேர்ந்தாற்போல் குறைந்தாலும் நல்லதல்ல. அதிகமான குருதி,குறுகிய நேரத்தில் வெளியேறினாலும் மரணமுண்டாகலாம். அபானத்தின் வழி அதிக பேதியாகி, நீர்த்துவம் மிக அதிகமாகக் குறைந்தாலும் ஊழிநோய், சீதபேதி ஆகியவற்றாலும் பெருங்கேடு உண்டாகலாம்.

வாந்தியின் மூலம் அதிக நீர்த்துவம் வெளிப்படினும் கோடாகும். எனவே வாதகாலத்தில் வளர்ந்து, பித்த காலத்தில் காத்து, கப காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்வுற்று இறுதியில் இயற்கைநிலை அடைகிறது. மனித உடலும் மற்றெல்லா உயிரினங்களின் உடல்களுமாம். இதிலிருந்து அறியப்படுவது அழிவுக்குக் காரணமாயிருப்பது கபம் என்ற தத்துவமாகும்.

## நாடியின் தத்துவம்

உயிருக்கு ஆதாரமானவை எல்லாம் வாயு உருவத்தில் அண்டவெளியிலே இருப்பதாக முன்பு சொன்னோம். அவற்றினின்று வாத, பித்த, கபமாகிய தத்துவங்கள் தோன்றுவ தாகவும் சொன்னோம். அண்டவெளியிலுள்ள அத்தத்துவங் களில் ஒன்றாகிய ஐம்பூதங்கள் நுண்மை நிலையிலிருந்து பருமை நிலையடைகின்றபோது அது ஒரு பொருளாகிறது என்பது சித்தாந்தக் கொள்கை. அண்டவெளியிலுள்ள அவ்வைம் பூதங்களே உடலாகப் பரிணமிப்பதால், அவையே வாத - பித்த - கபமாகவும் பரிணமிக்கின்றன.

பதியாகிய பேரறிவின் சங்கற்பத்தால் பசுவாகிய ஆன்மாக்களில் ஒன்று, அவ்வுடம்பில் செயல்பட ஆரம்பிக்கிறது. ஐம்பூத அணுக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள தத்துவங்கள் 96இல் அமைந்த உடலுக்கேற்ப 96 தத்துவங்களுமோ அல்லது குறையவோ கூடவோ அமையும். அவை வெளிப்படையாகப் பிரதிபலிக்கும்.

மேற்கூறிய ஐந்து மூலக்கூறுகளால் உண்டான உடம்பால் இம்மூலக் கூறுகள் பதியின் சங்கற்பத்தால் பிண்டமாகப் பரிணமிக்கும்போது மேற்குறித்த மூலக்கூறுகளின் தன்மை அப்பிண்டத்திலும் அமைகிறது. அதனால் வாத, பித்த, கப தத்துவங்கள் உண்டாகின்றன எனக்கண்டோம். இவ்வாறு பரிணமித்த இவை உயிர்த்தாதுக்கள் என்று சொல்லப்படுகின்றன. தாது என்றால் சக்தி என்று பொருள்படும். எனவே, இவை உயிரின் மூன்று சக்திகளாகின்றன.

## நாடி

உலகிலுள்ள எந்த மருத்துவ முறையும் நோய்க் கணிப்புக்கும் நோயாளியின் அப்போதைய நிலையை அறியும் நாடியை ஒரு முறையாகக் கொண்டுள்ளது. சித்த மருத்துவ நாடிக் கணிப்புமுறை மிக நுணுக்கமும் உயர்ந்ததும் ஆகும். சித்த மருத்துவ நோய்க் கணிப்பு முறைகளாகிய எண்வகைத் தேர்வு களில் இறுதியானதும் உருதியானதும்கூட. மற்ற ஏழுவகைக் கணிப்புக்களில் கண்டவற்றை நாடியுடன் ஒப்பிட்டுப் பார்த்து நோயை உறுதிசெய்யமுடியும். ஆனாலும் நாடியே மட்டுமே கொண்டு ஒருவர் இன்ன நோய்வாய்ப்பட்டிருக்கிறார் என்றும், இத்தனை மணி நேரத்தில் இறந்துவிடுவார் என்றும் அறுதியிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு நாடி விஞ்ஞானத்தில் மேம்பட்ட சித்த மருத்துவர்கள் இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருக்கக் கூடும். ஆனால் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குள் அந்த நாடி விஞ்ஞானத்தில் தேர்வுபெறுவது இயலாத ஒன்றாகும். பல்லாண்டுகள், பல்லாயிரக்கணக்கான பிணியாளரின் நாடிகளை மிக நுணுக்கமாக ஆராய்ந்து ஆராய்ந்து சித்தர்கள் கூறிய நாடி நிலை நிலைகளோடு ஒப்பிட்டுப்பார்த்து அனுபவம்

பெற்றாலொழிய நாடி விஞ்ஞானத்தில் முழுத்தேர்ச்சி அடைவது இயலாது. இதற்கு நாடியில் தேர்ச்சிபெற்ற ஆசிரியரின் துணையும் வேண்டும். இவ்வளவு சிறப்புவாய்ந்த நாடி விஞ்ஞானம் பற்றி சித்தர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம்.

*ஒரு சித்தர் சொல்கிறார் :*

"நாடியென்றால் நாடியல்ல நரம்பில்தானே
நலமாகத்துடிக்கின்ற துடிதானுமல்ல
நாடியென்றால் எழுபத்தீராயிரமுமல்ல
நாடியென்றால் வாதபித்த சிலேற்பனமுமல்ல
நாடியென்றால் அண்டபகிரண்டமெல்லாம்
நாடியுறும் பொருள் தெரிந்து நாடுவாரே".

என்று கூறுகிறார்.

இதனை ஆராய்வோம்.

நாடி என்று சொல்லப்படுவது உடம்பிலுள்ள ரத்தக்குழல் களில் உண்டாகும் துடிப்பு மட்டுமல்ல; அது எழுப்பத்தீராயிரம் என்று கூறுவார்கள். அது மட்டுமல்ல; நாடி என்பது வளி, அழல், ஐயம் என்ற மூன்று மட்டுமல்ல பின் எது;

இப்பேரண்டம் முழுவதும் பரந்துகிடக்கின்ற அணுவுக்குள் அணுவாக மறைந்துறையும் பேரறிவுப் பொருளாம்பதிக்கு இருப்பிடமாய் அமைந்த உயிராகிய ஆன்மாவின் இயக்கமே நாடியாகும்.

எனவே, நாடி என்பது, ரத்தக்குழல்களில் உண்டாகும் துடிப்புகளின் எண்ணிக்கையோ (Number), துடிப்புகளின் தாள அமைதியோ (Puise), எழும் பரிமாணமோ (Structure), அழுத்தமோ (Pressure) மட்டுமல்ல. அது ஒவ்வொரு உடம்பிலும் செயல்படும் உயிரின் முழு இயக்கமாகும். இந்த உயிரின் இயக்கம் உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் செயல்படு கிறது. சிறப்பாகப் பத்து இடங்களில் ரத்தக் குழாய்களின் ரத்த அழுத்தத்தில் வெளிப்படையாகப் பிரதிபலிக்கிறது. இதனையே,

நாடியை உடம்பில் பத்து இடங்களில் பார்க்கலாம் என்று சித்தர்கள் கூறியுள்ளார்கள். இந்த பத்து இடங்களிலும், எளிதாக யாருக்கும் எந்த நேரத்திலும் பார்க்கின்ற இடமாக வாய்த்தது கைகள். ஆணுக்கு வலது கையிலும், பெண்ணுக்கு இடது கையிலும் பார்க்கவேண்டியது விதி.

நாடி பார்க்கும்முன், பிணியாளரின் கைவிரல்களை நெட்டை வாங்கி, உள்ளங்கைகளில் சூடுபறக்கத் தேய்த்த பின் மூன்று விரல்களால் அழுத்தியும் விட்டும் மாறிமாறிப் பார்க்கும் போது வளி, அழல், ஐயம் ஆகியவற்றின் நிலைவேறுபாடுகளை விரல்களால் உணரமுடியும். அவ்வேறுபாடுகளுக்குத் தகுந்தாற் போல் மருத்துவம் செய்யவேண்டியது வைத்தியரின் கடமை யாகும். நாடியை முறையாகப் பயில ஆசிரியரின் துணையோடு ஆரம்பித்து அதன்பின் அனுபவத்தால் ஆற்றல் பெறுக.

## எண்வகைத் தேர்வு

சித்த மருத்துவ முறைப்படி நோயைக் கணிப்பதற்கு எட்டு விதமான அணுகுமுறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றையே எண்வகைத் தேர்வு என்பர். ஆயுர்வேதத்தில் கூறப்படும் அஷ்டவிதப் பரிட்சைகளுக்கும், சித்தமருத்துவத்தில் கூறப்படும் எண்வகைத் தேர்வுகளுக்கும் சிறிது வேறுபாடுண்டு. சித்த மருத்துவத்தில் கூறப்படும் எண்வகைத் தேர்வுகளாவன :-

(1) நா, (2) நிறம், (3) மொழி, (4) வழி, (5) தொடு உணர்வு, (6) மலம், (7) சிறுநீர், (8) நாடி என்பன.

### நா

நோயாளியின் நாக்கைப் பரிசோதிக்க வேண்டும். நாக்கு இயற்கையாக இருக்கிறதா? விசந்து தாபிதம் அடைந்திருக்கிறதா? கறுத்து வறட்சியுடன் காணப்படுகிறதா என்பதை அறிய வேண்டும். நோயாளி சுவையை இயற்கையாக அறிகிறாரா மாறுபட்டு அறிகிறாரா? என்பதை அறிதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக கைப்பு, புளிப்புச் சுவையை உணர்வதாகவோ, மழுமழுவென்று சுவையை அறியமுடியாமல் நீர் சுரந்து கொண்டிருக்கிறதா? என்பனவற்றை அறிந்தால் மிகுந்த குற்றம் வாதமா? பித்தமா? கபமா? என்பதை அறியமுடியும்.

### நிறம்

நோயாளியின் இயற்கையான நிறம் என்ன ? அதிலிருந்து அவர் நிறம் மாறுபட்டிருக்கிறதா ? என்பதனை அறியும்போது வளி, அழல், ஐயங்களில் எது மாறுபாடு அடைந்துள்ளது எனக் கணிக்கலாம்.

### மொழி

நோயாளியின் இயற்கைக் குரலிலிருந்து ஒலி மாறுபாடு உண்டாயிருக்கிறதா? பேச்சுத் தடுமாற்றம் இருக்கிறதா? ஒலி உரத்துக் காணப்படுகிறதா? மெலிந்து காணப்படுகிறது? ஒலியே இல்லையா? இவற்றை அறியும்போது ஐம்பூதங்களில் ஆகாயக்கூறு பாதிக்கப்பட்டிருக்கிறது என அறியலாம். வெளியிலே, வாயு சலனமுற்றுத்தான் ஒலி உண்டாகிறது. எனவே வளியானது பாதிக்கப்பட்டிருக்கிறது என அறியலாம்.

### விழி

கண்ணின் பார்வை, நிறம், தாபிதம், இமைத்தலில் கோளாறுகள், நீர் பாய்தல் ஆகியவற்றைக்கொண்டு வளி, அழல், ஐயங்களின் மாறுபாடுகளைக் கணிக்கலாம்.

### தொடு உணர்வு

நோயாளியின் மேனியில் தொட்டால் உணர்வு உள்ளதா? கூச்சம் உள்ளதா? வலி உள்ளதா? எரிச்சல் உள்ளதா? நாம் தொடும்போது உடல் வறட்சியுடன் சூடாகவுள்ளதா? எரிச்சல் உண்டாகிறதா? உடம்பு குளிர்ந்து காணப்படுகிறதா? என்பனவற்றை அறியும்போது வளி, அழல், ஐயம் ஆகியவற்றின் தன்னிலை வளர்ச்சி, வேற்றுநிலை வளர்ச்சிகளை அறிய இயலும்.

### மலம்

கழிக்கின்ற மலத்தின் நிறம், அதனுடன் குருதி, சளி போன்றவை காணப்படுகிறதா? மலம் கொஞ்சம் கொஞ்சமாகக் கழிகிறதா ? நிறைய மலம் போகிறதா? கட்டியாகப் போகிறதா? நீர் நீராகப் போகிறதா? நாற்றம் இருக்கிறதா? காற்றுடன் சேர்ந்து வெளிப்படுகிறதா? நுரையுடன் சேர்ந்து வெளிப்படுகிறதா என்று வேறுபாடுகளைக் கண்டறிய முடியும்.

### சிறுநீர்

நோயாளியின் சிறுநீரின் நிறம், அளவு, நுரை, எஞ்சல் (அடியில் தங்குவது), சிறுநீர் கழிக்கும் தடவைகள், கழிக்கும் போது உண்டாகும் உணர்வுகள் ஆகியவற்றை அறியவேண்டும்.

### நாடி

மேற்கூறிய ஏழுவகைத் தேர்வுகளிலும் கண்ட உண்மைகளை ஒழுங்குபடுத்தி அதன்பின் நாடியோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். மொத்தத்தில் அனைத்துத் தேர்வுகளினால் கண்டறிந்த குறி குணங்களை ஒன்றுசேர்த்துப் பார்த்தால் சித்த மருத்துவம் என்ற நூலில் சொல்லப்பட்ட நோய்களில் ஏதாவது ஒன்றில் அடங்கும். அதற்குத் தகுந்த மருத்துவம் செய்ய வேண்டியுது வைத்தியரின் கடமை.

1. ஒதொரு நாடி மூன்றி லொவ்வொன்றும் நன்னான்காகும்
   வாதமுன் னடந்தால் வெட்டைவளரும் பின் பித்தவாயு
   ஏதமில் வலத்தில் சூலை இடந்தனி லிசைந்தால் குன்மம்
   ஈதொரு நாடி பார்த்து எடுத்துரை புவியுள்ளோர்க்கே.

வாதநாடியின் முன்பாய்ச்சல் வெட்டைச் சூட்டையும் அதனால் உண்டாகும் நோய்களையும், பின்பாய்ச்சல் பித்தத்தின் துணையை நாடியிருப்பதால் வாத பித்தமும், அதனால் உண்டாகும் நோய்களையும், வலப்பாய்ச்சல் வாத சூலையையும், இடப்பாய்ச்சல் வாதகுன்மத்தையும் குறிக்கும் என்பதாம்.

2. பித்தமுன் னடக்குமாயின் பிறந்திடும் மேகவாயு
மெத்தபின் கதிக்குமாகில் மேவிடும் சுவாசகாசம்
எத்திட வலத்தில் சூலை இடந்தனிலிசைந்தால் குன்மம்
இத்தகைய நாடிபார்த்து இயம்புவாய் பிணியாளர்க்கே...

பித்த நாடியின் முன்னியக்கம் பித்த வாய்வையும், அதனால் உண்டாகும் நோய்களையும் மேகவாய்வு முதலியவைகளையும், பின்னியக்கம் கபத்தின் துணையை நாடுவதாக இருப்பதால் பித்த கபத்தால் உண்டாகும் நோய்களையும், சுவாசகாசம் போன்றவை களையும், வல இயக்கம் பித்த குன்மத்தையும் குறிக்கும்.

3. ஐயமுன் னடக்கும் போது அறிந்திடு கபமேயாகும்
பையபின் கதித்துமூறில் பற்றிடுஞ் சிலேதமரோகம்
பொய்யல்ல வலத்திவேக்கம் புகலிடஞ்சரியிற் சாவாம்
கையதை யூன்றிப் பார்த்துக் கருத்தினிற்றெளிந்துகூறே...

கப நாடியின் முன்னியக்கம் கப பித்தத்தாலுண்டாகும் பிணி களையும், க்ஷயம் முதலியவைகளையும், பின்னியக்கம் கபத்தைக் குறிப்பிடுவதால் கப சம்பந்தமான பல பிணிகளையும் வல இயக்கமும் இட இயக்கமும் அசாத்திய நிலைகளையும் முக்கியமாக இட இயக்கம் மரணதசையுங்குறிக்கும் என்பர்.

## *இடகலை*

இடகலை என்ற வாத நாடியானது வலது பாத பெருவிரலின்று கிளம்பி, மூலாதாரத்தின் மார்க்கமாய் இருதய ஸ்தானத்திற்கு இடதுபுறமாயக் கண்டம் வரையிலோடிக் கத்திரிக்கோல் மாறலென மாறி சிரசிலுள்ள சந்திர மண்டலத்தை அடைந்து இடது நாசியின் வழியாகச் சென்று இடக்கரத்தில் பாயும் என்றும்.

## *பிங்கலை*

பிங்கலை என்ற பித்த நாடியானது இடதுபாத பெருவிரலின்று கிளம்பி மூலாதாரத்தின் மார்க்கமாய் இருதய ஸ்தானத்திற்கு வலப்புறமாகக் கண்டம் வரையிலோடிக் கத்தரிக்கோல் மாறலென மாறி சிரசிற்கேறி ஆங்குள்ள சந்திர மண்டலத்தை அடைந்து வலது நாசியின் வழியாகச் சென்று வலக்கரத்தில் பாயும் என்றும்.

### சுழுமுனை

சுழுமுனை என்ற கப நாடியானது இவை இரண்டிற்கும் இடையே மூலாதாரத்தின்று உச்சிவரை ஓடிச் சூரியமண்டலத்தை அடைந்து வலது, இடது நாசித்துவாரங்களுக்கு இடையே இயங்கி நிற்கும் என்றும், வாதத்திற்கு ஆதாரம் அபான வாயு என்றும், கபத்திற்கு ஆதாரம் சமான வாயு என்றும் அறியக் கிடக்கின்றது.

நாடிகள் என்றால் நரம்புகள் இவற்றில் 72,000 உண்டு. அதில் விசை நரம்பு என ஒன்று உண்டு. அதைத்தான் திரிநாடி எனக் கூறுவர். அந்த விசை நரம்பு ஒன்றில்தான் திரிநாடி இருக்கும்.

காலையில் நடக்கும் நடை - வாதம் (வளி)
பகலில் நடக்கும் நடை - பித்தம் (அழல்)
மாலையில் நடக்கும் நடை - திலேத்துமம் (ஐயம்)
வாதனடை கோழியின் நடைடைப்போன்று இயங்கும்
பித்தநடை ஆமையின் நடையைப்போன்று இயங்கும்
சிலேத்துமம் பாம்பின் நடையைப்போன்று இயங்கும்
வாதநாடி - நாபிதைானத்திலும்
பித்தநாடி - கண்டத்திலும்
சிலேத்துமநாடி - உச்சியிலும் குடியிருக்கும்.

நமது வலக்கரத்தின் மணிக்கட்டில் ஓர் அங்குலம் விட்டு மேலே தள்ளி விசை நரம்பை நமது மூன்று விரல்களாலும் அழுத்திப்பார்க்க வீணையின் விகுவாக நமது விரல்களைத் தூக்கிக் குறிப்பு காட்டும். அவ்வாறு காட்டும் குறிப்பினால் இன்னநாடி என அறிதல்வேண்டும். மேற்கூறிய இடத்தில் மூன்று விரல்களால் அழுத்திப்பார்க்க ஆட்காட்டி விரல் வாதம், நடுவிரல் பித்தம், மோதிரவிரல் சிலேத்துமத்தையும் குறிக்கும்.

### தசநாடி

சுழிமுனை இடகலை பிங்கலை காந்தாரி
தூயத்தி சிங்குவை யலம்புடை புருடன்தானும்
நெழுகுருவன் சங்கினியோ டீரைந்தாக
நிற்தசவ நாடிபத்தும் நிலைத்தநாமம்.

## தசவாயுவின் இருப்பிடமும் செயலும்

| | |
|---|---|
| 1. பிராணன் | 6. சமானன் |
| 2. அபானன் | 7. கூர்மன் |
| 3. வியானன் | 8. நாகன் |
| 4. உதானன் | 9. தேவதத்தன் |
| 5. கிருகரன் | 10. தனஞ்செயன் |

**1. பிராணன் :** உத்தி இடத்தில் தோன்றி இருவிழிகளில் நின்று நாசி வழியாக நாழிகை ஒன்றுக்கு 360 சுவாசத்தை உண்டாக்கும்.

**2. அபானன் :** உந்தில் தானத்தின் அடியிலிருந்து மலங்களைப் பிரவிருத்திசெய்யும்.

**3. வியானன் :** உடலில் தோலிலிருந்து அழகையும், வெப்பத்தையும் உண்டுபண்டும்.

**4. உதானன் :** உண்ட ஆகாரத்தை நரம்புகளில் பரவச் செய்யும்.

**5. கிருகரன் :** உடலை வளர்க்கும்.

**6. சமானன் :** மற்ற வாய்வுகளை மீறாதவாறு பாதுகாக்கும்.

**7. கூர்மன் :** இரு விழிகளிலிருந்து பார்க்கவும், இமைகளை மூடவும் செய்யும்.

**8. நாகன் :** கொட்டாவி, விக்கல் உண்டுபண்ணும்.

**9. தேவதத்தன் :** இரு கால்களை நடக்கவும், மடக்கவும் செய்விக்கும்.

**10. தனஞ்செயன் :** வார்த்தைகளை நாவினிடத்திலிருந்து வருவிக்கும். புருவம், உச்சி, நெஞ்சுக்கரங்கள், கால்களின் பெருவிரல், கால்களின் மணிக்கட்டு, முழங்கை, முழங்கால் ஆகிய இடங்களில் தசநாடி இயங்கும்.

### இரவில் நாடி அறிதல்

எண்ணெய் ஸ்நானம் செய்தபோதும், உடல் நனைந்துள்ள போதும், உணவு உட்கொண்ட உடனேயும், இன்ப உணர்ச்சியில் ஆழ்ந்துள்ளபோதும், நடந்து வந்த உடனேயும், லாகிரிவஸ்து உட்கொண்டபோதும், விடமருந்தியபோதும், பயமுற்றபோதும், விரதமிருந்தவர், விக்கல், வாந்தி, பேதி, வன்மையாக உள்ளவர் கட்கும், அடிபட்டவர், அதிர்ச்சி அடைந்தவர், மிக்க இரத்தப் போக்கு அடைந்தவர், இரத்தம் மிகவும் குறைந்து காணப்படுபவர்கள், சுவாசத்தை அடக்குபவர் முதலியோர்க்கும் நாடி எளிதில் காணவியலாது.

### நாடியின் இடங்கள்

அறிந்திடும் வாதம் அடங்கும் மலத்தினில்
பிறந்திடும் பித்தம் பேறாஞ் சலத்தினில்
மறந்திடும் ஐயம் வாசிக்கும் விந்துவில்
உறைந்திடும் மூன்றுக் குறவாந் தலமிதே.

### நாடியின் நிறம்

உறவாங் கறுப்புச் சிவப்பிலும் நல்வாதம்
குறைவான பச்சை பசுமைக் கொடும் பித்தம்
நிறைவான வெண்மையாய் நின்றது நல்லையம்
அறைவான வர்ணம் தாகுந்தலமிதே.

### ஈடனைகள் - 3 (முப்பற்றுகள்)

1. ***தாரேஷணை :*** இது பொண்ணாசையைக் குறிக்கும்
2. ***புத்திரேஷனை :*** இது புத்திர வாஞ்சையைக் குறிக்கும்.
3. ***அர்த்தேஷணை :*** இது பொருளாசையைக் குறிக்கும்.

### குணம் - 3

***1. சத்துவமாவது :*** அருள், ஐம்பொறி அடக்கல், ஞானம், தவம், பொறை, மேன்மை, மோனம் (மௌனம்) வாய்மை முதலிய நாற்குணங்களில் நாட்டங்கொண்டிருப்பது அடக்கம், அன்பு விவேகமுடையது.

***2. இராசதமாவது :*** ஊக்கம், ஞானம், வீரம், அறம், தவம், ஈகை, கல்வி, கேள்வி ஆகிய எண் குணங்களுடையது.

***3. தாமதமாவது :*** ஒழுக்கமின்மை, காமம், சினம், கொலை, சோம்பல், நீதிவழுவல், நெடுந்துயில், பேருண்டி, பொய், மறதி, வஞ்சகம் முதலிய தீக்குணங்களுடையது.

***வினை - 2***

***1. நல்வினை :***

தர்மம் முதலிய புண்ணியங்களைச் செய்தல்.

***2. தீவினை :***

கொலை, களவு முதலிய பாவங்களைச் செய்தல்.

***விகாரம் - 8***

1. காமம் - அதிக ஆசை
2. குரோதம் - பிணக்கு
3. லோபம் - ஈயாமை, பிடிவாதம்
4. மதம் - கர்வம், பிறரை மதியாமை
5. மோகம் - பிற மாதர் இச்சை
6. மாச்சர்யம் - மனதில் விரோதங்கொள்ளல்
7. இடும்பை - உதாசீனம் (இகழ்தல்)
8. அசூயை - பொறாமை (அகங்காரம்)

*வாதத்தில் வாதமானால்*

உடல் மெலிந்து வீங்கி விடும். மனமானது பதறும். உடம்பு துடிக்கும். நித்திரை வராது.

*வாதநோயானால்*

வயிறு மந்தம், பூட்டுகள் தோறும் வலி உண்டாகும். தாது நட்டமடையும். சிறுகச் சிறுக நீர் இறங்கும். மலம் தடைப்படும். மலம் கருகக் காணும். நா வறட்சி உண்டாகும்.

### வாதத்தில் பித்தமானால்

வாய் குளறும், புத்தி தடுமாற்றமடையும். கை-கால்கள் குளிர்ச்சி அடையும். வீக்கமுண்டாகும். வயிற்றில் புண் ஏற்பட்டுக் குடலைப் புரட்டும்.

### சிலேத்தும நோயானால்

சரீரமானது சீதனமடைந்து வியர்க்கும். நாவில் நச்சு (விஷம்) போன்ற நீர் சுரந்து துர்க்கந்தமாய் ஈளை விழும்.

### பித்தத்தில் பித்தநோயானால்

சரீரத்தில் கிறுகிறுப்பு உண்டாகும். வாயில் நீர் ஊறும். இணைப்பு உண்டாகும். உடம்பு வியர்வை உண்டாகி வாடும். பிறகு வீக்கமடையும்.

### நாடிகளை பரிசோதிக்கும் இடங்கள்

1-வது கை, 2-வது கண்டம், 3-வது கன்னிச்சுழி, 4-வது காலின் பெருவிரல், 5-வது கணுக்கால். ஆனால் கையைப் பரிசோதிப்பதுதான் உத்தமம்.

### நாடிகளை பரிசோதிக்கும் விவரம்

கையின் பெருவிரல் பக்கமாக ஓடும் நாடியை மணிக்கட்டுக்கு ஓர் அங்குலம் மேலாக மூன்று விரல்களால் அழுத்தியும், தளர்த்தியும், சமமாகவும், மாறிமாறி பரிசோதிக்க நாடி நடை அறியலாம். ஆண்களுக்கு வலது கையும், பெண்களுக்கு இடது கையும் பரிசோதிக்கவேண்டியது. இரண்டு கைகளையும் பரிசோதிப்பதும் உண்டு.

நோயாளியைப் படுக்கவைத்தாவது, உட்காரவைத்தாவது நாடியைப் பரிசோதிக்கலாம்.

## நாடி பார்க்கும் மாதவகை

சித்திரை, வைகாசிக்கு உதயத்திலும், ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகைக்கு மத்தியானத்திலும், மார்கழி, தை, மாசிக்கு அஸ்தமனத்திலும், பங்குனி, ஆவணி, புரட்டாசிக்கு இராத்திரியிலும் பார்க்க நாடி தெளிவாய்த் தோன்றும்.

## நாடி பார்க்கும் விவரம்

நாடியைப் பரிசோதிப்பதற்கு முதல் விரல் கீழ் வாதநாடி. நடுவில் கீழ் பித்தநாடி, கடைவிரல்கீழ் சிலேத்தும நாடி என்றறியவும்.

## ஆண்களுக்கு நாடி நடக்கும் விதம்

வாதநாடி - குயில்போலும், அன்னம்போலும், கோழி போலும், மயில்போலும் நடக்கும். பித்தநாடி - ஆமைபோலும், அட்டைபோலும் நடக்கும். சிலேத்துமநாடி - பாம்புபோலும், தவளைபோலும் நடக்கும்.

## பெண்களுக்கு நாடி நடக்கும் விதம்

| | |
|---|---|
| வாதநாடி | - சர்ப்பம்போல் நடக்கும் |
| பித்தநாடி | - தவளைபோல் நடக்கும் |
| சிலேத்துமநாடி | - அன்னம்போல் நடக்கும் |

## பஞ்சபூத நாடிகளிருக்கும் இடத்தின் விவரம்

| | |
|---|---|
| பெருவிரல் | - பூதநாடி |
| ஆள்காட்டி விரல் | - வாதநாடி |
| நடுவிரல் | - பித்தநாடி |
| பவித்திரவிரல் | - சிலேத்துமநாடி |
| சிறுவிரல் | - பூதநாடி |
| குருநாடி | - ஐந்தும் சேர்ந்து நிற்கும். |

## திரேகத்தின் வாதபித்த சிலேத்மம் இருக்கவேண்டிய நிதானம்

திரேகத்தில் சிலேத்மம் ஒரு பங்கும், பித்தம் இரண்டு பங்கும், வாதம் நாலுபங்கும் இருக்குமாகில் வியாதியில்லை என்றறியவும்.

## ஒரு நிமிஷத்திற்கு நாடி நடக்கும் பிரமாணம்

| | | |
|---|---|---|
| குழந்தை பிறந்தவுடன் | - | 140 |
| பாலியத்தில் | - | 120 - 130 |
| குழந்தையில் | - | 100 |
| யௌவனப் பருவத்தில் | - | 90 |
| சம்பூர்ண பருவ ஆண்களுக்கு | - | 70 - 75 |
| சம்பூர்ண பருவ பெண்களுக்கு | - | 75 - 80 |
| க்ஷண பருவத்தில் | - | 70 |
| விருத்தாப்பியத்தில் | - | 75 - 80 |
| உட்கார்ந்திருக்கும்போது | - | 40 |
| நிற்கும்போது | - | 70 |
| படுத்திருக்கும்போது | - | 67 |

இவ்விதமாய் நாடி நடக்கும்.

## நாடிபேதாபேதம்

நடந்து தேகம் அருண்டிருந்தாலும் சாப்பாடு சூடு பதார்த்தங்கள், சாராயண் முதலிய லாகிரி வஸ்துக்கள் புகையிலை வெயில், சுரம், நித்திரை, பங்கம், மனசஞ்சலம், புகை, பலயீனம், இரத்தம் வடிதல் முதலானதுகளினாலும் நாடி நடை தீவிரமாயும் படபட என்றும் ஓடும்.

பசி, விசனம், குளிர், குளிர், அதிக நித்திரை முதலானது களினால் நாடி நடை குறையும். விருத்தர், பாலர், காச நோயாளி, தரித்திரர், சிற்றின்பம் செய்தபேர்கள், தண்ணீரில் மூழ்கின பேர்கள் இவர்களின் நாடிகள் உண்மை தெரியாது.

நாடி பார்க்கும் ஸ்தானத்திற்குமேல் யாதொரு கட்டிருந்தாலும், பூமியிற் கரத்தை ஊன்றிக்கொண்டிருந்தாலும், காலைக் கட்டிக்கொண்டிருந்தாலும் நாடி நடைதோன்றாது.

## மனிதர் வயதின் விபரம்.

வயதில் நூறில் 30-க்குள் உடல் வளரும். அதற்குமேல் முகத்தில் ஒளி குன்றும். 40-க்குமேல் தேஜஸ் கெடும். 50-க்கு

மேல் உடல் தளரும், ரோமம் வெளுக்கும். 60-க்குமேல் கண்ணொளி மங்கும், நடக்கிற்றிகைப் புண்டாகும். 70-க்குமேல் அறிவு குறையும். 80-க்குமேல் சுவாசம் மேல்நோக்கி வெளியில் பாயும். 90-க்குமேல் ஐம்பொறியும் புலனும் ஒடுங்கி இந்திரிய மற்று நூறில் மரணம். ஆனாலிடையிலவமிருந்து தத்துபிணி முதலானவைகளால் மரணமுண்டு.

## சரீரக்கட்டளைவிபரம்

பிரிதிவி - மண், அப்பு - தண்ணீர், தேயு- அக்கினி, வாயு - காற்று, ஆகாயம் - வெளி என்று சொல்லி பஞ்சபூதங்கள் சரீரத்துக்கு ஆதாரமாயிருக்கின்றன.

வாதம் வாயுவின் தன்மையொத்தும், பித்தம் தேயுவின் தன்மையொத்தும், சிலேத்துமம் அப்புவின் தன்மையையொத்து மாயிருப்பதால் சுரோணிதத்துடன் சுக்கிலம் சேரும்போது வாத, பித்த, சிலேத்துமங்களில் எது அதிகரித்திருக்கிறதோ அது சிசுவிற்குப்பற்றி வாத சரீரம், பித்த சரீரம், சிலேத்தும சரீரம் என்று மூவகைத் தேகக் கட்டளை உண்டாயிருக்கின்றன.

## வாததேகக்குறிகள்

நாடி மெதுவாய் நடக்கும். தேகமெத்த அசதியுள்ளதாயும், புத்தி மந்தமாயுமிருக்கும். உற்ற காரியத்தை மெத்தனவாய் எண்ணும், சற்றும் சலியாமல் உரைப்பதெல்லாம் உழல்வாய் இருக்கும். வெற்றியும், புகழும் உண்டாகவேண்டிப் பொய் மெய்யாய்ப் பேசும் உடல் குளிர்ந்து பருத்திருக்கும்.

## பித்ததேகக்குறிகள்

நாடிகள் விரைவாய் நடக்கும். திடமும் தீர்க்கமும் கடினமான காரியங்களைச் சாதிக்கும் சக்தியுண்டாகும். இளமையில் நரைக்கும். கடைக்கண் சிவப்பாயிருக்கும். சொற்கள் அமிருதமாயிருக்கும். காமக்குரோதாதிகள் அதிகரித்திருக்கும். உடல் உஷ்ணமாயிருக்கும். மெய் - பொய் அறியும்படி பல நூல்களை ஆராயும்.

### *சிலேத்தும தேகக்குறிகள்*

நாடி அதிகம் ரிக்ஷியும் சூற்பெலனுள்ளதாயும் இருக்கும். உடல் வியர்க்கும். சன்மார்க்கத்தில் இச்சை உண்டாகும். தோகையரின்பம், பொய், களவும் விலகியிருக்கும். தலைமயிர் நீண்டு காட்டும். பகிடிகூறும் திருமாதணைந்து வாழ்வள்.

### *வாத - பித்த - சிலேத்தும நிலை*

| | |
|---|---|
| அனுபான மூலந்திவரை | வாதநிலை |
| உந்தியின்மேல் மார்புமட்டும் | பித்தநிலை |
| மார்பு தலைச்சிவரை | அய்யநிலை |

### *வாத - பித்த - சிலேத்துமத்தினியல்பு*

| | |
|---|---|
| வாதம் : வாய்வு, புளிப்பு, குளிரச்சி. | நிறம் : கருமை |
| *பித்தம் : வன்னி, கசப்பு, வெதுப்பு.* | நிறம் : பசுமை, பச்சை |
| *அய்யம் : அப்பு, தித்திப்பு, வியர்வை* | நிறம் : வெண்மை |

வாதம் எழுப்பிடில் = புளிப்பு நாவிலேறும். பித்தம் எழும்பிடில் = கசப்பு நாவிலேறும், சிலேத்துமம் எழும்பிடில் = இனிப்பு நாவிலேறும்.

தேகங் குளிர்ந்தால் வாதம், தேகஞ்சுட்டால் பித்தம், தேகம் வியர்த்தால் சிலேத்துமம்.

### *வாத - பித்த - சிலேத்தும காலம்*

***உதயத்தில் 10 கடிகைவரை வாதம். உச்சியில் 10 கடிகை வரை பித்தம். மாலையில் 10 கடிகைவரை சிலேத்துமம் நடக்கும்.***

***மனிதர்களுக்கு வயது 100-ல் 40 வயதுவரை வாதகாலம். 40-முதல் 80-வரை பித்தகாலம். 80-க்குமேல் 100-வரை சிலேத்தும காலம்.***

## நோயாளிகளின் தேகமுதலான குறிகள்

வாத நோயாளி உடல் குளிர்ந்து, முகம், விழி, பல், மலம் கருத்திருக்கும். விழியில் நீர் வடியும். நாக்குக் கருத்து வரண்டு முள்ளாயிருக்கும். சிறுநீர் பொருமிக்கருமையாய்க் கடுத்துச் சிறுத்திரங்கும்.

பித்த நோயாளி உடல் சூடாயும், முகம், விழி, நாக்கு, பல், மலம் மஞ்சளாயிருக்கும். நீர் மஞ்சளாயும் சிவப்பாயும் இரங்கும்.

சிலேத்தும் நோயாளி உடல் வியர்க்கும், முகம், விழி, பல், நாக்கு, மலம், நீர் வெளுப்பாயிருக்கும். கண்ணிற் பீளை கட்டும்.

தொந்த நோயாளியுடன் முகம், விழி, பல், நாக்கு, நீர், மலம் பலவிதம்.

## வாதத்தின் கூறு

வாதமீறினால் வாயுவினால் தேகமெல்லாங்குத்தும். கால், கை, சந்துபொருத்துக்கள் உளையும். கால் கை ஒருபக்கத்தில் முடங்கும். குனிந்தால் நிமிரவொட்டாது. திமிருண்டாகும். உடல் பொருமும், குடல் புரட்டும், உணவு சுருங்கும், வயிறு மந்திக்கும், பொருமும், மலசலங்கட்டும், அபானஞ் சுருங்கும், நாவு புளிக்கும், தாது நட்டமாகும், கழிச்சலுண்டாகும்.

## பித்தத்தின் கூறு

பித்த மீறினால் உடலில் காந்தலும், வரட்சியுமேறி நடுக்கம் உண்டாகும். மண்டைக்குத்து, நாவறட்சி, கசப்பு, அரோசியம், தாகம், வாந்தி, விக்கல், மூர்ச்சை, கிறுகிறுப்பு, காதடைப்பு, அயர்வு, சோபம், வயிற்றுக்காந்தல், நெஞ்செறிவு, அக்கினி மந்தம், குளிர்சுரம், விடாச்சுரம், அஸ்திசுரம், பாண்டு, காமாலை, சோகை, மயக்கம், பிரமேகம், பித்தவெட்டை உண்டாகும். விழி சுழன்று, குழிவிழுந்து இருண்டுவரும். நீர் மஞ்சளாம் சிவப்பாயும் இரங்கும்.

## சிலேத்மத்தின் கூறு

சிலேத்தும மீறினால் உடல் காயும், வத்தும், வெளுத்தும், குளிரந்தும் நடுங்கும், அன்னம் செல்லா. விக்கல், சத்தியிருமல்

மேல்மூச்சு, திகைப்பு, வியர்வை, காசம், ஈளையுண்டாகும். நெஞ்சும் விலாவும் நோகும். இரத்தங்கக்கும், நாவு வழுவழுத்தினிக்கும், வாய் நீரூறும், நீர் சிறுத்திரங்கும்.

## குரு நாடியிருக்குமிடம்

குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னே நிற்கும். அது திசை நாடி பத்திற்குந்திறமாய் நிற்கும். உடற்குயிராய் நின்ற குரு நாடி வாதபித்தத்திற்கு நடுவில் இருப்பதைப் பார்க்கில் மூவிரனும் தாண்டி, மூலமுதலுருவிப் பாய்ந்து விசை நாம்போடு சேர்ந்து சந்திரமண்டலம் போய்ச் சார்ந்து பின்பு பம்பாம்போல் கிறுகிறு என்று வாதபித்தம் ஐயமெற்நாடி முதலாடியோடி மண்டலங்கள் மூன்றும் சுத்தி கத்திர்க்கோல் மாறலெனக் கட்டிச் சேர்த்து வாதபித்த நடுவிலிருந்து வாதத்தில் கோழி, அன்னம், மயல்போலும் நடக்கும். பித்தத்தில் ஆமைபோலும், அட்டை போலும் நடக்கும். சிலேத்துமத்தில் பாம்பு போலும், தவளை போலும் இயல்பாய் நாடி நடக்கும்.

## குரு நாடியின் குணம்

குரு நாடி வாதத்தில் அட்டைபோல் புரண்டுவரில் வாய்வு மிகும். இருமல் தினவு சொரி மிகுதியுண்டாகும். சரீரம் வாடும். குருநாடி பித்தத்தில் ஆமைபோல் நடக்கிறபோது சுரங்காயும், வாய் நீர் சுழற்றும், வியர்க்கும். சிலேத்துமத்தில் குருநாடி சிங்கம்போல் சீறி நிற்கில் சன்னிதோன்றும். குருநாடி சிலேத்துமத்தை ஊடுருவி அமருமாகில் அசாத்திய மரணகுறிகள் உண்டாகும். குருநாடி குன்றிப்போகில் வயிறு கழியும், கடுப்பு எடுக்கும், கை-கால் வீங்கும். குருநாடி பக்கம்பாயிற் சிலேத்துமம் எதிலே மோதும். குருநாடி பின்வாங்கில் அசாத்தியங்கள் உண்டாகும். குருநாடி அய்யத்தில் விட்டிலைப்போல் துடிக்கில் மரணம்.

## நாடிகள் கீழுமேலு மிறியோடும் விதம்

சந்திரன் வாதநாடி, சூரியன் பித்தநாடி, குழிமுனை சிலேத்ம நாடி, வியாழத்திற் சிலேத்மநாடி, சனி-செவ்வாய்-ஞாயிறு இந்தக்

கிழமைகளில் பித்தநாடி. திங்கள்-புதன்-வெள்ளி இந்தக் கிழமைகளில் வாதநாடி மீறியோடும். ஞாயிறில் வாதமோடில் - சளி, இருமல், இரைப்புண்டாகும். செவ்வாயில் வாதமோடில் - சுரம் உண்டாகும். சனியில் வாதமோடில் சீதளமும், சன்னியும் உண்டாகும். வியாழத்தில் வாதமோடில் விலாமுதல் தேகம் எல்லாம் வலியுண்டாகும். திங்கள் பித்தமீறில் - ஜலதோஷம் உடனே காணும். புதனில் பித்தமோடில் - சீரேத்ததம் தலைக்குத்து உண்டாகும். வெள்ளியில் பித்தமோடில் - கண்ணோய், காது நோயாம். வியாழத்தில் பித்தமோடில் - தாபசுரமும் தலைவலியும் காணும்.

## நாடித்தொந்திப்பு

1. வாதத்தில் வாதமாகில், உடல்நொந்து நெகிழ்ச்சியாய்ச் சுருக்கம் வாங்கும். உடல் பதரும். அன்னம் செல்லாது.

2. வாதத்திற் பித்தமாகில், வாய் குழறிப் பேசும்கால் குளிரும், வீக்கம் உண்டாகும்.

3. வாதத்திற் சிலேத்துமமாகில் உடல் வீங்கும், வலிக்கும், தலையிடிக்கும், குணங்கள் வெவ்வேறாய்த் தோன்றும். மெய் வெளுக்கும், உணவு செல்லாது. நாளுக்குநாள் வீக்கம் அதிகப்படும்.

4. பித்தத்திற் பித்தமாகில், பிதற்றுங் கிறுகிறுக்கும், சத்திக்கும், இளைக்கும், மேனி அத்திபோல் உலர்ந்து வத்தி வெளுக்கும், பின்பு வீக்கமுண்டாகும்.

5. பித்தத்தில் வாதமாகில் பிடரி, கால், கையில் குத்தும். மெய் குறுகும், பதரும், அத்திபோலுலரும், சுரங்காயும், புத்தி மடியும், பொறுமை நீங்கிக் கோபம் உண்டாகும்.

6. பித்தத்திற் சிலேத்துமமாகில் வாய் குழரும், பிதற்றும், சத்திக்கும், வாய் நீரொழுகும், தலைசுற்றும், வயிறு நோகும், பித்தமெடுக்கும், பிடரி வலிக்கும்.

7. சிலேத்துமத்திற் வாதமாகில், நரம்பெல்லாம் வலித்து நிற்கும், பிடரி குன்றவலிக்கும், விழிமேலோடும், வாய் குழரும்.

8. சிலேத்மத்தில் பித்தமாகில், உண்பது கசப்புண்டாகும். நாவு கசக்கும், இனிக்கும், பேச்சு தடுமாறும், கபங்கட்டும், குரல் வேறுபடும், கண்ணில் பீளைசாடும்.

9. சிலேத்மத்தில் சிலேத்மமாகில், விழி வட்டங் கொள்ளும், உயிர் பிரியும்.

10. வாதத்தில் ஐயம்சேரில் ஜன்னிதோஷம் மெய்மயக்கம், கோபம், மூர்ச்சை, பாண்டு உண்டாகும்.

11. பித்தத்தில் வாதஞ்சேரில், பீனிசம், மண்டைக்குத்து வலி, பவுத்திர மரையாப்பு, நவமூலங்களுண்டாகும்.

12. பித்தம் வாதம் சேரில், பாண்டு, காமாலை, தீராம்பலம், மகோதரம், கவுசி, மகவை, வெப்புப்பாவை உண்டாகும்.

13. ஐயம் பித்தம் சேரில், வாயூரல், சுரம், பேதி வாந்தி உண்டாகும். வாதம் இரண்டு பங்கும் பித்தம் ஒரு பங்குமோடில் வாத பித்த தொந்த நோய், வாய்வுமிகுந்து உதிரம் விழும், வலிக்கும், மாதரையிச்சிக்கும், சிந்தைமிகும்.

14. பித்தம் இரண்டு பங்கும் வாதம் ஒரு பங்குமோடில் பித்த வாத தொந்த நோய், உஷ்ணமிகுந்து உடல், கண்ணெரியும், பசி தாகம் உண்டாகும், வாய் கசக்கும், காடியேத வனம் பற்றும்.

15. வாதம் இரண்டு பங்கும் சிலேத்மம் ஒரு பங்குமாகில் வாத சிலேத்ம தொந்த நோய், வயிறு பொருமி வலிக்கும், பசியாது.

16. பித்தம் இரண்டு பங்கும், சிலேத்மம் ஒரு பங்குமோடில் பித்தசிலேத்ம தொந்தநோய், தலை வரண்டு பிடரி நோகும். உடம்பு எல்லாம் தினவு உண்டாகும். வயிறெரியும், மந்தித்துப் பொருமும்.

17. சிலேத்மம் இரண்டு பங்கும் வாதம் ஒருபங்குமோடில் சிலேத்மவாத தொந்த நோய், தலை வரண்டு பிடரி நோகும், உடம்பெல்லாந் தினவு உண்டாகும். வயிறெரியும் மந்தித்துப் பொருமும்.

18. சிலேத்மம் இரண்டு பங்கும் வாதம் ஒரு பங்குமோடில் பித்தசிலேத்ம தொந்த நோய், ஜன்னி உண்டாகும். தலை நோகும், வாய் தித்திக்கும், உணவு செரியாது.

19. சிலேத்மம் இரண்டு பங்கும் பித்தம் ஒரு பங்குமோடில் சிலேத்ம பித்த தொந்த நோய், உடல் குளிரந்து கூசும், தகிக்கும்.

20. வாதம் இரண்டு மாத்திரையுமாகில் கொடுஞ்சுமை சிரமேற்கொண்டு தாளூற நடப்பதுபோல நாடி நடக்கும். வாதபித்த தொந்த நோய், உதிரம் நொந்து விம்மி வலிக்கும், தாகிக்கும், உணவு செல்லாது.

21. பித்தம் இரண்டு மாத்திரையும் சிலேத்மம் ஒரு மாத்திரையுமாகில் பிள்ளைத்தொட்டிலில் நடுவிலசைவதுபோல நாடி, நடக்கும் பித்தசிலேத்ம தொந்த நோயில் பசியிராது. அடிக்கடி உதிரம் விம்மும், பிதற்றும், நயனம் எரியும், மஞ்சள் போலிருக்கும்.

22. சிலேத்மம் இரண்டு மாத்திரையும், வாதம் ஒருமாத்திரையுமாகில், புணர்ச்சி நாடி நடக்கும் சிலேத்மவாத தொந்தநோய் கபமோடும் இனிப்பை விரும்பும் பசி, தாகம் அதிகரிக்கும்.

23. வாதம் இரண்டு மாத்திரையும் சிலேத்மம் ஒரு மாத்திரையுமாகில், முறிந்த அரணையால் துடிப்பதுபோல் நாடி துடிக்கும். வாதசிலேத்ம தொந்தநோய் உடல் வலிக்கும். கைகால் திமிராயிருக்கும், வயிறுபொருமும், பித்தம் இரண்டு மாத்திரையும், வாதம் ஒரு மாத்திரையுமாகில் வீணையடித்தாற் போல நாடியடிக்கும். பித்த வாத தொந்தநோய் உடல் வலிக்கும், எரியும் நெஞ்சும், நாவும் வரளும், நீர் சிறுத்திரங்கும்.

24. சிலேத்மம் இரண்டு மாத்திரையும், பித்தம் ஒரு மாத்திரையுமாகில் வண்டிச்சக்கரம்போல் நாடி சுழலும். சிலேத்ம பித்த தொந்தநோய் சன்னியுண்டாகும், உச்சி வலிக்கும், செவி கேளாது, நாவுயினிக்கும், வயிறு மந்திக்கும்.

## நாடியின் குறிப்பு

வாய்வுக்கும், மந்தத்திற்கும் மூன்று நாடியும் அமர்ந்து தளர் வாயோடும், பசித்திருக்கும்போது மூன்று நாடியும் தூங்கி யோடும், பாம்பு விஷத்திற்கு மூன்று நாடியும், உள்ளூறவாய் வாங்கியோடும். கிரந்திநோய்க்குக் கரையுடைந்த அருவியைப் போலெழும். புண்புரைக்கு வாதமும், பித்தமும், பீனிசத்துக்குப் பித்தமும் சிலேத்துமமும் சூலைக்கும் சிலேத்துமமும், பித்தமும் சுழன்று காணும். கருப்பவதிக்கு வாதமும், பித்தமும் கலக்கிக் காணும். பிராணித்தி சாரத்துக்கு வாதமும், பித்தமும் தளிர்ந்து காணும். நீர்மேகத்துக்கு நாடியெல்லாம் பலங்குறைந்து தீயின்மேற் சுருண்டு விழும் புழுப்போல் புரட்டிக்காணும். குருநாடி சீறி நிற்கும். மேகம் அதிகப்பட்டால் வாதமும், பித்தமும் பின்னித் துடிக்கும். சன்னிக்கு மூன்று நாடியும் படபடத்தோடும். விக்கலுக்குச் சிலேத்மமும், வாதமும் சுரத்துக்கு வாதமும், பித்தமும் கனக்காச்சலுக்குப் பித்தமும், வாதமும் கலங்கிக் காணும். விஷநீர் சோகை பாண்டுக்கு மூன்று நாடியுமேகனைப்போல் மீண்டும் தலையிடிக்கும். க்ஷயரோகத் திற்குப் பித்தம் கலங்கிக் காணும். இளநீர், நெய், பால், இறைச்சி கனிகளுக்கு வாதங்கதிக்குங் கோழி மாமிசத்திற்கும் கோபத்திற்கும் புணர்ச்சிக்கும் பித்தத்தில் சிலேத்மம் சேரும். புணர்ச்சிக்கு நாடி புழுபோல் நிமிர்ந்து, வலித்து நின்று வாங்கும். பித்த சன்னிக்கு வாதமும், சிலேத்மமும் அமர்ந்து பித்தம் வெடுவெடுத்து மீறி நிற்கும். மரணசன்னி உட்குத்து புறவீச்சு இசிவுக்கு வாதமும் சிலேத்மமும் அழுந்திக் காணும்.

## மரணக்குறிகள்

இரண்டு தினம் பிங்கலைப்பாயில் மூவாண்டிலும், மூன்று தினம் இடகலைப்பாயில் இரண்டு பருவத்திலும், பத்து தினம் உபயத்திற்பாயில் திங்களொன்றும், மூக்குவிட்டு வாய் வழி சுவாசம் பாயில் மூன்று தினத்திலும், ஐயரோகத்தாலிளைத்த உடல் வீங்கிடில் மதி ஆறிலும், சிலேத்ம வெள்ளம்போல் மடமட எனச்சுருக்கமாயோடில் மறுநாளிலும், பித்தம் சிதறியோடில் மூன்று தினத்திலும்,வாதம் சிதறியோடில் எட்டு தினத்திலும், வாதபித்தம் இரண்டும்கூடி நிலைதப்பிசிதறில் ஐந்து தினத்திலும், வாத-பித்த-சிலேத்மம் மூன்றும்கூடி நிலைதப்பிச்

சிதறியோடினால் மண்டலத்திலும், மூன்றும் ஒன்றாய்க்கூடி அரணைவால் நுடிகாணில் ஒரு தினத்திலும், வாத-பித்த-சிலேத்மம் ஒன்றாய்க்கூடி தேள் கொடுக்கைப்போலாடி ஓடம் போல் நடந்தால் திங்களொன்றிலும், நாடி போத்துப்போற் புறந்துடித்திடில் திங்ககளான்றிற் பிணி நீங்காவிட்டால் திங்கள் பத்திலும், சிலேத்ம நாடி குதிரைபோல் நிமிர்ந்து நின்றால் திங்கள் ஒன்றிலும், காலையில் சிலேத்தும நாடியும், உச்சியிற் பித்த நாடியும், மாலையில் வாதநாடியும் வகைத்தப்பியோடிடில் நாலைந்து தினத்திலும், சிலேத்மநாடி மயில்போலும் அட்டை போலும் பதறி நின்றிடில் ஏழு தினத்திலும், நோயாளி உமிழ்நீர் நம்பத்தில் விழுந்திடினும் மரணம்.

பாறைச்சீலையை நெய்யில் நனைத்து மணிக்கடையிற் சுத்தி முன்றே முக்கால் நாழிகை சென்றவிழ்த்துப் பார்த்ததில் வாத நாடி குதித்து வாங்கினாலப்பொழுதிலும், நல்லரவுபோல் நெளிந் தோடினால் இருபத்திரண்டு நாளிலும், உதைத்து வாங்கினால் ஒன்பது நாளிலும், அட்டைபோல் நடந்தால் மூன்று தினத்திலும் தந்திபோல் சுண்டினால் அன்று பொழுதிலும், பக்கம்சென்று எதிர்த்து வாங்கினால் முப்பது நாளிலும் மரணம்.

நாடி புழுப்போல் நெறிந்தாலும், சூடு கொண்டாலும், பஞ்சுபோல் மெதுவாயிருந்தாலும் அன்னம்போல் நடந்தாலும் பிணி நீங்கும்.

இடது உள்ளங்கால் குளிர்ந்து, வலது உள்ளங்கால் சுட்டுங் குழச்சு குளிர்ந்திடில் பத்து தினத்திலும், குழிச்சுகளிரண்டும் குளிர்ந்து உச்சி வியர்த்து மூக்கு விறைத்து, இளைப்பு விக்கல் தோன்றி உடம்பு எல்லாம் குளிர்ந்து விழியிருண்டால் மூன்று தினத்திலும், பிடறி, நெற்றி, கழுத்தினுட்புறங்குளிர்ந்து விழி நீல நிறமாகி நெஞ்சிற் கபங்கட்டிடில் மூன்று தினத்திலும், ஒருநாசியும். முழங்கைப் பள்ளமுங்குளிர்ந்திட உள்ளங்காற் சூடாய்த் தொண்டை கறகறத்தால் ஐந்து தினத்திலும், அடித்துடையும் இரண்டு உள்ளங்காலும் குளிர்ந்து இருசெவியும் விரைத்து நின்றால் இரண்டு தினத்திலும் மரணம்.

வலது உள்ளங்கால் சுட்டு இடது உள்ளங்கால் குளிர்ந்து உச்சி வியர்த்து உடம்பெல்லாம் கனலாயிருந்தாலும், புருவம், நெத்தி, இடது உள்ளங்கை, கட்டு உச்சி குளிர்ந்திருந்தாலும், வலது நாசியும், வலது உள்ளங்காலும் வெதும்பியிருந்து நாசியை தேய்க்கும்போது சிவந்தாலும் உடல் ஆதியந்தமும் சூடேறினாலும் பிணி நீங்கும்.

விழி, மூக்கு, காது, உச்சி, உந்தி, உள்ளங்கால், கைகள் வெளுத்து பாதங்கள் குளிர்ந்தால் ஐந்து நாழிகையிலும் வாதமும், பித்தமும் அடங்கி சிலேத்துமங்கதித்து உடல் வெளுத்து மார்பு குளிர்ந்திடிற்றொண்ணூறு கடிகையிலும், சிலேத்தும நாடி எழுந்து வீழ்ந்திடிலிரண்டு கடிகையிலும், பித்தமடங்கி வாதமும் சிலேத்தும மேலிட்டுக் கண்டத்திற் வடிந்தால் ஐந்து நாழிகையிலும், முகம் நீண்டு உடம்பெல்லாம் நரம்பு தோன்றி பாசிபோல் கண் பஞ்சடைந்து இருள் மூடினும், விசை நரம்பு குளிர்ந்து, தளர்ந்து, விறைத்து, வாங்கிப் பொழிகளும் மிகுதியாய் தளர்ந்து நெறுநெறனப் பற்கடித்து, நடுக்கம் உண்டாய் வாதபித்த சிலேத்துமம் விட்டிலைப்போல் துடித்திடினும் மரணம்.

வாத பித்த சிலேத்தும மூன்றும் வெட்டுப்பட்ட அரணை வால் போற்றுடிக்கும் உடல் வேறுபட்டு குளிர்ச்சி காணும், கையால் முகத்தைத் தடவும் மனிதரை ஆவலாய் நோக்கிப் பார்க்கும். ஏங்கிப் பெருமூச்சு செய்து இரண்டு விலாவும் இளைக்கும், தொண்டையில் கபம் கட்டியிரையும், கண்ணில் நீர் வடியும், எடுபிடி என்றெழுந்து விழும், உடல் மயங்கும், மூக்கு நீளும், வியர்வை காணும், விழியும் பல்லும் கறுக்கும். கபமோடி முடிச்சு விழும், கண் சுழன்று பல பேச்சாகும் ஜீவன் மயங்கும்.

***பித்த நோயானால் ;*** கண் சிவந்து சீதளமடையும். சிறுநீர் கருத்து விழும். இந்நீர்த் துளிகளில் கறைபிடிக்கும். இந்நீரானது சிவந்து இருக்கும். மயக்கம் உண்டாகும். நா உலர்ந்து வரும்.

***பித்தத்தில் சிலேத்தும் நோயானால் :*** வாய் குளறும், வாயில் நீரூறி வழியும், எழுந்து ஓடித்திரிவான். வயிற்று வலியும், வாந்தியும், கழுத்தில் வலியும் உண்டாகும்.

***பித்தத்தில் வாத நோயானால் :*** கழுத்து, கை, கால்கள், உடம்பு முதலியன வலி உண்டாகும். ஒவ்வொரு நரம்பும் விகுவாயிருக்கும். மனம் பதறும், உடம்பு வாடும், சுரம் உண்டாகும், புத்தி தடுமாற்றமடையும்.

***சிலேத்துமத்தில் சிலேத்தும நோயானால் :*** திமிரடியாகவும், ஆத்மாவானதும், புத்தியும் செயல்படாமல் விழிகள் வட்டமிட்டு மேல்மூச்சு வாங்கும். இதுவே அசாத்திய நோடாகும் எனலாம். சாகும் நிலை ஏற்படக் கூடிய குறையும், குணங்களும் இதுவே ஆகும்.

***சிலேத்துமத்தில் வாத நோயானால் :*** நரம்புகள் முருக்கேறி நிற்கும். முகத்தில் வலி உண்டாகி மேல்விழி கீழ்விழியாகி மிரள மிரள விழிக்கும். நாக்குளறவும் செய்யும்.

***சிலேத்துமத்தின் பித்தத்தில் :*** வாய் கசந்து காணும். நாக்கு பலவித சுவையைத்தரும். பேசும் சொற்களில் திடமிராது. கோபம் உண்டாகும். கண்களில் அழுக்குடன் நீர் வடியும். குரல் வேற்றுமை அடையும்.

## *நாடிகள் நடக்கும் விதம்*

இருதயம் விரியவும், சுருங்கவும், நாடி நரம்புகள் விரியவும் சுருங்கவும் செய்யும். இருதய நடைக்கு நாடி நடை ஒத்திருப்பதால் உடலில் இருக்கின்ற நோய்களை இருதயம் அறிந்து நாடிகல் வழியாய்த் தெரிவிக்கிறது.

## *நாடி பார்க்கும் இடங்கள்*

*1. கை, 2. கண்டம், 3. காலின் பெருவிரல், 4. கணுக்கால், 5. கண்ணிச்சுழி ஆகிய இவைகளில் கையைப் பார்த்துச் சொல்வதே உத்தமம் எனப்படும்.*

## *நாடி பார்க்கும் விதம்*

கையின் பெருவிரல் பக்கமாய் ஓடும் நாடியை மணிக்கட்டிற்கு ஒரு அங்குலம் மேலாக மூன்று விரல்களால்

அழுத்தியும், தளர்த்தியும், சமமாகவும், மாறிமாறிப் பார்த்தால் நாடியின் நடையை அறியலாம்.

ஆண்களுக்கு வலது கையையும், பெண்களுக்கு இடது கையையும் பார்க்கவேண்டும். சில சமயங்களில் இரண்டு கைகளையுமே பார்ப்பது உண்டு.

நோயாளியைப் படுக்கவைத்தாவது, உட்காரவைத்தாவது நாடியைப் பார்க்கவேண்டும்.

## நாடி பார்க்கும் மாத வகைகள்

சித்திரை, வைகாசி - உதயத்திலும் (காலையில்), ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை - மதியத்திலும் (நண்பகல்), மார்கழி, தை, மாசி - அஸ்தமனத்திலும் (மாலையில்) பங்குனி, ஆவணி, புரட்டாசி - இரவிலும் பார்க்க நாடி நன்கு தெளிவாய்த் தெரியும்.

## நாடி அறியும் விதம்

நாடியைப் பார்க்கும்போது முதல் விரலுக்குக் கீழ் வாத நாடியும், கடை விரலின் கீழ் கப நாடியும் நன்கு தெரியும்.

## நாடி அறியும் விதம்

நாடியைப் பார்க்கும்போது முதல் விரலுக்குக் கீழ் வாத நாடியும், கடைவிரலின் கீழ் கப நாடியும் நன்கு தெரியும்.

## நாடி நடக்கும் விதம் (ஆண்கள்)

*வாதநாடி :* குயில், அன்னம், கோழி, மயில் போன்றவற்றின் நடையைப்போல் நடக்கும்.

*பித்தநாடி :* ஆமை, அட்டை ஆகியவைப்போல் நடக்கும்.

*கபநாடி :* பாம்பு, தவளைபோன்று நடக்கும்.

## நாடி நடக்கும் விதம் (பெண்கள்)

*வாதநாடி :* சர்ப்பம்போல் நடக்கும்.

*பித்தநாடி :* தவளைபோல் நடக்கும்

*கபநாடி :* அன்னம்போல் நடக்கும்.

## பஞ்சபூத நாடிகள் இருக்கும் இடத்தின் விபரம்

| | | |
|---|---|---|
| பெருவிரல் | : | பூதநாடி |
| ஆள்காட்டி | : | வாதநாடி |
| நடுவிரல் | : | பித்தநாடி |
| பவுத்திர விரல் | : | கபநாடி |
| சுண்டுவிரல் | : | பூதநாடி |
| குருநாடி | : | ஐந்துள்ளும் சேர்ந்து நிற்கும். |

உடலில் வாத, பித்த, கபம் இருக்கவேண்டிய அளவுகள் : உடலில் கபம் 1 பங்கும், பித்தம் 2 பங்கும், வாதம் 4 பங்கும் இருக்குமாயின் நோய் இல்லை என்று அறியலாம்.

## ஒரு நிமிடத்திற்கு நாடி நடக்கும் அளவு

| பருவம் | | துடிப்பு |
|---|---|---|
| 1) குழந்தை பிறந்தவுடன் | : | 140 |
| 2) பால்யத்தில் | : | 120 முதல் 130 வரை |
| 3) குழந்தையில் | : | 100 முதல் 130 வரை |
| 4) யௌவனப் பருவம் | : | 90 முதல் 130 வரை |
| 5) சம்பூர்ண பருவம் | : | 70 முதல் 75 வரை |
| 6) சீன பருவத்தில் | : | 75 முதல் 80 வரை |
| 7) சம்பூர்ண பருவஸ்திரிகள் | : | 75 முதல் 80 வரை |
| 8) விருத்தாப்ய பருவம் | : | 75 முதல் 80 வரை |
| 9) உட்கார்ந்திருக்கும்போது | : | 40 |
| 10) நிற்கும்போது | : | 70 |
| 11) படுக்கும்போது | : | 67 |

## நாடியின் பேதாபேதங்கள்

1. நடந்து சரீரம் அயர்ந்திருந்தாலும், சாப்பாடு சூடான உணவுகள், சாராயம் முதலிய போதைப் பொருட்கள், புகையிலை, வெயில், சுரம், மனச்சஞ்சலம், அதிக பலவீனம், இரத்தம் வடிதல் முதலியவைகளினாலும் நாடி நடை தீவிரமாயும் படபடவென்றும் ஓடும்.

2. பசி, மனச்சஞ்சலம், அதிக குளிர், அதிக நித்திரை முதலானதுகளினால் நாடி நடை குறையும்.

3. வயோதிகர், பாலர், கப நோயாளிகள், சிற்றின்பம் செய்த பேர்கள், தண்ணீரில் மூழ்கிய பேர்கள் இவர்களின் நாடி நடை உண்மை தெரியாது.

4. நாடி பார்க்கும் இடத்திற்கு மேல் யாதொரு கட்டுகள் இருந்தாலும், பூமியில் கைகளை ஊன்றிக்கொண்டிருந்தாலும், கால்களைக் கட்டிக் கொண்டிருந்தாலும் நாடி நடை தெரியாது.

## மனிதர்களின் வயதின் விவரம்

30 வயதுவரை உடல் வளரும். அதற்குமேல் முகத்தில் ஒளி குன்றும். 40 வயதிற்குமேல் அழகுகெடும். 50 வயதிற்குமேல் உடல் தளரும்; முடி வெளுக்கும். 60 வயதிற்குமேல் கண்ணொளி மங்கும். நடக்கும்போது திகைப்பு உண்டாகும். 70 வயதிற்குமேல் அறிவு குறையும். 80 வயதிற்குமேல் சுவாசம் மேல்நோக்கி வெளியில் செல்லும். 90 வயதிற்குமேல் ஐம்புலன்களும், பொறிகளும் ஒடுங்கி நூறு வயதில் மரணம் அடைவர்.

## சரீர கட்டளை விவரம்

நமது சரீரம் மண், நீர், நெருப்பு, காற்று, வெளி என்று சொல்லக்கூடிய பஞ்சபூதங்களும் சரீரத்திற்கு ஆதாரமாய் இருக்கின்றன.

*வாதம் :* வாயுவின் (காற்று) தன்மையை ஒத்திருக்கும்.

*பித்தம் :* தேயுவின் (நெருப்பு) தன்மையை ஒத்திருக்கும்.

*கபம் :* அப்புவின் (நீர்) தன்மையை ஒத்திருக்கும்.

சிலேத்துமத்துடன் சுக்கிலம் சேரும்போது வாத, பித்த, கபங்களில் எது அதிகரிக்கிறதோ, அது குழந்தைகளைப் பற்றி வாத சரீரம், பித்த சரீரம், கப சரீரம் என்ற மூன்றுவகை கட்டளைகள் இருக்கின்றன.

## வாத சரீரத்தின் குறிகள்

நாடி மெதுவாக நடக்கும். சரீரம் அசதியுள்ளதாயும், புத்தி மந்தமாயும் இருக்கும். உற்ற காரியங்களையும் மெத்தனமாகவே செய்வர். உடல் குளிர்ந்து பருத்திருக்கும்.

## பித்த சரீரத்தின் குறிகள்

நாடிகள் விரைவாய் நடக்கும். திடமும், தீர்க்கமும், கடினமான காரியங்களைச் சந்திக்கும் சக்தியும் உண்டாகும். இளமையில் நரைக்கும். கடைக்கண் சிவப்பாய் இருக்கும். பேசும் சொற்கள் அமிர்தமாய் இருக்கும். காம குரோதாதிகள் அதிகரிக்கும். உடல் உஷ்ணமாய் இருக்கும். மெய்-பொய் அறியும்படி பல நூல்களையும் ஆராயும் திறன் உடையதாய் இருக்கும்.

## கபத்தின் குறிகள்

நாடிகள் அதிகம் தாழ்ந்தாலும், துர்பலம் உள்ளதாயும் இருக்கும். உடல் வியர்க்கும். சன்மார்க்கத்தில் இச்சை உண்டாகும். தோகையரின் இன்பமும், பொய் கனவுகளும் விலகியிருக்கும். தலைமுடி நீண்டு வளர்ந்து காட்டும்.

## வாத, பித்த, கப நிலைகள்

| | | |
|---|---|---|
| *வாதம் :* | வாயு, புளிப்பு, குளிர்ச்சி. | *நிறம் :* கருமை. |
| *பித்தம் :* | கசப்பு, வெதுப்பு. | *நிறம் :* பச்சை |
| *கபம் :* | இனிப்பு, வியர்வை | *நிறம் :* வெண்மை |

வாதம் எழும்பிடில் புளிப்பு நாவில் ஏறும்.
பித்தம் எழும்பிடில் கசப்பு நாவில் ஏறும்.
கபம் எழும்பிடில் இனிப்பு நாவில் ஏறும்.

சரீரம் குளிர்ந்தால் வாதம்.
சரீரம் சுட்டால் பித்தம்.
சரீரம் வியர்த்தால் கபகாலம்

## வாத, பித்த, கப காலங்கள்

1 முதல் 40 வயதுவரை வாதகாலம்
40 முதல் 80 வயதுவரை பித்தகாலம்
80 முதல் 100 வயதுவரை கப காலம்

## நோயாளியின் தேக முதலான குணங்கள்

*வாததேகம் :* உடல் குளிர்ந்து, முகம், பல், விழி, மலம் கருத்திருக்கும். கண்களில் நீர் வடியும். நாக்கு கருத்து வறண்டு முள்முள்ளாய் இருக்கும். சிறுநீர் பொருமி, கருத்து, சிறுத்து இறங்கும்.

*பித்ததேகம் :* உடல் சூடாகவும், முகம், விழி, நாக்கு பல், மலம் மஞ்சளாய் இருக்கும். நீர் மஞ்சளாயும், சிவப்பாயும் இறங்கும்.

*கபதேகம் :* உடல் வியர்க்கும், முகம், விழி, நாக்கு, பல் மலம் வெளுப்பாய் இருக்கும். கண்களில் பீளை கட்டும்.

*தொத்ததேகம் :* நோயாளியின் உடல், முகம், விழி, பல், நாக்கு, மலம் பல நிறமுடையதாய் இருக்கும்.

## வாதத்தின் கூறு

வாதம் மீறினால் உடல் முழுவதும் குத்தும். கால், கை, சந்து, பொருத்துக்கள் உளையும். கால், கை ஒரு பக்கத்தில் முடங்கும், குனிந்தால் நிமிர ஒட்டாது, திமிர் உண்டாகும், குடல்

புரட்டும், உணவு செல்லாது, வயிறு மந்திக்கும், பொருமும், மலம், முத்திரம் தடைபடும், அபானன் மருங்கும், நாவு புளிக்கும், தாது நட்டப்படும், கழிச்சல் உண்டாகும்.

## பித்தத்தின் கூறு

பித்தம் மீறினால் உடலில் காந்தலும், வறட்சியும் ஏற்பட்டு நடுக்கம் உண்டாகும். மண்டைக்குத்து, நாவறட்சி, கசப்பு, பசியின்மை, தாகம், வாந்தி, விக்கல், மூர்ச்சை, கிறுகிறுப்பு, காதடைப்பு, அயர்வு, கோபம், வயிறு காந்தல், நெஞ்செரிவு, அக்கினிமந்தம், குளிர்சுரம், விடாசுரம், நடுக்கல் சுரம், அஸ்தி சுரம், பாண்டு, காமாலை, சோகை, மயக்கம், பிரமேகம், பித்த வெட்டை முதலியன உணடாவதுடன், விழிகள் சுழன்று குழிவிழுந்து இருண்டு வரும். நீர் மஞ்சளாகவும், சிவப்பாயும் இறங்கும்.

## கபத்தின் கூறு

சிலேத்துமம் (கபம்) மீறினால் உடல் காயும், சரீரம் வற்றி, வெளுத்து, குளிர்ந்து நடுங்கும், உணவு செல்லாது. விக்கல், இருமல், மேல்மூச்சு, திகைப்பு, வியர்வை, சயம், ஈளை இளைப்பு முதலியன உண்டாகி நெஞ்சும் விலாவும் வலிக்கும். இரத்தம் கக்கும். நாக்கும் வழுவழுத்து இனிக்கும். வாயில் நீர் ஊறும். சிறுநீர் சிறுத்திறங்கும்.

## குருநாடி இருக்கும் இடம்

குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னே நிற்கும். அது திசைநாடி பத்திற்கும் திறமாய் நிற்கும். உடற்குயிராய் நின்ற குருநாடி வாத பித்தத்திற்கு நடுவில் இருப்பதைப் பார்க்கில் அது மூவிரலுந்தாண்டி மூல முதலூரவிப் பாய்ந்து விசை நரம்பு ஊடே சேர்ந்து சந்திர மண்டலம் போய்ச்சார்ந்து, பின்பு பம்பரம்போல் கிறுகிறு என்ற வாத, பித்த, ஐயம் என்ற நாடி முதலாடியோடி மண்டலங்கள் மூன்றும் சுத்திக் கத்திரிக்கோல் மாறலெனக் கட்டிச் சேர்ந்து வாத, பித்த நடுவிலிருந்து வாதத்தில் கோழி, அன்னம்,

மயில்போலும் நடக்கும். பித்தத்தில் ஆமைபோலும், அட்டை போலும் நடக்கும். கபத்தில் பாம்புபோலும், தவளைபோலும் இயல்பாய் நாடி நடக்கும்.

## குரு நாடியின் குணம்

1. குருநாடி வாதத்தில் அட்டைபோல் புரண்டுவரின் வாய்வு அதிகமாகும். இருமல், தினவு, சொறி மிகுதியாக உண்டாகும். உடல் வாடும்.

2. குருநாடி பித்தத்தில் ஆமைபோல் நடந்தால் சுரம் காயும், வாய் நீர் ஊறும், வியர்க்கும்.

3. குருநாடி கபத்தில் சிங்கம்போல் சீறி நின்றால் சன்னி தோன்றும், குறிகள் உண்டாகும்.

4. குருநாடி கபத்தை ஊடுருவி அமருமாகில் அசாத்திய மரணக் குறிகள் உண்டாகும்.

5. குருநாடி குன்றிப்போனால் வயிறு கழியும், கடுப்பெடுக்கும். கை - கால் வீங்கும்.

6. குருநாடி பக்கம் பாயில் கபம் எதிரே மோதும்.

7. குருநாடி பின் வாங்கில் அசாத்தியங்கள் உண்டாகும்.

8. குருநாடி ஐயத்தில் விட்டிலைப்போல் கிடக்கில் மரணம்.

## நாடிகள் கீழும் மேலும் மீறி ஓடும்விதம்

சந்திரன் - வாதநாடி; சூரியன் - பித்தநாடி; சுழுமுனை - கப நாடி; வியாழன் - சிலேத்தும நாடியும்; சனி, செவ்வாய், ஞாயிறு ஆகிய கிழமைகளில் பித்த நாடியும், திங்கள், புதன், வெள்ளி இக்கிழமைகளில் வாத நாடியும் மீறி ஓடும்.

சனிக்கிழமை வாதம் ஓடில் சீதளமும், சன்னியும் உண்டாகும். ஞாயிறில் வாதம் ஓடில் சளி, இருமல் இரைப்பு

உண்டாகும். செவ்வாயில் வாதம் ஓடில் சுரம் உண்டாகும். வியாழனில் வாதம் ஓடில் விலா முதல் உடம்பெல்லாம் வலி உண்டாகும். திங்களில் பித்தம் ஓடினால் ஜலதோஷம் உடனே காணும். புதனில் பித்தம் ஓடில் நீர் ஏற்றம், தலைவலி உண்டாகும். வெள்ளியில் பித்தம் ஓடில் கண், காது நோய்கள் உண்டாகும். வியாழனில் பித்தம் ஓடில் கபசுரமும், தலைவலியும் காணும்.

## *நாடியின் தொந்திப்பு*

1. வாதத்தில் வாதமாகில் உடல் நொந்து நெகிழ்ச்சியாய் சுருங்கும், உடல் பதறும், உணவு செல்லாது.

2. வாதத்தில் பித்தமாகில் வாய் குழறிப் பேசும், கால் குளிரும், வீக்கம் உண்டாகும்.

3. வாதத்தில் கபமாகில் உடல் வீங்கும், தலை வலிக்கும், குணங்கள் வெவ்வேறாய்த் தோன்றும், உடல் வெளுக்கும், உணவு செல்லாது, நாளுக்கு நாள் வீக்கம் அதிகரிக்கும்.

4. பித்தத்தில் பித்தமாகில் பிதற்றும், கிறுகிறுக்கும், வாந்தி செய்விக்கும். உடல் இளைத்து உலர்ந்து, வற்றி, வெளுக்கும். பிறகு வீக்கம் உண்டாக்கும்.

5. பித்தத்தில் வாதமாகில் பிடரி, கை, கால்கள் குத்தும், உடல் குறுகிப் பதறும், சுரம் காயும், புத்தி தடுமாற்றம் ஏற்பட்டு பொறுமை நீங்கிக் கோபம் உண்டாகும்.

6. பித்தத்தில் கபமாகில் வாய் குழறும், பிதற்றும், வாந்தி ஏற்பட்டு வாயில் நீர் ஒழுகும், தலை சுற்றும், வயிறு நோகும், பித்தமாக வாந்தி வரும், பிடரி வலிக்கும்.

7. கபத்தில் வாதமாகில் நரம்பெல்லாம் வலித்து நிற்கும், பிடரி குன்றி வலிக்கும்.

8. கபத்தில் பித்தமாகில் உண்பது கசப்புண்டாகும், நாவு கசக்கும், இனிக்கும், பேச்சு தடுமாறும், கபம் கட்டும், குரல் வேறுபடும்.

9. கபத்தில் கபமாகில் கண்கள் வட்டங்கொள்ளும், உயிர் பிரியும்.

10. வாதத்தில் கபம் சேரில் ஜன்னிதோஷம், மயக்கம், கோபம், மூர்ச்சை, சோகை, பாண்டு உண்டாகும்.

11. பித்தத்தில் வாதம் சேரில் பீனிசம், மண்டைக்குத்து, வலி, பவுத்திரம், அரையாப்பு, நவமூலங்கள் ஆகிய இவைகள் உண்டாகும்.

12. பித்தத்தில் கபம் சேரில் பாண்டு, காமாலை, தீராப்பல், மகோதரம், கௌசி (வயிற்றுக்கட்டி), வெப்புக்கட்டிகள் உண்டாகும்.

13. கபத்தில் பித்தம்சேரில் வாயூறல், சுரம், பேதி, வாந்தி உண்டாகும். வாதம் இரண்டு பங்கும், பித்தம் ஒரு பங்கும் ஓடில் வாத, பித்த தொந்த நோய்கள் வாய்ப்பு மிகுந்து உதிரம் அதிகப்படும். வலிக்கும், மாதளை இச்சிக்கும் சிந்தை மிகும்.

14. பித்தம் இரண்டு பங்கும், வாதம் ஒரு பங்கும் ஓடில், பித்த வாத தொந்தநோய் என அறியவும். உஷ்ணம் அதிகம் மிகுந்த உடலுடன் கண் எரியும். பசி, தாகம் உண்டாகும், வாய் கசக்கும்.

15. வாதம் இரண்டு பங்கும், கபம் ஒரு பங்குமாகில் வாத கப தொந்த நோய்கள் ஏற்பட்டு வயிறு பொருமி வலிக்கும், உணவு செல்லாது.

16. பித்தம் இரண்டு பங்கும், கபம் ஒரு பங்கும் ஓடில், பித்த கப தொந்த நோய்கள் ஏற்பட்டு, தலை வறண்டு, பிடரி நோகும். உடல் முழுவதும் தினவு உண்டாகும். வயிறு எரியும், மந்தம் ஏற்பட்டு வயிறு பொருமும்.

17. கபம் இரண்டு பங்கும், வாதம் ஒரு பங்கும் ஓடினால் கபவாத தொந்தநோய் ஏற்பட்டு சன்னி உண்டாகும். தலைவலி ஏற்பட்டு, வாய் தித்திக்கும். உணவு செரியாது.

18. கபம் இரண்டு பங்கும், பித்தம் ஒரு பங்கும் ஓடினால் கபபித்த தொந்த நோய்கள் ஏற்பட்டு உடல் குளிர்ந்து கூசும்.

19. வாதம் இரண்டு மாத்திரையும், பித்தம் ஒரு மாத்திரையும் ஆனால் கொடும் சுமை தலையில் கொண்டு தாழ்வுற நடப்பதுபோல் நாடி நடக்கும். வாத பித்த தொந்த நோய் ஏற்பட்டு சூடேறி வலி ஏற்பட்டு உணவு செல்லாது.

20. பித்தம் இரண்டு மாத்திரையும், கபம் ஒரு மாத்திரையு மாகில் பிள்ளை தொட்டிலின் நடுவில் அசைவதுபோல் நாடி நடக்கும். பித்த சிலேத்தும தொந்த நோய் ஏற்பட்டும், பசி இராது. அடிக்கடி இரத்த அழுத்தம் ஏற்பட்டு பிதற்றும். கண்கள் மஞ்சள் போல் இருக்கும்.

21. கபம் இரண்டு மாத்திரையும், வாதம் ஒரு மாத்திரையு மாகில் புணர்ச்சியின்போது நாடி நடப்பதுபோல் நடக்கும். கப வாத தொந்தநோய் ஏற்பட்டு கபம் இனிப்பில் விருப்பம் ஏற்பட்டு பசி அதிகரிக்கும்.

22. வாதம் இரண்டு மாத்திரையும், கபம் ஒரு மாத்திரையு மாகில் வெட்டுண்ட அரணைவால் துடிப்பது போன்று நாடி துடித்து வாத கப தொந்தநோய் உண்டாகும். உடல் வலிக்கும், கை, கால் திமிராய் இருக்கும்.

23. பித்தம் இரண்டு மாத்திரையும், வாதம் ஒரு மாத்திரையு மாகில் வீணை அடித்தால்போல் நாடி அடிக்கும். பித்த வாத தொந்த நோய் ஏற்படும். உடல் வலிக்கும், கண்கள் எரியும், நெஞ்சும் வரளும், நீர் சிறுத்து இறங்கும்.

24. சிலேத்துமம் இரண்டு மாத்திரையும் பித்தம் ஒரு மாத்திரையுமாகில் வண்டிச்சக்கரம் போல் நாடி சுழலும். கப பித்த தொந்த நோய்கள் ஏற்பட்டு சன்னி உண்டாகும். உச்சி வலிக்கும், செவி கேளாது, நாவு இனிக்கும், வயிறு மந்திக்கும்.

## நாடியின் குறிப்பு

1. வாயுவுக்கும் மந்தத்திற்கும் மூன்று நாடிகளும் அமர்ந்து தளர்வாய் ஓடும்.

2. பசித்திருக்கும்போது மூன்று நாடியும் தூங்கி ஓடும்.

3. பாம்பு விஷத்திற்கு மூன்று நாடியும் அடங்கியிருக்கும்.

4. வயிற்று வலிக்கு மூன்று நாடியும் உள்ளுணர்வாய் வாங்கி ஓடும்.

5. கிராந்தி நோய்க்கு கரை உடைந்த அருவியைப்போல் ஓடும்.

6. புண்புரைக்கு வாதமும், பித்தமும், பீனிசத்திற்குப் பித்தமும், கபமும்; சூலைக்குக் கபமும் சுழன்று காணும்.

7. கர்ப்பவதிக்கு வாதமும், பித்தமும் தொந்தித்து காணும்.

8. கிராணி அதிசாரத்திற்கு வாதமும், பித்தமும் தளர்ந்து காணும்.

9. நீர் மேகத்திற்கு நாடி எல்லாம் பலம் குறைந்து, நெருப்பில் விழுந்த புழுப்போல் சுருண்டு காணும்.

10. மேகம் அதிகப்பட்டால் வாதமும், பித்தமும் பின்னித் துடிக்கும்.

11. சன்னிக்கு மூன்று நாடியும் படபடத்து ஓடும்.

12. விக்கலுக்கு, கபமும் வாதமும் கலங்கிக் காணும்.

13. சுரத்திற்கு வாதமும், பித்தமும் கலங்கிக் காணும்.

14. கனக்காய்ச்சலுக்குப் பித்தமும், வாதமும் கலங்கிக் காணும்.

15. விஷநீர், பாண்டு, சோகை இம்மூன்றிற்கும் கணைபோல் மீட்டும் தலைவலிக்கும்.

16. காச நோய்க்குப் பித்தம் மட்டும் கலங்கிக் காணும்.

17. இளநீர், நெய், பால், இறைச்சி, பழங்கள் முதலியவற்றிற்கு வாதம் கதிக்கும்.

18. கோழி இறைச்சி, கோபம், புணர்ச்சி இவைகளிக்கு வாதத்தைத் தூண்டும்.

19. புணர்ச்சி நாடி புழுப்போல் நிமிர்ந்து வலித்து நின்று வாங்கும்.

20. பித்த சன்னிக்கு வாதமும் கபமும் அமர்ந்து பித்தம் விடுவெடுத்து மீறி நிற்கும்.

21. மரண சன்னிக்கு உட்குத்து, புறவீச்சு ஏற்படும்.

22. சிசுவிற்கு வாதமும் கபமும் அழுந்திக் காணும்.

## மரணத்தின் குறிகள்

1. இரண்டு தினம் பிங்கலையில் நாடி பாய்ந்தால் மூன்று ஆண்டுகளில் மரணம்.

2. மூன்று தினம் இடகலையில் நாடி பாய்ந்தால் இரண்டு மாதங்களில் மரணம்.

3. பத்து தினம் உபயத்தில் நாடி நடந்தால் ஒரு மாதத்தில் மரணம்.

4. மூக்கு வழியாக சுவாசிக்காமல் வாய் வழியாகச் சுவாசித்தால் மூன்று நாட்களில் மரணம்.

5. கப நோயினால் இளைத்த உடல் வீங்கிடில் ஒரு மாதத்தில் மரணம்.

6. பித்த நோய்களினால் உடல் இளைத்து வீங்கிடில் ஆறு மாதத்தில் மரணம்.

7. கபம் வெள்ளம்போல் மடமடவென சுருக்கமாய் ஓடினால் மறுநாள் மரணம்.

8. பித்தம் சிதறி ஓடினால் மூன்று நாட்களில் மரணம்.

9. வாதம் சிதறி ஓடினால் எட்டு நாட்களில் மரணம்.

10. வாதம் பித்தம் இரண்டும் நிலை தப்பி தவறினால் ஐந்து நாட்களில் மரணம்.

11. வாதம் பித்தம் கபம் மூன்றும் குடி தேள் கொடுக்கைப் போல் ஆடி ஓடம்போல் நடந்தால் ஒரு மாதத்தில் மரணம்.

12. வாதம் பித்தம் கபம் மூன்றும் கூடி நிலைதப்பித் தவறினால் நாற்பத்தெட்டு நாட்களில் மரணம்.

13. நாடிகள் போத்துபோல் புறந்துடித்து மாதம் ஒன்றில் நோய் நீங்காவிடில் பத்து மாதத்தில் மரணம்.

14. கப நாடி நிமிர்ந்து நின்றால் (குதிரைபோல்) மாதம் ஒன்றில் மரணம்.

15. காலையில் கப நாடியும், உச்சியில் பித்த நாடியும், மாலையில் வாத நாடியும் வகை தப்பி ஓடினால் நாலைந்து நாட்களில் மரணம்.

17. துணிச்சீலையை நெய்யில் நனைத்து மணிக்கட்டில் சுற்றி மூன்றேமுக்கால் நாழிகை சென்று அவிழ்த்துப் பிரிக்கையில் வாத நாடி குதித்து வாங்கினால் அதே நேரத்தில் நல்லரவு (அரவு) போல் நெளிந்து ஓடினால் 22 நாட்களில் மரணம்.

18. உதைத்துத் துடித்தால் ஒன்பது நாளில் மரணம்.

19. அட்டைபோல் நடந்தால் மூன்று நாட்களில் மரணம்.

20. தந்திபோல் சுண்டினால் அதே நேரத்திலும் பக்கம் ஒன்று நடந்தால் முப்பது நாட்களில் மரணம்.

21. இளைப்பு விக்கல் தோன்றி உடம்பெல்லாம் குளிர்ந்து விழி இருண்டால் மூன்று நாட்களில் மரணம்.

22. பிடரி, நெற்றி, கழுத்தின் உட்புறம் குளிர்ந்து கண்கள் நீலநிறமாகி நெஞ்சில் கபம் கட்டினால் மூன்று நாட்களில் மரணம்.

23. ஒரு நாசியும் முழங்கை பள்ளமும் குளிர்ந்திட உள்ளங்கால் சூடாகித் தொண்டை கரகரத்தால் 5 நாட்களில் மரணம்.

24. அடித்தொண்டையும், இரண்டு உள்ளங்காலும் குளிர்ந்து, இருசெவியும் விரைத்து நின்றால் இரண்டு நாட்களில் மரணம்.

வலது உள்ளங்கால் சுட்டு, இடது உள்ளங்கால் குளிர்ந்து, உச்சி வியர்த்து, உடம்பெல்லாம் கனலாய் இருந்தாலும், புருவம், நெற்றி, இடது உள்ளங்கை சுட்டு, உச்சி குளிர்ந்தாலும், வலது நாசியும், வலது உள்ளங்காலும் வெதும்பி, இடது நாசியை தேய்க்கும் போது சிவந்தாலும் உடல் ஆதியந்தமும் சூடேறினாலும் நோய் நீங்கும்.

விழி, மூக்கு, காதுஉச்சி, உந்தி, உள்ளங்கால், கைகள் வெளுத்து, பாதம் குளிர்ந்தால் ஐந்து நாழிகையில் மரணம்.

வாதமும் பித்தமும் அடங்கிக் கபம் குதித்து உடல் வெளுத்து மார்பு குளிர்ந்திடில் 96 கடிகைகளில் மரணம்.

கப நாடி எழுந்து வீழ்ந்திடில் இரண்டு நாழிகையில் மரணம்.

பித்தம் அடங்கி, வாதமும் கபமும் மேலிட்டு கண்டத்தில் கபம் அடைத்து விழி மயங்கி கழன்று தண்ணீர் வடிந்தால் ஐந்து நாழிகையில் மரணம்.

முகம் நீண்டு உடம்பெல்லாம் நரம்பு தோன்றி, பாசிபோல் கண் பஞ்சடைந்து இருள் மூடினாலும், விசை நரம்பு குளிர்ந்து உலர்ந்து நெருநெருவென பற்களைக் கடித்து நடுக்கம் உண்டானாலும், வாத பித்த கபம் விட்டிலைப்போல் துடித்தாலும் மரணம் சம்பவிக்கும்.

வாத பித்த கபம் மூன்றும் வெட்டுப்பட்ட அரணைவால் போல் துடித்தும், உடல் வேறுபட்டுக் குளிர்ச்சி காணும் நோக்கிப் பார்த்தும் ஏங்கிப் பெருமூச்சு செய்து இரண்டு விலாவும் இறைக்கும், தொண்டையில் கபங்கட்டி இளைப்பு (சரணை)

ஏற்படும். கண்ணில் நீர் வடியும், உடல் மயங்கும், மூக்கு நீளும், வியர்வை காணும். கண்களும், பல்லும் கருத்து கபம் மேலாடி மூச்சுத் திணறி கண் சுழன்று பல பேச்சக்கள் ஏற்பட்டு ஜீவன் மயங்கி மரணம் சம்பவிக்கும்.

## மரணக் கால குறிகள்

1. உடல் கறுத்துப் பிறகு சிவப்பானால் இரண்டு ஆண்டில் மரணம்.

2. உடல் அழகு குறையத் தொடங்கினால் ஒன்றரை ஆண்டில் மரணம்.

3. உள்நாக்கு கறுத்தால் ஒன்றரை ஆண்டில் மரணம்.

4. உள்ளங்கையில் விட்ட நீர் ஒட்டாதிருப்பின் ஓர் ஆண்டில் மரணம்.

5. மார்பில் பூசிய சந்தனம் உடனடியாக உலர்ந்தால் பதினொரு மாதங்களில் மரணம்.

6. உமிழ்நீர் உமிழ்ந்தவனின் கண்களுக்குத் தெரியா விட்டால் ஒன்பது மாதங்களில் மரணம்.

7. விழியின் ஒளி நன்கு தெளிவாகத் திடீரென்று மங்குமானால் எட்டு மாதங்களில் மரணம்.

8. பருத்தவர் இளைத்தாலும், இளைத்தவர் பருத்தாலும் ஆறு மாதங்களில் மரணம்.

9. பகலில் அருந்ததி, துருவம் போன்ற விண்மீன்களைக் கண்டால் ஆறு மாதத்தில் மரணம்.

10. வாய் கசந்து நஞ்சுபோல் சுவை மாறினால் ஐந்து மாதங்களில் மரணம்.

11. அடிக்கடி வியர்வையும் தடுமாற்றமும் ஏற்பட்டால் நான்கு மாதங்களில் மரணம்.

12. எதிரில் உள்ள மனிதரை விலங்கெனக் கண்டால் நான்கு மாதங்களில் மரணம்.

13. சூரியனைப் பார்த்து சந்திரன் என்றும், சந்திரனைப் பார்த்து சூரியன் என்றும் கூறினால் மூன்று மாதங்களில் மரணம்.

14. புளித்த காடியைப் பானகம் என்று கருதிக் குடித்தாலும், பாலினைக் காடி என்று குடித்தாலும் இரண்டு மாதங்களில் மரணம்.

15. நெருப்பு குளிர்ச்சியாக உள்ளது என்றும், குளிர்ச்சியை நெருப்பு என்றும் கூறினால் இரண்டு மாதங்களில் மரணம்.

16. தாளம், பேரிகை, சங்கின் நாதம் முதலிய ஒலியைக் கேட்டு பறவைகளின் குரல் என்று கூறினால் ஒரு மாதத்தில் மரணம்.

17. இடைவிடாது காதில் இரைச்சல் சத்தம் உண்டானால் 22 நாட்களில் மரணம்.

18. இனிப்பை வெறுத்தால் 22 நாட்களில் மரணம்.

19. தின்பண்டங்களில் ஆர்வம் மிகுந்தாலும், ஆர்வம் குறைந்தாலும் 15 நாட்களில் மரணம்.

20. வயிறு பருத்தால் 10 நாட்களில் மரணம்.

21. நடக்கும்பொழுது பாதங்களில் முட்கள் தைத்ததைப் போல் உணர்ச்சி ஏற்பட்டால் 5 நாட்களில் மரணம்.

22. கை, கால் உணர்ச்சியற்றுத் துவண்டாலும், சொல் தடுமாற்றம் ஏற்பட்டாலும் 5 நாட்களில் மரணம்.

23. தொப்புள் உப்பி,மேல்மூச்சு ஏற்பட்டு, உள் மயக்கம் தோன்றி உடல் வியர்த்தால் 15 மணி நேரத்தில் மரணம்.

24. கண் சுழன்று, விக்கல் ஏற்பட்டு, உடல் துடித்து, மேல்மூச்சு வாங்குமானால் 6 மணி நேரத்தில் மரணம்.

25. கிணற்றிலிருந்து பேசுவதுபோல் குரல் மெலிந்தாலும் குரல் விகாரமாக இருந்தாலும் ஒரு நாழிகையில் மரணம்.

## நாடியைக் குறிக்கும் தாதுவின் விளக்கம்

நாடி என்றால் தாது எனவும்; வாத, பித்த ஐயங்களைக் குறிக்கும் தாது எனவும்; நாடி நரம்பு ரத்தக் குழாயில் ஏற்படும் துடிப்பு எனவும் வழங்கும்.நாடி எனும் சொல் தன நாடிகளையும் குறிக்கும். தாது என்றால் ஆதி எனவும் மூலம் எனவும் பொருள்படும். தாது என்னும் சொல் உயிர்த்தாது. உடல் தாதுக்களையும் குறிக்கும். உயிர்த்தாதுவை ஆதிசிவ பரம்பொருளுக்குச் சமானமாகவும், மூலப்பிரகிருதிக்குச் சமானமாகவும் பாவிக்கிறபடியால் **ஆதி** என்றும், **மூலம்** என்றும் கருதுவர். அதுவே ***சீவாத்மா*** என்னும் பெயரோடு வழங்குவதாகவும் கூறுவர்.

நாடி என்பது இருதயத்தின் தொடர்பு. இருதயத்தின் தொழில் வேறுபாடுகளை நாடியின்மூலம் நாம் அறிகிறோம். இருதயத்தினுடைய நடை தேகஸ்திக்கு ஒத்திருக்கும். நாம் குறிப்பிடும் நாடி நரம்பு ரத்தக்குழாய் இருதயம் இவ்விரண்டும் ஸ்தூல சூக்கும சரீரங்கள் யாவற்றையுடன் ஒரே தொடர்பு உண்டு. தேகத்தின்கண் உண்டாகும் நோயை இருதயம் தெரிந்துகொண்டு நாடிகளின் மூலம் நமக்கு அறிவிக்கின்றது.

சுருங்கக் கூறில், நாடியைக் குறிக்கும் தாது என்பது உடலில் உயிர் தரித்திருப்பதற்குக் காரணமான சக்தி எதுவோ அதுவே தாது அல்லது நாடி எனப்படும்.

சற்று விரிவாகக் கூறின் மக்கள் பிறவியில் உடல் ஒன்று உயிர் ஒன்று. உடல் ஸ்தல பஞ்சபூதம் உயிர் குக்குமம், உடற்கு ஆதாரம் தேக பஞ்சீகரண பஞ்சபூதம். உயிருக்கு ஆதாரம் உயிர்த்தாது எனப்படும். ஆதலால் உடலில் உயிர் தரித்திருந்து இயங்கச்செய்யும் சக்தி எதுவோ அதுவே உயிர்த்தாது எனவும், அதுவே சிவதாது. தாது, நாடி, சீவன், ஆன்மா, சீவசக்தி, சீவாத்மா, ஆத்மா, நாடி, ஆத்ம சக்தி, குருநாடி எனப் பல பெயர்களால் வழங்கப்படும் உயிர்த்தாது என்பது ஒரே சீவசக்தியே ஒழிய வேறில்லை என்பதைக் கீழ்க்கண்ட மேற்கோள்களால் அறியவும்.

(மேற்கோள்)

## உருத்தோற்றம்

“உருபொருள் தாங்குமுடலு முயிரும்
உடற்காதார மொன் பஞ்சபூதப்
பஞ்சீகரணப் பான்மையா மெனவும்
உயிர்க்காதார முயிர்த்தாதெனவும்
முப்பிரிவாகி முக்குணமணுகி
உடலையுமுயிரையுமோம்பிக் காத்து
வருமென முதுமறைவகுக்குந்துணிபே.”

என்பதினாலும்,

“காரப்பா உடலுக்குளுயிராய் நின்ற
கருவான குருநாடி ஒன்றுகாணே”

என்பதினாலும்,

“தருநாடி தசநாடி திறமாய்நிற்கும்
தாக்கு முடலுயிராக நிற்கும்பாரே”

என்பதினாலும் அறிகிறோம்.

மேலும், சீவசக்தி மூன்று பிரிவுகள் அடைந்து மூன்று குணங்களைப்பெற்று, உடலையும் உயிரையும் ஒன்றுபடி வளர்த்துக் காப்பாற்றி வருகிறது என்பதையும் அறிகிறோம்.

மேற்கூறிய முப்பிரிவு, முக்குணமும், சீவசக்தியின் பிரபாவத்தால் தேகத்தின்கண் நிகழும் முக்கியமாகவுள்ள மூன்று விதத்தொழிலை நாம் புரிந்துகொள்ளும் பொருட்டு, வளி, அழல், ஐயம் (வாதம், பித்தம், கபம்) என மூன்று பிரிவுகளாகவும் அவற்றால் பிரதிபலிக்கும் வாயு, தேயு, அப்பு, பூதங்களின் செயல்களையும் குறிப்பதாகும். முக்குணங்கள் என்று சொல்லி இருப்பதை சத்துவ, இராசத, தாமத குணங்களாகவும் பொருள்கொள்ள இடமுண்டு.

உயிர்த்தாதுவாய் சீவாத்மாவை சிவபரம்பொருளுக்குச் சமானமாக ஒப்பிடுவர் என மேலே கூறியுள்ளோம்.

"சிவனென்னனச் சிவனென்ன வேறில்லை"

- திருமூலர்

"அவனேதானேயாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னோடு வல்வினையின்றே"

- சிவஞானபோதம்

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் - அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

- திருக்குறள்

என்பதினாலுமறிக.

சிவம் என்னும் பரம்பொருள் தானே பிரம்மா, தானே விஷ்ணு, தானே ருத்திரனாக நின்று படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் தொழில்களை முறையே புரிவதுபோல, உயிர்த்தாதுவும் தானே, வளி, அழல், ஐயமாக நின்று உடல் உயிருக்கு வேண்டிய முத்தொழில்களை வாயு, தேயு, அப்பு பூதங்களின் வடிவத்தில் புரிந்து வருவதாகவும் கூறுவர்.

மேலும்,

"ஊணப்பா உடலாச்சு உயிருமாச்சு
உயிர்போனாற் பிணமாச்சு உயிர் போமுன்னே
பூணுப்பா வாத பித்தசேத்து மத்தாற்
பூண்டெடுத்த தேகவளம் புகலுவேனே."

என்பதினாலும்,

"நாடி என்றால் நாடியல்ல நரம்பில் தானே,
நலமாகத் துடிக்கின்றதுடி தானுமல்ல,
நாடி என்றால் வாத பித்தசிலேற்பனமுமல்ல
நாடி எழுபத்தீராயிந்தானுமல்ல
நாடி என்றால் அண்டரண்டமெல்லாம்
நாடி எழுவகைத் தோற்றத்துள்ளாய் நின்ற,
நாடியதுயாராய்ந்து பார்த்தாரானால்
நாடியுறும் பொருள் நெரிந்துகி நாடுவாரே

- ப. சி. சததநாடி நூல்

என்பதினாலும்,

"தெளிந்துவிட்ட நாடியது ஞானம்போலே
சிறப்பான புரிமூன்று மொன்றாய்க்கூடி
மொழிந்திட்டவாத பித்தசிலேற்பனமென்று
முன்கையில் பூண்டிருக்கு முறைமையாக."

- சதகநாடி

என்பதினாலும்; நாம் தெரிந்துகொள்வது யாதெனில்; தொண்ணூற்றாறு தத்துவங்களை உடைய உடல் ஒன்று. ஞானேந்திரியம், கருமேந்திரியம், மனசு ஆகிய பதினொன்றால் கூடியதான சூக்குமமாகிய உயிர் ஒன்று. (இதனை, பதினான்கு கருவி கரணாதிகளுடன் கூடிய உயிர் ஒன்று என்றும் சொல்லலாகும். கருவி கரணாதிகள் என்பது; சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் பதினான்கு சூக்கும தத்துவங்கள் சேர்ந்தவையாம்.)

உயிர் பிரிந்தால் உடல் பிணமாகிவிடும். அச்சமயம் உயிருள்ள காலத்தில் தேகத்தின்கண் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஒன்றும் நடைபெறா. இதுவே பிணம் எனப்படும்.

உயிர் போவதற்கு முன்னே தேகத்தின்கண் நிகழும் இயக்க சக்தியானது வளி, அழல், ஐயம் என்ற முத்தாதுக்களின் தொழில்களால் தேகம் வளர்ச்சி அடைகின்றதென்ற விவரமும், அச்சத்தியே நாடி அல்லது தாது என்பதையும் அறிகிறோம்.

இதுபற்றிய தாது ஒன்றாயிருப்பினும், மூன்று பிரிவுகளாகப் பாவிக்கப்படுகின்றன. அவை ஒளி, அழல், ஐயம் எனப்படும். இதே தத்துவம் அண்டரெண்டமெல்லாம் நால்வகைப் பிறப்பு, ஏழ்வகைத் தோற்றம், எண்பத்திநான்கு நூறாயிரம் எழ்வுயிர்க்கும் பொருந்தும் என்பதையும் கூறியுள்ளார். எவ்வுயில்க்கும் என்பது "எல்லா சீவன்களுக்கும்" என்பதேயாகும். இதுவே நாடியைப் பற்றிய ஞானம் அல்லது அறிவு எனவும் கூறியுள்ளார். "அறிவே" "ஆன்மா"வாகும் என்பர்.

உயிர்த்தாதுவாகிய சீவ சக்தி என்ற ஒரே சக்தி தேகத்தில் வாத பித்த கபமாகப் பிரியும் தத்துவம் எங்ஙனம் ?

(கண்ணுசாமியம்)

*வெண்பா*

1. "இருப்பான நாடி எழுபதோடீயா
யிரமானதேகத்தில் ஏலப் பெருநாடி
ஒக்கதசமத்தொழிலை ஊக்கதச வாயுக்கள்
தக்கபடி என்றே சாரும்."

2. "சாருந்தசநாடிதன்னில் மூலம் மூன்று
பேருமிடம் பிங்கலையும் பின்னலுடன்-மாறும்
உரைக்கவிரற்காற்றொட்டுணைத்துமே நாசி
வரைச சுழியோமையத்தில் வந்து."

3. "வந்தகலை மூன்றில் வாயுவாமபானனுடன்
தந்த பிராணன் சமானனுக்குஞ் சந்தமறக்
கூட்டுறவு ரேகித்தல் உறும் வாதம், பித்தம்
நாட்டுங்கப்மேயாம் நாடு."

என்பதினால் அறிக.

(இதன் பொருள்)

தேகத்தில் எழுபத்தாறாயிரம் நாடி நரம்புகள் ரத்தக்குழாய் உந்திச் சுழியிலிருந்தெழுந்து கீழ் மேலாகப் போய்ப்பீர்க்கம் குடுவையைப்போல் ஆக்கை எல்லாம் பற்றி நிற்கும். இவற்றில் பெருநாடிகளென அழைக்கப்படுவை பத்து நாடிகள் (தச நாடிகள்). இப்பத்து நாடிகளும் பத்து வாயுக்களால் (தச வாயுக்களால் ) உதவிபுரியப்பட்டு (தூண்டப்பட்டு) தம் தொழிலைப் புரிகின்றன. அவற்றுள் ஏழு நீக்கி முக்கியமானவை மூன்று மூலாதார நாடிகளாகிய இடகலை, பிங்கலை, சுழிமுனை

என்பவையாம். இம்மூன்றும் முறையே அபானன், பிராணன், சமானன் என்னும் வாயுக்களின் கூட்டுறவால் தொழில் புரியும்போது வாத, பித்த, கபம் (வளி, அழல், ஐயம்) என்ற மூன்று புரிகளான சக்திகள் தோன்றுவதாகக் கூறப்பட்டுள்ளது.

வாத, பித்த கபம் (வளி, ஆழல், ஐயம்) இம்மூன்றும் வாயு. தேயு, அப்பு பூதங்களின் செயல் அல்லது கூறுபாட்டை அடைவது எங்ஙனம் ?

"நிலம் நீர் தீ வளி வீசும் போடைந்துங்
கலந்த மயக்க மூலகமாதலின்"

என்பதினாலும்,

"பாரப்பா பூதமைந்து மண் நீர் தேயு
பரிவா யுவாகாயமைந்தினாலே
சேரப்பாசடமாச்சு"

என்பதினாலும்,

"தலங்காட்டியிந்தச்சுடமான வைம்பூதம்
நிலங்காட்டி நீர்காட்டி நின்றிடுந் தீகாட்டி
வலங்காட்டி வாயுவால் வளர்ந்தே யிருந்த
குலங்காட்டி வானிற் குடியிருந்ததே.

"இருந்திடுவிவைந்தாலெடுத்த சடமிது"

என்பதினாலும், பிரபஞ்சம் பஞ்சபூதமயம் என்பதுபோலத் தேகமும் பஞ்சபூதமயம் என்பதை அறிகிறோம்.

"பிரிந்திடும் மாமிசம் பிருதிவி
யின் மயமாகும்,
சொரிந்திடும் அமிர்த நீர் சொற்
குறி அப்புவாம்
வருந்திவன்னிவளமாய்
வெதுப்புமே."

எனவும்;

"வெதுப்பதுடனே விடுபட்டு
நாசியில்,
எதுப்புற்று நிற்குமிது காணும்
வாயுவாம்,
கதுப்பொத்தே எல்லாங்கவளத்
திடமிட்டு
மதுப் பொத்து நிற்கும் வானின்
வளப்பமே." - திருமூலர் நாடி

என்பதினாலும்;

தேகத்தின்கண் மாமிசம் போன்ற கடின உறுப்புகள் யாவும் பிருதியின் கூறு எனவும், அமிர்தம் போன்ற நீர்மயமாகி இருப்பவை அப்புவின் கூறு; உஷ்ணத்தைக் காட்டுவது தேயு எனவும், மூக்கு வழியாய் மூச்சு வாங்குதல் விடுதல் வாயு எனவும்; எல்லாவற்றிற்கும் இடமளிப்பது ஆகாயக்கூறு எனவும் அறிகிறோம்.

நிற்க; இதனை ஆதரித்துச் சதக நாடியிலும் கீழ்க்கண்டபடி கூறியுள்ளார்.

"சேரப்பாசடமாச்சு மண்ணின்கூறு,
செறிமயிர் தோல் எலும்பிறைச்சி நரம்பைந்தாகும்,
நேரப்பா அப்புவின் கூறுதிரமச்சை
நீர்மூளை சுக்கிலமோட ஞ்சாகும்
சாரப்பாதீக்கூறு பயமாங்காரங்
கடுஞ்சோம்பு நித்திரை மைதுனங்களஞ்சே."

"அஞ்சானவாயுவின் கூறிருத்தலோடல்
யவை நடந்த கடத்தலுடனிற்றஞ்சாம்
அஞ்சதகுமாகாசக்கூறு காமமிதிற்குரோதம்
உலோப மோக மதமஞ்சாகும்."

இதில்கூறிய இருபத்தைந்து ஐம்பூதக்கூறுபாடுகள் தேகத்தின் புறக்கருவிகள் எனப்பெயரிட்டனர்.

மேலும் திருமூலர் நாடி கூறுவதாவது :

"வளப்பங்கேள், பூமி வசிக்கும் நாசியில்,
களப்பமாம் வன்னிதானுறுங் கண்ணினில்
அவப்பமாமப் பொவடங்கிடும் நாவினில்,
பளப்ப நல்வாயுவும் பரிசிக்குமெங்குமே."

"எங்கிய காதிலிருந்துறமாகாயம்"

என்பதினாலும்;

மூக்கிலிருந்து வாசனையை அறிவிப்பது பூமி எனவும்; கண்ணிலிருந்து பார்வையை அறிவிப்பது தேயு எனவும்; நாவில் இருந்து சுவையை அறிவிப்பது அப்புவெனவும்; தோலிலிருந்து பரிசத்தை உணர்த்துவது வாயுவெனவும்; காதிலிருந்து சப்தத்தைக் கேட்கவைப்பது ஆகாயம் எனவும் அறிகிறோம்.

அதற்குமேல்,

"பெருங்கியீரைந்துக்குட் பொல்லா மூன்று தான்
தங்கியவாயுச் சமர்த்தன் மகாவதம்
பங்கியவன்னியார் பகுந்தது பித்தமே.

என்பதினாலும்,

"பகுந்தசலத்திற் பரிசிக்கும் நல்கலையம்;
வகுந்தாயிம்மூன்றால் வளர்ந்தது நோயெல்லாம்"

என்பதினாலும் அறியலாம்.

நாம் தெரிவது யாதெனில்; இவ்வாறு அமைந்த ஐம்பூதமயமாக தேகத்தில் முக்கியமாகத் தொழில்புரிபவை மூன்று பூதங்களாலான முக்குற்றங்களேயாகும்.

அவை :

வாயுவின் கூறு வாதம் (வளி)
தேயுவின் கூறு பித்தம் (அழல்)
அப்புவின் கூறு பித்தம் (ஐயம்)

எனக்கூறுவர். இம்மூன்று நீங்கலாக மற்ற இரண்டு பூதங்களில் விண் (ஆகாயம்), வாதத்திற்குரிய வாயுவோடு கூடும் மண் (பிருதிவி) கபத்திற்குரிய அப்போடு சேருமென அறிக. வளி, அழல், ஐயம் மூன்றும் முறையே வாயு, தேயு, அப்பு என்னும் பூதங்களின் குணங்களைப் பெறுகின்றன. அன்றியும் முக்குற்றங்களும் (வலி, அழல், ஐயம்) முறையே அபானன், பிராணன், சமானன் என்னும் வாயுக்களால் இடகலை, பிங்கலை, சுழிமுனை நாடிகள் தூண்டப்படும்போது உண்டானவை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

"சேத்துமந் தண்ணீர், பித்தந்தீ காற்றுவாதமாமே" என்பதினாலும் அறிகிறோம்.

குறிப்பு :

தண்ணீர் என்றும், தீ என்றும், காற்று என்றும் கூறியிருப்பதை வெளித்தோற்றமாகவுள்ள தண்ணீர், தீ, காற்று என்பதாகக் கொள்ளல்கூடாது. உபமானமாகக் கூறியதேயொழிய வேறல்ல. வெளித்தோற்றமாகவுள்ள தண்ணீர், தீ, காற்று முதலியன மிகுந்தாலோ, குறைந்தாலோ எவ்விதம் கஷ்டத்திற்கு உள்ளாவோமோ, அதே விதமாகத் தேகத்தின்கண் நிகழும் முக்கியமாகவுள்ள மூன்று பூதமயமான வாயு, தேயு, அப்பு என்னும் சத்துக்கள் அல்லது ஐம்பூதமயமான உணவுச் சத்துக்களைப் பிரதிபலிக்கும் வளி, அழல், ஐயம், தத்தம் தொழிலில் மிகுந்தாலும் குறைந்தாலும் நோயை உண்டாகும் என அறிக. இவையே வளி, அழல், ஐயம் என்னும் மூன்று குற்றங்களும் வாயு, தேயு, அப்பு பூதங்களின் கூறுபாடுகளை உடையவை என்பதற்கு அத்தாட்சியாகும். இச்சத்துக்கள் சப்த தாதுக்களையும் போஷிக்கக் கூடியவை. ஸ்தூலமாகில் சப்த தாதுக்களிடத்தே சூட்சமமாக நின்று தத்தம் தொழிலை நிகழ்த்தும் பாவனையே வளி, அழல், ஐயம் என்னும் முக்குற்றங்களைக் குறிக்கும் என அறிக.

ஒரே சீவசக்தி மூன்றுவிதத் தொழில்களைப் புரியும் கிரகமத்தினை அறிவதெங்ஙனம் ?

ஆரை என்பின் மேலோடும் நாடி நரம்பு ரத்தக்குழாயின் மேல் விரல்களை வைத்து அழுத்தியும் தளர்த்தியும் பார்க்கும் போது 1 : ½ : ¼ என்ற மாத்திரையளவில் தேகம் நன்னிலையில் இருப்பதைச் சித்தர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். கணிக்கு விரல்கள் கருவி போன்றவை.

(மேற்கோள்)

"குறியாய் வலக்கரங்குவிந்த பெருவிரல்
வறியாயதன் கீழ் வைத்திடு மூவிரல்
பிரிவாய் மேலேறிப் பெலத்ததுவாதமாம்
அறிவாய் நடுவிரல் மலர்ந்தது பித்தமே."

என்பதினாலும்,

"பித்தத்தின்கீழ் புரண்டதையமாம்,
உற்றுற்றுப் பார்க்கவோர் நரம்பேயோடிடும்
பத்தித்த மூவரும் பாய்கின்ற வேகத்தால்
மத்தித்த நாளம்போல் வழங்கும் நரம்பிதே."

- திருமூலர்

என்பதினாலும்,

"கரிமுகனடியை வாழ்த்திக்
கைதனில் நாடி பார்க்கில்,
பெருவிரல் குலத்தில்
பிடித்தடி நடுவே தொட்டால்
ஒரு விரலோடில் வாதம்
உயர்நடுவிரலிற் பித்தம்
திருவிரல் மூனிறிலோடில்
சிலேத்தும் நாடி தானே.

(அகத்தியர் நாடி)

என்பதினாலும்,

பெருவிரல் பக்கமாக மணிக்கட்டுக்கு ஒரு அங்குலத்திற்கு மேல் ஆரை என்பின் மேலோடும் நாடி நரம்பு ரத்தக்குழாயின்

மேல் மூன்று விரல்களை வைத்துச் சற்று அழுத்தியும் தளர்த்தியும் பார்க்க ஆள்காட்டி விரலாகிய முதல் விரலில் உணர்த்துவது வாதம் எனவும்; நடுவிரலில் உணர்த்துவது பித்தம் எனவும்; பௌத்திர விரலில் உணர்த்துவது கபம் எனவும் அறியவும். தவிர ஒரே நாடி நரம்பு ரத்தக்குழாயிலேயே மேற்கண்ட பிரகாரம் நாடியின் துடிப்பை நாம் அறியக்கூடியது. நாடிகள் மூன்றும் ஏகோபித்து ஓடும் வேகத்தில் மூன்றுவித அளவில் நம் விரல்களில் துடிப்புகள் உணர்த்துவதையும். அறியக்கூடும். நாடி ஓடிக்கொண்டிருக்கும் உறுப்பு குழல் போன்றது எனவும் கூறியுள்ளார்.

***நாடிகளின் மாத்திரை அளவு :***

1. "வழங்கிய்வாதம் மாத்திரை யொன்றாகில்
தழங்கிய பித்தந்தன்னிலரைவாசி
அழங்குங்கபந்தானடங்கியே காலோடில்
பிறங்கிய சீவர்க்குப் பிசகொன்றுமில்லையே."

- குணவாகட நாடி

2. "வளி வன்னியைக்குவங்கிடு மாத்திரை
ஒன்றரை காலாயோதினர் சித்தரே."

3. "மெய்யளவு வாதமென்று
மேல்பித்தமோரரையாம்
ஐயங்காலென்றே அறி."

- கண்ணுசாமியம்

என்பதினாலும்,

வாதம் ஒரு மாத்திரை, பித்தம் அரை மாத்திரை, கபம் கால் மாத்திரை விகிதமாக மூன்று நாடிகளும் முறையே நன்னிலையில் காண்பிக்கும் அளவாகும்.

மாத்திரையின் இலக்கணம் என்ன ?

1. "செய்கின்ற நாடி பெருவிரலின் மேலாய்,
திருந்திழை மன்றங்குலுத்தினடுவதாக
தைக்கின்ற கோதுமையரிசி போலச்
சர்வம் வியாபித்திருக்குமதுதான் கூறில்."

- குணவாகட நாடி

என்பதினாலும்.

2. ". . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அரைந்தார் முனிவர் யளவுகோள் தோற்றும்
விரை போதுமையாம் வியந்து."

- கண்ணுசாமியம்

என்பதினாலும்,

ஒரு மாத்திரை என்பது ஒரு கைநொடி அல்லது கண் இமைக்கும் கால அளவு எனச் சிலரது அபிப்பிராயமாக இருப்பினும், சித்த மருத்துவ நூல்களை ஆராயுங்கால், மாத்திரை என்றால் நாடியின் துடிப்பு ஒரு கோதுமையரிசிப் பிரமாணம் உயரம் எழுந்து அடங்குவதற்குரிய கால அளவு எதுவோ அதுவே நாடி நடையின் மாத்திரை அளவைக் குறிக்கும் என அறிக.

சுபாவமான நிலையில் நாடிகளின் மாத்திரையளவு வித்தியாசப்படுவதின் காரணம் கூறுகிறார்.

(மேற்கோள் - கண்ணுசாமியம்)

## வெண்பா

1. "இருப்பான நாடி எழுபதோடீரா
யிரமானதேகத்தில் ஏலப் - பெருநாடி
ஒக்கச் சமத்தொழிலை யூக்கதசவாயுக்கள்
தக்கபடியென்றே சாரும்."

2. "சாருந்தசநாடி தன்னில் மூலம் மூன்று
பேருமிடம் பிங்கலையும் பின்னலுடன் மாறும்
உரைக்கவிரற்காற்றொட்டுணர்த்துமே நாசி
வரைச்சுழியோமையத்தில் வந்து."

3. "வந்தகலை மூன்றில் வாயுவாமபானனுடன்
தந்த பிராணன் சமானனும் - சந்தமுறக்
கூட்டுறவுரேசித்தல் கூறும் வாதம் பித்தம்
நாட்டுங்கபமேயாகும் நாடு."

4. "நாடுமிடகலை நானான்குயங்குமாய்
ஓடுமே பிங்கலையுமுய்யபத் - தோடிரண்டு
போக நடுச்சுழியோ போற்றவு பாயமுமாய்ப்
பாகம் பகிர்ந்திமே பார்.

5. "பாருங்கலை மூன்றில் பற்றிய வாயு மூன்று,
சாரும் வன்மைக் குறையான் சாற்றக்கேள் - தேருமதின்
மெய்யளவுவாதமொன்று மேல் பித்தமோரரையாம்
ஐயங்காலென்றே அறி."

என்பதினால் மூன்று நாடிகள் உண்டாகும் விதமும், மாத்திரைக் கிரமும், மாத்திரையளவு ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுவதன் காரணமும் விளக்கியுள்ளார்.

(இதன் பொருள்)

தேகத்தில் எழுபத்தீராயிரம் நாடி நரம்பு ரத்தக் குழாய்கள் (நாடிகள்) உள்ளன. அவற்றுள் பெருநாடி எனச் சொல்லப் பட்டவை பத்து இவை தசநாடி எனப் பெயராகும். இப்பத்து நாடிகளையும் ஏழு நீக்கி முக்கியமான மூலாதார நாடிகள் என வழங்கும் இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிய மூன்றும் அபானன், பிராணன், சமானன் ஆகிய மூன்றும் சமானன் என்னும் வாயுக்களின் உதவியால் (கூட்டுறவால்) தொழில்புரியும்போது, இடகலையும், அபானவாயுவும் ரேசித்தலால் வாதமும்;

பிங்கலையும் பிராணவாயுவும் ரேசித்தலால் பித்தமும்; சுழிமுனையும் சமானவாயுவும் ரேசித்தலால் கபமும் ஆகிய மூன்று புரிகளான சக்திகள் தோன்றுவதாக முன்னமேயே ("உரித்தாது" வாத-பித்த-கபமாகப் பிரியும் தத்துவம் எங்ஙனம் என்பதில்) கூறியுள்ளோம்.

இப்போது மாத்திரையின் அளவு வித்தியாசப்படுவதற்கு முக்கியமான காரணத்தைக் கூறுமிடத்து, இடகலை அபானன் சேர்க்கையால் பிராணவாயு (மூச்சு, சுவாசம்) இடது நாசியின் வழியாய் 16 அங்குலம் பாய்ந்தும், பிங்கலை பிராணன் சேர்க்கையால் வலது நாசியின் வழியாக மூச்சு (சுவாசம்) 8 அங்குலம் பாய்ந்தும், சுழிமுனை சமானன் சேர்க்கையால் மூச்சு இரண்டு மூக்குத் துவாரங்களுக்கும் இடையேயிருந்து உபாயமாகவும் இரண்டிலும் பகிர்ந்தோடும் எனவும்;

இடைகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிய மூன்று கலை நாடிகளும் முறையே அபானன், பிராணன், சமானவாயுக்களின் சேர்க்கையால் மூக்குத் துவாரங்களில் சுவாச நடை உண்டாகும் போது மேலே கூறிய பிரகாரம் ஒன்றுக்கொன்று வன்மை குறைவு ஏற்படுவதன் காரணமாக வாதம் மாத்திரை ஒன்றாகவும்; பித்தம் மாத்திரை அரையாகவும்; கபம் மாத்திரை காலாகவும் சுபாவமான நன்னிலையில் நாடிகள் மாத்திரை அளவு உண்டாவதாகவும், வித்தியாசமான அளவு காணப்படுவதாகவும் கூறியுள்ளார்.

"உயிர் " தாது என்றும், "சீவாத்மாவை" சிவதத்துவம் அல்லது சிவநரம் பொருளுக்குச் சமானமாக ஒப்பிடுவது எங்ஙனம்?

1. "சீவனென்னச் சிவனென்ன வேறில்லை" - திருமூலர்

2. "அவனே தானே யாகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னோடு வல்வினையின்றே"
- சிவஞானபோதம்

என்பதினாலும்;

3. "எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."
- திருக்குறள்

4. "அரியானை யந்தணர்தம் சிந்தையானை
யருமறையின் அகத்தானை யணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியை தேவர்கடங்கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானை பெரும்பெற்றனைப் புலியூரானை."

என்பதினாலும்,

5. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமா
யானந்த பூர்த்தியாகி,
அருளொடு நிறைந்ததெது
தன்னருள் வெளிக் குள்ளே
அகிலாண்டகோடி எல்லாம்,
தங்கும் படிக்கிச்சை வைத்து யிர்க்குயிராய்த்
தழைத்தது எது. . . . . . . . . . . . . . . . ."

என்பதினாலும்,

6. "ஐம்பத் தோரெழுத் தெல்லாம்
மோரெழுத் தேயாகி
அண்ட பிண்டந் தானாகி யமர்ந்த நாதன்
எண்பத்து நான்கு நூறாயிர லெட்சமுயிரே யாகி
ஏகமது தானாகி நின்றார் பாரே."

என்பதினாலும்;

எல்லாப் பொருள்களிலும் சிவன் இருக்கிறதென்பதையும், கடவுள் நீக்கமின்றி ஒவ்வொரு வஸ்துவிலும் தன் இச்சைக் கொண்டு நிறைந்திருக்கிறார் என்றும்; வஸ்து ஒன்று, அதுவே

எல்லாப் பொருள்களிலும் அனல், காற்று, நீர் இவற்றிலும் கூடக் கலந்து நிறைந்து நிலையாய் நிற்கின்றதென்பதையும், அதுவே மெய்யான பரம்பொருள் என்பதையும் அறிகிறோம். பிரபஞ்சத்தின் தோற்றமும் ஒடுக்கமும் ஒரே வஸ்துவாகிய சிவ பரம்பொருளின் கருணையாலேயே நடைபெறுகிறது என்பதும் மனிதன் அதற்கு விலக்கில்லை என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல்வேண்டும்.

"நான்" வேறு, "கடவுள்" வேறு என இன்றி ஒருவனாய் ஆணவம், கன்மம், மாயைகளை நீக்கி நிற்கில் அந்நிலையில் உயிர்க்குயிராய் நிற்கும் சிவனே கடவுள் ஆவார் என்னும் அறிவு தானே உண்டாகும்.

தேரையர் மருத்துப் பாரதத்தில் கூறிய கீழ்க்கண்ட மேற்கோள் பற்றிச் சற்று ஆராய்வோம்.

*"வாதமாய்ப் படைத்துப் பித்த வன்னியாய்க் காத்துச் சேட்ப*
*வீதமாய்த் துடைத்துப் பாராந் தேகத்திற்குடியா மைந்து*
*பூதவிந்தியாமைவர் பூசை கொண்டவர்பால்விந்து*
*நாதமாங் கிருட்டிண மூர்த்தி நமக் கென்றும் துணையாவாரே".*

எனக் கூறியுள்ளதை சித்தமருத்துவத்தில் ஐம்பூதப் பொருள் களால் ஆக்கப்பட்ட எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமின்றி நிலைத்துத் துணையாய் நின்று, அவற்றினை வாதமாய்ப் படைத்தும், பித்தமாய்க் காத்தும், ஐயமாகத் துடைத்தும், உயிருக்கு உயிராகயிருந்து அவைகளால் போற்றப்படுவது போலக் கடவுளாகிய கிருட்டினன் ஐவராகிய பாண்டவரிடத்தில் இணைபிரியாது உயிர்க்குராய் நின்றனன் எனப் பொருள்படக் கூறியுள்ளார் நூலாசிரியர்.

ஆனால், இங்கே நாம் கவனிக்கவேண்டியது யாதெனில், கிருட்டினன் பஞ்சபாண்டவரிடத்தில் உயிருக்குயிராக நின்றனர் என்று மட்டிலும் மேலே சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய

அவர்களிடத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் எவ்விதம் என்பது கூறப்படவில்லை கவனிக்கவும். பாண்டவர்களை மற்ற சீவாத்மாக்களைப் போலவே பாவிக்கவேணும். ஆதலால் கிருஷ்ணன் அபிராகிருத சரீரத்துடன் கூடிய கடவுள் (பகவான்) என்பதும்; அவரது கடமை ஆக்கல், காத்தல், அழித்தல் என மூன்றாகும். அப்படிப்பட்ட கிருஷ்ண பகவான் இங்கே பாண்டவர்களிடம் அதிகமான நட்பு கொண்டிருந்தார் என்பதும்; அவரது (1) ஆக்கல் சக்தியைக் குறிப்பிடும்போது, பஞ்ச பாண்டவர்களுக்குக் கிருஷ்ணன் ஊக்கம், உதவி, உற்சாகம், தைரியம் ஆகியவற்றைக் காட்டியதேயாகும். இதனால் பாண்டவர்களுக்குப் பலம் அதிகமாயிற்று எனலாம். (2) காத்தல் சக்தி என்பது முன்காட்டிய ஊக்கம், உதவி, தைரியம் இவற்றினால் ஏற்பட்ட பலத்தை நிலைக்கச் செய்தல் எனலாம். (3) அழித்தல் சக்தி என்பது தனது ஆக்கல், காத்தல் கடமையான தொழில்களுக்குச் சத்துரு ஏற்பட்டால் அந்த சத்துருக்களாகிய கௌரவர்களை அழித்தலேயாகு. இதுவே நோயை ஒழிப்பது போலாகும். இதுவே உவமானமுமாகும்.

பொதுவாக "ஆக்கல்" என்பது சிவபரம்பொருளாகிய பகவான் சீவாத்மாவுக்கு ஸ்தூல சூக்கும தேகத்தை அளித்தலே யாகுமென்றும் (தநுகரணம்), "அழித்தல்" என்பது அதே சீவாத்மாவாகிய சூக்கும தேகத்தை மறுபடியும் மாலையில் ஒடுங்கிச் செய்வது என்றும்; "காத்தல்" என்பது ஸ்தூல சூக்கும தேகத்தோடு படைக்கப்பட்ட சீவாத்மாவுக்கு புவன போகங்களையும் கொடுத்து நல்வினை தீவினைகளுக்கு ஏற்றவாறு அனுபவிக்கச் செய்தலும் ஆகும் எனச் சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன.

இங்கே வாத, பித்த, கபம் என்ற முக்குற்றங்களுக்கு ஒப்பிட்டு ஆக்கல், காத்தல், அழித்தல் தொழில்களைக் கூறியிருப்பதால் அதற்கேதுவான முறையில் நாம் ஆலோசிக்கவேண்டும்.

ஆகவே கடவுள் ஒன்று; செயல்கள் மூன்று எனப்படும். ஆக்கல், காத்தல், அழித்தல் போன்ற செயல்களை அதே கடவுள் தானே பிரம்மா, தானே விஷ்ணு, தானே சிவன் என்ற

திருநாமங்களோடு முறையே மூன்று தொழில்களையும், ஜகத்தின் காரணமாகப் பரிந்துவருவதாகவும்; அவ்வாவாறே சித்த மருத்துவத்திலும் அமைந்து உடலையும், மனதையும் இயங்கச் செய்யும் சீவன் சிவத்திற்குச் சமானமாகவும்; வாதம், பித்தம், கபம் என்னும் முத்தொழில்கள் இயங்குவதை முறையே ஆக்கல், காத்தல், அழித்தல் தொழில்களுக்குச் சமம் எனவும்பெயர்களை அமைத்து, சிவத்தைப் போலவே சீவனும் உடற்கட்டாகிய சப்த தாதுக்களுக்குவேண்டிய பொருள்களை ஆக்குவதற்கான சக்தியையும்; நிலைத்தற்கான சக்தியையும் அழித்தற்கான சக்தியையும் பெற்று, அவை முறையே வலி, அழல், ஐயம் எனப் பெயர்களைப் பெற்றன.

அப்பேர்ப்பட்ட சக்தி யாதென்றால், உடற்கு வன்மைதர வேண்டிக் குருதி நுண்ணனுக்களைத் தோற்றுவிப்பதும், நிலைக்கச்செய்வதும், அழிக்கச்செய்வதுமான தொழில்களை உடலில் உயிருள்ள வரையில் உலகப் பொருள்கள் தோன்றுவதும், நிலைத்திருப்பதும், அப்பால் அழிவதுமாகிய தன்மையைப்போல் தொழில்கல் புரியும் எனவும், சித்த மருத்துவ நூலில் கூறியுள்ளார்கள். மற்ற சித்தர் நூல்களில் குருதியில் மட்டிலும் நுண் அணுக்கள் இருப்பதாகக் கூறப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

## விளக்கம் (வேறு)

1. உலகப் பொருள்கள் தோற்றுவிப்பதும், நிலைத் திருப்பதும், அப்பால் அழிவதும் ஆகிய இவை கடவுளின் தொழில்கல்.

2. ஒரே கடவுள், தானே பிரம்மமாகவும், விஷ்ணுவாகவும், சிவனாகவும் (மும்மூர்த்திகளாக) இருந்து முத்தொழில்கள் புரிவதாக நூல்கள் வாயிலாக அறிகிறோம்.

3. இதே மாதிரியாக உடல், உயிர் தோன்றுவதும், நிலைத்திருப்பதும், அப்பால் அழிவதுமாகிய தொழில்கள் (உயிர்த்தாதுவால் ஏற்படுகின்றன்.

4. ஒரே உயிர்த்தாது தானே வாத வாயுவாகயிருந்து உடலில் உயிரைத் தோற்றுவிப்பதும், பித்த வன்னியாகவிருந்து அதனைக் காப்பாற்றுவதும், சேத்தும சீதகமாகி அதனை அழிப்பதுமான முத்தொழில்கள் நிகழ்வதாகக் கூறவேண்டும்.

5. இம்மட்டிலும் கடவுளுக்குச் சமானமாகச் சீவனும்; இது ஆதி தெய்வீகமாக அறியக்கூடிய விஷயம். ஸ்ரீகிருஷ்ண பகவானைச் சர்வேசுவரனாகக் கூறியவிடத்து, அவரது பிரபாவம் முத்தொழில்கள் என்றும், அதே மாதிரியாக சீவாத்மாவாகிய உயிர்த்தாதுவும் மூன்று தொழில்களை மேற்கூறியவாறு புரிகிறதாகவும் கூறப்பட்டுள்ளது.

பஞ்சபாண்டவர்களிடத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் காட்டிய முத்தொழில்கள் இன்னதென்பதையும் ஒருவாறு புரியத்தக்க வகையில் மேலே கூறியுள்ளோம்.

6. "விந்துநாதமாங் கிருஷ்ணமூர்த்தி" எனத் தேரன் கூறியதின் கருத்து என்ன ?

விந்து நாதம் கலந்து உருவாகும் பொருள்கள் யாவும் "சீவமயம்" என்பர்.

"சிவனென் சிவனென்ன வேறில்லை" என்பதாலும்,
"அவனே தானேயாகிய அந்நெறி" என்பதாலும் அறிக.

ஐம்பூதமயமாயும் ஐந்து இந்திரியங்களுக்குச் சமானமாயுள்ள பஞ்சபாண்டவர்களுக்கு உயிர்க்கு உயிராக இருந்த பகவான் கிருஷ்ணமூர்த்தி, விந்துநாதம் கலந்து உருவாகிய வஸ்துவுக்குச் சமானமென்பர்.

வாதம், வைத்தியம், யோகம், ஞானம் என்னும் முன்பு வகையாவற்றிற்கும் ஏற்ற அறிவும், செயலும் புரியவேண்டும் என்றால் நாத விந்துச் சரக்குகளின் மகிமைகளை அறிந்து மருந்துகள் தயாரித்தல் வேண்டும்.

இதைக் கீழ்க்காணும் மேற்கோள்களால் அறிக :-

1. "வெல்லும் புவியில் விளங்கி தாபரம்
புல்லிடுஞ் சங்கமம் பொறியிடும் விந்தோ"

பிந்தினாலல்லோ மேதினியாச்சுது
செந்துக்களெல்லாஞ் சிவமயமாச்சுது,
வந்திடும் நாதம் மௌனம் கலந்திது
சிந்தையிலுள்ளத் தெளிவாகச் செப்புமே

என்பதினாலும்,

2. "வாமென்ற நாதமத்தில் விந்து சேர்க்க,
மாருதம் போல் வயித்தயமெல்லா மிதற்குள்ளாகும்,
காமென்ற நாதவிந்தால் சடமுமாச்சு
கருதியதோர் சித்தியெல்லாம் நாத விந்தாலாச்சு
நாதவிந்தின் செயலறியாச் சண்டாளன் கட்டு மாள்வான்"

என்பதினாலும் அறிக.

7. இதற்குமேல், தேகத்தில் நிகழும் முத்தொழில்களும் எங்ஙனம் நடைபெறுகிறது என்பதை நாம் தெரிந்துகொள்ளல் வேண்டும்.

சித்தமருத்துவ நூலில் உடற்கு வன்மை தரக்கூடிய குருதியினுள் அணுக்களைத் தோற்றுவிப்பதும், நிலைக்கச் செய்வதும், அழிக்கச் செய்வதுமான முத்தொழில்கள் உயிர்த் தாதுவின் சக்திகளாக வாத-பித்த-கபம் எனக் கூறப்பட்டிருக்கும் உதாரணம் பொருத்தமன்று.

ஏனெனில், குருதியில் நுண் அணுக்கள் இருப்பதாக சித்தர் நூல்கள் வேறு எதிலும் காணவில்லை. எனினும், வார்த்தை அளவில் குருதியில் நுண் அணுக்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். நுண் அணுக்களைத் தோற்றுவிப்பது குருதியில் மட்டுமானால் அவற்றை நிலைக்கச் செய்வதும், அழிப்பதும்

எங்கே? எத்தாதுவில்? எப்பொழுது? ஆகிய விவரங்கள் குறிக்கப் படவில்லை. அப்படியானால் அவைகளை நிலைக்கச் செய்வதும், அழிக்கச் செய்வதுமான தொழில்களும்கூடக் குருதியில் நடைபெறுகின்றனவா? அப்படியானால் ஏழு தாதுக்களும் தேகத்தில் ஏழு கருவிகளாக இருந்து தொழில்களும் புரியும்போது குருதிக்கு மட்டிலும் ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்கள், ஒருமித்து இருப்பதாகக் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? எங்ஙனம் சாத்தியமாகும்? பல நூல்களை ஆராயுங்கால் ரச தாது முதல் சுக்கில தாது ஈறாக ஏழு உடல் தாதுக்களிலும் முத்தொழில்களும் நடைபெறுகின்றன என்பது தெரியவருகிறது.

சப்த தாதுக்களில், ஐம்பூதப் பொருள்களான சத்துக்கள் இருக்கின்றன. எத்தாதுக்களில் எப்பூதக்கூறுப் பொருள்களாலான எச்சத்துக்கள் மிகுதியாகவோ குறைவாகவோ அல்லது இயற்கை அளவாகவோ இருக்கின்றனவோ, அவற்றிற்குத் தகுந்தாற்போல் சத்துக்கள் சப்த தாதுக்களில் கிரகிக்கப்படும்.

அவற்றுள் முக்கியமானவை வாயு, தேயு, அப்புப் பொருள் களாலான சத்துக்களேயாகும். இவை முறையே வாத சத்து, பித்த சத்து, கபச் சத்துகள் என அழைக்கப்படும்.

இச்சத்துக்களைக் கவர்ந்து செல்வது முறையே வாயு, தேயு, அப்பு, பூதங்களேயாகும். இவை இரச தாது முதல் சுக்கில தாது ஈறாக எல்லாத் தாதுக்களையும், அவ்வவற்றின் தேவைக்குத் தகுந்தவாறு வளர்க்கின்றன. இவ்விதச் சப்த தாதுக்களிலும் பரவச் செய்வதற்கு ஆதாரமாக இருப்பது "உயிர்த்தாது"வேயாகும்.

இதுவே இடகலை, பிங்கலை, சுழிமுனை என்றும், மூலாதார நாடிகளாகிய முறையே அபானன், பிராணன், சமானன் என்னும் மூன்று வாயுக்களுடன் கூட்டுறவு ரேசித்தலால் (தூண்டப்படுவதால்) வாத, பித்த, கபம் என்ற பெயர்களைப் பெற்று விளங்குகின்றன என்பதை ஏற்கனவே அறிந்திருக்கிறோம். உயிர்த் தாது இல்லையென்றால் இத்தியாதி செயல்கள் அல்லது தொழில்கள் ஒன்றுமே நிகழாது.

"ஊணப்பா உடலாச்சு உயிருமாச்சு
உயிர்போனாற் பிணமாச்சு உயிர் போமுன்னே
பூணப்பா வாத பித்தசேத்து மத்தாற்
பூண்டெடுத்த தேகவளம் புகலுவேனே."

என்பதினால், உடலில் உயிர் தரித்திருக்கும் வரையில்தான் உயிர்த்தாதுவின் பிரபாவம் என்பது நன்கு விளங்கலாயிற்று.

இதனினின்று நாம் தெரிந்துகொள்வது யாதெனில், குருதி நுண் அணுக்களை மட்டிலும் ஆக்கல், காத்தல், அழித்தல் தொழில்களுக்கு உதாரணமாகக் கூறுவது சரியில்லை என்பதும்; சப்த தாதுக்களிடத்திலும் மூன்றுவிதச் சக்திகளும் நிகழ்வதாகவும் கருதவேண்டும்.

8. கடைசியாகத் தேரன் கூறிய படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்கள் யாவை என்பதைக் கவனிப்போம்.

"வாதமாய்ப் படைத்து" என்பதானது "வாத வாயுவைப் படைத்து" என்றிருப்பது பொருத்தமானது. ஏனெனில், அடுத்தடுத்து வரும் வாக்கியங்கள் "பித்தவன்னியாக் காத்து" என்றும், "சேட்பசீதமாய்த் துடைத்து" என்றும் இருப்பதால் வாத வாயு என்று கூறுவது பொருத்தமானது.

1. உடலில் உயிர் தரித்திருந்து இயங்குவதற்கு ஆதாரமாகிய "உயிர்த்தாது" உண்டாகும்போது அதாவது கருவுற்பத்தி காலம் முதல் தானே மூவகைத் தொழில்களையும் புரியும் பொருட்டு, முக்குணங்களையுடைய (சத்துவ-ரஜோ-தமோ குணங்கள்) அல்லது (வாயு, தேயு, அப்பு குணங்கள்) மூன்று பிரிவுகளை அடைகிறது. சொல்லளவில் வளி, அழல், ஐயம் (வாத-பித்த-கபம்) என்ற மூன்று பிரிவுகளாக வைத்துக்கொள்ளவேணுமே யொழிய, மூன்று பிரிவுகளும் தனித்தனி அல்ல. மூன்றும் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்ட புரிக்குச் சமானமாகவும் சொல்லலாகும்.

"உயிர்த்தாது" முதலில் படைத்தலுக்குக் காரணமாக "வாத வாயுவாய்" நின்று நாதவிந்து கூட்டுறவால் கருவுற்பத்தியைச்

செய்கிறது. மனதோடு கூடிய கரணாதிகளும், வாயுக்களும் சேர்ந்து கரு உற்பத்தி ஆரம்பத்தில் உடல் உயிராகப் பிரிக்கும் (தாது வேறு தோபம் வேறாகப் பிரிக்கும்) தன்மையாலும் அப்பால் சப்த தாதுக்களுக்கு வேண்டிய ஊக்க சக்தியையும் கொடுத்து உதவுகிறபடியாலும், வாதவாயுவாய்ப் படைத்து என்கிறார்.

இது "கருவுற்பத்தியையும், வளர்ச்சியையும் கொடுக்கும் தத்துவம்".

2. இரண்டாவதாக, அதே வாதவாயுவினின்றும், பித்த வன்னி உண்டாகிறது. இது தனது உயிரனல் (சீவாக்கினி, உயிராக்கினி) என்ற உஷ்ண சக்தியால் வாதவாயுவால் படைத்த கருவை உருவகப்படுத்தியும் சப்த தாதுக்களுக்கும் போதுமான அளவில் தனது உஷ்ண சக்தியைக் கொடுத்தும், நடுநிலையில் நின்று வாதவாயுவாலும், சிலேத்தும சீதளத்தாலும், உடல் உயிருக்குக் கெடுதி நேரிடா வண்ணம் காப்பாற்றி வருதலாலும், ஆரம்பப் பருவமான வளர்ச்சிபோய் நடுப்பிராயத்தில் மேற்கொண்ட வளர்ச்சியில்லாவிடினும் உடலில் உயிர் நிலைத்து நின்று சப்த தாதுக்களும் சற்றேறக்குறைய ஒரே நிலைமயிலிருந்து வருவதற்கு உதவிபுரிகிறபடியாலும், "பித்த வன்னியாய்க் காத்தும்" என்றார். இந்த பிராயம் "நடு நிலையாய் நின்று காப்பாற்றும் தத்துவம்" எனலாம்.

3. மூன்றாவதாக அதே வாதவாயுவினால் உண்டான பித்த வன்னியினின்றும் "சேத்துமம் சீதளம்" உண்டாகிறது. இது தனது அப்பு சக்தியினால் "வாத வாயுவால்" உற்பத்திசெய்து, தாது வேறு, தேரடம் வேறாகப் பிரித்தும்; பித்த வன்னியால் உருவகப்படுத்திக் காப்பாற்றப்பட்ட கருவுக்கு வாயு, தேயுக்களால் உஷ்ணம் மிகுதிப்படாமல் தனது சீதளத்தால் தணித்தும் (அதாவது துடைத்தும்), இரசதாதுமுதல் சுக்கிலதாது ஈறாக ஒன்றன்பின் ஒன்றாக மாறுதல் அடைவதற்கு உதவி புரிகிறபடியாலும், வயது முதிர முதிர சப்த தாதுக்களும் முதுமைக்குரிய மாறுதல்கள் அடைவதாலும், வாதமும் பித்தமும் அடங்கிச் சேத்துமம் அதிகமாகும்போது மரணத்தை உண்டுபண்ணியும், மக்களின் அந்திய காலத்தில் உடலைவிட்டு

உயிர் பிரிவதற்கு ஐயமிகுதியே காரணமாயிருப்பதாலும்; இதனை "யாத்திரை நாடி" எனக் கூறுவதாலும்; "சேட்ப சீலமாய்த் துடைத்து மென்றர்" எனலாம். இதனை "அந்திய கால்த்து அழித்தல் தத்துவம்" எனவும் கூறலாம்.

எனவே, தேரன் கூறிய பாலின் (விருத்தத்தின்) கருத்துபோல் கூறிய மூன்று பகுதிகளான கருவுற்பத்தி காலம், வாழ்நாள், அப்பால் அந்திய காலம் ஆகிய பிராயகால தத்துவங்களையே குறிக்கும் என்பது தெளிவாகிறது. மேலும்

"பித்தமடங்கினாற் பேசாதே போய்விடு
எத்தியவையாம் எழுந்திடிற் கிட்டாதே
எத்திய வாதமெழும் பின் மருந்துசெய்".

என்பதாலும்;

"பதைக்கின்ற மூவரில் பக்குவம் தப்பியே,
நிகைக்கின்ற வாதமும் பித்தமும் நீங்கிடிற்
சுதைக்கொண்டிருந்தாலும் தோன்றி யுயிர்விடும்,
பிதைக்கொண்ட வாதபித்தம் பெலனாமே.

என்பதாலும்;

சிவனுக்குப் பெலனாயிருப்பது வாதமும், பித்தமுமாகிய இரண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. காப்பாற்றும் சக்தியான பித்தமில்லையேல் பயனில்லை.

வாதம் எழும் பின் மரண தறுவாயில் இருக்கக் கூடியவனானாலும், மருந்துகள் கொடுத்துப் பிரையத்தனம் செய்யலாம் என்பதும் தெரியவருகிறது. இதனினின்றும் உயிர்த் தாதுவினால் ஏற்பட்ட மூன்றுவிதச் சத்துக்களாகிய ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய சக்தி எது என்பதையும் புரிந்து கொள்கிறோம்.

## பொருள்குறிப்பு

சுருங்கக்கூறில், மக்கள் பிறவியில் (1) ஆரம்பகாலம் வரவாயுவால் கருவுற்பத்தியாகி, உடலுமுயிருமாகி, வளர்ச்சிக்குரிய தத்துவம் அல்லது தன்மையைப் பெற்றியிருத்தலால் வாதமாய்ப் படைத்து என்றும்;

2. கரு வளர்ச்சியில் உருவகப்படுத்தியும், சப்த தாதுக்களும் போதிய உஷ்ணத்தை அளித்தும், நடுப்பிராயம் வளர்ச்சியுமின்றிக் குறைவுமின்றிப் பித்தவன்னியால் நிலைத்திருப்பதும், வாயுவாலும் அப்புவாலும் உடல், உயிருக்குக் கெடுதி வரா வண்ணம் காப்பாற்றுவதாலும், பித்தவன்னியால் காத்து என்றும்;

3. அப்பால் வாதவாயுவாலும், பித்தவன்னியாலும் கரு வளர்ச்சியில் ஏற்பட்ட உஷ்ணத்தைத் தணித்தும், அந்திய காலமாகிய இறுதிப் பிராயத்தில் ஐயம், அப்புமிகுதியால் (சிலேத்தும சீதளம் மிகுதியால்) உடல் உயிர் நாளுக்கு நாள் குன்றி மரணம் சம்பவிக்கும் என்பதையும் குறிக்கும் எனலாம். இவை யாவும், உயிர்த்தாதுவின் செயல்களேயாகும் என்பதை அறியவும்.

மேலும், பஞ்சபூதங்களில் வாயு, தேயு, அப்பு பூதங்களே பிரதானமாய் வளி, அழல், ஐயம் என்னும் முக்குற்றங்கள் தொழில் புரிய உதவிசெய்கின்றது என்றாலும், மேற்கண்ட மூன்று பூதங்களினால் சப்த தாதுக்களுக்குத் தீங்கு விளைவிக்கா வண்ணம் மண் பூதம் சப்த தாதுக்களையும் பாதுகாத்து நாளுக்கு நாள் பெருக்கச் செய்கிறது. இதுவும் ஐயத்தின் தொழிலைச் சேர்ந்ததுதான்.

ஐயம் = அப்பு - பிருதிவி

அழல் = தீ (தேயு)

வளி = வளி, ஆகாயம்,

என்பதினால் அறிகிறோம்.

உடல் தாதுக்கள் (சப்த தாதுக்கள் உடற்கட்டு) உண்டாகும் விதம் எங்ஙனம்? அதாவது அன்னரசம் ஏழு உடல் தாதுக்களாக மாறும் விதம் எங்ஙனம்?

உடலானது ஏழு தாதுக்களாலானது. அவை : இரசம், இரத்தம், மாமிசம், கொழுப்பு, எலும்பு, மூளை, சுக்கிலம் என்பவையாம். இவ்வேழு தாதுக்களும் உடற்கு ஏழு வகைக் கருவிகள் போன்றவை. இவைகள் தத்தம் தொழில்களைச் செய்யவும், தீங்குகள் வராவண்ணம் பாதுகாக்கவும், உண்ணும் உணவிடமாகவுள்ள சக்தியினைப் பஞ்சபூதங்கள் கவர்ந்து முதல் நாள் ரச தாதுவை நனைத்து அங்கு ஊறித் தங்கும். இரண்டாம் நாள் உண்ணும் அன்னரசம் இரச தாதுவிலேற, முன் ஊறி நின்ற இரசம், இரத்த தாது, தாதுவிலேறும். இங்ஙனமே, மூன்றாம் நாள் மாமிச தாதுவிலும், நான்காம் நாள் கொழுப்பு தாதுவிலும், ஏழாம் நாள் சுக்கில தாதுவிலும் சென்று ஒவ்வொரு தாதுவிலுமுள்ள ஐம்பூத வக்னியால் தாதுக்களுக்கேற்றவாறு பக்குவப்படுத்தி ஒவ்வொரு தாதுவையும் போஷித்துப் பலப்படுத்தி எட்டாம் நாள் தேகத்திற்குக் குன்றாத வலிமையையும் உண்டாக்கும்.

தேகத்தின் முத்தோடங்கள் அல்லது மூன்றுவிதச் சக்திகள் உண்டாகும் விதம் எங்ஙனம்?

உடற்கட்டுவானது ஏழு தாதுக்களால் ஆக்கப்பட்டது என்பதை அறிந்துகொண்டோம். தேகம் பஞ்சபூதமயம் என்பதையும் தெரிந்துகொண்டோம். கட்டு பெரும்பான்மையும் பிருதிவி என்னும் பூதத்தாலானது. கேவலம் பிருதிவி மந்த குணமும், கனதியும், அசையாத்தன்மையுமுள்ள பதார்த்த மானதால் இதனை இயக்குவதற்கு வேறு மூன்று பூதங்கள் உபயோகிக்கப்படுவனவாம். எங்ஙனமெனில், அப்பு என்னும் பூதமானது உட்கொள்ளும் ஆகாரத்தின் சக்தியிலுள்ள கபத்தை இரையாக்கிக்கொண்டும், சப்த தாதுக்களையும் போஷித்து வருகின்றன. ஆகையால் இம்மூன்று பூதங்களின் குணங்கள்

யாவும், கப - பித்த - வாதத்திற்கு முறையே பொருந்துமாதலால் இவைகளைத் தேகத்தினிடமாக நிகழும் மூன்றுவிதச் சக்திகளாகக் கொள்ளல் வேண்டும். இம்மூன்று சக்திகளை முறையே சுழிமுனை, பிங்கலை சுழுமுனை நாடிகள் நாசித்துவாரங்களின் வழியாகப் பிராணவாயுவை இயங்குவதற்குரிய தொழில் புரியும்பொழுது அபானன், பிராணன், சமானன் என்ற மூனறு வாயுக்களும் மேற்கண்ட மூன்று நாடிகளோடு முறையே கூட்டுறவு ரேசித்ததால் வாத - பித்த - ஐயம் பிறப்பதாகவும் கூறுவர். இதனை ஏற்கனவே மற்றோரிடத்திலும் விளக்கி உள்ளோம்.

ஆகாய பூதமானது மற்றெல்லாப் பூதங்களுக்கும் இடம் கொடுக்கும் தொழிலைப் புரிகிறதென ஏற்கனவே அறிந்திருக்கிறோம்.

வாயு, தேயு, அப்பு பூதங்களால் அளிக்கப்பட்ட ஆகாரச் சத்துக்களின் உதவியால் பிருதிவி பூதம் நாளுக்கு நாள் வளர்ச்சியைப் பெறுகிறது.

மேற்கண்ட மூன்று சக்திகளின் குணாகுணங்களை நமது விரல்களால் அதை என்பின் மேலோடும் நாடி நரம்பு ரத்தக் குழாயின் மேல் சற்று அமூத்தியும் தளர்த்தியும் பரீட்சித்துப் பார்க்கிறோம். பரீட்சிக்கும் விரல்கள் கருவி போன்றவை.

"சிறப்பான புரி மூன்றும் ஒன்றாய்க் கூடி மொழிந்திட்ட வாத-பித்த-சிலேற்பனம் என்று முன்கையில் பூண்டிருக்கும் முறைமையாக" என கூறியிருப்பதால் மூன்று சக்திகளும் புரியைப் போன்று ஒன்றாய்க்கூடி, மேற்கூறிய நாடி, நரம்பு ரத்தக் குழாயின் மேல் ஓடிக்கொண்டிருப்பதை அவற்றின் துடிப்புகளின் மூலம் நமது விரல்கள் ஒன்றுக்கொன்று ஏற்ற வித்தியாசமான மாத்திரையளவில் அறிவிக்கின்றன.

பஞ்சபூதமயமான தேகத்தில் வாதம் வாயுவின் தன்மையையும், பித்தம் தேயுவின் தன்மையையும், கபம் அப்புவின் தன்மையையும் ஒத்திருக்கும் என்று விவரம் ஏற்கனவே கூறியுள்ளோம். பஞ்சபூதங்கள் சரீரத்திற்கு ஆதாரமாயிருக்கின்றன என்பதும் இதன் கருத்தாகும்.

## நோய் என்பதென்ன? உண்டாகும் விதம் எங்ஙனம்?

1. ஏழு உடற்றாதுக்களாலான சரீரத்திற்கு வெளிப்புறம் இருந்து ஒழுங்கீனமான ஆகாரத்தினாலும்; 2. வளி, அழல், ஐயம் என்ற மூன்று சக்திகள் (முக்குற்றங்கள்) மிகுதி, குறைவுகளுக்குக் காரணமான தொழிலைச் செய்தாலும்; 3. சரீரத்திற்கும் அன்னியமான கபம்-பித்தம்-வாதம் போன்ற ஆகாரச் சத்துக்கள் அளவிற்கு மிஞ்சியிருப்பின், அவைகளுடன் தேகத்தினிடத்தே உள்ள மூன்று சக்திகளில் ஒன்று அல்லது இரண்டு அல்லது அனைத்துமோ போராடி, அன்னியமான மிகுதியை வெளிப்படுத்த முயலும். அவை பலவீனப்பட்டிருப்பின் எளிதில் போக்கியும், மிகுந்திருப்பின் சப்த தாதுக்களின் தொழிலை மாறுபடச்செய்தும், அவற்றிற்குரிய தன்மைகள் மிகுந்தும், குறைந்தும் போகும். அப்பொழுது தேகத்தின்கண் உண்டான குணங்களின் காரியமே **"நோய்"** எனப்படும்.

இக்கருத்தினைப்பற்றியே தெய்வப்புலமை திருவள்ளுவனாரும்,

> "மிகினுங்குறையினும் நோய் செய்யும் நூலோர்
> வளிமுதலா வெண்ணிய மூன்று."

என்றருளிச் செய்வராயினர்.

ஆதலால் "நோய்" என்பது ஸ்தூல சூக்கும சரீரங்களாகிய சப்த தாதுக்களும், வளி, தீ, ஐயமாகிய முக்குற்றங்களும் தம் தம் இயற்கைத் தன்மையினின்றும் வேறுபடும்போது நோய் எனப்படும். பிணிக்கப்பட்ட குற்றத்தினளவாக நோயின் பெயரும் அமையும்.

மேலும் கூறியதாவது :

(மேற்கோள்)

"தன்வினையுறவினை தாழினும் மிகினும்,
உடலைப்பிணிக்கு முன்மையிது தாமே."

என்பதனை அறியலாம்.

அகக்காரணம், புறக்காரணங்கள் மிகினும், குறையினும் நோய் சம்பவிக்கும் என்பர். அதாவது உணவுப் பொருள்களை அளவுகடந்து உண்ணல் அல்லது உடற்கு வேண்டிய அளவு கொள்ளாது சிறு உணவு கொள்ளல்; தன் சோம்பிக்கிடத்தல் ஆகிய இவ்விருவகைக் காரணங்களால் வளி, அழல், ஐயம் மூன்றும் தத்தம் நிலையில் மிகுந்தேனும் குறைந்தேனும் (தாழ்ந்தேனும்) பிணிக்கப்படும். அப்பொழுது தேகத்தின்கண் உண்டாகும் குறி குணங்கள் நோய், பிணி, வியாதி, வினை, தாதுதோட வேறுபாடு, அசௌக்கியம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படும்.

மணி, மந்திரம், அவிழ்தம் பற்றிய வேறு கருத்துக்களையும் இங்கு கூறுவோம்.

1. மணி என்பது இரசமணியைக் குறிப்பதல்ல என்றும்; தெய்வப் பிரார்த்தனையைப்பற்றிய விளக்கம் அல்லது எச்சரிக்கை எனவும் கூறுவாரும் உளர். எங்ஙனமெனில், நோய்க்குப் பரிகாரம் செய்யுங்கால் முதலில் "அவிழ்தம்" கொடுக்கவேண்டும். அதில் குணம் இல்லாவிடில் இரண்டாவதாக "மந்திரமும்" கையாள வேண்டும். இவ்விருவகையாலும் நோய் குணமில்லையானால் "இறைவனிடம்" பிரார்த்தித்து, தெய்வ பக்தியாலும், விரதங்களாலும், தேவாலயங்களில் பூரண நம்பிக்கையுடன் காத்திருந்தும், தெய்வ பிரீதியாகச் செபம், ஹோமம், அர்ச்சனை முதலிய "தெய்வ வழிபாடுகளை"ச் செய்தும் நோய்களைப் போக்கிக் கொள்ளுவதை நாம் கண்கூடாகத் தென்னாட்டில் பார்க்கிறதுமல்லாமல், பெரியோர்கள் காட்டிய வழிபாடுகளைப் பற்றியதே அல்லாமல் "இரசமணியை"க் குறிப்பதல்ல என்பதே பெரியோர்களின் கருத்தாகும். "இரசமணி" என்பது

அவிழ்தங்களில் ஒன்றேயொழிய வேறல்ல என்பதும் அவர்களின் அபிப்பிராயமாகும். "அவிழ்தம்", "மந்திரம்" இவ்விரண்டு சக்திகளுக்கு மேலானது "தெய்வமணி" "தெய்வப் பிரார்த்தனை", "தெய்வத்தின் கருணாகடாட்சம்" என்பதே யொழிய மற்றொன்றில்லை என்பதும் பெரியோர்களின் திடமான நம்பிக்கையாகும்.

இதனை,

> "பூர்வஜன்மக்ருதம்பாபம் வியாதிரூபேண பீடிதம் ।
> தத்சாந்த்யை ஔஷதைர்தானைர் ஜபஹோமார்ச்சனை: ॥"

என்பதினாலும்,

> "கற்றகுருவாக்குங் காதலித்த வாகடமும்
> பற்றுக்கோலென்றே பரிகாரம் - முற்ற
> அவன் பொறுப்பல்லா லொன்று மாவதில்லையென்றே"

என்பதினாலும், பிணி நீக்கம் அடைவதில் கடவுளின் கருணை எவ்வளவு இன்றியமையாதது என்பதை நமக்கு அறிவித்துள்ளார்கள்.

2. மந்திரம் என்பது சில அட்சரங்களால் பகவானை ஸ்தோத்திரம் செய்தல் எனவும்; அவ்வாறு பகவானை மனம், வாக்கு, காயங்களினால் மந்திரங்களைச் செபித்துப் பீரீதி செய்தால் பிணி விலகும் எனவும் அபிப்பிராயப்படுவர்கள் உண்டு. பிரணவ மந்திரம், திருமண மந்திரம், த்வயம், சரம ச்லோகம், பஞ்சாட்சரம் ஆகிய இவற்றால் கடவுளைப் பிரிதீ செய்வித்தல், சில அட்சரங்களை உருப்போட்டு அப்பியாசித்து, ஜபம் செய்வதின் மூலம் பாம்புக்கடி, தேள் கொட்டு, நாய்கடி, எலிக்கடி வேறு பல கொடிய விஷ ஜெந்துக்கள் துன்பம் விளைவிக்காதபடி தடுத்தல், அட்டமாசித்து, பேய், பிசாசு, பில்லி, சூனியம் இவை போன்ற வினைகளுக்குரிய மந்திர ஜபங்களால் அவ்வவற்றிற்குரிய துன்பம் நீங்குவதையும்

நாள்தோறும் தமிழ்நாட்டிலும், கேரள நாட்டிலும் நடைபெறுவதைப் பார்க்கிறோம். நிற்க, விபூதியைக் கொண்டும், தண்ணீர், வேப்பிலை இவற்றினைக் கொண்டும், பெரியோர்கள் அல்லது அதில் வல்லோர்கள் பார்வை ஏற்பட்ட மாத்திரத்தில் சில மந்திர அட்சரங்களை உச்சரித்துப் புரோட்சிப்பதின் மூலம் நோய்கள் நீங்குவதும் இயற்கையாயிருக்கின்றன. ஆதலால் மந்திரம் என்பது இத்தியாதி செயல்களைக் குறிப்பதாகும் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

3. "அவிழ்தம்" என்பது தாது தாவர, சங்கமப் பொருள்களால் தயாரிக்கப்படும் மருந்துகளேயாகும். இவற்றுள் "இரசமணியும்" ஒன்றாகும். இரசமணியை முப்புவின் உதவியைக்கொண்டு செய்துமுடிப்பது சாலச்சிறந்தது. முப்புவைக் கொண்டு சீனச் சரக்கறுபத்தினாலும் சுண்ணமாகும். செந்தூரம், செயநீர், திராவகம், பாணத்தினால் குடோரி கட்டு, களங்கு முதலிய யாவும் முப்புவின் உதவியால் தயாரிக்கக் கூடியதோடு சரக்கு அநீதங்களும் நீறிப்போம் என்பதில் ஐயமில்லை. ஆதலால் "அவிழ்தங்களில்" ஒன்றுதான் "இரசமணி" என்பது கருதவேண்டும். ஆரம்பத்தில் மணி, மந்திரம், அவிழ்தம் எனக்கூறியதிலுள்ள "***மணி***" தெய்வ மணியையே குறிக்கும் என்பதை அறிவித்துள்ளார்கள்.

## *நாடி நடையின் இலக்கம் (நாடி நடை உண்டாகும் விதம்)*

தேகத்தினிடத்தேயுள்ள எல்லா உறுப்புகளில் சிறந்தது இருதயம். இதன்மூலமாகத்தான் தாதுக்கள் யாவும் போஷிக்கப் படுகின்றன. இதுவே தேகம் நன்னிலையில் இருப்பதற்கும், சுகம் இல்லாமைக்கும் காரணம். இதன் தொழில் வேறுபாடுகளை நாடிகள் உணர்த்தும், சப்த தாதுக்களுக்கும், இருதயம், நாடி, நரம்பு, ரத்தக் குழாய்களுக்கும் விரிந்து சுருங்கும் தன்மை உண்டு. இந்தச் செய்தியைத்தான் நாடி நடை எனக்கூறுவர்.

நாடி நடையின் குணங்கள் யாவும் இருதயத்தின் நடைக்கு ஒத்திருக்கும். எவ்வாறெனில் :

இருதயத்தினுடைய நடையின் (துடிப்பு) பேதாபேதங்களை நாடிகள் மூலம் நமக்கு அறிவிக்கின்றது. இருதயத்தினுடைய நடை தேக ஸ்திதிக்கு ஒத்திருக்கும். தேகத்தில் நோய் கண்டால் இருதயத்தின் சுபாவமான நடை இழந்துபோம். தேகத்திலிருக்கும் நோயை இருதயம் தெரிந்துகொண்டு நாடிகள் மூலமாக நமக்கு அறிவிக்கின்றது

ஆகையால் நாடி நடையின் பேதாபேதங்கள் யாவும் நன்றாகத் தெரியாவிட்டால் தேகத்திலிருக்கும் வியாதியின் கூறு செவ்வையாகத் தோன்றாதாம்.

## நாடி நடையைப் பரீட்சிக்கக்கூடிய இடங்களாவன :

மானிடர்க்கு ஏற்பட்ட எழுபத்தீராயிரம் நாடி நரம்பு ரத்தக் குழாய்களிலும் நாடி நடைபெறும். நாடியைக் கணிப்பதற்குப் பத்து ஸ்தானங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக கைகளிலும், கன்னச் சுழிகளிலும், மர்மஸ்தானங்களிலும், கணுக்கால்களில் உட்புறத்திலும், கால் பெருவிரலின் மேல்பாகத்திலும் நாடி நடையைப் பரீட்சிக்கலாம் எனவும்; அவற்றுள் முக்கியமாகக் கை நாடியே சிறந்தது எனப் பிரமமுனி கூறியுள்ளார்.

திருமூலர் வாக்கின் பிரகாரம் குதிங்காலினுட் புறம், மர்மஸ்தானம் (காமியம்); உந்தி, மார்பு, தாது, மூக்கு, கண்டம் (கழுத்து), கரம், புருவம், உச்சி முதலிய பத்து இடங்களில் நாடியைப் பரீட்சிக்கலாம் எனவும் கூறப்பட்டிருக்கின்றன. அன்றியும், எல்லாச் சித்தர்களும், கை நாடிப் பரீட்சையையே பிணிகளைக் கணிப்பதற்குச் சிறந்தது எனக் கூறியுள்ளார்.

(மேற்கோள்)

1. "கூர்ந்திடவே கன்னமது சுழியிற்றானும்
குறிப்பான கைகளிலும் மர்ம ஸ்தானந்தன்னில்
சார்ந்திடவே கணுக்காலினுட் புறத்தில்
சார்வாகப் பெருவிரற்கால் மேலதாகத்

தேர்ந்திடவே நாடிதனையும் பயோகிக்கத்
தெளிவாக மாந்தருக்குச் செப்பலாச்சு
பேர்ந்திடவே சகலருங்கார தினாடி
பேசினார் பிரமமுனி பேசினாரே."

என்பதினாலும்;

2. "தாதுமுளைறகள் தனித் தகுதிச் சந்தோடு
ஓதுறகாமியமுந்தி நெடுமார்பு
காது நெடுமூக்குக் கண்டம் கரம்புருவம்
போதுறுமுச்சிபுகழ் பத்தும் பார்த்திடே."

என்ற திருமூலர் நாடி நூல் பிரகாரமும் அறிகிறோம். நாடி பார்ப்பதற்குக் கரத்தின் நாடி சிறந்தது எனல்.

(மேற்கோள்)

1. "பேர்ந்திடவே சகலருக்குங் கரத்தினாடி
பேசினர் பிரமமுனி பேசினாரே." (வெண்பா)

என்பதினாலும்,

2. "அறியவுந்தி வாதமடு பித்தந்தானும்
அறியநடுமார்பில் வன்மை குறிக்குமே
ஐயமுயருச் நிலையாங்குணரப்
பையக் கரம்பற்றிப்பார்.
(கண்ணுசாமியம்)

என்பதினாலும்,

கரத்தின் நாடியே சிறந்தது எனவும், எளிதில் பார்த்தறியக் கூடியது எனவும் அறிகிறோம். எங்ஙனமெனில், கையில் ஆரை என்பின் மேலோடும் நாடி நரம்பு ரத்தக் குழாயானது மணிக்கட்டு பரியந்தம் சிறுத்து மேல் பறமாகவும், துலக்கமாகவும்

இருப்பதால் மூன்று விரல்களால் வளி, அழல், ஐயமாகிய நாடி நடையை எளிதில் அறியலாம். மற்ற இடங்களில் ரத்தக் குழாய்கள் இதைப்போல் அல்லாது பருத்திப்பதால் எளிதில் நாடி நடை அறியக்கூடா.

### வாத-பித்த-ஐய தோடங்களில் நிலை

(வைத்தியசார சங்கிரகம்)

"செப்பு முந்தி சிதையும் வாதநிலை
ஒப்பு மார்பு முதையும் பித்தநிலை
கப்புமுச்சி கழறுமைய நிலை
மெய்ப்பு மாமுனி மீண்டுமுரைத்ததே."

என்பதால், அபானன் முதல் உந்திவரை வாதநிலை; உந்தியின் மேல் மார்பு வரை பித்தநிலை; மார்பு முதல் உச்சி வரை ஐயநிலை என அறியவும். மேலே கூறிய வெண்பாவிலும் இது பற்றிய விவரம் அறியலாம்.

### வளி-அழல்-ஐய தோடங்கள் அடங்குமிடம்

"அறிந்திடும் வாதமடங்குலத்தினில்
பிறிந்திடும் பித்தம் பேராஞ்சலத்தினில்
மறிந்திடுமையம் வசிக்கும் விந்துவில்
உறைந்திடும் மூன்றுக்குற வாநந்தலமிதே."

என்பதனால், வாதம் மலத்திலும், பித்தம் சிறுநீரிலும், ஐயம் விந்துவிலும் அடங்கும் என அறிகிறோம்.

### வாத - பித்த - ஐயம் உடல் நிறம்

1. வாத நோயாளர்க்கு உடக் கறுப்பாயிருக்கும்.

2. பித்த நோயாளர்க்கு உடல் பசு மஞ்சளாகவும், சிவப்பாகவும் இருக்கும்.

3. ஐய நோயாளர்க்கு உடல் வெண்மையாக இருக்கும்.

4. ஐய நோயாளர்க்கு உடல் நிறம் கலப்புற்ற குற்றங்கள் அளவாகக் கலந்திருக்கும்.

5. சந்தி நோயாளர்க்கு உடல் பல நிறமாக இருக்கும்.

(வெண்பா - மேற்கோள்)

"உறைத்த கறுப்பன் வாதரோகி பித்தரோகி
அரைத்த மஞ்சளைக் குளித்தோனானவன் - இரத்தம்
குளித்தவனுமாவான் கொடுஞ்சேத்துமரோகி
வெளுத்திடுவான் தொந்தமெல்லாமே."

என்பதினாலும், முக்குற்ற உடல் நிறமறிகிறோம்.

## மரணக்குறியைக் காட்டும் உடல் நிறம்

1. சூரியனைப்போல் நற்சிவப்பும், மினுமினுப்புங் காணின் இரண்டு மாதத்திலும்;

2. சந்திரனைப்போன்று சிறு செந்நிற வெண்ணிறமும், மினுமினுப்பும் சேர்ந்து காணின் மூன்று மாதத்திலும்;

3. செவ்வாயைப்போல் (அங்காரத்தின்) செந்நெருப்பு வர்ணமும் மினுமினுப்பும் காணின் நான்கு மாதத்திலும்;

4. வியாழனைப் போல பொன்னிறம் என்றும், மஞ்சள் நிறமும் மினுமினுப்புமிருக்குமாகில் ஐந்து மாதத்திலும்;

5. சுக்கிரனைப்போல் வெண்ணிறமும், மினுமினுப்பும் காணின் ஆறு மாதத்திலும்;

6. சனியைப்போல கருப்பு நிறமும் மினுமினுப்பும் காணில் ஏழு மாதத்திலும்;

7. உமையவள் நிறம் போலக் கரும்பச்சையும், மினுமினுப்புங்காணின் எட்டு மாதத்திலும் மரணம் சம்பவிக்கும் எனவும்;

8. மேற்கூறிய நிறங்கள் தோன்றாமல் வேறு மினுமினுப்பு மாத்திரம் நேருமாகில் மருந்து பயன்படாது எனவும்; அக்கணத்திலே தானே மரணத்தைக்கொடுக்கும் எனத் தேரன் நூல் கூறுகின்றது.

(வெண்பா - மேற்கோள்)

“என்றுமதி செவ்வாய் இரணியன் சுங்கன்காரி,
என்றுமதி செவ்வாய் இவையொடுமை என்றுமதி
அஞ்சுமாதக் கணமேல் ஆறுதிங்களாமினுக்கே
அஞ்சுமாதக் கணமேயாம்.

என்பதினால், உடல் நிறத்தைக் கொண்டு, மரணக் குறியை அறியக்கூடும்.

## மூவகை நாடிகளை ஆராய்ந்து அறியும் விதம் எங்ஙனமெனில்

வைத்தியன், ரோகியின் வலது முழங்கையைத் தனது இடது கையால் முதலில் செவ்வையாகப் பிடித்துத் தனது வலது கையால் ரோகியின் வலது உள்ளங்கையைக் கோர்த்துப் பிடித்து நெட்டை வாங்கி அனல் பறக்கத் தேய்த்து, அப்பால் வைத்தியனின் இடதுகை விரல்களால் ரோகியின் பெருவிரல் பக்கமாக ஆரை என்பின் மேலோடும் நாடி நரம்பு ரத்தக் குழாயின் மேல் மணிக்கட்டுக்கு ஒரு அங்குலம் தள்ளி மேலாக மூன்று விரல்களால் சமமாக மெல்லென அழுத்தியும், தளர்த்தியும் ஆராய்ந்த பின்பு விரல்களை மாறி மாறிக் கூர்ந்து கவனித்து நாடியின் கதியை ஆராய்ந்து பார்த்து நோயின் தன்மையை அறிதல் வேண்டும்.

இதேவிதமாக ரோகியின் இடதுகை நாடியை ஆராயும்போது வைத்தியன் தனது கைகளை மாற்றி

உபயோகித்தல் வேண்டும். இடதுகைக்கு வைத்தியனின் வலது கையை உபயோகித்து நாடியை ஆராய்தல் உத்தமம்.

மூவிரல்களால் நாடி நடையை ஆராயும்போது ஆட்காட்டி விரலில் உணர்ந்தது வாதம் எனவும்; நடுவிரலிலுணர்ந்தது பித்தம் எனவும்; பௌத்திர விரலிலுணர்ந்தது ஐயம் எனவும் அறிக.

இவற்றுள் வாதம் அதிகமானால், அதற்குரிய நோய்களையும், பித்தம் அதிகமானால் அதற்குரிய பிணிகளையும் ஐயம் அதிகமானால் அதற்குரிய பிணிகளையும் உண்டாக்கும். அன்றியும், பெருவிரலும் சிறுவிரலும் உணர்த்தும் நாடியானது பூதநாடியாகக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இதனையும் சேர்த்து நாடிகள் ஐந்து எனவும், அவை "பஞ்சநாடி" அல்லது "பஞ்சபூதநாடி" எனவும் வழங்குவர்.

நாடி நடையைச் சின்னாட் பழக்கத்தில் யாவராலும் அறியக் கூடும். சிரத்தையுடன் கவனித்து அப்பியாசித்தால் சுலபமாக நாடிகளைப் பற்றிய முக்கியமான குறிப்புகளை அறியலாம். இதனைத் தமிழ்நாடெங்கும் வைத்தியர்கள் நன்கு உணர்வார்கள். "நோய் நாடல் நோய் முதனாடல்" பிரகாரம் நாடியின் ஆராய்ச்சியையே பிரதானமாகவும் கருதுவார்கள்.

(மேற்கோள் - வைத்திய சாரசங்கிரகம்)

1. "பார்க்கவே கைபிடித்து நாடிதன்னைப்
பகர்ந்திடவே நெட்டையது வாங்கிப்பின்னுஞ்
சேர்க்கவே மணிக்கட்டு மேலதாகச்
சிறப்புடனே நாடிதன்னை விரலாற்காண
தீர்க்கவேயழுத்திப்பின் தளர்த்தியேதான்
திறமுறடனே விரல்களையுமாறி மாறி
ஆர்க்கவே நாடிதனைப் பார்ப்பாயானால்
அப்பனே நாடி நடை தெரியும்தானே."

என்பதினாலும்

2 "கரிமுகனடியை வாழ்த்திக் கைதனில் நாடிப்பார்க்கில்
பெருவிரலங்குலத்தில் பிடித்தடி நடுவே தொட்டால்

ஒருவிரலோடில் வாதமுயர் நடுவிரலிற்பித்தம்
திருவிரல் மூன்றிலோடில் சேத்தும நாடிதானே."

என்பதினாலும்;

3. "குறியாய் வலக்கரங்குவிந்த பெருவிரல்,
வறியாவதன் கீழ்வைத்திடு மூவிரல்,
பிறிவாய் மேலேறிப் பெலத்துவா தமாம்
அறிவாய் நடுவிரலமார்ந்தது பித்தமே."

4. "பித்தத்தின் கீழே புரண்டதையமாம்
உற்றுப்பார்க்கிலோர் நரம்பேயோடிடும்
பத்தித்த மூவரும் பாய்கின்ற வேகத்தால்
மத்தித்த நாளம்போல் வழங்கும் நரம்பிதே."

என்பதினாலும்;

5. "ஆர்க்குமே தோன்றுமிந்தநாடி மூன்றும்,
அனுதினமும் நல்லறிவாலறிந்து தேறே."

என்பதினாலும்;

6. "பார்க்காட்டாற் றெறியாது பழக்கமாகப்
பார்த்தறிந்தோர் கனையடுத்துப் பரிவாய்க்கேளு."

என்பதினாலும் அறியலாம்.

## பஞ்சநாடிகள்

7. சாற்றுவேன் பெருவிரலிற் பூதநாடி
சங்கையில்லா ஆள்தூண்டி வாதமென
ஏற்றமுள்ள நடுவிரல்தான் பித்தமாகும்
இசைந்ததொரு பவுத்திரமேயையமாகுந்
தோற்றுகின்ற சிறுவிரல்தான் பூதநாடி
சுற்றுமுள்ளகுரு நாடியைத்துட் சேரும்

(ப. சி. நாடிநூல்)

என்பதினாலும் அறியலாம்.

நாடி நடையை ஆராயும் கிரமமும், முக்குற்றங்களையும், பஞ்ச நாடிகளையும் குறிக்கும் விரல்களையும், நாடி என்பது ஒரே நாடி நரம்பு ரத்தக்குழாயின்மேல் விரல்களள் அழுத்தியும், தளர்த்தியும் பார்க்கும்பொழுது ஏற்படும் துடிப்பு என்பதைக் குறிக்குமேயொழிய வேறல்ல எனவும், நாடியானது நாளம் போன்றது என்றும் அறிகிறோம். பலமுறை பழகினால், சுலபமாய்க் கற்றுக்கொள்ளலாம் எனவும், பழக்கமாகப் பார்த்து வராவிடில் நாடி நடை புலப்படாது எனவும், அதனை நன்றாய்ப் பழகித் தேர்ச்சியடைந்த அறிவாளிகளை அடுத்துக் கற்றுக் கொள்ளல் மிகவும் அவசியம் என்பதையும் வற்புறுத்தி உள்ளார்கள்.

## ஆண் - பெண் இவர்களுக்கு முறையே வலது - இடதுகை நாடியைப் பார்ப்பது நல்லது.

1. "கேளப்பா புருடருக்கு வலதுகையைக்
கிருபையுடன்தான் பிடித்து நெட்டைவாங்கி
சூளப்பா பெருவிரலோ ரங்குலத்துக்கப்பாற்
சுகமாக மூவிரலாலழுத்திப்பார்க்க
வாளப்பா முதல் விரலே வாதநாடி
வன்மையுடன் நடுவிரலே பித்தநாடி
கேளப்பா அணிவிரலே சேத்துமநாடி
திறமாக நின்னறிவாற் றெளிந்துகாணே."

என்பதினாலும்.

2. "பார்க்கவே பெண்டுகளுக்கிடதுப்பக்கம்"
(பரிபூரண நாடி)

என்பதினாலும்;

3. "கன்னியர்க்கிடப்புறமாம் கணவர்க்கங்கே
அமைகின்ற வலப்புறமாம்."

என்பதினாலும்,

4. "மருவிடு நோயினாடி மதித்திடில்
வலக்கை மைந்தர்க்கு
அரிவையர்க் கிடக்கைதன்னில்
அழுத்தியே சுட்டிக்காட்டும்
விரலதில் வாதமாகுமிகு நடு
விரலிற் பித்தம்
தருமணி விரலில் ஐயந்தாணி
யல் பறிந்து ளாரே."

*(குணவாகடி நாடி)*

என்பதினாலும்,

5. "நானெனும் புருடர்க்கெல்லாம்
நாடிதான் வலக்கையாகும்
தேனெனும் மடவார்க்கெல்லாந்
திடம்பெற விடக்கை சித்தே."

*(வை. சா. சங்கிரகம்)*

என்பதினாலும்,

6. "செப்பவான் மக்களுக்குச்
சேர வலக்கையாகும்
ஒப்பவரிவையர்க்கோதவிடம்

*(கண்ணுசாமியம்)*

என்பதினாலும் அறிக.

(இதன் பொருள்)

எல்லோருக்கும் வலது - இடது கைகளில் நாடியை ஆராயலாம். எனினும், புருடருக்கு வலது கையிலும், பெண்களுக்கு இடது கையிலும், பேடியாக இருந்தால் அவனது குறியை அனுசரித்து வலது அல்லது இடது கை நாடிகளை ஆராய்வது சாத்திரக்கிரமம் என்பர்.

## புருடக்கு வலது கரமும், பெண்களுக்கு இடது கரமும் நாடியை ஆராய்வது ஏன் ?

1. ஏனெனில், நாபிக் கூர்மமானது பெண்களுக்கு மேல் தோன்றியும், ஆண்களுக்குக் கீழ்நோக்கியும் இருக்கிறபடியால் ஆண் - பெண்களுக்குக் கைநாடி வித்தியாசமாக இருக்கும் என நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

*(பக்கம் 41 - மூன்றாம் பாகம் - அனுபோக வயித்திய பிரம்ம ரகசியம்)*

ஆனது பற்றியே ஆண் - பெண்களுக்கு முறையே வலது - இடது கை நாடிகளையே முக்கியமாக ஆராய்தல் வேண்டும் என்ற நியதி ஏற்பட்டிருக்கிறது போலும்.

2. "மேலும், பிண்டோற்பத்தியில் கூறியபடி
வேனென்ற பத்துமொன்றாய் மனதுங்கூடி
மேவியவன் கலந்துவந்து விழுகும்போது
மானென்ற மௌன பரவசமேயாவான்
மருவுகின்ற பெண்ணுக்கு முறைதான்கேளே."

என்பதினாலும்,

"முறையான பெண்ணாணும் மௌனமுற்றால்
மோசமில்லை கருவங்கே தரிக்கும்பாரு
நிறையான வலத்தோடில் ஆணேயாகும்
நேராகவிடத் தோடில் பெண்ணேயாகும்
உறையான கருப்பையில் சுக்கிலமாய்ப்பாய்
உத்தமனே சுரோணிதந்தா நுரைந்துகொள்ளும்."

என்பதினாலும் அறிக.

ஞானேந்திரியம், கன்மேந்திரியம், மனசு ஆகிய பதினொன்றும், ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றுபட்டு, பிராணவாயு வலத்தோடில் (வலது நாசியிலோடில்) ஆண்

எனவும், இடத்தோடில் (இடது நாசியிலோடில்) பெண் எனவும் கரு உற்பத்தியாகும் என்றும், மத்திய கலையாகிய சுழிமுனை இயங்குமாகில் அலியாக அமையும் என்றும், அதற்கேற்றாற் போல் ஆண் - பெண்களது உருவ அமைப்புகளில் வித்தியாசம் ஏற்படுவது இயற்கையாகும். ஆனதுபற்றியே வலது - இடது பாரிசமும் நாடி நடையும் வித்தியாசப்பட்டிருக்கும் என அனுமானிக்கப் பொருத்தமுண்டு.

நாடி நடையை சீவ ஜந்துக்களின் நடைக்கு ஒப்பிடப்பட்டு அதனைக் குறியடையாளநாடி எனக்கூறுவர். இதன் தாற்பரியம் என்ன ?

*உதாரணமாக :*

*1.* "வாகினிலன்னங்கோழி மயிலென நடக்கும் வாதம்
ஏகிய வாமையட்டை யிவையென நடக்கும் பித்தம்
போகிய தவளைபாம்பு போலவாம் சேத்துமத்தான்
ஆகிய நாடிமூன்றும் மாந்திடிற் சன்னியாமே.

*2.* "ஆகியவாதநாடி யன்னம்போற் குயிலைப்போலும்
ஏகியபித்த நாடி யன்னம்போற் குயிலைப்போலும்
போகிய சிலேஷ்மம் நாடிபொல்லாத தவளைபாம்புபோலும்
பாகுடன் முனிவர் தாமும்பாடினார் நாடிதானே.

## புருடருக்கு நாடி நடை கூறுமிடத்து :

*3.* வந்திடும் வாதநாடி மயில்போலுமன்னம்போலும்
தெத்தமாங் கோழிபோலுந் தொகுப்புடன் பித்தநாடி
முந்தியவாமை போலு முனைப்புடன் யட்டைபோலும்
பிந்திய சிலேத்தும நாடிபே சொணா தவளைபாம்பே.

## பெண்களுக்கு நாடி நடை கூறுமிடத்து :

*4.* "பாம்பனெ வாதநாடி பகுப்புடன் சர்ப்பம்போலாம்
வேம்பென பித்தந்தானும் விருப்புமண்டூகம் போலும்
சாம்பென சிலேத்தும நாடி சடுதியிலன்னம்
நரம்பெனப் பெண்களுக்கு நாடிதான் நடக்குந்தானே."

5. இல்லையேவாதமெழினடை கோழியாம்
எல்லையே பித்தம் எழும்புந் தவளைபோல்
ஒல்லையே வையமூர்ந்திடும் பாம்புபோல்
அல்லையே கண்டறிந்தவர் சித்தரே.

என்பதினாலும் நாம் தெரிந்துகொள்வது யாதெனில், மூவகை நாடி நடையின் மாத்திரையளவைக் கணிக்க சித்தர்கள் தங்களது நூல்களில் நாடி நடையின் கால அளவுக்கு உபமானமாகக் கூறினாராயினும், ஒருவர் கூறிய பிரகாரம் மற்றவர்கள் சில இடங்களில் கூறவில்லை. காரணம் யாதெனில், அவரவர்கட்கு உள்ளத்தில் உதித்தவாறு ஒரு நாடிக்கு ஒரு ஜந்துவையே அளவாகக் கொண்டதாகத் தோணவில்லை. ஆயினும், அச்சீவராசிகளின் நடையை ஒன்றாகவே பாவிக்கவேண்டும். ஏனெனில், நூல்களை ஆராயுங்கால், வாதத்தின் நடையை மயில், அன்னம், கோழி, ஓணான், குயில், கொக்கு, முதலியவற்றின் நடைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது.

பெரும்பான்மையாக இவைகள் யாவும் நிதானித்து மனிதரைப்போல் அடிவைத்து நடக்கக்கூடியவை. அவைகள் கால்களைச் சுபாவமாக உயர்த்தி மறுபடியும் கீழே வைக்கும் கால அளவை ஒரு மாத்திரைக்குரிய அளவாகக் கருதவேண்டும்.

பித்தத்தின் நடை ஆமை, அட்டை ஆகியவற்றின் நடைக்கு உபமானமாகக் கூறப்பட்டிருக்கிறது. இவைகள் நகர்ந்து செல்லக் கூடியவையாதலால் ஒன்றுக்கொன்று பொருத்தமாகும். இதற்கு மாத்திரையளவு அரை எனக்கூறியுள்ளார்.

சிலேத்துமத்தைக் கூறியவிடங்களில் தவளை, பாம்பு இவற்றை உபமானமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவைகள் முறையே குதித்தல், சீறல் என்னும் செய்கையுடையனவாதலால் பொருத்தமாகும். இதற்கு மாத்திரையளவு கூறின் காலாகும்.

சீவ ஜந்துக்களின் நடையின் உபமானம் ஆண் - பெண் இருவருக்கும் சற்று வித்தியாசமாக இருப்பதைக் குருநாடி நூலில் கூறிய பிரகாரம் மேற்கண்ட செய்யுட்களால் அறியலாயிற்று.

## *(சிகிச்சா ரத்ன தீபம் வைசாரசங்கிரகம்)*
## *நாடி ஆராய்ச்சியில் முக்கிய கவனிப்பு*

முத்தோடங்களில் நடையை ஒழுங்காகக் கற்றுணர்தல் அவசியம். காலம், நேசம், வயது, வன்மை முதலியவற்றை ஞாபகம் வைத்துக்கொண்டு ஒரு முறைக்கு இருமுறை வெவ்வேறு காலங்களின் நாடி நடையில் தன்மையைச் சிரத்தையுடன் பகுத்துணர்தல் வேண்டும். நாடி நடையைப் பழகுவோன் அறிவைச் சிதறவிடாமல், மனதை ஓர்மையுடன் திடப்படுத்திக் கூர்ந்து கவனிப்பதுமன்றி தேசம், காலம், வயது, வன்மை இவற்றிற்குத் தக்கபடி முக்குற்றங்களின் வன்மை மென்மைகளையும் தன் நடை, புற நடை, கிளைத்தல், கதித்தல், குதித்தல்,

4. "பார்மனக் கவலையற்றுப் பலபல விசாரம் விட்டுத்
தேர்மனந் தெளிந்து நீயுஞ் செய்குணம் வழியிதென்று
ஊரகமுந்தி தன்னில் ஒளிபல வியாதி செய்யும்
தீபன வுண்டியாலே சேர்ந்திடும் நோய்கள் தானே."

5. "சொல்லிய வுந்திதன்னில் சுழித்ததோ ரெழுத்தைப்பற்றி
எல்லையி லெழுந்த நாடி எழுபத் தீராயிரத்தில்
நல்லதோர் நாடி மூன்று நடக்கு நீயறிந்து பாரே."

என்பதினாலும்,

நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில், நாடி நூல்களில் முன்னோர்கள் கூறிய நற்குறி குணங்களாலும், விழி, நாடி, நிறம், மொழி, மெய், மலம், நீர் ஆகிய இவற்றைப் பரிசோதனை செய்வதாலும், தேகத்தில் ஏற்பட்டிருக்கும் சகல உபாதைகளையும் ஆராய்ந்ததும், முகம், நா, மூக்கு, செவி,

புருவம், கண், நாபி, மார்பு ஆகிய இவற்றின் நாடிக் குறிப்புகளையும், மரண நாடி கைவிடுங்குறி முதலிய அசாத்தியக் குறி குணங்களையும் நன்கு ஆராய்ந்து, தெரிந்து அதன்பின் நோய் இன்னதென்பதை முடிவு கட்டுவது சாலச்சிறந்ததாகும். எனவும்,

மேலும், பண்டிதன் மனக்கவலையற்று, விசாரமற்றுத் தெளிந்த மனதோடு எல்லாவிதப் பரீட்சைகளையும் (தேர்வுகள்) செய்துபார்த்து, நோய் இன்னதென்றும், அதற்குரிய பரிகாரம் இன்னதென்றும் முடிவு செய்தல் முக்கியம் எனவும்;

தீபன உண்டியாலே நோய்களுண்டாவதைப் பிரதானமாக வளி, அழல், ஐயம் என்னும் நாடிகளின் கணிப்பால் நோய்களை அறிதல் நன்மை பயக்கும் எனவும் அறியலாயிற்று.

*நாடி*

## எண்வகைத் தேர்வுகளின் நாடியின் கணிப்பைப் பிரதானமாகக் கூறுவதேன்

ஏனெனில்,

1. நாடியை எண்வகைத் தேர்வுகளில் சேர்த்துக் கூறிய நூல்களில் இருப்பதுபோல் எண்வகைத் தேர்வுகளில் நாடியைச் சேர்க்காமல் சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், மலம், நீர், எச்சில் என்பதான எண்வகைத் தேர்வுகளாகவும் அமைத்துக்கொண்டு, நாடியைத் தனிச் சிறப்பாகவும், முதன்மையாகவும், விவரமாகவும் விரித்துக்கூறும் பொருட்டுத் தனிப்பெரும் நாடி நூலாகச் சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

2. பிணிகளைக் கணிப்பதற்கு எண்வகைத் தேர்வுகளும் நாடியுள்பட அவசியமே. நாடியே பிரதானம் என்பதாக நூல்கள் கூறவில்லை. பல இடங்களில் நாடி நடையை அறியலாம். எனிலும் கரத்தின் நாடி விசேடம் என்பதுதான் நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும், நாடியைப் பற்றிய தனி நூல்களில் சித்தர்கள் இயற்றியிருக்கிற காரணத்தினாலும், மற்றும்

கீழ்க்கண்ட விவரங்களைக்கொண்டும், அனுபவத்தைக் கொண்டும் எண்வகைத் தேர்வுகளில் நாடியைப் பிரதானமாக வைத்து நோய்களைக் கணித்தல் சிறந்தமுறை எனக் கொள்ளல் அவசியமாகும்.

3. நாடி கணிப்பில் தேர்ச்சிபெற்ற மருத்துவன் பிணியாளன் அல்லது சுற்றத்தாரின் உதவியின்றிப் பிணியாளனின் நாடியைக் கொண்டே பிணியை ஒருவாறு அறியலாம். எங்ஙனமெனில், ஞாபகமற்ற நிலையிலோ, ஊமையும் செவிடுமாயுள்ள பிணியாளரின் நிலைமை அறிவதற்கு நாடிக்கணிப்பு பெரிதும் பயன்படும்.

வாதாதி முத்தோடங்களின் குணாகுணங்களை நமது விரல்களால் நாடி நரம்பு ரத்தக்குழாயின்மேல் வைத்து அழுத்தியும், தளர்த்தியும் பார்க்கும்பொழுது நாடியின் துடிப்பின் மூலம் அறிகிறோம். கணிக்கும் விரல்கள் கருவிபோன்றவை. செவிக்குழாய் உதவியைக்கொண்டு இருதயத்தின் நிலைமையை அறிவதுபோல நாம் நம் கைவிரல்களைக் கொண்டு நாடி நடையை (முக்குற்றங்களின் நிலைமையை) அறிகிறோம்.

4. வாத, பித்த, ஐயம் என்னும் இவற்றைக் குறிக்கும் நாடி நரம்பு ரத்தக்குழாய்கள் யாவும் இருதயத்தின் தொடர்பு. இருதயத்தின் தொழில் வேறுபாடுகளை நாடியின் மூலம் நாம் அறிகிறோம். இருதயத்தின் நடை தேகஸ்திதிக்கு ஒத்திருக்கும். தேகத்தின்கண் உண்டாகும் நோயை இருதயம் தெரிந்துகொண்டு நாடியின் மூலம் நமக்கு அறிவிக்கின்றது. நாடி நடையின் பேதா பேதங்கள் நன்றாகத் தெரியாவிட்டால் தேகத்திலிருக்கும் பிணியின் கூறு செவ்வையாகத் தோன்றலாம்.

5. "நோய்நாடி நோய்முதனாடி யது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

என்பதிற்கிணங்க உணவாதி செயல்களால் உண்டாகும் நோயினை அறியும்பொருட்டு, நோய் அறிதற்கான நாடல் வழி நாடி எனவும், உணவு செயல்களால் வளி, அழல், ஐயம் ஆகிய

மூன்றில் ஒன்றேனும், இரண்டேனும், மூன்றேனும் மிகுந்து அல்லது குறைந்து பிணிக்கப்படுமாகையால், பிணிக்கப்படும் குற்றம் யாது? அதற்கு முதன்மையாக இருந்தது எது ? அதனைத் தணிப்பதற்கு வழி எது என்பதான முறைகள் நாடுவதே மருத்துவனின் கடமையாகும். ஆகவே, நாடியைக் கொண்டே பிணிகளைக் கணிக்கவேண்டும் என்பது ஒருவகையில் பொருத்தம் என்பது புலனாகிறது.

6. மேலும், பிணியை நாடியாலறிந்து ஊட்டு மருந்தே சிறந்தது எனக்கூறிய விடத்து :

1. முப்பிண மருவி முனிவுகொள் குறிப்பைத் தப்பா
தறியும் தன்மையும் வாத பித்தவையம் பிரிவையும்
அவைதாம் ஏறியிறங்கி இணைந்துக் கலந்து மாறி
மாறி வரும் செயற்கையறை் பிணி நேர்மையறிந்து
நீட்டுமருந்தே சீரியதாமெனச் செப்புவர் சித்தரே.

என்பதினாலும்,

அதனைக் கணிக்கும் உபாயம் எவ்விதம் என்பதைக் கூறுமிடத்து :

2. நாடிமூன்றையும் நாடிடுங்காலை
நடுவிரல் நாடியைக் கணிப்பான்
நற்றவர்க்குருவென நவிலு மறையே.

என்பதினாலும்,

அதன் பயனைப்பற்றிக் கூறுமிடத்து :

3. மூன்றிலொன்றுயர்ந்ததை முன்னரறிந்து
முந்தியதனை யொழித்திடு மருந்தியு
தணியும் நோயின் தந்திரமிதுவே
பேணிக் கணித்திடின் பிறவாய் பின்குணம்.

என்பதினாலும் அறிக.

நாடிப் பரீட்சையே சிறந்த முறை என்பதையும், நாடிக் கணிப்பால் பெரும்பாலும் பிணிகளை அறிந்து மருத்துவம்

புரிவதே கிரமம் என்பதையும் முன்னோர்கள் நன்கு விளக்கியுள்ளார்.

7. நாடிப்பரீட்சையால் காணும் தேகப்பிணி அல்லது உடலில் தாக்கும் குறி குணங்களைச் சத்தம், பரிசம், ரசம், ரூபம், கந்தம், மலம், சிறுநீர், எச்சில், வியர்வை, சுக்கிலம், செவி, மெய், கண், நாடி, மூக்கு ஆகிய இவற்றின் ஆராய்ச்சியைக் கொண்டும், பிணியாளனின் சரித்திரத்தைக் கொண்டும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

ஆயினும், மருத்துவம் என்னும் சிகிச்சை அல்லது பரிகாரம் புரிய ஆரம்பிக்கும்பொழுது, நாடியின் குறிப்பைக் கொண்டு அதற்குத் தக்கவாறு மருத்துவம் புரிவதே மேலான முறை என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல்வேண்டும். முக்குற்றங்களில் எக்குற்றம் பிரதானமாகப் பிணிக்கப்பட்டு நோயாளி துன்புறுகிறானோ, அதற்கு ஏற்ற மருந்துகளைக் கொடுத்து முதன்மையாகக் கேடடைந்து குற்றம் தணிக்கப்படுமானால், அதுவே நோய் குணமாகும் கிரமத்திற்கு ஏற்றவழி எனவும், பின்னிட்ட துணை வியாதிக்கும் கிடைக்காது என்பதற்கு உறுதிகூற இடமுண்டு என்பதையும் அறியவும்.

இன்னபல காரணங்களால் நாடிப் பரீட்சையே சிறந்தது என்பதை நிரூபிக்கலாயிற்று.

சுகதேகியின் மூவகை நாடியறியும் மாத்திரைக்கிரமம்.

1. "வளிவன்னியைக்கு வழங்கிடுமாத்திரை
ஒன்றரைகாலாய் ஓதினர் சித்தரே."

என்பதினாலும்,

2. "வழங்கிய வாதம்மாத்திரை யொன்றாகில்
தழஙிகய பித்தந்தன்னிலரை வாசி
அழங்குங்கபந்தா னடங்கியே காலோடில்
பிறங்கிய சீவர்க்குப்பிச கொன்றுமில்லையே."

(குணவாகடம்)

என்பதினாலும்,

3. மெய்யளவு வாதமொன்று
மேல்பித்தமோரரையாம்,
ஐயங்காலென்றே அறி.

(கண்ணுசாமியம்)

என்பதினாலும் அறிக.

வாதம் ஒரு மாத்திரை, பித்தம் அரைமாத்திரை, கபம் கால் மாத்திரையளவு எனக்கூறியுள்ளார்.

## நாடி நடைமாத்திரையின் இலக்கணம்

ஒரு மாத்திரை என்பது ஒருகை நொடி அல்லது ஒரு கண் இமை சிமிட்டலின் (மூடித்திறத்தல்-கால அளவைக் குறிக்கும்) எனச் சிலரது அபிப்பிராயம். ஆனால் மருத்துவ நூல்களை ஆராயுங்கால், மாத்திரை என்றால் நாடியின் துடிப்பு ஒரு கோதுமை அரிசிப் பிரமாணம் எழுந்து அடங்குவதற்குரிய கால அளவு எதுவோ அதனையே குறிக்கும் என நூல்கள் கூறுகின்றன.

(மேற்கோள்)

1. செய்கின்ற நாடி பெருவிரலில் மேலாய்
திருந்திழை மூன்றங்குலத்தின் நடுவதாக
தைகின்ற கோதுமையரிசி போலச்
சர்வம் வியாபித்திருக்குமதுதான் கூறில்,

கையடியுங் காலடியும் நாடி நிற்கும்
கன்னியர்க்கிடப்புறமாங் கணவர்க்கங்கே
மைகின்ற வலப்புறமாம்வாத நாடி
வந்து முன்னேநடக்குமப்பால் வகை சொல்வேனே.

2. சொல்லுகிறேன் பித்தநாயி தோன்றுமப்பால்
தொடர்ந்து சிலேட்டுமநாடி தோன்றுமப்பால்
அல்லு நிறக்குழலாளே நாடி நின்றால்
ஆச்சரிய நாடியொன்றறிந்து சொல்வது.

(ப. சி. நாடி)

**வெண்பா**

3. செப்பவாண்மக்களுக்குச் சேரவலக்கையாகும்
ஒப்பவரிவையர்க்கோதவிடம் - தப்பாது
அறைந்தார் முனிவரளவு கேள்தோன்றும்
விரைகோதுமையாம் வியந்து.

(கண்ணுசாமியம்)

என்பதினாலும் அறிக.

ஆண் மக்களுக்கு வலக்கரத்திலும், பெண்களுக்கு இடக் கரத்திலும் நாடி நடையைக் கணித்தல் கிரமம் என்பதையும், நாடி நடையின் மாத்திரையளவை நோக்குமிடத்து ஒரு கோதுமை விரைப் பிரமாணம் நாடியின் துடிப்பு எழுந்து அடங்கக்கூடிய கால அளவு அல்லது வேகம் உடையாதக இருக்குமென அறிக !

வளி, அழல், ஐயம் மூன்றும் தத்தம் நிலையில் மிகுதல், மீறி நடத்தல், கதித்தல், தோடத்தில் தோடம் (வாதத்தில் வாதம், பித்தத்தில் பித்தம், ஐயத்தில் ஐயம்) இவைபோன்ற சொற்கள் யாவும் ஒன்றே என்பதின் பொருள் கூறுகிறார்.

1. வாதநாடி நடையிருக்கவேண்டிய மாத்திரையளவிற்கு இரண்டு பங்கிருந்தால் வாதமிகுதி, வாதம் கதித்தல், வாதம்மீறி நடத்தல், வாதத்தில் வாதம் என்னும் பதங்களால் வழங்கப்படும்.

2. பித்தநாடி நடை தன்மாத்திரையளவில் இரண்டு பங்கு இருக்குமானால் பித்தம் கதித்தல், பித்தம்மீறி நடத்தல், பித்தத்தில் பித்தம் என்னும் சொற்களால் வழங்கப்படும்.

3. ஐயநாடி நடை தன்மாத்திரையளவில் இரண்டு பங்கு இருக்குமாகில் ஐயமிகுதி, ஐயம் கதித்தல், ஐயம்மீறி நடத்தல், ஐயம் என்னும் சொற்களால் வழங்கப்படும்.

குறிப்பு :- தோடங்களை ஒவ்வொன்றும் தன்னளவில் மிகுதியான காலங்களில் அவற்றிற்குரிய மாத்திரையினளவு இரட்டிப்பாக இருக்கும்போது மட்டிலும் மேற்கூறிய பிரகாரம் சொற்கள் வழங்கப்படும் என அறிக.

தொந்த நாடி இன்னதெனல் அல்லது தொந்தநாடிகளின் மாத்திரை விகிதம் இன்னதெனல்.

## *1. வாத பித்த தொந்தம்*

(வளி, அழல், கலப்பு) வாதநாடி தன்னளவில் இரண்டு மாத்திரையும், பித்தநாடி தன்னளவாகிய அரை மாத்திரைக்கு மேலும், அதற்கு இரட்டிப்பாகிய ஒரு மாத்திரைக்குள்ளடங்கியும் நடைபெறும் என்பதேயாகும்.

## *2. வாத ஐய தொந்தம்*

(வளி, ஐயக் கலப்பு) வாதநாடி தன்னளவில் இரண்டு மாத்திரையும், ஐய நாடி தன் அளவாகிய கால் மாத்திரைக்கு மேலும், அதற்கு இரட்டிப்பாகிய அரை மாத்திரைக்கு உள்ளடங்கியும் நடைபெறும் என்பதாம்.

## *3. பித்தவாத தொந்தம்*

(அழல், வளி, கலப்பு) பித்தநாடி தன்னளவில் இரண்டு பங்கு அல்லது தன் இயற்கை மாத்திரையின் இரட்டிப்பாகிய ஒரு மாத்திரையும், வாதநாடி தன்னளவில் ஒரு மாத்திரைக்கு மேலும், இரண்டு மாத்திரைக்குள்ளடக்கியும் நடைபெறும் என்பதாம்.

## *4. பித்த ஐய தொந்தம்*

(அழல், ஐயக் கலப்பு) பித்தநாடி தன் அளவில் இரண்டு பங்கு அல்லது தன் இயற்கை மாத்திரையின் இரட்டிப்பாகிய ஒரு மாத்திரையும் ஐயநாடி தன்னளவாகிய கால் மாத்திரைக்கு மேலும், அதன் இரட்டிப்பாகிய அரை மாத்திரைக் குள்ளடங்கியும் நடைபெறும் என்பதாம்.

## 5. ஐயவாத தொந்தம்

(ஐய வளி கலப்பு) ஐய நாடி தன்னளவில் இரண்டு பங்கு அல்லது தன் இரட்டிப்பான மாத்திரையாகிய அரை மாத்திரையும் வாத நாடி தன்னளவில் ஒரு மாத்திரைக்கு மேலும் இரண்டு மாத்திரைக்குள்ளடங்கியும் நடைபெறும் என்பதாம்.

## 6. ஐயபித்த தொந்தம்

(ஐய அழல் காப்பு) ஐயநாடி தன்னளவில் இரண்டு பங்கு அல்லது அதன் இரட்டிப்பான மாத்திரையாகிய அரை மாத்திரையும் பித்தம் தன்னளவாகிய அரை மாத்திரைக்கு மேலும், அதன் இரட்டிப்பாகிய ஒரு மாத்திரைக்குள்ளடங்கியும் நடக்கும் என்பதாம்.

குறிப்பு :- சில நாடி நூல்களில் கூறியிருக்கிற தொந்த நாடி நடையின் மாத்திரையளவு பொருத்தமன்று. தொந்தநாடி நடைகளின் மாத்திரையளவைப் பற்றி **வல்லாதி நாடி** நூலிலும் மற்றும் சில நூல்களிலும், பலவிதமாகக் கூறியுள்ளார். ஆனால் அவை பொருத்தமாகத் தோன்றவில்லை. பதினெண்சித்தர் நாடி நூல் பக்கம் 64ல் கூறியுள்ளதைக் கீழே காணவும்.

1. “தானென்ற வாதமாத்திரை தானிரண்டு
தப்பாது பித்தமது தானொன்றேறில்
வேறென்ன வாதபித்தந் தொந்திப்பாகும்
மிகுவாதமிரண்டுஞ் சிலேத்தும மொன்றாகில்

ஊனென்ற வாதமையந் தொந்திப்பாகும்
உற்றபித்தமிரட்டித் துரைவாத மொன்று சேரில்
கோனென்ற பித்தமுடன் வாதஞ் சேர்த்துக்
கொண்டதிந்தரோக மெனக் கூறே.”

2. “கூறுவேன் பித்தமாத்திரையிரண்டாகில்
கொடியசிலேற்பன மொன்றுதிக்குமாகில்
தூறுவேன் பித்தமுடன் மந்தானென்றும்,
சூலங்குசிலேத்தும மிரண்டு வாதமொன்றுந்

தேறுவேன் சிலேத்தும வாதந்தானென்றும்
சிலேத்தும மிரட்டித்துப் பித்த மொன்று சேரில்
வேறு நீ நினையாதே சிலேத்தும பித்தம்."

என்பதினாலும் அறிக.

வாத பித்த தொந்தத்திற்கு முதன்முதலாகக் கூறியவாதம் இரண்டு மாத்திரையும், பித்தம் ஒரு மாத்திரையும் என்ற கணக்கையே மற்றெல்லா வகையான ஐந்து தொந்தங்களுக்கும் நாடி நடையில் மாத்திரையளவாக மேலே கூறிய செய்யுளில் கூறியுள்ளார். (அதாவது, இரண்டுக்கொன்று மாத்திரை விகிதம் கூறியுள்ளது) இது பொருத்தமாகவில்லை. ஆனதுபற்றியே மேலே வாசகத்தில் விளக்கிய தொந்தநாடிகளின் மாத்திரை அளவைச் செய்யுளுக்கு மாறுதலாக மாற்றி அமைத்து விளக்கியிருக்கிறது. அறிவாளிகள் மிகுந்த நுட்பத்துடன் தொந்த நாடிகளின் மாத்திரை விகிதத்தை அனுபவம் மூலமாக அறிந்துகொள்ளல் அவசியமாகும்.

வாத, பித்த, கப நாடிகள் தொந்தமாக நடைபெறும் காலத்தில் தம் மாத்திரையளவில் இரட்டிப்பாகவும் அல்லது இயற்கையளவிற்கு மேலும் இரட்டிப்பு மாத்திரைக்கு உள்ளடங்கியும் இருக்கலாமேயொழிய, இயற்கையில் சொற்ப மாத்திரை அளவாயுள்ள பித்தமும், ஐயமும் இரண்டு முழு மாத்திரையைப் பெறும். வாதம் தன் சுபாவமான ஒரு மாத்திரை அளவைப் பெற்றுமிருக்குமானால், இது தொந்தமாக இரண்டிரண்டு நாடிகள் தத்தம் அளவில் ஒன்று (முதலில் கூறும் நாடி) இரட்டிப்பாகவும், மற்றொன்று அதன் இயற்கைக்கு மேலும், சற்று இரட்டிப்புக்கு உள்ளடங்கியும் நாடிகள் நடைபெறும் என்பதை இத்தொந்த நாடியின் கருத்து என அறியவும்.

## பிணியை நாடியாலறிந்து ஊட்டுமருந்தை சிறந்ததெனல்

"முப்பிணி மருவி முனிவுகொள் குறிப்பை
தப்பாதறியுந் தன்மையும்வாத
பித்தவையப் பிரிவையுமவைதாம்
ஏறியிறங்கி இணைந்துகலந்து

"மாறி மாறிவருஞ் செயற்கையாற் பிணி
நேர்மை யறிந்து நீட்டுமருந்தே
சீறியதா மெனச் செப்புவர் சித்தரே."

என்பதால், வாத-பித்த-ஐய நாடிகளின் தன்மை, பிரிவு, மிகுதி, குறைவு, தொந்தம், சன்னிவாதம், மாறிமாறி வரும் செயற்கை ஆகிய இவற்றால் ஏற்படும் பிணிகளை அறிந்து மருத்துவம் செய்தல் சிறந்த முறையாகும் என்பதே இதன் கருத்தாகும். நாடிகளைக் கொண்டு பிணிகளின் நேர்மையறிந்து பரிகாரம் புரிவது அவசியம் என்பதையும் அறியவும்.

## நாடி நடை அளவையறிய உபாயம்

"நாடி மூன்றையும் நாடிடுங்காலை
நடுவிரல் நாடியை நாடியே கணிப்பான்
நற்றவக்குருவென நவிலு மறையே."

என்பதினாலும், வாத-பித்த-ஐய நாடிகளின் தன்மைகள், குறிப்பாக அவற்றின் அளவைஅறியவேண்டின், மூன்று நாடிகளின் நடுவிரல் நாடி தராசு முனைக்குச் சமானமாக மத்தியமாக வைத்து, மற்ற இரு விரல்களின் தன்மையைக் கணக்கிடல் கிரமம் என்பதே இதன் பொருளாகும்.

## நாடி கணிப்பால் நோய் தணியுமாறு கிரமம் அறிய உபாயம்

"மூன்றிலொன்றுயர்ந்ததை முன்னரறிந்து
முந்தியதனை யொழித்திடு மருந்திடு
தணியும் நோயின் தந்திர மதுவே
பேணிக் கணித்திடின் பிறவாய் பின்குணம்".

என்பதினால், மூன்று நாடிகளில் எது அதிகக் குற்றம் அடைந்திருக்கிறதோ அதனை அவசரமாகவும், அவசியமாகவும் எண்ணி, முதலில் அதற்கேற்ற மருந்துகளைக் கொடுக்க, அந்தமிகுந்த தோடம் நீங்க மார்க்கவாகும். வியாதியைப்

பரிகரிப்பதற்கு அல்லது தணிப்பதற்கு இது தந்திரமும் சுலபமுமான உபாயம் என்பதுமன்றி, பிற்குணங்களாகிய துணை நோய்கள் (கிளை நோய்கள்) எவையும் தொடராவாம் என்பதையும் தெரியவும்.

*(நோயை நன்கு ஆராய்ந்து அறிந்து மருந்து கொடுத்தல் இன்றியமையாதது.)*

### *சிகிச்சாரத்னதீபம்*

*"மதித்திடற் கருமை வாய்ந்த*
*மான்பரிகாரமெல்லாம்*
*துதித்திட புணர்ந்தானேனும்*
*துகளறப் பிணியின்றன்மை*
*பதித்திடவுணரானாகிற்*
*பயனுறானாகலானே*
*விதித்திடு பிணித்திறத்தை*
*விளம்புது முதற்கண்மன்னோ."*

*என்பதினால் அறிக.*

ஒரு பண்டிதனுக்கு எவ்வளவோ பெருமை வாய்ந்த பரிகாரங்கள் (மருந்து வகைகள்) தெரிந்திருந்தபோதிலும் நாடியைப் பிரதானமாகக் கொண்ட எண்வகைத் தேர்வு, மற்றுள்ள குறி குணங்கள், நோயின் சரித்திரம் முதலியவற்றால் நோயின் தன்மைகளைத் தீர்க்கமாக அறியானாயின் பண்டிதனது மருந்துகள் பயனற்றதாகிவிடும் என்பது திண்ணம். ஆதலால், நோயைப் பற்றியும், நோயாளியைப்பற்றியும் வரலாறுகளை முற்றிலும் பண்டிதன் நன்றாய் அறிந்து, நோய் இன்னதென்பதைத் தெரிந்து அதற்கேற்றவாறு மருத்துவம் புரிவதே பண்டிதனது கடமையாகும்.

தேரன் மருத்துவப் பாரதத்தில் பக்கம் 59ல் கூறியிருப்பதுபோல்

"புவன நாயகனிருந்துங் கவுரவர்
முன் பாண்டவர்பின் போனதென்ன,
விவரமெனி னோய்க்கவுழ்தமென்
பதன்றி மருந்திற்கு வினையுமுண்டோ !

கவலையுறு நோயாளி முன்னாயுள்
வேதியின் பின்காட்சி போனோய்
துவரவடிப்பது போலக்கவுரவ
நோய்களைக் கொல்லத் தொடங்கினானே."

என்பதற்கிணங்க, ஜெகத்ரக்ஷகனான கிருஷ்ணபரமாத்மா இருந்தும், அவரது உதவியை நாடி முதன்முதலில் கவுரவரும், அதன் பிறகு பாண்டவரும் சென்றதின் தாத்பரியம் யாதெனில்; நோய்க்கு அவுழ்தமேயன்றி மருந்திற்காகப் பிணி ஏற்பட்டதல்ல என்பதைக் குறிப்பிடுகிறது. ஆதலால் பிணியை நன்கு ஆராய்ந்து அறிந்து, அதன்பிறகு அதற்குரிய தக்க மருந்துகளைக் கொண்டு நோயை நிவர்த்திக்கவேணும் என்பதும், அதுவே சுலபம் என்பதும் இதன் பொருளாகும்.

## *பஞ்சநாடி அல்லது பஞ்சபூதநாடி என்றால் என்ன ?*

(வை. சா. சங்கிரகம்)

*1.* "தூண்டிடவே பெருவிரல்தான் பூதநாடி,
தொந்தமாம் ஆள்தூண்டி வாதமென்க,
அண்டிடவே நடுவிரல்தான் பித்தநாடி,
அணிவிரல் பௌத்திரந்தான் சேத்துமநாடி,

பூண்டிடவே சிறுவிரல்தான் பூதநாடி,
பூட்டினார் குருநாடியைந்து கோர்வை,
நீண்டிடவே யிப்பின்னல் யார்தான் காண்பார்
நிறைந்த பரிபூரணததோர் காண்பார்தாமே."

என்பதினாலும்;

*மீன்டும், நாடி நூலில் கூறிய பிரகாரம் :*

*2.* "சாற்றுவேன் பெருவிரலிற் பூதநாடி
சங்கையில்லா ஆள்தூண்டி வாதமென்க
ஏற்றமுள்ள நடுவிரல்தான் பித்தநாடி
இசைந்தொரு பௌத்திரமே ஐயமாகும்,

தோற்றுகின்ற சிறுவரல்தான் பூதநாடி
சுற்றமுள்ளகுரு யைந்துட்சேரும்
மாற்றுமே குருநாடியைந்துட் சேர்ந்து
வளர்ந்து நிற்கும்பேர் பெரிய வுண்மைதானே.

என்பதினாலும்,

மேலும் "பஞ்சபூத நாடி"யின் இலட்சணம் பற்றிக் கூறியவிடத்து :

3. "சொல்லுவேன் ஐந்தாம் விரல் பூதநாடி
சுகமுடன் நாலாம் விரல் வாதமென்க
எல்லுவேன் மூவிரலாம் பித்தமாகும்,
எழிலான இருவிரலையமாகும்

தொல்லுலகில் வழங்குகின்ற சிறுவிரல்தான்
சுத்தமுள்ள குருநாடி யென்று சொல்வார்
மல்லுமொரு நாடிகள் தானென்றுக் கொன்று
வளர்கின்ற பின்னலின்றன் வன்மை பாரே."

என்பதினாலும்;

**வால்மீகர் பஞ்சபூதநாடி எனக் கூறியவிடத்து;**

4. "ஐவிரலைந்து நாடியது
செய்யும் வகையைக் கேளீர்
மெய்விரலொன்று வாதமொழி
விரலொன்று பித்தம்,

நெய் நடுவிரலிலே சிலேத்துமம்
நேர்விரல் பூதநாடி
மைசிறு விரலே சொன்னபூதநாடி,
வகுத்தனர்வால் மீகர்தானே."

என்பதினாலும் அறிக.

பஞ்சபூதநாடி அல்லது பஞ்சநாடி என்பது பெருவிரலில் உணர்த்தும் துடிப்பு பூதநாடி; ஆள்காட்டி விரலில் உணர்த்தும் துடிப்பு வாதம்; நடுவிரல் துடிப்பு பித்தம்; அணிவிரல் துடிப்பு சிலேத்துமம்; சிறுவிரல் துடிப்பு பூதநாடி என்னும் ஐந்து நாடிகளை ஐந்து விரல்களிலும் காட்டியிருப்தை அறிகிறோம்.

குருநாடி இவ்வைந்துக்கும் நடுமையமாக நின்று ஐந்து நாடிகளின் நடைமுறைக்கு ஏற்ற உதவிபுரியும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இப்பேர்ப்பட்ட பின்னலான நாடி நடையின் கணிப்பை அறிவது போதிய பயிற்சி உள்ளவர்களுக்கே சாத்தியம் என்பதையும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

குறிப்பு :- பூதநாடிகளின் நடை பலவிதம். பேய், பிசாசு, பில்லி, சூனியம், பயம், ஆரட்சி ஆகிய இவற்றால் தேகத்தில் பற்பல குறிகுணங்களையுண்டாக்கி அசவுக்கியத்தைத் தரும். இதனைச் "சங்காதோடம்" என்று கூறுவர். இதுபற்றிய விவரங்களை "வால்மீகர் பூதநாடி சாத்திரத்தில்" விரிவாகக் காணலாம்.

## "குருநாடி" பற்றிய விளக்கம்

குருநாடி என்பது முன்னர்கூறிய சீவநாடி அல்லது உயிர்த்தாதுவையே குறிக்கும். இதனை வேறுபடுத்திக் கூறுவாருமுளர்.

இதுபற்றிய அபிப்பிராயம் பல. அவை பின்வருவன :

1. குருநாடி எப்பொழுதும் பித்தத்தின் முன்னே நிற்கும்.

2. தசநாடி பத்துக்கும் திறமாய் நிற்கும்.

3. உடற்குயிராய் நின்ற குருநாடி வாத, பித்த, ஐயத்திற்கு நடுவில் இருப்பதைப் பார்க்கில், அது மூவிரலுந்தாண்டி, மூளை முதலூடுருவிப் பாய்ந்து விசை நரம்போடே சேர்ந்து, சந்திர

மண்டலம் போய்ச் சார்ந்து, பின்பு பம்பரம்போல் கிறுகிறுவென்று வாத, பித்த, ஐயம் என்ற நாடி முதலாடி, ஓடி, மண்டலங்கள் மூன்றும் சுற்றிக் கத்திரிக்கோல் மாறலெனக் கட்டிச் சேர்ந்து, வாத, பித்த, ஐயம் நடுவினின்று இம்மூன்று நாடிகளையும் இயல்பாய் நடத்திவைக்கும் பண்புடையதாகும் குருநாடி.

இதனின்றும் நாம் தெரிந்துகொள்வது யாதெனில் வாத, பித்த, ஐயம் என்னும் நாடிகளின் நடை ஏற்படுவதற்குக் காரணம் குருநாடியின் தத்துவமேயாகும், அது "சீவநாடி"யைத் தவிர வேறில்லை. நாடி நூல் பக்கம் 74-ல் கூறிய பிரகாரம் "குருநாடியே" "ஆத்மநாடி"யாகக் கருதியுள்ளார்.

"சொல்லுகின்ற வாதபித்த சேத்துமந்தன்னில்
சுகமான பித்தமது பூதநாடி
வெல்லுகின்ற குருநாடி ஆத்மநாடி
வெகு நோயையகற்றி நலங்காட்டும் நாடி,

பல்லுயிர்க்குந்தானாக யிருந்த நாடி
அல்லலுறு மாங்காரம் பிராண நாடி
அக்கினியைச் சேர்ந்தெழுந்த நாடிதானே"

(சதகநாடி)

என்பதற்கிணங்க, வாத, பித்த, சேத்துமம் என்ற மூன்று நாடிகளில் பித்த நாடியானது "பூதநாடி", "குருநாடி", "ஆத்மநாடி" என வழங்கும் எனவும் சகல நோய்களையும் அகற்றி, நன்மை பயக்கும் நாடி எனவும்; அகங்காரம், பிராணன், உயிரக்கினி இவை யாவற்றிற்கும் குருநாடியே ஆதாரமாயுள்ளது எனவும் கூற[illegible]ார்.

குருநாடி எப்பொழுதும் பித்தத்தின் முன்பே நிற்கும் என்ற [illegible] பித்தநாடியே குருநாடியாகவும், ஆத்ம நாடியாகவும், சீவ நாடியாகவும் நிகழலாமென யூகிக்க வேண்டியிருக்கிறது. குருநாடியைத் தனி நாடியெனக் கூறுவாரும் உளர்.

குருநாடியைத் தனி நாடியாக எண்ணினாலும் சரி அல்லது வாத, பித்த, ஐயம் ஏற்படுவதற்கு எது அதிகாரணமோ, அதுவாக வைத்துக்கொண்டாலும் சரி, இவ்விரண்டையும் ஒன்றாகவே பாவிக்கவேண்டும். ஏனெனில், குருநாடி வாத, பித்த, ஐய நாடிகளுக்கு வலிவைக் கொடுத்து, அவற்றின் (வாத, பித்த, ஐயம்) இயற்கை நடைகளெல்லாம் குருநாடிகளின் தத்துவத்தால் நடைபெறுகின்றன என்பது தெரியவருகிறபடியால் வாத, பித்த, ஐய நாடிகளின் வரலாறுகளை நன்கு அறிந்தாலே குரு நாடியைப் பற்றிய விவரங்கள் யாவும் அறிந்தது போலாகும்.

நிற்க, குருநாடியானது வாத-பித்த-ஐய நாடிகளுக்கு நடுவில் தராசு முனைபோலிருந்து, அவற்றிற்கு வலுவைக் கொடுப்பதாகக் கூறும் நூல்கள் குருநாடியைத் தனி நாடியெனக் கருதுகிறார்கள். ஆனால், வாத-பித்த-ஐயம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற தருணத்தில் குருநாடியைத் தனித்து அறிவது சாமான்யமன்று. மூன்று நாடிகளும் ஒடுங்குங்காலத்து குருநாடி (அதாவது ஆதம்நாடி அல்லது சீவநாடி) நடையை உற்றுக் கவனித்தால் ஒருகால் பித்தத்தின் முன்னே புலனாகக் கூடும்.

## மேற்கோள்

*குருநாடியிருப்பிடம்* (வை. ச. சங்கிரகம்)

1. "குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னே
குறிப்பாக நிற்குமதுபாருபாரு
குருநாடி தசநாடி திறமாய் நிற்கும்
தாக்குமுடல் உயிராக நிற்கும் பாரு
திரிநாடி வாத பித்தமையம் நடுவிற் பற்றி
தீவிரமாய்மூன்று விரல்தாண் டிப்பாயும்
வருநாடி விசைநரம்பினூடே சேர்ந்து
வளர்சந்திரமண்டலம் போய்ச் சாரும் பாரே."

2. "பாரேதான் பம்பரம்போற் கிறுகிறுத்துப்
பகர்வாத பித்தமைய மென்ற நாடி
சேரவே மண்டலங்கள் மூன்றுஞ் சுற்றிச்
செழித்த கத்தரிக்கோள் மாறலெனவே சேர்ந்து

வாரேதான் வாத பித்தமையம் நடுவிருந்து
வாதத்தில் கோழி அன்னம் மயில் போலாகும்
கூரேதான் பித்தத்தில் ஆமையட்டைக்
குறிப்பாகச் சேத்துமத்தில் பாம்பு போற்றவளை யாமே."

என்பதினாலும் அறிக.

வேறு - பரிபூரண நாடி நூல்

3. "பாரப்பா குருநாடி ஐந்துக்கு நடுவில்
பாரிநிற்கும் வரலாறு தன்னைக் கேளு
சீரப்பா பித்தத்தின் முன்னே நிற்கும்
தசநாடி பத்துக்கும் திறமாய் நிற்கும்

ஏரப்பா வாத மென்றுஞ்சொல்லுவர் மூடர்
இருத்தியங்கே பார்ப்பளவில் வேறாய் நிற்கும்
தாரப்பா கண்ட குருநாடி நேர்மை
தனையறிய வகையுனக்குச் சாற்றுவேனே.
*(ப. சி. நாடி)*

இதன் பிரகாரம் குருநாடியைத் தனிநாடியாகக் கூறப்பட்டு உள்ளது. மேலும், பஞ்சநாடிகளிருப்பிடம் கூறுகிறார்.

4. "சாற்றுவேன் பெருவிரற் பூதநாடி
சங்கையில்லா ஆள்தூண்டி வாதமென்க
ஏற்றமுள்ள நடுவிரல்தான் பித்தநாடி
இசைந்த தொரு பௌத்திரமே ஐயமாகும்.

தோற்றுகின்ற சிறுவிரல் தான் பூதநாடி
சுற்றமுள்ள குருநாடி ஐந்துட் சேரும்
மாற்றுமே குருநாடி ஐந்துட் சேர்ந்து
வளர்ந்து நிற்கும் பேர் பெரிய வுண்மைதானே."

என்பதினாலும்,

குரு நாடியானது பஞ்ச நாடிகளிலும் கலந்து நின்று அவற்றை வளர்த்து, வலுப்படுத்தி நடைபெறச் செய்கிறது என்பதையும் அறிகிறோம்.

மீண்டும் பக்கம் 8-106. ப. சி. நாடி நூலில் கூறுவதாவது:

5. "காரப்பா உடலுக்குளுயிராய் நின்ற
கருவான குருநாடி யொன்று காணே."

6. "ஒன்றுக்கு மெட்டாத நாடிநேர்மை
யூடுருவித்தானிருக்கு முண்மை கேளீர்
வண்டுகள் தான்மதுவருந்தும் நேர்மைபோல்
வாத பித்த சேத்துமத்தின் மதுவையுண்ணும்
என்றைக்கும் வாத பித்தமையம் நடுவே நிற்கும்
ஏறுவதுங் குறைவது மில்லை யப்பா
கன்றுக்குப் பாலிறக்கும் பசுவைப்போல
காத்திருக்கும் குருநாடி காலைப்பாரே."

என்பதினாலும், குருநாடி வாத, பித்த, ஐய நாடிகளுக்கு மத்திபமாயிருந்து மூன்றுக்கும் ஏற்றக்குறைவான தொழில் ஏற்படாதபடி பாதுகாப்பதாகவும் சொல்லப்படுகிறது.

அதற்குமேலும் கூறுவதாவது :

7. "குருநாடி நிலையறியாக் குருடரெல்லாம்
கூட்டமிட்டுச் சாத்திரத்துக் குவமை சொல்வர்
மிருநாடி வாத பித்த சிலேத்துமத்தின்
மத்திய மென்றிதை யறியார்வார்த்தை சொல்வார்

கருநாடி குருநாடி யாகக்காணும்
கைமுறையாய்க் குரு தொட்டுக் காட்டத் தோன்றும்
பெருநாடி சாத்திரத்தில் மயங்கிடாதே
புலந்திபாதம் குரு நாடி பின்னல்பாரே.

என்பதினாலும் அறிக. குருநாடி வாத, பித்த, சேத்தும நாடிகள் மூன்றுக்கும் தராசு முளை போன்றதாகும்.

8. தம்பமுடன் வாத பித்த ஐய நடுவிலேதான்
தமரகம் போலாடி நிற்கும் குருவிதாமே."

என்பதினால், குருநாடி வாத, பித்த, ஐய நாடிகளின் மத்தியில் தாமரகம் போன்றது எனவும் விளங்குகிறது. தாமரகம் என்னும் இருதயம் உடற்கு எவ்வளவு பிரதானமோ அதேபோல குரு நாடியானது வாத - பித்த - ஐயமாகிய உயிர்த்தாதுவுக்குப் பிரதானமானது என்பதையும் அறிகிறோம். இதனை வேறுபடுத்திக் கணிப்பது சாமான்யமன்று.

9. "ஏற்ற குரு நாடிதன்னையிசைந்து பார்க்கில்
இடையும் பிங்கலையுமே யிசைந்துமாறி
மாற்றமில்லாச் சுழிமுனையைத் தானேபற்றி,
மாறி நிற்குங் கத்தரிக்கோல்மாறல் போலச்
சீற்றமுடன் வாத பித்த சிலேற்பன மென்ற
தசநாடி திரிநாடி தானாய் நின்று
கோற்ற சிறுகுருநாடி நிலையைப் பார்க்கில்
கோமான்றன் திருக்கூற்றைக் கூறலாமே."

என்பதினாலும் அறிக.

குருநாடியைப் பற்றி ஆராயுங்கால் தசநாடியின் இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று நாடிகளும்; அபானன், பிராணன், சமானன் என்ற வாயுக்களின் இயக்கத்தால் சுவாசத்தை உண்டாக்கி அதினின்றும் வாத, பித்த, ஐயம் என்னும் மூன்று நாடிகளும் உண்டாக்கி, உடலையும், உயிரையும் பொருத்தி நன்னிலையில் வைத்துக் காப்பாற்றி வரக்கூடிய தத்துவத்திற்குக் காரணமான சக்தி எதுவோ, அதுவே குருநாடி எனக் கொள்ளலாம். சர்வேசுவரனால் ஏற்பட்ட அபூர்வம் நுட்பமுமான தத்துவங்களில் குருநாடியைப் பற்றிய விஷயம் ஒன்றாகும்.

## குருநாடியின் தன்மையால் நோய்களைக் குறிக்கும் மரணம்

1. குருநாடி வாதத்தில் அட்டைபோல் புரண்டுவரில் வாய்வு மிகும். இருமல், சொறி, தினவு இவை மிகுதியாயுண்டாகும்.

2. குருநாடி பித்தத்தில் அன்னம்போல் நடக்கில் சுரங்காயும்; வாய் நீர் சுயழற்றும்; வியர்க்கும்; நீர் கட்டுப்படும், கைகாலோயும் என்பனவாம்.

குறிப்பு :- அன்னம்போல் பித்தநாடி நடக்கில் என்பது பித்தம் தன் மாத்திரையளவில் மீறி நடத்தல் என்பதேயாம்.

3. குருநாடி சிலேத்துமத்தில் சிங்கம்போல் சீறி நிற்கில் சந்தி தோன்றும்.

குறிப்பு :- சிங்கம்போல் சீறி நிற்றல் என்பது சிலேத்தும நாடி தன்னளவில் மீறி நிற்கில் எனப்பொருளாகும்.

4. குருநாடி சிலேத்துமத்தை ஊடுருவிவருமாகில் (அதாவது வாதம், பித்தம் இவ்விரண்டும் ஒடுங்கி ஐயம் மட்டிலும் தனித்துக் கதித்து நின்றால்) அசாத்திய மரணக் குறிகள் உண்டாகும்.

5. குருநாடி மொத்தத்தில் குன்றிப்போகில் வயிறு கழியும்; கடுப்பெடுக்கும், கைகால் வீங்கும்.

6. குருநாடி பக்கம் பாயில் (அதாவது அதன் இயற்கை இருப்பிடமாகிய பித்தத்தின் முன்னே நிற்பதற்குப் பதிலாகப் பக்கத்தில் தோன்றினால்) சிலேத்துமம் அதிலே மோதும். (அதாவது சிலேத்துமம் அதிகரிக்கும்.)

7. குருநாடி நேரே நிற்கில் வாத, பித்த, ஐயம் மூன்றும் சேரும். (அதாவது மூன்று நாடிகளும் தன்னிலைப்படும்.)

8. குருநாடி பின்வாங்கில் அசாத்தியங்களுண்டாகும். (அதாவது குருநாடி இயற்கையளவாய் நடைபெறாவிட்டால் அசாத்தியங்கள் உண்டாகும்.)

9. குருநாடி ஐயத்தில் விட்டிலைப்போல் துடிக்கில் மரணமாம்.

(மேற்கோள்)

1. "பேர்பெரிய குருநாடி குணமே தென்னில்
புரண்டுவரும் வாதத்திலட்டை போலச்
சீரறிய வாய்வுமிகுமிருமல் தோன்றும்
தினவு சொறி மிகவும் வரும் தேகம் வாடுஞ்
சூரரிய பித்தத்தில் லன்னம் போலத்
தோன்றிடிலோ சுரமிருக்குஞ் சுழற்றும் வாய்
கார்பெருகி மருகி வருவதுபோல வியர்வை தோன்றும்
கத்திடுகில் நீர்கட்டுங்கைகாலோயுஞ்
சேத்துமத்திற்போமே.

2. "சிலேத்துமத்தில் குருநாடி சிங்கம் போலே
சீறிநிற்கில்தின் குணந்தான் சந்நி தோன்றும்
ஆற்பனத்தை யூடுருவத்தமருமாகில்
அசாத்தியமா மரணக்குறி தப்பா தப்பா
கார்ப்பனவே குருநாடி குன்றிப் போகில்
கழியும் வயிறு கடுப்பெடுக்குங்கைகால் வீங்கும்
ஏற்பனவுமில்லை யில்லை திட்டஞ் சொல்ல
இசைந்த குருநாடிகளை யிருந்திப்பாரே."

3. பாரப்பா குருநாடி பக்கம்பாயில்
பாரித்த சிலேத்துமந்தான் எதிலே மோதும்
கூரப்பா குருநாடி நேலே நிற்கில்
குற்றமில்லை வாத பித்தமைய மூன்றுஞ்சேரும்
தாரப்பா குருநாடி பின்னே வாங்கில்
தப்பாதே வசாத்தியங்கள் தான் உண்டாகும்
காரப்பா உடலுக்குளுயிராய் நின்ற
கருவான குருநாடியொன்று காணே.

என்பதினாலும் அறிகிறோம்.

(வேறு)

4. காரப்பா குருநாடி சமனாய் நின்றால்
கரருடலில் வல்லுயிராய்க் கருதலாமே

என்பதினாலும், குருநாடி வாத, பித்த, ஐயம் நடுவிலிருந்து அவற்றின் நடையை இயல்பாகத் தொழில்புரியச் செய்வதால் உடலும், உயிரும் மேன்மேலும் கெட்டிப்பட்டு ஆரோக்கியமான நீண்ட ஆயுளைப் பெறும் என்பது இதன் கருத்தாகும்.

முத்தோடங்களின் மாத்திரை விகிதம் (1 : ½ : ¼) சுபாவமான நிலையில் ஒன்று, அரை, கால் என ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுவதின் காரணமென்ன ?

1. தேகத்தினிடமாக எழுபத்தீராயிரம் (72,000) நாடி நரம்பு ரத்தக் குழாய்கள் தோன்றியிருப்பதாயும், அவைகளின் பெருநாடிகள் எனச்சொல்லப்படும் தச நாடிகள் இயங்குவதற்கு தச வாயுக்கள் ஏற்பட்டிருக்கின்றன எனவும் நூல்கள் கூறுகின்றன. தச நாடிகள் பத்தில் மூலாதாரமாக நின்றது இடகலை, பிங்கலை, சுழிமுனை என மூன்று நாடிகளாகும். இம்மூன்றுள் இடகலை, பிங்கலைகள் இரண்டும் வலம், இடமாகிய கால் பெருவிரல் களில் இருந்து ஆரம்பித்து இடம், வலம் நாசி வரையில் கத்திரிக்கோல் மாறலாக ஓடி நிற்கும், சுழிமுனை நடுவே மூலாதாரத்திலிருந்து உச்சிவரை அச்சுருவாணியாக நிற்கும். இரு நாசிகளிலும் பகிர்ந்து நடுநாயகமாக ஓடும்.

இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற மூன்று மூலாதார நாடிகளை முறையே அபானன், பிராணன், சமானன் என்னும் வாயுக்களின் இயக்கத்தால் விடும் சுவாசம் (பிராணவாயு) - இடகலை அபானன் வாதமென்றும்; பிங்கலை + பிராணன் = பித்தம் என்றும் சுழிமுனை சமானன் ஐயமென்றும் அறியப்படும்.

இடகலை, அபானன் என்னும் வாதமானது இடது நாசியின் வழியாய்ப் பதினாறு அங்குலம் பாய்ந்தும், பிங்கலை பிராணன் என்னும் பித்தமானது வலது நாசியின் வழியாப் பன்னிரண்டு அங்குலம் பாய்ந்தும், இவையொழிந்த சுழிமுனை சமானன் என்னும் ஐயமானது இரண்டு நாசித் துவாரங்களிலும் நடுநாயகமாக உபாயமாகப் பகிர்ந்தோடும்.

இடகலை, பிங்கலை, சுழிமுனை என்று மூன்று மூலாதார நாடிகளும், அபானன்-பிராணன்-சமானன் என்னும் வாயுக்களால் முறையே தூண்டப்பட்டு மேற்கூறிய பிரகாரம் சுவாசம் (பிராணவாயு) நடைபெறும் காலத்தில் ஒன்றுக்கொன்று வலிவு, மெலிவு (வன்மை, குறைவு) ஏற்படுவதால், அம்மாதிரியான வன்மை குறைவு காரணமாக அவற்றால் பிரதிபலித்த வாதம் மாத்திரை ஒன்றாகவும், பித்தம் மாத்திரை அரையாகவும், ஐயம் மாத்திரை காலாகவு அளவில் வித்தியாசம் ஏற்பட்டதென்று நூல்கள் கூறுகின்றன.

## மேற்கோள்

*(கண்ணுசாமியம் * வெண்பா)*

1. "இருப்பான நாடி எழுபதோடீரா
யிரமான தேகத்தில் ஏலப் - பெருநாடி
ஒக்கத் தசமத் தொழிலை யூக்க தசவாயுக்கள்
தக்கபடியானதே சார்பு.

2. "சாரும் தசநாடி தன்னில் மூலம்மூன்று
பேருமிடம் பிங்கலையும் பின்னலுடன் - மாறும்
உரைக்கவிரற் காற்றொட்டுணர்த்து மேநாசி
வரைச்சுழி யோமையத்தில் வந்து."

3. "வந்தகலை மூன்றில் வாய்வாமபானமுடன்
தந்த பிராணன் சமானனும் சந்தமுறக்
கூட்டுறவில் ரேசித்தல் கூறும் வாதம் பித்தம்
நாட்டுங்கபமே யாம் நாடு.

4. "நாடுமிடகலை நானான்கு அங்குலமாய்
ஓடுமே பிங்கலையுமுய்யபத் - தேடிரண்டு
போக நடுச்சுழியோ போற்ற வுபாயமு மாய்ப்
பாகம் பகிர்ந்திடுமே பார்."

5. “பாருங்கலை மூன்றில் பற்றிய வாயு மூன்று
சாரும் வன்மைக் குறையான் சாற்றக் கேள் - தேருமதின்
மெய்யளவு வாதமொன்று மேல் பித்த மோரரையாம்
ஐயங்காலென்றேயறி.”

என்பதனால், நாடிகளின் மாத்திரை விகிதம் வித்தியாசப்படுவதின் காரணமின்னதென அறிகிறோம்.

## முத்தோடங்களின் குணம்

வாதம், பித்தம், ஐயம் மூன்றும் தனித்தனியே தன்னளவிற்கு மேல் மீறுகின்றதென அறியக்கூடிய காலம் “சாந்தி சமயம்” என்றும்; மீறி நின்றபோது “பிரகோப சமயம்” என்றும் (தன்னிலை வளர்ச்சி வேற்றுநிலை வளர்ச்சி என்பதுபோல்) அப்பால் மருந்துகளைக் கொடுத்துக் குணமாகும்போது “சமன சமயம்” என்றும் (அதாவது தன்னிலையாதல்) கூறுவர்.

2. ஒவ்வொரு தோடத்திற்கும் ஆறு குணங்களுண்டு. இதனை முதலில் கற்றுணர்வது மருத்துவனின் கடமையாகும்.

3. உண்ணும் அன்னபானாதிகளில் தீய குணங்கள் இருக்கின்றன. அதனால் தோடங்கள் வன்மைபெறும். அவைகளைக் கண்டறிந்து நீக்கில் சுகம்பெறுமாறு தோடத்திற்கு எதிர்குணங்களையுடைய ஆகாரங்களை அருந்தல்வேண்டும்.

1. வாத தோடம் வன்மையடையும்போது உண்டாகக் கூடிய ஆறு குணங்களாவன :

1. கடினம்
2. வறட்சி
3. இலேசு
4. குளிர்ச்சி
5. அசைதல்
6. அணுத்துவம்

வாதம் இந்த ஆறு குணங்களை அறிகுறியாகத் தேகத்தின் கண் நிகழும்போது இதற்குத் தகுந்த பரிகாரம் செய்தல் அவசியம்.

### வாத தோட வன்மையை நீக்கக் கூடிய ஆறு எதிர்க்குணங்களாவன :

1. மிருது
2. பசுமை
3. பளுவு
4. அக்கினி
5. ஸ்திரம்
6. கட்டி

வாதகுணம் ஆறுக்கும் எதிரான இந்த ஆறு குண ரூபங்களை உடைய ஆகாரம் உட்கொள்ளல்வேண்டும்.

2. பித்த தோடம் வன்மையடையும்போது உண்டாகக் கூடிய ஆறு குணங்களாவன :

1. பசுமை
2. அக்கினி
3. குரூரம்
4. சலரூபம்
5. புளிப்பு
6. காரம்

பித்த வன்மையால் இந்த ஆறு குணங்களை அறிகுறியாகத் தேகத்தின் கண் இயக்குமாதலால் இதற்குத் தகுந்த பரிகாரம் அவசியம்.

### பித்த தோட வன்மையை நீக்கக் கூடிய ஆறு எதிர்க்குணங்களாவன :

1. வறட்சி
2. குளிர்ச்சி

3. சாந்தம்
4. கெட்டி
5. இனிப்பு
6. கசப்பு

பித்த குணம் ஆறுக்கும் எதிரான இந்த ஆறு குணரூபங்களையுடைய ஆகாரம் உட்கொள்ளல்வேண்டும்.

**ஐயம் வன்மையடையும்போது உண்டாகக்கூடிய ஆறு குணங்களாவன :**

1. பளுவு
2. குளிர்ச்சி
3. ஈரம்
4. மிருது
5. வழுவழுப்பு
6. இனிப்பு

ஐயதோட குணம் ஆறுக்கும் எதிரான இந்த ஆறு குணரூபங்களையுடைய ஆகாரங்களைக் கொண்டு ஐய தோடத்தைச் சமனம் செய்யலாம்.

## மேற்கோள்

## முத்தோட குணம்

(வெண்பா)

1. "முந்திய தோடத்தாலே மூன்று சமயமாம்
சந்திரப்பிரகோபம் சார்சமனம் - விந்தையிதி
லுற்ற தோடத்திற்கே ஓது குணமோராறை
முற்றுணர்ந் திடுக முன்."

2. "கொள்ளு முணவிலுமேகோ துமிகுந்தோடமுண்டு
விள்ளுவதானால் விருத்தி பெறும் - மெள்ளவதை

நீக்கிச்சுகமருவ நேருமெதிர் குணத்தைத்
தாக்கிடவே யாகாரந் தா."

3. "வாதங்கடுமை வறட்சியுடன் நொய்மை
சீதஞ்சலனம் சிதறுணவு - ஏதமுட
னிக்குணத்தோடுற்றே யியக்கந் தருமளவிற்
றக்க பரிகாரந் தா."

4. "வாதகுணமாறுக்கும் மாறுகுணமே நோக்கின்
ஓதமிருதீரம் உயர்பாரம் - போதரவா
யுள்ளதீயோடுறுதி யுற்றத் திரளாக
உள்ள குணத்தையே யூட்டு."

5. "பித்தத்தின் சீர்குணத்தைப் பேசிடிலோறாகும்
சுத்தப்பசைதீயும் சொல்கடுமை - மெத்த
திரவம்புளியோடு சீர்காரமுற்றிங்
குரமாய் நிலை பெறுமாமுன்."

6. "தோன்றிவரும் பித்தந் தொடராதடங்கிடவே
சான்ற வறட்சி குளிர்ச்சி சாந்தமுடன் ஈன்ற தொரு
கெட்டியுடனே கிளரினிப்பு கைப்பினோடு
கிட்டும் பரிகாரங் கேள்."

7. "ஐயத்தின் வன்மையாலாங்குங் குணமெல்லாம்
உய்யாபாரஞ்சிதம் உற்ற பசை - நையு
மிருது வழுவழுப்புமீறு மினிப்புக்
கருதுங்குணமாறாங்கான்."

8. "சொல்லுங் கபந்தன்னைச் சோதிக்கமாறு குணம்
வல்லவகுதீயும் வறட்சியுடன் வெல்லக்
கடினமுடனே கரகரப்புக் காரம்
படியப் பரிகாரம் பார்.

என்பதினாலறிக.

வாதம், பித்தம், ஐயம் ஆகிய முத்தோடங்கள் வன்மையடையும்போது அவை ஒவ்வொன்றின் மிகுதியைச் சமனம் செய்யும். (தன்னிலைப்படுத்தக்கூடிய) சுவைகளாவன :-

1. வாதம் மேலிட்டால் : இனிப்பு, புளிப்பு, உப்பு முதலிய சுவையுள்ள பதார்த்தங்கள் பித்த மிகுதியைக் குறைத்து சமனம் செய்யும் என்றும்;

2. பித்தம் அதிகரிப்பின் : காரம், துவர்ப்பு, இனிப்பு, கைப்பு முதலிய சுவையுள்ள பதார்த்தங்கள் பித்த மிகுதியைக் குறைத்து சமனம் செய்யும் எனவும்;

3. ஐயம் அதிகமாயின் : காரம், துவர்ப்பு முதலிய சுவை உள்ள பதார்த்தங்கள் ஐய மிகுதியைக் குறைத்துச் சமனம் செய்யும் என்றும்;

4. தொந்த தோடங்கள் மிகுதி அடைந்தபோது அந்தந்தப் பிற கோபமுடைய தோடங்களுக்கேதுவான சுவையுள்ள பதார்த்தங்களைக் கலந்து அருந்தினால் தொந்த தோடங்கள் யாவும் படிப்படியாகக் குறைந்து சமனப்படும் எனவும் கீழ்க்காணும் மேற்கோளால் அறியவும்.

மேலும்; புளிப்புச் சுவை விருத்திக்குச் சாதகமாய் இருப்பினும், அதில் சில நன்மை பயக்கக்கூடியவையாகும். எங்ஙனமெனில், புளிப்பு மாதுளம்பழம், நெல்லிக்காய், எலுமிச்சம்பழமாகிய இவை புளிப்பாக இருந்தபோதிலும் உட்கொள்ளின் பித்தம் சமப்படும். இப்புளிப்புச் சுவை பித்தத்திற்கு அனுகூலமாய் விருத்திசெய்யும் குணமாக இருப்பினும் சீரண காலத்தில் இனிப்பு மாறுதல் (பிரிவு) அடையும் இயற்கையுடையதாதலால் பரிகாரமாகக் கொள்ளப்பட்டது என்பதாம்.

நிற்க, ஓர் வியாதிக்காக மருந்து கொடுத்து நிவர்த்தி செய்யும்போது அம்மருந்தால் வேறு தோடத்தையுடைய பிணி ஏதேனும் உண்டாக்குமாயின் அது எவ்வளவு உயர்தரமான மருந்தாக இருந்தபோதிலும் மருத்துவத்திற்குப் பிரயோசனம் அற்றதென நூல்கள் கூறுகின்றன.

விரோசனத்திற்காக ஓர் மருந்து உட்கொண்டு அதன் சக்திக்குறைவால் பேதியாகாது சீரணித்துவிட்டாலும், அல்லது அம்மருந்தின் வேகத்தால் வாந்தியாகிவிட்டாலும், மீண்டும் பேதி மருந்து கொடுக்கலாகாது. தேவையாயின் காரணமறிந்து மருந்தின் வீறு தணிய உபசாந்தியாக ஏதோனுமொரு கியாழம் முதலியவற்றினைக் கொண்டு பரிகாரம் செய்யலாம்.

உதாரணமாக, இரசகற்பூரம் சேர்ந்துள்ள வெள்ளை எண்ணெய் அல்லது பூர எண்ணெயை மூன்று நாட்களுக்குப் பேதிக்குக் கொடுக்கப்படும் காலத்தில் பேதியாகமால் பூரம் உள்தங்கி நஞ்சுக்குறி குணங்கள் ஏற்படின் அக்கணமே மருந்தை நிறுத்திவிட்டுக் கருவேலம்பட்டையாதிக் குடிநீர் அல்லது திரிபலைக்குடிநீர் ஏதேனும் ஒன்றைக் கொண்டு வாய் கொப்பளிக்கச் செய்யவும். படிகார பற்பம் பசு வெண்ணெயில் குழப்பிக்கொடுக்கவும். நஞ்சுத்தன்மை முற்றிலும் குணமாகும் வரைக்கும் வேறு கடுமையான மருந்துகளைக் கொடுப்பது கூடாது. நஞ்சுத்தன்மையைக் குணப்படுத்துவதே மருத்துவனின் கடமையாகும். அதற்குத் தகுந்த சாந்தமான மருந்துகளைக் கொடுக்கவும்.

## மேற்கோள்

1. “வாதமேலீட்டால் மதுரம்புளியுப்பு
சேதமுறச் செய்யும் சீரையும் - ஓதக்கேள்
காரந்த துவர் கசப்புக் காட்டுஞ்சுவையெல்லாம்
சாரப் பரிகாரஞ் சாற்று.”

2. “பித்தமதிகரிப்பின் பேசும் பரிகாரம்
சுத்தத் துவரோடு சொல்லினிப்புச் சத்தாகும்
கைப்புச் சுவையே கருதுவதன் வீறு
எய்ப்புடையுமென்றுரைத்தாரிங்கு.”

3. “புளி மாதுளையோடு போற்றுங்காய் நெல்லி
களிக்க வெலுமிச்சங்கருதி யளிக்க
வொழியுமதுரமாம் போற்று.”

4. "கொள்ளும் மருந்தொன்றில் கூறும் நலிதீர்ந்து
கள்ளப்பிணி வேறு கண்டிடின்கேள் - உள்ளே
மருந்தாகாதென்றே மருத்துவத்திலான்றோர்
கருத்தமைத்துக் கூறினர் கண்டு."

5. "கொண்டவிரேசனத்தாற் கோருமலங்கழியா
தண்டிடினும் வாந்தி பின்னாகிடினும் - பண்டிதனே
நீட்டாதே மீண்டும் நிகழுமதன் வீறை
ஒட்டவொரு சாந்தியோது.

என்பதினால் மேற்குறிப்பிட்ட விவபங்கள் யாவும் தெரியவரும்.

## நாடியைப் பற்றிய விளக்கம் (வேறு)

நாடியால் பிணி வராமையும், வருகையும் அறிவதெங்ஙனம் ?

1. "வாத பித்தமைய மூன்றும்
வன்பலத்துடனே தத்தம்
பேதமொன்றில்லா வண்ணம்
பேசிய தானந்தன்னில்
நீதியாய் நிலைத்து நிற்கில்
நெடும்பிணி சிக்கவில்லை
தாதுவு மொன்றோ டொன்று
தாவிடின் பிணிகள் தானே.

என்பதினால் வாதம், பித்தம், ஐயம் என்னும் மூன்று நாடிகளும் தம்தம் மாத்திரையளவு இடம், பொழுது இவற்றில் வேறுபாடுகள் இல்லாமல் நிலைத்து நடைபெற்றால் பிணியில்லை எனவும்; மிகுதியாகவோ, குறைவாகவோ கலப்புற்றோ, இடம், காலம் மாறுபட்டோ நாடிகள் நடைபெறுமாகில் அவ்வவற்றிற்குரிய நோய்க் குறி குணங்களைக் காண்பிக்கும் என்றறிக.

2. "அயனரி யரனாயமர்ந்த மூவரும்
தத்த மாத்திரை தானங்காலம்
பேசியாசரத்திடில் பிணியில்லைகாணே
பேதியாயிவர்கள் பிணிங்கில் பிணியே.

என்பதினாலும்,

(வெண்பா)

"மாற்று நல்வாதமு மாறாத பித்தகபம்
முற்றுமவை முரணா மொய்ம்புடனே - உற்றிருக்கில்
நீதியாய் நோயில்லை நின்றவை மாறிடவே
பேதிக்கும் நாடி யென்று பேசு."

(கண்ணுசாமியம்)

என்பதினாலும் அறிக.

வாத, பித்த, ஐயமென்ற நாடிகள் மூன்றும் தத்தம் மாத்திரை, தானம், காலம் இவற்றின் வேற்றுமை அடையாமல் வன்மையுடன் தன்னிலையில் இருப்பின் நோய் என்பதே கிடையாது எனவும்; அவை வேறுபடுமேயானால் நாடி நடையும் பேதப்படும்; பிணிகளும் விளையும் என்பதேயாம்.

குறிப்பு :- அயன், அரி, அரன் என்பதினால், வளி-அழல்-ஐயம் முன்றையும் முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவருக்கும் ஒப்பிட்டு ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் தொழில்களை முறையே புரிந்துவருவதாகக் கூறப்படுகின்றது. இதன் விவரங்களை மற்றோர் இடத்தில் விளக்கியிருப்பதைக் கவனிக்கவும்.

தாதுக்கள் மூன்றும் (நாடிகள் மூன்றும்) தினந்தோறும் சிறப்புறுங்காலம்

1. "தினகரனுதயஞ் சேரும்வாதம்
எனவாம் நண்பகல் இயலும் பித்தம்
அந்தி வரினே யடைவது ஐயம்
பிந்திரவின் முதற் பேசும் வாதம்
இப்படி நாடிபப்பத்தாங்கிடி
கைப்பிடி செல்லுமென்றறிவீர் பிடகரே."

என்பதினாலும்:

2. "காலையில் வாதநாடி கடிகையில் பத்தாகும்
பாலையில் பித்தநாடி பகருச்சி பத்தாகும்
மாலையாம் சேத்துமநாடி மதிப்புடன் பத்தாகும்
வாலையா மனோன்மணிக்கு வகுத்துமே தொகுத்தாமே"
(வயி. சா. சங்கிரகம்)

பகற்பொழுதில் காலை சூரியனுதயம் முதல் பத்து நாழிகை வாதமும், பகல் பத்து நாழிகை பித்தமும், மாலை பத்து நாழிகை ஐயமும் ஆகியவை இவற்றிற்குரிய காலமாகும். அன்றியும் இரவு சூரியஸ்தமன முதல் பத்து நாழிகை வாதமும், நடு இரவு பத்து நாழிகை பித்தமும், பின் இரவு பத்து நாழிகை ஐயத்திற்கும் உரிய காலம் என்றறிக ! இதனை வாத, பித்த, ஐயம் ஆகிய இவற்றின் சிறப்புக் காலம் எனவும் கூறுவர்.

தாதுக்கள் (நாடிகள்) மூன்று வாரங்கள்தோறும் சிறப்புறும் சமயம்.

1. "சந்திரநாட் காலையில் வாதம்
நடத்திடில் சுகமெய்தும்."

2. "சந்திரநாளாஞ் சசிபுகற்புந்து
சுக்கில பக்கச்சுரற்குரு காலையில்
இறைவனியங்கில் எய்துஞ் சுகமே

என்பதினாலும் அறிக.

வாதமானது திங்கள், புதன், வெள்ளி ஆகிய இம்மூன்று தினங்களிலும், கிருஷ்ணபக்ஷத்து வியாழக்கிழமையிலும் காலை நேரத்தில் சிறப்பாக நின்றால் சுகமுண்டாகும்.

மற்ற தினங்களாகிய ஞாயிறு, செவ்வாய், சனி இவ்வாரங்களிலும், கிருஷ்ணபக்ஷத்து வியாழக்கிழமையிலும் காலை நேரங்களில் பித்தம் சிறப்பாக நின்றால் சுகமுண்டாகும்.

குறிப்பு :- சந்திரநாட் காலையில் சந்திரகலை அதாவது இடதுகலை அல்லது வாதம் சிறப்புறும் என்பர்.

சூரியநாட் காலையில் சூரியகலை அதாவது பிங்கலை அல்லது பித்தம் சிறப்பாக நடைபெறும் என்பர்.

நிற்க, ஐயநாடி காலை நேரங்களில் சிறப்புறுவதாக நூல்களில் கூறப்படவில்லை. கவனிக்கவும்.

| | | |
|---|---|---|
| சந்திரன் | - | உடலதிபன் |
| சூரியன் | - | உயிரதிபன் |
| சசி | - | சந்திரன் (திங்கள்) |
| புகர் | - | வெள்ளி |
| புந்தி | - | புதன் |
| குரு | - | வியாழன் |
| சந்திரநாடி | - | வாதநாடி |
| சூரியநாடி | - | பித்தநாடி |
| சுழிமுனை | - | ஐயநாடி |
| இறைவன்௦ | - | அரசன், வாதநாடி. |

## நாடிகள் மூன்றும் வாரங்களில் மாறி நடந்தாலுண்டாகும் பிணியின் தோற்றம்

1. வாதநாடி : ஞாயிறு அன்று காலையில் சிறப்புற்றால் சளி, இருமல், இறைப்பு நோய் ஆகிய இவை உண்டாகும். செவ்வாயன்று காலையில் வாதமோடில் சுரமுண்டாகும். சனிக்கிழமை காலையில் வாதமோடில் சீதளமும், சன்னியும் உண்டாகும். கிருஷ்ணபக்ஷத்து வியாழக்கிழமை காலையில் வாதமோடில் விலா முதல் தேகமெல்லாம் வலியுண்டாகும்.

2. பித்நாடி : திங்கட்கிழமை காலையில் சிறப்புற்றால் சலதோஷம் உடனே காணும். புதன்கிழமை காலையில் பித்தமோடில் நீரேற்றம், தலைவலி இவையுண்டாகும். வெள்ளியன்று காலையில் பித்தமோடில் கண்நோய், காதுநோய்

உண்டாகும். சுக்கிலபக்ஷத்து வியாழக்கிழமை காலையில் பித்தமோடில் தாபசுரம், தலைவலி இவையுண்டாகும்.

ஐய நாடி : காலையில் சிறப்புறுவதாக விவரம் நூல்களில் இல்லை.

தாதுக்கள் (நாடிகள்) மூன்றும் மாதங்கள் தோறும் சிறப்புறும் சமயம்.

1. "மூவரு மீறி முனிவுகொளாமல்
தத்தம் நிலையில் தன்னரசியலும்
காலைவரைதனைக் கிளறக் கேண்மின்
ஆடியாதியாய் ஐப்பசி ஈறாய்
அனிலமதற்கோ ரரசியல் காலம்
மீன் முதலாளி வீறுகொள் மந்திரி
தேள் முதன் மாசி சேனாபதிக்கே."

என்பதினாலும்,

2. "கடக முதல் துலாம் வரையும் வாதமாகும்
கண்ணாடியைப் பசியுமதுவேயாகும்
விடமீனமுதல் மிதுனம் பித்தமாகும்
விரைகமழ் பைங்கூனி ஆனியதுவேயாகும்
திடமான விருட்சிகமதற்கும்பஞ் சேத்துமஞ்
சேர்ந்த கார்த்திகை மாசியதுவேயாகும்
நடை மேவும் வாத பித்த சேத்துமந்தானும்
நலமாக மாத முதல் நடக்குங்காணே
(பக்கம் 79 - ப. சி. நாடி)

என்பதினாலும்,

நாம் தெரிந்துகொள்வது யாதெனில் :

1. வாதம் தன்னிலையில் சிறப்புறும் மாதங்களாவன : கடக முதல் தூலாம் அதாவது ஆடி முதல் ஐப்பசியாகும். இம்மாதங்களில் வாதம் வளர்ச்சிபெறும்.

2. பித்தம் தன்னிலையில் சிறப்புறும் மாதங்களாவன : மீனம் முதல் மிதுனம். அதாவது பங்குனி முதல் ஆனியாகும். இம்மாதங்களில் பித்தம் வளர்ச்சியடையும்.

3. ஐயம் தன்னிலையில் சிறப்புறும் மாதங்களாவன : விருச்சிகம் முதல் கும்பம். அதாவது கார்த்திகை முதல் மாசியாகும். இம்மாதங்களில் ஐயம் வளர்ச்சிபெறும்.

இத்தியாதி விவரங்கள் மேற்கண்ட சூத்திரத்தில் காண்கிறோம்.

அனிலம் காற்று - வாதம்
மந்திரி - பித்தம்
சேனாபதி - ஐயம்

நாடி பார்க்கும் மாதமும், காலமும் (எந்தெந்த மாதங்களில் எந்தெந்த நேரங்களில் நாடியைக் கணிப்பது உத்தமம் ?)

1. "சித்திரை வைகாசிக்குஞ்
செழுங்கதிருதயந்தன்னில்
அத்தமாமானியாடி
ஐப்பசி கார்த்திகைக்கும்
மத்தியானத்திற் பார்க்க
மார்கழி தையு மாசி
வித்தகன் கதிரோன் மேற்கில்
விழுகின்ற நேரந்தானே."

2. "தானது பைங்கூனிக்குந்
தனது நல்லாவணிக்கும்
மானமாம் புரட்டாசிக்கும்
மற்றை ராத்திரியிற் பார்க்கத்
தேனென்ற மூன்று நாடித்
தெளிவாகக் காணுமென்று
கானமா முனிவர் சொன்ன
கருத்தை நீ கண்டு பாரே."

(அகத்தியர் நாடி)

என்பதினால் அறிக.

*1. சித்திரை, வைகாசியில் சூரியோதயத்திலும்;*

*2. ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகையில் மத்தியானத்திலும்;*

*3. மார்கழி, தை, மாசியில் சூரியன் அஸ்தமனத்திலும்;*

*4. பங்குனி, ஆவணி, புரட்டாசியில் இராத்திரியிலும், நாடிகளைக் கணிக்க நாடி நடைதெளிவாகத் தோன்றுமென அறிக.*

## *நாடி நடை காணப்படாமை (சதகநாடி)*

*1.* “குறையாக ஸ்திரிபோகர் நெடுநோயாளர்
குதிரை மதகரியேறி நடந்தோர் எய்த்தோர்
நிறைவாக வுண்டெழுந்தோர் லாகிரி கொண்டோர்
நீர்ப்பாடு நீரிழிவு குறைநோயுற்றோர்
முறையாக வீக்கமுள்ளோர் அத்திக்காய்வால்,
முசித்திளைத்தோர் பயமுற்றோர் விடமணைந்தோர்
அறையாம லோட்டமுற்றோர் கிலேசங்கொண்டோர்
அறப்புசித்தோர் தாது வகுப்புற மாட்டாதே.”

*2.* “மாட்டாங்கியான பெண்கள் கெர்ப்பதத்தோர்க்கு
மாதவிடாயானோர்க்கும் பெரும்பாட்டோர்க்கும்
தேட்டாசை யதிக விசாரத்தினோர்க்கும்
தெய்த்தெண்ணெய் முழுகினர்க்குஞ்
சினங்கொண்டோர்க்கும்
வாட்டாசை கன்னியர்மேல் பறாக்கா னோர்க்கும்
வயசாக இளைத்தோர்க்கும் மதங்கொண்டோர்க்கும்
மோட்டாத்துமாக்களுக்குந் தாதுபார்க்க
முறையாக வருநாடி வகுப்புறாதே.

*3.* “வகுப்பாகக் கைமுறிந்தோர் சோகைகொண்டோர்
மாண்ட பிணந்தனைத் தொட்டோர் வாந்தி விக்கல்
தொகுப்பாக யிவை எடுத்தோர் விரதமுற்றோர்

சோனை மழைதனில் நனைந்தோர் காசங்கீதம்
பகுப்பாகவே படித்தோர் களறிசுற்றிப்
பலநாட்டியங்கள் மிகவாடி எய்த்தோர்
மிகுப்பாக சுவாசமதை யடக்கி னோர்க்கும்
விரைவான நாடியது விளங்குந்தானே.

என்பதினால் அறிக.

1. ஸ்திரீ போகர், நீண்ட காலம் நோயால் வருந்துபவர், குதிரை ஏற்றம், யானை ஏற்றம், நடந்து ஓய்ந்தவர், அதிகம் உண்டவர், லாகிரி கொண்டோர், நீர்ப்பாடு, நீரிழிவு, பெருவியாதி முதலியவற்றால் வருந்துபவர், வீக்கம், அத்திசுரத்தால் இளைத்தோர், பயமுற்றோர், கிலேசங் கொண்டோர். விஷம் தீண்டியவர், ஓட்டமுற்றோர், அளவுக்கு மிஞ்சிப் புசித்தோர் ஆகிய இவர்களுக்குத் தாதுவின் (நடையின்) நடை சரியாகத் தோற்றாவாம்.

2. தவிர, கர்ப்பிணிகள், மாதவிடாயான பெண்கள், பெரும்பாடு, அதிகத் துக்கம், எண்ணெய் தேய்த்து முழுகியவர், சினங்கொண்டோர், முதிர்ந்த வயதினால் இளைத்தவர்கள், மதங்கொண்டோர், ஸ்தூலமாகப் பெருத்த மேனியர் ஆகிய இவர்களது தாதுவின் (நாடியின்) நடை சரியாகத் தோற்றாவாம்.

3. மேலும், கை முறிந்தோர், சோகை, பிணத்தைத் தொட்டோர், வாந்தி, விக்கல் எடுத்தோர், விரதம் இருந்தோர், மழையில் நனைந்தோர், சங்கீதம் படித்தோர், களறி சுற்றி நாட்டியமாடிக் களைத்தோர், சுவாசபந்தனம் செய்தோர் ஆகிய இவர்களது நாடி நடை விரைவானதாகவிருக்கும். ஆதலால் நாடி நடை சரியாகத் தோற்றாதாம்.

(வேறு)

4. நாடி நடை படபடத்து ஓடும் நிலைமைகள்; ஆதலால் நாடி நடை சரியாகப் புலனாகா.

1. "வெய்யிலிலே எப்போதும் நடக்கையாலும்
வெம்பசியி லாகிரி களருந்தலாலும்
துய்ய வெய்யில் புகையிலைகள் கொள்ளலாலும்
துடர்ந்த சுரநித்திரைகள் கொள்ளாததாலும்
தையவே கோபமது கொள்ளலாலும்
நாள்தோறும் ரத்தமது வடிதலாலும்
துய்யவே நாடி நடை தீர்க்கமாகத்
துடிதுடித்துப் படபடத்து ஓடுந்தானே."

என்பதினால்,

எப்போதும் வெய்யிலில் நடந்து தேகம் அலண்டிருந்தாலும், பசி நேரத்தில் சுடு பதார்த்தங்கள், சாராயம் போன்ற லாகிரி வஸ்துக்கள் அருந்தல், வெய்யில் நேரத்தில் புகையிலைகள் கொள்ளல், விடாச்சுரம், நித்திரை பங்கம், மனச் சஞ்சலம், அதிகப்பலவீனம், இரத்தம் வடிதல் முதலியவற்றால் நாடி நடை தீவிரமாயும், படபடவென்றும் ஓடும். ஆதலால் நாடி நடை சரியாகத் தோற்றாவாம்.

(வேறு)

## *நாடி நடை சரியாகத் தோற்றாத வேறு சில நிலைமைகள்*

1. "கொண்டிடவே கயரோகி காசரோகி
குறிப்பாகச் சிற்றின்பம் செய்த பேர்கள்
அண்டியவே தரித்திரர்கள் விருத்தர் பாலர்
அன்பாகத் தண்ணீரில் மூழ்கினோர்கள்
கொண்டியவே இவர்களது உறுப்பின் தாது
கூறவே முடியாத எவர்க்கும் கிட்டும்
பண்டிடவே யிப்பரீட்சை யார்தான் காண்பர்
பராபரத்தின் மகிமையிது பாருபாரே."

என்பதினால்

விருத்தர், பாலர், கயரோகி, காசரோகி, தரித்திரர், சிற்றின்பம் செய்தபேர்கள், தண்ணீரில் மூழ்கியவர்கள் இவர்களது நாடி நடையின் உண்மை சரியாகப் புலனாகாவாம்.

(வேறு)

7. "செப்பவே நாடிதானுஞ்
சிறப்புடன் பார்க்கும் போதில்
ஒப்புடன் பூமியிற்கை
ஊன்றிக்கொண்டிருக்கும் போதும்
துப்புறக் காலைக் கட்டிச்
சோர்வடைந்திருக்கு போதும்
செப்பவே கட்டிருந்தால்
சிதையுடன் நாடிதோன்றா."

என்பதினால்,

பூமியில் கரத்தை ஊன்றிக்கொண்டிருக்கும்போதும், காலைக் கட்டிக்கொண்டிருக்கும்போதும், நாடி பார்க்கும் ஸ்தானத்திற்குமேல் யாதொரு கட்டிருந்தாலும், அச்சமயம் நாடியைக் கணிப்பின் நாடி நடை சரியாகத் தோற்றாவாம்.

(வேறு)

8. "எண்ணெயின் தலையின்போது
மீரமாய் நின்ற போதும்
உண்ணும் நல்லுணவின் போதும்
உண்டாம் வெம்பசியின் போதும்
திண்ணமாய் நடக்கும் போதும்
சிற்றின்பம் மூட்டும்போதும்
பண்ணிய நாடி பார்க்கில்
பலித்திடாதென்று செப்பே."

(ப. சி. நாடி)

என்பதினால்,

எண்ணெய் தேய்த்துத் தலை முழுகும்போதும், ஈர வஸ்திரத்தோடு இருக்கும்போதும், சாப்பிடும் போதும், பசி, நடை, சிற்றின்பம் ஆகிய இக்காலங்களிலும் நாடி பார்க்கில் நாடி நடை சரியாகத்தோற்றாவாம்.

வளி, அழல், ஐயம், தொந்தம் இவற்றின் மிகுத்திக்குறி குணங்கள்.

**1. வளி நாடி (வாதம்) மிகுதியால் வரும் குறி குணங்கள் அல்லது நோய்கள் :-** (இதனை வாதத்தில் வாதம், வாதம் கதித்தல், வாதம்மீறி நடத்தல் எனவும் கூறுவர்.)

1. "வாதமெனும் நாடியது தோன்றில்
சீதமந்தமொடு வயிறு பொருமல் திரட்சி வாய்வு
சீதமுறுங்கிராணி மகோதரம் நீராமை
திரள்வாய்வு சூலை வலிகடுப்புத் தீரை
நீதமுறுங்கி ருமிகுன்மம் அண்டவாதம்
நிலையும் நீர்க்கிரிச்சரங்கள் தந்து மேகம்
பேதகமா முதரபிணி மூலரோகம்
பேசவெகுபிணிகளுமே பொருளதாமே."

(வேறு - அகத்தியனார் சிகிச்சா ரத்னதீபம்)

2. "வாதமே கதித்தபோது வாய்வு எழும்புங் கண்டீர்
வாதமே கதித்தபோது வந்திடுஞ் சன்னி தோடம்
வாதமே கதித்தபோது வந்திடும் வியாதி மேலும்,
வாதமே கதித்தபோது வல்லுடம் மெலிந்து கொல்லும்."

(வேறு - திருமூலம்)

3. "அறியவிம் மூன்றின் தாண்மை சொன்னார் நந்தி
எறிய நல்வாதமெறிக்குங் குணங்கேளு
குறியெனக்கை கால் குளச்சு விலாச்சந்து
பறியென நொந்துடற் பச்சைப் புண்ணாகுமே."

4. "புண்ணாய் வலிக்கும் பொருமுங் குடலோடித்
தண்ணா மலத்தைத் தம்பிக்கும் போக்கது
ஒண்ணான ஆசன முறவே சுருக்கிடும்
பண்ணார் குளிர்சீதம் பகுத்திடும் வாதமே."

(வேறு - அகத்தியர்)

5. "சொல்லவே வாதமது மீறிற்றானால்,
சோர்வடைந்து வாயுவினால் தேகமெங்கும்
மெல்லவைகைகால் களசதியுண்டாம்
மெய்முடங்கும் களசதியுண்டாம்
வெல்லவேயுடல் பொருமும் வயிறுளைக்கும்
விரும்பியன்னஞ் செல்லாது விந்து நட்டம்
கொல்லவே நாப்புளிக்குங் கழிச்சலுண்டாகும்
கூறினார் மலையமுனி கூறினாரே."

## வேறு - வாத ரோகியின் பொதுக்குறி குணங்கள்

(கலிவிருத்தம்)

6. "அறைந்தோம்வாத ரோகியுடல்
அழற்கண்முகமும் பல்மலமும்
நிறைந்த விழியில் நீர் வடியும்
நீண்ட நாவு கறுத்திடவும்
திறைந்தமுள்ளாய் தானிருக்குஞ்
சிறுநீர் பொருமிக்கடுத்து வரும்
உறைந்த நீருங்கருகருத்து
மூறையாய் ரோகமு முண்டாகும்."
(வேறு - அகத்தியர் நாடி)

7. வாதத்தில் வாதமாகில்
வளர்ந்திடு மன்னம் போல
நீதுற்றவுடலினேர்ந்து
நெகிழ்ச்சியாய்ச் சுருங்கும் வாங்கும்
ஆதுற்றுப்பதறுமேனி
யாசனமும் அற்பமாகும்
ஏதுற்றதனத்தின் மின்னே
எண்ணியே யறிந்து சொல்லே.
(வேறு - காவியத்தின் நாடி)

8. "காணப் பாவாத மீறில்
கால்கைகள் பொருந்திநோகும்
பூணப்பாகுடல் புரட்டும்
மலஞ்சலம் பொருமீக்கட்டும்
ஊணப்பா குளிருங்காய்ச்சல்
உடம்பெல்லாங்குத்தும் வாய்வு
வீணப்பாகுத மிறுக்கும்
வியர்வையும் வேர்க்குந்தானே."
*(வேறு - இரத்தினச் சுருக்கம் நாடி)*

9. "மேவியவாதஞ் செய்யுங்
குணந்தனை விரும்பிக்கேளு
தாவிய வயிறு மந்தஞ்
சந்துகால் பொருந்து நோவாம்
சேவியதாது நாசஞ்
சிறுத்துடன் சிறுநீர் விழும்
காவியங் கண்ணினாளே
மலமது கருகிக் காணும்."

மேற்கூறிய செய்யுள்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில் :

வாதநாடிமீறி நடக்கில் சீதம் விழும், வயிறுப்பல், வாயுத் திரட்சி, கிராணி, மகோதரம், நீராமை, வாய்வு, சூலை, வலி, கடுப்பு, கிருமி, குன்மம், அண்டவாதம், நீர்க்கிரிச்சரம், தந்து மேகம், வயிற்றுநோய், மூலரோகம், வாதசன்னி, உடல்மெலிவு, கைகால் குளைச்சு, விலா சந்துப் பொருந்துக்கள் இவை புண்போல் நோதல், மலக்கட்டு, குடற்புரட்டல், ஆசனவாய் சுருங்கல், குளிருண்டாதல், தேகமெல்லாம் குத்தல், கைகால்கள் ஒரு பக்கமாக முடங்கல், குனியவும் நிமிரவும் வொட்டாமை, அன்னம் செல்லாமை, விந்து நட்டம், நாப்புளிப்பு, கழிச்சல், உடல் குளிர்ந்தும், முகம், விழி, பல், மலம் யாவும் கருத்திருத்தல், கண்நீர் வடிதல், நாவு கறுத்தல், நாவரட்சி, நா முள்போல் இருத்தல், சிறுநீர் பொருமிக்கறுத்துக் கடுத்துச் சிறுத்து இறங்கல், வியர்த்தல், வயிறு மந்தம் ஆகிய இக்குறி குணங்களை (நோய்களை) விளைவிக்குமென அறிக.

**2. அழல் நாடி (பித்தம்) மிகுதியால் வரும் குறிகுணங்கள் அல்லது நோய்கள்.** (இதனை பித்தத்தில் பித்தம் கதித்தல், பித்தம் மீறி நடத்தல் எனும் கூறுவர்.)

(சதகநாடி)

1. "உறுதியுள்ள பித்தமது தோன்றில் வெப்பு
உஷ்ணவாயுவத்தி சுரமதி சாரங்கள்
மறதியுடன் கிறுகிறுப்பு பயித்திய ரோகம்
வளர் சோகையழலெரிவு காந்தல் கைப்பு
இருதயத்தில் கலக்கமது மறப்பு தாகம்
உழுங்கனவு மேய னைவு மயக்க மூர்ச்சை
சிறிது பெரும்பாடு ரத்தம் பிரமேகங்கள்
சேர்ந்து மிகுபிணி பலவுஞ் சிறக்குந்தானே."

(வேறு - குணவாகடநாடி)

2. "பித்தமே செனித்தாற் சூடு
பெலத்துடலுலரச்செய்யும்
பித்தமே மிகுந்தாலீளை
யிருமல் பெலத்து நிற்கும்
பித்தமே மிகுந்த தானால் பெலங் குறைந்துடம்பழுத்தும்,
பித்தமே திரட்டிநூ லிற்
பேசினார் பெரியோர் தாமே.

3. "பித்தமே கதித்தபோது பெருத்திடும் வாதமுண்டாம்
பித்தமேகதித்த போது பெருத்திடும் வயிற்றில் வாயு
பித்தமே கதித்தபோது பிதற்றிடும் பித்தே தேளு
பித்தமே கதித்த போது பிறந்திடும் பிணியனேகம்."

(வேறு - திருமூல)

4. "பகுத்திடற் பித்தம் பலபல சிந்தையாம்,
வகுத்திடும் வாந்தியும் வாய் நீர்மிக ஊறும்,
மகுத்திடுமேனியில் மாட்டி எரிப்பேறும்,
மிகுத்த வன்னிக்கு மிக விடங்கைக்குமே.

(வேறு - அகத்தியர்)

5. "கூறிடவே பித்தமது மீறிற்றானால்
கொடுங்காந்தலுட லழற்சி நடுக்க முண்டாம்
மீறிடவேய ரோசிகந்தான் நாவறட்சி
மேலான சோபமது விக்கல் மூர்ச்சை,
தூறியவே கிறுகிறுப்பு காதடைப்பு
தொந்தமாங்கசப்புடனே மண்டைக்குத்து."

6. "ஆமேதான்யத்தி சுரம்பாண்டு சோகை
ஆழலானவிடாச்சுரமும் பிரமேகந்தான்,
போமேதான் காமாலை பித்தவெட்டை
பொல்லாத பண்டுடனே சிவந்த நிராம்,
தேகமேதான் சிவப்பாயு மஞ்சளாயுஞ்
சிறு சிறுத்துயிருண்டு வருங்குழி விழுந்து
நாமேதான் சொன்னோமே பித்தக்கூறு,
நவின்றிட்டார்வாசமுனி நவின்றிட்டாரே.

## *(வேறு - பித்தரோகியின் பொதுக்குறி குணங்கள்)*

(கலிவிருத்தம்)

7. "பித்தரோகி பெருமுடல் சூடாகும்
நித்தமாமுகம் நேர்விழி நாவுபல்
முத்தநீரு முயர்ந்த சிவப்பாகும்
சுத்த மஞ்சளாய்த் தோன்றிடக்கண்டிடே."

## *(வேறு - இரத்தினச் சுருக்கநாடி)*

8. "ஏலவயா குலாய் பித்தஞ்செய்குணம் விளம்பக் கேளாய்
கோலவேல் விழி சிவந்து குளிர்ந்திடிரிருக்கு மல்லால்
சீலவே நீர்கடுத்து நொந்து சுறுக்கெனச்சி வந்துவிழும்
ஞாலமே கிறுகிறென்று நாவுலர்ந்திருக்குங்காணை ."

## (வேறு - அகத்தியர் நாடி)

9. "பித்தத்தில் பித்தமாகில் பிதற்றிடுங் கிறுகிறுக்கும்
சத்தியுமதிகமாகும் சரீரத்திளைப்புண்டாகும்
அத்தியாயுலருமேனி யாகமும் வேறதாகும்
வற்றியே வெளுத்துக்காயம் வறண்டு பின் வீக்கமுண்டாகும்."

## (வேறு - காவியத்தின் நாடி)

9. "தானென்ற பித்த மீறில் சடமெல்லாங் காந்தல் காணும்,
ஊனென்றவாந்தி வாய் நீரூறியே ஒழுகுஞ்சாவான்
வானென்றமட்டில் வெகு மண்டையில் குத்துண்டாகும்
தேனென்ற விக்கல் மூர்ச்சை செவியடைப்புண்டாம்பாரே."

மேற்கண்ட செய்யுட்களால் நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில், பித்தநாடி மீறி நடக்கில் தேகவெப்பு, அத்திசுரம், உஷ்ணவாயு, அதிசாரம், கிறுகிறுப்பு, பயித்தியம், சோபை, பித்த எரிவு, மனக்கலக்கம், மறதி, தாகம், கனவு, அயர்வு, மயக்கம், மூர்ச்சை, பெரும்பாடு, ரத்தபித்தம், பிரமேகம், உடல் உலர்தல், மிகுந்த சூடு (சுரம்), உடல் வெளுத்தல் (பாண்டு), அப்பால் வீக்கம் (ஊதல்நோய்) உண்டாதல், ஈளை, இருமல், பெலக்குறைவு, பெருவாத நோய், வயிற்றில் வாயு, சிந்தித்தல், வாந்தி, வாய் நீருறல், வாய் நீர் ஒழுகல், வாய் கசப்பு, வாய் வேக்காடு, உட்காந்தல், நடுக்கம், தலைவலி, நாவறளல், அரோசகம், விக்கல், கிறுகிறுப்பு, காதடைப்பு, வயிறு எரிதல், நெஞ்செரிவு, அக்கினி மந்தம், குளிர்சுரம், விடாச்சுரம், காமாலை பித்தவெட்டை, விழி சுழலல், விழி குழி விழுகுதல், கண் இருளல், சிறுநீர் கடுத்து நொந்து சுறுக்கெனச் சிறுசிறுத்து மிறங்கல், விழி, முகம், நா, பல், சிறுநீர் இவை மஞ்சளாயும் சிவப்பாயும் இருத்தல் என்பதேயாம்.

## 3. ஐய நாடி (கபம்) மிகுதியால் வரும் குறி குணங்கள் அல்லது நோய்கள்.

(இதனை ஐயத்தில் ஐயம், ஐயம் கதித்தல், ஐயம் மீறி நடத்தல் எனவும் கூறுவர்.)

## (சதக நாடி)

1. "தானமுள்ள சேத்து மந்தானிளகில் வெப்பு,
சயமீளையிமல் மந்தார காசம்,
ஈனமுறுஞ்சந்திடதேதோடம் விக்கம்,
யிருத்ரோகங்கப்பான் விரண தோடம்
மானையிர் சூலை திரள் வியாதி வீக்கம்
வருஞ்சத்தி சுவாசம் நெஞ்சடைப்பு, தூக்கம்
ஏன முறுங்காமாலை பாண்டு சோபை
ஏழு சுரங்கள் பலுதுக்கம் விட முண்டாமே."

## (வேறு - அகத்தியர்)

2. "ஐயமே கதித்த போது யணுகிய வியாதி யுண்டாம்
ஐயமே கதித்த போது யறிந்திடுந் தோடமாகும்
ஐயமே கதித்த போதையமாஞ் சந்நியாகும்
ஐயமே கதித்தபோதவையமே மெலிந்து கொல்லும்."

## (வேறு - திருமூலர்)

3. "விடங்கிய வைய மேலிரைப் பேற்றிடும்,
தடங்கியிருமிடுந்தன் விலா விரண்டும் நோகும்
அடங்கிச்சுரங்காயுமறவற்ற கோழை நீர்
இடங்கியுடல்வற்றி யிரத்த முங்கக்குமே."

## (வேறு -அகத்தியர்)

4. "மண்ணியசேத்தும் மீரில் மாகாயம் வெளுக்கும் வற்றும்
பண்ணியே அன்னஞ் செல்லா பருவிக்கலிருமல் சத்தி,
உண்ணிய மூர்ச்சைஈகா யூசிநீர் வழுவழுத்து,
கண்ணியே விலாவும் நெஞ்சும் கடுப்புடன் நோகும் பாரே."

## (கலி விருத்தம்)

5. "விண்ணில் ரோகி விளங்குஞ் சேத்துமம்
திண்ணமா முகம் திரைவிழி நாவுபல்

கண்ணிற் பீளை கருமலந்தான் வெளுப்பாகப்
பண்ணியே பிணி பகர்ந்திடக் காட்டுமே."

**(வேறு - அகத்தியர் திரட்டு நாடி)**

6. "சேத்துமஞ் செய்குணங்கேள் சில்லெனவுடம்பு வேர்க்கும்
ஏற்றவாய் விடநீரூறி சுழித்து வாவழு வழுக்கும்
நாற்ற நீர் மாய்ந்து விழும் நலம்பெற வெளுக்கு மேனி,
தோற்றுமிக் குணங்கள் கண்டால் விலேற்பனத்
தொகுதியாமே ."

**(வேறு - அகத்தியர் )**

7. "சேத்துமத்திற் சேத்துமமாகில் திமிர்தமாயறியுஞ்
சொன்னோம்
ஆத்மா நல்லதல்ல அழிவ து மெய்கண்டாயே,
கூற்றுவன் வந்திடுவதாகும் குறுவிழி வட்டங்கொள்ளும்
சாத்திரமறிந்து சொன்னோம் யாத்திரை நாடி தானே."

**(வேறு - காவியத்தின் நாடி)**

8. "பாரப்பா ஐயமீறில் பாசத்தினால் தான் மீறும்,
நேரப்பாயிளைக்குந் தேகம் நெஞ்சுடன் விலாவும் நோவாம்
தாரப்பாசுரமுங்காயுஞ் சாதமுமொடுக்கு நாளில்
ஓரப்பாரத்தங் கக்கும் உயல் வற்றுஞ் சுரம் பேறாமே."

**(வேறு -பக்கம் 92 - ப. சி. நாடி)**

9. "ஐயமே கதித்த போதறியவே பொருமல் காணும்
நையுமந்தாரகாசம் நளிர் குளிர் விக்கல் சத்தி,
செய்யுமாமூர்ச்சடைப்பன் தீதுறு காசரோகம்
தொய்யுமாமிணைப்பு சாகம் தோன்று மென்றான்
சொன்னாரே."

இத்தியாதி மேற்கோள்களால் நாம் தெரிந்துகொள்வது யாதெனில்:

ஐயநாடி மீறி நடக்கில், வெப்புகாய நோய், ஈளை (இரைப்பு), இருமல், மந்தார காசம், சந்தி, விடதோடம், விக்கல், இருத்ரோகம் (தாமரக நோய்), கரப்பான், விரணம், சூலைநோய், வீக்கம், வாந்தி, திரட்சிவாயு, மாரடைப்பு, மார்பு வலி, தூக்கம், காமாலை, பாண்டு, சோபை, சுரம், சுபசந்தி, உடல்மெலிவு, விலாவிரண்டிலும் பக்க நோவு (பக்கசூலை), கோழை மிகுதல், உடல் வற்றல், இரத்தவாந்தி, உடல் வெளுத்தல், குளிரும் நடுக்கமும் உண்டாதல், அன்னம் செல்லாமை, மேல்மூச்சு திகைப்பு, வியர்த்தல், நா வழுவழுத்தல், இனிப்பாயிருத்தல், வாய் நீரூரல், முகம், விழி, நாவு, பல், மலம், நீர் இவை வெளுப்பாயிருத்தல், கண்ணிற்பீளை கட்டல், உடல் சில்லிடல், சிறுநீர் அதிகமாக அழிதல், உடல் திமிர்பிடித்தது போலிருத்தல், விழிகள் மேல் நோக்கி வட்டங்கொள்ளல், மரணத்தை அறிவிக்கும் யாத்திரை நாடி எனல், உடம்பெல்லாம் அனல் வீசுதல், வயிறு பொருமல், மூர்ச்சை ஆகிய இக்குறி குணங்களை உண்டாக்கும் என அறிக.

### *4. தொந்த நாடிகள் மிகுதிப்படின் உண்டாகும் பொதுக்குறி குணங்கள் :*

(கலிவிருத்தம்)

*1.* “வெட்டுந்தொந்த ரோகியுடன் பல் முகம்
கிட்டும் நீர் விழிகிளர்மலம் நாவுகள்
தொட்டுமே பலவிதமாகக் காட்டிடும்
மட்டும் ரோகியின் மாபிணி உண்டிடே”

என்பதினால், தொந்தரோகியின் உடல், விழி, பல், முகம், நாவு, நீர், மலம் இவைகளின் நிறமும், தன்மைகளும் கலப்புற்ற குற்றங்களுக்குத் தகுந்தாற்போல் பலவிதமாகத் தோன்றும் என்பதேயாகும்.

### *1. வாத, பித்த, தொந்த நாடி குறி குணங்கள் :*

(சதக நாடி)

*1.* “பொருளான வாதத்தில் பித்தஞ் சேர்த்து
பொருந்து குணங்களாமுஷ்ண வாயுசக்தி

செரியாமை புளித்தேப்பம் பொருமல் நீரிற்
சிவப்பு மலம் பிடித்தலுருந்தாது நட்டம்
கருவான தேகம் திலுளைச்சல் சோம்பல்
கைகால் தறிப்பு நாக்கசக்கு மன்னம்
பரிவான வூண்குறைதல் ருசி கேடாதல்
பலநோயும் வருத்திவைக்கும்பாங்குதானே."

(வேறு - திரட்டு நாடி)

2. "முந்தியவாதம் ரெண்டும் பித்தமொன்றெழுந்ததாகில்
வந்துதான் வயிறு விம்மும் வலிந்திடுந்தாகமோகம்
சிந்தனை மிகவுண்டாக்கும் பொசிப்பையுஞ் செரியாதாக்கும்
பைந்தொடிவாத பித்த தொந்தமென்தான் பகரலாமே."

(வேறு - திரட்டு நாடி)

3. "எண்ணியவாதம் ரெண்டும் பித்தமென்றெழுந்தாகில்
புண்ணெனவுடம்பு நோவாம் புகையென எரியும் நெஞ்சு
திண்மையாய் நாவறண்டு சிவந்து கடுத்து விழும்
அண்ணலா ருரைத்தவுண்மை சித்தவேதமதாமே"

(வேறு - அகத்தியர் நாடி)

3. "வாதத்தில் பித்தமாகில் வாயது குளறிப்பேசும்
பேதித்துக் குளிருங்காலில் வீக்கமும் பெருகவுண்டாம்
தாதுற்றபித்திதானுந்தடைப்படுந் தடங்கண்மாதே
கோதுற்ற வயிறு விம்மிக் குடல் தனைப்புரட்டுந்தானே"

இத்தியாதி மேற்கோள்களிலிருந்து நாம் தெரிந்துகொள்வது யாதெனில், வாத-பித்த- தொந்த நாடியில் உஷ்ண வாயு, வாந்தி, செரியாமை, புளித்த ஏப்பம், பொருமல், நீர் எரிச்சல், மலக்கட்டு, தாது நட்டம், தேக உளைச்சல், சோம்பல், கைகாலசதி, நாக்கசப்பு, அக்கினி மாந்தம், அன்னம் செல்லாமை, ருசி கேடு, வாய்வு மிகுத்தல், வயிறு விம்முதல், வயிற்று வலி, மாதரை இச்சித்தல், தாகம், சிந்தனை மிகுத்தல், உடல் புண்போல்

நோதல், நெஞ்செரிவு, நாவறளல், நீர் சிவந்து கடுத்து வீழல், வாய் குளறிப்பேசுதல், குளிரல், கால் வீங்கல், புத்தி மாறாட்டம், வயிற்றுப்பொருமல், குடற்புரட்டல் ஆகிய இக்குறி குணங்களை உண்டாக்கும் என்றறிக.

### 2. வாத, ஐய, தொந்த நாடிக் குறி குணங்கள் :

(சதக நாடி)

1. "பாங்கான வாதத்தில் சேத்தும நாடிப்
பரிசித்தால் திமில் மேவு முளைச்ச லாகும்
தீங்கான இருமலுடன் சந்தி தோடம்
சேர்ந்தவிடம் பொடி சூலை யிருத்ரோகம்
வாங்காத ஈளை மந்தாரகாசம்
வலியுடனே புறவீச்சுயுள் வீச்சு வீக்கம்
ஓங்காணுஞ்சுர முடனே சுவாசகாசம்
உண்டாகும் வெகு நோய்க்கு முறுதிதானே."

(வேறு - திரட்டு நாடி)

2. "மாளநோய் வாதம் ரெண்டும்
சிலேற்பன மொன்றெழுந்ததாகில்,
ஆனதோர் சரீர நாவுங்கைகால் திமிர்த்து காட்டும்
ஊனமாமமிர்தத் துள்ளே யூத்தையு மிகுந்து விம்மும்
பாலனங்கண்ணாள் வாதசிலேற்பனம்பரிந்து காணே."

(வேறு - அகத்திய நாடி)

3. "வாதத்தில் சேத்துமமாகில் வலியோடு வீக்கமுண்டாம்
பேதித்துத் தலையிடித்துப் பிணங்கிய குணங்க்ள் வேறாய்
தீதுற்ற மெய்வெளுத்துத் திடமுடனசனஞ் செல்லா
பேதித்து நாவு பேசும் பெருகவே வீக்கமுண்டாம்."

இவற்றினின்று நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில், வாத- ஐய - தொந்த நாடியில் உடலில் திமிர் உண்டாதல், உளைச்சல், இருமல், சுரம், சந்தி, வெடிசூலை, இருத்ரோகம்,

(தமரக நோய்), ஈளை, மந்தாரகாசம், உள் வீச்சு, புறவீச்சு, சுவாசகாசம், உடல், நா, கை, கால் இவைகள் திமிர்தல், வலி நோய், தலைவலி, வெவ்வேறு தோட குணங்கள், மெய் வெளுத்தல், உணவு செல்லாமை, பேச்சுத் தடுமாறல், வீக்கம் நாளுக்கு நாள் அதிகப்படல் ஆகிய இக்குறி குணங்களை விளைவிக்கும் என்பதாகும்.

குறிப்பு :- வாதம் இரண்டு பங்கும், ஐயம் ஒரு பங்கு என்றும் செய்யுளில் கூறியிருப்பது பொருத்தமன்று. ஐயம் தன்னளவுக்கு மேலும், அதனிருமடங்குக்குள்ளடங்கியுமிருத்தல் என்றே கொள்ளல் வேண்டும்.

### *3. பித்த, வாத, தொந்த நாடிக் குறி குணங்கள் :*

(சதக நாடி)

1. "சிறப்பான பித்தத்தில் வாதநாடி,
சேரிலுறுதாது நட்டமுதா பீடை
உறைப்பாகச் செரியாமைக்குள் மஞ்சுலை
யுற்றசுரங்கிராணி வயிற்றிரைச்சல் மந்தம்,
அறைப்பான ஓங்கார புறநீர்க்கோர்வை
ஆயாசமிரக்க மொடு மயக்க மூர்ச்சை
முறைக்காய்வு விஷ வீக்கம் மூலவாய்வு,
முரடான நோய் பலவு முடுகும் பண்பே."

(வேறு - குணவாகட நாடி)

2. "பித்தந்தான் வாதத்தோடு பிணைந்து நேர்தோன்றுமாகில்
மந்தப சந்தி வாதம் வந்திடும் பிதற்றலுண்டாம்
உற்றிடும் வாதத்தோடு உறவதாய்ப் பித்த மீறல்
நித்தமும் பிதற்றிப் பேசி நினை விழந்திருப்பரென்னே."

(வேறு - அகத்திய நாடி)

3. "பித்தத்தில் வாதமாகில் பிடரியுங்காலுங்கையுங்
குத்தது போலேயாகுங் குறுதி மெய்பதுறும் பின்னே,

அத்தியாயுலருமேனியாக முஞ்சுரத்தால் நோவாம்,
புந்தியுமடியுமிந்தப் பொறுமைபோய்க் கோபமாமே."

இவற்றால் நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில், பித்த-வாத-தொந்த நாடியில் தாது நட்டம், செரியாமை, குன்மம், சூலை, சுரம், கிராணி, வயிற்றிரைச்சல், மந்தம், புறநீர்க் கோர்வை, ஆயாசம், மயக்கம், மூர்ச்சை, முறைக்காய்ச்சல், கால், விஷ வீக்கம், மூலவாய்வு, சந்நி பயித்திய நோய், நினைவிழத்தல், பிடரி, கால், கைகள் இவற்றில் குத்தலுண்டாதல், மேனி ஒடுங்கிப்பதறல், மேனி வற்றல், பொறுமையின்மை, கோபம் உண்டாதல் ஆகிய இக்குறி குணங்களை விளைவிக்கும்.

### *4. பித்த, ஐய, தொந்த நாடிக் குறி குணங்கள் :*

(சதக நாடி)

1. "பிண்பான பித்தத்தில் சேத்தும நாடி
பரிசித்தாலத்தி சுரமிளைப்பு ஈளை,
கண் காது நயன மலம் நீருமஞ்சள்
கனவயிறு பொருமல் மஞ்சள்நோய் கண்ணோவு
உண்போது மறுத்தல் ரத்தவிப்புருதி காணும்
உளைமாந்தை வீனசமும் ரத்த வீக்கம்,
நண்பான காமாலை சோகை வெப்பு
நணுகி வந்த பல பிணியும் நண்ணுந்தானே."

(வேறு - திரட்டு நாடி)

2. "ஏய்ந்ததோர் பித்தமிரண்டு சிலேற்பன மொன்றெழுந்ததாகில்
ஆய்ந்ததோர் பசியுமில்லை யடிக்கடி வயிறு விம்மும்
தோய்த்ததோர் நயன நீருஞ் சுத்தமாய் மஞ்சள் போலாம்
பேய்ந்ததோர் பித்தமாகில் பித்த சிலேற்பன மதாமே."

(வேறு - அகத்திய நாடி)

3. "பித்தத்தில் சேத்துமமாகில் பிதற்றும் வாய்குளறுமிக்க,
சத்தியும் வாய்நீர்தானுந் தானறியாமலோடுங்,

*கத்தியபேய்கள் போல சுழற்றிய வயிற்றில் நோவாம்*
*பித்தமுமெடுத்துக் கொட்டிப் பிடரியில் நோவதாமே."*

இவ்வகையான மேற்கோள்களால் நாம் தெரிந்துகொள்வது யாதெனில் :- பித்த, ஐய, தொந்த நாடியில், அத்திசுரம், இளைப்பு, ஈளை, கண், காது, மலம், சிறுநீர் இவற்றில் மஞ்சளித்தல் ("கண், காது, நயன மலம், நீறு மஞ்சள்" என்பதின் கருத்து இதுவே. மற்றெல்லாம் மஞ்சளிக்கும்போது மலம் மஞ்சளிப்பது இல்லை), வயிறுப்பொறுமல், மஞ்சள்நோய், கண் நோய், ஊண் மறுத்தல், ரத்தவிப்புருதி, உளைமாந்தை, பீனிச ரோகம், ரத்த வீக்கம், காமாலை, சோபை, வெப்பு, பசியின்மை, பித்த வாந்தி, வாய் பிதற்றல், வாய் குளறல், வாய் நீர்மிகுந்து ஒழுகுதல், வயிற்று நோய், தலைசுற்றல், பிடரியில் நோவு ஆகிய இக்குறி குணங்கள் உண்டாகும் என்றறிக.

குறிப்பு :- பித்தம் தன்னளவில் இரண்டு பங்கும், ஐயம் தன் அளவுக்கு மேலும் அதன் இரட்டிப்புக்கு உள்ளடங்கியும் நாடிகள் நடைபெறும்.

### 5. ஐய, வாத, தொந்த நாடிக் குறி குணங்கள் :

(சதக நாடி)

1. "கண்டாயோ சிலேற்பனத்தில் வாதநாடி
கலந்திடுகில் வயிறு பொருமல் கனத்த வீக்கம்
உண்டாலோ ஓங்காரஞ்சத்தி விக்கல்
உறுதிரட்சை வாய்வுவலி சந்நிதோடம்
விண்டாலே யிளைப்பிருமல் சோபை பாண்டு
விடபாகம் விட சூலை பக்கவாதம்
திண்டாடு நாசிகாபீ டங்கக்கல்
சிரநோய்கள் பலவும் வந்து சிக்குந்தானே."

(வேறு - திரட்டு நாடி)

2. "செப்பிய சிலேற்பன மிரண்டும் வாதமொன்றெழுந்ததாகில்
வெப்புநுங் கபமோட்டுயினிப்பையே மிகவும் வேண்டும்

தப்பில்லாப்பசியுமுண்டு தவனமே பற்றி நிற்கும்,
இப்படிக்குணங்கள் கண்டால் சிலேற்பன வாதமென்னே."

இவற்றினின்றும் நாம் தெரிந்துகொள்ளுவது யாதெனில் :- ஐய, வாத, தொந்த நாடியில் வயிறு பொருமல், கனத்த வீக்கம், வாந்தி, விக்கல், வாயுத்திரட்சி, வாதசந்நி, தோடம், இளைப்பு, இருமல், சோபை, பாண்டு, விடவீக்கம், விடசூலை, பக்கவாதம், நாசிகாபிடம், சிரநோய், இனிப்புப் பண்டங்களையே விரும்புதல், பசியும் தாகமும் மிகுதல், நரம்புகள் வலித்து நிற்றல், பிடரிவலி, விழி மேல்நோக்கல், நாவு குளறல் ஆகிய இக்குறி குணங்களை விளைவிக்கும்.

குறிப்பு :- ஐயம் தன்னளவில் இரண்டு பங்கும், பித்தம் தன்னளவில் மேலும் அதன் இரட்டிப்புக்கு உள்ளடங்கியும் இருக்கும் என்றறிக.

நாடி பற்றிய முக்கிய கவனிப்பு : இங்ஙனம் வாத, பித்த, ஐயமாகிய முத்தோடங்களின் தன்மையைச் சித்தர்கள் இயற்றிய நூன்முகமாய் இதனைப் போன்ற பல செய்யுட்களையும் செவ்வனே அறிந்த பின்னர், ஒவ்வொரு தோடத்தையும் குறிக்கின்ற நாடியுடன் வேறு தொந்தங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்தல் வேண்டும், ஆகையால் முன்னர் கூறியதுபோல் நாடியின் வன்மை, மென்மையை நன்கு உணர்ந்தாலன்றித் தொந்தங்களை அறியப்படாமைபற்றி, நாடியின் துடிப்புக்கு அளவு இன்னதென்பது அறிவிப்பான் வேண்டி *(1)* **"தைகின்ற கோதுமையை அரிசி போலச் - சர்வம் வியாபித்திருக்குமதுதான் கூறில்"** எனக் குணவாகடமும், *(2)* **"அறைந்தார்முனி வரளவு கோள் தோற்றும் - வீரை கோதுமையாம் வியந்து"** எனக் "கண்ணுசாமியமும்" கூறியிருப்பதால், நாடி நடையின் ஒரு மாத்திரை அளவை ஒரு கோதுமையரிசிப் பிரமாணம் எழுந்து அமுங்குவதற்குரிய கால அளவையே மாத்திரையின் இலக்கணம் என்று மேற்கூறிய நூல்களும் மற்றும் பல நூல்களும் கூறுகிறபடியால், தேகத்தின் முத்தோடங்களும் இயற்கையாக இருக்கவேண்டிய மாத்திரைக் கிரமங்களையும் முன்னரே கூறியுள்ளதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும் வேண்டும்.

அப்பால் மூன்று நாடிகளும் தனித்து மீறி நடந்தாலும், தொந்தமாக அதிகரித்து நடைபெற்றாலும் உண்டாகும் குறி குணங்களை மேலே கூறிய செய்யுட்கள் மூலம் நன்கு அறிதல் வேண்டும். இவ்விதத் தொந்த தோடங்களின் நடையை ஒழுங்காக உணர்ந்தபின் தேகம், இடம், காலம், பலம் முதலிய தன்மைகளையும் கவனித்து, ஒரு முறைக்கு இருமுறை வெவ்வேறு காலங்களில் நாடி நடையின் தன்மையைக் கவனித்து, நுண்மையுடன் பகுத்துணர்தல் மிகவும் அவசியமானது. நாடிகள் மூன்றின் அரசியிர் கால உண்மையையும் மனதில் எண்ணி நாடி நடையை ஆராய்தல் சிறந்த முறையாகும் எனப் பலான மருத்துவ நூல்கள் கூறுவதை இங்கே விளக்கியுள்ளேன்.

### *1. வாத மிகுதியுடன் உஷ்ணமும் சேர்ந்தால் ஏற்படு ம் குறி குணங்கள் :*

(சதக நாடி)

“சிறப்பான வாதத்திலுட்டிணந்தானே
சேர்ந்திடு கிலதிசாரமுளைச்சல் வாயு
உரைப்பான பொருமலோடு அக்கினி மந்தம்
உண்டாகும் நீர்ச்சிறுப்பு பிரமேகங்கள்
பிறப்பாடு மதகரிநீர் கரைப்பான் ரத்தம்
பிரமேகம் பெரும்பாடு புறநீர்க்கோவை
அறப்பான வாயுசூலை சேத்தும் ரோகம்
ஆனபலபிணிகளுமே வந்தடருந்தானே.”

என்பதானல், வாதமிகுதியுடன் உஷ்ணம் சேர்ந்தால் அதிசாரம், தேகவுளைச்சல், வாயு, வயிற்றுப் பொருமல், அக்கினிமாந்தம், நீர் சிறுப்பு, பிரமேகங்கள், மதகரிநீர், கரப்பான், ரத்தப்பிரமியம், பெரும்பாடு, புறநீர்க்கோவை, சூலை, கபரோகம் மற்றும் பல பிணிகளும் உண்டாகும் என்பர்.

## 2. பித்த மிகுதியுடன் உஷ்ணமும் சேர்ந்தால் ஏற்படும் குறி குணங்கள் :

(சதக நாடி)

"தழைப்பான பித்தத்திலுட்டிணங் கொண்டால்
சமத்தி சுரம் வெதுப்பு சத்திகுன்மம்
களைப்பான பொருத்து ளைவுவதிசாரங்கள்
கடுப்புடனே வயிற்றுவலி மூலவாயு
இளைப்பாகி யூண்மறுத்தல் நாக்கசப்பு
இரவில் கனவுடனே கங்கார தோடம்
பழைப்பான பயித்திய நோயெரிவுதாகம்
வந்தணுகில் பல பிணிக்கும் வகையதாமே."

என்பதனால், பித்தமிகுதியில் உஷ்ணம் சேர்ந்தால் சயம், வயிற்றுக்கடுப்பு, அத்திசுரம், வெதுப்பு, சத்தி, குன்மம், கீல்களில் உளைச்சல், அதிசாரம், வயிற்றுவலி, மூலவாயு, உணவு செல்லாமை, நாக்கசப்பு, இராக்கனவு, சங்காதோடம், பயித்தியம், உடல் எரிவு, தாகம் மற்றும் பலான நோய்களும் உண்டாகும் என்பர்.

## 3. ஐய மிகுதியுடன் உஷ்ணமும் சேர்ந்தால் ஏற்படும் குறி குணங்கள் :

(சதக நாடி)

"கதிப்பான சேத்துமத்திலுட்டிணங் கூடில்
கலந்த குணஞ்சயமிருமல் சுவாசகாசம்
மதிப்பான கோழை ரத்தம் விப்புருதியுடனே
வளர்நாசிகா பீடமிருந்ரோகங்
கொதிப்பான சிங்ஙவையாக் கிராணவாயு
கொட்டாவி விக்கல் மந்தாரகாசம்
துதிப்பான வீரலத்திக்காய்வுரத்தம்
தோன்றுமிகுபிணி பலவுந் தொந்திப்பாமே."

என்பதினாலும், ஐயமிகுதியுடன் உஷ்ணங்கூடில் சயம், இருமல், சுவாசகாசம், கோழை விழல், விப்புருதி, நாசிகாபீடம், இருதய ரோகம் (தமரக நோய்), நாவு நோய், ஆக்கிராணவாயு, கொட்டாவி, விக்கல், மந்தாரககாசம், ஈரல்நோய், அத்திசுரம், ரத்தபித்தம் முதலிய அனேக ரோகங்கள் உண்டாகும் என்று அறிக.

வளி, அழல், ஐயம் மூன்று தோடங்களின் மிகுதியுடன் வாயுவும் சேர்ந்ததாலுண்டாகும் குறிகுணங்களைக் கீழே விளக்கியுள்ளார்.

## 1. வாத மிகுதியுடன் வாயு கூடினாலுண்டாகும் குறி குணங்கள் :

(சதக நாடி)

"அடர்கின்ற வாதத்தில் வாயு வந்து
யணுகினால் வலுவீச்சித்திமிர் வயாதி,
சுரர்கின்ற வானந்தவாயுபக்கசூலை,
துடைக்குறுக்குவலி விலா பிடரி நெஞ்சு
படர்கின்ற நரம்பி சிப்புயிடங்கடோறும்
பரந்து குத்திக் கொழுவித்து நெஞ்சடைப்புமாகும்,
இடருறவே சீதமுண்டாங் கபம் பெந்திக்கும்
யிதினாலே பல பிணிகள் வந்திருக்கும்பாரே."

என்பதினால், வாதமிகுதியுடந் வாயுவு சேரில் உள்வீச்சு, புறவீச்சு, திமிர்வியாதி, ஆனந்தவாயு, பக்கசூலை, துடைகுறுக்கு, விலா, பிடரி, நெஞ்சு, நரம்பு ஆகிய இவற்றில் வலி, நாப்பிழுப்பு, தேகம் எங்கும் குத்தல், மாரடைப்பு, சீதம், கபமடைப்பு ஆகிய இக்குறி குணங்களை உண்டாக்கும்.

## 2. பித்த மிகுதியுடன் வாயு சேர்ந்தாலுண்டாகும் குறி குணங்கள் :

(சதக நாடி)

"வகையான பித்தத்தில் வாயுகூடினால்
வசமானால் வலிகுன்மம் சூலைவாய்வு,
பகையான வாந்தி விக்கல் அருவருப்புஞ
பயித்தியங்கள் செரியாமை புளித்த ஏப்பம்
தகையாத ஈரல்வலி நெஞ்சில் நோதல்,
தலைகிறுக்கு யசதியாந்தாது நட்டம்
துகைமூலவாயுற்றாலுஷ்ணஞ் சோகை
தொடர்ந்துவரும் பல்பிணிக்குந் தொணிப்பு காணே."

என்பதினால், பித்த மிகுதியால் வாயு கூடினால் வலி குன்மம், சூலை, வாயுவு, வாந்தி, விக்கல், அருவருப்பு, (அரோசகம்) பயித்தியம், செரியாமை, புளியேப்பம், ஈரல்வலி, மார்பு வலி, தலை கிறுகிறுப்பு, அசதி, தாது நட்டம், மூலவாயு, உஷ்ணம், சோகை ஆகிய இக்குறி குணங்களைக் காணலாம்.

### *3. ஐய மிகுதியுடன் வாயு சேர்ந்தாலுண்டாகும் குறி குணங்கள் :*

(சதக நாடி)

"தொந்தித் சேத்துமத்தில் வாயு கூடித் தொடர்ந்த
குன்மம் நெஞ்சடைப்பு சுவாசகாசம்
வந்தித்த குரல்தனிலே உறுத்தல் ஈளை
வழுவழுப்பு நீரூறல் மலத்தில் சீதம்
வெந்தித்தல் கொழுத்தல் குத்துந் திமிர் வியாதி
வீச்சுடனே வலி யெட்டுந்திரட்சி பாண்டு,
அந்தித்த கிறுகிறுப்பு மயக்கம் விக்கல்
ஆனபல பிணிகளுமே வந்தட ருந்தானே."

என்பதினால், ஐயமிகுதியுடனே வாயு சேர்ந்தால் குன்மம், மாரடைப்பு, சுவாசகாசம், குரல் கம்மல், நா வழுவழுப்பு, வாய் நீரூரல், மலத்தில் சீதம் விழுல், தேகம் குத்தல், திமிர் வியாதி, உள்வீச்சு, புறவீச்சு, வலி (இழுப்பு) வாயுத்திரட்சி, பாண்டு, கிறுகிறுப்பு, மயக்கம், விக்கல் முதலிய பாலன ரோகங்களை விளைவிக்குமென அறிக.

வளி, அழல், ஐயம் என்னும் முத்தோடங்களின் மிகுதியுடன் சீதளமும் சேர்ந்தால் உண்டாகும் குறிகுணங்களை விளக்கியுள்ளார்.

### *1. வாத மிகுதியுடன் சீதளம் சேர்ந்தாலுண்டாகும் குறி குணங்கள் :*

(சதக நாடி)

"இருக்குமந்த வாதத்தில் சீதஞ் சேர்ந்தால்
யிளைப்பிருமல் விடசந்தி தோடம் வீச்சு

மருகின்ற குளிர் காய்ச்சல் வீரண தோடம்
வாந்தி எடுத்திடுமுளைவு மயக்கஞ் சோர்வு
ஒருக்கின் றமலவந்தம் பொருமல் வீக்கம்
உள்வீச்சு சூலையொடு பாண்டு ரோகம்
தருகின்ற தனுர்வாதம் பக்கவாதம்,
சார்ந்து வெகு பிணிபலவுந் தழைக்கும் பாரே."

என்பதினால், வாதமிகுதியுடன் சீதளமுங்கூடில் இளைப்பு, இருமல், விடசந்நி, தோடம், உள்வீச்சு, புறவீச்சு, குளிர் காய்ச்சல், விரணம், வாந்தி, மயக்கம், சோர்வு, மலபந்தம், சோர்வு, மலபந்தம், வயிறு பொருமல், வீக்கம், சூலை, பாண்டு, தனுர்வாதம், பக்கவாதம் முதலிய ரோகங்களை உண்டுபண்ணும் என்றறியவும்.

### 2. பித்த மிகுதியுடன் சீதளம் சேர்ந்தாலுண்டாகும் குறி குணங்கள் :

(சதக நாடி)

"தொனிப்பான பித்தத்தில் சீதளங்கூடில்,
தொந்தித்தால் பசிமந்த மிரைச்சல் வாயு,
இனிப்பான கபம் வாய்வுவாத கோபம்
எழும் மூலக்கடுப்புடனே யிருமல் சத்தி
பனிப்பான குளிர்க்காய்ச்சல் விடபாரூடம்
பாங்குடனே காமாலை சோபை வீக்கம்
கனிப்பான நான்கு வழுவழுப்பு தோடம்
கலந்துவரும் பிணிபலவுங் கதிக்குந்தானே."

என்பதனால், பித்தமிகுதியில் சீதளமும் கூடினால் பசி மந்தம், மூலக்கடுப்பு, இருமல், வாந்தி, வயிற்றிரைச்சல், வாய்வு, கபம், வாதகோபம், குளிர்க்காய்ச்சல், காமாலை, பாண்டு, சோபை, வீக்கம், நா வழுவழுப்பு தோடம் முதலிய பலவித ரோகங்கள் உண்டாகும் என்பதேயாகும்.

### *1. ஐய மிகுதியுடன் சீதளமும் கூடினாலேற்படும் குணங்கள் :*

(சதக நாடி)

"அடைவானசேத்துமத்தில் சீதளம் பற்றில்
அணுகினால் சுவாசமடைப்பு யிளைப்பு மூர்ச்சை,
திடமான வாயாச மயக்கம் வியர்வை
சேர்ந்தா விக்கல் சந்நிவிட தோடம், வீச்சு
இடமான வயிறு பொருமல் குளிர்நடுக்கல்
யிரத்த சுரமோங்காரம், பெருத்த வீக்கம்,
கடவான அவ குறி வந்தணுகு மென்றே
சார்ந்த பெரியோ ருரைத்த தயவுதானே."

என்பதனால், ஐய மிகுதியுடன் சீதளமும் சேர்ந்தால் சுவாசமடைப்பு, இளைப்பு, மூர்ச்சை, மயக்கம், வியர்வை, விக்கல், சந்நிவிட தோடம், உள்வீச்சு, வயிறு பொருமல், குளிர் நடுக்கம், ரத்தசுரம், ஓங்காரம், பெருத்த வீக்கம் முதலிய ரோகங்கள் உண்டாகும் என்றறிக.

### *வளி, அழல் ,ஐயம் ஆகிய மூன்று தோஷங்களும்கூடி ஏககாலத்தில் பேதித்து நின்றாலுண்டாகும் குறி குணங்கள் :*

(சதக நாடி)

"தயவானதிரி தோட மூன்றுங்கூடித்
தயனெழுந்தாற் சந்நிவகுண மேனாகும்,
பயமாக மூவருமே பதுங்கினாலும்,
பனிமடர்ச் சந்நியல் குணமேயாகும்,
மயமான சேத்துமத்தில் வாதமானால்,
வாதத்தில் சேத்துமம் வலுக் கொண்டாலும்
நயமான பிணி தீரவெகுநாள் செல்லும்
நாடி வகுப்புணர்ந்து குறி யறியலாமே."

என்பதினால்; வாதம், பித்தம், ஐயம் இம்மூன்று நாடிகளும் ஏகோபித்துமீறி நடந்தாலும், உள்ளடங்கிக் குறைவாக நடந்தாலும் சந்நியைக் குறிக்கும் அவகுணம் எனவும்; அன்றியும் ஐயவாதம், வாத ஐயம் இவ்விரண்டு தொந்தங்களினால் உண்டாகும் பிணிகள் குணமாக வெகு நாட்கள் ஆகுமென்றும் கூறியுள்ளார்.

### வாத்தியாசாத்திய தொந்த நாடிகளிவையெனல்

(சதக நாடி)

"அறிவானவாதத்தில் பித்தமானால்
அடர்ந்த பித்தமதில் வாதமணுகினாலும்,
செறிவான பித்தத்தில் கபமானாலும்,
செறித்த கபம் பித்தத்தில் சேர்ந்திட்டாலும்,
விரிவாக நோய் தீருங் கபத்தில் வாதம்,
பிரண்டாலும் வாதமையம் பினல் கொண்டாலும்
குறியாக மருந்து பலவிதம் செய்தாலும்
கூண்டவிடம் விட்டுவுயிர் கடக்குந்தானே."

என்பதினால், வாத பித்தம், பித்தவாதம், பித்த ஐயம், ஐயபித்தம் இத்தியாதி தொந்த நகங்களால் உண்டாகும் நோய்கள் குணமாகும் எனவும்; ஆனால் ஐயவாதம், வாதஐயம் இவ்விரண்டு தொந்தங்களில் உண்டாகும் நோய்கள் குணமாவது அரிது எனவும் அறிகிறோம்.

### அசாத்திய நாடியும் மரணக் குறிகுணங்களும் இவையெனல்

(அசாத்திய நாடி)

1. "சேத்துமத்தில் சேத்துமந்திமிர்தமாயறியுஞ் சொன்னோம்
ஆத்மா நல்லதல்ல அழிவது மெய் கண்டாயே
கூற்றவன் வந்திடுவதாகுங் குறுவழி வட்டங் கொள்ளும்
சாத்திரமறிந்து சொன்னோம் யாத்திரை நாடிதானே."

### அமிர்தமுண்டு சாகுதல் குறி

2. "பாதைக்கின்ற மூவரில் பக்குவந் தப்பியே,
நிதைக்கின்ற வாதமும் நீங்கிடில்
சுதைக் கொண்டிருந்தாலும் தோன்றியுயிர் விடும்,
பிதைக் கொண்ட வாதபித்தம் பெலனாமே."

3. "பித்தமடங்கி னாற்பேசாதே போய்விடு
எத்தியவையம் எழுந்திடிற் கிட்டாதே,
எத்தியவாத மெழும் பின் மருந்துசெய்,
எத்திய மூன்றினியல்பை யறிந்திடே."

(திருமூலர்)

4. "கண்ட பித்தந்தானடங்கக் காட்டு மருந்தினால்
கொண்ட பயனில்லை குற்றமோ - டண்டு கபம்
ஓடப்பரிகார மோதுவதில்லைத் தெரிய
தேடவாத மோடிற் செய்."

(கண்ணுசாமியம்)

5. "பேசக்கப மீறிப்பின்பற்றப் பித்தமதைப்
பாசவுலகாசை யறும் பண்டிதரே - வாசலிலே
நாடுவதேன் வாதத்தை நாடுங் கபமாயின்
ஓடுமுயிர் நாழிகையிலோப்பு."

6. "ஒப்ப நாடிப்பதற்வுற்று நடுங்கச் சுவைநாச்
செப்பவறண்டு செயலற்றுத் - தப்பூவழி
மேனோக்கக் கண்டத்தில்மீது கபம் நின்றுழலும்
கானோக்கச் சாராதே கண்டு."

7. "செய்ய மூன்றொன்றாகச் சேர நடந்திடிலும்
பைய வடங்கிடினும் பற்றற்று - தொய்ய
வரணைவாற் போற்றுடி தானார்ந் திடினு மக்காற்
சுரணையற்ற விபோஞ் செல்."

(கண்ணுசாமியம்)

8. "இடைதுடைமார்பின் கீனே
யெறிப்படப்பதறி யோடில்
முடுகிட வீங்கு மாகில் மூவரி
லொருவ ரோடில்
படரவேதாக மிஞ்சிப்பஞ்சிடுங்
கண்ணும் வாயும்
அடாவிக் குணங்கள் கண்டால்
யறிந்து கொள் மரண மென்றே."

9. "எடுக்கும் படுக்கும் மெழுந்திருக்கு
மெழுந்தே மூச்சுதனை வாங்கும்
வடுக்கணொத்த விழியிரண்டும்
மலாவிழிக்கும் வழிபாக்கும்,
தொடுக்குந் தொடுத்த சேத்தும
முந்தொண்டைதனை யடைப்பிக்கும்
அடுத்த வருவதிது கண்டாலறிவீர்
மரணம் நிச்சயமே."

(அகத்தியர்)

10. "நடக்கும் நாடி மிகப்பதறும்
நாவும் பல்லும் வறண்டிருக்கும்
மடுங்கும் கெட்டு விழிரெண்டும்
மேலே நோக்கும் விதி பார்க்கும்
தோடுக்கின்ற சிலேத்துமம்
தொண்டைதனில் நின்றுலவும்,
அடுக்கு மதுவே குறியானாலங்கே
செல்லவேண்டாமே."

(குறியடையாள நாடி)

11. "மரணமதை யறிவதற்குக் குறியைக் கேளு
வலுவாக விசைநரம்பு குளிர்ந்து காணும்,
விரண மெனும் பொறிகளெல் லாந்தளர்ந்து மெத்த
விசைநரம்பு தான் தளர்ந்து விரைந்து வாங்கி
நரணமெனப் பற்கடித்து மணியும் நட்டு,
நாவுலர்ந்து மூச்சயர்ந்து நடுக்க முண்டாய்த்
துரண மேலும் வாத பித்த சிலேத்தும மெல்லாம்
சோத்தியம் விட்டிலைப்போற் றுடிக்கில் சாவாம்."

12. "துடிகண்ட சேத்துமத்தான் வெள்ளம்போல்
சுறுசுறுப்பாய் மடமடென வோடுமாகில்
அடிகண்டு மற்றாம் நாள் மரணமாகும்
அப்பனே பித்தமது சிதறியோடில்

முடிகொண்ட மூன்றாம் நாள் சாவார் சொன்னேன்
முழுமையுமே வாதமது சிதறியோடில்
இடிகொண்ட எட்டாம் நாள் மரணமாவார்
இன்பமாய்க் கண்டறிந்தே யிசைந்து நில்லே."

13. "நில்லப்பாவாத பித்தமிரண்டுங்குடி
நிலைதப்பிச் சிதறியது வோடுமானால்
கொல்லுமப்பா பதினைந்து நாளிற்றானும்
குணமாக விதனுடனே ஐயங்கூடில்
வெல்லுமப்பாமண்டலத்தில் யாக்கை பாழாம்,
விதமாக மூன்றுமே ஒவ்வொன்றாய்க்கூடி,
அல்லப்பாயரமைவால் துடியே காணில்
அப்பனேயவர் பிழையாரறிந்து பாரே."

14. "பிழையாத வாதபித்தம் சேத்துமங்கூடிப்
பிரண்டு வருந்தேள் கொடுக்குப்போலேயாடி,
உளையாதவோடம் போலே யோடுமானால்,
உத்தமனே திங்களிலே மரணமாவார்,
குளையாத நாடியின் மெய்குறியைக் கானார்
கூட்டமிட்டுக் குருவெனப் பிரசங்கிப்பார்
விழியான கண்ணிரண்டும் மற்றக்கண்ணும்
விதியறிந்தார் சன்னியுமே விலகும்பாரே."

15. "சன்னியெழும் போலிருந்த நாடி மூன்றும்,
சாதகமாய்ச் சுழல்வண்டு தண்ணீர்மீதில்
உன்னியது பராபரத்தே யோடுறாப்போல்
ஓடியெங்கும் வாதபித்த சிலேத்துமமெல்லாம்
கன்னிய சாதகமாய் வருமேயாகில்
கதிப்பாகும் வாதபித்தவையம் பம்பரம்போல்
பின்னியது விட்டிலைப்போல் கற்றறிந்து வீழில்
பேச்சில்லை மரணமென்று பிரித்துச்சொல்லே."

(பரிபூரண நாடி

16. "வெள்ளம் நீரோடும் போல் சிலேத்தும மீறியோடில்
வள்ளல் தானறியச் சொன்னோம் மரிப்பது மற்றாம் நாளில்
தெள்ளியவாந்தானுஞ் சிதறியேயோடுமாகில்
வள்ளிய நாளோரெட்டில் உறுதியாய்ச் சாவாரென்ன."

17. "பித்தமிப்படியே யோடிற் பிதற்றி நாள் மூன்றிற் கொல்லும்
முத்தியவாதம் பித்தமுயங்கி யப்படியே யோடில்,
பற்றறச் சொன்னோங்கண்டீர், பதினைந்து நாளிற் கொல்லும்
நற்றியவையங் கூடில் நாற்பது நாளிற் கொல்லும்."

18. "அரணைவாலற்றுடிபோலாடில் யாங்கவன் பிழைப்பதில்லை
பரவுதேட் கொடுக்குப் போலும் பதைத்திடிற் சாவுதிண்ணம்
கரையேறும் பதுபோலோடிற் கண்டிடாய் திங்கள் மூன்றில்
வரையணிமுலை நம்பாரே மரணமென்றறிந்து கொள்ளே"

19. "தேளெனத்தெரிந்து சற்றே திரிநாடி செய்யுமாகில்
மாளவே மரணவாதை வந்திடுஞ் சன்னியுடாம்
மீருவதில்லை முன்னாள் விதிப்படி வந்துதீது
நாளறி திங்கட்குள்ளே நாசமாய்க் கொல்லுந்தானே."

20 "ஏற்றியதீபந் தன்னிலெரி சுடர் தீயைப் போல்
போற்றிய நாடிதானும் பொலிவரத்தோன்றுமாகில்
மாற்றறும் வாழ்வுநாளும் மாளுமோர் மாதத்தென்று
நாற்றிசையுள்ளோர்க் கெல்லாம் நாடி நீ நயந்துசொல்லே.
(குணவாக நாடி)

21. "உறைத்தது நாசிக்குறுதிக் குறுதி கேள்
விறைத்திடைப் பிங்கலை விடாதோடின் மூன்றுநாள்
இறைத்த சடமாண்டிலெய்திடு மாகாசம்
பாத்திலிரண்டு நாள் பாயிலிராண்டேனே.

22. "எண்ணியயொருநாளி யங்கிடிற் பிங்கலை
தண்ணியதிரியாண்டிற் தப்பாது மரணம்
ஒன்றிலுபயத்திலோடிற் பத்து நாள்
மண்ணின் மதியாறின் மரிப்பான் குறியிதே."

23. "குறிகேளு நாசன் குறிக் குலவிவாய் வழியோடில்
மறிகேளு திரிநாளில் மரித்திடு வன்றப்பாது
தெறிகேளு மும்மலமும் திரண்டு மிகக் குறைந்துவரில்
பரிவாகும் பட்சத்தில் பாருயிர் தப்பாதே."

24. "தப்பாது வாய் நீர் தான், றாக்கற்றன் மேல் வீழில்
ஒப்பாகத் தானிருக்கச் சேர்ந்த நிழலளைந்திடினும்
செப்பாகத் தானிருக்கச் சேர்ந்த நிழலைந்திடினும்
அப்பாகேள் சாவு நீசமறிந்து கற்பங்கொண்டிடே."

25. "கொண்டிடுந்தோடக் குறி சொன்னாரென்னந்தி
தண்டு முதடுந்தனிப் பல்லு நாக்கொன்றாம்
மண்டிடுந்தாதுவளமாய்க் கறுப்பேரில்
உண்டிடுமாறம் நாலுறுதி யாய்ச் சாவானே."

26. "உறுயியாம் பித்தமுடம் பிளைப்பதாகும்
பொறையாகத்தூ லிக்கிற் போவான் மதியொன்றில்
அறுதியாமையநல்லத்தியுலர்ந்தே
உறுதியோர் மதியில் யொடுங்கிடுஞ் சீவனே."

(அகத்தியர் நாடி)

27. "சீவகலையாய்ச் சேர்ந்திடு நாடியில்
ஆவக்கரம் வைத்தழுத்திடின் மேலேறும்
தாவொத்துடமேனோக்கிற் சாகானொரு நாளும்
பாவொத்துக கீழ்நோக்கிற்பதையாமற் சாவானே."

28. "அறிந்திடில் மூன்றுமடங்கியே முற்றிலும்
எறிந்து மிகவோடிலுமெய்தாதே சாவுதான்
பறிந்து நற்றாது பற்றற்றுக் கீழ்நோக்கில்
மறிந்தேயுயிர் சென்று மறலிகை புக்குமே."

29. "ஐயந்தான்பித்தந்தன்னை யனைத்தெதுத் தேறுமாகில்
நையவோர் நாளிற்காலன் நாடியே வருவதுண்மை
பையவே ஐயம்பாயந்து வாதத்தைப் பற்றி நின்றாற்
செய்யும் வாறென்ன சாவோர், நாழிகை திண்ணந்தானே."

30. "காலமே சேத்துமநாடி கட்டுச்சி பித்தநாடி
மாலையில் வாதநாடி வகைதப்பிப்பதறி நின்றால்
ஏலவேயிவர்கட் கெல்லாமியம் பினாரிதுதானென்று
நாலஞ்சில்மரணமென்று நன்முனியருளிச் செய்தார்."

31. "கடிந்தோர் நாடிதன்னைக் கருதியே பார்க்கும்போது
விடிந்தது சேத்துமநாடி விதறியே துடர்ந்து நின்றால்
கடிந்தது பித்தநாடி கட்டுச்சி துடிக்குமாகில்
மடிந்தது வாதநாடி மாலையில் மரணந்தானே."

32. "போற்றிய நாடிதானும், போத்துபோற் புறந்துடித்தால்,
கீற்றுவில் நுதலேமிகக் கீஞ்சுமானே கேளாய்
காத்திடுந்திங்களொன்றில் கருதியே தீராவிட்டால்
மாற்றிய மாதம் பத்தில் மரணமென் றுரைக்கலாமே.

33. "குறித்திடுஞ் சேத்துமநாடி குதிரைபோல் நிமிர்ந்துநின்றால்
கறுத்திடு விழியாள் நல்ல காரிகையாளே கேளாய்,
மறுத்திவை பேசவேண்டாம் வயதிவை முடிந்ததென்று
பொறுப்பில்லை திங்களொன்றில் புகன்றிடு மரணமென்றே"

34. "சேத்துமநாடி தானுந்தியங்கிய மஞ்ஞைபோல
நாட்டியவட்டை போல நடுங்கியேபதறி நின்றால்
கூட்டவே வேண்டாமேழு நாளில் மரணமென்றுஷ
நாட்டியமுனிவர் சொன்னார் நயம்படக் குறித்துப் பாரே."
(அகத்தியர்)

35. "வணங்கியதோர் வாதபித்த சிலேத்துமந்தன்னில்
வலுவான பித்தமது தளர்ச்சியாகும்
பிணங்கிய தோர்வாதமதிற் சிலேத்துமஞ்சேர்
பின்னல் கொண்டுயிளைப்பாகி உடல்வெளுத்து

இணங்கியதோர் கைகாலுங் குளிர்ந்து நெஞ்சும்
எடுத்தெடுத்துக் கண் மூக்கில் நீரும் பாய்ந்து
உணங்கிய நாவரண்டு பல்லுங் கறுத்து வாந்தி
உண்டாகில் மரணமென வுரைக்கலாமே."

36. "உரையான பித்தமொடு வாதந் தாழ்ந்து,
உற்ற சிலேற்பனமிளகிச் சக்திவிக்கல்
விரையாகவே யடுத்து நெஞ்சடைத்து
மேலிளைப்பாய்க்குரு குலத்து வியர்வையாகி
வரையாக விழி சொருகி மூக்கடைத்து
வாயாலே சுவாசமும் நாவறண்டுதானால்
துரையாக விருந்தாலும் மரணம் வந்து
சுருக்காக மரிப்பதுவுந் திண்ணந்தானே."

(சதக நாடி)

## இதன் பொருள்

1.ஐய நாடி தனித்து இருமடங்கு ஓங்கி நின்று வாதமும் பித்தமும் அடங்கிவிட்டால் மரணம் நிச்சயமாம்.

2. வாதமும் பித்தமும் அடங்கினால் மருத்துவம் செய்வதில் பயனில்லை.

3. பித்தமடங்கினாலும், ஐயம் நாடி மட்டும் தனிது மீறி நடந்தாலும் மருத்துவம் புரிவதில் பயனில்லை. வாதம் எழும்பின் மருந்துகொடு.

4. ஐயம் அதிகமாகிப் பித்தத்தைப் பற்றுமாயின் ஒரு நாளிலும், அல்லது பித்தமடங்கி பின் ஐயமானது வாதத்தைப் பற்றினால் ஒரு நாழிகையிலும் மரணமாவான்.

5. இடை, துடை, மார்பின்கீழ் இவற்றில் நாடி படபடத்துப் பதறியோடில், அதிக வீக்கம், இக்குற்றங்களில் ஏதேனும் ஒன்று நடைபெற்றாலும், அதிக தாகம், நாவறட்சி, கண் பஞ்சிடல் ஆகிய இக்குறி குணங்களும் காணில் மரணம் நிச்சயம்.

6. அதேபோல் நாடிகள் பதறவும் (நிலை தவறித் தடுமாறவும்) நடுக்கம், நாவறட்சி, கண் விழிகள் அசையாது மேல் நோக்கியும், மேல்மூச்சு தொண்டையில் கபம் ஆகிய இவைகளும் நேரின் குணமாகா.

7. மூன்று நாடிகளும் சேர்ந்து ஒரே மாதிரியாக மீறி நடப்பினும் அல்லது உள் அடங்கினாலும் அல்லது வெட்டுண்ட அரணை வால்போல் துடிக்கினும் விரைவில் இறுதிக்காலம் என அறிக.

8. விசை நரம்பு குளிர்ந்தும், ஐம்பொறிகள் தளர்ந்தும், பற்கடித்தலும், நாவுலர்ந்தும், நடுக்கமுற்றும், மூச்சயர்ந்தும், கண்கள் நிலைக்குத்தியும் வாத, பித்த, ஐயம் மூன்று நாடிகளும் சேர்ந்து விட்டிலைப்போல் துடிக்குமாகில் மரணம் நிச்சயம்.

9. ஐயநாடி தனித்து வெள்ளம்போல் மடமடவென்று ஓடினால் மறுநாளிலும், பித்தநாடி தனித்துச் சிதறி ஓடில், மூன்றாம் நாளிலும் வாத நாடி தனித்துச் சிதறியோடில் எட்டாம் நாளிலும் மரணமாம்.

10. வாத, பித்த, ஐயம் மூன்றும் ஏகோபித்து தேள் கொடுக்கைப் போலாடி ஓடம்போல் ஓடுமானால் மாதம் ஒன்றில் மரணமாம்.

11. வாத, பித்த, ஐயம் மூன்றும் கூடி சுழல் வண்டு தண்ணீர் மீது ஓடுறாப் போலோடினாலும், பம்பரம்போல சுழலலுற்றாலும், விட்டிலைப்போல் புரண்டு விழுந்தாலும் மரணம் நிச்சயம்.

12. வாதமும் பித்தமும் சேர்ந்து சிதறியோடில் பதினைந்து நாளிலும் வாத, பித்தம், ஐயம் மூன்றும் சேர்ந்து சிதறியோடில் நாற்பது நாள்களிலும் கொல்லும்.

## சில மரண குறிகள்

13. நாசியில் இடகலை, பிங்கலைகள் இரண்டும் இடைவிடாது மூன்று நாட்கள் ஓய்வின்றி பாயில் ஓராண்டிலும்;

14. இடகலை, பிங்கலைகள் இரண்டும் இரண்டு நாட்கள் இடைவிடாது பாயில் ஈராண்டிலும்;

15. இடகலை, பிங்கலைகள் இரண்டும் ஒருநாள் இடைவிடாது பாயில் மூவாண்டிலும்;

16. ஒரு நாசியின் உபாயமாகப் பத்து நாட்கள் இடைவிடாது பாயில் ஆறு மாதத்திலும்;

17. மூக்கு விட்டு வாய்வழியே சுவாசம் பாயில் மூன்று தினங்களிலும்;

18. மும்மலமும் (மலம், சிறுநீர், வியர்வை) கட்டுப்பட்டு அற்பமாகவரின் பதினைந்து நாளிலும்;

19. எச்சில் உமிழ முடியாமல் தன் பேரிலேயே விழில் ஆறு தினங்களிலும்;

20. தான் உட்கார்ந்திருக்கும்போது தனது நிழல் ஆடினால் உடனேயும்;

21. தண்டு (மூக்குத்தண்டு, செவித்தண்டு) உதடு, பல், நாவு, தாது (உடற்கட்டு) இவை கருப்பு நிறமானால் ஆறாம் நாளிலும்;

22. பித்த தேகியின் உடல் இளைப்பதற்குப் பதிலாகக் கூலித்தாலும், ஐயதேகியுடல் இளைத்து வற்றினாலும் ஒரு மாதத்தில் மரணமாவது நிச்சயம் என்றறிக.

## அகத்தியர் நாடி

23. அன்றியும் மூன்று நாடிகளையும் விரலாலமுத்திப் பார்க்கத் துடிப்பு மேலெழும்பிற் சாகமாட்டான் எனவும், துடிப்பு

காணாது அழுந்திடிற் சாவது நிச்சயம் எனவும், மூன்று நாடிகளும் முற்றிலும் அடங்கினாலும் அதிவேகமாக ஓடினாலும் சாவது நிச்சயம் எனவும் நாடிகள் மூன்றும் தன்னிலை தவறிக் கீழ் நோக்கி நடந்தாலும் சாவு நிச்சயம் எனவும் கூறியுள்ளார்.

24. கிரமம் தவறி காலையில் ஐயநாடியும், நடுப்பகல் பித்த நாடியும், மாலையில் வாத நாடியும் பதறியோடினால் நாலைந்து நாட்களில் மரணம் நிச்சயமாம்.

25. மேலும் கூறுவதாவது, காலைதோறும் ஐயநாடி மீறி தொடர்ந்து நின்றால் மரணம் நிச்சயம்.

26. மூன்று நாடிகளும் எறும்புபோல் ஊர்ந்து ஓடில் மூன்று மாதத்தில் மரணமாம்.

27. மூன்று நாடிகளும் தீபத்தில் எரிகின்ற சுடர்த்தீயைப் போல் தோன்றுமாயின் ஒரு மாதம் சென்று மரணமாம்.

28. நாடிகள் மூன்றும் செமபோத்துபோல் புறந்துடித்தால் பிணியானது திங்கள் ஒன்றில் நீங்காவிடில் திங்கள் பத்தில் மரணமாம்.

29. ஐய நாடி குதிரைபோலும் நிமிர்ந்து நின்றால் திங்கள் ஒன்றில் மரணம் நிச்சயமாம்.

30. ஐய நாடி மயில்போலும், அட்டைபோலும் நடுங்கிப் பதறி நின்றிடில் ஏழு தினங்களில் மரணம் நிச்சயமாம்.

31. முக்குற்றங்களில் பித்தமடங்கி, வாத - ஐய - தொந்தித்து உடல் இளைத்து வெளுத்து கைகால் குளிர்ந்து நெஞ்சு தூக்கித் தூக்கி மூச்சுவிட்டும் கண்ணிலும் மூக்கிலும் நீர் வடிந்தும் நாவறண்டும், பல்லும் கறுத்து வாந்தியும் உண்டாகில் மரணம் நிச்சயம்.

32. பித்தமும் வாதமும் அடங்கி, ஐயம் இளகி நின்று வாந்தி, விக்கல் நெஞ்சடைப்பு மேல்மூச்சு, வியர்வை கண்கள்

சொருகி மூக்கடைத்து வாயில் மூச்சுவிட்டு நாவறண்டும் இருக்குமானால் சீக்கிரத்தில் மரணமடைவது நிச்சயமென்பர்.

## *மரணக்குறி குணங்கள் (வேறு)*

*1. "கண்ணும் பல்லுந்தான் கறுத்துக் கருது மூச்சுவாய் திறந்து
உண்ணும் வயிற்றில் சேத்துமமும் ஓடிமிக வேதானடந்தால்
பண்ணுமருந்து பலியாது பண்பாய்ச் சுவாசம் மேல் வாங்கும்
மண்ணும் விண்ணுந்தானறிய மரணமாவார் கண்டீரே."*

*2. "ஊசிபோல் முகமும் நீண்டும் உடம்பெல்லாம் நரம்புதோன்றி
பாசிபோற் கண்பஞ்சிட்டுப் பரந்திருள் மூடுமாகில்
பேச நாவரண்டு பேசிப் பித்தது பிதற்று மாகில்
காசினியறியச் சொன்னோம் கண்டுகொள் மரணமென்றே."
(அகத்தியர்)*

*3. "கண் நாமுகங்கள் வேறுபட்டுக் காலொடு முகமும் வீக்கமதாய்
தண்ணீர்த் தாகமிகவுண்டாந்தயவாய்ப் பித்த மூர்ச்சையுமாம்
விண்ணை மடுக்கத் திமிருண்டா மேனிகறுத்துப் படபடக்கும்
எண்ணாக்குறிகளிது கண்டால் யிதுவும் மரணக் குறியாமே."*

*4. "மூக்கு நீண்டு நிலம்புரண்டு முழங்கித் தலையு
மிகத்தேர்க்கும்
நாக்குக் குன்றிப் பலபேசும் நலமாய்ப் படுப்பான்
எழுந்திப்பான்
மிக்கலெடுக்கும் மிகப் பதறும் வெறிபோல் பலக்கும் பித்தமும்
தக்க தருணமிதுவென்று சாற்றியுரைத்தார் தவமுனியே "*

*1. "கண்ணை விழித்துப் புரட்டுமெனக் கைகால் நடுக்குந்
தலைசுழற்றும்
விண்ணைப் பார்த்து விழிபிரட்டு மேனிவறண்டு
வெற்றிபெறும்
நண்ணிலொருவன் றனைப் பார்த்து நன்மை பகுத்துரைப்பான்
எண்ணிப் படுப்பான் எழுந்திருப்பான் இதுவே பராசர்
நிலைக்குறியே."
(குறியடையாள நாடி)*

## இதன் பொருள்

1.கண்ணும் பல்லும் கறுத்தும், வாயால் மூச்சுவிட்டும், வயிற்றில் மந்தம் பற்றியும், ஐயநாடி கதித்து ஓடிக்கொண்டும், மேல்மூச்சும் உண்டானால் மரணம் நிச்சயம்.

2. முகம் நீண்டு, உடம்பெல்லாம் பச்சை நரம்பு தோன்றி, கண் பஞ்சிட்டு இருள்மூடி, நாவறண்டு, பேத்தல், பிதற்றல் இவை உண்டானால் மரணம் நிச்சயம்

3. கண், நாடி, முகம் இவை வேறுபட்டுக் காலும், முகமும் வீங்கி தாகம், பித்த, மூர்ச்சை உடம்பில் திமிர் மேனி கறுத்துப் படபடத்தலாகிய இக்குறிகள் கண்டால் மரணம் நிச்சயம் என்பர்.

4. மூக்கு நீண்டு, நிலத்தில் புரண்டு சப்தமிட்டு தலை கனத்து நாவு குளறி, பல பேச்சுப் பேசி படுப்பான் எழுந்திருப்பான் விக்கலெடுக்கும், மேனி பதறும், வெறிபோல் பயித்தியம் மிகுதலாகிய இக்குறி குணங்கள் காணில் மரணம் நிச்சயம் என்பர்.

5. கண் விழித்துப் புரட்டும், கை கால் நடுக்கும், தலை சுழற்றும், விழிமேல் நோக்கிப் புரட்டும், மேனி வற்றும், ஒருவனைப் பார்த்துச் செய்திகள் பொருத்தமற்றதாய்ச் சொல்லுவான், படுப்பான், எழுந்திருப்பான் ஆகிய இக்குறி குணங்கள் உண்டாயின் சாவது நிச்சயம் என்றறியவும்.

## சந்நிபாத சுரங்களிலுண்டாகும் தோடக்குறி குணங்கள்

(வெண்பா)

1. “சார்தேக மீதெரிவு சந்நிசுரம் நாவறட்சி
சேர் தாகம் வாந்திச் சிறுவிக்கலாந்துடனே
பொல்லா மயக்கம்புகல் பிரமை வாய்பிதற்ற
லெல்லாந் தீமைக் குறியாமே.”

2. "தேகங் குளிரத் திகைமிகப் பேசத்
தாகமுடன் பேதி சாரிருமல் வேகமுள
விக்கவிளைப்பு விரும்பவிதில் வாந்தி
மிக்க கொடியதாய் விளம்பு ."

3. "நாவு தடுந்தான் வெடித்து நச்சுசுரங்காய்வதில்
ஏவு மிரத்தக் கழிச்சல் எய்ப்படையதாவு விக்கல்
சித்தப் பிரமை செவி மந்தம் பைந்தொடியே
சுத்தப்பிசகாகுஞ் சொல்."

4. "கேதவலி மூர்ச்சை சேருமிருமல் வாந்தி
தாகமுடன் விக்கல் சார்மயக்கமாகவதில்
மார்புதலை நோயுமாளா நரம்பிழுப்பு
சார்குறி தீதென்றே நீ சாற்று ."

என்பதினால், சந்நிபாத குறிகுணங்களைக் கூறுமிடத்து :

1. தேகத்தில் எரிவு, சந்நி, சுரம், நாவறட்சி, அதிதாகம், வாந்தி, விக்கல், மயக்கம், பிரமை, வாய் பிதற்றல் முதலிய குறிகுணங்கள் கஷ்ட சாத்தியத்தை அறிவிப்பனவாம்.

2. தேகம் குளிர்ச்சி அடையினும், பிரமையுடன் வாய் பிதற்றினும், தாகம், பேதி, இருமல், விக்கல், இளைப்பு, வாந்தி முதலியவை ஏற்படினும் மகா துன்பத்தைத் தெரிவிக்கும் அறிகுறி எனச் சொல்வர்.

3. நாவும், உதடும், வெடித்துக்காண, சுரம் மேலிட்டிருக்க, அதனுடன் இரத்தபேதி, விக்கல், சித்தப்பிரமை, காது மந்தம் முதலிய இலட்சணங்கள் ஏற்படின் பரிகாரத்திற்கு வழி மறிக்கின்ற குறிகள் எனக்கூறுவர்.

4. தேகமாகி எங்கும் ஓயாவலி, இருமல், வாந்தி, தாகம், விக்கல், மயக்கம், மார்புவலி, தலைவலி, நரம்பு இசிவு ஆகிய இக்குறி குணங்கள் நேருமாயின் நோயாளி சுகமடைவதற்கு இடையூறான குறிகள் எனச் சொல்வர். (கண்ணுசாமியம்)

## *சந்நிபாதத்தின் அசாத்தியக்குறி குணங்கள்* (வேறு)

"கையுங் காலு மொருபக்கங் கனத்துத் திமிர்த்து சாய்வாகில்
மெய்யு மறனே வெதும்பி மிகக் கடுத்து நாவுந் தடுமாறும்
செய்யு மென்ன வாய்குளறிச் சீறுஞ் சன்னிவாதமென்க
உய்யும்படியும் வகைகாணோம் உலகோரறியச் சொன்னோமே."

என்பதினால், கையும் காலும் கனத்துத் திமிர்த்து ஒரு பக்கம் போட்டது போட்டபடியே சாய்வாகக் கிடப்பினும், அதிக சுரத்துடனே மேனி கருத்து, வாய் குளறி, நாவு தடுமாறிப் பேசுமேயாகில் இவைகளைச் சன்னிபாதத்தில் அசாத்தியக் குறிகள் எனவும், பிழைக்கும் வழியில்லை எனவும் கூறவேண்டும் என்கிறார்.

## *அசாத்தியக் குறி குணங்கள் அல்லது மரணக்குறி குணங்கள்*

*(வேறு)*

**(சிகிச்சாரத்னதீபம் - கண்ணுசாமியம்)**

**வெண்பா**

*1.* "கையின் மணிக்கட்டைக் காட்சிநுதனடுவில்
ஐயமறவைத் தணிவிழியான் - மையின்றி
நோக்கிற் பெருத்து நுவ்வளவிற் காட்டுமேல்
காக்குமுயிர் போய்விடுமே காண்."

*2.* "பிணியாளன்றன் செவியைப் பின்னின்று கிள்ளத்
திணிதொள் துடியாது தோன்றில் - அணியிழாய்
எச்சிற்றளைத் துப்பினேகாது வாய்தவறின்
இச்சையுயிர் போமி யம்பு."

3. "ஓகையடங்கி யுயிர்போமே யேழ்நாளில்
தேசில் விழியடங்கில் தேரைந்தில் - நாசி
யுயிர்ப்படங்கில் மூன்றிலுயர் நாவிரண்டி
லயிர்க்கு முடல் வெறுக்கிலன்று."

4. "வண்செவியோடே நாசி வல்லென்று தண்ணெனினுந்
தண்புயங்கள் நன்கு சரிந்திடினுந் - திண்மார்பு
மேடிடினுங் கண்மலரில் வெண்மாசி தோன்றினும்
தேடு நமன்றமருஞ்சென்று."

5. "கறுத்துமலம் போயின் கலைமாறாதேகின்
வெறுத்துப் புரண்டு மண்வேண்டின் - செறித்துமலம்
நீரிற்குமுன்னர் றிகழ்ந்திடிற் நீதென்று
பார்த்துரைத்தனரே பண்டு."

6. "தன்னறிவு தப்புந்தனைத் தூக்கென மொழியும்
பன்னிப் பெருங்குரலே பண்பாக்கும் - உன்னிடியின்
நீர்த்தடிக்கும் நெய்யாம்நீ னெரியிலுமெரியும்
பார்க்கில் உலகொழியும் பண்பு."

7. "வெப்புப் பிணியில் வெம்மேகத்தால் வருத்தின்
தப்புமிகை நீறேதானிறங்கின் - செப்பும்
கிராணியிற் பாண்டில் கிளநீர் சுருங்கிற்
பிராணன் பிரியுமெனப் பேசு."

8. "மண்ணிலிறந்திட்ட மக்களுடன் பேசல்
வண்ண விமானந்தான் வந்ததெனல் - நண்ணினர்
தூதரென வுரைத்தல் தூயநலங்கீறல்
ஓதுமிவையாகாவுன்."

9. "முதுகுப் புறங்கை காலூமுன்னுறவே வங்கிக்
கதமுடனே நஞ்சினிலுங் காணில் - குதமோடு
கோசமிக வங்கிக் கூறுமவைச் சில்லிடினும்
நாசமவர்க் கெனவே நாடு."

10. "வீங்கிக் கால் கைப்புறமும் விக்கிவிளைப்போடு
ஏங்கமலநீருமேந் திழையே - ஓங்கியிட
வாந்தியுடனே வயிறும் பொருமுமேல்
சாந்தியரி தென்றே சாற்று."

11. "நாசிவழி தண்ணெனினும் நல்ல திருவாயினின்றும்
வீசுவளி வெம்மைதனில் வீறிடினும் - பாசமிகு
தாகமிகுந்திடினுஞ் சாறுந் துடியிடையாய்
மாகம் புகுந்தேகு மாண்பு."

12. "படுக்கை பொருந்தாமல் பல்லுங் கறுத்துத்
தொடுத்தவிழி மேற்சுழன்று தோன்ற - வடுத்தை
உயர்முகடு நோக்கவுரன் கெட்டேயாவி
துயருற்று நீங்குமாஞ் சொல்."

13. "தாங்கி மலநீருந்தவிக் கவுடற்குளிர்ந்
தேங்கியினத்தாரை யெத்திடினும் - ஓங்குகபம்
கட்டி நெஞ்சில் நின்றுழலக் கண்ணீர் ததும்பிடினும்
கட்டுவிடுங் கால மதுகாண்."

இதன் பொருள் :

1. நோயாளியின் கையின் மணிக்கட்டைப் புருவ நடுவில் நாசியோடு சேரும்படி வைத்திரண்டு விழிகளால் நோக்கும் போது, அக்கரமானது தன்னளவில் சிறுத்துக் காணில் நலம்; பெருத்துக்காணில் மரணம் நேரிடுமாம்.

2. நோயாளியின் பின்புறமாக நின்று திடுக்கென்று அவன் செவியைக் கிள்ளும்போது, அவனது இரண்டு தோள்களும் துடிக்கின் நன்று. அங்ஙனம் துடியாவிடின் மரணத்துக்கேதுவாம். அன்றியும் நோயாளி எச்சிலைத் துப்பும்போது சிதறி விழாமல் வாயோடு லயித்து நின்றால் தீதாகும் என்றறிக.

3. நோயாளியின் செவிகளை இரண்டு கைகளாலும் மூடி உற்றுக் கவனித்தால் அவனுக்குக் கடல் ஒலியைப்போன்ற ஒலி

கேளாதுவிடின் ஏழு நாட்களிலும், அத்துடன் கண்கள் பார்வை இழப்பின் ஐந்து நாட்களிலும், உடலில் ஸ்பரிச உணர்ச்சியில்லா தொழியின் ஒரு நாளிலும் மரணமாகும் என்று ஐம்பொறி புலன்களின் வகையினை உணர்ந்த ஆன்றோர் கூறுவாராயினர்.

4. நோயாளிக்கு மலம் கறுத்துக் கழியுமாயினும், இடகலை பிங்கலை மாறாமல் ஒன்றாகவே ஒடினாலும் படுக்கையை வெறுத்துப் புரண்டு மண்ணில் படுத்துக் கொள்ளினும், நீர் போவதற்கு முன்னர் மலம் போகுமாயினும் தீமை விளையும் என்று தொல்லாசிரியர் துணிந்துரைத்தனர்.

5. நோயாளியின் செவிகளும், மூக்கும் விரைத்துச் சில்லென்று இருப்பினும், புயங்கள் சரிந்திருப்பினும், கண்களின் மணிகள் வெளுத்திருப்பினும் உயிருக்குக் கெடுதிவரும் என அறிக.

6. நோயாளியின் அறிவு மாறித் தூக்குத்தூக்கு என்னும் பதத்தை பிரயோகிப்பினும், விகாரமான ஒலியோடு பெருங் குரலிடினும் மரணம் வரும். அன்றியும், நீரானது நெய் போலத் தடித்திருப்பினும், நெய்யோடு உறவாகுந் தன்மை பெற்றிருப்பினும், அதனை ஒரு வர்த்தியில் புரட்டிக்கொளுத்த எரிந்தாலும் உலகம் விட்டொழியும் காலம் என்றறிக.

7. நோயாளிக்குச் சுரரோகத்திலும், மேகரோகத்திலும், நீர் அதிகரித்திறங்கினாலும், கிராணி ரோகத்திலும், பாண்டு ரோகத்திலும் நீர்வரத் தடையானாலும் உயிருக்குத் தீது என்பர்.

8. நோயாளி முன்பு இறந்த பந்துக்களோடு பேசுதல், விமானம் வந்ததென்று தாவிச் செல்லுதல், எமதூதர் வந்துவிட்டார் என்று பலகால் சொல்லுதல், நிலத்தைக் கீறுதலாகிய இக்குறிகுணங்கள் தீது என்பர்.

9. நோயாளிக்கு முதுகு, புறங்கை, கால் வீங்கி நெஞ்சுவரை செல்லினும், குதமும், கோசமும் வீங்கிச் சில்லிட்டாலும் நற்குறிகுணங்கள் என்று கொள்ளலாம்.

*10.* நோயாளியின் கால் கை மேற்புறமும் வீங்கி, விக்கல், மயக்கம், மலசலமடைத்தல், வாந்தி, வயிறு உப்பிசம், நாவறட்சி ஆகிய இத்தகைய தோடங்கள் காணுமாயின் இதற்குப் பரிகாரம் கஷ்ட சாத்தியம் என்றறிக.

*11.* நோயாளியின் நாசியின்றுவரும் சுவாசம் குளிர்ந்திப்பினும், வாயினின்றுவரும் சுவாசம் உஷ்ணமாக இருப்பினும், தாகமாக இருப்பினும் மரணம் என்க.

*12.* நோயாளி படுக்கையில் சரீரம் பொருந்தாமலும், பற்கள், ஈறு, உதடு இவை கறுத்திடினும், கண் விழிகள் சுழன்று வட்டமிடினும், சீவனானது மயங்கி நீங்கும் என்றறிக.

*13.* நோயாளிக்கு மலசலமடைந்து, உடலும் குளிர்ந்து, சுற்றத்தாரைப் பேரவாவுடன் நோக்கும். அத்துடன் தொண்டையில் கபம் கட்டி இழுப்புண்டாகும், கண்ணில் நீர் வடியும், அக்காலமானது தேகத்திற்கும், நரம்புக்குமுள்ள சம்பந்தம் நீங்கிச் சரீரத்தை வீழ்த்தும் காலம் என அறிவீர்களாக.

**மரணக்குறிகள்** (வேறு)

*1.* பாளமாகக் கிழித்து துணியை நெய்யில் நனைத்து மணிக்கட்டில் சுற்றி மூன்றெமுக்கால் நாழிகை சென்று அவிழ்த்துப்பார்க்கில் வாத நாடியானது :

*அ)* கதித்துவாங்கில் அப்பொழுதிலும்;

*ஆ)* நல்லரவுபோல் நெகிழ்ந்து ஓடினால் இருபத்திரண்டு நாளிலும்;

*இ)* உதைத்து வாங்கினால் ஒன்பது நாளிலும்;

*ஈ)* அட்டைபோல் நடந்தால் மூன்று தினத்திலும்;

*உ)* தந்திபோல் சுண்டினால் அன்று பொழுதிலும்;

*ஊ)* பக்கம் சென்று எதிர்த்து வாங்கினால் முப்பது நாளிலும், மரணம் சம்பவிக்கும் என அறிக. அவ்விதமில்லாது அதே வாதநாடியானது :

1. புழுபோல் நெளிந்தாலும், பஞ்சுபோல் மெதுவாய் இருந்தாலும், சூடு கொண்டாலும், அன்னம்போல் நடந்தாலும் பிணி நீங்கும் என்பதை அறிக.

2. இடது உள்ளங்கால் குளிர்ந்தும், வலது உள்ளங்கால் சூடாயும், குளச்சுகள் குளிர்ந்திட்டாலும் பத்து தினத்திலும்;

3. குளச்சுகளிரண்டும் குளிர்ந்தும், உச்சி வியர்த்தும், நாசி விரைத்தும், இளைப்பு, விக்கல், உடம்பு குளிரிந்து விழியும் இருண்டால் மூன்று தினங்களிலும்;

4. பிடரி, நெற்றி, கழுத்தினுட்புறம் இவை குளிர்ந்தும், விழி நீலநிறமாகி நெஞ்சில் கபம் கட்டுமேயானால் மூன்று தினங்களிலும்;

5. ஒரு நாசியும், முழங்கைப் பள்ளமுங் குளிர்ந்து, இடது உள்ளங்கால் சூடாயும், தொண்டையும் கரகத்தால் ஐந்து தினங்களிலும்;

6. அடித்துடையும் இரண்டு உள்ளங்கால்களும் குளிர்ந்து, இரு செவியும் விறைத்து நின்றால் இரண்டு தினங்களிலும் மரணமாம்.

குறிப்பு :- இவ்வகையில் சாத்தியக் குறிகளையும் இடது உள்ளங்கால் குளிர்ந்தும், உச்சி வியர்த்தும், உடம்பெல்லாம் கனலாக இருந்தாலும் . . . . . .

1. வலது உள்ளங்கால் சூடாயும், இடது உள்ளங்கால் குளிர்ந்தும், உச்சி வியர்த்தும் உடம்பெல்லாம் கனலாக இருந்தாலும்;

2. புருவம், நெற்றி, இடது உள்ளங்கை இவை சூடாயும், உச்சி குளிர்ந்தாலும்;

3. வலது நாசியும், வலது உள்ளங்காலும் வெதும்பி இடது நாசியைத் தேய்க்கும்பொழுது சிவந்தாலும்;

4. உடல் ஆதியந்தமும் சூடேறினாலும் பிணி நீங்கும் எனவும் கூறியுள்ளார்.

## மரணக்குறி குணங்கள் (வேறு)

1. விழி, நாசி, காது, உச்சி, உள்ளங்கால், கைகள் இவை வெளுத்துப் பாதமும் குளிர்ந்தால் ஐந்து நாழிகையிலும்;

2. வாதமும் பித்தமும் அடங்கி, ஐயங்கதித்து, உடல் வெளுத்து, மார்பு குளிர்ந்திடில் தொண்ணூறு கடிகையிலும்;

3. ஐயநாடி எழுந்து வீழ்ந்திடில் இரண்டு கடிகையிலும்;

4. பித்தமடங்கி, வாதமும் ஐயமும் மேலிட்டுக் கண்டத்தில் கபம் அடைத்து, இளைத்து விழிமயங்கிச் சுழன்று, கண்ணில் நீர் வடிந்தால் ஐந்து நாழிகையிலும் மரணமாகும் என்று அறியவும்.

5. வாத பித்த ஐயம் மூன்றும் வெட்டுண்ட அரணைவால் போற்றுடிக்கினும்; உடல் வேறுபட்டுக் குளிர்ச்சி காணினும்; கையால் முகத்தைத் தடவி மனிதரை ஆவலாய் நோக்கிப் பார்க்கினும்; ஏங்கிப் பெருஞ்சுவாச மெய்திடினும்; இரண்டு விலாவும் இளைத்து, தொண்டையில் கபம் கட்டி இரைத்தும், கண்ணில் நீர் வடிந்து கொண்டும்; எடுபிடி என்றெழுந்து விழுந்தும்; உடல் மயங்கியும், நாசி நீண்டும், வியர்த்தும், கண்ணும் பல்லும் கறுத்தும்; கபம் மேலோடியும், கண்கள் சுழன்றும்; பல பேச்சுப் பேசியும் சீவனுமயங்குமேயானால் மரணம் தப்பாது என்றறிக.

## எந்தெந்த நோய்களில் இளைப்புடனே அதிசாரம், சுவாசம், விக்கல் இந்நான்கும் சேர்ந்து தோன்றில் அசாத்தியமாகும் ?

(சதக நாடி)

1. “கானான பிரமேகம் வாதசூலை
சார்வான நீரழிவு குன்மரோகம்
மானான சயரோகஞ் சன்னிதோடம்
யடுத்த விடங்காமாலை பாண்டுசோகை,

மானேகேள் கபரோக மந்திர வியாதி
மஞ்சள் நோய் சூலைநோவு பயித்தியரோகம்
ஊனாகும் வருமிடத்தில் யதிசாரங்கள்
உண்டாகில் சாத்தியமா மூறுதி தானே."
*(கண்ணுசாமியம் - வெண்பா)*

2. "பாண்டு பிரமேகம் பன்வாத சூலைகுன்மம்
வேண்டா சயஞ்சன்னி வெண்சோபை - நீண்ட
அதிநீரே காமாலை யானபிணி தம்மு
ளதி சாரமா காதறி."

என்பதினால் பிரமேகம், வாதசூலை, நீரிழிவு, குன்மம், சயம், சன்னி, வாயு, காமாலை, பாண்டு, சோபை, கபரோகம், அந்திர வாயு, மஞ்சள் நோய், சூலை நோய், பயித்திய ரோகம் ஆகிய இந்நோய்களில் அதிசாரமும் சேர்ந்துண்டானால் அசாத்தியம் என அறியவும்.

## அதிசார நோயில் (பெருங்கழிச்சல்) உண்டாகும் தோடக்குறி குணங்கள்

1. "ஊண்போலடுத்து மலம்ஓகோ கழிந்திடினும்
தேன்போல தன்சாயல் சேரிடினும் - மேல்மேலே
விக்கலுடனீளை வீக்கமதில் வேர்வை
துக்கமுடைத் தென்றே துணி."

2. "சூற்கொண்ட மாதர்க்குஞ் சொல்மகவை யீன்றோர்க்கும்
மேற்கொண்டு பேசி மிகுந்திடினுஞ் - சேற்கண்ணாய்
ஞாலத்து நற்சிகிச்சை நன்மையிலை யாமாயின்
காலந்தாழ் வென்றே கருது !"

3. "உண்டவுணவுஞ் செறியா தூண்மிகுதி செல்லாது
கொண்டதோர் வாயுங் குடலிற்றா - னண்டிப்
புரண்டு வலித்தே பொருமிவரும் பேதி
பிரண்டு வழி தப்பும் பேசு."

என்பதினால்,

1. மாமிசம், நீர் கழுவியது போல் மலம் மிகுதியாய்க் கழித்தாலும், தேன்போன்ற நிறத்தையும் பெற்றிருப்பினும், மேன்மேலும் விக்கம், ஈளை (கஷ்ட சுவாசம்), விக்கல், வியர்வை ஆகிய ஏற்படினும் அப்பேற்பட்ட அதிசார நோய் குணமாவது இல்லை.

2. கர்ப்பமுடைய பெண்கள், பிள்ளைப்பேறுவுடைய பெண்கள் இவர்களுக்கு அதிகமாகப் பேதி உண்டாகில் சிகிச்சையால் பயனடைவது நிச்சயமில்லை என்கிறார்.

3. உண்ணும் உணவு செரியாமலும், உணவைச் சரிவர ஏற்றுக்கொள்ளாமலும், குடலில் வாயு அதிகரித்துப் புரண்டு வலித்துப் பேதியும் மிகுதியாயின் குணமாவது அரிது எனவும் அறிக.

### எந்தெந்த நோய்களில் இளைப்புடனே சுவாசம், விக்கல் இம்மூன்றும் சேர்ந்து தோன்றினால் அசாத்தியமாகும் ?

1. "தொகுத்திட்ட நீரிழிவு மேகசூலை
சுரவீக்கஞ் சந்நிவலி தோடமாந்தம்,
மிகுத்திட்ட கிராணியதிசாரம் வாதம்
விடபாகந்திரள் பாண்டுசோகை காமாலை
வகுத்திட்ட பெரும்பாடு மஞ்சள் நோவு
வாய்வு ரத்த பித்தமுடன் பல நோவுக்கும்
பகுத்திட்ட யிளைப்புடனே சுவாசம் விக்கல்
பற்றினால் மரணமென்று பகுத்துச் சொல்லே."

(வேறு - கண்ணுசாமியம்)

2. "சந்நி விடசோபைசார் குன்மம் நீரிழிவு,
துன்னுங்கிரணி சுரம் பேதி - பன்னுயிர்
மேகம் சயமிவற்றுள் மூச்சு விக்கல் மேல் வீக்கம்
ஆகிலுயிர் போமறி."

என்பதினால் நீரிழிவு, மேகசூலை, சுரம், வீக்கம், சந்நி, வலிநோய், மாந்தம், கிராணி, அதிசாரம், வாதம், விடபாகம், வாயு திரட்சி, பாண்டு, சோபை, காமாலை, பெரும்பாடு, மஞ்சள் நோய், வாய்வு, ரத்தபித்தம் ஆகிய இந்நோய்களில் இளைப்புடனே சுவாசம், விக்கல் இவை சேர்ந்து தோன்றுமானால் பிணியாளன் பிழைப்பிதில்லை என்றே அறியவும்.

## *எந்தெந்த நோய்களில் மிகுந்த வாயு தோன்றினால் மரணமாகும் ?*

1. "சொல்லுகின்ற விடபாகம் வீக்கஞ் சோகை
சூலைவலியழல் வாத நீரிழிவு மேகம்
அல்லல் படுமிளைப்பிருமல் சுவாசகாசம்
யதிகசயஞ் சந்நி விடமாந்ததோடம்
வெல்லுகின்ற கபரேகாந்திரன் வியாதி
வீறான குன்மமத்தி சுரங் காமாலை
வல்லமையாயிந் நோயில் வயிற்றுளைச்சல்
வந்துணுகில் மரணமென்று வசனிப்பாயே."

என்பதினால் விடபாகம், வீக்கம், சூலை, வலிநோய், அழல், வாதம், நீரிழிவு, மேகம், இளைப்பிருமல், சுவாசகாசம், சயம், சந்நி, விடம், மாந்தம், தோடம், கபரோகம், வாயுத்திரட்சி, குன்மம், அத்திசுரம், காமாலை ஆகிய இந்நோய்களில் வயிற்றுளைவும் சேர்ந்து உண்டானால் மரணம் நிச்சயம் என்றறிக.

(சதக நாடி)

1. "வசமான நீரிழிவு பிளவை ஈளை
மந்தாரகாசஞ்சயமி ரத்த பித்தம்
நிசமானவுளைச் சலதிசாரஞ் சந்நி
நீண்ட சுரத்தோட ரத்தம் பிரமேகங்கள்
விஷமான வீக்கம் நீர்க்கெற்பச் சூலை
வீச்சு வலி பெரும்பாடு மூல வாய்வு
துசமான யிந்நோயில் கொழுத வாயுந்
தோன்றிடுகில் மரணமென்று திக்கலாமே."

(வெண்பா - கண்ணுசாமியம்)

**(வேறு)**

2. "மந்தாரகாசமருவும் பெரும்பாடு,
தொந்தவதிசாரந் தோகையே - வந்தணுகும்,
கர்ப்பச் சூலைப்பிளவை காணிரத்த பித்தமதில்
பற்று வாய்வுத் தீராப்பார்."

என்பதினாலும்; நீரிழிவு, பிளவை, ஈளை, மந்தார காசம், சயம், ரத்தபித்தம், வயிற்றுளைவு, அதிசாரம், சந்நி, சுரதோடம், ரத்த பிரமேகம், விடவீக்கம், விடநீர், கருப்பச்சூலை, வீச்சு, வலிநோய், பெரும்பாடு, மூலவாயு ஆகிய இந்நோய்களில் மிகுந்த வாய்வும் சேர்ந்து தோன்றில் சாவு நிச்சயம் என்றறியவும்.

## *எந்தெந்த ரோகங்களில் சிறுநீர் அதிகரித்தாலும் குறைந்தாலும் தீது என்பர்*

"வெப்புப் பிணியதில் வெம்மேகத்தால் வருந்தின்
தப்புமிகை நீரேதானிறங்கன் - செப்பும்
கிராணியிற் பாண்டில்கிளிர் நீர் சுருங்கிற்,
பிராணன் பிரியுமெனப் பேசு."

என்பதினால்; நோயாளிக்குச் சுரரோகத்திலும், மேக ரோகத்திலும் சிறுநீர் அதிகரித்து இறங்கினாலும்; கிராணி, பாண்டு, சோபை முதலிய ரோகத்தில் சிறுநீர் குறைந்து இழியிலும் உயிர்க்குத் தீது என்பர்.

## *மேக ரோகத்திலுண்டாம் தோடக்குறி குணங்கள் (இளைப்பு, சுவாசம், விக்கல், வீக்கம், மயக்கம் இவை சேர்ந்துண்டாகில் சாவு நிச்சயம் என்பர் மேகரோகத்தில்)*

1 "துதிப்பான மேகத்தில் நீரிழிவு மாகா,
தோன்றிய நீரிழிவு தன்னில் வாதமுமாகா,
மதிப்பான வாதத்தில் வயிற்றுளைச்சலாகா
வருமுளைச்சல் தன்னில் வாய்வு கொழுத்துமாகா,

தெதிப்பான வாய்வதில் விக்கலாகா,
கண்ட விக்கல் தனிலிளைப்பு கொழுத்தலாகா
கதிப்பான இளைப்பதிலே சுவாசம் வந்து
கலந்தாலும் மரணம் என்று கருதலாமே."

(வெண்பா - கண்ணுசாமியம்)

2. "மேகத்தில் நீரிழிவு மேவும் வாதநோய்,
வேகவாதத்துள் வயிற்றுளைவு - சோக விக்கல்
பன்னு விக்கல் தன்னில் பகரிளைப்புப்பாங்கதனிற்
பின்னளையாகாது பேசு."

3. "விள்ளுகிறேன் மேகமதில் வாய்வு மாகா
விரைவான வாய்வதிலே திரட்சி யாகா,
கொள்ளுகின்ற திரட்சியதில் வீக்கமாகா,
கூறியதோர் வீக்கமதில் கபமுமகா,
துள்ளுகின்ற சமயமதில் கபமுமாகா
தோன்றுங்கபந்தனிலே ரத்தந் தோன்றாலாகா,
தள்ளுகின்ற ரத்தமதில் சுவாசம் விக்கல்
சார்ந்தாலும் மரணமென்று சாற்றலாமா."

4. "சாற்றுவது நீரிழிவில் பிளவையாகா,
சனமான பிளவையிலே தாகமாகா,
தோற்றமுள்ளதாகமதில் யனலுமாகா,
தியல்பான யனல்தனிலே மயக்கமாகா
சீற்றமுறு மயக்கமதில் வியர்வையாகா,
சீர்கேடாம் வியர்வையிலே கபமுமாகா
பூற்றிருவே கபந்தனிலே விக்கல் வந்து
பொருந்திடுகில் மரணமென்று புகலலாமே."

(கண்ணுசாமியம் - வெண்பா)

5. "நீரிற்பிளவை நிகழ் பிளவையில் தாகம்,
ஒருமதில் தேகத்துறு மனலுந் - தேருமதில்,
சோரு மயக்கமுஞ் சொல் மயக்கத்தில் வியர்வை,
ஆரிற்றீதா மென்றறி."

6. "வேர்வைதனிற் கபமும் மேவுமதில் விக்கல்நோய்,
கார்முகில் நேர்கூந்தலாய் கண்டிடுமேல் - சீர்கொள்,
மருத்துவத்திற்றேர்ந்த மதியுடையாராவி,
தரித்திரா தென்பர்சரி."

(இதன் பொருள்)

1. மேகநீர் வியாதியில் நீரிழிவில் வாதநோய், வயிற்றுளைவு, மிகுந்த வாயு, விக்கல், இளைப்பு, சுவாசம் ஆகிய இக்குறிகுணங்கள் ஒன்றின்பின் ஒன்றாகக் கிளைக்குமேயானால் நோயாளி மரணமடைவது நிச்சயம்.

2. நிற்க, மேக நீர் நோயில் வாயுவும், சுவாசம், விக்கல் இவைகள் கிளைக்குமேயானால் நோயாளி சாவது உறுதி என அறியவும்.

## *மரந்த நோயிலுண்டாம் தோடக்குறி குணங்கள் (இளைப்பு, சுவாசம், விக்கலுண்*

"கருதுகின்ற மந்தமதில் சுரமுமாகா,
கலந்த சுரந்தனில் விஷமே காணலாகா,
மருவுகின்ற விஷமதிலே வீக்கமாகா,
வரும் வீக்கந்தனிலே வயிற்றுப் பொருமலாகா,
பொருமலிலே கபரோகம் புரளலாகா
பொருந்து கபந்தனிலிளைப்புப் பூணலாகா
வெருவிய தோரிளைப்பதிலே சுவாசம் விக்கல்
மேலிடுகில் மரணமென்றே விள்ளலாமே."

என்பதினால் மாந்த நோயில் சுரமும், சுரத்தில் விடதோடம், வீக்கம், வயிறு பொருமல், கபம், இளைப்பு, சுவாசம், விக்கலாகிய இவை ஒன்றின்பின் ஒன்றாய்த் தொடருமேயாகில் நோயாளி சாவான் என்பது திண்ணம்.

## பெரும்பாட்டிலுண்டாம் தோடக்குறி குணங்கள்

(வெண்பா - கண்ணுசாமியம்)

"தேகத்துறு மனலும் தீதாமதி லெரிச்சல்
வேகப்பெரும்பாடு வெண்ணிறமாய்ப் - போகவதில்
நாற்றமேல் மூச்சு நவிலக்க மயக்கம்
தோற்றவுடல் சாயுஞ் சொல்."

என்பதினால்; ஸ்திரீகளுக்குத் தேகவனல் கொண்டு எரிச்சல் உண்டாகி மாதவிடாய் ஏற்பட்ட உதிரம் வெண்ணிறமும், நாற்றத்துடனும் கூடியுள்ள காலத்தில் மார்பு படபடத்து, மேல்மூச்சு, கபம், இருமல், மயக்கம் முதலிய உபாதைகள் தோன்றின் அவர்களது தேகநிலை படிப்படியாக் குன்றும், பரிகாரத்திற்கும் வசப்படாதென உரைப்பார்.

## குன்ம ரோகத்திலுண்டாம் தோடக்குறி குணங்கள்

(சதக நாடி)

1. "புகலுவதுகேள் அத்திவாயு வாகா,
பொருந்தியதோர் வாயுவதிலே குன்மமாகவோ
தகையைபெறும் குன்மமதில் பேதியாகா,
தங்காத பேதியிலே பொரும லாகா,
அகலமுறும் பொருமலிலே கபமு மாகா,
ஆங்காய் கபத்தில் விக்கலணுகலாகா,
சுகம் பெறவே விக்கலிலே மயக்கம் வந்து
தோன்றிடுகில் மரணம் வந்து துடருந்தானே."

(வெண்பா - கண்ணுசாமியம்)

2. "வாதத்திற் குன்மம் வளர் குன்மத்திற் பேதி
யாதலதிற் பொருமலாங்கதனில் - வேதனை செய்,
பொல்லாக் கபமும் புணருமதில் விக்கல் நோய்,
கொல்லுமதின் மயக்கங் கூறு."

என்பதினால்; வாத நோயானது குன்மம் உண்டாகும்போது (வாதகுன்மம்) அத்துடன் பேதியும், வயிறுப்பொருமல், கபம், விக்கல், மயக்கம் இவை ஒன்றின்பின் ஒன்றாய்க் கிளக்குமே யானால் நோயினன் மரணமாவது நிச்சயம் என்றறியவும்.

### சோபை நோயிலுண்டாம் தோடக்குறி குணங்கள்

(சதக நாடி)

1. "துடரானபித்தமதிற் சோபை யாகா,
சோபையிலே வாயுவெழுந்து தொந்திப்பாகா,
இடரான வாயுவதிலே பாண்டு வாகா
வெளிற் பாண்டுதனில் வயிற்றுக் கடுப்பு மாகா,
திடமான கடுப்பதிலே சீதமாகா,
சீதமதிலெழுந்து கபஞ்சேர லாகா,
தடமான கபந்தனிலே மயக்கம் விக்கல்
தரித்திடுகில் மரணமென்று தயவாய்ச் சொல்லே."

(வெண்பா - கண்ணுசாமியம்)
(வேறு)

2 "சொல்லு பித்தத்திற் சோபை சோபைதனில் வாயு தொந்தம்
வல்லவதிற் பாண்டுவன் பாண்டில் - நல்ல
வயிற்றுக் கடுப்பு வளர் கடுப்பிற் சீதம்
பயிலிற் கெடுதியெனப்பன்."

3. "சீதந்தனிற் கபமுஞ் சேர் கபத்தில் விக்கலுட
னோது மயக்கமிவையுற்றிடினு - மாதே கேள்
கோதுதனை நீக்கிக் கூறுலகோர் தாம் போற்றத்
தீதிலுலகு புகுந்தேர்."

(இதன் பொருள்)

பித்த சோபையில் வாயுவும், வாயுவுடன் பாண்டு, வயிற்றுக்கடுப்பு, சீதம் விழல், கபம், மயக்கம், விக்கல் ஆகிய இவை ஒன்றின்பின் ஒன்றாய்த் தொடருமேயானால் மரணம் நிச்சயமென்றறியவும்

## சுர நோயிலுண்டாம் தோடக்குறி குணங்கள்

(சதக நாடி)

1. "தயவான சுரந்தனிலே விடமு மாகா
சார்ந்த விடந்தனிலே தோடந் தழைக்கலாகா
பயமான தோடமதில் சந்நியாகா
பாங்கான சந்நியிலே கபமு மாகா
இயல்பான கபந்தனிலே வீக்கமாகா
விளங்கியதோர் வாய்வதிலே யிளைப்பு மாகா
கயமான யிளைப்பதிலே சுவாசம் விக்கல்
கலந்தாலும் மரணமென்று கழறலாமே."

(வேறு)

2. "இசைந்தபடி சுரந்தனிலே இளைப்பு மாகா
இளைப்பான கபந்தனிலே விடமுமாகா
உசந்தவிடந்தனிலே மயக்கம் வாயுவாகா
உண்டான மயக்கமதில் சுவாச மாகா
அசைத்திலகும் சுவாசமதில் வியர்வையாகா
ஆனகப வியர்வையிலே குளிர்ச்சியாகா
வசைந்திலகும் குளிர்ச்சியிலே மயக்கம் விக்கல்
வந்தாலும் மரணமென்று வழங்கலாமே."

(இதன்பொருள்)

சுர நோயில் விடமும், அத்துடன் தோடம், சந்நி, கபம், வீக்கம், வாய்வு, இளைப்பு, சுவாசம், விக்கல் இவை ஒன்றின்பின் ஒன்ராய்த் தோன்றில் மரணம் நிச்சயமாம்.

அல்லது சுரநோயில் இளைப்பு, கபம், விடம், மயக்கம், வாய்வு, சுவாசம், வியர்வை, சீதளம், விக்கல் இவை தொடர்ந்து தோன்றுமேயானால் நோயினன் சாவது நிச்சயம் என அறியவும்.

## அத்திசுரத்திலுண்டாம் தோடக்குறி குணங்கள்

(சதக நாடி)

"கழறியதோரத்தியிலே காய்வுமாகா,
காய்விலே வாயுவெழுந்து கலக்கலாகா,
உளறிய தோர்வாயுவதிலே உளைச்சலாகா
உண்டானவுளைச்சலிலே விக்கமாகா
கிளறியதோர் வீக்கமதிற் சீதமாகா
குளிர் சீதமதனிற் கபம் கொழுகலாகா
இளகியதோர் கபந்தனிலிலே மயக்கம் விக்கல்
எழுந்தாலும் மரணமென்றிசைக்கலாமே."

என்பதினால்; அத்தியில் சுரமும் (அத்தி சுரம்), அத்துடன் வாயுவு, தேக உளைச்சல், வீக்கம், சீதளம், கபம், மயக்கம், விக்கல் ஆகிய குறிகுணங்கள் தொடர்ந்து தோன்றுமானால் நோயினன் சாவது நிச்சயம் என்றறிக.

## கூடிய ரோகத்திலுண்டாம் (இளைப்பு நோய்) தோடக் குறிகுணங்கள்

(வெண்பா - கண்ணுசாமியம்)

1. "சுரத்திற் கபநோயும் சொல்லுவதில் வியர்வை
இரத்தமுடன் வாந்தி ஈண்டும் - பொருந்தாதே
பேதியுடன் வீக்கம் பேசிடுங் காலாங்கே நீ
வாதிக்க நன்றல்ல வந்து."

2. "கபத்திற் சுரரோகம் காணு முடல்மென்மை
சுபமன்றத்தில் சதிசொல்லின் - விபத்தேயாம்
பேதிக்கமேய் குளிர்ச்சி பேச மயிர்க்கூச்சம்
கோதி லிவையாய்ந்துகொள்."

3. "கொள்ளுமிதனோடு கூறும் விலச்சந்து
விள்ளநடுமுது குமீறிவலி - கொள்ளையிடத்
தோன்றின் மடமயிலே தோட மாங்கூற்றுவனுந்
தோன்றுங் குறிகளெனச்சொல்."

(இதன் பொருள்)

1. கூடிய ரோகத்தில் மிகுசுரம், கபம், வியர்வை, இரத்த வாந்தி ஆகிய இவற்றுடன் பேதியும், விக்கலும் சேர்ந்து தோன்றிமானால் அந்நோயினன் சாவான் என்பது திண்ணம்.

2. அன்றியும் கூடிய ரோகத்தில் சுர மிகுதியும், உடல் மெலிவும், அசதி, ஆயாசம் ஆகியவை உண்டாயின் ஆபத்துக்கு இடமாகும். இத்துடன் தேகக் குளிர்ச்சியும், மயிர்க்கூச்சமும் உண்டாயின் கொடியது எனக்கொள்வர்.

3. மேலும், மேலே குறிப்பிட்ட வரன்முறையில் வந்த குறி குணங்களோடு விலாச்சந்து, நடுமுதுகு இவை அதிகமாக வலிக்குமாயின் எமன் போதருங்காலம் என்றறிக.

### *மரணக்குறி குணங்கள் (வேறு)*

(சதக நாடி)

1. "திண்ணமுடன் நீரடைத்து மலமுஞ்சிக்கி
சிறந்ததொரு நீர்ப்பாய்ந்து சீதமேவி
வண்ணமுள்ளகை காலும் பருத்து வீங்கி,
வயிற் பொருமி நாவறண்டு வாந்தியாகி
எண்ணமுற மூச்சடைத்து விக்கலாகி
இளைப்பதிலே மயக்கமதாய் தேகமெல்லாம்
குண்ணெனவே குளிர்ந்திடுகில் மரணம்வந்து
சாருவது முறுதி யென்று சமைநது சொல்லே."

2. "சமைத்தவண்ணந்தனை எடுத்து விக்கலாகி
சடமான வயிற்பொருமிச் சரீரம் சோர்ந்து
இமைத்தவுடல் புடைத்தெழுந்து விலாவிரண்டு
எடுத்தடித்துஉடல் குளிர்ந்து சத்தியாகும்
இமைத்தவுடன் வெளுத்துப் புறங்கை கால் வீங்கி
ஈண்டலிங்கமுட் சுருங்கி யிளைப்புமாகி
அமைத்த குலை வியர்வையினால் மரணம்வந்து
ஆனவிடலழியுமென யறியச் சொல்லே."

3. “அறிவான கண்டமதில் நோவுமாகி
யம்பாரமே சிவந்து யழல்தானே மேவி
குறியானயண்டமுடன் முகமும் வீங்கி
குறுக்குவடிவயற் புறங்கைகால் கனத்து
வெறியாகத் தாகமுமாய் மயக்கமாகி
விக்கலுடன் மேல் மூச்சாய் வியர்வையாகி
மறிவான நயன மது கூசிப்பார்க்கில்
மரணம் வருமென்று திடன் வகுக்கலாமே.”

4. “வகுப்பான நீர்மலமுமடைந்து விம்மி
வயிற்றிலே குறுகுறுப்பாயாகித் தாகமாம்
பகுப்பான புறங்காலுங் கையும் வீங்கிப்
பரிதாபமிகவாகிப் பிரவேசித்துத்
தொகுப்பான மூர்ச்சையோடசதி யாகிச்
சொல்லரியமனமருண்டு சோகங்கொண்டு
விகுப்பான கையதனால் சேட்டை செய்யில்
விரைவாக மரணமென்று விள்ளலாமே.”

5. “விள்ளுவேன்சி லேற்பனமது மூலத்துற்ரு
மேலே கும்வேக மூச்சாய்ப் பிராணவாயுவை
துள்ளவே சேர்ந்து நெஞ்சடைப்புமாகித்
தொண்டையிலே அலைதிரைபோ லிரைந்து மோதி
மெள்ளவே கண் சிவந்து யருகே பார்த்து
மேனியெல்லாஞ் சோகமுமாய் வெளுத்துக் காட்டி
கள்ளவே குருவியர்வை வேர்த்த தானால்
காலனுயிர்வாங்குவது வேர்த்து தானால்.”

6. “உண்மையுடன் அடிவயிறு முதுகும் வீங்கி
யுறு மூலவக்கினியுங் கேடதாகி
வண்மையுடன் அன்னமதை வெறுத்துக் காட்டி
வயிற்பொருமிமேல் மூச்சாய் வாந்தியாகி
பெண்மையிலே தசநாடிக் குன்றி வாதம்
பித்தமதுவொடுங்கி வளர்கப் மேற் பொங்கி
திண்மையுடன் மூச்செடுத்து மரணம் வந்து
சேருமென முன்னோர்கள் தெளிந்தவாறே.”

7. "பழிபாடாஞ்சேர்த்தும மொடுவாதஞ் சேர்ந்தால்
பலநோய்க்கு மரணம் வந்து பற்றுந்தானே."

(இதன் பொருள்)

1. நீரும் மலமும் அடைபட்டு உடம்பு நீர்கோத்து, சீதளம் உண்டாய்க் கைகால்கள் பருத்து வீங்கு, வயிறு பொருமி, நாவறண்டு, வாந்தி, மூச்சடைப்பு, விக்கல், மயக்கம், தேகம் சில்லிடல் ஆகிய இக்குறி குணங்கள் தோன்றில் மரணம் நிச்சயம்.

2. விக்கல், வயிறு பொருமல், மேனிவாடல், உடல் வீங்கல், விலாவிரண்டும் தூக்கித்தூக்கி மூச்சுவிடல், உடல் குளிரல், வாந்தி, உடல் வெளுத்தல், புறங்கால், கைகள் வீங்கல், லிங்கம் உட்சுருங்குதல், இளைப்பு, வியர்வை ஆகிய இக்குறி குணங்கள் சேர்ந்து தோன்றில் நோயினன் இறப்பான் என்பது நிச்சயம்.

3. கண்டத்தில் நோவு, மேனி சிவந்து காங்கையுண்டாய், அண்டமும் முகமும் வீங்கி, குறுக்கு அடிவயிறு, புறங்கால், கைகள் கனத்து வீங்கி, தாகம், மயக்கம், விக்கல், மேல்மூச்சு, வியர்வை, கண் கூசல் இத்தியாதி குறிகுணங்கள் சேர்ந்து காணில் நோயினன் சாவது நிச்சயம்.

4. நீரும் மலமும் அடைபட்டு, வயிறு பொருமி இரைத்து, தாகம், புறங்கால் கைகள் வீங்கிப் பரிதாபமிஞ்சி, மூர்ச்சை, அசதி, மனமருளல், சோகம், கையால் சேட்டை ஆகிய இக்குறி குணங்கள் சேர்ந்து தோன்றுமாகில் மரணம் நிச்சயமென்றறிக.

5. ஐயம் அதிகரித்து வெகு மூச்சுண்டாய், பிராணவாயுவைத் தம்பித்து நெஞ்சடைத்துத் தொண்டையில் கோழைகட்டி, இரைத்து கண்சிவந்து அருகே பார்த்து, மேனி சோகமுடன் வெளுத்து, குரு வியர்வையும் வியர்த்துதானால் மரணம் நிச்சயம் என்றறிக.

6. அடிவயிறும் முதுகும் வீங்கியும், சடராக்கினியும் கெட்டு, அன்னம் வெறுத்து, வயிறு பொருமி மேல் மூச்சு, வாந்தியுமாகி, வாதபித்தமொடுங்கி ஐயமேலிட்டு கடுஞ்சுவாசமும் உண்டாகில் மரணம் நிச்சயம்.

7. சேத்துமத்துடந் வாதஞ் சேர்ந்து தொந்தமாக வரக்கூடிய அனேகம் பிணிகள் மரணத்துக்கேதுவாகும் எனவும் கூறியுள்ளார்.

## *சாத்தியா சாத்திய நாடிக்குறி குணங்கள் பற்றிய சில பொதுவான அபிப்பிராயம்*

**(சதக நாடி)**

"தெளிவான வாதபித்த சேத்து மத்தால்
சேர்ந்துவரும் பல பிணியுரத்தினோடு
வளிவாக நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு
வந்தனுகில் தேகமதில் வலு வியாதி,
நெளிவாகப் பித்தமோடு உஷ்ணமிஞ்சி
நிலைத்தபிணி அவுடத்தால் தீரும் தீரும்
பழிபாடாஞ்சேத்துமமொடு வாதஞ் சேர்ந்தால்
பலநோய்க்கு மரணம் வந்து பற்றுந்தானே.."

என்பதினால், வாதபித்த சேத்துமங்கள் தனித்து மீறியும், கலப்புற்றும் தேகத்தினிடத்தில் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தி எட்டு பற்பல பிணிகள் திறமாயுண்டாகும். அவற்றுள் பித்தமுடன் உஷ்ணம் கூடினால் உண்டாகும் பிணிகள் வயித்தியத்தால் தீரும் எனவும்; ஆனால் சேத்துமத்துடன் வாதஞ்சேர்ந்துஉண்டாகும் அனேக நோய்கள் மரணத்துக்கேதுவாகும் எனவும் நூல்கள் கூறுகின்றன.

## *நோய்கள் அசாத்தியமாயினும் குணமாக வேண்டின் கீழ்கண்ட விதிகள் அனுசரித்தால் நலமெனவும் கூறியுள்ளார்*

**(சதக நாடி)**

*1.* "புற்று நோய் தீரவென்றால் தருமம் வேண்டும்
பாங்கான குணம் வேண்டும் வணக்கம் வேண்டும்
சித்திரமாய் அவுடதங்கள் செய்யவேண்டும்
செய்மருந்து சுத்தி வேண்டும் பத்தியும் வேண்டும்
முத்திபெறும் வைத்தியன்மேல் கிருபை வேண்டும்
முன்னோர்கள் நூல் முறைபோல் நடக்கவேண்டடும்
புத்தியுடனிப்படியே நடந்த பேர்க்குப்
பிணி தீருமென்று மனம் பொருந்திச் சொல்லே."

1. “பொருந்தியதோர் சதகமென்று நூறுஞ்சொல்லிப்
புகழ்பெரிய நிகண்டுதொல் காப்பிய புராணம்
அருந்தவஞ்செய் காரிகை நன்னூ லிவக்கிய மிந்நூல்
ஆனவிரிச் சொல் நேமி நாதத்தோடு
வருந்துபண்ணூல் பாட்டி யலுமெழுததுஞ் சொல்லும்
வரும்யாப்பு பொருத்தவிதி யலங்காரஞ் சொல்
திருந்தவடி யேனுரைத்தேன் அறிவுள்ளோர்க்குச்
சிறப்பாகச் சொல்லுவது உங்கள் சிறப்புதானே.”

3. “சிறப்பாக வாராய்ந்து வாதம்பித்தம்
சேத்தும முந்தொந்தமுடன் தீரும் தீரா
இறைப்பான தத்துவத்தின் பஞ்சபூத
முட்கிரிகை தசநாடி வாயு பேதம்
நறைப்பாகத் தென்பொதிகை தன்னில் வாழும்
நன்முனிக்கு சத்குருபரன்தான் கண்டு சொன்னான்
அறைப்பாக நினையாமலுணர்ந்த பேர்க்கு
அம்புவியிலாதி யோர் வாழ்வுண்டாமே.”

4. “உண்டான யிந்நூ லையுணர்ந்த பேர்கள்
உலகுதனில் பெரியோர்களாத்ம ஞானி
கொண்டாடும் வித்தைமதி புத்தி யுண்டாம்
குருதெரிசனமும் பெருகி ஞான முண்டாம்
வண்டாடும் பூமாது நிறைவாழ் வுண்டாம்
மகாமோட்சராயுட்சிவ பதமே நல்கும்
பண்டோர்கள் நூல்முறையாராய்ந்து சொன்னேன்
பாங்கான சதக மென்றும் நூலுமுன்றே.”

**(இதன் பொருள்)**

வியாதி அசாத்தியமாயிருப்பினும் அதனைத் தீர்க்கவென்றால் தருமம் நற்குணம், நல்லொழுக்கம், வணக்கம், குருபக்தி, தெய்வபக்தி முதலிய பண்டிதனுக்கும் பிணியாளனுக்கும் இயற்கையாகவே இருக்கவேண்டும்.

பண்டிதன் பண்டைய சித்தர் நூல்களை எல்லாம் நன்கு ஆராய்ந்து கற்று, நன்கு முடிவுபெற்ற மருந்துகளைத் தயாரித்தும், நோய் நாடல், நோய் முதல் நாடல், மருந்து ஊட்டு முறை முதலிய சகலமும் அறிந்து, அதன் பிரகாரம் செவ்வனே நடைமுறையில் அனுஷ்டிக்கவேண்டும். பிணியாளன் வனத்தியன்மேல் கிருபை வைத்தும், மருந்துகளைச் சரியாக ஏற்றும், பத்தியம் சரியாகக் காத்தும், பண்டிதனது கட்டளைப்படி நடந்துகொள்ளவும் வேண்டும். இவ்விதமாகப் பண்டிதனும் ஒத்துழைத்தால் அசாத்தியப் பிணிகளும் குணமாகக் கூடுமெனவும் கூறலாயிற்று.

## அவத்தை பத்தின் விவரம்

(திரட்டு நாடி)

1. "சாப்பிரவத்தை தானும் பிணவெடி சார்ந்து நாறும்,
ஏக்குறுஞ்சி லேற்பனந்தா னெழும்பிடு மூச்சுவிழும்
நோக்குறுஞ் சுழுத்தி தானே நுவண்றிடும்பல பேச்சாக,
தாக்கி யதுரியந்தானே தப்பிதான மயங்குஞ் சீவன்."

2. "வாவுரு முதலவத்தைத் தர்க்கங்கள் பேசும் ரெண்டில்,
மேவிட வுடம்பு நாறு மிக்க மூன்றாமவத்தை
பாவகத் தெளிவு நீங்கிப் பத்தும் நாலாமவத்தை
ஆவலாய் வெற்றி பேசி யசாத்திய சீதமாமே."

3. "சீதமஞ்சாமவத்தை தெளிவுற முகடு பார்க்கும்
மோதரமாறா மவத்தை யுடலது குளிர்ந்து காட்டும்
பேதமேழாம வத்தை பேதித்துப் பொசிப்புவேண்டும்
ஆதியானுரைத்து வெட்டில் கண்பஞ்சாடுமவத்தை
ஒப்பான்."

4. "தீதிலாவுடல் வெளுக்கும் சீதமாந்தீ தாம்பத்தில்
ஓதிய சித்தவேதத் துரை விதிப்படியே முன்னோர்
பேதமாயப் புகலும் நீதி பெருமையை யறிந்து கொண்டு
ஓதுவார் கடத்தினோர்க்கு முறையி தென்றோது நூலே."

என்பதினால்; அவத்தை என்பது சாக்கிரம், சொற்பனம், சுழுத்தி முதலிய உயிர்நிலையுபாதி என்றும், மரணவேதனை, மரணவுபாதி, முடிவு, வேதனை எனவும் பொருள்படும், இங்கே மரணவுபாதி அல்லது மரணவேதனையையே குறிக்கும்.

## மேற்கூறிய திரட்டு நாடியின் பிரகாரம் :

1. முதலாவது சாக்கிரம் அவத்தையில் உடலில் பிணவெடி நாற்றமும்;

2. சொற்பன அவத்தையில் கபம் மேலிட்டு மூச்சு வீசும் எனவும்;

3. சுழுத்தியில் பல பேச்சுகளுடன்டாகும் எனவும்;

4. துரியத்தில் சீவன் மயங்குமெனவும் கூறப்பட்டுள்ளது. அன்றியும்;

1. முதலாவது அவத்தையில் தர்க்கங்கள் பேசுமெனவும்;

2. இரண்டாமவத்தையில் உடம்பு நாறும் எனவும்;

3. மூன்றாவத்தையில் தெளிவு நீங்குமெனவும்;

4. நாலாமவத்தையில் ஆவலாய் வெற்றி பேசி அசாத்தியம் சீதளமாகுமெனவும்;

5. ஐந்தில் தெளிவுடன் முகடு பார்க்கும்;

6. ஆறில் உடல் குளிருமெனவும்

7. ஏழில் அன்னத்தை விரும்பும் எனவும்.

8. எட்டில் கண் பஞ்சடையும் எனவும்;

9. ஒன்பதில் உடல் வெளுத்துக் காணும் எனவும்.

10. பத்தில் சீதளம் மேலிட்டு நோயாளி மரணமாவான் எனவும் கூறியுள்ளார்.

*அவத்தை பத்து* (வேறு)

1. "சுருக்கமான அவத்தை பத்துஞ் சொல்லக் கேளு
துடியான முதலவத்தைப் பிணமே நாறும்
முருக்காயிரண்டு நலம் வேற்றுமை கூறும்
மூன்றுக்குந் தெளிவதன் நாற்றமாகும்
அருக்கான நாலிலைமே லிளைப்புகாணும்
ஐந்துக்கு முகம் வேர்க்கும் ஆறுக்கப்பா
நறுக்கானவுடம் பதுவுங் குளிரு மேழில்
நன்றாயன்னத்தை நாடும் பாரே."

2. "நாடுமே யிருநான்கில் கண் பஞ்சாடும்
நலமான வொன்பதிலே வுடம்பு வேர்க்கும்
ஓடுமே பத்துக்கு மரணமாவார்
உத்தமமே யவத்தை பத்து முரைத்தேன் பாரு
தேடுமே பலுநூலுமறிந்து கொண்டு
தேசத்தில் வயித்தியந்தான் செய்யவேண்டும்
கூடுமே யசாத்தியஞ் சாத்தியத்தின்
குணங் குறியுங் கண்டுமே கூறினேனே."

என்பதினால்,

1. முதலாவது அவத்தையில் பிணவெடி நாறுமெனவும்;

2. இரண்டாமவத்தையில் நலம் பேசும் வேற்றுமை கூறுமெனவும்;

3. மூன்றாமவத்தையில் சித்தம் கலங்குமெனவும்;

4. நாலாமவத்தையில் இளைத்து மேல் சுவாசம் வாங்கும் எனவும்;

5. ஐந்தாவத்தையில் முகம் வேர்க்குமெனவும்;

6. ஆறாமவத்தையில் உடல் குளிரும் எனவும்;

7. ஏழாம் அவத்தையில் அன்னத்தை விரும்பும் எனவும்;

8. எட்டாம் அவத்தையில் கண் பஞ்சடையும் எனவும்;

9. ஒபதாம் அவத்தையில் உடல் வெளுக்கும், வியர்க்கும்;

10 பத்தில் சீதளமுண்டாய் நோயாளி மரணமாவான் எனவும் கூறியுள்ளார்.

## முக்குற்றம் இயல்

முக்குற்றங்களின் இலக்கணங்களை இங்கு தெரிந்து கொண்டு, அதற்குமேல் நாடியைப்பற்றிய மற்ற விவரங்களை அறிவது நல்லது. ஆதலால், முக்குற்றங்களின் வடிவத்தன்மை, வாழிடம், இயற்கைப் பண்பு, உடலில் செய்தொழில் பிரிவுகள் யாவும் இங்கு கூறுவாம்.

### *அ. வளி (வாதம்)*

#### 1. வளி வடிவத்தன்மை

நுண்மை (அணுத்துவம்)
நொய்மை (கடினமின்மை)
தண்மை (குளிர்ச்சி)
வெம்மை (உஷ்ணம்)

தண்மை, வெம்மை ஆகிய இவ்விரண்டால் வரும் ஒப்புரவின்மை (சருச்சரை) என்பனவாம்.

#### 2. வளி வாழுமிடம்

அபானம், மலம், இடகலை, உந்தியின் கீழ் மூலம், காமக் கொடி, இடுப்பு, எலும்பு, தோல், நரம்புக் கூட்டம், கீல்கள், மயிர்க்கால்கள், ஊண் ஆகிய இடங்களில் வாழ்வதாகும்.

#### 3. வளியின் இயற்கைப் பண்பு

இயற்கை நிலையில் நின்று ஊக்கமுண்டாக்கல், மூச்சு விடல், மூச்சு வாங்கல், மனமொழி மெய்களுக்குச் செயலைத்

தரல், மலம் முதலிய பதினான்கு வேகங்களை (விரைவுகளை) வெளிப்படுத்துதல், சாரம் முதலிய ஏழு உடற்றாதுக்களுக்கும் ஒத்த நிகழ்ச்சியைத் தரல், ஐம்பொறிகட்கு வன்மையைக் கொடுத்தல் ஆகியவற்றில் உடலுக்குத் துணைபுரிதலாம்.

### 4. வளி உடலின் செய்தொழில்

உடல் நோதல், குத்தல், பிளத்தல்போல் காணல், நரம்பு முதலியன குன்றல், நடுக்கம், இறுக்கமாதல், நீர்ப்பசையின்மை (வறட்சி), அசைத்தல், இளைத்தல், குடைச்சல், தடி முதலிய வற்றால் அடிப்பட்டது போன்ற வேதனை, கை அல்லது கால் இடம்விட்டுப் பெயர்தல், அதாவது பூட்டு நடுவல், உறுப்புத் தளர்ச்சி, உறுப்புகள் தொழில் புரியாமல் மரம்போலக் கிடத்தல், மலம், சிறுநீர் முதலியன தீய்தல் அல்லது அடைபடுதல், நீர் வேட்கை, கெண்டைக்கால், தொடை முதலியன நொறுங்கிப் போவதுபோலத் தோன்றல், எலும்புக்குள் துளைப்பதுபோன்ற உணர்ச்சி, மயிர்க்கூச்செறிதல், கைகால்களை நீட்டவும் மடக்கவும் முடியாமை, எச்சுவையும் துவர்ப்பாயிருத்தல் அல்லது துவர்ப்பாக வாய் நீரூறல், தோல், கண், மலம், நீர் முதலியன கருத்துக் காணல் ஆகிய இவை வளியானது உடலில் செய்யும் தொழில்களாம்.

### 5. வளியின் (வாதம்) பிரிவுகள்

இஃது ஒன்றாயிருப்பினும் தன் இடம், தொழில் முதலியவற்றால் பத்து வகைப்படும். அவை :-

1. பிராணன் (உயிர்க்கால்0
2. அபானன் (கீழ் நோக்குங்கால்)
3. வியானன் (பரவுகால்)
4. உதானன் (மேல் நோக்குங்கால்)
5. சமானன் (நடுக்கால்)
6. நாகன் - உபபிராணாதி வாயு

7. கூர்மன் - உபபிராணாதி வாயு

8. கிருகரன் - உபபிராணாதி வாயு

9. தேவதத்தன் - உபபிராணாதி வாயு

10. தனஞ்செயன் - உபபிராணாதி வாயு

என்பனவாம்.

1. **பிராணன் (உயிர்க்கால்)** : இது மூலாதாரத்திலிருந்து வெளிப்பட்டு மூக்கின் வழியாய் மூச்சு விடலாற் பன்னிரண்டு அங்குல தூரம் சென்று, மறுபடியும் எட்டங்குலம் உள்ளுக்குப் பாய்ந்து, நாலங்கும் வீணாய்ப்போம். மூச்சு வாங்கள், விடுதல், செய்யும், புசிக்கும் உணவுகளைச் செரிக்கப்பண்ணும்.

நாழிகை ஒன்றுக்கு முன்னூற்றறுபது சுவாசமாக நாள் ஒன்றுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் உண்டாகும். அவற்றில் பதிநாலாயிரத்து நானுறு சுவாசம் மட்டிலும் வெளியாகிப் பாழாய்ப்போம். இவ்வேழாயிரத்து இருநூறு சுவாசமும்கூட பாழாகாமல் உட்செலுத்தினால் எப்பொழுதும் பாலராயிருக்லாம் எனவும் நூல்கள் கூறுகின்றன.

2. **அபானன் (கீழ்நோக்குங்கால்)** : இது சுவாதிட்டானத்தில் வெளிப்பட்டுக் கீழ்நோக்கி மலசலத்தைத் தள்ளும், ஆசனவாயைச் சுருக்கும். அன்னசாரத்தைச் சேரவேண்டிய இடங்களில் சேர்ப்பிக்கும்.

3. **வியானன் (பலவுகால்)** : இது தோலிலிருந்து எழுபத்தி இரண்டாயிரம் (72,000) நாடி நரம்பு ரத்தக் குழாய்களிலும் சென்று, இவ்வுடலிலுள்ள அசையும் பொருள், அசையாப்பொருள் என்னும் இரண்டிலுமிருந்து உறுப்புக்களை நீட்டவும், மடக்கவும் செய்து; பரிசங்களை அறியும் உண்ணும் உணவில் சாரத்தை அவ்விடங்கலில் நிரப்பித்து உடலைக் காக்கும்.

4. **உதானன் (மேல்நோக்குங்கால்)** : இது உதராக்கினியில் இருந்து தோன்றி, உணவின் சாரத்தோடு கூடியிருந்து அதை அங்கங்கே நிறுத்தும். அதை வெளிப்படுத்தியும் கலக்கியும் வருதல் செய்யும்.

5. சமானன் (நடுக்கால்) : இது நாபியிலிருந்து கால் வரைக்கும் சமனாய்ப் பரவிப்பாய்ந்து, மற்ற வாயுக்களை மிஞ்ச வொட்டாமல், மடக்கிச் சரிப்படுத்திச் சேரப் பண்ணும். அறுசுவைகளையும், தண்ணீர், அன்னம் ஆகியவற்றையும் சமப்படுத்தி உடலில் எல்லாம் சேரும்படிச் செய்யும்.

6. நாகன் : இது எல்லாக் கலைகளையும் கற்கும்படி அறிவை எழுப்பும். நல்ல பண்புகளைப் பாடுவிக்கும் கண்களைத் திறக்கும்படிச் செய்யும். கண்களை இமைக்கும்படிச் செய்யும். மயிர்களைச் சிலிர்க்கப் பண்ணும்.

7. கூர்மம் : இது மனதிலிருந்து கிளம்பிக் கண்ணிலிருந்து இமையைக் கொட்டுவிக்கும். கொட்டாவி விடப்பண்ணும். பலம் உண்டுபண்ணும். கண்களைத் திறக்கவும், மூடவும் பண்ணும். உலகப் பொருள்கள் யாவற்றையும் கண்களுக்குக் காண்பிக்கும். கண்களிலின்றும் நீரை விழப்பண்ணும்.

8. கிருகரன் : இது நாவிலிருந்து நாவிற்கசிவையும், நாசியிற் கசிவையும் உண்டாக்கும். பசியை உண்டுபண்ணும். ஒன்றை நினைத்திருக்கச் செய்யும். போதற்றொழிலைச் செய்யும். தும்மலையும் இருமலையும் உண்டுபண்ணும்.

9. தேவதத்தன் : இது வளைவு வடிவமாய்க் கிளம்பிச் சோம்பலையும், உடல் முரித்தலையும் உண்டாக்கும். தூங்கி எழுந்திருக்கும்போது அயர்ச்சியை உண்டாக்கும். கண்ணைப் பலவிடங்களில் ஓட்டி உலாவுவிக்கும். தாங்குதல், சண்டை கொள்ளல், தாக்கம், பேசல், மிக்ககோபம் கொள்ளல் ஆகியவற்றை உண்டாக்கும். பலபொருள்களைக் குறிக்கச் செய்து குதம், குய்யமென்னும் இடங்களில் இருக்கும்.

10. தனஞ்செயன் : இது மூக்கிலிருந்து தடித்து உடம்பு முழுமையும் வீங்கப்பண்ணும். காதில் கடல் போலிரையும். இறந்துவிடின் காற்றெல்லாம் வெளிப்பட்ட பின்னர் மூன்றாவது நாளில் தலைவெடித்த பின்தான்போகும்.

(வேறு)

## *வளியைப் பற்றிய பிற நூலுடையார் கொள்கைகளாவன*

வியானன் : இது வெளியின் (ஆகாயம்) கூறு, வெளி எங்கும் நிறைந்திருப்பதுபோல இது உடல் முற்றும் பரவியிருக்கும். இருப்பிடம் தமரகம் (இருதயம்). இதன் தொழில் நடத்தல், உடல் உறுப்புக்களை அசைத்தல், கண் இமைத்தல், விழித்தல் முதலியனவாம்.

2. பிராணன் : இது வளியின் கூறு. வளியைப்போலத் தமரகத்தினின்று மூக்குவரை அலைந்து நிற்கும். இது உயிருடன் கலந்து தலையை இடமாகப் பெற்று மார்பு, கழுத்து இவ்விடங்களில் வாழ்வதுமன்றி; மனம், புத்தி, உள்ளம், ஐம்பொறி இவைகளைத் தன் வயப்படுத்திக் காறியுமிழ்தல், இருமல், தும்மல், ஏப்பம் விடல், மூச்சு விடல், மூச்சு வாங்கல், உண்ணும் உணவை உட்செல்லுதலாகிய தொழில்களைப் புரியும்.

3. அரானன் : இது தேயுவின் கூறு. எருவாயினின்று (குதம்) அடிவயிறு, இடுப்பின் பூட்டு, நீர்ப்பை, ஆண், பெண் குறிகள், தொடை ஆகிய இவ்விடங்களில் வாழ்ந்து வெண்ணீர் (விந்து). நாதம்மலம், சிறுநீர், கரு இவற்றை வெளிப்படுத்தும்.

4. சமானன் : இது அப்புவின் கூறு. உடலின் நடுவான பக்குவாசயமே இடமாகப்பெற்று, வயிறு முற்றிலும் வாழ்ந்து உண்ட உணவு, நீர்ப்பொருள் இவற்றைச் செரிப்பித்தற்குரிய தீயை விருத்தி செய்து, சாரத்தையும் திப்பியையும் வெவ்வேறாகப் பிரித்து, சாரத்தை உடலில் எல்லாப் பாகங்களுக்கும் பகிர்ந்து கொடுத்து வளர்க்கும்.

5. உதானன் : இது மண்ணின் (பிருதிவி) கூறு. மார்பை இடமாகக் கொண்டு கொப்பூழ், கழுத்து, மூக்கு இம்மூவிடங்களிலும் வாழ்ந்து, பேச்சுக்கு முதற்காரணமாய் இருப்பதுமன்றி; முயற்சி, மனோதிடம், உடல்நிறம், உடல் ஒளி, நினைப்பு ஆகிய இவற்றையும் உண்டாக்கும்.

## ஆ. அழல் (தீ, அனல் - பித்தம்)

1. தீயின் வடிவத்தன்மை :

வெப்பம்

கூர்மை

அது சேரும் பொருள் வேற்றுமையால் இளகல், நீராகல், கட்டல் முதலியன. அதாவது உப்பு வெய்யிலிலிட்டால் கட்டலும்; வெல்லம் வெய்யிலிலிட்டால் இளகலும்; நெய்யை வெய்யிலில் வைத்தால் நீராகலும் போலும்.

நெய்யுப்பு

நெகிழ்ச்சி

இயக்கம்

ஆகிய இவைகள் அழல் வடிவத் தன்மைகளாம். இயக்கம் என்பது ஒருவர் இயக்க இயங்கும் தன்மையால், இயங்கும் பொருள் இயக்கப்படும் பொருள் என்னும் இருபொருள்களுள் இயக்கமும் ஒன்றாகலின் இதுவும் வடிவத்தன்மையுடையதாம்.

2. அழல் வாழுமிடம் : பிங்கலை, பிராணவாயு, நீர்ப்பை, மூலாக்கினி, இருதயம், தலை ஆகிய இவைகள் அழல் வாழும் இடங்களாம்.

அன்றியும் கொப்பூழ், உந்தி, இரைப்பை, வியர்வை, நாவில் ஊறுகின்ற நீர், செந்நீர், சாரணம், கண், தோல் இவ்விடங்களையும் கூறுவர்.

"பிரிந்திடும் பித்தம் பேராஞ்சலத்தினில்" எனத் திருமூலரும்,

"போமென்ற பித்தத்துக்குக்கிருப்பிடமே கோளாய், பேரான கண்டத்தின் கீழதாகும்" என யூகி முனிவரும் முறையே சிறுநீரும், கண்டத்தின் கீழிடமும் கூறினார்.

3. அழலின் இயற்கைப் பண்பு : அழலானது தனது இயற்கை நிலையினின்று செரிப்பித்தல், வெம்மை, பார்வை, பசி, நீர்வேட்கை, சுவை, ஒளி நினைப்பு, அறிவு, வன்மை, மென்மை என்பனவற்றை உண்டாக்கி உடற்குத் துணைபுரியும்.

4. அழல் உடலில் செய்தொழில் : உடலில் வெப்பம் உண்டாதல், செந்நிறம் அல்லது மஞ்சள் நிறம் தோன்றல், உண்ட உணவுப்பொருள்கள் பக்குவமடையும்போதும், செரிக்கும் சமயத்தலும் வெப்பமுண்டாதல், வியர்த்தல், மயக்கம் ஏற்படல், செந்நீர் தன் அளவில் மிகுதல், அவ்வாறு மிகுந்த செந்நீர் வெளிப்படுத்தல், தோல், கண், மலம், சிறுநீர் முதலியன மஞ்சள் நிறமடைதல், சீற்றம், வணக்கமின்மை, அசைவின்மை, நினைவு வெறி, மெலிவு, எரிவு இவையுண்டாதல், எச்சுவையும் கைப்பாகவேனும் புளிப்பாகவேனும் காணுதல் ஆகியவை அழலின் தொழில்களாம்.

5. அழலின் பிரிவுகள் : அழல் தன் இடம், தொழில் வேற்றுமையால் ஐந்துவகைப்படும். அவை.

1. பாசகம் (அனற்பித்தம்)
2. இரஞ்சகம்
3. சாதகம்
4. ஆலோசகம்
5. பிராசகம்

என்பனவாம்

1. பாசகம் (அனற்பித்தம்) : இது தீயின் பண்புடையது. விரைப்பைக்கும் பக்குவாசயத்திற்கும் இடையிலிருந்து, தீயின் குணத்தை மிகுதியாகப் பெற்று நீர் வடிவமுள்ள பொருள்களை வளறச் செய்து உண்ட உணவுப் பொருள்களைச் செரிக்கும்படி செய்யும்.

2. இரஞ்சகம் (இரஞ்சக பித்தம்) : இது செந்நீரை மிகுதிப் படுத்தும் பண்புடையது. இரைக் குடலிலிருந்துகொண்டு உணவிலிருந்து பிரிந்துண்டான சாற்றுக்குச் செந்நிறத்தைத் தருகிறது.

3. சாதகப் பித்தம் : இது நிறைவேற்றும் பண்புடையது. இது தமரகத்திலிருந்து மனம், புத்தி இவற்றைக் கொண்டு விருப்பமான தொழிலைச் செய்துமுடிக்கும்.

4. ஆலோசக பித்தம் : இது கண்களுக்குப் பொருள்களைத் தெரிவிக்கும் பண்புடையது. இது கண்களில் வாழ்ந்து கொண்டு எல்லாப் பொருள்களின் வடிவத்தையும் அறிதலாகிய காரியத்தைச் செய்யும்.

5. பிரகாச பித்தம் : இது தோலுக்கு ஒளியைத் தரும் பண்புடையது. தோலில் வாழ்ந்துகொண்டு தோலுக்கு ஒளியைக் கொடுத்து அதை ஒளிரச் செய்யும்.

## இ. ஐயம் (கபம்)

1. ஐய வடிவத்தன்மை :

தன்மை
நெய்ப்பு
மந்தம்
வழுவழுப்பு
மென்மை
திண்மை (முதலியவை ஐயத்தின் வடிவத்தன்மைகளாம்.)

2. ஐயம் வாழுமிடம் : சமானவாயு - சுழுமுனை - வெண்ணீர் (விந்து), தலை ஆணை (ஆக்கிணை) - நாக்கு - உண்ணாக்கு - கொழுப்பு (நிணம்) - மச்சை - குருதி - மூக்கு - மார்பு - நரம்பு - எலும்பு - பெருங்குடல் - மூளை - கண் - கீல்கள் என்னும் இவ்விடங்கள் ஐயம் வாழ்வதற்குரியவை.

3. ஐயத்தின் இயற்கைப் பண்பு : ஐயம் தன் இயற்கை நிலையில்; நிலைத்தல் - நெய்ப்பு - கீல்களின் அமைப்பின் கட்டுக்கள், பொறையுடைமை அதாவது பசி, நீர்வேட்கை, துயரம், கலக்கம், வெப்பம் இவைகளைப் பொறுத்துக் கொள்ளுதல் ஆகிய இவைகளே ஐயத்தின் இயற்கைப் பண்புகளாகும்.

4. ஐயம் உடலில் செய்தொழில் : நெய்ப்பு - வன்மை - சொறிவு (தினவு) - தன்மை - பருத்தல், என்பன் ஏதோ பூசப்பட்டது போன்ற உணர்ச்சி, கீல்கள் தொழில் புரியாதிருத்தல்- உடல் வெளுத்தல் - ஊண் விரைவில் செரியாமை - மிகுதூக்கம் - நாவில் இனிப்புச் சுவை தோன்றல் - தோல், கண், மலம், சிறுநீர் வெண்ணிறமடைதல் - தொழில் புரிவதில் கூர்மையின்மை ஆகிய இவை ஐயத்தின் தொழில்களாம்.

5. ஐயத்தின் பிரிவுகள் : ஐயம் ஐவகைப்படும். அவை :

1. அவலம்பகம்
2. கிலேதம்
3. போதகம்
4. தற்பகம்
5. சந்திகம் என்பனவாம்.

1. அவலம்பகம் : இது காற்றுப்பையாகிய நுரையீரல் இருந்துகொண்டுதன் இயற்கைவன்மையால் திரிகஸ்தானத் திற்கும், உணவின் சத்தால் தமரகத்திற்கும் அடிப்படையாயிருந்து, தன் இயற்கை நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டு, மற்ற நான்கு ஐயங்கட்குப் பற்றுக்கோடாயிருப்பதால் அவலம்பகம் எனப்பெயராம்.

2. கிலேதம் : இது இரைப்பையிலிருந்துகொண்டு உண்ணப்பட்ட உணவுப்பொருளை நீர் முதலியவைகளை ஈரப் படுத்தி மெத்தெனச் செய்யும் தொழிலைப் புரியும்.

3. போதகம் : இது சுவைப் பொறியாகிய நாவினின்று உண்ணுகிற சுவைகளை அறிவிக்கும் தொழிலைப் புரியும்.

4. தற்பகம் : இது பூட்டுகளில் (கீல்களில்) நின்று இயற்கையாய் எல்லாக் கீல்களையும் ஒன்றோடொன்று பொருத்தித் தளரச்செய்துகொண்டிருக்கும்.

### *(ஈ) இரு குற்றக் கலப்பு*

இரண்டிரண்டு குற்றங்கள் ஒன்றுகூடி தத்தம் இயற்கை அளவில் மிகுதிப்பட்டிருக்கை. இதன் விவரங்கள் யாவும் பின்னால் தொந்த நாடியில் கூறப்படும்.

இரு குற்றக்கலப்பு மூவகையாகவும், ஆறு பிரிவுகளாகவும் வகுத்துக் கூறுவர்.

1. மூவகையாவன ; (அ) வளி தீ (வாத பித்தம்). (ஆ) வளி ஐயம் (வாத கபம்), (இ) தீ ஐயம் (பித்த கபம்) என்பன.

2. ஆறு பிரிவுகளாவன : (அ) வளி அழல், (ஆ) வளி ஐயம், (இ) அழல் வளி, (ஈ) அழல் ஐயம், (உ) ஐயவளி, (ஊ) ஐயழல் என்பனவாம்.

குறிப்பு :- இரு குற்றம் கலப்பில் (தொந்த) இரு குற்றங் களின் இயற்கையளவில் "மிகுதியை"க் கணக்கிடவேணுமே யொழிய "குறைவை"க் கணக்கிடல் பொருத்தமன்று.

### *(உ) முக்குற்றம்*

வளி, அழல், ஐயம் மூன்றும் தத்தம் அளவில் மிகுந்தேனும் குறைந்தேனும் ஒன்றுகூடி நிற்பது "முக்குற்றம்" எனப்படும். இதனைத் "திரிதோடம்" அல்லது "சன்னிவாதம்" எனவும் கூறுவதுண்டு. "ஆகிய நாடி மூன்றும் படபடவென்றோடிற் சன்னி" என்பதினாலும்;

"ஆகிய நாடி மூன்றுமமர்ந்திடிற் சன்னியாமே" என்பதினாலும் அறிக.

வளி, அழல், ஐயம் இவற்றின் தனித்தனி இருப்பிடம் இயற்கைத் தொழில் முதலியன (சதக நாடி)

(வேறு)

### *1. வாதத்தின் இருப்பிடம், தொழில் முதலியன*

"தெளிந்திட்டவாதம் பானத்தைப் பற்றி
நிறைந்திடையைச் சேர்ந்துநதிக்குக் கீழே நின்று
குளிர்ந்திட்ட மூலத்தூ டெழுந்து காம
கொடியிடையைப் பற்றியெழுங்குணத்தைப்பாரே."

"குணமான வெலும்பு மேற்றொக்கை நாடி,
குழாமாகு மெழுபத்திராயிரத்தைச் சேர்த்து,
நிணமான பொருந்திடமும் ரோமக்காலும்,
நினவாங்கி வாங்கிஷமெல்லாம் பறந்து,
மணமானவிந்து விழமல்நீர் பெய்ய
வழிகாட்டிக்கால் நாட்டி
வாதமெங்குங் கலந்துதானே."

வாதமானது அபான வாயுவைச் சேர்ந்து, இடுப்பினிடமாகக் (உந்தியின்) கீழிறங்கி, மூலாதாரத்தில் காமக்கொடி, இடைகலையைப் பற்றி அங்கே ஒடுக்கமுற்று, பின்னும் வியாபித்து என்புக்கு மேலே எழுபத்தீராயிரம் (72,000) நாடி நரம்புரத்தக் குழாய்களின் வழியாய் உரோமத் துவாரங்கள் தேற்றும் புகுந்து மாமிசத்தில் படர்ந்து, விந்து, நீர், மலம், வியர்வை, கரு முதலியவற்றைக் கழியச்செய்யும் (வெளியேற்றும்), காற்றாகிய வாதம் எங்கும் வியாபித்துக் கலந்து நிற்கும் என்றறிக.

### *2. பித்தத்தின் இருப்பிடம், தொழில் முதலியன*

"தானான பித்தம்பிங்கலையைப் பற்றிச்
சாய்வான பிராணவாயுவு தன்னைச்சேர்ந்து
ஊனான நீர்ப்பையில் அணுகி மூலத்
துதித்தெழுந்தவக்கினியை உறவு செய்து
மானேகேளிருதயத் திலிருப்புமாகி
மயலாகி நினைவாகி மயக்கமாகி
கானான சிரந்தனிலே இரத்தமாகிக்
கொண்டு நின்ற பித்தநிலை கூறினோமே."

என்பதற்கிணங்க; பித்தமானது பிங்கலையைப் பற்றிப் பிராண வாயுவைச் சேர்ந்து கண்டத்தினிடமாக நின்று இரைப்பை, நீர்ப்பை முதலியவற்றின் தொழிலை நடத்தும் பொருட்டு சீவாக்கினி (உயிராக்கினி)யை எழுப்பு இருதயத்தின் தொழிலை நடத்தும் என அறிக.

### 3. ஐயத்தின் இருப்பிடம், தொழில் முதலியன

"கூறினோம் சிலேற்பனமது சமானவாயு
கொழுகிடா சுழிமுறையைப் பற்றி விந்தில்
சீறியே சிரசிலாக்கிணையைச் சேர்த்து,
சிங்குவை யண்ணாக்கு நிணமச்சை ரத்தம்
மீறியே நிறங்கோணம் நரம்பெலும்பில்
மேவியதோர்மூளை பெருங்குடலிற் கண்ணுல்
தேறியதோர் பொருந்திடங்க ளெல்லாஞ்
சேர்ந்து சிலேட்டுமமது வீற்றிருக்குத் திடங் கண்டாயை."

என்பதிற்கிணங்க; ஐயமானது சமான வாயுவைச் சேர்ந்து, சுழிமுனையைப்பற்றி, விந்தில் இருப்பிடமாகக் கொண்டு உச்சி வரையோடி, சிரசில் ஆக்கிணையைச் சேர்ந்து சிங்குவை, அண்ணாக்கு, திணம், மச்சை, இரத்தம், தோல், மூக்கு, நரம்பு, எலும்பு, மூளை, பெருங்குடல், கண்கள், கால்கள் முதலிய இடங்களில் பரவி நிற்கும்.

## ஊ) முக்குற்றங்கள் - உடற்றாதுக்கள் ஏழு - இவற்றின் சேர்க்கையால் உண்டாகும் வேற்றுமை

வளி, அழல், ஐயம் மூன்றும் தம்முள் ஏதேனும் ஒன்று அல்லது பல தன்னிலை, தன்னிலை விருத்தி, வேற்று நிலை விருத்தி என்னும் இவற்றை அடைவதால், இவை மிகுந்தேனும், குறைந்தேனும் நாடி நடை ஏற்படும்போது ஏழு உடற்றாதுக்களில் எண்ணற்ற வேற்றுமைகளுண்டாகும். இவ்வேழு உடல் தாதுக்களில் உண்டாகும் வேற்றுமைகளை அறிந்தால் முக்குற்றங்களின் வேற்றுமைகளையும் அறியமுடியும்.

## தன்னிலை

தன்னிலையானது முக்குற்றங்களும் தத்தம் இடங்களில் இயற்கையாக நிலைப்படுவதாகும்.

## தன்னிலை வளர்ச்சி

முக்குற்றங்களும் தத்தம் இடங்களில் வளர்ச்சி அடைவதே தன்னிலை வளர்ச்சியாம்.

## வேற்றுநிலை வளர்ச்சி

வேற்றுநிலை வளர்ச்சியடைந்த முக்குற்றங்கள் தத்தம் இடம்விட்டு மீறி வேற்றிடங்களில் பரவுமாயின் அது வேற்றுநிலை விருத்தி எனப்படும்.

1. **தன்னிலை வளர்ச்சியின் இலக்கணம்** : தன்னிலை வளர்ச்சிக்குக் காரணமான குணமுள்ள பொருள்களில் வெறுப்பும் எதிரிடைக் குணமுள்ள பொருள்களில் விருப்பம் உண்டாவதே முக்குற்றங்கள் தன்னிலை விருத்தி (வளர்ச்சி)யின் இலக்கணமாகும்.

2. **வேற்று நிலை வளர்ச்சியின் இலக்கணம்** : கேடடைந்த குற்றம் அல்லது தொந்தங்களின் குறி குணங்கள் யாவும் காணப்படுவதாலும், ஏழு உடற்றாதுக்களாகிய உடற்கட்டு பிணிபட்டிருத்தலாலும் அறியலாம்.

3. **முக்குற்றங்களின் தன்னிலை பற்றிய இலக்கணம்** : முன்னமேயே தெரிந்திருக்கிறோம். வளி, அழல், ஐயம் மூன்றும் தன்னிலை, தன்னிலை வளர்ச்சி, வேற்று நிலை வளர்ச்சியடையும் காலம் என்ன ?

## 1. வளி தன்னிலை வளர்ச்சி - முதுவேனிற்பருவம்

வேற்றுநிலை, வளர்ச்சி கார்காலம், தன்னிலையடைதல் கூதிர்காலம், முதுவேனிற் பருவத்தில் கால இயல்பால் செடிகளும் உடல்களும் வறட்சி அடைவதுண்டு. அப்பண்பை

உடைய வளியும் பண்பு வேற்றுமை காரணமாய் வேற்றுநிலை வளர்ச்சியடைய வேண்டியிருக்க அது தன் இயற்கை வெப்பத்தால் தன்னிலை வளர்ச்சியையே அடைகின்றது.

## 2. அழல்

தன்னிலை வளர்ச்சி : கார்காலம்,
வேற்றுநிலை வளர்ச்சி : கூதிர்காலம்,
தன்னிலையடைதல் : முன்பனிக்காலம்.

கார்கால இயல்பால் நீரும், செடிகளும் புளிப்புத் தன்மையை அடைவதால், அப்பண்பையுடைய பித்தம் வேற்றுமை நிலை வளர்ச்சி அடையவேண்டியிருக்க அது தட்ப இயல்பால் தன்னிலை வளர்ச்சியையே அடையும்.

## 3. ஐயம்

தன்னிலை வளர்ச்சி : பின்பனிக்காலம்.
வேற்றுநிலை வளர்ச்சி : இளவேனிற்காலம்.
தன்னிலையடைதல் : முதுவேனிற்காலம்.

பின்பனிக்கால இயல்பால் நீரும், செடிகளும், உடலும் நெய்ப்புப்பண்புடையன. அப்பண்பைப் பெற்ற ஐயமும், வேற்று நிலை வளர்ச்சி அடையவேண்டியிருக்க அது தன் தட்ப இயல்பால் தன்னிலை வளர்ச்சியையே அடையும் என அறிக.

## முக்குற்றங்கள் கால இயல்பைக் கடந்து நிற்கும் வேளை

மேற்கூறிய வளி, அழல், ஐயம் என்னும் மூன்று குற்றங்களும் கால இயல்பால் தன்னிலை, தன்னிலை வளர்ச்சி, வேற்றுநிலை வளர்ச்சி அடையக் கூடியனவாயிருப்பினும், அவை உணவு முதலிய காரணங்களால் அக்காலங்களில் அங்ஙனம் அடையாமல் வேற்றுமைப்படவும் கூடும்.

## வழி, அழல், ஐயம் மூன்றும் வேற்றுநிலை வளர்ச்சியினின்றும் தன்னிலைப்படும் இலக்கணம்

வளி, அழல், ஐயம் மூன்றும் வேற்றுநிலை வளர்ச்சி அடைந்தால், நீர்ப்பெருக்கு எங்ஙனம் விரைவாய்ப் பரவுமோ,

அங்ஙனமே உடலில் விரைவாய்ப் பரவும். அப்பெருக்கு எப்படிச் சிறிது சுறிதாய் வற்றுமோ அதுபோலவே வேற்றுநிலை வளர்ச்சி அடைந்து உடல் முற்றும் பரவிய குற்றங்களும் சிறிது சிறிதாகவே தன்னிலைப்படும்.

## வளி - அழல் - ஐயம் ஆகிய முக்குற்றங்களே எல்லாப் பிணிகளுக்கும் காரணமெனல்

எங்ஙனம் பலவகை வடிவ வேற்றுமையாய் அமைந்த மூலப்பிரகிருதி திரிபாயுள்ள உலகம் முக்குணங்களை விட்டுத் தனித்து நிற்க இயலாதோ, எங்ஙனம் சிவபரம்பொருளின் முத்தொழில்களான ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முச்சக்திகளும் சிவனை விட்டுப் பிரிந்திருக்க இயலாதோ, அங்ஙனமே பிணிகள் பலவும், ஏழு உடற்றாதுக்களினது வேற்றுமையையே காரணமாய்க் கொண்டு கிளைக்கும் என்றாலும், உடலுக்குயிராய் நின்றியங்கும் சக்தியாகிய உயிர்த்தாதுவின் முப்பிரிவும், முக்குனங்களுமாகிய வளி, அழல், ஐயம் என்னும் மூன்று குற்றங்களுக்குடைய இயற்கை, செயற்கைக் காரணங்களினின்றும் விலகியிருக்கமுடியாது. உணவு அல்லது செயல்களாவன மிகுதி அல்லது குறைவின் காரணமாகப் பிணிகள் ஏற்படுவதாக வைத்துக்கொண்டாலும், அவைகள் முக்குற்றங்களைக் கேடடையச் செய்து அதன் பயனாய் உயற்றாதுக்களையும் வருத்தும் என அறிக.

## (எ) யாக்கையின் இயற்கை இலக்கணம்

உடலின் உணவாதி செயல்களால் முக்குற்றங்களுள் எது மிகுதிப்பட்டுக் கரு உற்பத்தியில் சுக்கில சுரோணிதம் கலக்கின்றதோ அக்குற்றமே முதற்காரணமாயிருந்து யாக்கையை அமைக்கும். அமைக்கப்பட்ட உடல் குற்றம் மிகுதியின் பெயரால் வழங்கும். எங்ஙனமெனில், வளி மிகுதியாலுண்டான உடலை வளி உடல் அல்லது வாத தேகம் என்றும், அழல் மிகுதியால் உண்டான யாக்கையை அழல் உடல் அல்லது பித்ததேகம் என்றும் ஐய மிகுதியால் உண்டாகும் உடலை ஐயவுடல் அல்லது கப தேகம் எனவும் வழங்கப்படும்.

### 1. வளி உடலினன் (வாத தேகியின் ) இலக்கணம் :

வளி உடலினனுக்கு வளிக்குற்றம் (தீயும், ஐயமும் இவ்விரண்டைக் காட்டிலும்) சற்று மிகுந்திருக்கும்.

மெலிந்து உயர்ந்து, உடல் பருத்து அடித்தொடைகள் நடந்தால் கீல்கள் நெட்டையிடுதல், தடித்த இமைகள், வட்டமாக விகாதித்து சாக்கண்போன்ற சிறிது வெண்மை கலந்த கண்கள், குளிர்ந்த பார்வை, கறுமை வெண்மை கலந்து ஒளிரும் உடல் நிறம், கறுத்த முனைபிளந்த தலைமயிர், தெளிவான வார்த்தை, சிலவேளை மனக்கலக்கத்துடன் தடுமாற்றமான வார்த்தை, தித்திப்பு, புளிப்பு, உப்பு, சூடுள்ள பொருள்களில் சிறிது விருப்பம், வீரிய வளர்ச்சிக் குறைவு, புத்திரப் பெருக்கம், ஆண்மை, உணர்ச்சி, அறிவு இவை நிலையின்மை, விளையாட்டு, ஈகை, அவமதிப்புச் சிரிப்பு, தொக்கணம், வேட்டையாடல் இவைகளில் விருப்பு, தகுதியின்மை, பகைமை, ஈகையின்மையும், பொன்னாலான பொருள்களைக் கவர்தலின் நினைப்பு முதலிய குணங்களும்; புகழின்மையும், அரைக்கண் மூடிய சிறு தூக்கமும், அத்தூக்கத்தில் விண், மலை, காடு இவைகளில் தான் நடப்பதுபோலக் கனவும், புலமைத் திறமையும் உண்டாயிருக்கும்.

### 2. அழல் உடலினன் (வாத தேகியின் ) இலக்கணம் :

அழல் உடலினனுக்கு நீக்குற்றம் சற்று மிகுந்திருக்கும், எலும்புகளிலும் கீல்களிலும் ஊண் குறைந்திருக்கும், எப்பொழுதும் வெப்பம், வியர்வை, அற்ப துர்நாற்றம், தோல் சுருங்கித் திரைதல் முதலானவை பொருந்திய மேனி, மஞ்சளும் சிவப்பும் கலந்து ஒளிரும் நிறம், முகம், உள்ளங்கால் இவை சிவந்தும், மஞ்சள் நிறம் பெற்றும் இருக்கும். மெல்லிய இமைகள் உடையவனாய்;

வெய்யில், சீற்றம், பசி, கட்குடி இவற்றால் விரைவில் சிவிக்கின்ற கண்கள், தலைமுடி சிறிது மஞ்சள் நிறம், உடலில் குறைந்த ரோமமும், நரையும், முகப்பருவுடன் கறுத்த மச்சங்கள் இனிப்பு, துவர்ப்பு, குளிர்ச்சி இவை பொருந்திய பொருள்களில் விருப்பு, அற்பவுண்டி, பசி, நீர்வேட்கை, சீற்றம், சூடு அச்சம் ஆகிய இவற்றைப் பொறுக்கமுடியாத தன்மை.

நறுமணமாலை, சந்தனப் பூச்சு, பனி இவற்றில் விருப்பம், அற்ப சுக்கிலம், அற்ப காமம், பெண்களிடம் அற்பவிருப்பம்.

வீரம், பகை, துணிவு, மரியாதை, வல்லமை, தெளிந்த அறிவு மிக்க வார்த்தை, ஒழுக்கம், நற்செய்கை, அடுத்தவரிடம் அன்பு ஆகிய இப்பண்புகளும்;

உறக்கத்தில் பூக்கள் நிறைந்த கொங்குமரம் சரக்கொன்றை மரம், முருங்கைமரம், மின்னல், சூரியன், வாயு, கொள்ளி நாற்புறமும் பற்றி எரிகின்ற வெளிச்சம் இத்தகையவற்றைக் காண்கின்ற கனவும்; நல்ல இன்னபமும், கல்வி மேன்மை உண்டாயிருக்கும். இவன் முக்கால் வன்மையும் 65 வயதும் உடையவனாக இருப்பான்.

மேலும் கூறுவதாவது : பித்த இயல்புடையவன் மிகுந்த பசி, பித்த உடல், நெறி மயக்கம், உடல் வெச்சனல், தாகம் பொறுக்காமை, மஞ்சள் அல்லது செந்நிறம்; கைகால்களில் செந்நிறம், தைரியம், தரும குணம், கல்வி, மிக்க அறிவாற்றல், எதிலும் வெறுப்பு, பலபடப் பேசாமை, உடம்பில் மயிர்க்குறைவு, போகத்தில் பிரியம் ஆகிய இவைகளை உடையவனாவான் என வேறு சில மேற்கோள்களால் கூறப்பட்டுள்ளன.

### *3. ஐய உடலினன் (கப தேகியின் ) இலக்கணம் :*

*ஐய உடலினனுக்கு ஐயக்குற்றம் சற்றே மிகுந்திருக்கும்.*

*நரம்புகள், எலும்புகள், கீல்கள் இவற்றைத் தசைகள் நிறைந்து மறைக்க, மேடுபள்ளமில்லாமல் மென்மையுடன் அழகிய உடல்.*

*பரந்த நெற்றியும், அகன்ற உயர்ந்த மார்பும், முழங்கால் அளவு நீண்ட கையும்; குறைவில்லாத உறுப்புகள், அகன்று, நீண்டு, கடைசி வந்த கரு விழியும், வெள்விழியும் ஒளியுடையனவாய்த் தெளிவாய்த் தூரப் பார்வையைத் தோற்றுவிப்பன வாய் சுற்றிலும் கறுத்து நெருங்கின இமை*

மயிருடன் எண்ணெய் தடவினதுபோல் மினுமினுத்துத் தோன்றும் அழகிய கண்களும், மஞ்சட் சோளம், அறுகுமுனை, பாணத்து உளி, கத்திரி ஒளி, கோரோசனை, தாமரைப்பூ, பொன் முதலியவற்றையொத்த உடல் நிறம்; ஐயப்பசையால் கறுத்து நெருங்கி முளைத்த உளையும், கொழுத்த யானை நடையும்; முகில், கடல், அரிமா, முழவு இவைகளின் ஒளிபோன்ற குரல் ஒலியும்; கைப்பு, துவர்ப்பு, காப்புக் கூடிய வெப்பமான அற்பவுண்டி; அற்பவுண்டி எனினும் மிக்க வன்மையும், பசி, நீர் வேட்கை, துயரம், அச்சம், சூடு ஆகிய இவைகளுக்குப் பின்வாங்காத தன்மையும்; சாரம், வெண்ணீர், வழிவழித் தொடர்பு (சந்தானம்) ஏவலாளர், ஒழுக்கம், அறிவு ஆகிய இவைகளின் பெருக்கம், சிறு குழவியானால் மிக்க அழுகை, சீற்றம், கடுஞ்சொல், கலக்கம் பொருந்திய அறிவு, திடம், மிக்க நீர்வேட்கை என்னும் இவையின்மையும்; சத்துவகுணம், நினைவு, வன்மை, மேலான அறிவு, முன் ஆராய்ச்சி, பெரியோர்களிடம் அன்பு, வணக்கம், நீங்காத நட்பு, நம்பிக்கை, உண்மை, உறுதி, பொறாமை, நாணம், பொருத்தமான விடை, அறத்தில் விருப்பம், நன்றி மறவாமை, ஈகை மிகுந்த ஈவக, பிறர் நன்மதிப்பு, நற்செய்கை ஆகிய இப்பண்புகளும், நல்ல தூக்கமும் அத்தூக்கத்தில் பறவைகள் உள்ள தாமரைக்குளம், குளிர்ச்சி பொருந்திய முகில் இவற்றைக் காண்கின்ற கனவும், புலமைத் திறமையுடன் மிகுந்த செல்வமும் உண்டாயிருக்கும்.

இந்த ஐயம் என்பதைத் திங்களில் இயற்கைத் தன்மை என்றே சொல்லுவர்.

மேற்கூறிய வளி, உடல், அழல் உடல், ஐய உடல் இம்மூன்று உடலிணர்க்கும் பொதுவாகத் "தூய உடலினர்" எனவும்; இம்மூன்றில் கலப்பினையுடையை தேகிக்கு "கலப்பு" உடலினர் என்றும் பெயராகும்.

### 5. ஐய உடலினன் பண்புகள் :

ஐய உடம்பின் இயற்கை பண்புடையவன், பெரியோர்கள் கதையைக் கேட்டல், வஞ்சம், சாகசம், சுத்தம் இவற்றைப்

பெற்றிருத்தல் மணப்பூச்சில் விருப்பம்; வன்மையான உடல்; பெருமை மிக்க செல்வம், இந்திரியக் குறைவு, பிள்ளைப் பேற்றுக் குறைவு, பூணிலின்பம், இனிப்புக் கைப்புகளில் விருப்பம், வெய்யில் பொறாமை, உடல் நாற்றம், வேர்வை, கண்ட நீர் உண்ணல், இருமல், கபம் அதிகமாகவும், வாதமும் பித்தமும் குறைவாகவும் இருத்தல், குடைபோன்ற நெற்றி, நீலமயில், வன்மையுள்ள தோள், இரண்டு பேச்சுப் பேசாமை, சங்கீதம் கேட்பதில் விருப்பம், சுத்த உணவு மிகுதியாக உண்ணல், சுகதேகம், தாமரைமலர்போன்ற அழகு என்னும் இவற்றை இயற்கையாக உடையவனாவான் என்றும் கூறியுள்ளார்.

## வளி, அழல், ஐயம் கலப்புக் குற்றம் முதலிய தேகக்குறிகள்

*(வேறு)*

**(சதக நாடி)**

### *1. வாத தேகியின் இலக்கணம்*

**(வாத தேகக் குறி)**

"கண்டாயோ வாதத்தாலே முந்த தேகம்
கட்டிமையாய்த் தடித்திருக்குங் கருமை செம்மை
வண்டாகுங் குழலாள் மேலற்பவாசை
வாய்வுமிகும் போக முறுமனஞ்சிக் கென்றல்
உண்டாலே அற்பவுண்டி எரிப்போடுண்ணு
முறுதாது குறைச்ச லுடம்புகளை
பண்டோர்கள் நூல்முறையள நடக்கல் போதம்
பாங்கான அறிவிசைத்தல் திண்ணந்தானே."

என்பதினால், வாதத்தாலெடுத்த தேகம், கடினம், தடிப்பு, கருமை அல்லது செம்மை, தேகத்தில் வாய்வுப் பெருக்கம், சிற்றின்பக் காதல் தாது நட்டம், தேகவுளைச்சல், அன்னம் செல்லாமை முதலிய குணங்களாம்.

### *2. வாத பித்ததேகக் குறி*

"தானமுற வாதத்தில் பித்தஞ் சேர்ந்தால்
சரீரகுறி மெலிவு நிறங் கருப்பேயாகும்
ஈனமுறப் பொய்யுடனே மெய்யுஞ் சொல்லும்
எரிப்புடனே துவர்ப்படியாக முண்ண வேண்டும்
கானமருங் குழலார்மேல் மிகுந்த வாசை
கடிந்த மொழி முன்கோபங்காட்டு முள்ளம்
ஆனவுடல் நெடிதலது குறித்தலாகும்
அறிவு குறைந்திருக்குமென வறியலாமே."

என்பதினால், வாத பித்தத்தாலெடுத்த தேகம், மெலிவு, கருமை நிறம், பொய்யும் மெய்யும் கலந்து பேசல், மைதுன அபேட்சை, அறிவின்மை, முன்கோபம், கடினமொழி ஆகிய இக்குணங்களோடு உண்ணும் பண்டங்களில் காரம், துவர்ப்பு சுவையின் அதிக இச்சையுமுண்டாம்.

### *3. வாத ஐய தேகக் குறி*

"திண்ணமுறுவாதத்தில் சேத்துமஞ் சேர்ந்த
தேக குணமதகரிபோல் நடக்குங் காயம்
வண்ணமுறத்தூ லமதாமுயர்ந்தமேனி
வார்த்தை இடிபோலாகும் யோகமுண்டாம்
நிண்ணயமாங்கலைக்ஞான மறிவுமுண்டாம்
நேரிழைமேல் மிகவாசை நிறமேசெம்மை
உண்ணவது புளிப்பெரிப்பு அதிகம் வேண்டும்
உயர்ந்ததொரு காரஞ்சாரஞ் செய்வான்றானே."

என்பதினால், வாத ஐயத்தாலெடுத்த தேகம் தடிப்பு மதங்கொண்ட யானைபோல் அசைந்து நடத்தல், செம்மை நிறம், மாதர்மேல் இச்சை, ஸ்தூல சரீரம், உரத்த குரல், சகல கலைஞானங்களையும் அறியத்தக்க வல்லமை, யோகப் பயிற்சி முதலிய குணங்களோடு உண்ணும் உணவுகளில் புளிப்பு, காரம் இவை போன்ற சுவைகளில் அதிக இச்சையுமுண்டாம்.

### 4. பித்த தேகக் குறி

"அறிவான பித்தத்தாலெடுத்த தேகம்
யறமெலிவு நிறம் வெள்ளை யரிவையோடு
புரியாத சுகலீலையற்பவுண்டி
பெரும்புளிப்புணவு கொள்ளல் பெரியோர்தம்மை
குறியாத வாசாரம் பண்ணல்புத்தி
குழம்பிப்பின் தேறல் கலைக்ஞானபோதம்
நெறியாதக் கற்றறிவு சொல்லல் வீரம்
நிலைப்புமதியில க்கமதி யறவாமே."

என்பதினால், பித்தத்தாலெடுத்த தேக நிறம் வெண்மை, அளவு கடந்த தேக வறட்சி, அற்பவுண்டி, சொற்ப நித்திரை, பெரியோர்களிடத்தில் மதிப்பு, மனக்குழப்பம், பல கலைகளையும் சரியாகக் கற்றல், தைரியம் ஆகிய குணங்களோடு உண்ணும் உணவில் புளிப்புச் சுவையில் அதிகப் பிரியமுண்டு என்பதாம்.

### 5. பித்த வாத தேகக் குறி

"உறவான பித்தத்தில் வாதஞ்சேர்ந்து
வுறத்தெழுந்த தேகமது பொது நிறமேயாகும்
நிறைவான குணங்கிருமைக் காட்சைவாமம்
நேர்மை சுகியன்குளிகை யோகமாய்கை
மறவான கனவு நாற்கந்தம் வேண்டும்
வாய்ஞான மதிகப்புத்தி குயில்போல் வார்த்தை
துறவானவுடல் வறட்சி பசி பொறுமையாகும்
சூடெரிப்புப் புளிப் பதிகமுண்ணுஞ் சொல்லை."

என்பதினால், பித்த வாதத்தாலெடுத்த தேகம் செம்மை அல்லது வெண்மை நிறம்; சுகந்த வாசனைகளால் அதிகப்பிரியம்; அறிவுடைமை, குயிலின் குரலையொத்த தொனி, சினுக்கிருமல், தேகவறட்சி முதலிய குணங்களோடு காரம், புளிப்பு சுவைகளில் ஆவலதிகம் என்பனவாம்.

### 6. பித்த தேகக் குறி

"சொல்லுகின்ற பித்தமதிற் சேத்துமஞ்சேர்ந்த
சொரூபமது செண்பகபூ நிறமே மேனி

வல்வியர்மேல் மிக வாசையுளிப்பினிப் புண்ணும்
வாக்கியங்குரலோசை மனத்திடமேயாகும்
நல்லறிவு கற்கைமுதியோரைப் பேணும்
நடுநிலையே சொல்லு மதியோகமுண்டாம்
பல்லுயிர்க்குநதானிறங்கிக்கிருபை செய்யும்
பாங்கான தருமமிகுந்திருக்குந்தானே."

என்பதினால், பித்த ஐயத்தாலெடுத்த தேகம் செண்பகப்பூ நிறம், அளவுகடந்த மோகம், இனிமையான குரலோசை, கற்றோரை ஆதரிக்கும் நல்லெண்ணம், நடுநிலையான யோகாப்பியாசம், பல்லுயிரை ரெட்சிக்கும் தருமசிந்தை முதலிய குணங்களோடு புளிப்பு, இனிப்பு சுவையுள்ள பண்டங்களில் ஆசைமிகவுண்டு.

### 7. ஐய தேகக் குறி

"தானான சிலேற்பனத்தாலெழுந்த தேகம்
கனத்திருக்கு மனம் பெலெக்குஞ்சரீரம் வேர்க்கும்
மானார்மேல் மயலாகுஞ் சிவந்தமேனி
வானிடிபோற் குரலாகும் வணக்கமாகும்
ஆனாலோ பொய்யதை மெய்யாயுரைக்கும்
அறப்புசிக்குந்தித் திப்போடுண்ணுங்கைகால்
ஊனாகக்கசிந்திருக்குங் காசங்கச்சல்
உண்டாகுமென்று முன்னோருரைத்தவாறே."

என்பதினால், ஐயத்தாலெடுத்த தேகம் சிவப்பு, கொழுமை, வியர்த்தல், மோகம், குமறாலான குரலோசை, அடக்கம், ஒடுக்கம், பொய்யை மெய்போல் பேசல் ஆகிய குணங்களோடு இனிப்புச் சுவையில் அதிகப் பிரியமுண்டு என்பதாம்.

### 8. ஐய பித்த தேகக் குறி

"வாறானசிலேற்பனத்தில் பித்தஞ் சேர்ந்தால்
வளர்கோரோசனை நிறமாமேனி தானும்
வீறான புளிப்பினிப்பு மெத்த வேண்டும்
மெய்ரோமம் சிவப்பு வெடிக்குரலேயாகும்

பேறான சத்தியமொழிபொய் சொல்லாமை
பிற்பலனாம் யோகமுண்டாம் பேதையோடு
கூறாத மையல் விளைபண்புகழ்ச்சி வீரம்
கொண்டுமனத்திடத்தனெனக்குறிக்கலாமே."

என்பதினால், ஐய பித்தத்தாலெடுத்த தேகம், சிவப்பு அல்லது பசுமை நிறம் செந்நிறமான தேகரோமங்கள், வெடிப்பான குரலோசை சத்தியநெறி, பெண் வசியம், புகழ்ச்சி, தைரியம் முதலிய குணங்களோடு இனிப்பு, புளிப்பு, சுவைகளில் அதிகப் பிரியமுண்டு என்பதுவாம்.

### *9. ஐய வாத தேகக் குறி*

"குறிக்கின்றசிலேற்பனத்தில் வாதம் பற்றில்
கூண்டெழுந்த தேகமது தூல காயம்
பிரிக்கின்றவுடல் கறுமை செம்மையாகும்
பெருகு சூடவுண்டி புளிப்பெரிப்போடுண்ணும்
மறிக்கின்ற பெண்ணாசை வீரம் யோகம்
வாழ்க்கைக்கவிதமான வித்தை மறைநூ லாய்தல்
நெறிகொண்ட பெரியோரைப் போற்றலன்பு
நேசமுறுஞ் சிலேற்பனத்தில் வாதமாமே."

என்பதினால், ஐயவாதத்தாலெடுத்த தேகம் தடிப்பு, கறுமை அல்லது செம்மை நிறம், யோகம், பிரியம், யோகசாதனையைக் கற்றறிதல் பல கலைகளை ஆராய்தல், பெரியோர் தம்மை ஆதரித்தல், தைரியம் குணங்களோடு புளிப்பு, காரம் முதலிய சுவைகளின் இச்சை அதிகம் உண்டு என்பதாம்.

## *வளி, அழல், ஐயமென்னும் முக்குற்றங்களின் மிகுதி - குறைவு இவற்றின் பண்புகள் கூறுவாம்*

### *1. வளி மிகு குணம்*

1. உடல் இளைத்துக் கறுத்தல்
2. சூடான பொருட்களில் விருப்பம்
3. உடல் நடுக்கம்,

4. வயிறு உப்பல்,

5. மலக்கட்டு,

6. வன்மை குறைதல்,

7. தூக்கம் கெடல்,

8. ஐம்பொறிகளின் வன்மை கெடல்,

9. வாய்ப்பிதற்றல்

10. தலை சுற்றல்,

11. ஊக்கம் இன்மை.

### வளி குறை குணம்

1. உடல் நோதல்,

2. தாழ்ந்த குரல்,

3. தொழில் குன்றல்,

4. அறிவு மங்கல்,

5. மூர்ச்சை உண்டாதல்

6. ஐய வளர்ச்சியில் காணும் பிணிகளுண்டாதல்.

### 2. அழல் மிகு குணம்

1. கண், மலம், சிறுநீர், தோல் இவைகள் மஞ்சள்நிறம் அடைதல்,

2. பசி, நீர் வேட்கை மிகுதிப்படல்,

3. உடல் முற்றும் எரிச்சலுண்டாதல்,

4. குறைந்த தூக்கம்.

### அழல் குறை குணம்

1. மந்தாக்கினி,

2. குளிர்ச்சி,

3. நிறைக்குறைவு,

4. இயற்கை ஐய வளர்ச்சிக்குக் கேடு உண்டாதல்.

### 3. ஐய மிகு குணம்

1. அக்கினி மந்தப்படல்,

2. வாய் நீர் ஊறல்,

3. ஊக்கம் குறைதல்,

4. உடல் கனமாகத் தோன்றுவதுடன் வெண்ணிறத்தையும், குளிர்ச்சியையும் அடைதல்.

5. உடல் முற்றும் உள்ள கட்டுகள் தளரல்

6. இரைப்பு, உப்புசம், இருமல், மிகு தூக்கம் இவை உண்டாதல்.

### ஐய குறை குணம்

1. தலை சுற்றல்

2. கீல்களில் பசை முற்றும் நீங்கி அவை தளர்ச்சியடைதல், இதனால் கீல் எலும்புகள் நன்றாக வெளியில் தோன்றுதல்.

3. ஐயம் வாழுமிடங்களில் ஐயம் குறைந்தும், நுரை ஈரலைப் பற்றிய ஐயம் கரைந்தும், நுரை ஈரல் இல்லாததுபோலத் தோன்றியும், மயிர்க்கால்களினின்றும் வியர்வை பெருகியும் காட்டல்

4. தமரகத்தில் படபடத்த ஒலி ஆகியவைகளாம்.

### 4. உடற்றாதுக்கள் ஏழு (அல்லது உடற்கட்டு)

1. சாரம் : உடலையும், மனதையும் ஊக்கமுறச் செய்வது.

2. செந்நீர் : அறிவு, வன்மை, ஒளி, செருக்கு, ஒலி இவைகளை நிலைக்கச் செய்வது.

3. ஊன் : உடலின் உருவத்தை அதன் தொழிற்கிணங்க அமைத்தலும், என்பை வளர்த்தலுமாம்.

4. கொழுப்பு : ஒவ்வோர் உறுப்பும் தத்தம் செயலை இயற்றும்பொழுது கடினமின்றி இயங்க அவற்றிற்கு நெய்ப்புப்பசை ஊட்டி உதவிபுரிவது.

5. எலும்பு : உடலை ஒழுங்குபட நிறுத்திவைத்தல், மேன்மையான உறுப்புகளைப் பாதுகாத்தல், உடல் அசைவிற்கு அடிப்படையாயிருத்தல் ஆகிய செயல்களைச் செய்வதாம்.

6. மூளை : என்புக்குள் நிறைந்து அவைகளுக்கு வன்மையும் தருவது.

7. வெண்ணீர் : தன்னையொத்த உருவப் பெருக்கிற்கு முதலாய் நிற்பது.

இவ்வேழு உடற்றாதுக்களும் தத்தம் அளவினின்றும் மிகுந்தாலும், அதனதன் இயற்கைத் தொழில் வேற்றுமைப்படும். ஆகவே அவ்வேற்றுமைகளைக் கீழே காணவும்.

1. சாரம் மிகு குணம் : ஐய வளர்ச்சியால் உடலில் காணும் கெட்ட பண்புகள் எல்லாம் தோற்றுவிக்கும். அவை பசித்தீ குறைதல் முதலானாவ. (ஐயம் மிகு குணம்.)

*சாரம் குறை குணம்*

1. தோல் சுரசுரப்படைதல்
2. மெய்வருத்தம்,
3. இளைப்பு,

4. வாட்டம்,

5. பேரொலி கேட்கப்பெறாமை.

### 2. செந்நீர் மிகு குணம்

1. புருவம், உச்சி, கழுத்து, மார்பு, தொப்பூழ், உதடு, அண்டம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காற்பெருவிரல், சுட்டுவிரல், தோலின் உட்புறம், வெளிப்புறம் கொப்புளங்கள் உண்டாதல்.

2. இடப்பாட்டீரல், வீக்கம்.

3. கட்டிகள்.

4. சூலை.

5. பசியின்மை (அக்கினிமந்தம்)

6. குருதிவளி (இரத்தவாதம்)

7. குருதித்தீ (இரத்த பித்தம்)

8. குறுதிச் சிறுநீர் (இரத்த மூத்திரம்)

9. மிகச் சிவந்த கண்.

10. சிவந்த செந்நீர்த்துடிப்பு.

11. சிவந்தநிறத் தோல்

12. பெருநோய்.

13. காமாலை.

14. பயித்தியம் ஆகிய இவை உண்டாகும்.

### செந்நீர் குறை குணம்

புளிப்பு குளிர்ச்சியுமுள்ள பொருள்களில் விருப்பு, நரம்புத்தளர்ச்சி, வறட்சி, உடலில் நிறம் குறைதல் ஆகிய இவை தோன்றும்.

*3. ஊண் மிகு குணம்*

1. கண்டமாலை, கிரந்தி இவையுண்டாதல்.

2. கன்னம், வயிறு, தொடை, ஆண்குறி இவ்விடங்களில் கண்டு கண்டாகக் கட்டுதல்.

3. அத்துடன் கழுத்து முதலிய இடங்களில் ஊண் அதிகரித்தலும் உண்டாகும்.

*ஊண் குறை குணம்*

1. ஐம்பொறிகட்குச் சோர்வு.

2. கீல்களில் நோயுண்டாதல்

3. தாடையும், பிட்டமும், ஆண் குறியும், தொடையும் சுருங்கலாகி இவையுண்டாகும்.

4. கொழுப்பு - மிகுகுணம்; ஊண் மிகுதியால் நேரிடும் பிணிகளும்; களைப்பும், அற்ப உழைப்பிலும் பெருமூச்சு, பிட்டம், குறிகள், மார்பு, வயிறு, தொடை இவைகளில் தொங்கும் ஊனும் பெருகும்.

கொழுப்பு - குறை - குணம் : இடுப்பு வன்மையின்றி வலியுறுதலும், இடப்பாட்டீரல் வளர்ச்சியும்; உடலிளைத்தலும் உண்டாகும்.

5. என்பு - மிகுகுணம் : என்புகளும் மிகுதிப்படும் என்பு - குறைகுணம் : என்பு சந்துகளில் நோவும், பற்கள் கழலலும், நகங்களும் மயிர்களும் வெடித்தலும், உதிர்த்தலும் பெறும்.

6. மூளை - மிகுகுணம் : உடல் பாரித்தல், கண் கனத்தல், கைகால்களிலுள்ள விரல் கணுக்களின் அடி பருத்தல், சிறுநீர் குறைந்து போதல், அரிதில் தீரும் புண் இவையுண்டாகும்.

மூளை - குறை குணம் : என்புகளில் தொளை விழுதலும், திகைத்தலும், கண்களில் இருள் கம்மலும் உண்டாகும்.

7. வெண்ணீர்- குறை குணம் : புணர்ச்சியில் வெண்ணீரும் சுரோணிதமும் பொறுத்துப் பொறுத்துத் துளித் துளியாய் விழுதல் அல்லது செந்நீர் வெளிப்படல், விதையில் குத்தலுடன் வலி; குறியில் அழற்சி மிகுதிப்பட்டு அது கறுத்தல் ஆகிய இவை உண்டாகும்.

## ஐ. மலம்

மலம் என்பகு உடலினின்றும் கழிகின்ற பொருள். சிறுநீரும், வியர்வையும் இதிலடங்கும்.

மலத்தின் இயற்கைப் பண்பு : மலத்திற்கு உடலை நிலை நிறுத்துதலும், நீருக்கு உடலின் கசிவை வெளிப்படுத்தலும், வியர்வைக்குத் தோலின் கசிவை வெளிப்படுத்தலும் மயிர்களை நிலைபெறச் செய்தலுமாம்.

1. மலம் - மிகுகுணம் : வயிறுப்பல், இரைதல், கனத்தல் இவையுண்டாகும். குடலைச் சுற்றிப் பலவி முறுக்கிப் பிடிப்பதுமின்றி சில வேளைகளில் தமரகத்திலும் பக்கங்களிலும் நோயை உண்டாக்கி, மேல்நோக்கி வருத்தத்தை உண்டாக்கும்.

2. சிறுநீர் - மிகுகுணம் : சிறுநீர் நாளத்தில் ஊசியாற் குத்துவதுபோன்ற துன்பத்தையும், சிறுநீரைக கழித்தபின்பு மேலும் நீரைக் கழிக்கவேண்டும் என்கிற எண்ணைத்தையும் உண்டாக்கும்.

சிறுநீர் - குறைகுணம் : மிக்க முயற்சியுடன் நீர் துளித்துளியாகவும், நிறமாறியும், சில வேளைகளில் இரத்த நிறமாகவும் வெளிப்படும்.

*3. வியர்வை மிகு குணம் :* வியர்வை மிகுதியால் தீனாற்றம், தினவு இவை உண்டாகும். உடல் சீதளிக்கும், களைப்பு உண்டாகும்.

வியர்வை குறைகுணம் : மயிர் உதிர்தல், உதிராதமயிர் விறைத்து நிற்றல், தோல் வெடித்தல் ஆகிய இவற்றை உண்டாக்கும்.

குறிப்பு : இம்மலங்களைத் தவிர கண், மூக்கு, காது இவ்விடங்களிலும் மலம் கசியும். இவ்வுறுப்புகளில் மலம் மிகுதிப்படுமாயின் அவ்வுறுப்புக் கனத்தலையும்; குறைவுபடின் இயற்கைக்கு மாறான பண்புகளையும் பெறும்.

மலங்கள் மிகினும், குறையினும் கெடுதியே விளையும் என்றாலும், உடலில் எப்பொழுதும் சிறிதளவு மலமிருத்தல் அதன் இயற்கைப் பண்பாதலால் மலம் மிகுதியாலுண்டான கெடுதியைவிடக் குறைவினால் மிக்க கெடுதி நேரிடும்.

## ஒ. உடல் வன்மை

உடல் வன்மை முத்திறப்படும். அவை : (1) இயற்கை வன்மை, (2) கால வன்மை, (3) செயற்கை வன்மை என்பனவாம்.

*1. இயற்கை வன்மை உடலின் இயல் :* இது சத்துவ , ரஜோ, தமோ குணங்களினின்றும் இயற்கையாகவே உண்டாவதாம்.

2. காலவன்மை உடலின் இயல் : இது ஆண்டாலும் (வயதாலும்) இளவேனில் முதலிய பெரும் பொழுதாலும் உண்டாவதாம்.

*3. செயற்கை வன்மை உடலின் இயல் :* இது முக்குணங்களின் சேரக்கையால் இயற்கையான உண்டான உடலை அந்நந்த குணத் தன்மைக்குரிய உணவு, செயல்களாலும் உடற்கட்டுகளின் வன்மை கெடாவண்ணம் நிலை நிறுத்தக்கூடிய மருந்துகளாலும் காத்துக்கொள்வதாலும் உண்டாவதாம்

## *11. சத்துவம் முதலிய முப்பண்புகளையுடைய உடலினர் இயல்*

*1. சத்துவப் பண்புடைய உடலினர் இயல் : அகத்தூய்மை, தெய்வக்கொள்கை, அறஞ்செய விருப்பம், அறிவுடைமை, ஞானம், அருள், தவம், பொறாமை, வாய்மை, மேன்மை, பேசாமை (மௌனம்), ஐம்பொறியடக்கம் என்னும் இயல்புடையதாம்.*

*2. இரசோகுண உடலினர் இயல் : மிகுபேச்சு, மானம், சீற்றம், வீண் பெருமை, பகைமை, மனவூக்கம், மெய்யுணர்வு, வீரம், தவம், அறம், கொடை, கல்வி, கேள்வி ஆகிய இவை இரசோகுண உடலினர் இயல்புகளாகும்.*

*3. தமோ குண உடலினர் இயல் : அச்சம், அறிவின்மை, நெடுந்துயில், பேருண்டி, சோம்பல், நீதிவழு, ஒழுக்கவழு, வஞ்சகம், மறதி, பொய், சீற்றம், காமம், கொலை என்னும் இவை தமோகுண உடலினர் இயல்புகளாம்.*

## *ஓ. பதினான்கு வேகங்கள் (அல்லது) விரைவுகள்*

1. பதினான்கு வேகங்களாவன :

*1. அபானவாயு,*

*2. தும்மல்,*

*3. சிறுநீர்,*

*4. மலம்,*

*5. கொட்டாவி,*

*6. பசி,*

*7. நீர்வேட்கை (தாகம்),*

*8. இருமல்,*

9. இளைப்பு,

10. தூக்கம்,

11. வாந்தி,

12. கண்ணீர்,

13. சுக்கிலம்,

14. மூச்சு அல்லது உயிர்ப்பு என்பனவாம்.

இப்பதினான்கில் மலம், அபானவாயு என்னும் கீழ்வாய்வளி, தும்மல், சிறுநீர் என்னும் இவை நாள் தவறாமல் வெளிப்படுபவன என்பதும், இவற்றின் அளவும் கூறப்பட்டிருக்கும்.

மலமும், சிறுநீரும் முறையே ஒரு நாளைக்கு மூன்று முறையும், ஆறு முறையும் கழிக்கவேண்டும் எனக்கூறுவர்.

" மும்மலம் அறுநீர் " என்பதாலறியவும்.

11. இப்பதினான்கு வேகங்களைத் தடுத்தால் உண்டாகும் நோய்களைக் கவனிப்போம்.

1. வாதம் (கீழ்நோக்குங்கால்)

இது "அபானவாயு" என்னும் "கீழ்வாய்வளி" அல்லது "கீழ்நோக்குங்கால்" அல்லது "கீழ்க்கால்" எனப்படும். இதனைத் தடுத்தால் உண்டாகும் நோய்களாவன :

மார்பு நோய், வாயு குன்மம், குடல் வாதம், உடம்பு முழுமையும் குத்தல், குடைச்சல், வல்லமை, மலசலத் தடை, பசித்தீமந்தம் ஆகிய இவை மிகுதியுண்டாகும்.

(அ) வாதகுன்மத் தன்மைகளாவன :

ஈரல், மார்பு இவற்றிலுள்ள ஈரம் வற்றுதல், வயிற்றில் எரிச்சல், பக்கங்களில் உளைதல், தலை கனத்தல், நோதல், தலை மயக்கங்கொண்டு புளிப்பாய் வாந்தியாதல், குடலில் வலி உண்டாதலாகிய குறிகுணங்களாம்.

(ஆ) குடல் வாதத் தன்மைகளாவன :

ஒரு பக்கம் விதை உள்ளுக்கு இழுத்துக்கொள்ளுதல், அண்டத்தில் வளி சேர்ந்து துருத்திபோல் உப்புதல், பிறகு அவ்வாயு வயிற்றிலேறுதலால் விதை காணப்படல். இதனால் மிக வருத்தம் உண்டாதல் என்பனவாம்.

இ) வல்லை வாதத் தன்மைகளாவன :

வாள்போல் வயிற்றில் குறுக்கே வளர்ந்து சதைப்பற்றுள்ள தாயிருக்கும். நீளமாய்க் கோள் போலும் நேராய்க் கிடப்பதுண்டு. அன்னம் செல்லாது. செரித்திடாது, துன்பத்தை விளைவிக்கும்.

## *2. தும்மல்*

**தும்மலைத் தடுத்தால் உண்டாகும் நோய்களாவன :**

*1.* மூக்கிலிருக்கும் கிருகரனான வாயுவின் தொழிலாகிய தும்மலைத் தடுத்தல், அவ்வாயு வெம்மையூற்றை அடைந்து, இலேசாகி மேலுக்குக் கிளம்பி தலை முழுமைக்கும் நோதல், இயல்பாயுள்ள இருவகையான பத்து இந்திரியங்களும் தெரிந்து விழுவதுபோலத் தோன்றல். முகம் இழுத்தல், இடுப்பு வாயு முதலிய நோய்கள் உண்டாகும். (பத்து இந்தியங்கள் என்பது ஞானேந்திரயமும், கன்மேந்திரயமும் சேர்ந்தது என அறிக.)

“இடுப்பு வளி” அல்லது “அரைமேல்வளி”யின் தன்மைகளாவன :

வயிற்றுப் பொருமல், விந்து நீர்த்தல், இடுப்பு, கைகள், கால்கள், பூட்டுகள் இவை கட்டுதல், சீதத்துடன் மலம் (பவ்வீ) கொஞ்சம் கொஞ்சமாய்க் கழிதல், சிறுநீர்க் கடுப்புடன் கொஞ்சங் கொஞ்சமாயிறங்கல் முதலியவைகளாம்.

### *3. சிறுநீர்*

சிறுநீரை அடக்கினால் நீரடைப்பு, நீரிறங்கும் புழை, புண்ணாதல், கீல்கள் நோதல், ஆண்குறி சோர்வுடன் குத்தல், கிழ்வாய்வளி, வயிற்றினில் சேர்தல் ஆகியவை உண்டாகும். நீர்த் துவாரத்தில் சீ, குருதி முதலியவை சேர்ந்து, இறைச்சியைப் பொய்யாவி அவித்தது போன்ற புண் உண்டாதல் என்பவையாம். அன்றியும் ஆண்குறியின் துவாரம் நெருப்பு பட்டாற்போல் எரியும்.

### *4. மலம்*

மலத்தை அடக்கினால் : மலத்தைக் கீழ்த்தள்ளும் அபான வாயுவின் செயலை எதிர்க்கும்படியாகும். ஆதலால் அவ்வபானம் பெருகி அடக்கப்பெற்ற மலத்தைத் தள்ளும். அவ்வளியின் தன்மையூற்றால் சலதோஷம், முழங்காலின் கீழ்த்தண்மையான நோய் ஆகிய இவற்றை உண்டாக்கும். அவ்வளி வெம்மையூற்றால் மேலுக்குக் கிளம்பித் தலையிற் சேர்த்து, தலை வலித்தல், ஒலியுடன் கீழ்க்கால் பறிதல், உடல் வன்மைக்குறைவு ஆகிய இவற்றுடன் வேறு பல நோய்களும் தோன்றி வருத்தும்.

வாயுவால் மலச்சிக்கல், தலைவலி, கண்ணீர் சொரிதல் ஆகிய இவைகளும் உண்டாகும்.

### *5. கொட்டாவி*

கொட்டாவியை அடக்கினால் : முகம் வதங்கல், இளைப்புக் குறி காணப்படல், அளவோடு உண்ணினும் செரியாமை, நீர் நோய், வெள்ளை நோய் என்னும் இவற்றால் அறிவு மயங்கல் வயிற்றில் நோய் வருதல் முதலியவை உண்டாகும்.

### *பசி*

### *7. நீர் வேட்கை (தாகம்)*

பசியையும், நீர் வேட்கையையும் அடக்கினால் உடலில் அமைந்திருக்கிற அங்கங்களாகிய கருவிகளும் தத்தம்

தொழில்களைச் சரிவரச் செய்யமாட்டா. அதனால் சூலை, பிரமை, உடல் இளைப்பு, முகவாட்டம், சந்துக்களிலெல்லாம் நோவு ஆகிய இவை உண்டாவனவாம்.

இளைப்பு உண்டாகும் என்பது தக்க உணவு கிடைக்கா விடில், பல நாட்களாகப் பசியை அடக்கிவருவதால, மூலத்தில் சூடுகொண்டு, அச்சூட்டால் ஏழு உடற்றாதுக்கள் வற்றி, அதனால் வரக்கூடிய ஷயம் என்னும் இளைப்பு நோய் உண்டாகும் என்பதாம்.

### *8. காசம் (இருமல்)*

### *9. இளைப்பு (ஆயாசம்)*

காசம் என்னும் ஈளை இருமலையக்கினால் மிக்க இருமல் நோயுண்டாய் வருத்தும். மூச்சு விடும்போது அம்மூச்சில் கெட்ட மணம் வீசும். அன்றியும் மார்பில் உட்கருவியாகிய இருதய நோயும் உண்டாகும்.

இளைப்பு என்னும் ஆயாசத்தை அடக்கினால் மிக்க வெப்பத்தால் உண்டாகும் நீர்மேகம் பெருகும். குன்ம நோயுண்டாகும், திடீரென்று அறிவைக் கெடுத்துத் தன்னை அறியாதபடி செய்கிற மூர்ச்சை நோயும், குளிரும் உண்டாகும்.

காசம் என்னும் சொல் களைப்பையும், இருமலையும் உணர்த்தும் சொல்லாம். இங்கு அது இருமலை உணர்த்திற்று என அறிக.

### *10. நித்திரை (தூக்கம்)*

தூக்கத்தை அடக்கினால் நாள்தோறும் தலைக்கனம், கணகள் சிவத்தல், செவிடு, அரைப்பேச்சு முதலியன உண்டாகும்.

### *11. வாந்தி*

வாந்தியை அடக்கினால் புழுக்கடியால் உண்டாகக் கூடிய தடிப்புக் குட்டம் போன்ற தடிப்புகள், நமை, பாண்டு, கண் நோய்கள், பித்த பிடபாகங்கள் இரைப்பு, இருமல் ஆகிய இவை உண்டாகும்.

மேலும்,

"சத்தியால் பித்தந்தாழும்;

பேதியால் வாதந்தாழும்;

நசியம் அஞ்சனத்தால் ஐயந்தாழும்"

என்பதற்கிணங்க, முக்குற்றங்கள் கேடடைந்த காலத்தில் அழற்றைத் தக்கவாறு குறைக்க வழியாயிருக்கிற வாந்தியை அடக்கினால், மேலும் மேலும் பித்தம் மிகுந்து அதன் செயலால் வரக்கூடிய தடிப்புக்குட்டம் போன்ற நோய்கள் உண்டாகும் என்றறிக.

புழுக்கடியாலும், தடிப்புக் குட்டம் உண்டாகும். இன்னின்ன இடத்தில் கடித்தால் இன்னின்ன நோய் உண்டாகும் எனவும் கூறியுள்ளார். காலில் கடித்தால் திமிருண்டாம். கையில் கடித்தால் விரல் குன்றும், உடம்பின் மேல் கடித்தால் தடிப்புக் காணும். கழுத்தில் கடித்தால் பொரிந்து காணும்.

### 12. விழி நீர்

கண்ணிலிருந்து வரும் நீரையடக்கினால் தமரகவாயு, பீனிசங்கள், கண் நோய், தலையின் புண் ஆகிய இவைகளும், அப்புண்ணில் வளி கூடினால் குன்ம நோயும் உண்டாகும் என்பர்.

### 13. சுக்கிலம்

விந்துவை அடக்கினால் சுரம், நீர்க்கட்டு, கைகால்கள், கீல்கள் இவற்றில் நோயுண்டாதல், விந்து கசிந்து நீள்சீலை நனைதல், மார்படைப்பு, மார்பு துடிப்பு, வெள்ளை என்னும் இவையுண்டாகும்.

அபான வாயுவின் தொழில் : மலம், நீர், விந்து ஆகியவற்றைக் கீழ்க்குத்தள்ளுவதென்பதை,

"நெழித்திட்டவாதம் பாளத்தைப் பற்றி
மணமான விந்து விழமலநீர் பெய்ய வழிகாட்டி"

என்பதாலறிக.

*14. சுவாசம்*

மூச்சை அடக்கினால்; இருமல், வயிற்றுப்பொருமல், சுவை தெரியாமை, சூலைநோய், காய்ச்சல், வெட்டை ஆகிய இவை உண்டாகும்.

## *உடற்றீ விளக்கம்*

உடற்றீ நான்கு வகைப்படும். அவை : (1) "சமானவாயு" தன் இயற்கையிடத்திலிருப்பின் "சமாக்கினி" என்றும்; (2) சமான வாயு இழந்தபின் ("விஷமாக்கினி") என்றும்; (3) பித்தத்தைச் சூழ்ந்தால் "தீக்ஷாக்கினி" என்றும்; (4) கபஞ்சேர்ந்தால் "மந்தாக்கினி" என்றும் வழங்கப்படும்.

1. சமாக்கினி

ஒருவன் வேண்டும் அளவு உட்கொள்ளுகின்ற உணவு, நீர்கள் எல்லாம் முறைப்படி, கால அளவுக்கு மாறுபடாமல் நன்றாகச் சீரணிக்கச் செய்யும் தீயே சமாக்கினி என அறியவும்.

2. விஷமாக்கினி

இது உண்ணப்பட்டவைகளை உடனே சீரணிப்பிக்காமல் நெடுநேரம் கழித்துச் செரிப்பிக்கும். அப்படிச் செரிப்பித்தாலும் அவைகள் விஷமச் சீரணமேயாகும்.

3. தீக்ஷணாக்கினி

வெந்ததும், வேகாததுமான உணவுப் பொருள்களைப் புசித்தாலும், அதனை இரசத்தோடும் (சாரம்) கூடவே செரிப்பிக்கும்.

4. மந்தாக்கினி

விருப்பத்தோடு உண்ட பாகமான உணவுப் பொருட்கள் உடனே செரிப்பிக்காமல் வாயுவால் வயிற்றிரைச்சல், குடல் இரைச்சல், வயிற்றுப்பிசம், உடல் கனத்தல் என்னும் இவைகளை உண்டாக்கி நெடு நேரத்திற்குப் பிறகு செரிப்பிக்கும்.

## ஐவகை நிலங்களும் பிணிகளும்

1. குறிஞ்சி நிலம்

இதில் வசிப்பவர்களுக்கு இரத்தத்தை உறிஞ்சுகின்ற சுரமும், வயிற்றில் ஆமைக் கட்டியும் உண்டாகும். சிலேட்டுமமும் தங்கும்.

2. முல்லை நிலம்

இதில் வசிப்பவர்களுக்குப் பித்த நோயுண்டாகும். அன்றியும் வல்லை நோய், வாத நோய்களும் உண்டாகும்.

3. பாலை நிலம்

இதில் வசிப்பவர்களுக்கு வாதம், பித்தம், கபம் இவற்றால் விளைகின்ற பிணிகள் யாவும் தோன்றும்.

4. நெய்தல் நிலம்

இதில் வசிப்பவர்களுக்கு வாத நோய்கள் உண்டாகும். மெலிந்த உடலைப் பெருக்கச் செய்யும். ஈரலைப் பெருக்கும். குடல் வாயுவை உண்டாக்கும்.

5. மருத நிலம்

இதில் வசிப்பவர்களுக்கு வாத, பித்த, கப, தோடங்கள் யாவும் குணமாகும். வசிப்பதற்கேற்ற நிலம் இதுவேயாகும்.

## ஐந்திணைக் குணத்தின் தொகுப்பு

குறிஞ்சி சிலேத்தும நோயும்;

முல்லையில் பித்த நோயும்;

நெய்தலில் வாத நோயும் உண்டாகும்.

மருத நிலத்தில் எக்காலத்திலும் எவ்வித நோய்களும் உண்டாகா.

பாலை நிலத்தில் நீடித்து வாழ்வது யோகிகளாக இருப்பினும் அரிதாகும்.

மருத நிலவாசமே நல்லதெனக் கொள்ளவும்

### மருந்துண்ணும் காலம்

1. "காரி புதன் திங்கள் கருத மருந்தாகாது,
பாரினில் சுங்கன் பரிகாரம் - நேரன்று
தேரகுருசேயுந்தான் தீதில்லை என்றும்
பேரருக்கன் நன்றெனவே பேசு."

### வேறு வயித்தியக் குறள்

2. "நோய்க்கவுழ்தமுண்ணில் ரவிகுருகுசனும்,
வாய்க்கும்படி எற்றும் நாள்."

3. "நைவினையோர்க்கு நாளென்பதில்லை."

என்பதினால் (1) சனி, புதன், திங்கள் இம்மூன்று தினங்களிலும் மருந்துண்ண ஆரம்பிக்கலாகாது என்றும்;

(2) வெள்ளிக்கிழமை மருந்து சாப்பிட எண்ணின் பிணி மிகுதிப்படும் எனவும்;

(3) வியாழன், செவ்வாய், இக்கிழமைகளில் மருந்துண்ண ஆரம்பிப்பது நன்று எனவும்;

(4) ஞாயிற்றுக்கிழமை எல்லாவற்றிற்கும் மேலான சிறந்த தினமென்றும் அறிகிறோம். ஆரம்பிக்கப் பொருத்தமான நாள்களாயினும், நோயினனின் நிலைமையறிந்து, அவசியத்தையும், அவசரத்தையும் கணக்கிட்டு நாள் பொருத்தம் பார்க்கத்தேவையில்லை என்பதையும் தெரியலானோம்.

## *பிணியாளன் தலைவைத்துப் படுக்கவேண்டிய திசை இன்னதெனல்*

(வெண்பா - கண்ணுசாமியம்)

"தொடுத்த பிணியாளர் தொல்லைவினை போக்க
படுக்கத் திசைகாணின் பாரில் வடக்காகா
உத்தமங்கிழக்காம் உயிர் வளரத் தெற்காகும்,
மத்திப மேற்கோ மதி."

என்பதினால்; பிணியால் வருத்தமுற்றவர்கள் தம் நோயைப் போக்கத் தலைவைத்துப் படுக்கவேண்டிய திசைகளில் வடக்கு ஆகாது. நோய் அதிகரித்து உயிர் பிரியும் எனவும்; கிழக்கு உத்தம மானதென்றும்; தெற்கு ஆயுள் விருத்தி செய்யுமென்றும்; மேற்கு மத்திமம் என்றும் அறிகிறோம்.

## *" எண் வகைத் தேர்வு " அல்லது " பிணியறி முறைமை "*

"பிணியறி முறைமை" என்பது உடலைப் பிணித்தலாய நோயைத் தெரிந்துகொள்ளுகிற ஒழுக்கம் எனப்படும்.

விதியும் ஒழுக்கமும் : இது *(1)* பொறியாற்றேர்தல்; *2)* புலனாலறிதல்; *(3)* வினாதல் என்னும் விதிகளையும், அவற்றைத் துணையாகப் பற்றி ஒழுகும் ஒழுக்கங்களையும் குறிக்கும்.

### *1. பொறி*

1. மூக்கு,

2. நா (வாய்),

3. கண்,

4. தோல் (மெய்),

5. செவி என ஐவகைப்படும்.

*2. புலன்*

1. நாற்றம் (மணம்)
2. சுவை,
3. ஒளி,
4. ஊறு,
5. ஓசை என ஐவகைப்படும்.

*3. வினா*

வினா என்பது கேட்டறிதல், பொறியாற்றேர்தல், புலனால் அறிதல், வினாதல் என்பது பிணியுற்றோனிடத்தும், பிணி தீர்ப்போனிடத்தும் உள்ள பொறி, புலன்கள் பிணிகளைத் தெளிவாயுணர்த்துமாகையால், மருத்துவன் தன்னை நோக்கி வந்த பிணியுற்றவனைப்பற்றி அறியவேண்டியவற்றை அறிந்தும், தன் பொறி, புலன்களால் பிணியாளனுடைய பொறி, புலன்களால் பிணியாளனுடைய பொறி, புலன் வழியாய் உணர்வதைக் கேட்டும், அவன் ஒருக்கால் எக்காரணத்தினாலோ அவன் சுற்றத்தாரைக் கொண்டு அறியக்கூடியவரை அறிந்தும், பிணியைக் கணித்தலைப் பற்றியே குறிக்கும்.

**எண்வகைத் தேர்வுகளாவன**

முற்கூறியபடி பிணியை அறியும் வழி, மருத்துவ நூல் வல்லோர்களால் எண்வகையாய் வகுக்கப்பட்டுள்ளது.

1. "நாடிப்பரிசம் நாநிறம் மொழிவிழி
மலம் மூத்திரமிவை மருத்துவராயுதம்"

என்பதினாலும்,

2. "மெய்க்குறி நிறந்தொனி விழிநாவிருமல் கைக்குறி" என்னும் தேரையர் வாக்கினாலும் அறிக.

இதற்குமேல் "நெய்க்குறி" என்பதும் ஒன்று உண்டு. அதனைப் பின்னால் கூறுவோம்.

### இருமல்

மருத்துவன் பிணியாளனது கழிவுப் பொருள்களை ஈ, எறும்பு முதலிய செந்துக்களைக்கொண்டு அறியலாம்.

### விழி

மருத்துவன், தன் கண்களால் நோயாளியின் பொறிகளாகிய மூக்கு, நா (வாய்), கண், தோல் (மெய்), செவி மற்றும் சில அவயவங்கள் ஆகியவற்றின் இலக்கணங்களையும், கழிவுப் பொருள்களின் தன்மைகளையும் அறிதல் வேண்டும்.

### அவற்றின் விளக்கம்

1. **மலம்** : இதன் நிறம், நுரை, இறுகல், இளகல்;

2. **நீர்** : இதன் நிறம், எடை, மணம், நுரை எஞ்சல்;

3. **சுக்கிலம்** : இதன் நிறம், இளகலாகிய தன்மை;

4. **கண்** : இதில் காணும் நிறம், ஒளி, சாறும் பீளை, வழியும் நீர்;

5. **காது** : இதில் கழியும் குறும்பி, அழுக்கு, மலின நீர், சீ, இரத்தம்;

6. **மூக்கு** : இதில் வெளிப்படும் சளி, குருதி, அழுக்கு மற்றும் மலினங்கள்;

7. **நா (வாய்)** : இதில் சுரக்கும் எச்சில், நிறம், வாயின் வழியாய் வெளிப்படும் கோழையின் நிறம், கனம், பேச்சின் தன்மை;

8. **மெய்** : இதில் வடியும் வியர்வை, நிறம், தன்மை;

9. **மயிர்** : நிறம், வளர்ச்சி, வெட்டு, வெடிப்பு, உதிர்ப்பு;

10. நகம் : நிறம், கீற்று, வெடிப்பு, வளர்ச்சி, வழவழப்பு, மினுமினுப்பு;

11. உதடு : நிறம், உருவம், வெடிப்பு;

12. நெற்றி : நிறம், ஒளி, சுருங்கல்;

13. பல் : நிறம், உனைச்சல், ஒளி, படிந்துள்ள மாசு, சொத்தை, தேய்வு முதலியவை;

14. புருவம் : ஏற்றம், இறக்கம்;

15. அண்ணம் : நிறம், அன்றைய நிலைமை (கிரந்திப் புண் உண்டாய் அழுகிக் குடைந்து நாத் துவாரம் வரை தசை எடுபட்டிருத்தல்) ஆகியவையாம்.

மெய் (தோல்) : மருத்துவன் நாடியைக் குறிக்கும் தாதுவின் இயக்க நிலைமையையும், தட்பவெட்பங்களையும், மற்றுமுள்ள இதர உறுப்புகளின் தன்மைகளையும் தொட்டேனும் தடவியேனும், ஊன்றியேனும், விரலால் அழுத்தியேனும், அளந்தேனும் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

செவி : மருத்துவன் தன் காதால் சுவாச நசயம், இருதயம் போன்ற உறுப்புக்களின் நிலைமையையும், பேச்சின் ஒலிக்குறிப்பையும் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

*சரிதை*

நோயாளியின் குடும்ப வரலாறு, அவனுடைய வயது, உடல் வன்மை, மனவுறுதி, பண்பு, செரிப்புத்தன்மை, இயற்கை, உணவு, தொழில், வாழுமிடம், அவ்விடத்தின் தன்மை, நோயின் வயது, நோய் தோன்றிய காலம், இடம், நோய் உண்டாவதற்கு முன் நோயாளியின் நிலைமை முதலியவற்றையும் கேட்டுத் தெரிந்துகொள்ளுதல் மருத்துவனது கடமையாகும்.

இவை நிற்க, நோயுற்றோன் பொருள்களின் மணத்தையும், பொருள்களைத் தொட்டும், தடவியும், அழுத்தியும், உணரும் அவனுடைய உணர்ச்சி எந்நிலையிலுல்ளது என்பதையும், தான் கேட்ட ஒலியைப் பிறருக்கு இயற்கையாகத் தெரிவிக்கின்றானா, அன்றி வேறு வகையில் தெரிவிக்கின்றானா என்பதையும் அறிந்துகொள்ள வேண்டுவது மருத்துவனுக்கு இன்றியமையாததாகும்

*மலக்குறில்*

**மலத்தால் முக்குற்றமறிதல் (வயித்திய சிந்தாமணி)**

*1.* கருத்த நிறமுள்ளதும், சிக்கலுள்ளதும், வாத நோய்க்குள்ள மலமாம்.

*2.* சிறுத்தும், வெம்மையாயும், சிவந்தும், மஞ்சள் நிறமாயும் உள்ளவை பித்த நோய்க்குள்ள மலமாம்.

*3.* சீதமாகவும், வெண்மையாகவும் உள்ள சீதள நோய்க்கு உள்ள மலமாம்,

*4.* எல்லா நிறங்களும் கலந்தன கலப்பு (தொந்த) நோய் மலமாம்.

***மலப் பரிசோதனை (தேரையர் யமகம்)***

*1.* மலமாநது மஞ்சள் நிறமானால் வாதசேட்ம சுரம் அல்லது சுத்தவாத சுரம் என்றும்;

*2.* மலமானது சங்கினது நிறமானால் பயித்தியம் அல்லது குன்மம் என்றும்;

*3.* மலமானது மின்னலைப்போல பளபளப்பாயிருந்தால் நாள்பட்ட கொடி ரோகம் என்றும்,

*4.* மலமானது முல்லைப் பூ நிறமானால், செவிப் புண் என்றும்;

5. மலமானது வாளினது உறையைப்போல உள்ளே குழலாக, மேலே புன்மை நிறத்துடனே குழையாகக் கூராகிக் கீழே தொங்கிக்கொண்டு மலம் விழுமேயானால், அது நம்பக்கூடாத தானே சேட்ம தொந்த ரோகம் என்றும் கூறப்பட்டிருக்கின்றன.

## *மலக்குறியால் சாதல் - சாவாமையறிதல்*

**சாதல் குறி**

மலம் வெள்ளாட்டுப் புழுக்கையைப் பார்க்கிலும் உலர்ந்து கெட்டிப்பட்டு வரண்டிருக்குமானாலும், பிணவெடி நாற்றம் சார்ந்திருந்தாலும், அப்படி மலம் போகும் நோயாளி இறந்து போவான்.

**சாவாமை**

1. மலமானது கொஞ்சல் பக்குவமான குழம்பு போன்றும், இரைச்சாறு போன்றும் இருக்குமானால் நன்மை பயப்பதாகும்.

2. கடினமும், தளர்ச்சியுமில்லாத செம்பாகமாக இருக்குமானால் நன்மை பயக்கும். இதுவே திடமாம்.

3. முன் மலத்தைப் பார்க்கினும் மிகவும் செம்பை ஒத்த சிவந்த நிறமாயிருக்குமானால், நல்ல நடுத்தரமான மலம் என்றும் அறியவும்.

## *மலத்திலுண்டாகும் சுரக்குறியும் - சாக்குறியும்*

**சுரக்குறி**

1. நோயாளியின் மலமானது மேகம்போன்று கறுப்பு நிறமாயிருந்தால் வாயுவாலுண்டான சுரமாம்.

2. முள் முருக்கம் பூப்போன்று சிவந்த நிறமுள்ளதாக இருந்தால் பித்தத்தாலுண்டான சுரமாம்.

3. வெள்ளை நிறமுள்ள மலமானால், சீதளத்தாலுண்டான சுரமாம்.

4. பசுமஞ்சளையொத்த நிறமுள்ளதாயிருந்தால் வாயுவுடன் கபம் சேர்ந்து (வாத கப) சுரமாம்.

5. பாதிரிப் பூவைப் போன்று வெண்சிவப்பு நிறமுள்ளதாக இருந்தால் கபத்துடன் வாயு சேர்ந்த (கப வாத) சுரமாம்.

சுரக்குறி

1. மஞ்சாடி மரத்தின் பூவென செம்மஞ்சள் நிறமுள்ளதாக இருந்தால், சாதலை உண்டாக்கும் முல வாயுவாகும்.

2. மந்தாரை மரத்தின் மலர்போன்ற ரோஜாப்பூ நிறமுள்ளதாக இருந்தால் சாதலை உண்டாக்கும் சன்னிவாத நோயாகும்.

3. தவளைபோலக் கறுத்த நிறத்தையும், வறட்சியையும், கடினத்தையும் உடையதாயிருந்தால் அந்நோயாளி இரண்டு திங்களில் இறந்துவிடுவான் எனவும் அறிக.

## *முக்குற்றங்களின் மெய்நிறம்*

வாதரோகி உடல் கறுத்தும்; பித்தரோகியுடல் மஞ்சள் நிறம் அல்லது சிவந்த நிறம்; சிலேத்துமரோகியுடல் வெளுத்தும், தொந்த நோயாளியின் உடல் தொந்தத்திற்கேற்ப இரு கலப்பு நிறங்களைக்கொண்டும், சன்னிபாத நோயாளியுடல் பல நிறங்களை உடையதாயிருக்கும்.

## *மெய் நிறத்தால் சாவுதனையறிதல்*

உடலில்,

1. சூரியனைப்போல் நற்சிவப்பும், மினுமினுப்பும் காணில் இரண்டு திங்களிலும்,

2. திங்களைப் போன்று சிவந்த வெண்ணிறமும், மினுமினுப்பும் காணில் மூன்று திங்களிலும்,

3. செவ்வாயைப்போல் செந்நெருப்பு நிறமும் மினுமினுப்பும் காணில் நான்கு திங்களிலும்,

4. வியாழனைப்போல் பொன்னிறமும் மினுமினுப்பும் காணில் ஐந்து திங்களிலும்,

5. வெள்ளியைப்போல் வெண்ணிறமும் மினுமினுப்பும் காணில் ஆறு திங்களிலும்,

6. சனியைப்போல கறுப்பு நிறமும் மினுமினுப்பும் காணில் ஏழு திங்களிலும்,

7. கரும்பச்சைப் (சாமள) நிறமும் மினுமினுப்பும் காணில் எட்டு திங்களிலும் உயிர் நீங்குமெனத் "தேரையர்" யமகத்தில் கூறப்பட்டுள்ளன.

### இயற்கனவே இது விவரம் கூறப்பட்டுள்ளது

1. வாதத்தால் பீடிக்கப்பட்ட நோயாளியின் உடல் சிறிது வெப்பமாயிருக்கும்.

2. பித்தப் பிணியாளர்க்கு உடல் மிகு வெப்பமாயிருக்கும்.

3. ஐய நோயினர்க்கு உடல் தட்பமாயிருக்கும் அன்றியும் வியர்வை விடுவதுமாயிருக்கும்.

4. கலப்பு நோயாளர்க்கு உடல் குற்றயளவாயிருக்கும்.

### ஊறு

### பரிசத்தால் சாதனையறிதல்

உடலில்,

முதலைத் தோல், ஆமையோடு, மீன்வாற்புறம் ஆகிய இவற்றைப் போன்ற பசிசமுடைய நோயாளிகளாயின் முறையே 12, 56, 45 நாட்களிலும்,

2. அதிகுளிர்ச்சி, அதி சீதோஷ்ணம், அதிவெப்பம் என்னும் தன்மையுடைய நோயாளிகளாயின் முறையே 12, 56, 45 சாமங்களிலும் மரணமடைவார்கள்.

3. முக்கியமும், மிருதுவான இடங்கள் யானைத்தோல், மரம், கல் ஆகியவற்றின் பரிசமுடைய நோயாளிகளாயின் முறையே 12, 56, 45 நாழிகைகளிலும்,

4. மேற்கூறப்பட்ட அவ்விடங்களே தாமரை முள், உளி, அரம் ஆகியவற்றின் பரிசமுடைய நோயாளிகளாயின் முறையே 12, 56, 45 விநாடிகளிலும் மரணம் அடைவார்கள் எனவும் தேரையர் யமகம் கூறுகின்றது.

### *வியர்வை - ஐவகை*

1. மலச்சிக்கல் நோய்,

2. சுரம் விட்ட உடம்பு,

3. வாதநோய்,

4. நிறைந்த சந்நி நோய்,

5. உயிர் நீங்குந்தறுவாய்

ஆகிய இக்காலங்களில் நோயினர் உடலில் வியர்வை பெருகும்.

மேலும், வியர்க்கும் இடங்களைக் குறிப்பிடும் இடத்தை உடம்பில் வாயு நிறைந்தவர்களுக்கும், சுரம் முழுவதும் அடித்துவிட்ட நோயினர்க்கும் உடம்பு முற்றிலும் வியர்வை உண்டாகும்.

மலச்சிக்கல் நோயினர்க்கு நெற்றியில் வியர்க்கும்.

உடம்பை விட்டு உயிர் நீங்கக்கூடிய நிலையில் இருப்பவர்களுக்கு கழுத்தில் வியர்க்கும்.

சந்நிபாத நோயினர்க்குக் கீல்களில் வியர்க்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

வாந்தி பேதி நோயிலும் பிசின் போன்ற வியர்வை உடம்பு எங்கும் உண்டாவதுண்டு.

### முக நிறமும் முக்குற்றங்களும்

வாதப் பிணியின்ர் முகம் கருத்தும், பித்தப் பிணியினர் முகம் மஞ்சள் நிறம் பெற்றும், சேத்துமப் பிணியினர் முகம் வெளுத்தும் இருக்கும்.

அன்றியும் பித்தப் பிணியினர் முகம் தழல் நிறமாகவும் இருக்கும்.

### பல்லின் நிறத்தால் முக்குற்றம் அறிதல்

வாத ரோகியின் பற்கள் கருத்திருக்கும், பித்த ரோகியின் பற்கள் மஞ்சளித்திருக்கும். சேத்தும ரோகியன் பற்கள் வெளுப்பாயிருக்கும். தொந்த ரோகியின் பற்கள் கலப்புற்ற குற்றங்களுக்குத் தக்கவாறு கலப்பு நிறமாயிருக்கும்.

### வாய் நீர்ப்பரிட்சை

நோயாளியின் வாய் நீரைச் சோதிக்கும் விதம் எவ்வாறெனில்,

**வாய் நீர்**

1. கள்ளைப்போலிருந்தால் வாத சுரம் என்றும்;

2. நெய்யைப் போலிருந்தால் பித்த சுரம் என்றும்;

3. எண்ணெயைப் போலிருந்தால் சேட்ப சுரம் என்றும்;

4. வாய் நீர் வித்தியாசமான ருசிகரமாயிருந்தால் காக்கை வலி என்றும்,

5. வாய் நீர் தண்ணீர்போலானால் வாத சன்னி எனவும்,

6. வாய் நீர் குழம்பு போலானால் பித்த சன்னி எனவும்;

7. வாய் நீர் மெழுகு பதம் போலானால் சேத்தும சன்னி எனவும்;

8. எச்சிலை உமிழ்ந்தால் ஆட்டு வாயிலிருந்து ஒழுகும் உமிழ்நீர் போலானால் வாத சன்னி எனவும்;

9. மானைப் போல பாய்ந்தால் பித்தமாரசு சன்னி சக்தி என்றும்;

10. முள்ளம் பன்றியைப் போலானால் சேத்தும சன்னி மூர்ச்சை என்றும்;

11. மயிலிறகு வர்ணமானால் வாதமூலம் என்றும்;

12. கிளியிறகு வர்ணமானால் பித்தமூலம் என்றும்;

13. கொக்கின் நிறமானால் சிலேத்தும மூலம் என்றும்;

14. எச்சிலை உமிழ்ந்தவுடனே கீழே குறுக்கிட்டு விழுந்தால் க்ஷயரோகி என்றும்;

15. நீண்டு கிடந்தாற்போல விழுந்தால் அரோசக ரோகம் என்றும்;

16. உருண்டையாய் விழுந்தால் ருத்திர வாயு ரோகம் என்றும் தேரையர் யமகம் கூறுகிறது.

*எச்சில் (வேறு)*

எச்சில் :

1. இளநீரைப் போன்றிருக்குமாயின் உத்தமோத்தம் என்றும்;

2. பாலைப்போன்று வெண்மையாகவும், சற்றுக் குழம்பாகவும் இருக்கின் உத்தம மத்திமம் என்றும்;

3. வெண்ணெய் போலழுந்தி வெண்மையாயுமிருக்கின் மத்திமமோத்தமம் என்றும்;

4. தயிரைப்போல வெண்மையாயும், சற்று அழுந்தியும் நீர் கலந்தும் இருப்பின் மத்திம மத்திமம் என்றும்;

5. குதிரை வாயினின்றொழுகும் நுரையைப் போன்றிருக்குமாயின் அதமோதமம் என்றும்;

6. களியைப்போன்று கடினமாயிருந்தால் அதமமத்திமம் என்றும்;

7. ஓட்டிற் சுடப்பட்ட ஓட்டடையின் கடினத்தை ஒத்திருக்கின் அதமாதமம் என்றும்;

8. மாவைப்போல் வறட்சியாயிருக்குமாயின் அதமாதமத்திலும் அதமம் எனவும்; இவ்விறுதிக்குறி அதிக சமீபத்தில் மரணத்தைக் கொடுக்கும் என்றும் கூறுகின்றது.

### சுவையைக் கொண்டு சாதல் குறியறிதல்

1. கசப்பான பொருள் கைக்காமல், ஏனைய சுவையுள்ள பொருட்கள் கைத்தால் ஒரு வாரத்திலும்;

2. இனிப்பான பொருட்கள் இனிக்காமல், மற்றச் சுவையுள்ள பொருட்கள் இனித்தாலும் ஒரு திங்களிலும்;

3. புளிப்புச்சுவையுள்ள பொருட்கள் புளிக்காமல், மற்றைய சுவையுள்ள பொருட்கள் புளித்தால் 15 நாட்களிலும்;

4. காரமாகிய பொருட்கள் காரமாயிராமல், ஏனைய பொருட்கள் காரமாயிருந்தால் அரை நாளிலும்;

5. உப்புக் கரிக்கும் பொருட்கள் உப்புக்கரிக்காமல், ஏனைய பொருட்கள் உப்புக்கரித்தால் ஓர் நாளிலும்;

6. துவர்ப்பான பொருட்கள் துவர்க்காமல், ஏனைய பொருட்கள் துவர்த்தால் ஒரு நாழிகையிலும் இறப்பார்கள் என தேரையர் யமகத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

குறிப்பு : இவ்விதம் சுவை மாறுபடக்காணும் நோயினன் பெரும்பாலும் சித்தபிரமையுடன் இருப்பின் என்பதே தாற்பரியம். பாம்பு விடம் தீண்டியவிடத்தும் சுவை மாறுபாடு இருக்கக்கூடும்.

### *சொல் ஒலியும் முக்குற்றங்களும்*

வாத நோயாளிக்குச் சமவொலியும்;

பித்த நோயாளிக்கு உயர்ந்த ஒலியும் (சிரித்துக் குழறிய தொனியும்);

ஐய நோயாளிக்குக் கலப்புக் குற்றச்சார்பான கலப்பொலியுமாயிருக்கும்.

### *ஒலியினால் சாதல் குறியறிதல்*

1. வீணை, சங்கு, புல்லாங்குழல், பாச்சிகை, பறவை என்னும் இவைகளின் ஓசையைப் போன்ற ஒலியும்;

2. மலையின் அடிவாரத்தினின்றும், கிணற்றுக்குள் இருந்தும் பேசுவோரைப் போன்ற ஒலியும்;

3. தாரை, பேரி என்னும் வாத்திய ஒலியை ஒத்த ஒலியும் ஆகிய இவ்வொலிகளையுடைய பிணியாளர்கட்கு முறையே ஒரு நாழிகை, ஒன்றரைச் சாமம், ஒன்றே முக்கால் நாள், பதினாறே முக்கால் நாள், முப்பத்து மூன்றரை நாள், ஐம்பது நாள், அறுபத்து ஆறேமுக்கால் நாள்; எண்பத்து மூன்றைரை நாள், நூறு நாள்

என்னும் இக்கணக்கின்படியாக நாட்களில் மரணமாவார்கள் என்பதாகத் தேரையர் யமகம் கூறுகின்றது.

### கண்ணின் குறி

வாத நோயாளிக்குக் கண்கள் கறுப்பாயும், கொஞ்சம் மப்பாயும், நீர் வடிந்துகொண்டும் இருக்கும்.

பித்த நோயாளிக்கு மஞ்சளாகவாவது, சிவப்பாகவாவது இருக்கும்.

கப நோயாளிகளுக்குக் கண்கள் பீளை சேர்ந்தாவது, வெளுத்தாவது இருக்கும். சன்னிபாத நோயாளிக்கு மஞ்சள் கலந்து செந்நிறமாக இருக்கும்.

### காதின் தோற்றத்தால் முக்குற்றம் அறிதல்

செவியினில் வாதஞ்சேர்ந்தால் சீழ், குறும்பி இவைகள் அடைத்துக்கொள்ளும்.

செவியினில் பித்தம் சேரில் நமைச்சலுடன் ஊறலுண்டாம். செவியில் கபம் சேர்ந்தால் வீங்கிக் குத்தலுடன் இரத்தம் சொரியும்.

### மூக்கு (மணத்தன்மையால்) சாதலை அறிதல்

நோயாளி அடியிற்கண்ட பூக்களுக்குரிய இயற்கை வாசனையை அறியாமல் அதற்குப் புறம்பான மற்றப் பூக்களிடத்தில் அவ்வாசனையைப் பெறுவானாகில் அவன் அவ்வப் பூக்களின் கீழ்குறிப்பிட்ட காலத்தில் உயிர் துறப்பான் என அறிக.

1. மூங்கில் பூ எவ்வித வாசம் தருமோ, அதை அவன் உணராது, அவ்வாசனையை வேற்று மலர்களிடத்தில் காண்பானாகில் ஏழு விநாடியிலும் அவ்வாறே, (2) வேங்கைப்பூ, (3) தாழம்பூ. (4) அத்திப்பூ, (5) கொன்றைப்பூ, (6) சிறு சண்பகப்பூ,

(7) தாமரைப்பூ இவைகளிடத்தில் காண்பானாகில் முறையே நாழிகையிலும், 4 சாமங்களிலும், 7 நாட்களிலும், ஒரு திங்களிலும், இரண்டு திங்களிலும், ஆறு திங்களிலும் மரணம் அடைவான் என தேரையர் யமகம் கூறுகின்றது.

### சுக்கிலத் தன்மை

பிணியாளனின் சுக்கிலம்,

1. வெண்மையும் வெண்ணைய்க்கு நிகராயும் இருப்பின் உத்தமோதமம் என்றும்;

2. வெண்மையும், தயிருக்கு நிகராயும் இருப்பின் உத்தமத்தில் இரண்டாந்த உத்தம் என்றும்;

3. வெண்மையும், பாலுக்கு ஒப்பாகவும் இருப்பின் மத்திமோத்தமம் என்றும்;

4. வெண்மையும், மோருக்கு ஒப்புமாயும் இருப்பின் மத்திம மத்திமம் என்றும்;

5. தேனையும், அதன் நிறத்தையும், கனத்தையும் ஒத்திருந்தால் அதமோத்தமம் என்றும்;

6. நெய்யையும், அதன் நிறத்தையும், கனத்தையும் ஒத்திருக்குமானால் அதமமத்திமம் என்றும்;

7 களைப் போன்ற நிறமும், தடிப்பும் இருப்பின் அதமாதமோத்தமம் என்றும் (அதாவது தீர்வதற்குச் சிறிதும் கூடாததும், மிகப் பொல்லாங்கையே விளைவிக்கத்தக்கது என்றும்);

8. தண்ணீரைப் போலிருப்பின் சாரம் முதலிய உடற்றாதுக்களிலும் சற்றும் சாரமற்றவன் என்றும், உயிருடன் இருந்தாலும் பிணத்துக்கு ஒப்பபானவன் என்றும் உணரக்கடவாய் எனவும் தேரையர் யமகம் கூறுகிறது.

குறிப்பு :- வெண்ணீரைப் பெருக்கி வன்மைப்படுத்தக் கூடிய சிறந்த மருந்துகள் சித்தமருத்துவத்தில் உண்டு என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவும்.

### *உறுப்புகளின் துடிப்பினால் சாதல் குறியறிதல்*

ஒரு பிணியாளனுக்குக் கை கால், நெற்றி, கன்னம் ஆகிய இவ்வுறுப்புகளில் தொடர்ந்து துடிப்பு நேரிட்டால் முறையே ஓராண்டிலேனும், ஆறு திங்களிலேனும், மூன்று திங்களிலேனும், பத்து நாட்களிலேனும் உயிர் துறப்பான்.

### *இது நிற்க சாதல் குறி (வேறு)*

*1. காது அடியோடு கேளாவிடில் ஏழு நாட்களிலும்;*

*2. கண்ணொளி ஒழிந்துவிடின் ஐந்து நாட்களிலும்;*

*3. மணத்தன்மை நீங்கின் மூன்று நாட்களிலும்;*

*4. பேச்சு ஒலி வேறானால் இரண்டு நாட்களிலும் உயிர் நீங்கும் என்பதாம்.*

### *சிறுநீர் பரிசோதனை*

*தேரர் நீர்க்குறி நூல் (சி. ம. சுருக்கம்)*

### *நீர் நிறக்குறி*

### *நிறக்குறி நெய்க்குறி நிச்சயத்தற்குரிய நீர் இலக்கணம்*

“அருந்துமாறிரதமும் அவிரோதமதாய்
அஃகல் அலாதல் அகாலிவூன் தவிர்ந்தழற்
குற்றளவருந்தி உறங்கி வைகறை
ஆடிக்கலசத் தாவியே காது பெய்
தொருமூகூர்த்தக் கலைக்குட்படு நீரின்
நிறக்குறி நெய்க்குறி நிருமித்தல் கடனே.”

என்பதினால்; உண்ணுகின்ற அறுசுவைப் பொருட்களும் ஒன்றுக்கொன்று வேற்றுமை அடைந்தாலும், பசிக்குத் தக்கபடி குறைத்தல், அதிகரித்தல், காலந்தப்புதல் முதலிய குற்றங்கள் உண்டாகாவண்ணம் புசித்து உறங்கி, விடியற்காலத்தில் படிக பாத்திரத்தில் நீரை ஆவிபோகாதபடி பெய்த 3 ¾ நாழிகைக்குள் அதன் நிறக்குறியையும், அதில் எண்ணெய்விட்டுப் பார்த்து, காணப்படுகின்ற குறியையும் கவனித்து, பிணிகளின் தீரும் தீராத குறிகளை மெய்ப்பித்தல் முறையாம்.

### நோயுற்றோர்க்கு அவ்வித (மேற்கண்ட விதி) விலக்காம்

"அருப்ப முற்றார்க்கவ்விதி விலக்கே" என்பதால் மிகவும் நோயுற்றாருக்கு முன் சூத்திரத்தில் கூறிய விதிகள் விலக்காம். அதாவது, எந்த நேரமாகயிருந்தாலும் அவசியமும் அவசரமும் இவற்றிற்குத் தக்கவாறு நீரைப் பிடித்துப் பரிசோதிப்பது கடமையாகும். எனினும், சந்தர்ப்பம் வாய்க்கின் அதிகாலையில் இறங்கும் நீரையும் பிடித்துப் பரிசோதிப்பது மிகவும் நல்லது.

### நீரின் பொதுக்குணம்

"வந்த நீர்க்கரிஎடை மணம் நுரை எஞ்சலென்
றைந்தியலுளவவை யறைகுது முறையே"

என்பதால், இழிகின்ற நீருக்கு 1) நிறம், 2) எடை, 3) நாற்றம், 4) நுரை, 5) குறைதல் என ஐந்து இயல்கள் உண்டு.

### நிறத்தொகை

"பீதம் செம்மையை கருமை வெண்மையென்
நோதைங்கொழுமையை யொத்துகு நீரே."

என்பதால், நீரானது 1) மஞ்சள், 2) சிவப்பு, 3) பச்சை, 4) கருமை, (5) வெண்மை என்னும் தனித்தனி ஐந்து நிறமுள்ளதாய் இறங்கும்.

### ஒவ்வொரு நிறத்திலும் காணும் உட்பிரிவுகள்

"அரிசனத்தாறும் அருணத்து நான்கும்
அரிதத்தைந்தும் அஞ்சனத்தொரு நான்கும்
வெண்மையுள் இரண்டுமாய் விள்ளுஞ் சுருதியே."

என்பதால்; மஞ்சள் நிறத்தில் ஆறுவகையும், சிவப்பில் நான்கு வகையும், பச்சையில் ஐந்து வகையும்; கறுப்பில் நான்கு வகையும், வெண்மையில் இரண்டு வகையுமாய்ப் பிரியும் என அறிக.

### மஞ்சள் நீர் விகற்பம்

"மஞ்சள் நீர்விகற்ப வண்ணம் புகலுதும்."

(பொருள்) மஞ்சள் நிறமுள்ள நீரின் நிறவகையைச் சொல்லுவாம்.

### சீரண அபக்குவ நீர் நிறம்

"பாரில் துரிஞ்சிப் பழநிறம் பொருந்தில்
சீரணப்பக்குவ நீரெனத் தேரே."

என்பதால், நீரானது துரிஞ்சிப் பழநிறத்தைப் பொருந்துமானால், அந்நீர் சீரண பக்குவத்தால் உண்டானதென்று அறிந்துகொள்க.

### மிகுவெம்மையாலுண்டாகும் நீர் நிறம்

"செம்மையும் நிசியும் சேர்ந்தெழு நிறமெனின்
வெம்மையுயர விளைந்தவிர் நீரே."

என்பதினால், நீரானது சிவப்பும், மஞ்சளும் கலந்து இழியுமானால் மிகுவெம்மையால் விளைந்த நீரென அது விளங்கும்.

### குட்டைத்தரத்திற்குரிய நீர் நிறம்

"காட்டின் நரந்தக்கனி நிறம் காணில்
குட்டைத்தரற்குத் தொடுகுறி நீரே."

என்பதால், காட்டு நாரத்தம் பழத்தோலின் நிறமாய் வெளிப்படும் நீர், குட்டைக் கொடுப்பதற்கு உண்டான நீராகும்.

*அதிவுட்டிண நீர் நிறம்*

"கொதியனல் நிறத்தின் கொள்கையேயாயின்
அதுவுட்டிணத்தை யடைந்த நீராமே."

என்பதினால், கொதிக்கின்ற தீயின் நிறத்தைப் பொருந்தியிறங்கும் நீர் மிகு சூட்டினை அடைந்த நீராகும்.

*முன்னிலும் அதிவுட்டின நீர் நிறம்*

"பீதமுங் குங்குமப் பூவுமாரெழி றரின்
ஏதிதன்மேல் வெப்பின்றெது நீரே."

என்பதினால், நீர் மஞ்சள் நிறமும், அதில் அரைத்த குங்குமப்பூ நிறம், வரிவரியாய்ப் பொருந்தியிருக்குமானால் இதற்கு மேலாக வெப்புயில்லை என்று சொல்லத்தக்கதாகும்.

*செம்மை நிற நீர் வேற்றுமை*

"செம்மை நீர் விகற்பச் செய்தி நவிற்றுவாம்."

பொருள் :- சிவப்பு நிறமுள்ள நீரினது பேதத்தைக் கூறுவாம்.

1. இரத்தம் பொங்கிய நீர் நிறம்

"இரத்தமும் கருமையும் அண்ணிய கறைதரின்
இரத்தம் பொங்கலால் இறங்கியே நீரே."

என்பதினால், செம்மையும் கருமையும் பொருந்திய நிறத்தைக் காட்டும் நீர் இரத்தம் பொங்குதலாலுண்டாகின்ற நீராகும்.

2. மிடி இரத்தக் கொதிப்பாலுண்டாகும் நீர் நிறம்

"செக்கச் சிவந்த மண்ணீர்ப்பூப் பகருறின்
மிக்குதுரக் கொதிப்பாலுகு நீரெ."

என்பதினால், மிகுந்தச் சிவப்பு பன்னீர்ப்பூவின் நிறமாயின் அதிக இரத்தக்கொதிப்பால் இறங்கும் நீரென அறிக.

3. முன்னிலும் அதிகமாகப் பொங்குதலாலுண்டாகும் நீர் நிறம்

"கருமையுள் செம்மைசேர் கலையுஞ் சிவப்பும்
குருதிபொங்கிய குறிபுகல் நிரே."

என்பதினால், நீரில் கருப்பும் அதில் சிறிது செம்மையுங் கலந்த நிறமும், இவைகளையன்றித் தனித்த (அதிக சிவப்பு) நிறமும் உண்டாயிருக்குமானால், அஃது இரத்தம் பொங்கிய குறியைக் கூறும் நீராகும்.

***பச்சை நீர் வேற்றுமை இயல்***

"பச்சை நீர் விகற்பம் பன்னுது மிவணே."

*(பொருள்) :-* பச்சை நீரின் வேகத்தை இங்கு கூறுவோம்.

1. சீதள நீர் நிறம்

"கருமைச் சாமளக் கருவுறுமாயின்
வருசீதளத்தால் வரப்படு நீரே."

என்பதினால், நீர் கறுப்பு நிறத்தையும், சிறிது பச்சை நிறத்தையும் கலந்ததனால் சனித்துக்கொண்டிருக்கிற சீதளத்தினால் வருகின்ற நீராகும்.

2. விஷத்தாலுண்டாகும் சீதள நீர் நிறம்

"இடத்தறு குணத்தை யேயக்கு மெனிலோ
விடத்துறு சீதளம் மேலிடு நீரே."

என்பதினால், நீர் ஆகாய நிறத்தை ஒத்திருக்குமானால் விஷத்தினாலுண்டான சீதளம் அதிகரித்தலால் உண்டானதாகும்.

குறிப்பு :- விஷமென்பது (1) கிருத்திரம விஷம். அதாவது நாபி முதலிய பூண்டுகளையாவது, பாம்பு முதலிய செந்துக்களின் விஷங்களையாவது மற்றொரு பொருளில் கலந்து கொடுக்கப் படுவதாம். இது இடுமருந்தென்றும் சொல்லப்படும்.

அகிருத்திரம் விஷம் என்பது தாவர விஷயம், சங்கம விஷம் என இருவகைப்படும்.

தாவர விஷம் என்பது பூண்டு, செடி, கொடி, புல், மரம் ஆகிய இவற்றின் கிழங்கு வேர், பட்டை, பால், பிசின், இலை, பூ, காய், கனி முதலிய பொருள்களிலும், பாஷாணம் முதலிய தாதுப் பொருள்களிலும் இருக்கின்ற விஷமாம்.

சங்கம விஷம் என்பது அரவம், கீடம், தேள், சிலந்திப் பூச்சி, நாய், நரி முதலியவைகளின் கடியால் ஏற்படும் விஷமாம்.

### 3. மிகு சீதள நீர் நிறம்

"தகுமொரு நீலச்சாயை காண்டிடினோ
மிகு சீதளத்தால் விகார நீரிதனால்
மருந்து நோய் பாலவிருத்தர்க்கு மாமே."

என்பதினால், நீரில் ஒருவித நீலச்சாயை காணுமானால் மிகுந்த சீதளத்தினாலுண்டானது எனக்கொள்க. இந்நீரினால் பாலர்களுக்கும் விருத்தர்களுக்கும் வாதரோம் உண்டாகும்.

### 4. வாத பித்த கபங்களைக் கெடுக்கும் நீர் நிறம்

"அம்ம நீலத்துரு வார்ந்துதடிக்கு மேல்
மும்மலச் சிதையை முகளப்பிக்கு நீரே."

என்பதினால், நீர் நீல நிறத்துடன் தடித்துமிருக்குமானால், அது வாத-பித்த-கபங்களுக்குக் கெடுதியை உண்டாக்குவதாகும்.

### 5.மேற்கூறிய மும்மலங்களை மிகவும் அதிகமாகக் கெடுக்கும் நீர் நிறம்

"சொக்கிலைப் பச்சையின் தோற்ற முளதேல்
மிக்குமும் மலங்கெடவிழு நீர் கொடிதே."

பொருள்:- நீர், சொக்கமான இலைப் பச்சைபோல நிறமுள்ளதாய் இருக்குமானால், வாத - பித்த - சிலேகஷ்மங்கள் மிகுவும் கெடுவதற்கு இழிகின்றதாம். ஆதலின் இது கொடிய நீராகும்.

### *கருமை நீர் நிற வேற்றுமை*

"கருமை நீர் விகற்பம் கழறப்புகுவோம்"

பொருள்:- கருமை நீர் வேற்றுமையைக் கூறுவோம்.

1. காமாலை நோயைத் தரும் நீர் நிறம்

"வான்மீக மெழிற்குண் மைக்குண முறினது
தான் காமாலை நோய் தருமஃதின்றேனில்
பித்த நோயேனும் பிறக்கப்பணிக்குமே."

என்பதினால், குங்குமப்பூ நிறத்துள் கருமை நிறம் தோன்றுமானால் அந்த நீர் காமாலை நோயையேனும், பித்த நோயையேனும் உண்டாக்கும்.

2. உதிரக் கெடுதி நீர் நிறம்

"அம்மைஞ் சிறிய செம்மையுஞ் சிவணினோ
அரத்தத்தழி வென்றறை தரு நீரே."

என்பதினால், நீரானது முன்சொல்லப்பட்ட குங்குமப்பூ நிறத்துடன் கலந்த கருநிறத்தோடு, சிறிது செம்மை நிறமும் கலந்திருக்கக் காணில், அது இரத்தக் கெடுதியை உண்டாக்கும் நீராகும்.

3. உதிரத் தழுக்கைக் காட்டும் நீர் நிறம்

"மையும் வெளிறும் மருவிய சாயையேல்
ஐயுமிர் மிக்க கொதி தழிவிறு நீரிது
காலாதீதக் கனல்பவத்துடையது
மாலாந்தருண சுரத்தர் விருத்தர்க்
குண்டாமை திரவியத்தூணற் கொடிதே."

பொருள் :- கரிய நிறமும் வெண்ணிறமும் சேர்ந்துண்டான நிறமுடையதுபோல் தோன்றில், அந்நீர் சிலேத்தும வாத தோடங்கள் அதிகமாய்க் கொதித்துக் கெடுதலைத் தருநீராம். அது நெடுங்காலத்திற்கு முன் வெப்ப உற்பத்தியினாலுண்டானதாகும். அது மயக்கங் கொடுக்கிற தருண சுரக்காரருக்கும், அஃது ஐயப்பொருளை மிகுதியாய் உண்பதாலுண்டாகிறது. ஆகையால் கொடிய நீராகும்.

### வெண்மை நீர் நிற விகற்பம்

"வெண்மை நீர் நிறம் விகற்பம் விரித்தினிதுரைப்போம்."

பொருள் :- இனி, வெண்மை நிறமுடைய நீரினது வகைகளை விரித்துச் சொல்லுவோம்

### 1. சுத்த சீதள நீர் நிறம்

"வெண்மையுமுற்று மிகத் தெளிவுடைத்தேல்
உண்மையாஞ் சுத்த சீதளத்துதகமாம்
இந்நீர் வசப்படாதிவனுய்யுந்தரம்
முந்நீர்ப் பெருக்கமிழ்வான் உய்தலொக்குமே."

என்பதினால், நீரானதுவெள்ளை நிறத்துடன் மிகுந்த தெளிவை உடையதாயிருக்குமானால், உண்மையாகிய சுத்த சீதளத்தினால் உண்டாகிய நீராகும். இந்த நீரானது மருந்துகளுக்கு அடங்காது. இந்த நீருள்ள நோயாளி பிழைத்தல், கடல் பெருக்கில் முக்கியன் பிழைப்பயையொக்கும்.

### 2. சிலேத்துமத்தின் கொதிப்பு நீர் நிறம்

"அறவெளிப்பிலும் சளியைப் போல் விழினது
மறவன் அதி கொதிப்பால் வருவனமே."

பொருள் :- நீர் மிகவும் வெளுத்தாலும் அதில் சளியைப் போல் விழுந்தாலும், அந்த நீர் ஐயத்தின் மிகுந்த கொதிப்பால் வருகின்ற நீராகும்.

க்ஷயம் நீர் நிறம்

"அமிழ்ரியெனிலென்பற வுருக்கிய நீர்
அஃதேகய நோய் ஆக்கு மந்தத்தே."

பொருள் :- நீரானது பாலின் நிறத்தைப் பெற்றிருக்குமானால், எலும்பை மிகுதியாயுருக்கிய நீராகும். அந்த நீரே கடைசியில் கயமென்னும் இளைப்பு நோயை உண்டாக்கும்.

கருப்பவிரணம் நீர் நிறமும் தன்மையும்

"காணிதில் சீழுங் கலந்திழி மணமுறின்
கருப்ப நாபிக ளுங்காம நாளத்துளும்
விரணமுண்டின்றேல் எய்துமஸ்மரியல்
திருத்தலே திண்ணமென மனத்துன்னே."

பொருள் :- இறங்குகின்ற இந்த நீரிலே சீயுங் கலந்து, கெட்ட நாற்றமும் வீசுமானால், கருப்பப் பையினுள்ளும், கொப்பூழிடத்தினுள்ளும், ஆண் குறித்துளையினுள்ளும் புண்ணிருக்கும். அவ்வாறு புண்ணிருக்கும்,. அவ்வாறு புண்ணில்லையானால், கல்லடைப்பு நோயுண்டாகும் என்றும், அல்லது அந்நோய் இருத்தலே திண்ணமென்றும் உள்ளத்தில் எண்ணக்கடவை.

கபம் - சந்நிவாதம்

"விந்துவைப் போன்ற நீர் விறல் கப நோயையும்
பந்தித்த சந்நிபாதத்தையுந் தரும்."

என்பதினால், இந்திரியத்தைப் போன்ற நீரானது, வன்மையுள்ள கப நோயையும் (கோழை நோய்களாகிய க்ஷயம், சுவாசகாசம் முதலியவை) உறுதியான சந்நி நோயையும் தரும்.

உப்புறையாதது

"விடுமுழி உருவாறா விடனது கொடிதே."

பொருள் :- நீர் விட்ட இடத்தில் அந்நீரானது உப்பு உரையாவிட்டால் அந்த நீர் கெடுதியை விளைவிப்பதாகும்.

*வெப்பம் (கொடிய வெப்பநோய் நீர்)*

"தக்கரம் பானெத் தனித்தனியொழுகுமேல்
உக்கிர வெப்பத்துதி கால நீரே."

பொருள் :- நீரானது மோரைப் போலவும், பாலைப் போலவும் நிறமுள்ளதாய், தனித்தனி இறங்குமானால், அது கொடிய வெப்பத்தினால் உண்டான கூற்றுவனை யொத்த நீராகும்.

***குண்டிக்காய் துர்பலம் நீர்***

"தீப்புலால் கழுநீர்ச் செயலெனிற் குண்டிக்
காய்த்துர்ப் பலத்தால் கதித்த நீராமத்
துர்ப்பலக் கபமும் சோரியும் கொதிப்புறப்
பற்பகலாகப் பையப் பதிந்ததே."

பொருள் :- நீரானது, கெட்டுப்போன தசையைக் கழுவின நீரின் நிறம் பெற்றிருக்குமானால், குண்டிக்காயானது வன்மை குறைவாலுண்டான நீராகும். அந்த வன்மைக் குறைவானது. கோழையும் குருதியும் கொதிப்படைந்ததனால் பல நாட்களாய் மெல்ல மெல்ல மறைந்துண்டானதாகும்.

***தீராத நோய் நீரின் தன்மை***

"தடிக்கினும் நெய்யின் தன்மை யொத்திடினும்
படிக்குளிரண்டு பாணியுந்தீதே."

பொருள் :- நீரானது கனப்பாயிருந்தாலும், நெய்ப்பசையை ஒத்திருந்தாலும், இவ்விரண்டு நீரும் இந்நிலவுலகத்தில் கொடியதேயாகும்.

***நிற இலக்கணம் - (மாதாந்தரம்) வாதப் பிணி***

"பாண்டரி நெய்யரி பற்றிய நீரெல்லாம்
தாண்டரி நோயே தருமெனுஞ் சிலநூல்."

பொருள் :- வெண்ணிறத்தையும் உதிர நிறத்தையும் பொருந்திய நீரெல்லாம், தாவுகின்ற வாத ரோகத்தையே தருமென்று சில நூல்கள் கூறும்.

*பித்தப்பிணிர்*

"கனிபொம் மன்பாசுக்கனி நிறம் போன்றும்
கனத்த சௌவீரக்களையது போன்றும்
சனித் தெண்ணெயின் தன்மையைப் போன்றும்
சாரிய நீரிவை சீரிய மெயக்குளாம்
பித்தப் பிணியாற் பிறந்த வென்றே
சித்தசாரணவம் தெனிய விரிக்குமே."

*என்பதினால், தனித்த பொம்மன்மாசுப் பழத்தின் நிறத்தை ஒத்தும், கனமுள்ள சௌவீரத்தின் ஒளியைப் பொருந்தியும், எள் நெய்யின் நிறத்தைப் போன்றும் இறங்கிய நீர், பித்த கோபத்தினால் பிறந்த பித்தப் பிணியைக் குறிக்கும் என்ரு* **சித்த சாரணவம்** என்னும் நூல் தெளிவுபட விரித்துக்கூறும்.

***பித்த காமாலை நீர் நிறம்***

"மந்திரி நிறமாய் வரப்படு நீர்
உந்திய எருவையை ஒத்துகு நீரும்
பித்தகாமாலைகளால் பிறந்தனவெனச்
சித்திய வித்யாதரமது செப்புமே."

*என்பதினால், பித்த (மஞ்சள்) நிறமாய் இழிகின்ற நீரும், தள்ளப்பட்ட உதிரத்தை ஒத்து உறங்குகின்ற நீரும் பித்த காமாலை ரோகங்களால் பிறந்தன என்று* **சித்திய வித்தியாதரம்** என்னும் நூல் செப்பும்.

***கபப் பிணி நீர் நிறம்***

*"அருச்சுனத் தொடுநுரை புற்புதம் எழினும்
அருந்து நீ ரொக்கினும் அவியினை ஒக்கினும்
கலப்பெழில் உறினுமக் காண்டம் கபநோய்
தலைப்படுங்காலையில் சார்ந்திடும் மென்பரே."*

என்பதினால், வெண்ணிறத்துடன் நுரையும் குமிழியும் உண்டானாலும், குடித்தற்குரிய சுத்த நீரைப் போலிருந்தாலும், நெய்யை ஒத்திருந்தாலும், நிறம் பல கலந்து தோன்றினாலும், அந்நீரானது கபரோகம் உண்டாம் காலத்து இழியுமென்பர்.

### *தொந்தப் பிணி நீர் நிறம்*

"இன்னும் அம்மதமே இருந்தொந்த நீழல் நீர்
தன்னில் கருமைச் சாயையுண் டென்னுமே."

என்பதினால், இன்னமும் வேறுபட்ட கொள்கையுடையார் தொந்த நிறத்துடன் உண்டாகும் நீரின்கண், கருமை நிறமும் உண்டாகும் என்று கூறுவர்.

### *மேகரோகம், மகாரோகம் இவைகளின் நீர் நிறம்*

"புண்ணீர் மேகப்புண்கண் மரப்பிணி
நண்ணில் நித்திய நாதியம் ஆமெனும்."

என்பதினால், நீரில் உதிரமானது காணப்படுமானால், மேகரோகம் அல்லது மகாரோகம் உண்டாம் என்று நித்திய நாதீயம் என்னும் நூல் மொழியும்.

### *சுப்பிணி நீர் நிறம்*

"சுரப்பிணி அரிசனத்தோயங் காட்டுமே."

என்பதினால், சுரநோயில் மஞ்சள் நிறம் பொருந்திய நீர் வெளிப்படும் என்பர்.

### *அசாத்திய நீர் நிறம்*

"சுரமேனும் மேகத்துனி யேனும் இருக்கில்
பெருகிய மூத்திரம் பிரிக்கும் உயிரையே."

என்பதினால், சுரம் அல்லது மேகநோய் கண்டிருக்கும்போது அதிகரித்த நீர் உயிரைப் போக்குமென அறிக.

*நிறை இலக்கணம்*

"அற்பமுங் கனமற்றதி தெளிவுறு மெனின்
வற்புறு சீதளம் மன்னிக் கனத்துக்
கபத்தை இளக்கலால் கண்ட நீர் இஃதே."

என்பதினால், நீர் சிறிதும் கனமின்ற இருத்தலுடன், மிகவும் தெளிந்து இருக்குமாயின், இத்தன்மையுடைய நீர், வன்மையற்ற சீதளம் நிலைபெற்று, ஓற்கிய கபத்தை இளக்கலால் உண்டாகியது என அறிக.

*நீர்ப்பை, இந்திரிய வழி இவற்றின் மிக்க பலவீனத்தைக் குறிக்கும் நீர்*

"இது நீர்ப்பை யிந்திரியவழி இவற்றுண்
முதிர்துப்பலத்தான் முளைத் தெனக் கொள்க."

என்பதினால், இந்நீரானது, நீர்ப்பையிலும், இந்திரியம் தங்கும் இடத்திலும் மிகுந்த வன்மைக் குறைவால் உண்டாயிற்றென்று கொள்ளக்கடவை.

*மும்மலங்களின் கெடுதி நீர்*

"மிகுத் தடித்து விழுமேல் மலங்களின்
நற்குண வழுவை நன்கோது நீரே."

இதனால்,

"வீக்கமும் பிடகமும் மேலிடும் இவை மறு
நாட்கு நாள் அலகில் நலனாம் இவரின்
தொடில் சுடுங் கொடிய விட-ச்சுரம் அண்ணுமே."

என்பதினால், மிகத் தடித்து இழியுமாயின் வாதபித்த கபங்களின் நற்குணங்களின் கெடுதியை நன்றாகக் காட்டும் நீராகும். இதனால் வீக்கமும் (சோபையும்), கட்டிகளும் அதிகரிக்கும். இவ்விரண்டும் கண்ட நாள் தொடங்கி நாளுக்கு நாள் குறையுமானால் நன்மையாம். அதிகரிக்குமாயின் தொட்ட மாத்திரத்தில் சுடுவதான கொடிய விடவெப்புப் பிணி அணுகும்.

### இயற்கை நீர் இலக்கணம்

"மிகத் தடிப்பும் மிகத் தேறலும் இன்றெனில்
சுகத்தைத் தரும் மெய்ச் சுபாவ நீர் நன்றே."

என்பதினால், சீதளங் கம்மிய தேகிகளுக்கு நீர்ப்பெருக்கத்துக்கு உள்ள நாற்றமுடன் அப்பெருக்கின் நிறத்தையும் கனத்தையும் ஒத்துச் சிறுநீரிறங்கும்.

### சிறுநீர்ப்பை நாளப்புண்ணீர் மணம்

"வெய்ய துர்க்கந்தம் வீசுநீர் மூத்திரப்
பைநாளமிவற்றைப் பற்று புண்குறியே
அம்மொழியின் றெனினனிலமே முதலிய
மும்மலச் சுதமே மூலமென் றுணரே."

என்பதினால், கொடிய மணம் வீசுகின்ற நீர், மூத்திரப்பை, மூத்திர நாளம் இவைகளைப் புண்பற்றி இருக்குமென்கிற குறியைக் காட்டுவதாகும். அங்ஙனமின்றெனில், வாத - பித்த - கபங்களின் கெடுதியே தூர்நாற்ற நீருக்குக் காரணம் என்றுணரக்கடவை.

### உட்டிணரோக நீர் மணம்

"மட்டிற் புளிமண மணந்திழித் திடினஃ
துட்டிணப் பிணிபிணிப்புற் றெழுநீர்
முடிவிலல்வுட்டிண முளரிவாயறல் போற்
படுசீதளச் சம்பந்தமாக்கிடுமே."

என்பதினால், அளவுகடந்த புளியின் மணம் கமழ்ந்து நீர் இறங்குமானால், அந்நீர் உட்டினப் பிணி சம்பந்தப்பட்டதனால் உண்டாகின்ற நீராகும். கடைசியில் அவ்வுட்டிண நோயாளியைத் தீயினின்று உண்டாகும் நீர் போலச் சீதளத்துடன் உறவாக்கிவிடும்.

### உதிரம் மிகுதியாலுண்டாகும் நீர் மணம்

"இனித்த மணதோ டிறங்கி னெய்மிக்குச்
சனித்த விருத்தியைத் தழுவிய நீரே

அல்லதவ் விருத்தி யாலாம் பிணிக் குழாத்த
தல்லதில் லென்பதாய்ந் தோர் மதமே.''

என்பதினால், இனித்த மணத்தோடு இறங்குமானால் அந்நீர் உதிரம் மிகுந்து உண்டாகிய விருத்தியைத் தழுவிய நீராகும். அஃதல்லாவிட்டால் உதிர விருத்தியால் உண்டாகிய பிணிக் கூட்டத்தைப் பொருந்தியதேயன்றி வேறு ஆகமாட்டாது என்பது மருத்துவ நூல் ஆராய்ந்தோர்களின் கொள்கையாகும்.

### *பித்த சுபாவக் கெடுதி நீர் மணம்*

“கருமான் மணமே கமழுமென்றாலது
குரவன் சுபாவ குணங்கெடு நீரே.''

என்பதினால், கருநிறமுள்ள மானினிடத்து உண்டாகும் மணமே கமழுமானால், அது பித்தத்தின் இயற்கைக் குண விகற்பத்தால் உண்டாகிய நீராகும்.

### *சரீரப்பசைக் கெடுதி நீர் மணம்*

“புலால் மணங் கமழிற பூதிய பசைக்கே
டலாதிநிலை யந்நீர்க் குணமின்றெனில்
அடையுந்ததி யென்றையத் தான்மிகக்
கெடுதியெனவுங் கிளக்குஞ் சுருதியே.''

என்பதினால், புலால் மணம் போல நீர் கமழுமானால், உடற்பசைக்கேடேயன்றி வேறான்றுமில்லை. அந்நீருக்கு அக்குணம் அச்சமயம் இல்லாதிருப்பினும், அக்குணம் அடைதற்கு அதுவே சமயமென்று அறிவாயாக, அந்நீரால் மிகக் கெடுதி நேரிடும் என்று மருத்துவ நூல் மொழியும்.

### *நுரை இலக்கணம்*

“பந்தமெய்ப் பசையிளகப்படும் பருவத்
தந்தர்ப் பூதமாய் அநில மூத்திரத்தில்
சம்பந்தப்படும் ததிநுரைப் புனலே.''

என்பதினால், அவலம்பகம், தருப்பகம், கிலேத்தம், சந்திகம், போதகம் என்று உடலுறுதிக்காக இருக்கும் பசை இளகப்படும் காலத்தில், ஒருவரும் அறியாவண்ணம் வாயு சிறுநீரில் சம்பந்தப்படும். அப்பொழுது நுரை பொருந்திய நீர் இழியும்.

### *காமாலை நீர் நுரையின் நிறம்*

"அந்நுரை பீதம் கருமை செமமை
மன்னுறு நிறந்தரின் வருங்காமாலையென்
றுன்னிப் புரப்பர் ஒப்பில் பிடகரே."

என்பதினால், மேற்கூறிய நுரைபொருந்திய நீர் மஞ்சள், கருமை, செம்மை நிறங்களைக் காட்டுமானால், காமாலை நோய் உண்டாகும் என்று எண்ணி மருத்துவ நூலாராய்ச்சியாளர்கள், கைதேர்ந்த வைத்தியர்கள் அதை வரவொட்டாமல் தடுத்துப் பாதுகாப்பர் எனக் கூறியுள்ளார்கள்.

### *வாத முதலிய முக்குற்றங்களும் வன்மை குறையும்*
### நீரின் நுரை இலக்கணம்

"நுரைதேய்த் தொழுகு நீர் நுவலரும் மும்மலம்
கலைய இளகிடும் காலத் தென்னே."

என்பதினால், நுரை குறைந்து இழியும் நீர் சொல்லுதற்கரிய வாத பித்த கபங்கள் தத்தம் வன்மையிற் குன்றித் தேயுங் காலத்து உண்டாவது என்று கூறுவாயாக.

### *பாண்டு நோய் உற்பத்தியைக் காட்டும் நீரின் எச்சில்*
### எஞ்சலிலக்கணம்

"இயற்கை நீர் சுருங்கினும் இதுவும் சலப் பொருள்
செயற்கை யாயிருந்தினும் சிறுத்த நீரிதுவும்
பாண்டு நோய்ச் சம்பவத்தைத் தருமிதில்
துண்டுறாப் பேதியும் சோர்வும் பிறக்குமே."

என்பதினால், நீர் நிறக்குறியால் நோயைக் கண்டுபிடித்தற் பொருட்டுச் சொல்லியிருக்கின்ற விதி பொருந்திய சிறுநீரில் ஒரு

சிறிய துளி எண்ணெயை நடுவில் கையசைவினால், எண்ணெய்த் துளி சிதறாமல் விட்டு, வெய்யிலானது அந்நீரில் படும்படி திறந்து, காற்றானது அதில் வீசி அந்த எண்ணெய்த் துளி ஆடாதபடி வைத்து, அச்சிறு நீரில் விடப்பட்டிருக்கின்ற எண்ணெய்த் துளியானது செல்லுகின்ற வழியில் கண்ணறிவையும், உயிரறிவையும் செலுத்தி அத்துளி தெரிவிக்கும் நோய் விளக்கத்தைத் தெரிந்துகொள்வாயாக.

### வாதம் என்னும் வளிநீர் நெய்க்குறி

"அரவென நீண்டினஃதே வாதம்."

என்பதினால், எண்ணெய்த்துளி பாம்பைப் போல் நீண்டால் அது வளி நோயைக் காட்டும்.

இதனை,

"அணுகு நெய் பாம்பிற்காணில் அனில நோய்"

என்பதாலும் அறிக.

"பித்தம் என்னும் அழல்நீர் நெய்க்குறி
ஆழி போற்பரவின் அஃதே பித்தம்."

என்பதினால், எண்ணெய்த் துளி மோதிரம் போல் இடைவிட்டுப் பரவினால் அந்நீர் பித்த நோயைக் காட்டுவதாகும்.

இதனை

"வட்டமாயின் தணிவிலாப் பித்த நோயாம்"

என்பதாலும் அறிக.

### கபம் என்னும் ஐயநீர் நெய்க்குறி

"முந்தொத்து நிற்கின் மொழிவதென்கபமே."

என்பதினால், எண்ணெய்த் துளி விட்டது விட்டவாறே சிறிதும் பரவாமல் முத்துப்போல நிற்குமானால் அந்நீர் ஐய நோயைக் காட்டுவதாகும்.

இதனை,

"முத்தெனின் ஐய நோய்தானே."

என்பதாலும் அறிக.

### தொந்த தோட நெய்க்குறிம்

"அரவிலாழியும் ஆழியில் அரவம்
அரவின்முத்தும் அழியில் முத்தும்
தோற்றல் தொந்த தோடங்களாமே."

என்பதினால், பாம்பில் மோதிரம், மோதிரத்தில் பாம்பும், பாம்பில் முத்தும், மோதிரத்தில் முத்தும் இரண்டிரண்டாய்க் கலந்திருந்தால் கலப்புக் குற்றங்களாம்.

### முக்குற்ற நெய்க்குறி

"அழுந்து நெய்த்துளி அதுவுமும்மலத்தில்
எழுந்தகுறிகளெல்லா மொன்றில்
தோற்றுவது முத்தோட மென்றுன்னே."

என்பதினால், நீரில்விடும் நெய் வட்டவடிவமாகக் காணப்படுமானால், அந்நோயாளியைப் பற்றி வருத்தம் ஒன்றுமில்லை. அந்நெய் எவ்வாறு பரவுகின்றதோ எவ்வித நோயும் நீங்கும்.

இதுவுமது,

"அரிவாகு நத்தை அரியாதனத்தை
அறிதருகுறியால் மறுவின்றுயிர்க்கே."

என்பதினால், நெய்யானது திருமாலினது இடது தோளிலிருக்கும் சங்கினைப் போலவும், சிங்காசனத்தைப் போலவும் காணப்படுமானால், அந்நீரையுடை நோயாளின் உயிர்க்கு யாதொரு குற்றமுமில்லை.

"நாணச் சத்தியை வீணையைக் காணினோ
நாகுயிருடல் விடுத்தேகினும் மீளுமே."

என்பதினால், நெய்யானது நல்ல குடைபோலவும், யாழைப் போலவும் காணப்படுமானால் அந்நீரையுடைய நோயாளியின் உயிர் உடலை விடுத்து வெளிப்பட்டாலும் மறுபடி வந்துசேரும் என்பதாம்.

இதுவுமது,

"முல்லையரும்பு குளிரிப்பூவுஞ்
சொல்லிய துளியுள் தோற்றிடுமாயின்
இல்லை இல்லை நோயென்பது சரதமே."

என்பதினால், நெய்யானது முல்லைமொட்டுப் போலவும், தாமரைப் பூப்போலவும் காணப்படுமானால், அந்நீரையுடைய உடலில் நோயில்லை என்பது உண்மை.

*தீரா நோயின் நெய்க்குறி*

"எண்ணெய் விடின் சரேலெனப் பொங்கிப் பரவின்
திண்ணமப் பிணிக்குச் சிகிச்சையிங்கின்றே."

என்பதினால், நோயாளியின் நீரில் விடும் எண்ணெய்த் துளியானது விரைந்து பொங்கி அந்நீர் முற்றும் பரவுமாயின் அந்நோய்க்கு இவ்வுலகத்தில் மருந்தில்லை என்க.

இதுவுமது,

"விடுதுளி சிதறி வெவ்வேறொன்றாமல்
கடுகெனப் பரவின் கைவிடல் முறையே."

என்பதினால், நீரில் விட்ட எண்ணெய்த் துளி, வெவ்வேறாகக் கடுகைப் போரச் சிதறிவிட்டால், அந்நோயாளிக்குப் பரிகாரம் செய்யாமல் விடுவதே நலம் என்பதாம்.

இதுவுமது,

"அவியு மூத்திரமு மனைந்தொன்றினாவி
அவியும் என்றால் கௌதமர் அறையே."

என்பதினால், நீரில் விட்ட எண்ணெய்த் துளியும், நீரும் வேறுணர முடியாமல் ஒன்றுபடக் கலக்குமானால், அந்நோயாளியின் உயிர் நீங்குமென்பது கௌதமருடைய கொள்கையாம்.

இதுவுமது,

"ஓதுவநெய்த்துளி யுள்ளழுந்தில் தீதென
மாதவ கற்பம் மன்னப்பயிலுமே."

என்பதினால், நீரில் விட்ட எண்ணெய்த் துளியானது அந்நீருக்குள்ளே அழுந்திவிடுமாயின், அந்நோய் தீராது என்று மாதவகற்பம் என்னும் நூல் உறுதியாய்க் கூறும்.

இதுவுமது,

"அம்புகட் கமமுசலம் சூலமொடுவாள்
கும்பல் வெள்ளிலையெனக் குறிபடின் தீதே."

என்பதினால், நீரில் விட்ட எண்ணெய்த்துளி அம்பு, வாள், இரும்புலக்கை, சூலம், ஈர்வாள், கும்பம், வெற்றிலை இவைகளில் ஒன்றின் குறியாகக் காணப்படின் தீரா நோயென அறிக.

"எருது கியாளம் இபம்புலி மறியரி
நரனர வழங்குபுள் நரிமர்க் கடகரம்
பூசைதேளி வற்றைப் போலுரு தோற்றின்
பேசுவதென்னைப் பிணி தணியாவே."

என்பதினால், நீரில் விடும் துளியானது எருது, சிங்கம், ஆளி, யானை, புலி, ஆடு, பன்றி, ஆமை, பறவை, நரி, குரங்கு, கழுதை, பூவை, தேள் இவற்றுள் ஏதேனும் ஒன்றாகத் தோன்றுமாயின் அந்நோயைத் தீர்ப்போம் என்று உறுதி சொல்வதில் பயனன்று (அந்நோய் தீராது என்பதாம்.)

### *தீரும் - தீரா நோயின் நெய்க்குறி*

*(சத்தியா சாத்தியக் குறி)*

"சல்லடைக் கண்போல் தனித்தனித் துவாரமாய்ச்
சொல்லுமுன் அற்றிடில் தொடலென் கரமெனக்

கௌதமர் உரைப்பினும் கபத்தால் கண்படும்
தரியா வணங்கது சாத்தியம் என்பரே.''

என்பதினால், நீரில் விடும் நெய்த் துளியானது விரைந்து பல கண்களையுடைய சல்லடைபோல் காணுமானால், அந்த நோயாளியின் கையைப் பிடிப்பதேனென்று கௌதமர் சொன்னாலும், உடலில் கபம் இருத்தலின், அவ்வாறு காணப்படுமாதலால், அந்நோய் தீரும் என்பாருமுளர்.

### *கரும சாந்தியின் பயன்*

"கரும நோய் இவையெல்லாம் கண்ணுதல் அளித்தருள்
கருமகாண்டக் கடன்கண்டவ் வற்றை
ஒழிதுயர்மருந்துணின் உம்பரைப் போலச்
செழித்து நாற்பொருளும்சேர வாழ்குவரே.''

என்பதினால், நோய்கள் கருமத்தால் உண்டாவதால் மக்கள் சிவனார் செய்த கரும காண்டம் என்னும் நூலில் சொன்னபடி கரும சாந்தி செய்த பின்னர் உயர்ந்த மருந்துகளை உண்டால் நோய் தீர்ந்து, தேவர்களைப் போலப் பல்லாண்டு நீடித்த வயதுடன் நாற்பொருளும் (அறம், பொருள், இன்பம், வீடு) ஒருங்கு கைகூடி நலமாய் வாழ்வார்கள்.

### *நீர்க்குறி*

"ஓங்கிய வாதத்தோர்க்கு
நீர்விழுங்குண முரைக்கின்
பூங்கொடி கடுத்து நொந்து
சிறுத்துடன் பொருமி வீழும்
பாங்குடன் பித்தத்தோர்க்குப்
பசிய நீர் சிவந்துக் காட்டி
ஏங்கவே சுருக்கதாக
வெரித்துடன் கடுத்துவீழும்.''

என்பதினால், வாத நோயாளர்களுக்கு நீர் விழும்போது கடுத்து நொந்து சிறுத்துப் பொருமி விழும். பித்த உடலினர்க்கு நீர் பசுமையாய்ச் சிவந்து எரிச்சலுடன் கடுத்திறங்கும்.

"வீழுமே சேத்துமத் தோர்
நீர்க்குணம் விளம்பக் கேளாய்
நாளுமே வெளுத் துறைந்து
நலம் பெற வீழுங் கண்டாய்
வாள்விழி மானே தொந்த
ரோக மானிடக்குத் தானே
தாழு நீர் பலநிறந்தா
னென்னவே சாற்றினோமே."

என்பதினால், சேத்தும உடலினன் நீர் வெண்மை நிறமாகவும், உறைந்துமிருக்கும். தொந்த உடலினன் நீர் பல நிறமாக அதாவது குற்றத்தின் சேர்க்கைக்குத் தக்கவாறு இருக்கும் என்றறிக.

*அபிப்பிராயங்கள் (வேறு)*

"மூத்திரம் வெளுத்திருக்கும்
முனைந்திடும் வாதத்துக்கு
மூத்திரம் சிவப்பு மஞ்சள்
நிறமது பித்தத்துக்கு
மூத்திரம் நுரைபோல் காணும்
முதிர்ந்திடும் ஐயத்திற்கு
மூத்திர லட்சணத்தை
யுரைத்தினர் முனிவர்தாமே."

என்பதினால், மூத்திரம் வாத்தில் வெளுத்தும், பித்தத்தில் சிவப்பு, மஞ்சளாகவும், ஐயமிகுதியில் நுரையைப் போலும் இருக்கும் என்று அறியக்கடவை.

(வேறு)

*நீர் நெய்குறி* (அறுநீர் விருத்தகம்)

"பிணியுள்ளோர் நீரையேற்றுப்
பொழுதுமுன் வைத்தபின்னர்
துணிவுறு துரும்பி லெண்ணெய்
தோய்த்தொரு துளியேவிட்டால்

அணுகி நீர்ப்பாம்பிற்காணின்
அநிலநோய் வட்டமாயின்
தணிவிலாப் பித்தநோயாத்
தங்குமுத்தைய நோயே."

என்பதினால், நீரில் விடும் ஒரு துளி எண்ணெயானது பாம்பைப் போல் நீண்டால் வாத நோயும், மோதிரம் போன்று இடைவிட்ட வட்டமாயிருந்தால் பித்த நோயும், முத்துபோல் அப்படியே இருந்தால் ஐய நோயுமாகும்.

"தொந்த நோயுறு நீர்தன்னிற்
றுரும்பினிலெண்ணெய் தோய்த்தே
அந்த நீர்தன் மேல்விட்டால்
அது புல்லினுனிபோலாயின்
முந்துறுவாத பித்த
முயற்சி யென்றறியக் காட்டும்
கந்துருவ வென்ன வெண்ணெய்
நின்றிடிற் கபமும் வாதமும்."

என்பதினால், கலப்பு நோய் நீரில் எண்ணெய்த் துளி விட்டால் அது புல்முனைபோல் பரவினால் வாத பித்த கலப்பு நோய் என்றும்; கந்துரு போல் பரவினால் கபவாத கலப்பு நோய் என்றும் தெரிந்துகொள்ளல் வேண்டும்.

"வெய்யநீர் தன்னிலெண்ணெய்
மேலர்த்தங் கீழிற்பாதி
அய்யவிப்படியே காணின்
அது பித்தக் கபநோயாகும்
தய்யலே யுதிரம் போனீர்
எண்ணெயும் சமித்துத் தாழின்
உய்யுமாறில்லை சந்நி
வாதநீருரைத்த தாமால்."

என்பதினால், நீரில் விழும் எண்ணெய்த் துளி பாதி மேலும், பாதி கீழுமானால், அது பித்த கப நோயாகும். சிவந்த நீரில் விட்ட நெய்த்துளி நீரின்மேல் நிற்காமல் உள் அழுந்திடுமானால் அது சந்நிவாத நீராகும். இந்நீர்க்குறி அந்நோயாளி பிழைப்பான் என்பதையும் உணர்த்துவதாகும்.

"தோற்றிய வமுரிமீதில்
துளி எண்ணெய் விட்டுப்பார்க்கில்
ஏற்ற கண்ணாடி சிங்கம்
இயல்பக்கியாமை செந்நாய்
மாற்று குக்குடம் வராகம்
வானரம் பூனை நற்றேள்
பார்த்திபர் சூலந்தோன்றில்
பகரசாத்தியமதாமே."

என்பதினால், நீரில் ஒரு துளி எண்ணெய் விட்டு அது பரவும் முறையை உற்றுப் பார்த்துக்கொண்டிருப்போமானால், கண்ணாடி, சிங்கம், பறவை, ஆமை, செந்நாய் இவைகளைப் போலவும், குக்குடம், வராகம், வானரம், பூனை, தேள் இவைகளைப் போலவும், அரசர் கையிலிருக்கும் சூலம் போலவும் எண்ணெய்த்துளி பரவிக் காட்டுமானால் அந்நோய் தீராததாகும்.

"அங்கநீர் தன்மேலெண்ணெய்
துளி விடிலணையும் சங்கம்
தூங்கமாம் விணைசொன்ன
குறளியும் பினாகம் வல்லி
இங்கியையது போற்சாய்கை
யிருந்திடிற் பிணியுந்தீரும்
செங்கையின் நெல்லிப்போலத்
தெரிந்தவை செப்பினோமே."

என்பதினால், நீரில் எண்ணெய் விட்டுப் பார்த்தால் அத்துளி சங்கு, வீணைக்குறியவள் உருவம், வில், கொடி என்னும் இவற்றைப்போல் பரவிக் காட்டுமானால் நோய் தீரும்.

*தீர்தல், தீராமைகளைக் குறிக்கின்றது* (வேறு)

ஆசிரிய விருத்தம்

"இரவினில் வட்டில் வைத்தே
யேகின்ற சலத்தில் மீதே
இருளது புலருங்காலை
ஏற்கவே எண்ணெய் கொண்டே
ஒருதுளி விட்டுப் பார்க்கின்
உவந்துடன் பரவிற்றாயின்
உத்தம சாத்யமென்றே
யுரைத்தனருலகோர் கேட்கப்
பரவுதல் மந்தமாகும்
பரவிடாக் கட்டியாயின்
அரனயன் தேவராலு
மருந்தவ முனிவராலும்
அசாத்திய மென்று சொன்னார்
அறிவுளீரறிந்து கொள்வீர்."

என்பதினால், நோயாளி இரவில் நன்றாய்த் தூங்கி விடியற் காலையில் கழிக்கின்ற நீரை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் பிடித்து, அதை வெய்யிலில் வைத்து, அதன்மேல் ஒரு துளி எண்ணெய் விட்டுப் பார்த்தால், அஃது உடனே நன்றாய்ப் பரவுமாயின் நோய் விரைவில் தீருமென்றும், விட்ட துளி விட்டபடியே பரவாமல் இருக்குமானால் அயன், அரசன், தேவர்கள், முனிவர்கள் ஆகியவராலும் அந்நோய் தீர்க்கமுடியாது என்றும் தெரிந்துகொள்ளவேண்டும்.

*வாத, பித்த, காமாலை நீர்கள்*

அறுசீர் விருத்தம்

"உடலுறு பிணியைக் காண
வுண்மைவாகட நூல் சொல்லும்
படருமூத்திரக் குறிப்பைப்
பார்க்குங்கால் வாதம் வெள்ளை

திடமுறு பித்தஞ் சற்று
சிவப்பு மஞ்சள் போல் காணும்
புடைமிகச் சிவப்பு மஞ்சள்
போன்றிடற் காமாலை யாமே."

என்பதினால், உடம்பிலுண்டாயிருக்கும் பிணிகளை அறிவதற்கு உண்மையான மருத்துவ நூல் சொல்லும் குறிகளில் ஒன்ராக இருக்கும் மூத்திரக் குறியை ஆராயின், அது வெள்ளை நிறமாயின் வாத நோய் என்றும்; சிவந்து மஞ்சள் நிறமாயின் பித்த நோய் என்றும்; மிக்க செம்மஞ்சள் நிறமாயின் காமாலை நோய் என்றும் தெரிந்துகொள்ளவும்.

### *கப நீர் நிறம் - வாதம், பித்தங்களின் நெய்க்குறி* (வேறு)

**அறுசீர் விருத்தம்**

"நிலைமிகு கபமே யாகின்
நிறைநுரை போன்றிருக்கும்
இலகுமம் மூத்திரத்தில்
எண்ணெய்யை விட்டுப்பார்க்கில்
கலகஞ் செய் வாதத்திற்குக்
காணவே நீளமாய்ப்போம்
பெலனுறு மெய்யைவரட்டும்
பித்தமே சிதறிக் காட்டும்."

என்பதினால், கப நோய்க்கு நீர் நுரைபோலிருக்கும். அந்நீரில் எண்ணெய் விட்டுப் பார்த்தால் அந்த எண்ணெய்த் துளி உடம்பில் இருப்பது வாத நோயாயின் நீளமாகவும்; பித்த நோயாயின் சிதறியும் காண்பிக்கும்.

### *கபம், முக்குற்றம், சாத்தியம், அசாத்தியங்களின் நெய்க்குறி*

"சாற்றிய கபத்தினனுக்குச்
சல்லடைக் கண் போற்காணும்
தோற்றிய முத்தோடந்தான்
சொல் மூன்று குறியுங்காட்டும்

வேற்றொரு துளியாய் நின்றால்
விருதாகுஞ் சாத்தியந்தான்
ஆற்றியே மெல்லப் பரவின்
அது சுகசாந்தியந்தான்."

என்பதினால், எண்ணெய்த் துளி கப நோய்க்குச் சல்லடைக் கண்கள்போல கண் விழுந்தும், முக்குற்ற நோய்க்கு மூன்றுக்கும் சொல்லப்பட்டிருக்கிற குறிகள் கலந்தும் காணப்படுவன அல்லாமல் தீரா நோய்க்கு விடப்பட்ட துளி பரவாமலும், தீரம் நோய்க்கு மெல்லப் பரவியும் காட்டும்.

### *கௌதமர் தேரர் நெய்க்குறி பற்றிய கருத்து வேற்றுமை*

குறிப்பு :- கௌதமர் நூலில் எண்ணெய்த்துளி சல்லடைக் கண்போல் விழுவதைத் தீரா நோய்க்குறி என்றும்; அந்நோய்க்கு மருத்துவம் செய்யாமலே விட்டுவிடுது நல்லது என்றும் கூறினார். தேரர் அவரது கொள்கையை மறுத்து அவ்வாறே கண் விழுதல் கபத்தால் என்றும், அது தீருநோய்க்குறி என்றும் கூறினார்.

**அதனை,**

"சல்லடைக் கண்போல் தனித்தனித் துவாரமாய்ச்
சொல்லு முனற்றிடில் தொடலென்கரமெனக்
கௌதமரறையினுங் கபத்தாற் காணப்படும்
தணியா அணங்கது சாத்தியமென்பரே."

என்னும் அகவற்பாவாலறிக.

இதனை ஆதரித்து "சாற்றிய கபத்தினனுக்குச் சல்லடைக் கண் போற்காணும்" என்றார் இந்நூற்றலைவரும்.

ஈண்டுச் "சாற்றிய" என்னும் சொல் "சாத்தி" எனவும் பாடமுண்டு. விடப்பட்ட எண்ணெய்த் துளியானது பரவாமல் அப்படியே இருந்தால் அசாத்தியக்குறி என்றதை,

"பவமது உதகமீதில்
பரவிடாக் கட்டியாயின்
அரனமன் தேவராலும்
அருந்தவ முனிவராலும்
அசாத்திய மென்று சொன்னார்
அறிவுளீர் அறிந்து கொள்வீர்."

என்பதாலுமறிதல் வேண்டும்.

### தீரா நோயின் நெய்க்குறி (வேறு)

"நீரினிலமிழ்ந்து போனால்
நிகழ்ந்திடும் செத்தியந்தான்
வாரிடு முலையாய் ! கேளாய்
வளையல் பாத்திரத்திலன்றிப்
பாரினிற்கு யவன்செய்மண்
பாத்திரந்தனி லானாலும்
சார நீருகுத்து வெய்யில்
தன்னிலை வைத்துப்பார்ப்பாய்."

என்பதினால், நீரினில் விடும் எண்ணெய்த் துளியானது அதில் அமிழ்ந்துபோனால். அந்நோய் தீராது. அவ்வாராய்ச்சிக்கு மண் சட்டியும் உதவும் என்பதாம்.

### தீரும் நோய் நெய்க்குறி

"இன்னமுங் குறிகள் கேட்கில்
இப்படிப் பலவாறுண்டு,
இன்னுமந் நீரிலெண்ணெய்
விட்டுநாம் பார்க்குங்காலை
மன்னியவை பாவங்கள்
மனிதர்போல் மச்சங்கோவில்
உன்னிய பிரகாரம் போல்
உயர்ந்திடு ஆனை போலும்."

என்பதினால், நீரில் எண்ணெய் விட்டால், அவ்வெண்ணெ யானது வைபவங்கள், மக்கள், மீன், கோவில் பிரகாரம், பெரிய யானை இவற்றைப் போலவும் தோன்றும். இவை தீரும் நோயைக் குறிக்கும்.

"மலைகுடை விருக்கம் வெண்சா
மரையுடன் தாமரைப்பூ
கொலை செய்யுமானைக் கொம்பு
குல்லாய் கண்ணாடி சங்கு
வலைவிழியாளே கேளாய்
மகர தோரணங்கள் பூமி
தலைமையாம் வீணைபோலும்
சவுக்கமாமனையே போலும்."

என்பதினால்; மலை, குடை, மரம், வெண்சாமரை, தாமரைப்பூ, யானையுன் கொம்பு, குல்லாய், கண்ணாடி, சங்கு, மகர தோரணங்கள், பூமி, இசைக்கருவிகள் (உயர்ந்த வீணை போன்றவை சதுரமாயிருக்கின்ற வீடு ஆகிய இவைகள் தோன்றுமாகில் நோய்கள் தீரும் என்றறியவும்.

### *தீரும் நோய் நெய்க்குறி* (வேறு)

"பாகலினிலையே வண்டும்
பகருந்தாமரையின் மொக்கும்
ஏகசிங் காதனங்கள்
இவைகள் போலுருவங்கண்டால்
தேக மானிடரிடத்தில்
சேர்ந்திருந்திடுக்கண் செய்யும்
ரோகமே நிற்கமாட்டா
துரைக்குஞ் சாத்தியக்குறிப்பே."

என்பதினால், பாகலிலை, வண்டு, தாமரை மொக்கு, சிம்மாசனம் என்னும் இவைகள் போன்ற வடிவங்கள் காணப்படுமோனால் இவைகள் தீரும் நோய்க் குறிகள் என்று சில நூல்கள் சொல்லுவனவாம்.

*தாமதசாத்திய நெய்க்குறி*

*"மத்தளங் கொடியேபானை*
*மலமுண்ணும் பன்றி காட்டில்*
*வைத்திடு மிருக நாட்டில்*
*வாழ்ந்திடுங் குயவன் பண்ணுஞ்*
*சுத்தமாஞ் சக்கரம் போல்*
*தோன்றிடு முருவங் கண்டால்*
*சத்தியமாகச் சொன்னோம்*
*தாமத சாத்தியந்தான்."*

என்பதினால்; மத்தளம், கொடி, பானை, பன்றி, காட்டு விலங்கு, குலாலன், திகிரி என்னும் இவற்றைப் போன்ற வடிவம் எண்ணெய்யில் காணப்பட்டால் தாமத சாத்தியமென்று உண்மையாய்ச் சொன்னோம்.

*தீரா நோய் நெய்க்குறிகள்* (வேறு)

*"நாலுகா லொருகாலிந்த*
*ஞாலத்திலுரைக்கும் மூன்று*
*காலுள மனிதர்காயம்*
*கனக்கவே பெருத்த மாந்தர்*
*மாலுறத் தலையில்லாத*
*மாந்தர் முன் கையிற் கத்தி*
*சூலமே யுலக்கை வில்லு*
*தோன்றிடு மரிவாள்பாம்பே."*

என்பதினால், சிறுநீரில் இந்த உலகத்தில் சொல்லப்படுகின்ற ஒரு கால், மூன்று கால்கள், நான்கு கால்களையுடைய மனிதர் போலவும்; கையில் கத்தி, சூலம், உலக்கை, வில், அரிவாள், பாம்பு இவற்றைத் தாங்கியிருக்கும் மனிதன் போன்றும் காணப்படின் தீராவாம்.

*"பூனையே எலியே யம்பு*
*புதல் நண்டு சுரைக்காய் கோழி*
*கானிடைப் புலி குரங்கு*
*கண்ணழல் பொங்கு சிங்கம்*

ஈனமில் குதிரை வெற்றி
லைக்கொடி மற்றுமுள்ள
ஊனமில் எருது காட்டில்
உழன்றிடுங் கரடிதானே."

என்பதினால், பூனை, எலி, அம்பு, நண்டு, சுரைக்காய், கோழி, புலி, குரங்கு, சிங்கம், குதிரை, வெற்றிலைக்கொடி, எருது, கரடி ஆகிய இவற்றின் வடிவங்களைப்போல் தோன்றில் அந்நோய் தீராவாம்.

"பறந்திடும் பட்சியாமை
பகருநற் றேளைப்போலும்
சிறந்த தெண்ணெய் விட்டபோதில்
சிறியதாய்ச் சுருங்கினாலும்
புறந்தருங் கூந்தல் மானே
பொங்கியே பறந்திட்டாலும்
அறிந்திடுங் குறிகளெல்லாம்
அசாத்தியக் குறிப்புத்தானே."

என்பதினால், பறவை, ஆமை, தேள், பரவாமை, பொங்கிப் பரவல் என்னும் இவைகளெல்லாம் தீரா நோயின் குறிகளாவனவாம்.

"இவ்விதமுத் திறத்தி
னிலக்கண முற்றுமந்தச்
செவ்விய மருந்து முன்னூல்
செப்பிய வகைகளெல்லாம்
நவ்விபோல் விழியினாளே
அவ்விய மில்லாநெஞ்சத்
தகத்திய னுரைத்ததாமே."

என்பதினால், நீரில் எண்ணெய் விட்டுப் பார்க்குங் காலத்தில் உண்டாகும் குறிகள் யாவும் தமிழ் மொழியல முன்னோர்கள் சொல்லியுள்ள மருத்துவ நூலின்படி அகத்திய முனிவர் சொன்னதாகும்.

*சந்நிவாத நோய் தீரும் நெய்க்குறி* (வேறு)

"இருமுடலிற் பிணியிழிநீர்த் துரும்பாலிட்ட
எண்ணெய் செறிந்தசைத்து புதைந் தொன்றிற்பாதி
மருவிமிதக் கிற்சந்நிவாத நோயாய்
மாறுமிழிகின்ற தனிநீருள் வாய்ந்த
பரவரிய எண்ணெய்தானான்கு மூலை
பது மங்கண்ணாடி குடைபணிலந்தேரின்
உருளை சாய் மரத்திகழ்குண்டலி போற்றோன்றில்
ஊரா நோய் மாறுமிதை யுணர்ந்து கொள்ளே."

என்பதினால், நீரில் விட்ட ஒருதுளி எண்ணெயில் பாதி கீழ் அழுந்தியும், பாதி மேல் மிததந்தும் தோன்றில் சந்நிவாத நோயும்; சதுரவடிவம், தாமரை மலர், கண்ணாடி, குடை, சங்கு, தேர் உருளை, சாய்ந்த மரம், குண்டலி ஆகிய இவற்றைபோல் காணப்படின் அந்நீரையுடைய நோய்கள் தீருவனவாம்.

*தீரும், தீரா நேயாகளின் நெய்க்குறி* (வேறு)

"உணர்ந்த மெய்வழி நீரிலிட்ட எண்ணெய்
ஓங்கிய சோற்றுக்கும் புங்குறளனுற்ற
இணங்கிய வெற்றிலை குதிரை யெருது போல
இருந்தாலெறிய நோய்போயினிது வாழும்
மணந்திகழ் புள்ளாமை நாய் சிங்கம் பன்றி
மாநாகம், குரங்கு, தேள் பூனை மனிதன்
இணங்கிய எண்ணெயிற் றோன்றிற் செத்தாரென்றே
இயம்புக நல்லறிவினா விசைந்தோர் தாமே."

என்பதினால், நோயாளியின் நீரில் விடப்பட்ட எண்ணெய்த் துளியானது சோற்றுக்கும்பர், குள்ளன், வெற்றிலை, குதிரை, எருது என்னும் இவற்றின் வடிவங்கள் காணப்படுமானால், மிகுந்த நோய் நீங்கி, இன்பமாய் வாழ்வர் என்றும்; பறவை, ஆமை, நாய், சிங்கம், பன்றி, பாம்பு, குறங்கு, தேள், பூனை, மனிதன் என்னும் இவைகள்போலக் காணப்படுமானால் நோய் நீங்காது துன்புறுவர் என்றும் உணர்வாயாக.

*தீரா நெய்க்குறி தீருங்குறி* (வேறு)

"இசைந்த மெய்யிற் கழிந்த நீர் தனிலேயிட்ட
எண்ணெயிலே குறைத்தலை தோன்றிடுமேயாயின்
அசைந்த வுயிர் போனவனே யென்று சொல்க
அஃதொழிந்து நீரிலெண்ணெய் அதனின் மேலே
பசுந்தொரு நாமவட்டம் பட்டிருக்கில்
பற்றியநோய்தனிற் சாகான் பணைந்து வீங்கி
அசைந்து கனத்துப் புடைத்துத் திரண்டு விம்மி
அமுத கும்பம் போலு முலையணங்கினாளே."

என்பதினால், உடம்பிலிருந்து இறங்கிய சிறுநீரில் விட்ட எண்ணெய் தலையில்லா முண்டம் போலக் காணப்பட்டால் இறந்துவிடுவார்கள் என்றும்; நாமவட்டம் போல் காணப்படுமானால் இறவான் என்றும் அறிக.

*சுர நீர் விகற்பம்* (வேறு)

"சுரமதிற் றெளிந்த நீர்தான்
சுகமறும் வாதங் காணும்
சுரமதிற் சுருக்கும் பச்சை
சுரபித்த வெட்டையாகும்
சுரமதிற் செவந்த நீர்தான்
தோடமுஞ் சந்நியுண்டாம்
சுரமதிற் சுண்ணம்போலத்
தோய்ந்திட வசாத்தியந்தான்."

என்பதினால், சுரத்தில் தெளிந்த நீர் இழியுமானால் வாத நோயும், நீர் சுருக்குடன் மஞ்சள் நீர் இழியுமானால் பித்த வெட்டையும்; சிவந்த நீர் இழியுமானால் ஏழுவகைத் தோடங்களில் ஒரு தோடம் அல்லது சந்நியும் உண்டாகும். சுரத்தில் இழியும் நீரின் அடியில் சுண்ணம்போல் படிந்திருக்குமானால் அசாத்தியமாகும்.

*வெகு மூத்திரக்குறி இலக்கணம்* (வேறு)

"அன்னமே கேணீ மாந்தர்
அருந்து நீர் மிகவும் பொங்கித்
தன்னுள்ளே சுவரு வண்ணம்
தங்கியே மிகுதியாகி
இந்நிற மில்லா நாளு
மிடைவிடா திறங்குமாயின்
வின்னமும் செய்யும் வெய்ய
வெகு மூத்திரத்தின் வாறே."

என்பதினால், வெகு மூத்திரத்தின் தன்மைகளாவன : தாம் நாள்தோறும் குடிக்கும் நீர், நீர் வேண்டப்படும் கருவிகளில் சேர்ந்து தங்காமல் நீர்ப்பையிலேயே தங்கிப் பெருகுந்தன்மையை அடைந்து பல நிறமாக அடிக்கடி ஓய்வில்லாமல் இறங்கிக் கொண்டே இருப்பதாகும். இஃது அவ்வுடலுக்குக் கெடுதியை உண்டாக்கும்.

*மேக நீர் விகற்பம்* (வேறு)

"நீரினிற் சுண்ணம்போல
நின்றிடி னெலும்புருக்கி
நீரினில் நீர்மோர் நெய்யோ
னின்றிடின் மேக வெட்டை
நீரினில் முன்னும் பின்னும்
நின்றிடிற் பிரமியந்தான்
நீரினி லெறும்பு மீக்கள்
நெருங்கிடில் சாத்தியந்தான்."

என்பதினால், நீரை ஒரு பாத்திரத்தில் பிடித்துவைத்தாலும் அல்லது நீரைவிட்ட இடத்தில் சுண்ணம்போல் படித்து இருந்தாலும், எலும்புருக்கி நோயாம். நீரினில் நீர் கலந்த மோர் போலும், நெய்யைப்போலும் படிந்திருந்தால் மேக

வெட்டையாம். நீர்போகு முன்னும், நீர் கழிந்த பிறகும் நீர்த்துளையை அடைத்திடின் பிரமியமாம். விட்ட நீரில் எறும்பும், ஈக்களும் மொய்த்தால் மதுமேக நோயையும் குறிக்கும். அந்நீரையுடைய நோயாளியின் நோய் தீராவாம்.

*மூத்திர விலக்கம்* (வேறு)

"வாதரோகந் நெளிந்தான் மஞ்சளித்தான் மற்றையது
சீத நிரைத்தாற் பலவாம் சேர்ந்தநோய் - ஈதகலா
மூத்திரத்தினுண்மையை மொழிந்தாம் இனி சொல்வாம்
நாத்திறத்துள்ள வகை நாம்."

என்பதினால், நீர் தெளிந்திருந்தால் வாத ரோகத்தையும், மஞ்சளித்திருந்தால் பித்த ரோகத்தையும், வெளுத்து நுரைத்து இருந்தால் கப நோயினையும், மேற்கண்ட இலக்கணங்கள் இரண்டிரண்டாய்க் கலந்தால் தொந்த நோயினையும் காட்டும். இந்நோய் இந்நிறங்களைவிட்டு நீங்கா. ஆகையால் மூத்திர உண்மையைக் கூறினோம்.

*நீர்க்குறி சிறப்பு* (வேறு)

"தர்க்க சாத்திரிகளானோர்
        தங்களிற் றேர்ந்து நாடி
வர்க்கமாம் நாடி தன்னில்
        வருவது மயக்க மென்றே
உற்ற நீர் பரீட்சையாய்ந்தே
        யுரைத்தனரிதற்கு நேராய்
மற்றொரு விதி நூலில்லை
        மருத்துவக் கலை வல்லோர்க்கே."

என்பதினால், மருத்துவக் கலைவல்லவருக்கு நோய்க் கணிப்பதற்கு நீர்க்குறியைக் காட்டிலும் வேறில்லை எனலாம். ஏனெனில், மற்றக்கைக்குறியாகிய நாடியைக் கொண்டு நோயைத் திண்ணமாய்க் கணித்தற்கியலாது.

குறிப்பு :- இங்ஙனம் நீர்க்குறியைச் சிறப்பாகக் கூறியிருப்பினும், எண்வகைத் தேர்வுகளில் நாடியே சிறந்ததென மற்றொரிடத்தில் கூறியுள்ளதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவும்.

*இரத்த மிகுதி நீர் இலக்கம்* (வேறு)

"விட்ட நீர் சிவந்திருக்கும்
வேற்றுமை கண்டபோது
மட்டிலா விரத்தமிஞ்சி
வளர்ந்ததாற் சிவந்துதோன்றும்
உட்டிண மிகுந்ததாலே
யுற்ற நீரிறு கிற்றென்றே
இட்டமறியா வதற்கிங்
கிடமென வியம்பலாமா."

என்பதினால், விட்ட நீரானது மிகச் சிவந்திருக்குமானால், அது குருதிக் கொதிப்பால் ஏற்பட்ட நீராம். இக்கொதிப்பு உட்டிண மிகுதியினால் ஏற்பட்டு நீர் சுருங்குவதால் உண்டானதென்று கூறுதல் வேண்டும்.

*பித்தகோப நீர் நிறம்* (வேறு)

"மெத்த நீர் சிவந்து தோன்றி மெதுவுறத் தெளிந்து நின்றால்
பித்தத்தின் கோபமென்று பேசுதற்கிடமாகும்
இத்தை மூலத்தின் வெப்பத்தால் எரிந்து - நீர் சிவந்ததென்றும்
வற்றிய வரட்சி தன்னால் வளமுறத்தெளிந்த தென்னே."

என்பதினால், முற்கூறிய நீரின் நிறத்தைக் காட்டிலும் அதிகம் சிவப்பானால் அந்நீர் பித்த மிகுதியினால் உண்டானதாம். இதை மூலச்சூட்டால் உண்டானது என்றும் செப்புவர்.

*சேத்தும கோப நீர் நிறம்* (வேறு)

"வளமுற வெள்ளையாகி வற்றி நீர்குறுகி நின்றால்
தெளிவுறச் சேத்துமத்தின் செய்கை யென்றுரைக்கும்
குளிர்மையினாலே வெள்ளையாகிய குணமாமென்றும்
இளகு பச்சிரத்தந்தன்னா லிறுகின தென்றுஞ் சொல்லே."

என்பதினால், நீர் வெண்மை நிறம் பொருந்தி அளவிலும் குறைந்திருந்தால் அது சேத்துமத்தாலுண்டான குணமாகும். குளிர்ச்சியினால் வெண்மை நிறமாகும் என்று குருதியின் குற்றத்தால் அளவில் குறையும் என்றும் சொல்க.

*வாதகோப நிறம்* (வேறு)

"சொல்லரும் வெள்ளையாகித் தோயமும் தெளிவதானால்,
வல்லப மிகுந்த வாதம் வருத்திய குணமென்றோதாய்,
நல்லதோர் குளிர்மை தன்னால் நாடிய வெள்ளை யென்றே
அல்லல் சேர் வரட்சியாலே யந்த நீர் தெளிவதாமே."

என்பதினால், நீர் வெள்ளை நிறம் பொருந்தித் தெளிந்திருக்கு மானால், அது வாத மிகுதியினால் உண்டானதாம். குளிர்ச்சி யினால் வெண்மை நிரமும், வரட்சியினால் தெளிவும் ஏற்பட்டதென அறிக.

*இரத்த மிகுதி பித்தவாதக் கலப்பு நீர்* (வேறு)

"அந்த நீர் கனத்திங்கிறுகலாய் நின்றாலிரத்தமிஞ்சி,
வந்தவிக் குணங்களாகு மற்றது வல்லாலுரனை
விந்தையா யந்த நீரில் மெல்லிதாயுகைத்து நின்றால்
தொந்தித்தபித்த வாத மென்னுந் தொகையென வகை
சொல்வாயே."

என்பதினால், நீரானது கனத்து இறுகலாய் நின்றால், அஃது இரத்தக் கொதிப்பால் ஏற்பட்ட நீராம். ஈதன்றியும் தசை மென்மையாகக் கரைந்து அந்நீரில் கலந்து வெளிப்பட்டால் அது பித்த வாதக் கலப்பால் உண்டானது என்று பகருவாயாக.

*மக்கள் ஆண்டுக்கு தக்க நீரின் மாற்றம்* (வேறு)

"சேட்ட முன்சொன்ன வெல்லாம் சித்திடுமேதுக்கென்றால்
மூட்டிய வயதினாலு முதிய காலத்தினாலும்
கோட்டு நட்சத்திரத்தின் குணங்களினாலும் வேறு
நாட்டமாய்ப் பித்தமிஞ்சி நவபல குணங்கள் காட்டும்."

என்பதினால், இதுவரை நீருக்குச் சொல்லிய குணங்கள் எல்லாம் வயதினாலும், காலத்தினாலும் (பருவம்), உடுக்களின் மாற்றத்தினாலும், பித்தமானது அதிகப்பட்டுப் புதுப்புது குணங்களை உண்டுபண்ணும் என்பதாம்.

*உட்டின நீர்* (வேறு)

"நவமுறு சுரமுற்றோர்தந் நளினநீர் வெள்ளையாகி
உவருறந் தெளிந்து நின்றாலுட்டின மென்று காண்பாய்."

என்பதினால், புதிதாய்க் காய்ச்சல் கண்டவர்களுக்கு நீர் வெள்ளை நிறத்துடன் உவர் பொருந்தி தெளிந்து மிகுந்தால் உஷ்ணம் என்று அறிவாய்.

*முறைக்காய்ச்சல் நீர்* (வேறு)

"அவமுறைக் காய்ச்சலான லந்த நீர் கனத்திருக்கில்
கவனமுற்றடர்ந்த காய்ச்சல் கடுகவிட்டகன்று போமே."

என்பதினால், முறைக்காய்ச்சல் உள்ளவர்கட்கு நீர் கனம் பொருந்தி இருந்தால், அந்நோய் விரைவில் தீரும் என்றறிக.

*மூன்று நாள் மாறல் சுர நீர்* (கபால உஷ்ண நீர்)

"விட்ட நீர் சிவந்து தோன்றி மிகவுமே தெளிவதானால்
மட்டிது மூன்று நாளை மாறலென்று ரைக்க வேண்டும்
இட்டமாய் முகனை தன்னி லிருகியே சிவந்த பின்பு
கட்டுநீர் வெள்ளையாகிற் கபாலத்திற் சேரும் பித்தம்."

என்பதினால், நீரானது சிவந்தும், மிக்க தெளிவுற்றும் இருந்தால், அந்நீர் மூன்று நாட்களுக்கு ஒருமுறை மாறி வரும் காய்ச்சல் என்பதை உணர்த்தும். நீரானது இறுகிச் சிவந்திருந்து பிறகு வெண்மை நிறத்தை அடையுமானால் அந்நீரையுடைய நோயாளிக்குக் கபாலத்தில் பித்தமானது சேரும் என்று அறிவாயாக.

### தலைகனப்பும், மயக்கமும் காட்டும் நீர்

"என்ன முன்சொன்னதல்லால் ஏந்திய நீரின்மேலே
வன்மையாய்ப் பருவமுள்ள வளையமாய்ப் பரந்து நின்றால்
சென்னியுங் கனத்து மெத்த தியக்கமுற்றிருக்கு மென்று
பன்னுசாத்திரிகளாய்ந்து பகர்ந்ததைப் பகர்ந்ததாமே."

என்பதினால், நீரைப் பாத்திரத்தில் பிடித்துவைக்க, அந்நீரின் மேற்பரப்பில் வளையம்போல் பரந்து நின்றால் அந்நீரை உடையவர் தலைகனத்து மயக்கமுற்றிருப்பர் என்பதேயாம்.

### இடக்கலை நோய் நீர்

"பகரு நீரடியிற்றாழ்ந்து பற்றிய சிவப்பானாலும்
நிகர் மஞ்சள் நிறமானாலும் நீர் கொஞ்சம் தெளிவானாலும்
மிகவுமே சென்னி தன்னில் விதமான விடது பக்கம்
இகல்புரி நோவுண் டென்று இயம்புவா யியல்பினாலே."

என்பதினால், நீரைப் பிடித்து ஒரு பாத்திரத்தில் வைக்க, அதன் அடியில் செந்நிறமாயிருந்தாலும், மஞ்சள் நிறமாய் இருந்தாலும், நீர் கொஞ்சம் தெளிவுற்றிருந்தாலும் தலையின் இடதுபக்கத்தில் மிகவும் கடுமையான நோயுண்டு என்று நீ கூறுவாயாக.

### வலத்தலை நோய் நீர்

"இயல்பிலாச் சுரத்தேதார்க் கின்ன மியம்புநீர் வெள்ளையாகி
செயமறக் கறுப்புமாகித் தெளிந்திடு நீருமாகி
வயமுற விருந்தால் புத்தி வளர் சென்னி வலது பக்கம்
துயருற நோவுண் டென்று சொல்லலாந் துலக்கமாக."

என்பதினால், சுரமுடையவர்க்கு நீர் வெண்மையாகியும், கருப்பாகியும் தெளிந்திருக்குமானால், தலையின் வலப் பக்கத்தில் வருத்தத்தைத் தரக்கூடிய நோயுண்டு என்று தெளிவாய்ச் சொல்லலாம்.

### காய்ச்சலுடன் கூடிய மார்பு நோயைக் காட்டும் நீரின் நிறம்

"துலங்குநீரடியிற் பாதி தோயமுஞ் சிவந்து தோன்றிக்
கலங்கி மேற்றெளிவுமாகிற் காய்ச்சலுங் கடினமாகி

மலங்கி, மார்பு நெஞ்சும் வாதையுற் றிருக்கு மென்றே
இலங்கு சாத்திர நூல் வல்லோ ரியாவர்க்கு மியம்பினாரே."

என்பதினால், நீரை ஒரு பாத்திரத்தில் பிடித்துவைக்க, அதன் அடிப்பாதி சிவந்தும், கலங்கியும், மேற்பாதி தெளிவுற்றும் இருப்பின் அந்நீரை உடையவருக்கு மார்பும் நெஞ்சும் வலித்தும், மிக்க காய்ச்சலும் மிகுந்திருக்கும் என்று அறியவும்.

### நீர்க் குண்டிக்காயில் கல்லிருப்பின் அதனை உணர்த்தும் நீர்

"நார்த்ததி நீர்பால் போல நவையுற்றங் கிழியுமானால்
மாரற்பமுற்ற நீரி லடிமண்டிக் கிடந்ததானால்
பாரிந்த மெழுகு மாங்காய் பற்றிய கல்லினாலே
சீருற்ற செய்கை யென்று தெரிவுறச் செப்பலாமே."

என்பதினால், நீரானது தயிர் நீரைப் போலவும், அதாவது தயிர்த் தெளிவைப்போல இழியுமானாலும், அந்நீரின் அடியில் வண்டல் இருந்தாலும், இந்நீரை உடையவனுக்கு நீர்க்குண்டிக்காயில் கல்லிருப்பதால் இக்குணம் ஏற்பட்டதென்று யாவரும் அறியச் செப்பலாம்.

### இரத்த தொந்தி வியாதி, ஈரல் சுரல் இவற்றைக் காட்டும் நீர்

"செப்புநீர் சிவந்து சற்றே தெளிவுமா யிருந்த தென்னில்
துப்புறு மிரத்தத்தாலே தொந்தித்த வியாதி யென்பாய்
அப்புநீர் கலங்கிக் கொஞ்ச மாகவே கறுக்குமாகில்
வெப்பஃ தீரல்தாவி வெதுப்பிய சுரமுண்டாமே."

என்பதினால், நீரானது சிவந்து சிறிது தெளிவுற்றிருந்தால் இரத்த தொந்திப்பால் உண்டான நீரென்றும்; நீரானது கலங்கிச் சிறிது கறுத்திருக்குமாயின் வெப்பமானது ஈரலைத் தாக்கியதால் உண்டான காய்ச்சல் என்று அறிவாயாக.

### இதயநோய் நீர்

"உண்டறு கின்ற நீர்தானுயர் தலைமுடியே போல
கண்டடு மெழுக தாமாங்காயிலில் வியாதி யென்று
விண்டிடச் செய்வா யித்த விதமுறு சாத்திரத்தைக்
கொண்டு தேர்ந்திருக்குமே கூறிய குணம்மி தாமே."

என்பதினால், பெய்கின்ற நீரானது தலைமுடியின் நிறத்தை ஒத்திருப்பின், தமரகத்தில் பிணியுண்டாகும் என்றும் அறியவும்.

### நெய்க்குறி (வேறு)

"கோதறு நீரிலுள்ள குணங்களைக் கூறுகின்றோம்
ஈதலால் வியாதி தன்னை யின்ன தென்றறிய நல்ல
சோதனை தன்னை யாய்ந்து சொல்லுவேன் துலக்கமாக
காதுறக் கேட்பீர் மிக்க கல்வி சாத்திரங் கற்றீரே."

என்பதினால், இனி நீரிலுள்ள பிணிகளையறிய வேறொரு சோதனையாகிய குறியைக் கூறுவேன்; கேட்பீராக !

### நெய்க்குறிக்குரிய நீரைச் சேகரிக்கும் நேரம்

"கல்வி சாத்திரங்கள் கற்ற கனதவமுனிவராய்ந்து
சொல்லு மூத்திரப் பரீட்சைச் சோதனையதனைக் கேளீர்
அல்லிருட் சாமம்ரண்டு சென்றதற் கப்பால் நீரே
நல்ல பீங்கானில் வாங்கி நல்லெண்ணெய் விட்டுப் பாரே"

என்பதினால், விடியற்காலை ஏறக்குறைய நாலு மணிக்கு விழுகின்ற நீரைப் பீங்கான் பாத்திரத்தில் பிடித்து வைத்திருந்து அந்நீரில் எண்ணெய் விட்டுப் பார்க்கவும்.

### இரத்த மிகுந்த வெப்பு நீர் நெய்க்குறி

"விட்டதோர் துளியெண்ணெய் வீசியே பரந்து தோன்றி
வட்டமாய் நின்றதாகில் வளர்ந்திடும் ரத்தமிஞ்சி."

என்பதினால், நீரில் விட்ட எண்ணெய்த் துளி வீசிப்படர்ந்து வட்டமாய் நின்றால் அஃது இரத்தம் பொங்கலால் உண்டானது என்று அறிவாயாக.

*இரத்தக் குலை நீர் நெய்க்குறி*

"விரைவுடன் கதிர்போல் நீண்டு வேற்றுமைக் குணங்கள்
கண்டால்
குருதிதான் கெட்டு நாசம் குன்றிய குணமதென்னே."

என்பதினால், நீரில் விட்ட எண்ணெய்த் துளியானது சீக்கிரமாய்த் திரைபோல நீண்டால் குருதி கெட்டு குறைந்ததால் உண்டானது என்று தெரிந்துகொள்ளவும்.

*பித்த மிகுதி நீர் நீ நெய்க்குறி*

"காயத்தினீரி லெண்ணெய் கதில் முனை நீண்டதானால்
தீயுற்ற பித்தமீறிச் செய்குணமிது வென்றெண்ணி
நீயுள்ள குளிர்மைகூட்டி நெகிழ்ந்திடப் பேதி கண்டால்
நோயுற்றுப் போகுமென்று நுவன்றனர் நூல்வல்லோரை."

என்பதினால், நீரில் விட்ட எண்ணெய்த் துளிகநிர் முனையைப் போல் நீண்டால் பித்த மீறியாலுண்டானது என்றறிக. இந்நோயில் பேதியுண்டானால்; நோயற்றுப் போகும் என்று நூல் வல்லோர் நுவன்றனர்.

*சீதமிகுதி நீர் நெய்க்குறி*

"வல்ல நல்லெண்ணெய் துளியா வார்த்ததில்
நெகிழாதாகில்
சொல்லருங் குளிர்மை மீறித் தோஷமும்
நெய்துமென்றும்."

என்பதினால், நீரில் விட்ட எண்ணெய்த் துளியானது நெகிழாமல் அப்படியேயிருந்தால், சீதமிகுதியால் உண்டானது என்று அறிவாய்.

### *அசாத்திய நீர் நெய்க்குறி*

"செய்ய நல்லெண்ணெய் தன்னைச் சிறுநீரில் விட்டபோது
ஐயமதுறவே தாழ்ந்தா லசாத்தியக் குறியே யாகும்
உய்வதுமரிதா மாதி யொருபொருளுடைய சித்தம்
எய்துவதே யல்லாம லெம்மனோரியம் பொண்ணாதே."

என்பதினால், நீரில் தெளிந்திருந்தாலும், இரவில் அதிகமாக நீர் கழிந்தாலும் அஃது உடலின் அதிசீதளத்தைக் குறிக்கும் என்க.

### *முலைப்பால் நீர்க்குறி (தீரும் தீரா நோயறிய)*

"குழவியான்பிள்ளை பெற்ற கோதையர் முலைப்பால்
வாங்கிப்
பழுதுறு வியாதியுற்றோர் பசியநீர் தன்னில் விட்டால்
கலவறக் கலந்ததாகில் காரிய மிகவும் நன்றாம்
வளமுறக் கலவாதாகில் மரணமென்றறியலாமே."

என்பதினால், ஆண் பிள்ளையைப் பெற்ற தாயின் முலைப்பாலை பிணியுற்றோரின் நீரில் விட்டுப் பார்த்தால், அந்நீரில் அது கலந்தால் தீருமென்றும், கலவாவிட்டால் மரணம் என்று அறிவாயாக.

### *பன்றிக் கொழுப்பால் மரணமறிய* (வேறு)

"மரணமென் றறிவதற்கு வராகத்தின் கொழுப்பை வாங்கிச்
சரணத்தின் மேலுங் கீழும் தடவியே வழித்து நாய்க்குத்
தரணியிற் போடத் தின்றால் சமித்திடில் மிகவும் நன்றாம்
அரணித்து வாந்தி பண்ணிலவத்தை யென்றறியலாமே."

என்பதினால், பன்றியின் கொழுப்பை நோயுற்றோரின் காலின் மேல்பக்கமும், கீழ்ப்பக்கமும் தடவி வழித்து நாய்க்கிட, அது அதை தின்று செரித்துக்கொள்ளில் நற்குறியாம். அது நாய்க்குச் செரிக்காமல் வாந்தியானால் துர்க்குறியாம்.

*குருதிக்குறி (தீரும் - தீராமை)*

"குறியின்னங்கூறக்கேளாய் குளிர்ந்த தண்ணீரை வாங்கி
இறுகிய வருத்தக் கார ரிரத்தத்திலிரண்டு துளியே
உறுதியாய் விட்டுப் பார்க்க வுற்றத் தாழ்ந்தானன்று
மறுகியே நெகிழுமாகில் மரணமென் றறியலாமே."

என்பதினால், நோயுற்றோரின் இரத்தித்தில் இரண்டு துளியைக் குளிர்ந்த தண்ணீரில்விட, அஃது உள்ளமுந்தின் நன்றாம். அது நெகிழுமாயின் மரணமாம்.

*மூத்திர நிறப் பரீட்சை*

"மாணிக்கம் பால் பிரசமஞ்சளிஃது பிர
மாணிக்கம் பால் வரிசை மாறாநீர் - மாணிக்க
முத்தமமாதி யொரு நாலு மந்தமுனே
யுத்தம மாதிமதியுன்." - தேரையர் யமகம்

என்பதினால், நோயாளியின் மூத்திரமானது மாணிக்கத்தைப் போல செந்நிறமாயிருப்பது அதமாமதமம் என்பதும்; பால்போல் வெண்ணிறமாயிருப்பது அதமமென்பதும்; தேன் போன்ற நிறமாயிருப்பது மத்திமம் என்றும்; மஞ்சள் நிறமாயிருப்பது உத்தமம் என்பதும் அறியலாம்.

"உத்தமாதி யொருநாலு மந்தமுனே" - என்பது எதைக் குறிக்கிறுது என்றால் உத்தமம், மத்திமம், அதமம், அதமாதமம் என்னும் நான்கையும் வரிசைப்படியே கடைசியை முதலாகக் கொண்டு கூறியதாகும்.

பிணியாளனின் நோய் வரலாறுக் குறிப்பு (நோயை எண்வகைத் தேர்வுகளால் ஆராய்ச்சிக் குறிப்பு.)

**1. நோயினைப் பற்றிய விசாரணை**

1. பெயர்,

2. வயது,

3. இனம் (ஆண், பெண்),

4. தொழில்,

5. இருப்பிடம் (விலாசம்),

6. நோயாகிய செய்தி,

7. நோயின் தன்மை (முக்யமான துன்பங்கள் இவை எனல்)

8. நோயுண்ட காலம்,

9. இதற்குமுன் ஏதேனும் நோய்வாய்ப்பட்டிருந்தால் அதன் விவரம்,

10. நோயாளியின் உணவு, பழக்கவழக்கங்கள் இவை எனல்,

11. குடும்ப சரிதை,

12. நோயாளியின் நிலைமை,

13. நோயின் நிலைமை.

## 2. எண்வகைத் தேர்வு பற்றிய குறிப்புகள்

1. நாடி : வளி, அழல், ஐயம், கலப்பு, முக்குற்றம் (சன்னி வாதம்) நாடிகளின் தன்நடை, புறநடை, இளைத்தல், கதித்தல், குதித்தல், துள்ளல், அழுந்தல், படுத்தல், கலத்தல், முன்நோக்கு, பின்னோக்கு, பக்கம் நோக்கு, சுழலுதல் ஆகிய குறிகளை அறியலாம்.

2. பரிசம் (தொட்டுப்பார்த்தல்) : சூடாயிருத்தல், கொதித்திருத்தல், சிலயிடம் குளிர்ந்தும், சிலயிடம் சூடாகவும், சிலயிடம் இரண்டும் இல்லாமல் இருத்தல், முற்றும் சில்லிட்டிருத்தல், வியர்த்தல் மறத்திருத்தல் பிசுபிசுத்தல், தோல் வெடிப்பு, மயிர்த்தடித்தல், உதிர்தல், சிலிர்த்தல், மூக்கு

சில்லிதல், விழி, மூக்கு, காது, உச்சி, உந்தி, உள்ளங்கால்கள், உள்ளங்கைகள் இவை குளிரல், மூக்கு நீளம், உடல் சுரசுரத்தல், தடித்தல் புடைகள் உண்டாதல் தேமல் பெறல், கட்டிகள் சொறி, சிறங்கு பற்றுகள் புண் புரை வீக்கம் தேகம் இளைத்தல் அல்லது பருத்திருத்தல் முதலிய குறி குணங்களை ஆராய்வதாம்.

3. நா : வாத, பித்த, ஐய நிறம், பல நிறம், மாசறக் கறுத்து இருத்தல், மாசுபடிந்திருத்தல், வாய் நீர் பெருகல், வறண்டிருத்தல், கறுத்திருத்தல், சிவந்திருத்தல், மஞ்சளித் திருத்தல், செளுப்பாயிருத்தல், ரத்தம் போன்று நிறமாயிருத்தல், புண்ணாயிருத்தல், முடபெறல், தோல் உரிந்திருத்தல், பிளவு பட்டிருத்தல், தடித்திருத்தல், ஓரங்களில் பள்ளம்போல் பதிந்திருத்தல், புற்றுகள் உண்டாயிருத்தல், பற்களின் நிலைமை, எயிறுகளின் நிலைமை, வாதச்சுவை, பித்தச்சுவை, ஐயச்சுவை, கலப்புச்சுவை, சுவை தெரியாமை, பேச்சின் நிலைமை, நாவு வெளியில் நீட்டினால் ஒருபுறமாய்ச் சாய்ந்திருத்தல், வாய் கோணலாக இருத்தல் ஆகிய இக்குளிகுணங்களைக் கவனிப்பதாகும்.

4. நிறம் : உடல் பரிசோதனையில் வாத, பித்த, ஐய நிறங்கள், கலப்பு நிறம் (கறுத்தல், மஞ்சளித்தல், சிலிர்த்தல், வெளிரல்) முகம் சிவத்தல், வெளிரல், விழியும் பல்லும் கறுத்தல் ஆகிய குறிகளை அறியலாம்.

5. மொழி (ஓசை) : நோயாளி பேசும்பொழுது உரத்த ஒலி, சம ஒலி, குரல் கம்மிய பேச்சு, பெருங்கூச்சலிடல், தன்னைப் பிடிப்பதாயும், அடிப்பதாயும் பேசல், வருந்திப் பேசல், மாற்றாருடன் வாதாடல், அரைப்பேச்சு, கபத்தோடு கூடிய பேச்சு, பேசாதபோது கபத்தோடு மூச்சுவிடல், மூச்சு தாங்கித் தாங்கி விடுவதாகிய நுரையீரலின் ஒலி முதலிய குறிகுணங்களை அறியலாம்.

6. விழி (கண்) : வாதங்கள், பித்தங்கள், ஐயங்கள், தொந்தங்கள், சிவத்தல், புண்ணாதல், வெளிரல், குளிதல், பருத்தல், நீறநிற மேறல், கலங்கல், நீர்வடிதல், வீங்கல், கண்

மடல் கனத்தல், கண் மடல் வீங்கல், மயிர் உதிர்தல், புண்ணாதல், கண்ணில் பீளை சாரல், வெள்ளை விழியில் இரத்தலம் உரைந்திருத்தல், பீளை சாரல், வெள்ளை விழியில் இரத்தம் உரைந்திருத்தல், கண் பார்வையின் நிலைமை, கருவிழி, வெள்விழி, மணி இவற்றில் புண் உண்டாதல், பல நோய்களும் உண்டாதல், கண் நோய்கள் தொண்ணூற்றாறையும் பற்றி ஆராய்தல் முதலியனவாம்.

7. மலம் : இளகியது, குழம்பாகியது, விட்டக்கழிச்சல், திப்பிதியாகயிருத்தல், நீர்ப்பேதி, ஊன் நீர்போன்றது, கஞ்சித் தண்ணீர்போன்ற பேதி, மஞ்சள், கோழை, சிவப்பு, கறுப்பு, வெண்மை, பச்சை நிறங்கள், நுரைத்தது, செரித்தது, செரியாதது, சீதம், சீழ், ரத்தம் இவை கலந்து மலம் போதல், புழுக்கை போலிருத்தல், மலம் மிகுதல், கெந்தக நாற்றம், பிண நாற்றம், அடிக்கடி கழிதல், மலக்கட்டு, மலம் குறைதல் ஆகிய குறு குணங்களை அறிதலாம் கடுப்புடன் மலம் போதல், அடிக்கடி வலித்து மலம் போதலாகிய குணங்களையும் கவனிக்கவும்.

*நீர்*

1. நிறம் : மஞ்சள், சிவப்பு, பச்சை, கறுப்பு, வெண்மை, செம்பு நிறம், கலப்பு நிறம், புகை நிறம் முதலியன.

2. மணம் : தீ நாற்றம், தேன் மணம், புலால் மணம், இனித்த மணம், நிண மணம், பூ மணம், பழ மணம், புளியின் மணம், மானின் மணம் முதலியன.

3. கலப்பு : ரத்தம் கலந்திறங்கல், தூய நீர்போல் இறங்கல், ஊன் கழுவிய நீர்போல் இறங்கல், நூல்போல் வெள்ளை கலந்து இறங்கல், முன் ரத்தம், பின்ரத்தமிறங்கல், கடுத்திறங்கல், எரிந்திறங்கல், கண்ண நீர்போல் இறங்கல், நெய், பால், தயிர், மோர், அவை போல் இறங்கல், நெய்போல் இறங்கல், சீழ் கலந்து இறங்கல், கற்கள் கலந்திறங்கல், சவ்வு அல்லது சதை கலந்து இழிதல் ஆகிய குறி குணங்களை ஆராய்தலாம்.

4. **நுரை**: நுரைத்திருத்தல், குமிளி தோன்றல், நுரை குறைந்து இழிதல், நுரை பல நிறங்களோடு இழிதல் ஆகியவையாம்.

5. **எச்சல்** : நீர் அளவில் குறைதல் அல்லது மிகுதல். (சுபாவமாக நாள் ஒன்றுக்கு 50 அவுன்சு அல்லது ஆறு ஆழாக்கு என்னும் முக்கால்படி நீர் இறங்கப்படும்) நீரிறங்கள், நீர் பெருகுதல், நோய்களைக் கவனித்தல் முதலியன.

6. **தடவை** : தடவை மிகுதல், அல்லது குறைதல், சொட்டு சொட்டாக இறங்கல், சிறுத்திறங்கல், கடுத்திறங்கல், நீரடைத்தல், தன்னை அறியாமல் நீரிறங்கல், நின்று நின்று இறங்கல் ஆகிய குறி குணங்களை ஆராய்தலாம்.

7. **நிறை** : நீர் கனத்தேனும், இலேசத்துவமாகவும் இறங்கல், மிகத்தடித்து நீரிறங்கல், விந்துவைப் போல் இறங்கல் ஆகிய குறி குணங்களை ஆராய்தலாம்.

8. **சத்து (சுவை)** : நீரைக் காய்ச்சினால் மூளைச்சத்து இருத்தல், தித்திப்புச் சத்து இருத்தல், கண்ணச்சத்து, எண்ணெய்ச் சத்து, ஊன் சத்து, பாலாடைச் சத்து முதலியவை இருக்கிறதா என ஆராய்தலாம்.

9. **நெய்க்குறி** : நீரில் நெய்த்துளி மிதத்தல், பரவல் அமுங்குங்கால் பாதி அமுங்கியும் பாதி மிதந்தும் நிற்றல், நெய்யோடு நீரும் கலத்தல், பாம்பு, மோதிரம், முத்து இவைபோல் பரவல், கலப்பு வடிவங்கள் சேர்ந்து பரவல், கடுகு போல் பரவல், சங்கு, சிங்காதனம், குடை, வீணை, முல்லை அரும்பு, தாமரைமலர் இவைபோல் பரவல் மற்றும் நெய்குரி நூலில் கூறிய அடையாளங்கள் முதலியவற்றை ஆராய்வதாம்.

நோய் நிதானம் (நோய் இன்னதென தேர்வு நிர்மாணித்தல்)

நோய் தீரும், தீராது என ஆராய்தல்.

5. மருத்துவம் (பரிகாரம்)

6. பத்தியம்.

7. நாளுக்கு நாளாயிருக்கப்பட்ட நோயின் தன்மை.

8. நோய் குணமான விவரம்

9. நோய் குணமாகி வெளியேறிய செய்தி

இத்தியாதி விவரங்களைக் கவனித்து நோயை ஆராய்ந்த, அறிந்து முன் பின் நன்றாய் ஆலோசனை செய்து பிரகு தக்க பரிகாரம் புரிதல் நலம் என்றறிக.

## நோய் வரலாற்றுக் குறிப்பு

1. நோயினைப் பற்றிய விசாரணை :

1. பெயர்,

2. வயது,

3. இனம் (ஆண், பெண்),

4. தொழில்,

5. இருப்பிடம்,

6. பதிவாகிய தேதி,

7. நோயின் தன்மை
(முக்கியமான துன்பங்கள் இவை எனல்),

8. நோயுண்டான கால அளவு,

9. நோயுண்டான கிரமம்,

10. இதற்குமுன் நோய் ஏதேனும் வந்திருப்பின் அதன் விபரம்,

11. நோயினனின் உணவு, பழக்கவழக்கங்கள்,

12. நோயினனின் குடும்ப சரிதை,

13. நோயினனின் தற்கால நிலைமை

1. தாது (நாடி), வாத,
பித்தம் இவற்றின் நடை

2. உடற்றாதுக்களின் நிலைமை,

3. மலாதிக்கழிவு (மலம், மூத்திரம், வியர்வை
முதலியவற்றின் நிலைமை),

14. காலம் :

1. நோயினன் வயது (பிராய காலம் கூறுக)

2. நோயுற்ற காலம் (பருவம்)

3. நோயின் கால அளவு

4. பரிகாரம் செய்யும் பருவம்

15. தேசம்

1.பிறந்த திணை,

2. நோயுற்ற திணை,

3. பரிகாரத்திற்கு ஏற்ற திணை,

4. பரிகாரம் பெறும் திணை.

2. நோயினனின் தத்துவ இயல்பு :

*1. மனோதத்தும் (சத்துவ, ரசோ, தமோ குணங்கள்)*

*2. தேகத்துவம் (வாததேகி, பித்ததேகி, கபதேகி, தொந்ததேகி)*

3. தேகவன்மை :

*1. இயற்கை வன்மை,*

*2. கால வன்மை,*

*3. செயற்கை வன்மை.*

4. தீயின் தன்மை :

*1. சமாக்கினி,*

*2. விஷமாக்கினி,*

*3. தீட்சணாக்கினி,*

*4. மந்தாக்கினி.*

5. மனோவிகற்பம் :

6. தூக்கம் : *(இதுபோன்ற ஏனைய குறி குங்கள்)*

7. நோய் நிலைமை :

*1. சப்தம் (ஓசை, ஒலி)*

*1. தட்டியறிதல்,*

*2. காதுகளை அணைத்து அறிதல்,*

*3. தொனியாலறிதல்,*

2. பரிசம் (தொட்டுப் பார்த்தல்)

1. வெப்பதட்பமறிதல்.

2. விரல் கொண்டழுத்தி நீர்க்கோவை, வீக்கம், புரைகுழல் (கழலை) முதலியவற்றை அறிதல்.

3. விரல் கொணடு வளி, அழல், ஐயம் என்னும் நாடிகளின் மாத்திரைப் பிரமாணம், தொந்தம் முதலியவற்றைக் கணித்தல்.

4. சலாகை முதலிய கருவிகளைக் கொண்டு புண், புரை, பகந்தரம் ஆகியவற்றை அறிதல்.

3. ரூபம்

அ) நடத்தல், இருத்தலாகிய செயல்களைக் கொண்டு அறிதல்.

ஆ) மருத்துவனின் கண்கொண்டு நோயினன் கண், காது, மூக்கு, தோல், நா, உதடு, பல், அண்ணம், தொண்டை, முகம் இவற்றின் அமைப்பு, தொழில், நிறம், பசை, தன்மை முதலிய குறி குணங்களை உற்று நோக்கியறிதல், நீர், நிலம், மலம், எச்சில், சளி, வாந்தி, வியர்வை இவற்றின் நிறம், மணம், எடை, நுரை, எஞ்சல், கலப்பு, தடவை, நெய்க்குறி முதலியவற்றையும் ஆராய்ந்து அறிதல்.

இ) சுவை (ரசம்)

1. நோயினனின் நாவின் சுவை.

2. மலம், மூத்திராதிகளின் சுவையை ஈ, எறும்பு முதலிய சந்துக்களைக்கொண்டு அறிதல்.

4. நாற்றம் (கந்தகம்)

அ) வாய், எச்சில், மலம், நீர், வியர்வை, சீழ், வாந்தி முதலியவற்றின் மணம் பற்றிய நிலைமை.

ஆ) நீரைக் காய்ச்சி அறிதல்.

5. நோய் நிதானம் (நோய் இன்னெதெனத் தேர்தல் முடிவு)

6. நோய் தீரும், தீராது என ஆராய்தல்,

7. மருத்துவம் (பரிகாரம்),

8. பத்தியம்,

9. நாளுக்கு நாள் இருக்கப்பட்ட நோயின் தன்மை,

10. நோய் குணமான விவரம்,

11. நோயினன் குணமாகி வெளியேறிய தேதி.

இத்தியாதி விவரங்களைக் கவனித்து நோயை ஆராய்ந்து அறிந்து முன்பின் நன்றாய் ஆலோசனை செய்து, பிறகு பரிகாரம் பொருத்தமாகப் புரிவதுதான் உத்தமம் என்றறிக.

## நோய் வரலாற்றுக் குறிப்பு

1. நோயினனைப் பற்றிய விசாரணை அல்லது வினாதல் :

1. பெயர்,

2. வயது,

3. இனம் (ஆண், பெண்),

4. தொழில்,

5. இருப்பிடம்,

6. பதிவாகிய தேதி,

7. நோயின் தன்மை
(முக்கியமான துன்பங்கள் இவை எனல்),

8. நோயுண்டான கால அளவு,

9. நோயுண்டான கிரமம்,

10. இதற்குமுன் நோய் ஏதேனும் வந்திருப்பின் அதன் விபரம்,

11. நோயினனின் உணவு, பழக்கவழக்கங்கள்,

12. நோயினனின் குடும்ப சரிதை.

## 2. பொறியாதல் தேர்தல்

1. நோயினனின் நிலைமை

2. எண்வகைத் தேர்வு.

1. நாடி, வாதம், பித்தம், ஐயம், தொந்தம், முக்குற்றம், நாடிகள் இழைத்தல், கதித்தல், அழுந்தல், தங்கித்தங்கி எழும்பல், மெதுவாய் நடத்தல், நூல் போல் இளைத்தல், நாடி, நடைபுலப்படாமை.

2. பரிசம் : வெப்பாயிருத்தல், அதிகச் சூடாயிருத்தல், குளிர்ந்திருத்தல், சில இடம் குளிர்ந்தும், சில இடம் சூடாகவும் இருத்தல், உடல் முற்றும் சில்லென்று இருத்தல், வியர்த்திருத்தல், மறத்திருத்தல், பிசுபிசுப்பாயிருத்தல், தோல் விரிந்திருத்தல், உரோமம் தடித்திருத்தல், உதிரம், மயிர் சிலிர்த்தல், மூக்கு நீளல், மூக்கு வற்றியிருத்தல், தேமல், கொப்புளம், கட்டிகள், கழலை, சொறி, சிரங்கு, படை, விரணம், வீக்கம், ஊதல், உடல் சுரசுரத்தல், உடல் இளைத்திருத்தல்,

மெலிவாயிருத்தல், கல்லீரல், மண்ணீரல் மற்றுமுள்ள உள் கருவிகள் (உள் அவயவங்கள்) பருத்திருத்தல், வேறு உள்பக்கம் கட்டிகள், கழலைகள் முதலியன கைக்குத் தட்டுப்படல்.

3. நா : கறுப்பு, செம்மை, மஞ்சள், வெண்மை, கலப்பு நிறம், சுத்தமாயிருத்தல், மாப்படிந்திருத்தல், மாசற்றிருத்தல், வாய் நீர் தன்னளவு, மிகுதி, குறைவு, வறண்டிருத்தல், முள்போல் இருத்தல், சுவை இயற்கையாயிருத்தல், ஓரங்களில் பற்களால் பள்ளம் உண்டாகியிருத்தல், சுவை இயற்கையாக இருத்தல் அல்லது அறுசுவைகளில் எச்சுவை அல்லது கலப்பு சுவைகள் மிகுதியாகத் தோன்றல், உள்நா வளர்ந்திருத்தல், இரு பக்கங்களிலும் உருண்டையாக தசை வளர்ந்திருத்தல், அண்ணாக்கு மஞ்சளித்திருத்தல், நாவில் புண் உண்டாயிருத்தல், நாவை வெளியில் நீட்டும்போது ஒரு பக்கமாகச் சாய்ந்து காணல், வாய் கோணலாக இருத்தல் முதலியன.

4. நிறம்.

5. மொழி,

6. விழி,

7. மலம்,

8. மூத்திரம்.

1. நிறம்,

2. கனம்

3. கலப்பு,

4. நுரை,

5. எச்சில்,

6. தடவை,

7. நிறை,

8. சத்து,

9. நெய்க்குறி

இவையாவும் நோய் வரலாற்றுக் குறிப்பு. (எண். 1ல் கண்ட பிரகாரம் அனுசரிக்கவும்.)

9. உடற்தாதுக்களின் நிலைமை

1. ரசதாது (சாரம்)

2. ரத்தம் (குருதி)

3. மாமிசம்,

4. கொழுப்பு,

5. எலும்பு,

6. மூளை,

7. வெண்ணீர் (சுக்கிலம், விந்து)

10. மலம்

1. மலம்

2. மூத்திரம்,

3. வியர்வை,

4. கண்பீளை,

5. காது குறும்பி,

6. மூக்கு மலம்,

7. குறி,

8. நகம்,

9. மயிர்,

10. பித்தம்

## 11. முக்குற்றங்களின் நிலைமை

வளி :

1. உயிர்க்கால்,

2. மேல் நோக்குங்கால்,

3. கீழ் நோக்குங்கால்,

4. நடுக்கால்,

5. பரவுகால்.

அழல் :

1. பாசகம் (அனற்பித்தம்)

2. ரஞ்சகம்,

3. சாதகம்

4. ஆலோசகம்,

5. பிரசகம்.

ஐயம் :

1. அவலம்பகம்,

2. கிலேதம்,

3. தற்பகம்,

4. போதம்,

5. சந்திகம்.

2. கருமேந்திரியங்கள் :

1. வசனித்தல் (பேசல்)

2. நடத்தல்,

3. கொடுக்கல்,

4. மலம், மூத்திரம் கழித்தல்,

5. விந்துவிடல்.

பொறி புலன்கள் :

1. ஒலி (காது)

2. ஊறு (மெய், உடல்)

3. ஒளி (கண்)

4. சுவை (நா)

5. மணம் (மூக்கு)

(எண்வகைத் தேர்வில் பார்க்கவும்)

14. இதர அங்கங்கள் : பொறிபுலன்களால் ஆராய்தல்.

*1.* மூளை,

2. தமரகம் (இருதயம்)

*3.* மண்ணீரல்,

*4.* நுரையீரம்

*5.* நீர்க்குண்டிக்காய்,

*6.* விதைகள்,

*7.* கல்லீரல்,

*8.* வயிறு,

*9.* சிறுகுடல்

*10.* பெருங்குடல்,

*11.* துணைக்குடல்,

*12.* மூத்திரப்பை, மூத்திர நாளம்,

*13.* கருப்பை (பெண்களில்)

*14.* கைகள்,

*15.* கால்கள்.

15. தேகம், இது எனல் (யாக்கை) :

*1.* வாத உடல்,

*2.* பித்த உடல்,

*3.* ஐய உடல்,

4. கலப்பு உடல்,

5. முக்குற்ற தேகி.

16. குணம், இது எனல் :

1. சத்துவம்

2. இராசதம்,

3. தமோகுண் (தாமதம்)

17, மேற்கண்ட தேர்வுகளின்மூலம் அறியலான முக்கிய சில குறிப்புகள்:

1. குறி குணங்கள்,

2. குற்றம் அல்லதுதோடம்

3. குற்றமடைந்த உடற்றாதுக்கள்,

4. மலாதிகள்,

5. உறுப்புகள்

18. நோய் நிதானம்,

19. நோய் தீரும், தீராது எனல்,

20. மருத்துவம்,

21 பத்தியம்,

22. நாளுக்கு நாள் காணப்படும் நோயின் தன்மை அல்லது நோயின் நிலைமை

23. நோய் குணமான விவரம்,

24. நோயினால் குணமாகி வெளியேறிய செய்தி.

இத்தியாதி விவரங்களைக் கவனித்து நோயை ஆராய்ந்து அறிந்து முன்பின் நன்றாய் ஆலோசனை செய்து, பிறகு தக்க பரிகாரம் புரிதல் மிகவும் நல்லது.

*தாது லக்ஷணம்*

(வெண்பா - கண்ணுசாமியம்)

1. "செந்துகிலை மேற்கொண்டு செங்கை காற்றான் சொரிந்து,
வெந்தத்தத்தைக்குற்றி விண்பார்த்துச் சந்தமுற
வைத்தியன் நெய்யாடும் வேளைகளில் போயழைக்கில்
சைத்தியத் தாற்றீதென்றே சாற்று."

2. "கம்பன் பிடித்துக் கவின் சுவரும்பற்றித்
தும்பிக் கரநெட்டைத் தாவிட்டுச் - செம்மையில்,
கொட்டாவி தன்டனே கூப்பிட்டால் நோயாளி
விட்டாவி போகும் விரைந்து."

3. "பிரிந்த தலையும் வியன்தடியார் கையும்,
பரிந்தவுடல் சொரிந்து பையப் - பரிந்த
நகங்கிள்ளிக் கைகட்டி நாடி யழைக்கி
னிப்போக நீங்கு மியம்பு."

என்பதினால்,

1) வயித்தியனை அழைக்கவருபவன் சிவப்பு வஸ்திரத்தை உடுத்திக்கொண்டும், கைகால்களைச் சொரிந்து கொண்டும், பல்லைக் குத்திக்கொண்டும், ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டும் வந்தழைத்தாலும்; அல்லது வயித்தியயன் எண்ணெயிட்டுக் கொண்டிருக்கும்போது அழைப்பினும் நோயாளிக்குச் சீதள ரோகத்தால் தீமை என்றறிக.

*2)* மேலும், கம்பத்தைப் பிடித்துக்கொண்டும், சுவர் பற்றிக்கொண்டும், தும்மலுடன் நெட்டையும், கொட்டாவியும் விட்டுக்கொண்டும் வயித்தியனை வந்து அழைப்பின் நோயினனுக்குத் தீமை வருமென்றறிக.

*3)* தலைவிரித்தும், தடியைக் கைக்கொண்டும், உடம்பைச் சொரிந்துகொண்டும், நகத்தைக் கிள்ளியும், கைகளைப் பின்கட்டாகக் கட்டிக்கொண்டும் மருத்துவமனை வந்தழைக்கின் நோயினன் தேருவது கடினம் என்பதையும் அறிவிக்கின்றன.

### *தாது லட்சணம் (வேறு)*

*(வியாசர் நாடி நூல் - சி. ம. சுருக்கம்)*

### *மருத்துவரை அழைப்போனால் ஏற்படும் அறிகுறிகள்*

அறுசீர் விருத்தம்

*1.* "மருத்துவன்றனையழைக்க வந்தவன்றன்னைப் பார்த்துத்
திருத்தமாய்க் கிழக்கிலிந்திரன் செப்பிடு நல்லதாகும்,
எரிக்குமக்கினியின் திக்கிலிப் போதே மரணமென்க
பரித்திடுமெமன்றன் திக்கில், பயமொடு மரணமென்க."

2. "நிருதியில் வந்தழைக்கில் நிச்சயஞ்சாவு சொல்லுவாய்
வருணனில் வந்தழைக்கில் மத்திமம் வாயுமூலை
திறமுடன் வந்தவைக்கில் தீராது ரோகமென்க
இருமைசொல் குபேரன்மை ஈசானம் நல்லதாமே."

### *மருத்துவன் செயலால் நன்மை - தின்மையறிதல்,*

3. "தண்ணீர்குடமு மாமிசமும் தயிர் பால் மீன் சந்தனம் பூவும்,
வண்ணப்படியேதான் காண வருவார் சாத்தியமென்றே
சொல்,
நண்ணுங் கால் கை முகஞ்சுத்தி நற்பூசையாசனஞ் செய்ய
எண்ணிக் கருமந்தான் சொல்லி எய்துஞ் சாத்தியந்
தானறியே."

*தூதனாலறிந்து கொள்ளவேண்டிய தீராத குறிகள்*

4. "அந்தரந்தன்னைப் பார்த்து யாங்கழைத்திடில் மரணமாகும்
விந்தைக் கைகால் பிடித்து வேண்டவே வியாதி மாற்
முந்தவே முகஞ்சுளித்து முன்கைகள் பின்கட்டாக
வந்தவரழைத்தபோது மரணமென்றறிந்து சொல்லே."

5. "தலைதனைவிரித்துக் கொண்டுந் தடிகையிற் பிடித்துக் கொண்டும்,
கலைகலென்றழைக்கும் போது கணமெனச்சாவு சொல்வாய்
நலமிலாதுடல் சொறிந்து நகந்தனைக் கையாற்கிள்ளி
சொலைவிலாச்சாத்தியமென்று சொல்லிவிடு தரணியோர்க்கே."

6. "சுவர்தூண் பிடித்துக் கொண்டழைக்கச் சொல்லப்போகாத சாத்தியந்தான்
விவரந்தப் பிப்பயப்படினு மிகக் கொட்டாவி நெட்டுயிர்ப்பும்
அவமாய் நாக்குத் தான்குழற அழைத்தால் சாத்தியந் தானறிவாய்
புவனம் போற்று மகத்தியனார் புகலுந்தூது தனிலக்கணமே."

குறிப்பு :- வியாசர் எனப் பதிணென்சித்தர் நாடி நூலிலும், அகத்தியர் என சித்தமருத்துவாங்கச் சுருக்கத்திலும் வரையப் பட்டிருக்கிறது.

*(வெண்பா)*

7. "கைகால் சொறிந்து கருத்து பல்லுந்தான் குத்தி
மெய்யிற் வடுப்பு கலைமேலுடுத்தி - நய்ய
வயித்தியனுக் கெண்ணெயிடும் போதெழைக்கில்தான்
சைத்தியத்தில் சாவானே தான்."

### தொடுகுறி (வேறு)

8. "வந்து புறங்கால் தொடிற்றூ தன் வருடமிரண்டில் மரணமென்க
முந்து முழங்கால் தொடிலாறு மாதமுதலாய்த் தீதாகும்
பிந்துங்காலைத் தொடில் மரணம் பின்னைக்காதுதனைத் தொடினும்
சிந்ததிப்பாது மூன்று திங்கள் சென்றால் மரணந்தேன் மொழியே."

9. "நெற்றிதொடினோ பதினைந்து நீள்புருவந்தொடிலொன்ப தென்க
கத்துங்கழுத்து மூன்றே நாள் கண்ணைத் தொடிலோ நாளஞ்சாம்
நத்து மூக்கு மூன்ற நாள் நாவைத் தொடினாளொன் றிற்சாம்
உற்றகுறியின் குணமிதென உரைத்தார் தமிழாலுயர்ந் தோரே."

### நோய் முதனால் திரட்டு

10. "சங்கக் கழுத்தைத் தொடில் பேறாம் தரமாய்ச் செறியும் நெஞ்சாகில்
தங்கு முதரஞ் சல்லாபம் தலையிற்றொடிலோ பக்கிஷமாம்
பொங்குமரையிற்கேடாம் பொலியுமுதுகு பிணி மீறும்
எங்கும் பரந்ததமிழாய்ந்தோர் இயம்புந்தூ தனிலக்கணமே."

11. "முன்னமே ஆணாய் வந்து மொழிந்திபின் பெண்ணாய்
வந்தால்முன்னமே கருமந்தீதாய்ப் பின்பு நன்றாகுமென்க
முன்னமே பெண்ணாய் வந்து மொழிந்தபின் ஆணாய் வந்தால்
சொன்னவை முன்பு நன்றாம் பின்னிடு காடாதாமே."

(இதன் பொருள்)

1. மருத்துவனை அழைக்கவருகின்ற தூதுவன் மருத்துவன் இருக்குமிடத்திற்குக் கிழக்காகிய இந்திரன் திக்கிலிருந்து அழைத்தால் நோய் தீரும் என்றும்;

தென்கிழக்காகிய அக்கினி மூலையிலிருந்து அழைத்தால் உடனே இறப்பு உண்டாகும் என்றும்;

தெற்காகிய எமன் திக்கிலிருந்து அழைத்தால் பயத்துடனே கூடிய மரணம் உண்டாகும் என்றும் அறியவும்.

2. தென்மேற்கு மூலையாகிய நிருதி திக்கிலிருந்து அழைத்தால் அந்நோயினன் இறத்தால் உண்மை என்றும், மேற்காகிய வருணன் திக்கிலிருந்து அழைத்தால் அந்நோய் நீங்குவது மத்திமம் என்றும்;

வடமேற்காகிய வாயு திக்கிலிருந்து அழைத்தால் அந்நோய் தீராது என்றும்;

வடக்காகிய குபேரன் திக்கிலிருந்து அழைத்தால் அந்நோய் தீர்ந்து நன்மையாகும் என்றும்;

வடகிழக்கு மூலையாகிய ஈசான்யத்திலிருந்து அழைத்தால் அந்நோய் தீரும் என்றும் அறியவும்.

சிலர் கிழக்கிலும், மேற்கிலுமிருந்து அழைத்தால் நோய் விரைவில் தீரும் என்றும்;

*சித்தமருத்துவ நோய் நாடல்*

வடக்கிலும், தெற்கிலும் இருந்து அழைத்தால் நோய் நாட்படத்தீரும் என்றும்;

நிருதி மூலையிலும் ஈசானிய மூலையிலுமிருந்து அழைத்தால் நோய் வெகுவிரைவில் தீரும் என்றும்,

அக்கினி மூலையிலும் வாயு மூலையிலும் இருந்து அழைத்தால் நோய் தீராது எனவும் சொல்லியிருக்கிறார்கள்.

3. மருத்துவனை அழைக்கச் சென்ற தூதன் மருத்துவனிடம் செல்லுங்கால், அங்கு அம்மருத்துவன் தண்ணீர் முகத்தல், மாமிசம், தயிர், பால், மீன் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை வாங்குதல், சந்தனம் இழைத்தல், பூத்திருத்தல் ஏதேனும் ஒன்றைச் செய்துகொண்டிருப்பானேயாகில் அது தீரும் நோய் எனவும்;

கால் கழுவல், கை கழுவல், பூசை முகம் கழுவல் செய்தல், உண்ணல் முதலியவற்றுள் ஒன்றைச் செய்துகொண்டிருப்பானே யானால் அது தீராத நோய் எனவும் தெரிந்துகொள்ளவும்.

இவையன்றியும் மருத்துவன் தண்ணீர் நிலையத்திலிருந்து குளித்தல், தன் இல்லாளுடன் உல்லாசமாயிருத்தல், தூங்குதல், வருத்தத்தோடு இருத்தல், அழுதல், நோயால் வருத்தல், மலம், சிறுநீர் கழித்தல் முதலியனவும் நோய் தீராமையைக் காட்டும் குறிகள் எனவும் கூறியுள்ளார்.

4. மருத்துவனை தூதனானவன் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே அழைத்தால் அந்நோயாளி இறந்துவிடுவான் என்றும்; தன்னுடைய கால், கையைப் பிடித்து வேண்டிக் கொண்டால் அந்நோய் தீராது என்றும்;

முகத்தைச் சுளித்துக்கொண்டும், முன்கைகளைப் பின்கட்டாகக் கட்டிக்கொண்டும் அழைத்தால் அந்நோயினன் இறந்துவிடுவான் என்றும் கூறியுள்ளார்.

5. தலையை விரித்துக்கொண்டும், கையில் தடியுடன் கலகலப்பாக மருத்துவமனை வந்தழைப்பானாகில் நோயாளி சாவது நிச்சயம் என்றும்;

உடலைச் சொறிந்துகொண்டும், நகத்தை விரலாற் கிள்ளிக் கொண்டும் வந்தழைப்பானாகில் அந்நோய் சாத்தியம் என்றும் கூறுவாயாக.

6. தூதுவனானவன் மருத்துவனிடம் வந்து அங்குள்ள சுவரையாவது தூணையாவது பிடித்துக்கொண்டு மருந்துவனை அழைத்தால், அந்நோய் தீராது என்றும்; பயந்தழைத்தாலும், கொட்டாவி பெருமூச்சு விட்டும் நாவு குழறிக் குழறி அழைத்தாலும் அந்நோய் தீராது என்றும் அறியவும்.

7. கைகால்களைச் சொறிந்து கொண்டும், கல்லைக் குத்திக்கொண்டும், சிவப்பு வஸ்திரம் உடுத்திக்கொண்டும், வைத்தியன் எண்ணெயிட்டுக் கொண்டிருக்கும்போதும் வந்து அழைப்பானாகில் சைத்திய நோயால் நோயினன் சாவான் எனவும் கூறுவாயாக.

8. தூதனானவன் மருத்துவனை அழைக்குங்கால் தன் பின்காலைத் தொடின் இரண்டு ஆண்டுகளிலும்;

முழங்கையின் முன்பக்கத்தைத் தொட்டால் ஆறு திங்களிலும்; இடது காலைத் தொட்டாலும் காதின் பின்பாகத்தைத் தொட்டாலும் மூன்று திங்களிலும் மரணம் உண்டாகும் என்று அறிக.

9. தூதன் மருத்துவனை அழைக்கும் காலத்தில் நெற்றியைத் தொட்டால் பதினைந்து நாட்களிலும், புருவத்தைத் தொட்டால் ஒன்பது நாட்களிலும், கழுத்தைத் தொட்டால் மூன்று நாட்களிலும், கண்ணைத் தொட்டால் ஐந்து நாட்களிலும், மூக்கைத் தொட்டால் மூன்று நாட்களிலும், நாவைத் தொட்டால் ஒரு நாளிலும் சாவு உண்டாகும் என்றும் கூறியுள்ளார்.

10. பின் கழுத்தைத் தொட்டாலும், மார்பைத் தொட்டாலும் நன்மை உண்டாம் என்றும்;

தலையிலும், அரையிலும் தொட்டால் தீமை உண்டாம் என்றும், முதுகைத் தொட்டால் நோய் மிகும் என்றும் நூல்கள் கூறுகின்றன.

*11.* ஆண், பெண், இருவருள் முன்னர் ஆணும், பின்னர் பெண்ணும் வந்தழைத்தால் நோயானது முன்னர் கெடுதிபோல் காட்டிப் பின்னர் நன்மையாகும்.

முன்னர் பெம்ணும், பின்னர் ஆணும் வந்தழைத்தால் முன்னர் நன்மைபோலக் காட்டிப் பின்னர் மரணம் உண்டாகும் எனவும் அறிக.

### *" மணிக்கடைநூல் "*

என்னும் அகத்திய சூடாமணிக்கயறு சூத்திரம் (இஃது வேடாமாமுனிக்கு உபதேசித்தது)

### *காப்பு*

*1.* "கமலக்கைமணிக்கையில் கயறு சூத்திரம்,
விமலனே நோக்கியே வேடமாமுனி
திமிலாம் பிணியது சேரச் செப்பியே,
அமலனா முனிக்கு முன்னருளிச் செய்ததே."

2. "வாசவன்றேவருமாமுனி
வோர்களுக்குந்
தேசமறிந்திடச் செப்பிடுஞ்
சூத்திரம்
ஈசனேகரி முகாயிக்கயறு
நூலுக்கு
மோசமில்லாமலே முன்
வந்து காப்பதே."

### *நோயின் சாரம்*

*1.* "மணிக்கடை நால்விரல் தள்ளி வன்மையாய்,
தணிக்கிடைக்கயறு போட்டளந்து பார்க்கையில்
கணித்திடும் விரல்தனைக் கண்டு சொல்லவே,
பிணித்திடும் நோய்களைப் பிரித்துரைக்குமே."

*பத்துவிரல்கடை*

2. "குறைந்து விரற்கடை யிரைந்து காண்கிடில்,
விரைந்து வெண்பிணி வுடம்பிற் சார்ந்திடும்
நிறைந்த காலுங் கையுடல் நெருங்கிடும்
திரைந்த வயிற்றினில் திரளும் குன்மமே."

*ஒன்பதேமுக்கால்*

3. "ஒன்பதே முக்கால் யுகந்து காண்கையில்
எண்பதுபுரையரையாப்பே யெய்திடும்,
வன்போடு யிருமலும் வறட்சி தோன்றிடும்ஷ
பின்பதோர் வருடத்தில் பீலிகை தோன்றுமே."

*ஒன்பதரை*

4. "ஒன்பதுயரையது யுகந்து காண்கையில்,
வெண்பொடுவுடம்பெல்லாம் வெளுத்துச் சூடதாம்,
துன்படுயிருவிழி காய்ந்து முன்சுரம்
நன்பதுமசனம் விட்டுடலும் வற்றுமே."

*ஒன்பதேகால்*

5. "தீட்டிய ஒன்பதுகால்யுகந்து திண்ணமாம்,
ஈட்டில் சிறுநீரித்து சூழ்ந்திடும்,
சூட்டில் கண்விழித்துயிலுமில்லையே,
வாட்டியபீனிசம் வந்து தோன்றுமே."

*ஒன்பது*

6. "கழிந்திடுமொன்பது விரற்கடை காண்கையில்,
வழிந்திடுஞ் செவியிலுள்ளே குத்துமந்தமாம்,
குழிந்திடுங் குறுக்கினில் கோரைவாயுவே,
அழிந்திடுமிருதுடை அயர்ந்து சூழுமே."

*எட்டேமுக்கால்ர*

7. "எட்டினில் முக்கால் காண்கில் யிலக்கிய வுடம்பு காயும்,
தொட்டிய குட்டம் போலே சில்விடம் பலவுந் தோன்றும்,
முட்டிய வயிற்றினுள்ளே முளைபோலே வாயு குத்தும்,
வெற்றிய கண்வாய் கைகள் வெளுத்திடும் பித்த ரோகம்."

*எட்டரை*

*8.* "..........................................
..........................................
விட்டுடனிருமலும் வெதுப்பு மேலெல்லாம்,
கிட்டிடுஞ் சிலையுங்கிரங்கி காணுமே."

*எட்டேகால்ர*

*9.* "காட்டிய எட்டோடு கால்விறற் கடைக்
கூட்டிய பித்தவாய் குரைசுர மெனில்,
நாட்டிய பிரமியம் நவிலுங் காமியம்,
வாட்டிய சிரசில் நோய் வருமோராண்டிலே."

*எட்டு*

*10.* "எட்டெனும் விரற்கடை வயது மாறிடில்,
கூட்டிய பித்தவாய் குரைசுர மெனில்,
நாட்டிய பிரமியம் நவிலுங் காமியம்,
வாட்டிய சிரசில் நோய் வருமோராண்டிலே."

*ஏழேமுக்கால்*

*11.* "ஏழினில் முக்கால் காணில் எழும்பிடுங்கீழே மூலல்,
தாழ்வது ரெண்டு காலுந்தலை யாடுமகத்து நீற்கும்
தோளது வருஷமாண்டாய் தோன்றிடுங்கண்ட மாலை,
நாளது செல்லச் செல்ல நாசியில் ரத்தங்காணும்."

*ஏழரை*

*12.* "ஏற்றமே முரையுங் கண்டால் எலும்பது உருகிக் காணும்,
காற்றது வயிற்றில் விம்மும் முகமெலாமெரிவு காணும்,
முற்றவளுற்றுக் கண்ணுமுடம்பெல்லாங் காய்ச்சலுண்டாய்,
தூற்றிய காலில் நோவுத்துடையில் விப்புருதியாமே."

*ஏழேமுக்கால்*

*13.* "ஏழது காலுங்கண்ணுமிடுப்பினில் வலுயுமுண்டாம்,
மீளவுஞ்சிரசில் பித்த மிகுதி கொண்டிருக்குங்கண்டாய்,
சூளது வினையினாலே துடரவே பாண்டு முண்டு,
ஆளது காலும் கையும் சுமந்து நித்திரையும் பாழாம்."

*ஏழு*

*14.* "திட்டமாயேழு கண்டால் சிரசிலே பித்தமேறி
நட்டமம் வாயில் ரத்தம் நவிலுறுச் சயமுமாகும்,
மட்டவிற்காலுங்கையும் வந்திடுஞ்சிலந்தி தோனும்
உட்டிணமிகுதியுண்டா முலர்ந்திடு மலம் வியாதி."

*ஆறேமுக்கால்*

*15.* "ஆறுடன் முக்கால் கண்டால் அண்டத்தில் வாயு வுண்டாகும்
தேருமே கண்கள் ரெண்டுஞ் சிவந்திடு மயக்கம் முண்டாம்,
கூறிடு வருடமூன்றில் குருக்க நீரடைப்புண்டாகும்
வீறிட்ட கைகால் நோவாம் விரைந்திடு முதத்தில் தானே."

*ஆறரை*

*16.* "அன்புடனாறினில் யாரையுங் காணவே,
வெப்பியவுடம்பெல்லாம் வெதுப்புத் தாகுமாம்
கும்பியும் பொருந்திடுகுத்தல் மேலெல்லாம்
வம்பினி லரைத்திடுமாண தேகமே."

### ஆறேகால்

17. "அன்னமே ஆறுடன் யமர்ந்துகால் கண்டால்
முன்னமே மூலமா மித்திரக் கிராணியாம்
பன்னமே துயிலில்லாப் படுங்கழிச்சலாம்
வன்னமும் வோறலாம் வலதுறை வினையே."

### ஆறு

18. "ஆறுதாமங்குல மானிதில் கண்டிடில்
சேறுதலன்றிய சிலேற்பனம் நெஞ்சினில்
ஊறவே யடைத்திடு முள்ள மயங்கிடும்
மாறும் வேறாகவே மரணம் வந்திடும்."

### அஞ்சேமுக்கால்

19. "அஞ்சுடன் முக்கால் அளந்து பார்க்கையில்
மிஞ்சியேசன்னி நோய் மிகுதியாகிடும்
அஞ்சவே மயக்கமும் அஸ்தியாக்கிடும்
கஞ்சியே குடித்திடில் காலன் போலுமே."

### அஞ்சரை

20. "அஞ்சரை காணுங்கையால் யமர்ந்ததோர் நோயெல்லாம்
மிஞ்சியே சிரசினில் விஷம தாகிடும்
பஞ்சிபோல் மூக்கும் வெண்பல் கருகிடும்
தஞ்சமாம் பத்துநாள் சாவது திண்ணம்."

### அஞ்சேகால்

21. "அஞ்சினில் கால் விரலதிகம் கண்டிடில்
மிஞ்சி போற்பதமு மெய்யெல்லாங் குண்ணியே
துஞ்சுவோர் போலவே துயிலும் பொருந்திடும்
வஞ்சமுமாறு நாள் மரணமுங் கிட்டுமே."

*அஞ்சு*

22. "அஞ்சுநாள் விரலது யளந்து காண்கையில்
மிஞ்சியேவுடலது வெளுத்துக் குளிர்ந்திடும்
தஞ்சியே சிலேற்பனந்தடுத்துத் தொண்டையில்
நஞ்சிபோல டைத்துடல் பதறியே சாவதே."

*நாலேமுக்கால்*

23. "நால்விரல் மேலே முக்கால் நவின்றிடக்கண்டிடில்
ஆவுடல்தன்னை யாமறிவது கெட்டிடும்
நாவுடன் வறண்டிடும் நடுநடுங்கிடும்
சாவது ஏழுநாள் தன்னில் பாகுமே."

*நாலரை*

24. "நன்னறி நாலரை காண்கையில்,
பன்னறிபோலுடல் பற்றி வீங்கிடும்,
வன்னறிக் கண்களும் வளைந்து முள்விழும்
அன்னறி ஒன்பதிலாகுஞ் சாவதே ."

*நாலேகால்*

25. "நாலுடன் கால் கண்டால் நடுக்கலுமாயுள்ள,
காலுங்கைய சந்திடுங்கறுக்கு மென்முகம்,
காலவே நெடுமூச்சது தாண்டி வாங்கிடும்,
ஏலவே சாவது ரெண்டுநாளிற் சாவதே."

*நாலு*

26. "தேட்டிய நாலது திட்டமாங் கண்டிடில்,
வாட்டியே முகத்தினில் மயங்கிடும் கண்களும்,
மீட்டியே காலுடன் வீக்கமு முற்றிடும்
தேட்டிய சாவது திண்ணமுமஞ்சிலே."

*பதினொன்று*

27. *“நண்ணிய பதினொன்று நாடி காண்கையில்,*
*எண்ணிய பருத்துடல்யியம்பவில்லையா*
*அன்னல் செய் விதியன்றி அழிவதில்லையா*
*நண்ணியகாலனும் நலனுமில்லையே.”*

*நோய் முதனாடல் திரட்டு*

28. *“இந்த முறை முனியியம்பினாரொந்தனுக்கு*
*சுந்தரம் சாத்திரத்தில் சூட்சமாம் யிந்த*
*தரணியிலுள்ளோர் நோய் குணங்கள் தானறியவேண்டி*
*அரனுரைத்த தென்னவே அறி.”*

(இதன் பொருள்)

மணிக்கடைக்கு மேல் நான்கு விரற்கடை தள்ளிக் கைச் சுற்றளவைக் கயிற்றினாலளந்து, கண்ட நீளம் அவரவர்களது கையினால் :

1. பத்து விரற்கடையிருத்தால் உடல் வெதும்பி, வாயுவினால் நெஞ்சு, கால் கையிற் குத்தலும், உளைவும், வாயுத் திரட்சியும் குன்மமும் உண்டாகும்.

2. ஒன்பதேமுக்குலுக்கு அரையாப்பு, பிளவை, வறட்சி, இருமலுமுண்டாகும்.

3. ஒன்பதரைக்கு உடல் வெதும்பி வீங்கும், சூடுண்டாகும், விழிகாந்தும், உட்சுரம் மேலுண்டாகும். அன்னத்தைத் தள்ளும்.

4. ஒன்பதேகாலுக்கு விழி காந்தும், நீர்க்கடுத்துச் சிறுத்து இறங்கும், நித்திரை வராது, பீனிசம் உண்டாகும்.

5. ஒன்பதுக்குச் செவி மந்தம், கண் புகைச்சல், குறுக்கில் வாய்வுடன் வலியுண்டாகும், இரு துடைகளும் அயரும், நடக்கவொட்டா.

6. எட்டேமுக்காலுக்கு உடல் காயும், சில்விடத்தால் குட்டம் போலுண்டாகும், மூல வாயுவினால் வயிறு பொருமும், கண் காசம், பீனிசமும் உண்டாகும்.

7. எட்டரைக்குத் தேகம் வெதும்பும், வெட்டை, சிலந்தி, குட்டம், சொறி, குடல்வாதம், தாது நட்டமும் உண்டாகும்.

8. எட்டேகாலுக்கு உடல் பருத்து வலித்து உளையும், தலை வறட்சி, வலி, பீனிசம், வியர்வை, விஷத்தினால் இளைப்பு, இருமலுண்டாகும்.

9. எட்டுக்கு மேகாங்கை, வயிறு மந்தம், பொருமல், வாயுத் திரட்சி உண்டாகும். அன்னத்தை வெறுக்கும், சுகமிராது, வேற்றுடல்படும்.

10. ஏழேமுக்காலுக்கு மூலமெழும்பிக் கைகால் காந்தும், தலையிடிக்கும், மநத்திருக்கும், இரண்டு வருடத்தில் கண்டமாலையும், நாள் செல்லச் செல்ல நாசியில் இரத்தும் உண்டாகும்.

11. ஏழரைக்கு எலும்புருக்கி, மேகம், வயிற்றுப்பொருமல், கண் எரிவு, ஆறு நாளில் உடம்பில் காந்தல், கைகால் சந்து உளைவு, விப்புருதியுமுண்டாகும்.

12. ஏழேகாலுக்கு இடுப்பில் வாயுவிக்குத்து, வலி, பிடிப்பு, சிரசில் பித்தம், கண்வலி, பாண்டு, சோகை, கைகால் காந்தல், அதிக நித்திரையும் உண்டாகும்.

13. ஏழுக்குப் பித்தம் சிரசிலேறும், வாயால் ரத்தம் விழும், சயம், கால், கைகாந்தல், சிலந்திபுண் உண்டாகும், உஷ்ணமிகும், மலந்தீயும்.

14. ஆறேமுக்காலுக்கு அண்டவாயு, கண்வலி மயக்கம், மூன்று வருடத்தில் நீரடைப்பு, கல்லடைப்பு, கைகால் காந்தல், வலி, உளைவு, முகத்தில் வியர்வை உண்டாகும்.

15. ஆறரைக்கு உடலில் வெதுப்பு, குத்தல், தாகம், அன்னத்துவேசம், சூடு, வாதமுமுண்டாகும்.

16. ஆறேகாலுக்கு முக்கிராணி, புளியேப்பம், சக்தி, துடை வாழை, அரைச்சோறுபோற் கழிதலும் உண்டாகும்.

17. ஆறுக்கு இளைப்பும், நெஞ்சிற் கபமும் உண்டாகும், இருபது நாளில் மரணம் உண்டாகும்.

18. அஞ்சேமுக்காலுக்கு சன்னியுண்டாம், மயக்கம், மூர்ச்சையுமுண்டாம், கஞ்சியே குடித்தாலும் மரணம் நிச்சயமாம்.

19. அஞ்சரைக்குப் பிணிகள் அதிகமாகி, விஷம் சிரசிலேறி, மூக்கு பஞ்சு போலும், பல் கறுப்பாயுமாறிப் பத்து நாளில் சாவான்.

20. அஞ்சேகாலுக்குப் பாதமும் உடம்பும் குன்றிப் போய் தூங்குவது போலிருந்து மறுநாள் மரணமாகும்.

21. அஞ்சுக்கு உடல் வெளுத்துக் குளிர்ந்திடும், தொண்டையில், உடல் பதறிச் சாவது நிச்சயம்.

22. நாலேமுக்காலுக்கு உடலின் நிலைமையை நாம் அறிவது முடியாததாகும். நாவறண்டு நடுக்கம் உண்டாகும். ஏழு நாளில் மரணம் நிச்சயம்.

23. நாலரைக்கு உடல் வீங்கும், கண் குழிவிழும், ஒன்பது நாளில் சாவாம்.

24. நாலேகாலுக்கு நடுக்கமுண்டாகும், காலுங்கையும் அசந்துபோகும், முகங்கறக்கும், நெடுமூச்சு வாங்கும், இரண்டு நாளில் மரணமாம்.

25. நாலுக்கு முகத்தில் மயக்கம், கால்களில் வீக்கம், சாவது அஞ்சு நாளில் திண்ணமாம்.

26. பதினொன்று விரற்கடையிருப்பின் உடல் பருத்திருக்கும், வியாதியால் சாவு நேர்ந்தாலொழிய காலனுக்கும் நமனுக்கும் சாகானொரு நாளும் என்றறிக.

## *கிருமிகள் (புழுக்கள் அல்லது பூச்சிகள்) பற்றிய விளக்கம்*

### பூச்சிகளுண்டாகும் விதம்

***அகக்காரணம் :*** உடற்குள் பக்குவாசயத்தையும் குடலையும் பற்றி பெரிய பூநாகம், நீர்ப்பாம்பு (தட்டைப்புழு), நெல்முளை (கொக்கிப்புழு), சன்னிக்கிருமி, வெண்மைக் கிருமி என்ற பலவிதக் கிருமிகளும், கிரைக்கிருமி, கெர்ப்பப் புழு, திமிர்ப்பூச்சி முதலிய கிருமிகளும் உண்டாகும். இவை மலத்தைப் பற்றியும் உண்டாகும் என்பர். மலம், சிறுநீர், ரத்தம், சுக்கிலம், சீழ், சளி, வியர்வை இவற்றால் உற்பத்தியாவதுண்டு.

***புறக்காரணம் :*** இது உடலின் அசுத்தையும், அழுக்கையும் காரணமாகக் கொண்டு உண்டாகும் என்பர். இவ்விதமாகத் தலையில் உண்டாவதைப் பேன் என்றும், உடலின்மேல் உண்டாவதைச் சீலைப்பேன் என்றும் வழங்குவர். இவை கடிப்பதால் தினவு, தடிப்பு, சிறிய கொப்புளங்கள் முதலியன உண்டாகும்.

வயிற்றுள் கிருமிகள் இருப்பதால் பலவிதமான குறிகுணங்கள் விளைவிக்கும்.

குடற்கிருமிகளின் பொதுக்குறி குணங்கள்

உடல் நிறம் மாறல், சுரம், வயிற்றுவலி, மார்பு நோய், வெளுப்பு நோய், ஊதல் நோய், இருமல், வாந்தி, கபநோய்,

அருசி, அசீரணம், பேதி, வாய் நீருறல், பிரேமை, சூலை, தொப்புளைச் சுற்றி வலி, வயிற்றுப்பல், தூக்கத்தில் பல் கடித்தல், மாலைக்கண், குழந்தைகளில் இசிவு (தெற்கத்திற்காணை) உண்டாகும்போது பெரிய நாகப் பூச்சிகள் மேல்நோக்கி தொண்டையில் ஏறிச் சென்று வாந்தி செய்ய முடியாதவாறு சுவாசக்குழல், நாகித்துவாரங்கள் இவற்றில் நுழைந்து அடைத்து மரணத்தை உண்டாக்குவதுண்டு. குழந்தைகள் நித்திரை செய்யும்போது இவ்விதம் மரணம் சம்பவிக்கக் கூடும்.

அன்றியும் குடல் கிருமியினால் கிராணி, பவுத்திரம், மூலம், மலக்கட்டு, தேக காங்கை ஆகிய நோய்களும் உண்டாகும். மற்றும் சிலவகைக் கிருமிகளால் சுரம், மயிர் உதிர்தல், குட்டம், சொறி, சிறங்கு, படை, கரப்பான் முதலியன பலான சரும ரோகங்களை உண்டாக்கி நிறமாறச் செய்யும். குறை நோயையும் விளைவிக்கும்.

### குருநாடி நூலில் கூறிய கிருமியும் அதனால் உண்டாகும் நோய்களும்

1. "சங்கையில் விஷகரப்பான் வருமாறேது
சாரமுடன் கிருமி விழுந்தன்மையேது
பொங்கியங்கே யூனுருகும் கிராணியேது
பூராயமானதொரு பவுத்திரமேது
தங்குமுளமூலமது தளர்வதேது
தாராளமாய் மலமுந்தளர்வதேது
கங்குலதுபோல் வருத்துங்காந்தலேது,
கருத்துடனேயிந்த வகைக் கருமங்கூறே."

2. "உட்டிணமே அதிகம் வருமிந்திரிய போகத்தா
லூனுருகியத்திலே மேவு கொண்டு
நட்டணமாய் வெந்ததொரு மச்சை தன்னில்
நாட்டமிட்ட கிருமியதுயணுகும்போது
மட்டுடனே கிருமியெல்லாம் பறந்தங்கேறி
வகையுடனே மாங்கிஷத்தைத் துளைத்துமேஷம்
திட்டமுடன் விடகரப்பான் பறந்துமேலே
தினவுடனே பரபரத்துச் சொறியுண்டாமே."

3. "சுக்கிலந்தானுட்டிணத்தால் வேவுகொண்டு
சுகமான மலமது தான் கட்டுப்பட்டால்
அக்குலத்தில் மலமிதிலே நாற்றமுண்டாம்,
அழுகியங்கே வெந்துருகி வாழும் போது
சிக்கி மலந்தான் புழுத்துக் கிருமியுண்டாந்
தீவனங்கள் சென்றதினால் கிருமியெல்லாம்
புக்கி அங்கே பார்த்த திரிச்சரீரமெல்லாம்
பரபரத்து ஊத்தோறும் பசுமையாமே."

4. "வயல் தனிலே பூதாகமண்ணைத்தானே
வருந்தியது புத்துப்போல வத்தையாகும்
பயல்மொழி யீர்தேகத்தில் கிருமிதானே
பரந்துருகி குட்டம்போல் புள்ளி காணும்
மயல துவுங்கிருமியுந்தான் நடந்து புக்கில்
மேனியது சரசரென வெடித்துப் புண்ணாம்
கயல் பெருகும்குழல் மடவீர் சொல்லக கேளீர்
கரகரத்துச் சொறி பெருகுங் கரப்பான் தானே."

(இதன் பொருள்)

விஷகரப்பான் உண்டாகும் விதமும், கிருமி விழும் தன்மையும், கிராணி, பவுத்திரம், மூலம், மலக்கட்டு, தேககாங்கை முதலிய பிணிகள் உண்டாகும் வழியை ஆராயுமிடத்து உஷ்ணமே காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

ஸ்திரீ சங்க தோடத்தினால் அத்தீயில் சூடு கொண்டு கொழுப்பு, தசையாவற்றையும் தாக்கி வேக்காடு அதிகமாவதால் அவற்றில் கிருமியுண்டாய்த் துளைத்து எங்கும் பரவி விடக்கரப்பான் என்னும் நோயை தேகமெங்கும் உண்டாக்கித் தினவுடன் சொறியையும் விளைவிக்கும்.

அதே உட்டிணகாரணத்தினால் மலம் தீய்ந்து கட்டுப்பட்டு நாற்றமுண்டாய் அழுகிக் கிருமிகளுண்டாய் நாம் உண்ணும் உணவிலேயே வளர்ந்து மேற்கண்ட நோய்களைப் பிறப்பிக்கும்.

குட்டம், வெடிப்புண், சொறி, கரப்பான் கிராணி, பகந்திரம், சுக்கிலப் பிரமேகம் முதலிய அனேக நோய்களுக்குத் தேகத்தில் உண்டாம் கிருமிகளும் காரணம் என்பர்.

மாரி, வாந்தி நோய் முதலிய பல பிணிகள் கிருமியால் விளையக்கூடியது என நூல்களில் கூறப்பட்டிருக்கின்றது. கிருமியால் உண்டாகும் நோய்கள் முக்கியமாய் ஆறுவகை என இரத்தினச்சுருக்க நாடியில் கூறப்பட்டிருக்கிறது. அவை மேற்கூறியுள்ள வயிறு பொருமல், புழுக்கடி, பவுத்திரம், சோகை, குட்டம், சுக்கில பிரமேகம் என்பவைகளாம்.

### *2. கிருமியாலுண்டாகும் பவுத்திரம் வரலாறு*

1. "பவுத்திரந்தான் வருங்குறியைப் பகரக் கேளீர்
பாதிலுள்ள உட்டிணத்தால் மலந்தான் சிக்கி
குவிந்து நின்று சீரடக்கிக் கொள்கையாலே
கொண்டிறங்கிச் சிறு நாதன் கிருமியாலே
தவிர்த்திருக்குங்கிருமி சென்று மூலந்தன்னில்
தட்டகத்தில் தண்டுமுதல் குத்திருக்கும்
குவித்திருக்குமுதரமட்டு மலர்ந்து நின்று
குழங்குலாயரிக்குமதன் குறியதாமே."

2. "பத்திநின்ற கிருமிசென்றுயரித்ததாலே
பவுத்திரந்தான் பலாக்காயின் முள்ளுபோல
குத்துடனே நொந்துகாத்து கிருமியுண்டாங்
கொப்பளித்துச் சீழ்ரத்தஞ் சலமுண்டாகும்
தத்துவமும் மர்மமுஞ்சிறிது நாளிலேதான்
தவழுமது கிருமியெல்லாம் தட்டில் புக்கும்
சுத்தி நின்ற மூலத்தில் முறையே போல
தோன்றி நின்ற விருத்தியினால் சலமுண்டாமே."

என்பதனால், பகந்திரம் என்னும் பவுத்திரம் அல்லது பவுந்திரம் உண்டாவதற்குப் பலான காரணங்களிருப்பினும், பூமியின் உட்டிணத்தால் தேக உட்டிணம் அதிகரித்து, மலம் தீய்ந்து கட்டுப்படும். மலத்தை வெளியாக்காமல் அடக்கிவைக்கும்

கொள்கையாலே சிறுநாதன் என்ற கிருமியுண்டாகி, அவை கீழிறங்கி மூலந்தன்னில் (அபானத்தில்) கடித்து அரித்துவிடும் எனவும், அவ்விதம் கிருமிகள் சென்று தசைகளையும் ரத்தக் குழாய்களையும் அரித்தால் பலாக்காய் முள்ளுபோல பவுத்திரங்கள் உண்டாய்க் குத்தலுடன் நொந்து உளைந்து மேலும் கிருமிகளுண்டாய்க் கொப்பளித்துச் சீழ், ரத்தம், நீருமுண்டாகித் துவாரமுண்டாய் நீர் வடிந்துகொண்டிருக்குமென அறிக.

### *3. கிருமியாலுண்டாகும் குட்டம் வரலாறு*

"குட்டமதுவிட கரப்பான் விடநீர்சூலை
சுரோணிதத்தால் தாதுகெட்டுத் தடிப்புண்டாகும்
மட்டறமே கிருமிசென்று மருவும்போது
வகையாய்க் கிருமியுட விடநீர் சென்று
குட்டமுடன் தேகமெல்லாம் பறக்கும்போது
குழிகுழியாய்க் கிருமியினீர்க் கொள்ளும்புள்ளி
தட்டறவே கிருமியுட நீரால்வந்த
சகலகுட்டம் விடகரப்பான் சாற்றலாமே."

### *கிருமியால் வரும் நோய்கள் (வேறு) குருநாடி நூல்*

"கிருமியால் வந்ததோடம் பெருகவுண்டு
கேட்கலதின் பிரிவதனைக் கிரமமாக,
பொருமிவரும் வாயுவெல்லாங் கிருமியாலே
புழுக்கடிபோல் காணுமது கிருமியாலே
செருமிவரும் பவுத்திரங்கள் கிருமியாலே
தேகமதில் சோகைக் குட்டங் கிருமியாலே
துருமிவருஞ் சுரோணிதங் கிருமியாலே,
சூட்சமுடன் கிரிசைப்பால் தொழில் செய்வீரே."

என்பதனால்; பொருமல், வாய்வு, புழுக்கடி, பவுத்திரம், சோகை, குட்டம், சுக்கிலப்பிரமேகம் ஆகிய ரோகங்கள் கிருமியால் ஏற்படுவதுண்டு. சோகை எனக்கூறியதால் வெளுப்பு (பாண்டு) நோயையும் குறிக்கும். அன்றியும் குன்மம், கயநோய், சுரம்,

பாண்டு, மலடு, பெருவயிறு, மகா என்பதினால், விடகரப்பான், விடநீர்சூலை, சுக்கில நட்டம் இவற்றால் தாதுக்கள் கெட்டுத் தடிப்புண்டாகும். அதில் கிருமியுண்டாய், கிருமியுடன் விஷநீர் தேகமெல்லாம் பரவி, குழிகுழியாய்ப் புள்ளிபுள்ளியாய்க் கிருமியுடன் விடநீரால் குட்டம், விடகரப்பான் உற்பத்தியாகும் என்றறிக.

## *கிருமியால் உண்டாகும் கிராணி வரலாறு*

"கேளுமினிக் கிருமியால் வந்தகிராணியைத்தான்
கிருபையுடன் மூலத்தில் வேவுகொண்டு
நாளுமது கிருமியதின் குடலைச் சுற்றி
ரத்தமுண்டாஞ் சுரோணிதத்தால் மலமுங்கட்டி
மீளுவது வாயு சென்று விரவித்தாலும்
விரவியங்கே கலந்திருக்கில் கிருமியெல்லாம்
கோளுமது பலவிதமாய்க் கழியும் பாலர்
குடிகெடுத்த கிருமிசெய்த கிராணிதானே."

என்பதனால்; மூலத்தில் சூடுகொண்டு கிருமியுண்டாய்க் குடலைச் சுற்றிலும் வளைந்துகொண்டு ரத்தத்தையும், சுரோணிதத்தையும் கொடுத்து மலச்சிக்கலை உண்டாக்கி, அப்பால் வாயு மிகுந்து கலக்கும்போது பலவிதமான கழிச்சலை உண்டாக்கும் என அறிக.

"சுக்கிலத்தைத் தானரிக்குங் கிருமிசென்று
துடிக்கையுடன் பரபரத்துச் சொறிந்தளூறும்
சிக்கிமலஞ் செரித்துவிழுங் கிருமியாலே
சீரென மூலமெல்லா மழுகிப்போகும்
தொக்குகின்ற விஷநரம்பு வீணாந்தண்டு
சூழ்ந்திருக்குங் கிருமிசென்று துன்னித்துன்னி
எக்குகின்ற பிரமேகம் எழும்புந்தானே."

என்பதால், கிருமியானது சுக்கிலதாசயம் செய்து அதனை அரித்துப் பரபரத்து ஊறும், மலச்சிக்கலுடன் மூலம் எல்லாம் கெட்டு வீணா தண்டிலுள்ள விஷ நரம்புவரை கிருமியானது சென்று துன்னித்துன்னி அதனையுங் கொடுத்து சுக்கிலப் பிரமேகத்தை விளைவிக்கும். சுக்கிலப் பிரமியம் என்றிருப்பது பொருத்தமாகும்.

*பிணி தொகுப்பு*

(இரத்தினச் சுருக்கம் நாடி நூல்)

1. "நாளடா நாற்பத்து நாலுநூறு
நயமுடனே நாற்பத்து எட்டுரோகம்."

2. "பாரப்பா வாதமது எண்பத்து நாலு
பருக்கவே பித்தமது நாற்பத்தி எட்டு
தாரப்பா சேத்துமங்கள் தொண்ணூ ற்றாறு
தனுர்வாயு முந்நூறு சயமோ ஏழு
வேரப்பா பெருவயிறு எட்டதாகும்
வெகுசூலை யிருநூறு பாண்டுபத்து
நாரப்பா நேந்திரநோய் தொண்ணூ ற்றாறு
நறுசிலந்தி யறுபதுவுக்குன்ம மெட்டே."

3. "எட்டப்பா சந்நிவகை எழுபத்தாறு
எழுவையுடன் பொருகழலை தொண்ணூற் றைந்து
மட்டப்பா சுரமதுவே எண்பத்தைந்து
மகோதரநோய் ஏழுக்கும் சிரசில் வீக்கம்
முட்டப்பா அஞ்சுக்கு முடம்பில்வீக்கம்
உதிரவே பதினாறு பிளவைப்பத்து
குட்டப்பா படுவனது பதினொன்றாகும்
குழுமிநோய் ஏழுக்கும் பீலிஎட்டே."

4. "பீலியுடனுறு வசியமஞ்சதாகும்
பெரியகரப்பான் தொண்ணூறு கெண்டேபத்து
கால்நோய் குட்டமது இருபதாகும்
கதிர்வீச்சு மூன்றாகுந் திட்டையஞ்சு
சேவிநோய் சோபமத பதினாறுக்கும்
சொல்லிசுவு ஆறுக்கு மூர்ச்சை ஏழு,
வேலிநோய் படுவதிலே நாற்பத்தாறு
வெழுமூல மொன்பதாங் கமலநோய் பத்தே."

5. "பத்தான வீனிசங்குடி விஷமெழுரத்தாறு
பிணிநாக்குப்பல்லுநோய் எழுத்தாறு
கத்தாகுங் கிராணியது யிருப்பத்தைந்து
கண்ணுடனே மலையது இருபதாகும்
கொத்தாகுமதி சாரமிருபத் தைந்து
கொள்கட்டி பனிரெண்டு கிருமியாறு
முத்தாகு மூட்டுநோய் முப்பதுக்கும்
முதிர்ந்த நோய் இருபதுசத்தி அஞ்சே."

6. "அஞ்சாகுங் கல்லடைப்பு எண்பதாகும்
அதிர்வாயு தொண்ணூறு திமிர்நோய் பத்து
மஞ்சாகும் விப்புருதி பதினெட்டுக்கும்
வளர்மேக மிருபத்தோர் நீரோவைந்து
பஞ்சாகும் விடபாகம் பதினாறுக்கும்
பகர் காதுநோய் பத்து விக்கல்பத்து
துஞ்சாகு மரோசியங்கள் அஞ்சதாகும்
சொல்மூக்கு நோய்பத்து உலகத்தாரே."

7. "குத்தாங் கடிதோஷம் ஐநூறுக்கும்
குறிகாயங் குத்துவெட்டு எழுநூறுக்கும்
பத்தாகுங் கிரந்தியுமே நாற்பத்தெட்டு
பறக்கின்ற பொறிவிடமோ எண்ணூற்றுக்கும்
முத்தாகும் நாள்கிட்டும்பிற நீர்க்கோர்வை
முதிரவே யிருநூறு நோய் நூறு
கொத்தாகும் பிள்ளைநோய் நூறதாகும்
கூறினேன் வியாதியுட விவரந்தானே."

என்பதினால் அகத்தியர் இரத்தினச்சுருக்கம் நாடியின் பிரகாரம் மொத்தம் *4,448* பிணிகள் என்றும், அவற்றைப் பின்வரும் விவரப் படிக்குப் பிரித்துள்ளதாகவும் மேற்கண்ட செய்யுளில் கூறப்பட்டிருக்கிறது. மொத்தக் கணக்கில் சற்று வித்தியாசம் இருப்பதையும் காண்கிறோம்.

*1.* வாதநோய் - *84*

*2.* பித்தநோய - *48*

3. சேத்தும நோய் - 96

4. தனுர்வாயு - 300

5. காசநோய் - 7

6. பெருவயிறு - 8

7. சூலைநோய் - 200

8. பாண்டு - 10

9. கண் நோய் - 96

10. சிலந்தி - 60

11. குன்மம் - 8

12. சந்தி - 76

13. எழுவை, கழலை - 95

14. சுரம் - 85

15. மகோதரம் - 7

16. தலையில் வீக்கம் - 5

17. உடம்பு வீக்கம் - 16

18. பிளவை - 10

19. படுவன் - 11

20. கொப்புள் நோய் - 7

21. பீலி நோய் - 8

22. உறுவசியம் - 5

23. கரப்பான் - 90

24. கெண்டை - 10

25. குட்டம் நோய் - 20

26. கதிர் (அலகு) வீச்சு நோய் - 3

27. திட்டை (பல்லீறு) நோய் - 6

28. சோபை - 16

29. இசிவு - 6

30. மூர்ச்சை நோய் - 7

31. படு (குலை) நோய் - 46

32. மூலரோகம் - 9

33. அழல்நோய் - 10

34. பினிசம்
35. கடிவிஷம் } = 76

36. நாக்கு, பல்நோய் - 76

37. கிராணி - 25

38. மாலைக்கண் - 20

39. அதிசாரம் - 25

40. கட்டி -12

41. கிருமி - 6

42. மூட்டு (சீல்) நோய் - 30

43. முதிர்ந்த நோய் - 20

44. சத்தி (வாந்தி) - 5

45. கல்லடைப்பு - 80

46. வாயுவு ரோகம் - 90

47. இமிர் நோய் - 10

48. விப்புருதி - 18

49. மேகநீர் - 21

50. நீர்ரோகம் - 5

51. விஷ பாகம் - 16

52. காது நோய் - 10

53. விக்கல் - 10

54. அரோசியம் - 5

55. மூக்கு நோய் - 10

56. கடிதோடம் - 500

57. காயம், குத்து, வெட்டு - 700

58. கிரந்தி - 48

59. பொறி (பறவை) விஷம் - 800

60. புறநீர்க்கோவை - 200

61. துடி (உதடு) நோய் - 100

62. பிள்ளை நோய் - 100

ஆக மொத்தம் = 4,448

குறிப்பு :- இந்தக் கணக்கின்படி 34 நோய்கள் அதிகம் தெரிவதில், பித்தநோய்-42, சுரம்-64 என வைத்துக்கொண்டால் அதில் 27 குறையும். அப்படியிருந்தும் ஏழு அதிகமாக இருக்கிறது.(4,445). இதனைச் சுருக்கி ஐநூறு தொகையாகவும் மற்றும் பல கணக்காகவும் பற்பல நூலாசிரியர்கள் நோய்களை வகுத்துள்ளார்கள்.

இதுபற்றியே :-

"வாளடா பெருநூலைச் சுருக்கி யானும்
வகையாக ஐநூறு தொகையாகச் சொன்னேன்."

என்பதாக இரத்தினச் சுருக்க நாடியில் கூறியுள்ளார்.

எவ்வகையாக இருப்பினும், தற்கால நிலைமைக்கு ஏற்றாபோல எழுதியுள்ள சித்தமருத்துவ நூல்களில் காணப்படும் நோய்களின் தொகுப்பை அறிந்து, அவற்றின் குறி குணங்கள் எண்வகைத் தேர்வுகளால் அறிந்துகொள்ளும் சிறந்த வழிகளை மாணவர்கள் கவனித்துக் கற்றுக் கொள்ளல் சிறந்த சாதனமாகும். இன்ன நோய்கள் என்பதை எளிதில் அறிந்து பரிகாரம் செய்ய வசதியாக இருக்கும்.

***பிணிகளின் முதற்காரணம்***

சிற்சில நோய்களுக்கு முதற்காரணம் கூறுகிறார்

(தேரையர்)

1. "வாதமலாது மேனிகெடாது - வளர்பித்தத்
தீரலாது சத்தியடாது - சேத்துமத்தின்
கோதமலாது விக்கலெடாது - குடற்றன்னில்
சீதமலாது சுரமும் வராது - தீரமாமே."

என்பதினால்,

2. "மந்தமலாது வாயுவராது - அலைபித்தத்
தொந்தமலாது மூலம் வராது - தொடர்வாத
பந்தமலாது குன்மம் வராது - பகர்பித்த
விந்தையலாது மேகம் வராது - தீரமாமே."

3. "அசீரணமன்றிச் சுரம் வராது - திரிதோடக்
காரணமின்றிச் சந்நி வராது - கபமான
நீரதுவுமின்றிச் சோரை வராது - நெடுவாதச்
சார்வதுவுமன்றிச் சூலை வராது - தவறாதே."

4. "அபத்தியமின்றித் தோடவிகாரமு - மணுகாது
அபத்தியமின்றி ஔடதினீனமு - மணுகாது
கபத்தினையன்றிக் காசசுவாசங் - காணாது
விபத்தினையன்றி வியர்வை குளிர்ச்சி - வராதே."

(இதன் பொருள்)

1. தேஜஸ் (தேகத்தின் ஒளி) என்னும் அழகும், வன்மையும் கெடுவதற்கு முக்கியமான முதற்காரணம் வளிக்குற்றமேயாம்.

2. சேத்துமவாத தொந்தமலாது விக்கல் நோய் வராது.

3. ஆமம் என்னும் சீதம் துடலில் (அன்னாயத்தில்)

4. மந்தம்யில்லாது வாயுமேகம் உண்டாகா.

5. வாதபித்தத் தொந்தமலாது மூலரோகம் உண்டாகா.

6. வாத பந்தமில்லாமல் குன்மம் வராது.

7. பித்தமிகுதியில்லாமல் மேகம் உண்டாகா.

8. அசீரணம் என்னும் மந்தம் அல்லாது சுரம் வராது.

9. முக்குற்றங்களும் ஏககாலத்தில் குற்றமடையாமல் சந்நி பாதம் வராது.

10. ஐயமென்ற நீர்ச் சேர்க்கையின்றிச் சோபை என்னும் ஊதல் நோய் உண்டாகா.

11. வளிக்குற்றமின்றிச் சூகை நோய் உண்டாகா.

12. அபத்தியமின்றிச் சூகை நோய் உண்டாகா.

13. கபமிகுதியல்லாது காசம், சுவாசம், சயம் இவை உண்டாகா.

14. அதே கபமில்லாது வியர்வையும் குளிர்ச்சி என்னும் சீதளமும் இல்லை என்பர்.

## ஒட்டு நோய்கள் (CONTAGIOUS DISEASES)

வேறு பெயர்கள் - தொந்த நோய், தொற்று நோய் என்பன.

இயல் - ஒட்டு நோய் என்பது கீழ்கூறப்பட்ட நோய்களில் ஏதேனும் ஒன்று ஒருவரைப்பற்றியிருக்கும்போது அந்த நோயினனை மற்றவர்கள் நெருங்கினாலும், தொட்டாலும் அவர்களுக்கு அந்த நோய் தொடரும் என்பர். தொற்று நோய் உண்டாகக்கூடிய அணுக்கள் காற்றிலும், நீரிலும், உணவிலும் கலந்து உடலுக்குள் சென்றும் தொற்று நோய்கள் விளைவிக்கும் என அறிக.அங்ஙனம் தோன்றக்கூடிய நோய்களாவன : அம்மை, வாந்திபேதி, மகாமாரி என்னும் பிளேக் நோய், சிற்சில சுரங்கள், சீதபேதி, கண்நோய், வலிநோய், பெருநோய், சிறங்கு, சொறி முதலியன.

குறிப்பு : இந்நோய்களைப் பற்றிய விவரங்கள் யாவும் ஆங்காங்கு விளக்கப்படும்.

***உயிரனல் அல்லது உயிரக்கினி அல்லது சீவாக்கினி அல்லது சூக்கியனல் என்பதென்ன ?***

"ஆதாரமான அழல் உஷ்ணமாச்சு
யணுகி வந்தபல பிணிக்கு மிறையேயாச்சு
பூதாதிதங்களுக்குத் துணைவனாச்சு
பொருந்தியதோர் தசவாயுக் கன்னையாச்சு
சூதான கருவிகளுக்குப் பிதாவுமாச்சு
சூட்சமுள்ள பிராணனிருப்பிடமுமாச்சு
வாதாதி உடலுயிர்க்கு விளக்குமாச்சு
மகத்தான வக்கினியாற் சுரமுமாச்சே."

என்பதினால்,

1. உடலுக்கு ஆதாரமாயுள்ள வாதாதி முத்தோடங்கள், ஏழு உடற்றாதுக்கள், மலாதிகள், ஞானேந்திரயம், கருமேந்திரியம், மனசு, தசவாயுக்கள், தசநாடிகள் ஆகிய இவையாவும் சேர்ந்து உருவகப்பட்ட உடல் நன்னிலையல் இருந்தற்குரிய அளவில் இருக்கும் "அழல் உயிரானலாகும்" சுருங்கக் கூறில் ஸ்தூல சூட்சம் பஞ்ச பூதமயமான உடல், உயிர் சேர்ந்திருக்கப்பட்ட தேகத்தை நன்னிலையில் வைத்திருக்கப்பட்ட "அழல்", "உயிரனல்" அல்லது "உயிரக்கினி" அல்லது "சீவாக்கினி" எனப்படும்.

2. உடலில் அமைந்துள்ள வாதாதி முத்தோடங்களை அனுசரித்து வருகின்ற நோய்கள் பலவற்றிற்கும் தலைமை உடையது சுரமாதலால், இதனை ("அழல்" என்னும் "சுரத்தை") "பல பிணிக்கும் இறை" என்றார். இதனால் சுரமின்றிப் புலப்படும் நோய்களும் சில உண்டு என்பது தெரியவருகின்றது.

3. மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களுடன் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் தன்மாத்திரை ஐந்தும் கூடிய "புரியட்ட காயம்" ஆகிய எட்டுக்கும் "உயிரனல் துணைவனாக" இருக்கிறது.

4. உடலிற் பொருந்தியுள்ள வாயு ஒன்றை ஐந்தாகவும், அவற்றிற்கு அனுகுணமாக உபவாயுக்கள் ஐந்தையும் பிரித்துத் தோற்றுவித்து அன்னைபோல் பாதுகாப்பதும் உயிரெனலே ஆகும்.

5. சூதாடுகின்ற சொக்கட்டான் காய் அடிக்கடி நிலைமாறுதல்போல மாறுகின்ற நவக்கருவிகள் (அதாவது வளி, அழல், ஐயம் இம்மூன்றினால் ஏற்படும் நவத்துவாரங்கள்), இன்னும் உயிர்ப்புக்கு ஆதாரமாகிய மற்ற கருவிகள் அதனதன் தொழில்களைப் புரிவதற்கு உயிரனல் "தந்தையைப் போல்" ஆதாரமாயிருக்கின்றது.

6. நுண் ஊரவமாகிய பிராணன் என்கின்ற உயிர் தங்கி இருந்ததற்கு உயிரனலே முக்கிய காரணமாயிருக்கின்றது. அதாவது இருப்பிடமளிக்கிறது எனவும் சொல்லாம்.

7. புறப்பொருளை ஒரு விளக்கு வெளிச்சத்தைக் கொண்டு அறிவதுபோல "உயிர் உடலைவிட்டு நீங்கும், நீங்காது என்பதை அறிவதற்கு" உயிரனல் ஒரு விளக்கைப்போல் இருக்கின்றது.

8. உயிரனல் தன்னிலை விட்டு மாறி புறநிலைப் புறங்களில் பலவுமாயின் சுரம் என்ற பெயரைப் பெறும்.

குறிப்பு :- உயிரனல் - அழல் என்னும் பித்தநாடியைக் குறிக்கும்.

# நாடியும் நோய்கணிப்பும்

## முக்கிய கவனிப்பு

அனுபவசாலியான திறமையுள்ள வைத்தியன் நாடியைப் பரிசோதிக்கும்போது நிர்மலசித்தனாய் ஆத்துமாவையும், மனதையும் சாந்தி செய்துகொண்டு நோயாளியின் வலது கையைத் தன் மூன்று விரல்களால் பிடித்துக் குணாகுணங்களைத் தெரிந்து கொள்ளவேண்டியது.

பெண்களுக்கு நாபிமேல் முகமாகவும், ஆண்களுக்குக் கீழ் முகமாகவும் இருப்பதினால் பெண், ஆண்களுக்கு நாடிகள் வித்தியாசமாக இருக்கும், ஆகையால் பெண்களுக்கு இடக்கையிலேயும், ஆண்களுக்கு வலக்கையிலேயும் நாடியைப் பரிசோதிக்கத் தகுந்தது.

நோயாளியின் நாடியைப் பலதடவை விட்டுவிட்டுப் பார்த்து புத்தியால் மூன்று தரம் பரிசோத்தித்து நோய் இத்தகையது என்று நிர்ணயம் செய்யவேண்டும்.

ஆயுள், உடல்வலிமை, தன்மை, சுரவிமோசனம் இவைகளைப் பாதநாடியைக் கொண்டு தெரிந்துகொள்ள வேண்டும். எவரெவர்களுடைய நாடியானது கையிலாவது, கண்டத்திலாவது பட்டும் படாமலும் தன் இருப்பிடத்தைவிட்டுப் பேசும் பட்சத்தில் ஆயுள் குறையும் என்று நினைக்கவேண்டும்.

பித்தம், கபம், அசீர்ணம், ஆத்மகுணம், சுரதீவிரம், பசி, கொடியவாதம் இவைகளை ஹஸ்த நாடியால் பரீட்சிக்கவும்.

விருந்து உண்டதால் உண்டாகும் தோஷ சுரம், தாபம், ஆயாசம், இளைப்பு, பயம், சோகம், கோபம், மைதுனத்தால் உண்டாகும் சுரம் (அபிகாதம்) இவைகளைக்கண்ட நாடியைக் கொண்டு அறிந்துகொள்ளவும். மரணம், ஆயுள்குறைவு, நாமம், நேத்திர நோய், கர்ண நோய், முக நோய் இவைகளை நாசிகா

நாடியைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும். குளித்தவன், உணவு உட்கொண்டவன், சரீரத்தில் எண்ணெய் பூசிக் கொண்டவன், பசியை அறிந்துகொள்ளாதவன், தாகமாக இருக்கிறவன், தூங்குகிறவன் இவர்களுக்கு நாடி தெரியாது.

நாடி ஒரு சமயத்தில் சலித்துக்கொண்டும், ஒருசமயம் சூட்சுமமாய் ஆடிக்கொண்டும், அதோடு காணாமலும் திரும்பி அகப்பட்டும் இருந்தால் வைத்தியன், அப்படிப்பட்ட வியாதி அசாத்தியம் என்று தெரிந்து தூரத்தில் விலகிவிடவேண்டும்.

எந்த நோயாளியின் நாடியானது அதிசூட்சுமமாயும், அதிவேகமாயும், சீதளமாயும் நடக்கிறதோ, அந்த நோயாளி சிறிது ஆயுளை உடையவன் என்று தெரிந்துகொள்ளல் வேண்டும். எந்த நோயாளியின் நாடியானது மின்னல்போல் தெரிந்தும் தெரியாததுமாகக் காணப்பட்டாயும் நாடிகளுக்கு ஏற்பட்ட காலமல்லாத அகாலங்களில் மின்னல்போல் சலித்தாலும் அப்படிப்பட்ட நோயாளி எமலோகத்திற்கு ஏகுவான்.

### நாடி ரூபம்

வாயு காற்றோடு சம்பந்தப்பட்டு வாதம் என்று பெயர் பெற்று மலத்திலிருக்கும். இது மானிட சரீரத்தின் அங்கங்களில் பித்த சீதளத்தினால் பீடிக்கும்போது அங்குள்ள அவயவங்களில் கேடடைந்து இடத்தைப்பெறும். இது கருப்பு நிறமுடையதாக இருக்கும்.

### *1. சர்ப்பநாடி அல்லது மேகநாடி*

சர்ப்பத்தைப்போல் வளைந்து ஜாடை காட்டும்.

### *2. மீன் நாடி*

மீன் தண்ணீரில் நீந்துவதுபோல் நாடி ஜாடை காட்டும்.

### 3. அட்டை நாடி

அட்டை மனித சரீரத்திலுள்ள இரத்தத்தையும் கட்டிகளில் உள்ள துர்நீர், சீழ் முதலியவைகளையும் உரித்து பருத்துக் காண்பதுபோல் மற்ற நாடிகளுடைய பலத்தை இழுத்துக் கொண்டு தடித்திருப்பது போன்ற ஜாடை காட்டும்.

### பித்தம்

பித்தம் என்றால் நெருப்பு. இது மஞ்சள் நிறமான திரவ பதார்த்தம், இது மூத்திரத்தில் சம்பந்தப்பட்டது. இது தீவிரமாயிருக்கும்போது அவயவங்களில் ஆவியை உண்டாக்கி (உஷ்ணம்) அங்கங்களின் இயற்கையை மாற்றிவிடும்.

1. தவளை நாடி : தவளை தண்ணீரில் கால்களை விரித்துக் கொண்டு எப்படி ஓரிடத்திற் குதிக்குமோ அதுபோன்ற ஜாடை காட்டும்.

2. காக நாடி : ஆகாயத்தில் பறக்கும்போது எப்படி இறக்கையை விரித்துக்கொண்டு ஆட்டுமோ அதுபோன்ற ஜாடை காட்டும்.

3. கிளி நாடி : இந்த கிளி நாடி என்பது கிளி தன் தலையைப் பக்கங்களில் எப்படித் திருப்பித் திருப்பிக் காட்டுமோ அந்த ஜாடை காட்டும்.

4. மீன்குத்திப் பறவை நாடி : இப்பறவையானது இறக்கையை ஆட்டாமல் பறந்துகொண்டு மீன் பிடிக்கும்போது ஜலத்தின்மேல் உயரத்தில் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு இறக்கையை ஆட்டிக்கொண்டே கீழே ஜலத்தைப் பார்த்துக்கொண்டிருந்து சிவ்வென்று அடியில் ஜலத்தில் பாய்ந்து மீனைப் பிடித்துக்கொண்டு பறந்துசெல்வதுபோன்ற ஜாடை காட்டும்.

*கபம்*

கபம் தண்ணீரோடு சம்பந்தித்தது. இது இரத்தத்திலுள்ள ஜலத்தை சுக்கில ஸ்தானத்தில் சேர்ந்து இந்திரியங்களையும், தாதுக்களையும் குளிர்ச்சி செய்யும் குணமுடையது.

1. **மயில் நாடி** : மயில் பூமியில் நடக்கும்போது அடிக்கொரு தரம் தலையை அசைப்பதுபோலும், அதன் தலையிலுள்ள கொண்டையை நெறித்துக் காட்டுவது போன்ற ஜாடை காட்டும்.

2. **ஹம்ச நாடி** : வாதபித்த நாடிகளிடத்திற்கு அடிக்கடி ஓடிக்கொண்டு படத்தில் கண்டதுபோல் வேறொரு இடத்தில் தலையை ஆட்டிக்கொண்டிருக்கும்.

3. **யானை நாடி** : *(கஜநாடி)* மற்ற இரண்டு நாடிகளையும் அடக்கி பயங்கரமாக ஸ்தம்பித்த ஜாடை காட்டும்.

4. **கோழி நாடி** : *(குக்குட நாடி)* கோழி தன் தலையைத் தூக்கியும், இறக்கையை விரித்துக்கொண்டும் கூப்பிடும்போது, அதன் நிழல் வெய்யிலில் தெரிகிற மாதிரியான ஜாடைக்காட்டும்.

5. மேற்சொன்ன மூன்று நாடிகளின் விவரங்களை முற்கூறிய நாடி ஸ்பரிச சக்திகளின் விவரமாய்க் காண்க

## *நோயுற்ற காலங்களில் கவனிக்கவேண்டிய குறிப்புகள்*
## *ஜன்மம்*

| நாடிகள் | ஸ்திரம் | காலம் | ஆயுள் | க்ஷீணம் |
|---|---|---|---|---|
| வாயு | காற்று | தோஷித்தால் வாதம் | ஜீவத்தை பாழாக்கும் | பந்திக்கும் |
| பித்தம் | அக்கினி | தோஷித்தால் வாதம் | ஜீர்ணத்தை பாழாக்கும் | மூர்ச்சைபடச் செய்யும் |
| கபம் | ஆவி | தோஷித்தால் வாதம் | விசர்ஜனம் செய்யும் | மிருத்யுவை உண்டாக்கும் |

வாத நாடி ஜீவ நாடியாகவும், .பித்தநாடி ஜீர்ண நாடியாகவும், கபநாடி ஆயுள் நாடியாகவும் கவனித்து புத்திசாலியான வைத்தியன் மூன்று நாடிகளையும் ஆபத்துக் காலத்தில் முக்கியமாக பிராணவாயுவின் கதியைக் கொண்டும், மானிட தத்துவ பேதங்களைக் கொண்டும் தெரிந்துகொண்டு சிகிச்சை செய்தும் தவிர ஔஷத சக்தியைத் தெரிந்து உபயோகிப்பதும், தோஷா தோஷங்களைத் தெரிந்துகொண்டு மூலிகா சாதகங்களைச் செய்வதும் சிரேஷ்மமானது.

## *நாடி ஞானபோதினி*

வைத்தியன் நாடியைக் கவனிக்கவேண்டிய காலத்தில் சுட்டு விரல் வாதநாடி என்றும், மத்திய விரல் பித்தநாடி என்றும், மோதிர விரல் கப நாடி என்றும், புருஷர்களுக்கு வலது கையிலேயும், ஸ்திரீகளுக்கு இடது கையிலேயும் உள்ளங்கைக்கு ஓர் அங்குலம் கீழ்மணிக்கட்டிலும் பிடித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும்.

ஓர் மனிதனுடைய நாடியைப் பரிசோதிக்கும்போது மூன்று நாடிகளும் சமகதியாகமிருந்தால் நிரோகி என்று பெயர். வக்ரகதியாக இருந்தால் நோயாளி என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

## *நாடியின் குணம்*

வயிற்றில் ஆகாரமில்லாத காலை வேளையில் வாதநாடி தன் சுவஸ்தானத்தில் நின்று பேசவேண்டும். வாத நாடி அடங்கியும், மித்தநாடி ஏறி இறங்கியும் சூட்சுமமாய் காட்டிக் கொண்டிருக்கும்.

மாலை வேளையில் வயிற்றில் ஆகாரம் சீரணித்திருக்கும் போது கப நாடி தன் இருப்பிடத்தில் நின்று பேசவேண்டும். பித்த நாடி அடங்கியும் வாதநாடி தன் இருப்பிடத்திலும் சூட்சுமமாயும் பேசவேண்டும்.

மானிட சரீரத்தில் உண்டாகியிருக்கும் சூட்சும நாடிகளுள் பிரதானமாகவுள்ள நாடிகளில் மும்மூர்த்திகளின் நாமம் அடைந்த இடகலை, பிங்கலை, சுஷூம்னா என்னும் நாடிகள் தேகத்திலுள்ள எல்லா அவயங்களினுள்ளும் உள்ள சர்வ குணா குணங்களையும் கிரஹித்துக்கொண்டு, இளா வாத நாடி என்றும், பிங்களா, பித்தநாடி என்றும், சுஷூம்னா கப நாடி என்றும் பெயர் அடைந்து வியாபித்திருக்கும். வாதம் மலத்துடனும், பித்தம் மூத்திரத்துடனும், கபம் சுக்கிலத்துடனும் கலந்திருக்கும்.

நோயாளிகளுக்குக் காலையில் வாத நாடி கபமாகவும், பகலில் வாதகதமாகவும், இரவில் பித்தகதமாகவும் காட்டும்.

இவ்விதமிருப்பதில் காலை வேளையில் வாத நாடி அதிதீவிரமாய்க் காட்டினால் வாத நோயளி என்றும், மத்தியானத்தில் பித்தநாடி அதிதீவிரமாய்க் காட்டினால் பித்த நோயாளி என்றும், சாயங்காலத்தில் கப நாடி அதிதீவிரமாய்க் காட்டினால் கபநோயாம் என்றும் சொல்லப்படும். அக்காலத்தில் தீவிரமாய்ப் பேசுவது உண்டு.

*சுதந்திர நாடி*

1. வாத நாடி : (ஓடும்போது) காலபேதங்களினாலும், மானிட தத்துவங்களினாலும் நாடியின் குறிப்பை நாடி ஸ்பரிச கதிகளின் நாடி ரூபங்களைக்கொண்டு கவனித்துக்கொள்ளவும். இதில் நாடி அதிவேகமாய் ஓடினால் வாத சுரம் என்று பெயர்.

2. பித்தநாடி : (தீவிர நாடி) காலபேதங்களினால் மானிட தத்துவங்களினாலும் நாடியின் குறிப்பை நாடி ஸ்பரிச கதிகளின் நாடி கொண்டு கவனித்துக்கொள்ளவும். இதில் நாடி அதிவேகமாய் ஓடினால் பித்த சுரம் என்று பெயர்.

சுதந்திர நாடி என்றால் - கற்பத்திலிருந்து பிறக்கும் பொழுதே இயற்கையாகவே ஏற்பட்ட நாடி.

காலபேதம் என்றால் - காலை, பகல், மாலை, இரவு காலங்கள்.

மானிட தத்துவம் என்றால் - சுதந்திர நாடிகளுக்கு விரோதமான ஆஹார பேதங்களினால் ஏற்பட்ட சப்த தாதுக்களின் தோஷங்களுக்கே தத்துவம் என்று பெயர்.

3. கபநாடி - (மந்த நாடி அல்லது கப நாடி) : காலபேதங் களினாலும், மானிட தத்துவங்களினாலும் நாடியின் ரூபங்களைக் கொண்டு கவனித்துக்கொள்ளவும். இதில் அதிவேகமாய் ஓடினால் கபசுரம் என்று பெயர்.

**சப்த தாதுக்களாவன :**

| | | |
|---|---|---|
| ரசம் | - | ஆகார சாரம் |
| ரத்தம் | - | சிவப்பு நிறமுள்ளது |
| மாமிசம் | - | சுத்த இரத்தத்தினாலும், காமுப்பினாலும் உண்டாகிறது. |
| மேதஸ் | - | கொழுப்பு |
| மஜ்ஜை | - | எலும்புகளிலுள்ள கொழுப்பு |
| ஹஸ்தி | - | எலும்பு |
| சுக்கிலம் | - | இந்திரியம். |

## நாடி குணம்

4. நோயாளியின் நாடி குணம் : மனிதர்களுக்கு நோய் உண்டாவதற்கு முன் நாடிகள் வக்கரித்துக் காட்டுவதாம்.

5. வாத, பித்த நாடி குணம் : வாதநாடி தலையெடுத்துக் காட்டிச் சிறிது அடங்கி பித்தநாடி தீவிரமாக ஓடினால் வாதபித்தம் என்று பெயர்.

6. வாத- பித்த - கப நாடி குணம் : மேற்சொன்ன நாடியில் கப நாடியில் சிறிது தலையெடுத்துக் காட்டினால் வாத, பித்த, கபம் என்றும் சொல்லப்படும்.

7. பித்த - வாத - நாடி குணம் : பித்தநாடி தலையெடுத்துக் காட்டிச் சிறிது அடங்கி வாதநாடி தீவிரமாக ஓடினால் பித்தவாதம் என்று பெயர்.

8. பித்த - வாத - கப நாடி குணம் : மேற்சொன்ன நாடியில் கப நாடி சிறிது தலையெடுத்துக் காட்டினால் பித்த வாத கபம் என்று பெயர்.

9. கப - பித்த - நாடி குணம் : கபநாடி தலையெடுத்துக் காட்டி சிறிது அடங்கி பித்த நாடியைக் காட்டினால் கப பித்தம் என்று சொல்லப்படும்.

10. கப - பித்தம் - வாத நாடி குணம் : மேற்சொன்ன நாடியில் வாத நாடி சிறிது தலையெடுத்துக் காட்டினால் கப பித்த வாதம் என்றும் கூறப்படும்.

11. திரிதோஷ நாடி குணம் : வாத நாடியும், கப நாடியும் சமானமாய்க் கலந்து காட்டியும், பித்தநாடி அடங்கியுமிருந்தால் பித்த சீதளம் என்றும், மறுபடியும் பித்த நாடி தலையெடுத்து மூன்றும் ஒன்றுக்கொன்று சேர்ந்து காட்டினால் திரிதோஷநாடி என்றும் சொல்லப்படும்.

### இதற்குச் சிகிச்சை

வாத நாடியை விருத்திப்படுத்த மருந்துகளும், உடனே வாயு பதார்த்தமுள்ள கஞ்சியும், அதைச் சீரணிக்கும்படியான மருந்தையும் கொடுத்து மூன்று நாடிகளையும் வலிவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

12. குணநாடி குணம் : வாத நோய்க்குத் தன் காலத்தில் வாத நாடி வக்கரித்துக் காட்டும். பித்த நோய்க்கு பித்த நாடி தன்

காலத்தில் மின்னல்போல் சலித்துக் காட்டும். கப நோய்களுக்குக் கப நாடி கடினமாய்த் தன் இருப்பிடத்தில் நின்று பேசிக் கொண்டிருக்கும். துவந்த நோயிற்கு திரிநாடிகளும் ஒன்றுக்கொன்று கலந்து பேசும்.

*13. சன்னிபாத நாடி குணம் : (சாத்தியம்)* நாடிகள் அந்தந்த காலத்தில் அதிதீவிரமாய் பேசி தக்ஷணம் அடங்குவதுபோல் காண்பித்து மறுபடியும் மூன்று நாடிகளும் தம் ஸ்தானத்தில் நின்று அசையாமல் பேசும். நாடிகள் காட்டி மறைந்தால் அது நோயாளியின் மிருத்தியு நாடி எனப்படும்.

*14. திரிதோஷ சன்னிபாதநாடி குணம் :*

*அ. (சாத்தியாசாத்தியம்) :* நாடிகள் அந்தந்த காலத்தில் தமது சுவஸ்த்தானத்தில் இருந்துகொண்டு படத்தில் காட்டியதுபோல் இரண்டு புறங்களிலும் அசைந்துகொண்டும், சுற்றிக் கொண்டும் பலவிதமாக வளைந்து கொண்டும் காட்டி திடீரென்று மறைந்தது போலும் காட்டி தக்ஷணமே அதிதீவிரமாய் ஓடும்.

*ஆ. (கஷ்ட சாத்தியம்) :* நாடிகள் ஒரு காலத்தில் மந்தமாயும், துண்டுதுண்டாகச் சிதறியும், சலித்தும், நின்றுநின்றும், பட்டும் படாமலும், நாடியே புலப்படாமலும், தம் ஸ்தானத்தைவிட்டுப் போய் வருவது போலும் வைத்தியன் விரல்களுக்கு அகப்பாடமல் போகும்.

*இ. (அசாத்திய நாடி) :* நாடிகள் அதிதீவிரமாய் பேசி தன் தன் ஸ்தானத்தில் ஸ்திரமாக நின்று மின்னல்போல் பக்கங்களில் பாய்ந்து காட்டிச் சிறிது காலம் நாடியே புலப்படாமலும் இருந்து பலவிதமாய்ச் சிதறிக்காட்டும்.

*ஈ. (தக்ஷிணமிருத்யு நாடி) :* நாடிகள் அதிவேகமாய் நடந்து தெரிந்தும் தெரியாததுமாய் மறைந்து மறுபடியும் அதிவேகமாய் ஓடிப் பலவிதமாய்ப் பாயும். பித்த நாடி அதிதீவிரமாய்ப் பேசி

அடங்கி கபநாடி தலையெடுத்துத் தீவிரமாய் நடந்து பித்த நாடியை அடக்கி வாதநாடியுடன் கலந்து மூன்றும் சேர்ந்து ஓடிவிடும்.

*15.* ரோகரஹித சுவஸ்தநாடி குணம் : அந்தந்த காலத்தில் அந்தந்த நாடிகள் தலையெடுத்துக் காட்டி படத்தில் காண்பித்தது போல் ஒன்றோடு ஒன்று சேர்ந்து காட்டினால் நோய் நிவாரணி என்று சொல்லவேண்டும்.

*16.* அபிகாதா திரோகநாடி லக்ஷணம் : அகாலபோஜனம், அமிதபோஜனம், அதிமனக்கவலை, அதிதுக்கம், அதிசம்போகம் அதிசம்பாஷணை, அதிக சிரமம், அதியாத்திரை, தூக்கமின்மை, அதிவேத ஔஷத சேவை, நிராகாரி இவர்கள் பலஹீனர்களாக இருக்கும்பொழுது நாடிகள் அதிகம்பீரமாயும் வலிவுள்ளதாகவும் நின்ற இடத்தில் நின்றபடியும் காட்டும்.

*17.* சந்தேக மிருத்யு நாடி குணம் : உயரத்திலிருந்து கீழே விழுந்தவன், கத்தியால் வெட்டுப்பட்டவன், குண்டு அடிபட்டவன், பயந்தவன், சுக்ல நஷ்டமானவன் இவர்கலுக்கு மேற்சொல்லியதுபோல் தக்ஷணமிருத்யு நாடியைக் காட்டினாலும் இவர்களுக்கு மிருத்யு பயம் இல்லை; சிகிச்சையில் தேறுவார்கள்.

*18.* பூதநாடி குணம் : கிரஹ சேஷ்டையுள்ளவர்கள், ஈடு மருந்துகளால் கஷ்டப்படுகிறவர்களுக்கும், மேற்சொன்ன திரிதோஷ நாடிகள்போல் வாத-பித்த-கபங்கள் ஒன்றுக்கொன்று கலந்து ஒரே ரூபமாய்ப் பேசும்.

*19.* ஸன்னிபாத துவந்த நாடி குணம் : மூன்று நாடிகளும் மந்தகதி அடைந்து, காற்றில் அசையாமல் இருப்பதுபோல் ஸ்தம்பித்து விசாலமாகக் காட்டி உடைந்ததுபோல் பலஹீனமாக நின்று நின்று குதித்துக்கொண்டு தலையெடுப்பதும் தாழ்ந்துவது மாகவும் சிறிது நேரத்திற்கெல்லாம் அதிதீவிரமாகும் ஆடிக்கொண்டிருக்கும்.

இந்த நாடியை ஹஸ்தத்திலும் பாதத்திலும் பரீட்சித்துக் கொள்ளவேண்டியது.

நாடிகள் மேற்கொண்டவிதமாக இருந்தால் பிராணி ஜீவித்திருக்கும் என்று சொல்லுவதற்கில்லை.

*20.* வாயுபந்தன (மலபந்த) நோயாளியின் நாடி குணம் : காலையில் வாத நாடி மிருதுவாகவும், மத்தியானத்தில் பித்தநாடி நின்றும், சாயங்காலத்தில் கபநாடி அதிவேகமாகவும், இராக் காலத்தில் முழுதும் சமமான வேகத்துடனும் நடக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு மரச்சிக்கல் என்று சொல்லவேண்டும்.

*21.* மல அபக்வ கபதோட நாடி குணம் : காலையில் வாத - பித்த நாடிகளுக்குமேல் கபநாடி இரண்டு பாகமாக தலை எடுத்துக்காட்டி, தலையை அசைத்துக்கொண்டிருக்கும். இந்த கபநாடி தன் காலமான மாலையில் தன்னிடத்தில் அடங்கி மந்தமாகக் காட்டும்.

*22.* மதரோகநாடி : (புருஷர்கள் அல்லது பெண்கள் நல்ல வலிவான ஆகாரத்தால் புஷ்டியை அடைந்து சம்போகம் இல்லாமல் இருப்பவர்களுக்கு குணம்) மூன்று நாடிகளும் சக்கரமாகவும் ஒன்றுக்கொன்று கலந்து ஒரே ரூபமாக நடக்கும்.

*23.* துஷ்டரத்த நாடிகுணம் ; அந்திந்த நாடிகள் அந்தந்த காலத்தில் தன் தன் இடத்தைவிட்டு மாறி சலித்துக்கொண்டு இருக்கும்.

*24.* அஜீர்ண நாடி : காலையில் வாதநாடி கையைப் பிடித்துப்பார்த்துபோது காணாமலிருந்து மெதுவாகத் தலையெடுத்து மந்தகதியாகக் காட்டும். மற்ற காலங்களில் இந்த வாத நாடி தூங்குவதுபோல் இருக்கும். பகலில் பித்தநாடி தன் இடத்தில் நின்று அதிவேகமாய் காட்டும். கப நாடி மாலையில் மற்ற நாடிகளுடன் பாயும்.

அஜீர்ண நாடி குணம் : (நோய்க்காலம்) பித்தநாடி அதிக தீவிரமாயும் பாதாளத்தில் (அடியில்) சக்கரகதியாகவும் எந்த காலத்திலும் ஒரே மாதிரியாகவும், வக்கிரகதி அடைந்தது போலவும், காற்றில் பறப்பதுபோலும், ஆடிக்கொண்டிருக்கும். மற்ற இரண்டு நாடிகளும் மந்தமாய்க் காட்டும்.

25. துஷ்ட பித்தநாடி : (மசூசிகாவியாதி) வாத-கப நாடிகள் வலுவில்லாமலும் பித்தநாடி அதிவேகமாய்க் காட்டும். மேற்கண்ட துஷ்டபித்தநாடி தன் இடத்தில் நின்று பேசினால் சத்ரு என்றும், தன் இருப்பிடத்தைவிட்டு ஆசைந்து பேசினால் மிருத்யு என்றும் சொல்லப்படும்.

26. கபநோயாளியின் குணம் : வாத - பித்த நாடிகள் மந்தமாயிருக்க கப நாடி - வாத நாடி - பித்தநாடி ஓடிக்கொண்டும் வலுவாய் தன் இடத்தில் உறுதியாய்த் நின்று பேசிக்கொண்டும் மூன்று நாடிகளும் படத்தில் காட்டியதுபோல் கோணல் கோணலாகப் பலவிதமாய் வக்கரித்துக்காட்டும். அதிதீவிரமாய் நடந்தால் கப சுரம் என்று பெயர்.

27. கிராணி நோய் நாடி : வெளிப்படும் மலத்தின் பேதியால் அடியில் விழுந்ததுபோல் அதிமறைமுகமாகக் காண்பித்துக் கொண்டே வாதநாடி சற்று மேலும் பித்தநாடி சற்றுக் குறைத்தும் கபநாடி சற்றுத் தலையெடுத்துமிருந்து வளைந்து பேசினால் பிராண பயம் இல்லை. வளைந்து காட்டாவிட்டால் ஆபத்து உண்டாகும்.

மலம் வாதத்தில் சேர்ந்தால் உலர்ந்தும் பித்தத்தில் சேர்ந்தால் குழம்பாகவும், கபத்தில் சேர்ந்தால் நீராகவும், வாத பித்தத்திலிருந்தால் கருப்பு மஞ்சள் கலந்த மாதிரியாகவும், வாத கபத்திலிருந்தால் நுரையுடனும், பித்த வாதத்திலிருந்தால் மஞ்சள் வெள்ளையுடன் சேர்ந்தும் பித்தத்தில் பித்தம் சேர்ந்தால் சிவப்பு கலந்த குழம்பாகவும், பித்த கபத்தில் சேர்ந்தால் நாற்றத்துடனும் சப்தத்துடனும், சன்னிபாதத்தில் சேர்ந்தால் அனேக வர்ணங்களாகவும், குழம்பாகவும், தண்ணியாகவும், துவந்தத்தில் சேர்ந்தால் வெள்ளை, மஞ்சள், கறுப்பு, சிவப்பு, பச்சை, நீலம், மேக வர்ணமாகவும் இருக்கும்.

28. சுக்ஷணநாடியும் சிகிச்சையும் : மூன்று நாடிகளும் அந்தந்த நாடிகள் அதிபலஹீனமாய்க் காட்டி, காலமில்லாத காலத்தில் எந்த நாடியுடன் சேருகிறதோ அந்த நாடியை அதற்கேற்ற ஆகார சாரங்களின் மூலமாய் வலிவுபடுத்திக் கொள்ளவும்.

## *நாடி நிர்ணயம் (தீர்க்கநேய் நாடி குணம்)*

29. வாதபித்த நாடி : வாத நாடியில் பித்தம் கலந்திருந்தால் வாத பித்தம் என்று நாடிகள் காட்டும். இதில் வாதநாடி தீவிரமாய் இருந்தால் வாதபித்த சுரம் என்று பெயர். வாத மந்தமாக இருந்தால் அந்தர்க்கத சுரம் எனப்படும். இதின் குணம் கால் சீதளமாயிருக்கும். தேகம் வீக்கம் கொடுக்கும், சுத்த தோடத்தால், சோகை, பாண்டு, காமாலை, மகோதரம் இவை உண்டாகும்.

30. வாதகப நாடி : வாத நாடியில் கபம் கலந்திருந்தால் வாத கபம் என்று நாடிகள் காட்டும். இதில் வாதநாடி அதிதீவிரமாய் இருந்தால் வாதகப சுரம் என்று பெயர். வாத நாடி மந்தமாயிந்தால் அந்தர்க்கத சுரம் என்று சொல்லப்படும். அறன் குணம் சரீரம் வெளுக்கும், ஆகாரம் ஏற்றுக்கொள்ளது.

31. சுத்த வாத நாடி : வாத நாடியில் வாயு கலந்திருந்தால் சுத்த வாதம் என்று நாடிகள் காட்டும். இதில் வாத நாடி அதிதீவிரமாயிருந்தால் கேவல வாத சுரம் என்றும் பெயர். வாத நாடி மந்தமாக இருந்தால் அந்தர்க்கத சுரம் என்றும் பெயர்.

இதன் குணம் : இளைக்கும், ஆகாரம், அதிகமாய் செல்லாது. சுத்த வாத நாடியில் வாத தோடத்தால் உண்டாகும் வியாதி சோகை, பாண்டு சன்னிபாதம்.

32. பித்த வாத நாடி : பித்த நாடியில் வாதம் சேர்ந்திருந்தால் பித்த வாதம் என்று பெயர். பித்த நாடி அதிதீவிரமாயிருந்தால் பித்த வாத சுரம் என்று பெயர். பித்த நாடி மந்தமாக இருந்தால் அந்தர்கத பித்த வாத சுரம் என்று பெயர். இதன் குணம் கால், கை

நோயுடன் காய்ச்சல் இருக்கும். சுத்த பித்த நாடியில் வாத தோடகத்தால் உண்டாகும் வியாதி கட்டிகள், பசுந்தரம், இரணங்கள் முதலியன.

*33. பித்த கப நாடி :* பித்த நாடியில் கபம் கலந்திருந்தால் பித்த கபம் என்று நாடிகள் காட்டும். இதில் வாத நாடி மந்தமடைந்து பித்த நாடி கப நாடியைச் சேர்ந்து மூன்று நாடிகளும் வக்கிரித்தால் பித்த கபம் என்று பெயர்.

அ. பித்த நாடி அதிதீவிரமாக ஓடினால் பித்த சீதள சுரம் என்று பெயர்.

ஆ. பித்த நாடி மந்தகதி அடைந்தால் அந்தர்க்கத பித்த சீதள சுரம் என்றும் சொல்லப்படும்.

இ. மூன்று நாடிகளும் பேசிக்கொண்டிருந்து அடங்கி விட்டால் மிருத்யு.

ஈ. மூன்று நாடிகளும் கொஞ்ச நேரம் தம்தம் ஸ்தானத்தில் நின்று அடியில் இரங்கி மறுபடி அதிசூட்சுமமாய் மேலுக்கு எழுவது தீர்க்கக்கூடிய வியாதி.

உ. இந்த மூன்று நாடிகளும் தம்தம் ஸ்தானத்து விட்டுப் பேசினால் வியாதி குறைவாகியிருப்பதாய் காட்டி மிருந்துயுவுக்குக் காரணமாகும்.

ஊ. வாத பித்த நாடிகள் சுவஸ்தானத்தில் பேசிக்கொண்டு இருக்கும் காலத்தில் , கப நாடி மட்டில் தம் இருப்பிடத்தை விட்டு சதா தலையை அசைந்துக்கொண்டிருந்தால் அந்த நோயாளிக்கு மிருத்யு.

இதன் குணம் : வயிற்று நோய், முதுகு வலி உண்டாகும், பேச்சுக்கள் மாறும்.

34. சுத்த பித்த (கேவல பித்த) நாடி : பித்த நாடியில் பித்தம் கலந்திருந்தால் சுத்த பித்தநாடி என்று காட்டும். இதில் வாத சிலேஷ்மம் நாடிகள் மந்தகதி அடைந்து பித்தநாடி வாத கப நாடிகளிடத்திற்கு ஓடிக்கொண்டும் மூன்றும் கதியய் நின்று வக்கிரகதியை அடைந்தும் பேசும்.

இதன் குணம் : வீக்கத்தையும் சோர்வையும் மாற்றிக் காட்டும் சுத்த பித்த நாடியில் பித்த தோடத்தால் பேதியும் வாந்தியும் உண்டாகும். வாதம் இரண்டு பாகமும் பித்தம் ஒரு பாகமும் இருந்தால் அதிக வயிற்றுவலி, மதநோய், மூர்ச்சை இவைகள் உண்டாகும். பித்தம் இரண்டு பாகம், வாதம் ஒரு பாகம் இருந்தால் எப்போதும் அதி உஷ்ணமாகவும் கண்கள் எரிச்சலாகவும் இருக்கும். வாதம் இரண்டு பாகமும், கபம் ஒரு பாகமுமாக இருந்தால் எப்போதும் வயிற்றில் எரிச்சல் இருக்கும்.

35. கப - வாத நாடி : கப நாடி, வாத நாடியில் பாய்ந்து பித்த நாடி மந்தகதி அடைந்தும், மூன்று நாடிகளும் வக்கிரித்தும் பேசினால் கபவாயு என்று பெயர். கபநாடி மட்டில் தீவிரமாய் நடந்தால் கபவாத சுரம் என்று பெயர். கப நாடி மந்தமாக நடந்தால் அந்த தர்க்க கபவாத சுரம் என்று பெயர்.

இதன் குணம் : நரம்புகள் வலிக்கும், முதுகில் நோயுண்டாகும்.

36. கப பித்த நாடி பித்த நாடியில் பாய்ந்து வாத நாடி மந்தகதி அடைந்தும், வக்கிரகதியாகப் பேசினால் கப பித்தம் என்று பெயர். பித்தநாடி அதிவேகமாகய்ப் பேசினால் கப பித்த சுரம் என்று பெயர் பித்தநாடி தக்ஷணம் மந்தகதி அடைந்தால் அந்தர்க்கத சுரம் என்று சொல்லப்படும்.

இதன் குணம் : வாய் கசக்கும், கண்டத்தில் கபம் கட்டியும் பேச்சு மாறியும் பேசும்.

38. சுத்த கப நாடி : கப நாடி வாத பித்த நாடிகளுடன் ஓடிக்கொண்டும், தன் இடத்தில் ஸ்திரமாக நின்றும் மூன்றும் வக்கரித்தும் பேசினால், அதற்கு சுத்த கபநாடி என்று பெயர். இந்த

கபநாடி உடனே தீவிர கதியடைந்தால் சுத்த கப சுரம் என்று பெயர் கப நாடி மந்தகதி அடைந்தால் அந்தர்க்கத கப சுரம் என்று பெயர். கப நாடி வாத நாடிகளுடன் கலந்து தீவிரமாய் சக்கர கதியடைந்து மூன்று நாடிகளும் ஊகச் சக்கரகதியடைடும் காலத்தில் வாதபித்த நாடிகள் மறைவாகிவிடும். இதுவே மிருத்யுநாடி. இதை ஆசார்ய நாடி என்று என்று சொல்வார்கள். இதுதான் பிராணப் பிராணகாலம்.

இதன் குணம் : கண் விழி சுழலும், ஆத்துமாபோய் விடும்.

38. பெண்களின் சம்போக நாடி : காலை வேளையில் வாதநாடி தன் ஸ்தானத்தில் சலித்துக்கொண்டும், பித்தநாடி அடங்கியும், கப நாடி தீவிரமாய் தலைகாட்டிக் கொண்டும் இருக்கும்.

39. பெண்களுக்கு சூதக வாயு நாடி : வாத நாடி அடிக்கடி அதிவேகமாயும் பித்த நாடி சதா வேகமாயும் கப நாடி அடிக்கடி மந்தமாயும் இருந்தால் சூதக வாயு எனப்படும். இது பித்த வாயுவால் உண்டாகிறது. கபநாடி நின்று நின்று மந்தகதியாகவும், வாத நாடி நின்று நின்று வேகமாயும் பித்த நாடி நின்று நின்று அதிகவேகமாகவும் நடக்கும். இது கர்ப்பிணிகளுக்குச் சூதக வெட்டையால் மாதங்கள் நின்று நின்று பிண்டம் சிதலமாகும். நோயாளிகளுக்கு உள்ள நாடி.

40. கற்பநாடி : பித்த நாடி ஆழத்திலிருந்து சிறிது தலை எடுத்து அதிசூட்சுமமாய் காட்டிக் கொண்டு வாத நாடி வலிவுடன் தன்னிடத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் காலத்தில், கபநாடி தன் ஸ்தானத்தில் சிறிது தலையெடுத்து ஆடிக்கொண்டிருந்தால் கர்ப்பத்திலுள்ள பிண்டம் கரைந்துவிடும். அதற்கு சிகிச்சை செய்தால் பிண்டம் உறுதியாய் சில பூர்ணாயுஸாகவும், சில அர்த்தாயுஸாவும் இருக்கும். இப்படிப்பட்ட குழந்தைகளுக்குத் தாய்ப்பால் நிறுத்திவிடவேண்டும்.

41. ஜிஹ்வ நாடி குணம் : பித்த நாடி அடிக்கடி சுற்றிக் கொண்டும், தன் இருப்பிடமத்தில் பலதரம் தலையை

அசைத்துக்கொண்டும், கண்டத்தில் குதித்துக்கொண்டிருக்கும். அல்லது வாத நாடி அடிக்கடி இரு பக்கங்களிலும் ஆடிக்கொண்டும் தக்ஷணமே சமகதியடைந்தால் ஜிஹ்வ தோஷ நாடி என்று பெயர்.

42. அஸ்தி சுர நாடியின் குணம் : வாத பித்த நாடிகள் ஆரம்பத்திலேயே தீவிரமாய் பலவித வக்கிரங்களாக நடந்தால் அஸ்தி சுரம் என்று பெயர்.

43. அந்தர்க்கசுர நாடியின் குணம் : மூன்று நாடிகளும் மந்தமாய் ஆடிக்கொண்டும் வக்கரமாய் சுற்றிக்கொண்டும் இருக்கும்.

44. அஸ்திகத சுர (முதுகெலும்பைப் பற்றிய) நாடியின் குணம் : வாத பித்த நாடிகள் தத்தம் சுபாவமாய்ப் பேசிக் கொண்டிருக்கக் கப நாடி மாத்திரம் அடிக்கடி மந்தகதியை அடைந்து வக்கரித்துவிடும்.

45. அசாத்திய நாடியின் குணம் : மேற்கண்ட நாடி குணங்களில் வாதநாடி பித்த நாடியில் குதித்துக் கலக்கவும் பித்த நாடி விரிந்துகாட்டி அந்த பித்தநாடி கபத்தில் குதிக்கவும் அந்த கப நாடி சக்கரம் போலவும் சுவாசக் கோல் பித்த நாடியை வியாபிக்கும்.

46. ஸங்கலித நாடி குணம் (சுகசன்னி) பெண்கள் வீட்டு விலக்கு காலத்தில் சம்போகம் செய்வதாலும், தைல ஸ்நான காலத்தில் சம்போகம் செய்வதாலும் உபவாச காலத்தில் சம்போகம் செய்வதாலும், மருந்து உட்கொள்ளும் காலத்தில் சம்போகம் செய்வதாலும், விஷக்காற்று வீசும் காலத்தில் சம்போகம் செய்வதாலும், மனக்கவலையுள்ள காலத்தில் சம்போகம் செய்வதாலும் உண்டாகும் நாடி (குணம்) வாத பித்த கப நாடிகள் சிறிது நேரத்தில் சிறிது வாக்கிரித்து சம கதியடைந்தும், க்ஷணாந்தத்தில் மந்த கதியடைந்தும், உடனே தீவிர கதியும் அல்லது இந்த மூன்று நாடிகளும் அதிகமாய் ஒன்றன்பின் ஒன்று குதித்துக்கொண்டு வக்ரகதியாயும்,

சமகதியாயும், மந்தகதியாயும் தீவிர கதியாயும் கூண்டு விரல் பக்கம் சமகதி - மந்தகதி சமமாய் ஓடுவது விஷமசங்கலித நாடியாகும்.

47. மரண நாடியின் குணம் : வாதநாடி பித்தநாடி ஸ்தானத்திற்கு இவ்விரண்டும் சேர்ந்து கபநாடி ஸ்தானத்திற்கும் குதித்துக்கொண்டு மூன்று நாடிகளும் சேர்ந்து ஒரே சக்கரகதியாக இருந்தால் மிருத்யு (மரணம்).

48. எண்வகைப் பரீட்சை : எண்வகைப் பரீட்சை எட்டு இடங்கள்.

| | | |
|---|---|---|
| ஹஸ்தம் | - | கைகள் |
| பாதம் | - | கால்கள் |
| கண்டம் | - | கழுத்து |
| நாசி | - | மூக்கு |
| மர்மஸ்தானம் | - | தொப்புளுக்குக் கீழ்ப்பாகம் |
| ரூபம் | - | தேஜஸ் |
| சப்தம் | - | குரலோசை |
| மலமூத்திரம் | - | பேதாபேதம் |

1. ஹஸ்தம் - மணிக்கட்டுக்குக்கீழ் மூன்றங்குலத்தில் பார்த்துக்கொள்ளவும்.

2. பாதம் - கால் மணிக்கட்டுக்கு மேல் மூன்றங்குலத்திற்கு உள்ளாகப் பார்த்துக்கொள்ளவும்.

3. கண்டம் - கழுத்தின் இரு பக்திலேயும்.

4. நாசி - மூக்கின் அடிப்பாகத்திலேயும் சுவாசத்தினாலும் பார்க்கவும்.

5. மர்மஸ்தானம் - தொப்பூளின் கீழ் நரம்புப் பிடிப்புகளால் தெரிந்துகொள்ளலாம்.

6. ரூபம் - முகத்தின் பிரகாசத்தால் எந்தெந்த காலங்களில் எந்தெந்த இடங்களில் உஷ்ணமும் குளிர்ச்சியும் இருக்க வேண்டியதோ அதைக் கவனித்தும் பார்க்கவேண்டியது. முகம் அல்லதுதேகத்தின் நிறம் வாதரோகமானால் கருத்தும், பித்த ரோகமானால் மஞ்சளாகவும், சிவப்பாகவும், கப நோயாளிக்கு மென்மையாகவும் துவந்த ரோகிக்கு அனேக வர்ணங்களாகும், மனிதனுக்குள்ளே சுயநிறத்தை மாற்றிக் காட்டுவது சன்னிபாதம் என்றும் தெரிந்துகொள்ளவேண்டும்.

7. சபதம் - குரலோசை நாபி, ஹ்ருதயம், மூக்கு முதலிய இடங்களிலிருந்து உண்டாகும். சப்தத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளவும் நாபியிலிருந்து உண்டாகும் சப்தத்திற்கு, வாத ஸ்தானத்திலிருந்து வெளிப்படுகிறது என்றும், ஹிருதயத்தில் இருந்து உண்டாகும் சப்தத்திற்கு, பித்த ஸ்தானத்திலிருந்து வெளிப்படுகின்றது என்றும், நாசியில் இருந்துண்டாகும். சப்தத்திற்கு கப இருப்பிடத்திலிருந்து உண்டாகிறது என்றும் தெரிந்துகொண்டு அந்தந்த இருப்பிட தோஷங்களைத் தெரிந்து கொள்ளவும்.

8. மலமூத்திரம் உஷ்ணம், குளிர்மை, நிறம் முதலியவை கவனிக்கவும். வாதரோகத்தில் மலம் பந்தித்தும், கருத்துப் போகும். பித்தரோகத்திற்கு மஞ்சளாகவேனும், சிவப்பாக வேனும் போகும். கபநோய்க்கு வெண்மையாகவும் பிசின் போலும் நுரை போலும் போகும்.

துவந்த நோய்க்கு அநேக மிச்ரவர்ணங்களாகக் காணும்.

49. நாக்கு பரீட்சை : வாத உடலினர்க்கு வெடிப்பாகவும் முள்ளு முள்ளாகவும் மஞ்சளாகவும் இருக்கும்.

பித்தி உடலினர்க்கு கறுப்பாகவும் உலர்ந்த நாக்காகவும் இருக்கும் சிலேத்தும உடலினர்க்கு வெண்மையாகவும் ஈரத்துடன் காட்டும். சன்னி பாதத்திற்கு ஈரமில்லாமலும் முள்ளு முள்ளாகவும் கறுப்பாகவும் இருக்கும்.

துவந்த உடலினர்க்கு ஒவ்வொரு சமயங்களில் ஒவ்வொரு நிறமாகக் காட்டும். ஒரே சமயத்தில் பல நிறங்களாகவும் காட்டும்.

50. கண் பரீட்சை :-கண்கள் கறுப்பாகவும், கொஞ்சம் வீக்கமாகவும், நீர் வந்துகொண்டிருந்தால் வாத நோய் என்றும், மஞ்சலாகவும், சிவப்பாகவும் இருந்தால் பித்த நோய் என்றும் பெயர். வெண்மையாய் அழுக்கு சேர்ந்துகொண்டிருந்தால் கப நோய் என்றும் அறியவும். கண்கள் அதிக மஞ்சளாகவும்; கால், கை, நகங்கள் மஞ்சளாகவும் இருந்தால் துஷ்ட பித்தம் அல்லது காமாலை நோய் என்றும் தெரிந்துகொள்ளவேண்டும்.

**கற்பனை**

*1. நாடி என்பது என்ன ?*

மானிட சரீரத்திலேயே பிறந்து உயிரை உண்டாக்கி தேகத்திலேயே இடம்பெற்றுக்கொண்டு சர்வ அவயவங்களிலும் பாய்ந்து நாம் புசிக்கப்பட்ட உணவுகளின் சத்துக்களினால் அந்தந்த அங்கங்களுக்கு ஏற்ற வலிமையைக் கொடுத்து, ஏகநாடி மூல்யமாக சீவசீர்ண ஆயுள் கதிகளை வைத்தியர்களுக்கு ஸகாயம் செய்கிறது.

*2. வாத பித்த கபம் என்கிறது எந்த பாகத்திலிருக்கிறது ? அதன் தன்மை என்ன ?*

மானிட சரீரத்தில் மலக் கோசத்தில் வாதமும், மூத்திர கோசத்தில் பித்தமும், இந்திரிய ஸ்தானத்தில் கபமுமாக இடம்பெற்றுக்கொண்டு நாம் சாப்பிடும் உணவுகளுடைய சத்துக்களை அங்கங்கள் க்ரஹித்து பிறகு அதிலிருக்கும் முக்கியமான சத்தை மேற்கூறிய மூன்று ஸ்தானத்திலும் பெற்றுக் கொண்டு மலமூத்திர ஸ்தானங்களை ஸ்திரப்படுத்தி நம்மில் அடங்கியிருக்கும் வாயு சர்வாங்கங்களிலும் பாயச் செய்து இரத்தம் சுத்தமாக நின்று சூரிய - சந்திர சூட்சுமமான நாடிகளுக்கு ஸகாயமாய் உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும்.

*3. ஊக நாடி என்பது என்ன ?*

வாத, பித்த, கபங்கள் மூன்றும் சரீரத்தில் பாய்ந்து கொண்டே சகச்ர சக்ரத்தில் சம்பந்தப்பட்ட பிறகு ஒவ்வொரு நாடியிலும் வாத, பித்த, கபங்கள் ஒன்றுக்கொன்று

முன்பின்னாகப் பாய்வதால் வைத்தியன் அந்த மூன்று கதிகளை அனுசரித்துச் சிகிச்சை செய்யவேண்டும்.

எப்படியெனில் :

1. மானவ சரீரத்தில் சீவநாடி என்கின்ற வாத நாடியால் புசிக்கப்பட்ட ஆகாரங்கள் சீரணிப்பதும் சீரணமாகாததும் மலத்தினால் கண்டறியலாம்.

2. சீரண நாடி என்கிற பித்த நாடியால் மூத்திரத்தினுடைய நிர்ணயம் கொண்டு சீரணமும் அசீரணமும் கண்டறியலாம்.

3. ஆயுள் நாடி என்கிற கப நாடியால் இரத்தித்தினுடைய தன்மையைக் கண்டறியலாம்.

### *4. சப்தரச தாதுக்கள் என்றால் என்ன ?*

நாம் அடைந்திருக்கும் சப்த கோசங்களும் நாம் புசிக்கப்பட்ட ஆகாரங்களுடைய சத்தை சப்த நிறங்களாக மாற்றி அந்தந்த கோசங்களின் வலிவை அடைவதே சப்தரச தாதுக்களாம்.

### *5. சப்தரச தோடம் என்பது என்ன ?*

நாம் புசிக்கப்பட்ட ஆகாரங்களின் பேதா பேதங்களால் சப்த தாதுக்கள் க்ஷீணமடைந்து அந்தந்த கோசங்கள் (க்ஷீணமடைவது) வலிமை இழப்பதே சப்தரச தோடமாம்.

சப்த தாதுக்களுக்குத் தகுமான ஆகாரங்களைக் கண்டுபிடித்து புசிக்கச் செய்வதே கபமானது.

### *6. நாடி ஸ்பரிச கதிகள் என்றால் என்ன ?*

மானிட சரீரத்தில் காணப்பட்ட வாத-பித்த-கப நிர்ணயங்கள் அதாவது காற்று, நெருப்பு, நீர் இவைகளினுடைய வலிமைகளையும் ஒன்றுக்கொன்று ஒரே கதியாகயிருப்பதும் அல்லது ஏறக்குறைவாக இருப்பதும் நரம்புகளில் இரத்தம் ஓடும்போது தேகத்திலுள்ள அந்தந்த உறுப்புக்கள் அடைந்திருக்கும் ஸ்திரவாத பித்த கப தோடங்களைக் காண்பிப்பதே ஸ்பரிச கதிகள் எனப்படும்.

மானவ சரீரத்தில் பாய்ந்திருக்கும் நாடிகள் ஓடும்படியான இரத்தத்தை தடையுண்டாக்க அப்படி பந்திக்கப்பட்டதை ஏகநாத மூல்யமாகக் கண்டுகொள்ளலாம்.

### *1. வாத நாடி*

1. சர்ப்ப ஸ்பரிசம் என்பது இரத்தம் காற்றோடு சம்பந்தப்பட்டு ஓடுங்காலத்தில் சர்ப்ப நடையானது சாடை காட்டும்.

2. காற்றோடு சம்பந்தப்பட்டு ஓடும்படியான இரத்தம் தடையடைந்து தண்ணீரில் குதிக்கும் மீனைப்போல் கொஞ்சம் கொஞ்சமாக வழியுண்டாகிக் கொண்டு பாயும். (இது மீன் ஜாடை எனப்படும்.)

3. காற்றோடு கலந்து ஓடும் இரத்தம் தங்கியிருந்த நீரினால் தடையடைந்து முன்பின்னாக துர்நீரை விழுங்கிக்கொண்டு நாடி தடிப்பான சாக்கைக்காட்டி சுத்தமான இரத்தத்தைப் பாயச் செய்யும். (இதனையே அட்டை ஜாடை என்பார்கள்.)

4. காற்றோடு கலந்து இரத்தம் ஒடுங்காலத்தில் பலகீன கோசங்களிடத்தில் இப்புறமும் அப்புறமும் அலைந்து கொண்டு வழியையுண்டாக்கிக் கொண்டே ஓடுவதுபோலோ ஜாடையாம். மேற்கூறிய நான்கு ஸ்பரிசசக்திகளும் வாத ஸ்திர நாடியில் சம்பந்தப்பட்டவை.

### *2. பித்த நாடி*

1. மாணவனுடைய சரீரத்திலுள்ள அங்கங்களில் அடைந்த பித்தம் அதிதீவிரமாக இருந்த காலத்தில் ஓடும் இரத்தம் விரிந்துக்கொண்டும், குதித்துக்கொண்டும் தவளை ஜாடை காட்டும்.

2. மாணவனுடைய சரீரத்திலுள்ள அங்கங்களில் பித்தம் மந்தமடைந்தபோது இரத்தம் ஆவியைப் பிடித்து விரிந்துக் கொண்டு அலைந்ததுபோல் காகத்தின் ஜாடை காட்டும்.

3. மாணவனுடைய சரீரத்தில் அங்கங்களில் அடங்கிய பித்தம் இரத்த ஓட்டத்தைத் தடையாக்கி அந்த இரத்தம்

பாய்வதற்காக இருபுறமும் ஓடிக்கொண்டு தன்வலிமை இழந்து ஓடுவது கிளி ஜாடை என்பார்கள்.

4. மாணவனுடைய சரீரத்தில் இருதய பாகத்தில் இரத்தத்தோடு சம்பந்தப்பட்டுப் பாயும். இரத்தத்தை விழுங்கிவிட்டு நுரைக்குடல்களில் நீராய்ப்பாய்ந்து அதிவேகமாய்க் காற்றில் ஓடுவதைப் போலவும் ஏக காலத்தில் சரீர முழுமையும் ஆவியாக்கி சூட்சுமத்தில் மாணவனுடைய ஸ்மரணையைத் தவிர்த்துவிட்டு மூத்திரம் முழுமையும் விசர்ணம் செய்துவிட்டு மாணவனுக்கு ஸ்மரணை வந்த பிறகு, திடீரென்று வாத கப நாடிகளை அடக்கிவிட்டு உயிரைக்கொண்டு போகும் இதையே (மீன்குத்திப்பறவை சாடை என்பார்கள்)

மேற்கூறிய நான்கு உணர்வுகளும் பித்த ஸ்திர நாடியில் சம்பந்தப்பட்டவை.

### 3. கபநாடி

1. மாணவன் சரீரத்தில் இரத்தம் ஓடுங்காலத்தில் இருதய பாகத்தை அனுசரித்து மயில்நாடி பாயும் இரத்தத்திலிருக்கப்பட்ட கெட்ட நீரை இருபுறமும் அசைத்துக்கொண்டு சுத்தமான இரத்தத்தைப் பாயச்செய்யும். (இதன் ஜாடை நாடி ரூபத்தில் காண்க.)

2. மாணவன் சரீரத்தில் சுவாச காசத்தை அனுசரித்த அம்ஸ நாடி நாம் சுவாசிக்கும் காற்றிலுள்ள துர் ஆவியை விபாகம் செய்து சுத்த ஆகாயத்தினால் கோசங்கட்கு சகாயம் செய்துகொண்டிருக்கும். (இதன் ஜாடை நாடி ரூபத்தில் காணலாம்.)

3. மாணவன் சரீரத்தில் மலகோசத்தில் கெசநாடி மலச்சிக்கலை சீராக்கிக்கொண்டு அதிகலாபமாய் மலவிருத்தி செய்யும். (இதன் ஜாடை நாடி ரூபத்தில் காணலாம்.)

4. மாணவன் சரீரத்தில மூத்திரகோசத்தில் குக்குட நாடி மூத்திர பிண்டம் வரையில் பாய்ந்து மூத்திரத்தைச் சுத்திசெய்து கொண்டு சுலபமாக விசர்சனம் செய்விக்கும். இதன்ஜாடை நாடி வடிவத்தில் காணலாம்.

மேற்கூறிய நான்கு ஸ்பரிச கதிகளும் கப ஸ்திர நாடியில் சம்பந்தப்பட்டது இந்த நான்கு அம்சங்களையும் அந்நிய காலத்தில் முக்கியமாயக் கவனிக்கவேண்டும். மேற்கூறிய வாத பித்த கப ஸ்பரிச கதிகள் பன்னிரண்டு அம்சங்களும் நாடி நிர்ணயத்தில் மாணவனுடைய பிராணவாயுவை அனுசரித்ததா யிருக்கும்.

மேற்சொன்ன ஸ்பரிச கதிகளை ஒரு வைத்தியன் தன் சுத்த இருதயத்தாலும் சூட்சும புத்தியாலும் ஒரே நாடியில் காணப்பட்ட மூன்று நாடி ஸ்பரி சத்திகளின் தருமான ஆகாரங்கள் கொடுக்கப் பிரயத்தனப்பட வேண்டும். அதாவது வாதம் குறைவாகவும் பித்தம் அதிகமாகவுமிருந்தால் வாதம் குறையாமலிருப்பதற்காக, வலிவுள்ள ஆகாரமும், பித்தம் குறைவாக இருந்து வாதம் அதிகமாக இருந்தால் சீக்கிரம் சீரணிக்கும் ஆகாரமும், வாதபித்த நாடிகள் இரண்டும் ஸ்திரமாக இருந்து கப ஆக்கிரமித்தால் அந்த சரீரத்துவத்திற்குத் தகுமான சீவராசியின் இரத்தத்தைக் கொடுத்து அந்த கபம் நாடியை ஸ்திரப்படுத்திக்கொள்ளலாம். உடனே இரத்த விருத்தியைத் தரும். ஆகாரங்களைக் கொடுத்து உயிரைக்காப்பாற்றவேண்டும். வாத பித்தமிரண்டும் ஒன்றோடொன்று கலந்துக்கொள்வதா யிருந்தால் மலமூத்திரங்களைக் விசர்சனம் செய்விக்கப் பிரயத்தனப்பட வேண்டும்.

வாதபித்த கப ஸ்திர நாடிகள் சரீரத்தில் ஓடும் இரத்தத்திலுள்ள தோஷா தோஷங்களை அனுசரிக்காவிட்டால் கீழ்க்கண்ட ஸ்பரிச கதிகளைக் காட்டும்.

1. நாடிகளுக்கு ஒற்றுமையில்லாவிட்டால் ஆடும் ஜாடை காட்டும்.

2. நாடிகள் ஒன்றுக்கொன்று துவேஷமடைந்தால் பார்க்கும் அல்லது கலக்கும் அல்லது பேசும் சாடைக்காட்டும்.

3. நாடிகள் ஒரு நாடிக்கொரு நாடி வலிவு குறைந்து விட்டால் குதிக்கும் அல்லது கலக்கும் சாடை காட்டும்.

4. ஒருநாடிக்கொரு நாடி உறவாவதால் பாயும் சாடை காட்டும்.

5. ஒருநாடிக்கொரு நாடி பேதமில்லாமல் திறமாயிருந்தால் (நிரோகி) ஸ்திரமான சாடை காட்டும்.

6. மூன்று நாடிகளும் ஒன்றுக்கொன்று கலந்து கொள்வதனால் திரிதோஷ சாடைக்காட்டும்.

7. இந்திரியம் க்ஷீணமடைந்தால் கோணலாகச் சுற்றும் சாடை காட்டும்.

8. நாடிகள் பலஹீனமடைந்திருந்தால் வக்கிரிக்கும் சாடை காட்டும்.

9. நாடிகட்குமேல் கெட்ட இரத்தம் பாய்ந்தால் பறக்கும் அல்லது சாடை காட்டும்.

10. நாடிகள் வலிவை அடைந்தால் இரு பக்கத்திலும் ஓடும். சாடை காட்டும்.

11. இரத்தம அதிதீவிரம் ஓட்டமாயிருந்தால் குதித்து அடங்கும் சாடை காட்டும்.

12. நாடிகள் ஒவ்வொரிடத்திலும் பலஹீனமடைந்திருந் தால் ஓடும் இரத்தம் நின்று நின்று ஜாடை காட்டும்.

13. கோசங்களிடத்தில் கலந்திருக்கும் நாடிக்கு இரத்தம் ஓடுவதற்கு வழியில்லாவிட்டால் குதித்துக் கலக்கும் ஜாடைகாட்டும்.

14. நாடிகள் தோஷமடைந்து இரத்தமும் தோடமடைந்து பாய்ந்தால் ஒன்றுக்கொன்று சுக்ர கதியாய்க் கலந்துகொள்ளும் சாடை காட்டும்.

15. நாடியில் ஓடும் இரத்தம் அதிக பித்தமடைந்திருந்தால் கடினமும் கம்பீரமும் பிரகாசமுமான ஜாடை காட்டும்.

16. சூரிய கிரணத்தின் உஷ்ணத்தால் மாறுதலடைந்து சுவாசிப்பதால் இருதயத்தில் இரத்தம் பித்த சம்பந்தப்பட்டு பித்தம் ஆக்கிரமித்து நாடி தீவிர சாடை காட்டும்.

17. நாடிகள், சரீரத்திலுள்ள மூலஸ்தானத்தில் வலிவு குறைவடைந்திருந்தால் தன்னிடத்தில் குதிக்கும் சாடை காட்டும்.

18. காற்றுப்பைகள் பலஹீனமடைந்து காற்றில் ஓடும் போதும் பாய்ந்து மறையும் போதும் சாடையைக் காட்டும்.

19. நாடி பலஹீனமடைந்து அதிவேகமாய் இரத்தம் பாயும்போது சலிக்கும் அல்லது தலை ஆட்டும் சாடை காட்டும்.

20. பிராண அந்திய காலமாயிருந்தால் நாடி தன்னிடத்தில் விட்டு மாறும் சாடை காட்டும்.

21. நாடி ஆவியையடைந்திருந்தால் சக்ரம் போல் சுழலும் சாடை காட்டும்.

22. மலக்கோசத்தில் மலம் தோஷமடைந்தால் விசாலிருஞ் சாடையாகவும் மலமில்லாவிட்டால், (அந்தர்க்கதம்) அடியில் விழுந்துவிட்டது போன்ற சாடை காட்டும்.

23. ஆண்களுக்குத் தொப்புளிலும் பெண்களுக்கு சூதிகத்திலும் புண்ணாயிருந்தால் கற்ப ரணம் போன்ற சாடை காட்டும்.

24. பிரணம் வெளிப்படுங் காலத்தில் சரீரத்தில் உஷ்ணம் அதிகரித்து முழுவதும் அடங்குவதால் மின்னலைப் போல் சலிப்பது போலும் சுவாசபந்தனமுண்டாக்குவது போன்ற சாடை காட்டும்.

மேற்கூறிய 1-வது நெம்பர் முதல் 24-வது நெம்பர் வரையிலுள்ள 24 உணர்வு சக்திகளும் ஓடும் இரத்தத்தில் வாதமும், பித்தமும், சிலேஷ்மமும் ஒரே வலிமை அடைந்து பாய்வதும் அல்லது அவைகள் பேதிப்பதும் அந்த இரத்தம் உள்ளுறுப்புகட்கு நன்மை செய்வதும் அல்லது க்ஷீணத்தைக் கொடுப்பதும் இந்த உணர்வு சாடைகளால் நாடிகள் மூல்யமாக புத்திசாலியான வைத்தியர் தெரிந்துகொண்டு நோயாளியின் ஆபத்தைத் தீர்ப்பதும் மிருத்யுவை தன் மூலமாய் நடக்க ஒட்டாமல் தப்பித்துக்கொண்டு தூரத்தில் விலகிவிட வேண்டும்.

# நாடியின் உற்பத்தி

ஆகாசம், வாயு, தேயு, அப்பு, ப்ருதிவி என்ற ஐந்து ஆதார பூதங்களால் ஆகிய இவ்வுடம்பு அவரவருடைய கட்டைவிரல் ரேகையளவாகிய அங்குல ப்ரமாணத்தினால் 96 அங்குலம் அளவுள்ளது. எல்லா நாடிகளுக்கும் ஜீவாத்மா ஆதாரமாக இருப்பதுபோல் இந்த சரீரமும் ஆதாரமாக அமைந்துள்ளது.

தொப்புளுக்குக் கீழே 4 அங்குலம் விஸ்தாரமும், 2 அங்குல உயரமும் பவழத்தாலாகிய முளைபோன்ற தோற்றமும் உடைய ஓர் இடமே நாடிகளுக்கு மூலஸ்தானம். அதிலிருந்தே 72,000 நாடிகளும் வெளிக்கிளம்பி இலையின் நரம்புகள் போல் பல கிளைகளாகப் பிரிந்து மிகவும் சூட்சுமமாகி தேகத்தின் எல்லாப் பாகங்களிலும் செல்லுகின்றன. இந்த நாடிகள் ஏழுவகைத் தாதுக்களிலும் ஊடே செல்லுகின்றன. அப்போது அவைகளின் வர்ணங்களையும் அடைகின்றன. வாத, பித்த, கபங்களின் காரணங்களால் ஏற்படும் சகல வேலைகளுக்கும் இவைகளே ஆதாரமாகி எப்போதும் அளவோடு கூடிய கொடிகள்போல் அமைந்திருப்பவை. இவற்றுள் சில பருமனாகவும், சில திரண்டவடிவம் உள்ளவைகளாகவும், சில முடிச்சுள்ளவை களாகவும் சிலவற்றிற்கு அடிப்பக்கம் பருத்தும் வர வர தனித்தனியாகப் பிரிந்த துணிகளை உடையவைகளாகவும், எல்லாம் ஓட்டை உள்ளவைகளாகவும், மிகவும் சூட்சுமமாய் முழுவதும் எல்லா கணுக்களிலும் செல்லுகின்றன.

### ஸ்திரீ புருஷ நபும்ஸக நாடிகள்

மேலே சொல்லப்பட்ட 72,000 நாடிகளுக்குள், 30,000 நாடிகள் பெண்களின் நாடிகள் மற்றும் 36,000 நாடிகள் புருஷ நாடிகள் என்றும், 12,000 நாடிகள் நபும்ஸக நாடிகள் (அலி நாடிகள்) என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஸ்திரீ நாடிகள் இடது பக்கத்திலும், புருஷ நாடிகள் வலது பக்கத்திலும், இவ்விரண்டுக்கும் மத்தியில் நபும்ஸக நாடிகளும் அமைந்திருகிகன்றன. இவைகளில் முக்கியமானவை 101, இவைகளில் மிகவும் முக்கியமானவை 13.

### *பிராணவாயு செல்லும் மார்க்கம்*

நாடியின் துவாரங்களின் வழியாகப் பிராணவாயு சஞ்சரிக்கிறது. தோஷங்கள் சேராதிருக்கும்போது உடம்பிற்குச் சுகத்தையும் தோஷங்களோடு சேர்ந்திருக்கும் காலத்தில் வியாதியையும் உண்டுபண்ணக் கூடியது.1

### *ஸூத்ர பஞ்சகம்*

நாடிகளில் முக்கியமானவை ஐந்து. இந்த ஐந்து முக்கிய நாடிகளுக்கும் "ஸூத்ரபஞ்சகம்" (ஐந்து நூல்களின் தொகுதி) என்று பெயர்2 இவைகளுள் முக்கியமான மூன்று நாடிகள் மேல்நோக்கிச் செல்லுகின்றன. இவைகளே வாத பித்த கபங்களின் நிலைமைகளை உணர்த்தும் இயல்புடையவை.3

1." தோஷம் "என்பது சரீரத்தின் தாதுக்கள் முதலிய பகுதிகளைத் தூஷிப்பித்து (கெடுத்து) வியாதியை உண்டுபண்ணக் கூடிய வாத பித்த கபங்களின் அளவு மீறுதலைக் குறிக்கும் அளவு மீறி வியாதியை உண்டுபண்ணும் சக்திவாய்ந்தவைகளாதலால் பொதுவாகவே வாத பித்த கபங்களுக்கு "தோஷங்கள் "என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.

மூல சுலோகத்தில் இவை ஐந்தும் மணிக்கட்டில் சேர்ந்திருப்பதாகக் கண்டிருக்கிறது. இது சர்ச்சைக்குரியது.

3. நாடி பார்க்கையில் தமநிகளின் வழியே வரும் இயக்கும் சக்தி ஸிரைகளிலுள்ள வாத பித்த கபங்களோடு சேர்ந்த ரத்தத்தில் பிரதிபலிப்பதால் ஸிரைகள் (ரத்தக்குழாய்கள்), தமநிகள் இவற்றின் உற்பத்தி அமைப்பு இவற்றைத் தெளிவாக அறிய வேண்டியது அவசியம். அக்காரணம்பற்றி சஸ்திர சிகித்ஸைக்காக ஏற்பட்ட ஸ்ச்ருதஸம்ஹிதையில் ஸிரை தமநிகளைப் பற்றிய குறிப்புகள் இங்கு எடுத்து எழுதப்படுகின்றன.

### *சிரைகள்*

நமது உடம்பில் சிரைகள் அல்லது ரத்தம் ஓடும் குழாய்கள் 700, இவை நாபி (தொப்புள்) யிலிருந்து முதலில் 40 பெரிய சிரைகளாகப் பிரிந்து கிளம்புகின்றன. அவை ஒவ்வொன்றிலும்

ரத்தம், வாதம், பித்தம், கபம் இந்த நான்கும் சேர்ந்தே செல்கின்றன. ஆனால் இவைகளுள் பத்தில் வாதம் அதிகமாகவும், பத்தில் ரத்தம் அதிகமாகவும், பத்தில் கபம் அதிகமாகவும், பத்தில் ரத்தம் அதிகமாகவும் செல்லுகின்றன. இந்நான்கு சிரைகளும் அநேகமாக ஒன்று சேர்ந்தே செல்லுவதால் இவைகளைப் பிரித்து அறிவது சிரமமாக இருந்தபோதிலும் இவைகள் நான்கும் நான்குவித வர்ணங்களுடன் அமைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. வாத சிரைகள் அருணவர்ணமாகவும், அதாவது அருணோதயகால சூரியன் வர்ணமாகவும், வாயு நிறைந்தும் இருக்கும். கப சிரைகள் உஷ்ணமாகவும், நீல நிறமாகவும் இருக்கும். கப சிரைகள் சீதமாகவும், மஞ்சள் கலந்து வெண்மை நிறமாகவும் இருக்கும். ரத்த சிரைகள் நல்ல நல்ல சிவப்பாக இருக்கும்.

பித்த சிரைகளை மேல்நாட்டார் அசுத்த ரத்தக் குழாய்கள் என்றும், ரத்த சிரைகளை சுத்த ரத்தக்குழாய்கள் என்றும் பெயரிட்டிருப்பதாகத் தெரிகிறது. (வாத சிரைகள், கப சிரைகள் இவ்விரண்டும் தனியாகப் பிரிக்கப்பட்டுப் பெயரிடப் படவில்லை என்றும் தெரிகிறது.) நாபியிலிருந்து கிளம்பிய பிறகு ஒவ்வொரு 10 சிரைகள் 175 சிரைகளாகப் பிரிந்து சரீரம் முழுவதும் வியாபிக்கின்றன. இந்த 175-ல் கால், கைகளில் 100-ம், உடம்பில் 34-ம், கழுத்துக்குமேல் 41-மாகப் பரவி நிற்கின்றன. ஆகையால் ஒவ்வொரு அங்கத்திலும் நான்குவித சிரைகளும் சமமான எண்ணிக்கையுள்ளவைகளாகவே செல்லுகின்றன. இதில் பித்த சிரையின் கிளைகளில் ஒரு விசேஷம் உண்டு. கழுத்துக்குமேல் செல்கின்ற பித்த சிரைகளில் கண்களில் பத்தும், காதுகளில் இரண்டும் செய்கின்றன. மற்ற வகை சிரைகள் கண்களில் எட்டும், காதுகளில் நான்கும் செல்கின்றன. இதற்குக் காரணம் கண்களில் பிரகாசம், பித்தத்தின் சக்தியால் ஏற்படுகிறது என்பதேயாகும்.

### தமநிகள்

நமது உடம்பில் தமநிகள் அல்லது வாயுவினால் நிரப்பப் படக்கூடியவை 200, இவைகளும் நாபியிலிருந்து 24 மூல தமநிகளாகக் கிளம்பி 10 மேல்நோக்கியும், 10 கீழ்நோக்கியும்,

4குறுக்காகவும் செல்கின்றன. மேலே செல்லும் 10 தமநிகளும் இருதய ஸ்தானத்திற்குச் சென்றதும் ஒவ்வொன்றும் மூன்றாகப் பிரிந்து 30 ஆகின்றன. இந்த 30 கிளைக்குள் 8 கிளைகள் சத்தம், ரூபன், ரஸம், கந்தம் இவைகளை எடுத்துச்சென்று அவைகளை அறியும் சக்தியினிடம் உதவுகின்றன. 12 கிளைகள் மூச்சுவிடுதல், மூச்சை உள்ளிழுத்தல், பேசுதல், கத்துதல், தூக்கம், விழித்தல், கொட்டாவி விடுதல், தும்மல், சிரித்தல், கண்ணீர் விடுதல், பெண்களுக்குப் பால் சுரத்தல், ஆண்களுக்கு சுக்கிலம், சுரத்தல் முதலிய வேலைகளைச் செய்விக்கின்றன. பாக்கிப் பத்து கிளைகள் தொப்புளுக்கு மேலே உள்ள இடங்களில் வாதம், பித்தம், கபம், ரத்தம், ரஸம் இவைகளை அவைகளின் மார்க்கங்களில் செல்லும்படிச் செய்கின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

கீழே செல்லுதல் 10 தமநிகளும் வயிற்றுக்கும், குடலுக்கும் இடையே ஒவ்வொன்றும் மூன்றாகப் பிரித்து 30 ஆகின்றன. இவை பித்தாசயத்தை அடையும்போது அங்குள்ள அன்னபான ரசத்தை நன்றாகப் பக்குவம் செய்வித்து ரஸத்தை அதன் இடத்துக்கு அனுப்புகின்றன. மேலே சொல்லப்பட்ட 30 பிரிவுகளில் 2 பிரிவுகள் குடலில் அன்னபானாதிகளை நகரும்படிச் செய்கின்றன. 2 பிரிவுகள் அங்கிருந்து திரவமான கழிவுப் பொருளை மூத்திராசயத்துச் செலுத்துகின்றன. சுக்கிரத்தை 2 பிரிவுகள் சேர்க்கின்றன. 2 பிரிவுகள் சுக்கிரத்தை வெளிப்படுத்து கின்றன. இந்த 4 பிரிவுகளே பெண்களுக்கு சரீரத்தில் ருதுவை உண்டாக்கி வெளிப்படுத்துகின்றன. 2 பிரிவுகள் மலத்தை வெளிப்படுத்துகின்றன. 2 பிரிவுகள் மூத்திரத்தை வெளிப் படுத்துகின்றன. இப்படி வேலை செய்யும் 12 பிரிவுகள் போக பாக்கி 18 பிரிவகளின் 8 பிரிவுகள் குறுக்கே செல்லும் 4 மூல தமநிகளிடத்தில் வியர்வையைச் சேர்க்கின்றன. பாக்கி 10 பிரிவுகளும் தொப்புளுக்கு கீழே உள்ள பாகங்களில் வாதம், பித்தம், கபம், ரத்தம், ரஸம் இவைகளை அவைகளின் மார்க்கங்களில் செலுத்துகின்றன.

குறுக்காகச் செல்லும் 4 மூல தமநிகள் ஒவ்வொன்றும் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும் பிரிந்து சரீரத்தில்

வியாபிக்கின்றன. அவற்றிந் நுனிகள் மயிர்க்காம்புகளோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் சரீரத்தின் உள்ளும் புறமும் ரசம் பரவுவதற்கு உதவுகின்றன. முக்கியமான சரீரத்திலிருந்து வியர்வையை வெளிப்படுத்துகின்றன. இவைகளின் உதவியினாலேயே உடம்பின்மேலே தேய்க்கப்படும் எண்ணெய் முதலிய பசையுள்ள பொருள்கள் உடம்பிற்குள் செல்லுகின்றன. ஸ்பரிச உணர்ச்சியை எடுத்துச் செல்வனவும் இவைகளே.

## இடை, பிங்களை, ஸுஷுமுனை

மேலே சொன்ன 3 நாடிகளின் பெயர்கள் இடை, பிங்களை, ஸுஷுமுனை என்பன. இவை ஐந்தும் சேர்ந்து ஓர் கயிறுபோல் அமைந்திருக்கின்றன. இவ்வைந்து நாடிகளும் கீழே இரண்டும், மேலே மூன்றுமாகச் சரீரம் முழுமையும் பரவுகின்றன. இடை, பிங்களை, ஸுஷுமுனை என்ற மூன்று நாடிகளும் மேல்நோக்கிச் செல்லுகின்றன. இடை, இடது புறத்திலும், பிங்களை வலது புறத்தினால் ஸுஷுமுனை மத்தியிலும் செல்லுகின்றன. பெண்களுக்கு இடை என்ற இடதுபுறத்து நாடி வாத, பித்த, கபங்களின் நிலைமையைச் செவ்வனே உணர்த்தும், ஆண் பாலர்களுக்கு வலது பக்கத்தில் சஞ்சரிக்கும் பிங்களை நாடி தோஷங்களின் நிலைமைகளைத் தெளிவாக தெரிவிக்கும். ஸுஷுமுனை என்னும் நாடியே ஆத்மாவின் இருப்பிடம். அதுவே வாயுவுக்கு நிலையான ஸ்தானம். அந்த வாயுவிலிருந்து உண்டாகும். சுவாசம், சரீரம் முழுவதும் செல்லுகின்றது. அந்த சவாஸத்தைக் கொண்டே ஒருவன் உயிருடன் இருப்பதையும் இறந்ததையும் அறியவேண்டும்.

## மூச்சின் முறை

இராப்பகல் கொண்ட ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரும் விடும் மூச்சு, 2,16,000. சுவாசம் மூன்றுவித மார்க்கங்களில செல்லக்கூடும். அவைகளுக்கு சந்திரகதி, சூரியகதி, அக்னிகதி என்றுபெயர். இவைகளுக்கு முறையே சந்திரமண்டலம், சூரியமண்டலம், அக்கினி மண்டலம் என்று பெயர். சந்திரகதியினால் ஒருவன் ஆயுள் வளருகின்றது. சூரிய கதியினால்

அதிகமாக வளராமலும், குறையாமலும் மத்யமநிலை உண்டாகிறது. அக்கினி கதியினால் ஆயுள் அழிந்துவிடுகிறது. இம்மண்டலத்தில் ப்ரம்ம நாடியில் அமிர்த கலசத்திலிருந்து விழும் அமிர்தம் ஆயுளையும், காந்தியையும விருத்தி செய்கிறது. சூரியமண்டலம், அக்கினி மண்டலங்களின் சம்பந்தத்தினால் உடம்பின் பல சக்திகளும், பலமும் குறைகிறது. ஆகையால் யோகிகளைக் கொண்டு இம்மூன்று மண்டலங்களையும் தனித்தனியே விசாரித்து அறியவேண்டும்.

1. நமது உடம்பில் பலவித சக்திகளைத் தந்து உதவும் பல சித்தர்கள் எப்பொழுதும் வசித்துவருகிறார்கள். உதாரணமாகக் கண்ணுக்கு ஒளியைக் கொடுப்பவர் சூரியபகவான். ஸ்பரிச உணர்ச்சியைக் கொடுப்பவர் வாயுபகவான். வாக்கின் சக்தியை கொடுப்பவர் அக்கினி. இவ்விதமாகவே ஒருவரது உடம்பை சதா எரித்துக்கொண்டிருக்கும் சூரிய மண்டல அக்னிமண்டலம் சுவாசங்களினால் ஏற்படும் ஆயுள் பலம் இவற்றின் குறைவை அமிர்த ப்ரவாகத்தினால் விருத்தி செய்வித்து வருகிறார். உள்நாக்கின் அடிப்பாகத்திலிருந்து உச்சிவரையில் செல்லும் ப்ரும்மரத்தம் என்ற துவாரத்தின் வழியே அமிர்தம் பெருகுகிறது என்பது யோக நூல்களில் கண்ட உண்மை.

2. இடை நாடி வழியே சஞ்சாரமே சூரியமண்டலம். பிங்களை நாடி சஞ்சாரமே சூரியமண்டலம். ஸுஷுமுனை நாடி சஞ்சாரமே அக்கினி மண்டலம்.வலது பக்கத்திலுள்ள பிங்களை நாடிவழியாக சுவாசத்தை உள்ளே இழுத்து, இடது பக்கத்திலுள்ள இடை நாடி வழியாக வெளியே விடவேண்டும். இதனால் ஆயுள், பலம் இவை விருத்தியாகும்.

நாடிகளின் நிலைமைகளையும் அவைகளுக்கு ஆயுள் முதலியவைகளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் வைத்தியர்கள் அறியும்படிச் சொல்லுகிறேன்.

## ஆயுள்

இதன் பொருள் விளங்கவில்லை.

## ஆயுட்காலத்தில் கப, பித்த, வாதங்கள் மிகுந்திருக்கும் வருஷங்கள்

உலகின் எல்லா ஜந்துக்களுக்கும் மேலான மனிதனுடைய ஆயுட்காலமாகிய 100 வருஷங்களுக்குள் முதல் 32 வருஷம் 4 மாதம் கபம் மிகுந்திருக்கும். அடுத்த 33 வருஷம் 4 மாதம் பித்தம் மிகுந்திருக்கும். அடுத்த 33 வருஷம் 4 மாதம் வாதம் மிகுந்திருக்கும்.

## மனிதன், பசு, குதிரை, யானை இவைகளுக்கு நாடி பார்க்கும் விதம்

நாடிப்பார்க்கும் இடங்கள் எல்லா ஜந்துக்களுக்கும் ஒரேமாதிரியாக அமைக்கப்படவில்லை. மனிதர்களில் ஆண்களுக்கு வலது புறத்திலும், ஸ்திரீகளுக்கு இடது புறத்திலும், பசுக்களுக்கு மூக்கு ஓட்டைகள் இரண்டும் சேருமிடத்திலும், குதிரைகளுக்குக் காதிலும், யானைக்கு வாய், துதிக்கை நுனி, கண்கள், வால், கன்னங்கள் இந்த இடங்களில் நாடி பார்க்கவேண்டும். ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வொரு இடத்தில் பித்த, வாத கபங்களினால் நாடியின் மாறுதல் தெளிவாகத் தெரியும். இவையெல்லாவற்றையும் பரமனே அறிவார்.

1. பொதுவாகத் தற்காலம் ஆயுளின் அளவு குறைந்திருப்பதால் இம்மூன்று பகுதிகளையும் தற்காலத்தில் குறைத்துக்கொள்ள வேண்டும்.

## நாடிகளைக்கொண்டு தோஷங்களையும், வியாதிகளையும் அறிதல்

மனிதனுக்கு ஆயுல்காலம் முழுவதும் நாடியானது வாத, பித்த கப காலங்களைச் சேர்ந்த மூன்று வகை நடையுடன் கூடியதாகவே இருக்கும். அவைகளின் வேகம் மாறுபடும் விதத்தைக்கொண்டு வியாதிகளின் வகையை அறிந்து கொள்ளலாம்.

### நாடி பார்க்கும் விதம்

வாழைப்பூ அல்லது தாமரை மொட்டுப்போல் அமைந்திருக்கும் ரோகியின் முன்னங்கையை வைத்தியன் தன் இருகைகளாலும் பிடித்துக்கொண்டு கட்டைவிரலின் அடிப்பாகத்தில் தனது மூன்று விரல்களை வைத்து அழுத்தி வாதம், பித்தம், கபம் என்ற வரிசையில் சக்கரம் சுழலுவது போல் நடந்துகொண்டிருக்கும் நாடிகளின் நடையைக் கவனிக்க வேண்டும்.

### நாடியின் ஸ்தானங்கள் அல்லது நாடியின் நடை தெளிவாய்த் தெரியும் இடங்கள்

அடியிற்கண்ட எட்டு இடங்களில் மனிதனுடைய நாடியைப் பார்த்து உடம்பின் நிலையைக் கண்டு கொள்ளலாம்.

1. இரண்டு கைகள்

2. இரண்டு கால்கள்

3. கழுத்தின் முன்பக்கத்தில் இருபுறங்கள்

4. மூக்கின் அடியில் இருபுறங்கள்.

இவைகளுள் கைகளிலும், கால்களிலும் நாடியின் ஸ்தானம் மூன்று விரல்களால் அறியத்தக்க அளவுள்ளது. கழுத்தில் இரண்டு விரல் அளவுள்ளது. மூக்கின் அடியில் அரைவிரல் அளவுள்ளது. இந்த எட்டு ஸ்தானங்களும் பிராண சக்தி நன்றாக நிலைத்திருக்கும் இடங்கள்.

1. அஜீர்ணம்.

2. ஆவதோடங்கள் (அதாவது நன்றாகப் பக்குவமடையாத அன்னரசம், அதற்கேற்பட்ட சரியான மாறுதலையடைந்து சரீரரத்தில் சேராமல் தங்கி நின்று அதனால் ஓர்வகை விஷம் ஏற்பட்டுக் கீழ்வாயு முதலிய வியாதிகளை உண்டாக்கும் தோடம்.

3. ஜ்வரம் வந்திருப்பது.

4. பசி.

5. வாதம், பித்தம், கபம் இவைகளில் எது அதிகப்பட்டிருக்கிறது என்பது.

### தன் ஸ்தானத்தை விடாதிருக்கும் கால் நாடியைக் கொண்டு அறியப்படும் நிலைமைகள்

1. உயிருடன் இருப்பது.
2. உடம்பு இலேசாக இருப்பது.
3. யாதொரு வியாதியுமின்றி ஆரோக்கியமாய் இருத்தல்.
4. ஸ்வரம் விட்டிருக்கிறதா என்பது.

### கழுத்து நாடியைக்கொண்டு அறியப்படுபவை

1. திடீரென்று ஏற்படும் சுரம்.
2. நீர்வேட்கை.
3. களைப்பு.
4. பெண் சங்கமம்.
5. மயக்கம்.
6. பயம்.
7. துக்கம்.
8. கோபம்.

### மூக்கின் அடியிலுள்ள நாடியைக்கொண்டு அறிவது

1. மரணம் அல்லது உயிருடனிருத்தல்
2. பெண்ணாசை
3. கண்ணைப்பற்றிய வியாதிகள்.
4. தலைவலி.
5. காது, வாய் இவைகளில் ஏற்படும் வியாதிகள்.

### வயதுக்குத் தகுந்தபடி வியாதியின் சாத்திய அசாத்தியத்தை அறிவதற்கான நாடிகள்

1. பாலப் பருவத்தில் தலையிலுள்ள நாடியைக்கொண்டும்.
2. குமாரப் பருவத்தில் புருவங்களின் இடையிலும்.
3. மத்திய வயதில் கழுத்திலும், இருதயத்திலும், வயிற்றிலும் இருவிலாப்புறங்களிலும், இரு கைகளிலும், விரைகளின் மத்தியிலும் நாடிபார்த்து நோயின் சாத்திய அசாத்தியத்தை அறியவேண்டும்.

## காலநிலைக்குத் தகுந்தபடி நாடி மாறும் வகை

கபநாடி முற்பகலிலும், வசந்த ருதுவிலும், சீத்தினாலும் சுறுசுறுப்பின்மையினாலும், துவர்ப்பினாலும் அதிகரிக்கும்.

நடுப்பகலிலும், மழைகாலத்திற்குப் பிந்திய கூதிர்ப் பருவத்திலும், உரைப்பு, உப்பு முதலிய சுவைகளினாலும் உஷ்ணத்தினாலும், கடுமையான வேகத்திலும் பித்தநாடி அதிகரிக்கும்.

சாயங்காலத்தில், குளிர்ச்சியினாலும், உறைப்பினாலும், வரட்சியினாலும், நுட்பத்தினாலும் வாதநாடி அதிகரிக்கும்.

இவ்விதமே கப, பித்த வாத நாடிகள் முறையே முன்னிரவு, நள்ளிருல், உஷ்ணக்காலம் என்ற இராக்காலப் பகுதிகளிலும், பனிக்காலம், கோடைக்காலம், மாரிக்காலம் என்ற பருவங்களிலும் மிகுந்திருக்கும்.

## பருவங்களில் நாடிகளின் நடை மாறும் விதம்

பின்பனிக் காலத்தில் அட்டை, யானை இவற்றின் நடைகளைப்போல் (அதாவது மிகவும் மெதுவாகவும், ஜாக்கிரதையாகவும் நடந்து ஸ்திரமாக அடியை ஊன்றும் நடை) நாடி அடக்கும்.

முன்பனிக் காலத்தில் தவளை நீர்க்காக்கை இவைகளின் நடையோடு (அதாவது தத்தித்தத்தி) நாடி நடக்கும்.

முதுவேனிற் (கடுங்கோடை) காலத்தில் அன்னம், பாம்பு இவைகளின் நடையைப்போல் (அதாவது பக்கத்துக்குப் பக்கம் அசைந்துகொண்டு) நாடி நடக்கும்.

மழைக்காலத்தில் முயல், மீன் இவைகளைப்போல் துள்ளிக்குதித்து நாடி நடக்கும்.

## ஆறுசுவைகளாலும் நாடி மாறும் விதம்

நாடியானது தித்திப்புச் சுவையுள்ள ஆகாரத்தில் மந்தமாய் மண்டூக (தவளை) கதியுடையதாயிருக்கும்.

புளிப்புச்சுவை ஆகாரத்தால் வியர்வையுள்ளதாயும், குதிரையின் கதியுடையதாகவும் இருக்கம்.

உப்புச்சுவை ஆகாரத்தால் வியர்வையுள்ளதாயும், உஷ்ணமாயும், மிகவும் வேகமாய் மானின் கதியுடையதாகவும் இருக்கும்.

கைப்புச்சுவை ஆகாரத்தால், குளிர்ந்தும், யானையைப் போல் மந்த கதியுடை யதாயுமிருக்கும்.

உறைப்புச்சுவையுள்ள ஆகாரத்தால் உஷ்ணமாயும், வேகமாகவும், அட்டை முதலியனவைகளின் கதியுடையதாகவும் இருக்கும்.

துவர்ப்புச் சுவையுள்ள ஆகாரத்தால் மிகவும் வரண்டும் ராஜஹம்ஸ கதியுடையதாகவும் இருக்கும்.

### இரண்டு சுவை கலந்து உட்கொள்வதால் நாடி மாறும் விதம்

தித்திப்பு, புளிப்பு இரண்டும் கலந்து ஆகாரத்தால் நாடி கப நாடியின் கதியுடையதாக இருக்கும்.

உறைப்பும், உப்பும் கலந்து ஆகாரத்தால் நாடியானது பித்தநாடியின் கதியுடையதாயிருக்கும்.

ஒன்றுக்கொன்று விரோதமான சுவைகளைக் கலந்து புசிப்பதால் நாடி ஒன்றும் நிதானம் செய்ய முடியாததாக இருக்கும்.

அசுத்தமான மாமிசங்களைப் புசிப்பதால் நாடியானது அடிக்கடி மாறுகின்ற கதியுடையதாயிருக்கும். போதையுள்ள வஸ்துக்களைச் சாப்பிடுவதினாலும், களைப்பினாலும் நாடி பல்வகைக் கலப்பு நடையுடையதாயிருக்கும்.

### ஒன்றுக்கொன்று விரோதமான சுவைகள்

1. தித்திப்பு - உறைப்பு.

2. புளிப்பு - கைப்பு, துவர்ப்பு.

3. உப்பு - கைப்பு, துவர்ப்பு.

4. உறைப்பு - தித்திப்பு.

5. கைப்பு - புளிப்பு, உப்பு.

6. துவர்ப்பு - புளிப்பு, உப்பு.

### அறுசுவையருந்தக் காலம்

பின்பனிக் காலத்தில் தித்திப்பும்
முன்பனிக்காலத்தில் கைப்பும்
முதுவேனிற் காலத்தில் தித்திப்பும்
இளவேனிற்காலத்தில் உறைப்பும்

மழைக்குப் பிந்திய கூதிர்ப் பருவத்தில் துவர்ப்பும், மாரிக்காலத்தில் உப்பும், அதிமாக உள்ள ஆதாரங்களைப் புசித்தல் தரும்.

### தோஷங்கள் (பித்த, வாத, கபங்கள்) அதிகரிக்கும் காலங்கள்

***வாதம்:*** முதுவேணிற் காலத்தில் சேர ஆரம்பித்து மழைக்காலத்தில் ப்ரயோகம் அடையும்.

***பித்தம்:*** மழைக்காலத்தில் சேர ஆரம்பித்து மழைக்குப் பிந்திய கூதிர்ப்பருவத்தில் ப்ரயோகம் அடையும்.

***கபம்:*** பின்பனிக் காலத்தில் சேர ஆரம்பித்து இளவேனிற் காலத்தில் ப்ரயோகம் அடையும்.

### ஜீவ நாடி

எல்லா சரீரங்களிலும் ஸூக்ஷ்யமாகச் செல்லுகிற ஜீவநாடி, என்ற ஓர் நாடி இருக்கிறது. அது "யவை" என்னும் நெல்லின் அளவாகவே இருந்தபோதிலும் தெளிவாகப் புலனாகக் கூடியது. வாதம், பித்தம், கபம் இம்மூன்றின் நன்மைகளையும் உடையது. அவற்றின் நிலைமையைப் பொறுத்துப் பலவித கதியை உடையதாக இருக்கும். இது எப்போதும் எல்லா அங்கங்களிலும் செல்லும் நாடி. இது ஒருவருடைய ஆரோக்கியம், வியாதி இவற்றின் நிலைமையைத் தெளிவாகக் காட்டக்கூடியது.

இதைக் கண்டறியும் இடம் மணிக்கட்டு. அதை நல்ல அப்பியாசத்தில் ஆள்காட்டி விரலில் நுனியைக்கொண்டு சோதிக்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது அது எப்பொழுதும் நன்றாகக் கைக்குப் புலப்படாமல் தாண்டிச் செல்லாது.

*1.* மூன்று விரல்களையும் வைத்து வாத, பித்த, கப நாடிகளைச் சோதிப்பது சாதாரணமாக நாடி பார்க்கும் வழி. ஆனால் ஜீவநாடி என்னும் முக்கியமான இந்த நாடி மிகவும் ஆராய்ந்து அறியவேண்டிய சூட்சுமமான கதியையுடையது. மூன்று விரல்களையும் வைத்துப் பார்க்கும்போது இந்த நாடி ஆள்காட்டி விரலின் நுனியால் மட்டும் கண்டு அறியக்கூடியது. நல்ல அப்பியாசத்திலேயே இதைக் கண்டறியக் கூடியதாக இருந்தபோதிலும் தெளிவாகவும் நிச்சயமாகவும் வாத, பித்த, கபங்களையும் உடம்பின் நிலையையும் இதைக்கொண்டு கண்டுபிடிக்கலாம். இதைத்தமிழில் குருநாடி என்பார்கள். இது இருக்கும் இடம் வாதத்துக்கும், பித்தத்துக்கும் நடுவே என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"என்றைக்கும் வாதபித்தம் நடுவே நிற்கும்
ஏறுவதும் குறைவதும் இல்லையப்பா
கன்றுக்குப் பாலிறங்கும் பசுவைப்போல்
காத்திருக்கும் குருநாடி காலைப்பாரே."

"ஏறப்பா வாதம் என்று செல்வார் மூடர்
இருந்தியங்கே பார்ப்பளவில் வேறாய் நிற்கும்
கருநாடிக் குருநாடியாகக் காணும்."

இந்த நாடியானது தேகநிலையைத் தெரிவிக்க இயலாத ஊமை, விவரந்தெரியாத பருவமுடையவர்கள், மயக்கமடைந்தவர்கள் இவர்களுடைய உடம்பிலும் வாத, பித்த நிலைமைகளை வஸ்துக்களை ஓர் விளக்கு பிரகாசப்படுத்துவது போல் தெளிவாக்கும். ஒவ்வொருவருடைய வலது கையிலும், மணிக்கட்டின் அடியில் வாத, பித்த, கபங்களின் தன்மைகளைத் தன்னிடமாகக்கொண்டு அவற்றை இந்த ஜீவ நாடி பிறருக்கு

அறிவிக்கிறது. மூன்று விரல்களையும் கொண்டு அமுக்கிப் பார்க்கும்போது அதில் துடிக்கிற இந்த நாடியைக்கொண்டு வாத, பித்த, கபங்களை அறிவாளியான வைத்தியன் கண்டுகொள்வான்.

### ஜீவ நாடியின் தன்மை

கபநோயில் நாடி குளிர்ச்சியாகவும் நின்று நின்று நகரும் கதியுடையதாகவும் இருக்கும்.

பித்தநோயில் நாடி உஷ்ணமாகவும், நிலையின்றி ஓடிக்கொண்டிருக்கும் கதியுடையதாகவும் இருக்கும்.

வாதநோயில் நாடி சீதோஷ்ண மிதமாகவும், வளைந்து செல்லும் கதியோடும் இருக்கும். மூன்று தோஷங்களும் அதிகரித்த வியாதிகளில் மூன்றுவித கதிகளும் சேர்ந்திருந்தும்,

"கைம்முறையாய்க் குருதொட்டுக் காட்டத் தோன்றும்
பெருநாடி சாத்திரத்தில் மயங்கிடாதே
புலத்தியர் குருநாடி பின்னல்பாரே."

தமிழ் நூல்களில் வாநாடி, பித்தநாடி, கபநாடி இவற்றோடு சிறுவிரல் பூதநாடி என்ற ஒருநாடியும், வாதத்திற்கும் பித்தத்திற்கும் இடையே குருநாடியும் ஆக 5 நாடிகள் கூறப்படுகின்றன.

### சாத்தியநாடி

### வியாதி குணமாகக்கூடியதைக் காட்டும் நாடி

நாடியானது சன்னிபாததோஷம் (மூன்று தோடங்களும் சேர்ந்தது) இல்லாமல் குயில், தவளை இவைகளின் கதியுடையதாய் இருப்பதோடு நல்ல ஞாபகமும் தெளிந்த பார்வையும் இருந்தால், சுரம் படிந்து வியாதி குணமாகக் கூடியதைக் குறிக்கும்.

### அசாத்திய நாடி

### வியாதி குணமாவது அரிது என்பதைக் காட்டும் நாடி

நாடியானது முதலில் பித்தகதியுள்ளதாகவும் பிறகு வாதகதியுள்ளதாகவும் பிறகு கபகதியுள்ளதாகவும் மாறிக் கொண்டிருந்தாலும், சக்கரம் சுழல்வதுபோல் அடிக்கடி

நிலைமாறி, சிறிதுநேரம் மிகக்கடுமையாகவும் சிறிதுநேரம் நடுத்தரமாகவும், சிறிது நேரம் நுட்பமாகவும் இருந்தாலும், அவ்வித நாடி வியாதி குணமாவது அரிது என்பதைக் காட்டும் என்று நாடியை நன்கு அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

### ஆயுளின் முடிவைக்கூறும் நாடி

நாடியானது மிக நுட்பமாகவும், அதிவேகமாகவும் அடிக்கடி மெதுவான நடைக்கு மாறிக்கொண்டும், மேலே எழும்பாமல் உள்ளுக்குச் சென்று கொண்டும், இருக்குமானால் ஆயுள் முடிந்ததெனக் கூறவும்.

### வியாதியின் நிலையைக் கண்டறிய முடியாத ஸ்திதிகள்

தேகப்பயிற்சி செய்தவர், தாகம், வெய்யில் இவைகளால் வாடியவர், பசியுள்ளவர், உண்டவர், எண்ணெய் தேய்த்துக் குளித்தவர், போகம் செய்தவர் இவர்களுடைய நாடி நன்கு அறியமுடியாது.

### தெளிவாக நாடியை அறியக்கூடிய நிலை

சுத்தமான சரீரத்தை உடையவர், கழுத்து நிமிர்ந்திருக் கும்படி நேராக உட்கார்ந்திருப்பவர். கண் விழிக்காதவர், தேகப்பயிற்சி, ஸ்திரீபோகம், ஆகாரம், ஸ்நானம் இவற்றைச் செய்யாதவர், மனச்சாந்தியுடையவர், கோபம் முதலிய வேகங்கள் இல்லாதவர், கபடமில்லாமல் பேசுபவர், நம்பிக்கையுள்ளவர் கோபப்படாதவர், வைத்தியனிடத்தில் அன்பும் மரியாதையும் உடையவர் இப்படிப்பட்டவர்களுடைய நாடியைப் பார்த்தறிய இயலும். வியாதியிருந்தாலும், வியாதியில்லாவிட்டாலும் இவ்விஷயங்களை நன்றாய்ச் சோதித்துக்கொண்டு பிறகு நாடிபார்க்கவேண்டும்.

### நாடியின் விசேடம்

புத்திமான்களான வைத்தியர்கள் நாடிகளைப்பற்றிய எல்லா சாஸ்திரங்களின் சாரத்தையும் கவனித்து அறிய வேண்டிய நாடியைச் சிறந்த வைத்தியன் தனது மூன்று விரல்களால் பார்த்து வாத, பித்த, கபதோடங்களின் மிகையினாலும், குறையினாலும் உண்டாகும் சுதிபேதங்களை விவரமாகத் தெரிந்துகொள்ளுவான்.

### விரல்களின் வரிசையும், தோடங்களின் வரிசையும்

வைத்தியன் தனது ஆள்காட்டிவிரல், நடுவிரல், பவித்திர விரல் ஆகிய மூன்று விரல் நுனிகளாலும் நாடியைக் கவனித்துப் பார்க்கும்பொழுது ஆள்காட்டி விரல் நுனியில் வாதமும், நடுவிரல் நுனியில் பித்தமும், பவித்திரவிரல் நுனியில் கபமும் மாறாமல் நிச்சயமாய்ப் புலப்படும்.

### ஆயுட்காலத்தின் பல பகுதிகளில் கைபார்க்கும் முறை

ஆண்களுக்கு ஐம்பது வயது வரையில் வலதுகை நாடியைப் பார்க்கவேண்டும். அதற்குப் பிறகு இடதுகை நாடியைப் பார்ப்பது நல்லது. பெண்களுக்கு ஐம்பது வயது வரையில் இடதுகை நாடியைப் பார்க்கவேண்டும். அதற்குப் பிறகு வலதுகை நாடியைப் பார்ப்பது நல்லது.

### நாடிகளுக்குரிய கதிகள்

வாதநாடிக்கு ஸர்ப்பத்தின் கதியும், பித்தநாடிக்குத் தவளையின் கதியும், கப நாடிக்கு அன்னபட்சியின் கதியும் இயற்கையாக உள்ளன. வாதநாடி வக்கிரகதியாக இருக்கும் போது தேரை, ஸர்ப்பம், சிட்டுக்குருவி, ஆமை இவைகளைப் போலவும், ஸ்திரகதியாக இருக்கும்போது உஞ்சல், மான், மீன், அட்டை, மூஞ்சூறு இவைகளைப் போலவும் இருக்கும்.

பித்தநாடி காக்கை, குயில், மயில் இவைகளைப் போல் நிலையற்ற கதியுடையதாயும், மாடப்புறா, அன்னம், ஊர்க்குருவி, குதிரை இவைகளைப்போல் ஸ்திரமான கதியுடையதாகவும் இருக்கும்.

கபநாடி, மாடப்புறா, ஊர்க்குருவி, கோழி, குதிரை, அன்னம் இவைகளின் கதியைப்போல் சஞ்சலமாகவும், எருமை, பெண். சிட்டுக்குருவி, யானை இவைகளைப்போல் ஸ்திரமான கதியை உடையதாகவும் இருக்கும்.

### இரண்டு தோடங்கள் சேர்ந்திருக்கும்பொழுது நாடியின் கதிகள்

வாதம் பித்தத்தோடு சேர்ந்திருக்கும்பொழுது நாடி சர்ப்பம், வேங்கை இவைகளின் கதியை ஒத்திருக்கும்.

வாதம் கபத்தோடு கலந்திருக்கும்பொழுது நாடி சர்ப்பம், அன்னம் இவைகளின் கதியை ஒத்திருக்கும்.

பித்த கபத்தோடு கலந்திருந்தால் நாடி தவளை, அன்னம் இவைகளின் கதியை ஒத்திருக்கும்.

திரிதோட சுரத்தில் நாடியானது பாம்பு, தவளை, அன்னம் இவைகளின் கதியை ஒத்திருக்கும் என்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்.

1. வாத, பித்த, கப நாடிகளின் நடையைப்பற்றிய இந்த சுலோகங்களில் வாத, பித்த, கபங்களின் இயற்கையான கதிகளும் பிறகு மற்றொரு சுலோகத்தில் நாடியானது ஸ்திரமாக இருக்கும் நிலையிலுள்ள கதி, நிலையில்லாமல் இருக்கும்போது உள்ள கதி ஆக இரண்டுவித கதிகள் வாத, பித்த, கபம் ஒவ்வொன்றுக்கும் கூறப்பட்டிருக்கின்றன.

தமிழ், நூல்களில் வாதநாடி அன்னம், கோழி, மயில் போலும் பித்தநாடி. ஆமை, அட்டை போலும் கபநாடி. தவளை,பாம்பு போலும் நடக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

### *ஸந்நிபாத (மூன்று தோடங்களும் சேர்ந்து) நாடி*

1. சந்நிபாத நோய்களில் நாடி குதிரை, அன்னம், மயில், சர்ப்பம், புறா, நண்டு இவைகளின் கதியை ஒத்திருக்குமென்று அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

### *அசாத்திய சன்னிபாத நாடி*

2. நாடியானது மிகவும் மெதுவாயும், சிதைந்து சிதைந்தும், தாறுமாறாகவும், நின்று நின்றும், மிக நுட்பமாய், ஸ்வரூபம் அற்ர நிலையை அடைந்தாலும், துடிப்பே இல்லாமல்போன நாடியானது மறுபடி துடித்தாலும் அவை வைத்தியர்கள் தங்கள் விரல்களால் கவனித்துப் பார்த்து நிலையற்ற பலவித கதிகளையுடையதாயிருப்பதால் அசாத்திய சன்னிபாதம் என்று சொல்லவார்கள்.

## நாடிகளின் பெயர்கள்

### நமது தேகத்திலுள்ள முக்கியமான 10 நாடிகளாவன:

1. இடை
2. பிங்களை
3. சுழுமுனை
4. சிங்குவை
5. புருடன்
6. காந்தாரி
7. அத்தி
8. அலம்புடை
9. சங்கினீ
10. குரு.

## ஆறு சக்கரங்களின் விபரம்

1. மூலாதாரம்
2. ஸ்வாதிஷ்டானம்
3. மணிபூரகம்
4. அனாஹதம்
5. விசுத்தி
6. ஆக்ஞை

என ஆறு ஆதாரங்கள் சரீரத்திலமைந்திருக்கின்றன.

## ஆறு சக்கரங்களின் நிலைகள்

மூலாதாரத்தில் மூலாதரச் சக்கரமும்,
லிங்கத்தில் ஸ்வாதிஷ்டானமும்,
நாபியில் மணிபூரகமும்,
ஹ்ருதயகமலத்தில் அனாஹதமும்,
நெற்றியில் ப்ரும்மத்தியத்தில் ஆக்ஞா சக்கரமும்

அமைந்திருக்கின்றன.

## பத்து நாடிகளின் நிலை

இடை, பிங்களை, ஸுஷும்னை என்ற மூன்று நாடிகளும் மேல்நோக்கிச் செல்கின்றன. காந்தாரீ, புருடன், அத்தி, பயஸ்விநீ என்ற நான்கு நாடிகளும் சரீரத்தில் குறுக்காகச் செல்கின்றன. அலம்புடை, குரு, சங்கினீ என்ற மூன்று நாடிகளும் கீழ்நோக்கிச் செல்கின்றன. இந்த பத்து நாடிகளும் சரீர மத்தியில் எல்லா அங்கங்களிலும் விரிவடைந்து செல்கின்றன.

## நமது உடம்பிலுள்ள கலை முதலிய உறுப்புகள்

1. கலைகள் ஏழு.
2. ஆசயங்கள் (தங்குமிடங்கள்) ஏழு.
3. தாதுக்கள் ஏழு.
4. தாது மலர்கள் ஏழு.
5. உபதாதுக்கள் ஏழு.
6. தோல்கள் ஏழு.
7. தோடங்கள் ஏழு.
8. ஸ்நாயுக்கள் அல்லது தசைக் கயிறுகள்.
9. ஸந்நிகள் 210
10. எலும்புகள் 300
11. மர்மஸ்தானங்கள் 107
12. சிரைகள் 700
13. தமநிகள் 24
14. மாம்ஸபேசிகள் 500
15. கண்டரங்கள் (திரண்டு உருண்டை தசைக்கருவிகள்) 16
16. துவாரங்கள் 10

இவைகள் பெண் ஆண்களுக்குப் பொதுவாக உள்ளவை பெண்கள் உடம்பில் மாம்ச பேசிகள் 20 அதிகமாகவும், துவாரங்கள் 3 அதிகமாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

1. மூலச்சுலோகத்தில் சக்ரமத்யே என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது சக்கிரத்தின் நடுவில் அல்லது சக்கிரங்களின் நடுவில் என்று இதற்குப் பொருள் கூறலாம்.

2. கலை - மீறியான தாது முதலியவற்றின் கசிவுகள், நாம் உண்ணும் உணவு தாதுக்களாகவும், தோஷங்களாகவும், மலங்களாகவும் மாறுபாடடைகின்றன. இவைகளுள் ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டான பிறகு அவ்விரண்டையும் பிரிப்பது போன்ற கசிவு ஒன்று இடையே மிச்சப்படுகிறது. அது சவ்வுகளாலும், ஸ்நாயுக்களாலும், கபத்தாலும் மூடப் பட்டிருக்கும். இதற்குக் கலை என்று பெயர்.

## கலைகள் ஏழு

1. மாம்ஸதரா
2. ரக்ததரா
3. மேதோதரா
4. யகிருந்தரா - யகிருத் கல்லீரல்
5. ஆந்த்ரதரா
6. அக்கினிதரா
7. ரேதோதரா

1. இக்கலையின் வழியாக மாம்ஸத்தில் சிரை, ஸ்நாயு, தமநி, ஸ்ரோதஸ் இவைகள் பரவுகின்றன.

2. மாம்ஸத்திலும், ரத்தக் குழாய்களிலும் கல்லீரல், மண்ணீரல் இவைகளிலும் இந்தக் கலை ரத்தத்தைத் தாங்கி நிற்கின்றது.

3. வயிற்றுச் சதை முதலிய இடங்களில் மேதஸ்ஸைக் காப்பாற்றுவது இக்கலை.

4. ஆந்திரதரா என்னும் கலை மலதரா என்றும் சொல்லப்படுகிறது. ஆந்த்ரம் - குடல்.

5. இதற்கு பித்ததரா என்று பெயர் உண்டு. இது வயிற்றிலிருந்து குடலுக்குச் செல்லும் குழாயாகிய கிரஹணியில் இருந்துகொண்டு வயிற்றில் ஆகாரம் பக்குவமாகும் வரையில் அதைக்கீழே இறங்காமல் தாங்குகிறது.

6. ரேதஸ் - சுக்கிலம்

## ஆசயங்கள் (தங்குமிடங்கள்)

1. மார்பில் கபாசயமும்.

2. அதன் கீழே ஆமாசயம் அல்லது ஜீரணத்தின் முற்பகுதி நடக்கும் இடமாகிய வயிறும்.

3. தொப்புளுக்கு மேலே வலது புறத்தில் அக்கினி ஆசயம் என்னும் இடமாகிய வயிறும்,

4. அதற்குமேலே பித்தாசயமும்,

5. பித்தாசயத்தின் கீழ் வாதாசயமும்,

6. அதன்கீழ் மலாசயமும், மூத்திராசயமாகிய மூத்திரப்பையும் அமைந்திருக்கின்றன.

7. மார்பில் ஜீவாசயம், ரத்தரசயம் என்று வழங்கப்படும் இருதயம் அமைந்திருக்கிறது.

இவை பெண் ஆண்களுக்குப் பொதுவானவை. பெண்களுக்கு இன்னும் மூன்று ஆசயங்கள் உண்டு. அவை தரா என்ற பெயருடைய கர்ப்பாசயம் ஒன்று. ஸ்தன்யாசயம் இரண்டு. ஆக மூன்று.

### தாதுக்கள்

1. ரசம் அல்லது ஆகாரத்தின் ஸாரமான அம்சம், 2. இரத்தம், 3. மாமிசம், 4. மேதஸ்,(கொழுப்பு) 5. அஸ்தி(எலும்பு), 6. மஜ்ஜை, (எலும்புக்குள் உள்ள ஸாரம்) 7. சுக்லம்.

இவைகள் பித்த அக்னியினால் பக்குவம் செய்யப்பட்டு முறையே ஒன்றிலிருந்து மற்றொன்றாக உண்டாகின்றன.

### தாது மலங்கள்

1. நாக்கு, கண், கன்னம் இவைகளிலிருந்து வடியும் நீர் (ரஸம் ரத்தமாக மாறும்போது உண்டாகும் கழிவுப்பொருள்)

2. ரஞ்சக பித்தம் (ரத்தத்திற்கு வர்ணத்தைக் கொடுக்கும் பித்தத்தின் ஓர் பகுதி, ரத்தம் மாமிசமாக மாறும்போது உண்டாவது)

3. காது குரும்பை, நாக்கு, பல், அக்குள், மர்மஸ்தானம் முதலியவைகளில் உண்டாகும். அழுக்கு (மாமிஸம் மேதஸ்ஸாக மாறும்போது உண்டாவது)

4. நகம், (மேதஸ் அஸ்தியாக மாறும்போது)

5. கண் பீளை, (அஸ்தி மஜ்ஜையாக மாறும் போது)

6. முகத்தில் பளபளப்பு அல்லது எண்ணெய்ப் பசை (மஜ்ஜை சுக்லமாக மாறும்போது)

### உப தாதுக்கள்

1. ஸ்தன்யம் (தாய்ப்பால்)

2. ருது.

3. வஸை அல்லது சுத்தமான மாம்சத்திலிருந்து உண்டாகும் பசையுள்ள நீர்.

4. வியர்வை.

5. பல்.

6. கேசம்.

7. ஓஜஸ்: இது எல்லா தாதுக்களின் சாரம், எண்ணெய்ப் பசையுடனும், சீதமாகவும், ஓடும் தன்மை இல்லாததாகவும், வெளிறின நிறமுடையதாகவும் இருப்பது. இது சந்திராம்சமாக உண்டானது. உடம்புக்கு பலத்தையும் புஷ்டியையும் கொடுக்கக் கூடியது.

இந்த ஏழு உபதாதுக்களும் ஏழு தாதுக்களின்றும் உண்டாகின்றன.

### ஏழு தோல்கள்

1. தோல்கள் ஏழு. எல்லாவற்றிற்கும் மேலே இருப்பதற்கு அவபாஸிநீ என்று பெயர். இது சரீரத்தின் நிறத்தை நன்கு காட்டுவதனால் இதற்கு இந்தப் பெயர் ஏற்பட்டது. இது நெல்லில் பதினெட்டில் ஒருபங்கு கனமுடையது.

2. இரண்டாவது தோலுக்கு ரோஹிதா(சிவப்பு) என்று பெயர்.

3. மூன்றாவது தோலுக்கு ச்வதா (வெள்ளை) என்று பெயர். இது நெல்லில் பன்னிரண்டில் ஒருபங்கு கனமுடையது.

4. நான்காவது தோலுக்கு தாம்ரா (தாமிர நிறமுடையது) என்று பெயர். இது நெல்லில் எட்டிலொரு பங்கு கனமுடையது.

5. ஐந்தாவது தோலுக்கு வேதி நீ என்று பெயர். இது நெல்லில் இரண்டில் ஒருபங்கு கனமுடையது.

6. ஆறாவது தோலுக்கு ரோஹீனி என்று பெயர். இது நெல்லில் இரண்டில் ஒருபங்கு கனமுடையது.

7. ஏழாவது தோலுக்கு மாம்ஸதரா என்று பெயர். இது இரண்டு நெல் கனமுடையது.

## ஏழுநோய்களில் உண்டாகக் கூடிய நோய்

முதல் தோலான அவபாநியா ஸித்மா (தேமல் போன்றது)

இரண்டாவது தோலான ரோஹிதையில் அலஸகம் (அரிப்போடு கூடிய கட்டிகளின் சேர்க்கை)

மூன்றாவது தோலான ச்வேோதையில் சர்மதளம் (வலியும் தினவும் கூடிய கொப்புளங்கள்)

நான்காவது தோலான தாமரையில் கிலாஸம் (தோலைப் பற்றிய வெண்குஷ்டம்)

ஐந்தாவது தோலான வேதியில் குஷ்டம்.

ஆறாவது தோலான ரோகிணியில் கண்டமாலை

ஏழாவதான கனத்த தோலுள் கட்டி முதலானவைகள் உண்டாகும்.

## தோடங்கள்

வாதம், பித்தம், கபம் இம்மூன்றுக்கும் தோடங்களென்றும், தாதுக்கள் என்றும், மலங்கள் என்றும் பெயர். இவை ஒவ்வொன்றும் ஐந்துவகைப்படும். இவற்றுள் வாதம் அதிக பலமுள்ளது. அதுவே தேகத்தைத் தாங்கி நிற்கிறது. மேலும் உடம்பிலுள்ள பல அம்சங்களைப் பலவாறாகப் பிரிப்பதுவும் அதுவே. அது ரஜோகுணம் உடையது. கண்ணுக்குத் தெரியாதது. சீதமாகவும், வறட்சியுடையதாகவும் உள்ளது.

1. வாத, பித்த, கபங்கள் அளவு மீறுவதனால் உடம்பைத் தூஷிப்பித்து (கெடுத்து) நோய்களை உண்டாக்குவதனால் தோடங்கள் என்றும், ஏழு தாதுக்களைப்போல் இவைகளும் உடம்பைக் காப்பாற்றுவதால் தாதுக்கள் என்றும், அன்னம்

சீரணமாகும்போதும் தாதுக்கள் மாறும்போதும் உண்டாவதால் மலங்கள் என்றும் கூறப்படுகின்றன.

2. உலகத்திலுள்ள பொருள்களை மூன்றுவகைக் குணங்களுள்ளவைகளாக நமது நூல்களில் பிரித்திருக்கிறார்கள். ஸ்த்வம், ரஜஸ் தாமஸ் என்பவை இம்மூன்று குணங்களாகும். சத்வம் என்பது தெளிவு. வெண்மை நிறம், பிரகாசம், சாந்தி இவைகளைக் குறிக்கும். ரஜோகுணம் என்பது சுறுசுறுப்பு, ஆசை, கோபம் முதலிய உணர்ச்சிகள், சிவப்பு நிறம் இவைகளைக் குறிக்கும் தமோகுணம், அறியாமை, மயக்கம், தூக்கம், கெட்டபுத்தி, கருமை இவைகளைக் குறிக்கும். இம்மூன்று குணங்களும் சமமாயிருக்கும்பொழுது பலவகையான பிரபஞ்சம் உற்பத்தியாகவில்லை, இவைகள் ஒன்றோடொன்று ஏற்றத்தாழ்ச்சியாக ஏற்படும்போது பலவகைப் பிரபஞ்சம் உற்பத்தியாகிறது. எனினும் எல்லா வஸ்துக்களிடத்திலும் இம்மூன்று குணங்களும் இருந்தபோதிலும் மிகுதியாக இருக்கும் குணத்தையே வஸ்துவின் குணமாகச் சொல்லுவது வழக்கம். இம்மூன்று குணங்களும் சேர்ந்த சக்தியே இயற்கையின் மாயாசக்தி.

## வாதத்தின் ஐந்து வகையும் வருமாறு

இருதயத்தில் சஞ்சரிப்பதற்கு ப்ராணன் என்றும், மலாசயத்தில் சஞ்சரிப்பதற்கு அபானன் என்றும், ஸர்வ அங்கங்களிலும் சஞ்சரிப்பதற்கு வியானன் என்றும் ஆகாரம் பக்குவமடையும் இடங்களாகிய ஆமாசயம், பக்குவாசயம், அக்கினி, ஆசயம் இவைகளில் சஞ்சரிப்பதற்கு சமானன் என்றும், கண்டத்தில் சஞ்சரிப்பதற்கு உதானன் என்றும் பெயர்.

1. ஆமாசயம் என்னும் வயிற்றில் நடக்கும் முதல் ஜீரணப்பகுதிக்கும், பக்குவாசயம் என்னும் சிறுகுடலின் நடக்கும் சீரணத்திற்கும் உதவியாக இவ்விரண்டிற்கும் இடையில் கிரஹணி என்னும் வளைந்த குழாயில் அக்கினி ஆசயம் இருந்து வருகிறது.

*பித்தம்*

உஷ்ணமாகவும், சீராக ஓடும் தன்மையுள்ளதாயும், மஞ்சள் கலந்த நீல நிறமாகவும், ஸத்வகுணம் மிகுதியுள்ளதாயும், உறைப்பு, கைப்பு இச்சுவைகளுள்ளதாயும், முறைதப்பி பக்குவமடைந்த பித்தம் புளிப்பாகவும் இருக்கும். இதன் ஐந்து வகைகள் வருமாறு.

1. அக்கினி ஆசயத்தில் அதாவது கிரஹணியில் பித்தமானது அக்னி ருபமாக இருக்கும். இதற்குப் பாசக பித்தம் அல்லது ஆகாரத்தைப் பக்குவம் செய்யும் பித்தம் என்று பெயர்.

2. தோலில் இருக்கும் பித்தம் அழகு, காந்தி, மேனி இவைகளுக்குக் காரணமாகும். ப்ராஜக பித்தம் என்றுபெயர். அதாவது காந்தியைக் கொடுக்கும் பித்தம் என்று பெயர்.

3. கல்லீரலில் இருந்து அன்ன ரசத்திற்கு வர்ணமுண்டாக்கி ரத்தமாக மாற்றும் பித்தத்திற்கு ரஞ்சக பித்தம் அல்லது வர்ணம் கொடுக்கும் பித்தம் என்று பெயர்.

4. கண்களில் இருந்துகொண்டு உருவத்தைப் பார்க்கும் சக்தியை அளிக்கும் பித்தத்திற்கு லோசக பித்தம் அல்லது பார்வையைக் கொடுக்கும் பித்தம் என்று பெயர்.

5. ஹிருதயத்தில் இருந்துகொண்டு ஞாபகசக்தி, புத்தி இவைகளை உண்டாக்கும் பித்தத்திற்கு சாதக பித்தம் அல்லது அறிவுக்கு உதவும் பித்தம் என்று பெயர்.

**கபம்**

நைப்புள்ளதாகவும், கனமுள்ளதாகவும், வெண்மை நிறமுள்ளதாகவும், குளிர்ச்சியுள்ளதாகவும், தமோகுணமுடையதாகவு, சாதாரணமாக இனிப்புச்சுவையுள்ளதாகவும், சரியான பக்குவமடையாவிட்டால் உப்புச் சுவையுள்ளதாகவும் இருக்கும். அதன் இருப்பிடம்.

1. ஆமாசயம் என்னும் வயிறு
2. தலை

3. கழுத்து

4. இருதயம்

5. பூட்டுகள்

இந்த ஐந்து இடங்களிலும் இருந்துகொண்டு தேகத்திற்கு உறுதியையும், எல்லா உறுப்புகளுக்கும் திறமையையும் அளிக்கிறது. இந்த ஐந்து இடங்களிலும் உள்ள கபமானது ஐந்துவித வேலைகளைச் செய்கிறது.

1. வயிற்றிலுள்ள கபம் செய்யும் வேலைக்குச் கிலேதனம் என்று பெயர். அது ஆகாரத்தை நெகிழச்செய்கிறது.

2. தலையிலுள்ள கபம் செய்யும் வேலைக்கு ஸ்நேஹனம் என்று பெயர். அது நைப்பை உண்டாக்குகிறது.

3. கழுத்திலுள்ள கபம் செய்யும் வேலைக்கு ரசனம் என்று பெயர். அது ருசியை உண்டாக்குகிறது.

4. இருதயத்திலுள்ள கபம் செய்யும் வேலைக்கு அவலம்பனம் என்று பெயர். இது இருதயத்திற்கும் மற்ற பாகங்களிலும் உள்ளகபத்திற்கு ஆதரவாக அமைந்தது.

5. பூட்டுக்களிலுள்ள கபம் செய்யும் வேலைக்கு சிலேஷகம் என்றுபெயர். பூட்டுக்களில் அசைவுக்கேற்ற வழவழப்பை உண்டாக்குகிறது.

## ஸ்நாயு முதலியவைகளில் நிருபணம் ஸ்நாயுக்கள் அல்லது தசைக்கயிறுகள்

உடம்பிலுள்ள மாமிசம், எலும்பு, கொழுப்பு இவைகளை ஒன்றோடொன்று இணைத்துக் காட்டும் தசைக்கயிறுகளுக்கு ஸ்நாயுக்கள் என்று பெயர்.

## அஸ்திகள்

உடம்பிலுள்ள எலும்புகள் ஆகாரத்தின் சாரமான பகுதியிலிருந்து உண்டாக்கப்படுகின்றன. இவைகளுக்கு அஸ்திகள் என்று பெயர்.

## மர்ம ஸ்தானங்கள்

ப்ராணனுடைய நிலைகளாக உடம்பில் பல இடங்களில் ஸ்தானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளுக்க மர்ம ஸ்தானங்கள் என்று பெயர்.

1. மர்ம ஸ்தானங்கள் மொத்தம் 107 என்றும் இவைகளுக்கு மாமிசத்தில் 11 ஸ்தானங்களும், சிரைகளில் 41 ஸ்தானங்களும், ஸ்நாயுக்களில் 27 ஸ்தானங்களும், அஸ்திகளில் 8 ஸ்தானங்களும், பூட்டுக்களில் 20 ஸ்தானங்களும் அமைந்திருக்கின்றன என்றும் அவயவாரியாகப் பார்த்தால் கால்கைகளில் 44 மர்ம இடங்களும், வயிற்றிலும் மார்பிலுமாக 12 இடங்களும், முதுகில் 14 மர்ம இடங்களும் கழுத்துக்கு மேல் 37 இடங்களிலும் அமைந்திருக்கின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மர்ம இடங்களுக்குக் கெடுதி நேரிட்டால் உயர்ந்தது 7 நாட்களிளோ அல்லது 15 நாள் முதல் ஒரு மாதத்திற்குள்ளோ, மர்மத்தில் தைத்திருக்கும் ஆயுதம் முதலியவைகளை எடுத்த பிறகோ, பிராணனுக்கு ஆபத்து ஏற்படும். அங்கம் அல்லது புலன்கள் கெடும் அல்லது தாங்கமுடியாத வலி ஏற்படும்.

ஒவ்வொரு அறுவை சிகிச்சை செய்த பிறகு காரணங் கூறமுடடியாமல் ஏற்படும் மரணங்கள் நிகழாமல் தடுக்கப்படலாம். இவற்றைத் தவிர தோலில் கண்ணுக்குத் தெரியாத அநேக துவாரங்கள் இருக்கின்றன.

## உடம்பின் உட்புறமுள்ள உறுப்புகள்

இடது பாகத்தில் புப்புசம் என்னும் நுரையீரலும், மண்ணீரலும், வலது பாகத்தில் கல்லீரலும் அமைந்திருக்கின்றன.

இவைகளுள் புப்புசம் என்னும் நுரையீரல் கழுத்தில் சஞ்சாரம் செய்யும் உதாரணவாயுவுக்கு ஆதாரமாக அமைந்திருக்கிறது.

மண்ணீரல் ரத்தத்தைக்கொண்டு செல்லும் நாடிகளுக்கு மூலஸ்தானம்.

கல்லீரல் ரஞ்சக பித்தத்திற்கு இருப்பிடம். ரத்தத்தின் உறைவிடம்.

இவற்றைத் தவிர நீரை எடுத்துச்செல்லும் குழாய்களுக்கு ஆதார ஸ்தானமாகவும், நீர்வேட்கையைத் தணிப்பாகவும் அமைந்திருக்கும் அவயவத்திற்குத் திலம் என்று பெயர்.

வயிற்றிலுள்ள கொழுப்புக்கு வலிமையைத் தரும் அவயவத்திற்கு ல்ருக்கா என்று பெயர்.

சுக்கிலம் செல்லும் குழாய்க்கு ஆதாரமாய் இருப்பவை விரைகள். இவை ஆண்மைக்கு ஆதாரமானவை.

சுக்கிலத்திற்கு வழியாக ஏற்பட்டிருப்பது லிங்கம், கர்ப்பஸ்தானத்திற்குக் காரணமாக உள்ளது.

ஆத்மாவும் மனதும் கூடிய சேதனனுக்கு இருப்பிடமும் தாதுக்களின் ஷாரமாகிய ஓஜஸ் தங்கும் இடமும் இருதயமாகும்.

நாபி என்னும் தொப்புளில் இருந்து உடம்பு முழுவதும் பரவியிருக்கும் தமனிகளும், சிரைகளும், வாயுவின் சேர்க்கையினால் எல்லா தாதுக்களோடும் சேருகின்றன.

## பஞ்சபூத உற்பத்தி

இப்பிரபஞ்சத்திற்குக் காரணமாகவுள்ளது மாயை என்னும் சக்தி. அந்த சக்தியையுடையவர் எல்லாம் வல்ல கடவுள். அந்த மாயை சத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களின் தன்மையை உடையதாக இருந்த போதிலும் அதன் ஸ்வரூபத்தை நிச்சயமாக அறிய இயலாது. ஸ்த்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களும் வெளிக்கிளம்புவதனால் மாயை உற்பத்தியாகிறது. அந்த மாயையிலிருந்து சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற குணங்களை ஒன்றன்பின் ஒன்றாக அதிகமாக அடைந்து இனிச்சொல்லப்படும் ஐந்து மகா பூதங்களுக்குக் காரணமாக சப்த தன்மாத்ரை, ஸ்பரிச தன்மாத்ரை, ரச தன்மாத்ரை, கந்த தன்மாத்ரை என்ற ஐந்தும் உண்டாகின்றன. இவைகளையே ஸூக்ஷ்ம பூதங்கள் என்ற சாஸ்திரம் அறிந்தவர் சொல்கிறார்கள். அழிவற்ற பரமாத்மாவிடமிருந்து ஆகாசமும், அதிலிருந்து தேயுவும், தேயு

என்னும் அக்கினியிலிருந்து அப்பு என்றும் ஜலமும், அப்பிவிலிருந்து ப்ருதிவி என்னும் பூமியும் உண்டாகின்றன. பூமியிலிருந்து அன்னம் உண்டாகிறது. அன்னத்திலிருந்து ஜீவராசிகள் உண்டாகி அந்த அன்னத்தினாலேயே வளர்ந்து குறுகிய காலத்தில் மறுபடியும் அதனதன் காரண பூதங்களில் லயித்து விடுகின்றன.

## பூதங்கள் குறைவதால் ஏற்படும் குணாகுணங்கள்

சரீரத்திலுள்ள ப்ருத்வி மண்டலம் நோவது உடம்பிலுள்ள ப்ருத்வி அம்சம் குறைந்தால் மனிதர்களுக்குத் திரை உண்டாகிறது. அப்புவின் அம்சம் குறைந்தால் பசியும், காந்தியும் குறைகிறது. வாயுவின் அம்சம் குறைந்தால் அடிக்கடி நடுக்கம் உண்டாகும். ஆகாசத்தின் அம்சம் குறைந்தால் மரணம் உண்டாகும். இவ்வாறு பஞ்சபூதங்கள் குறைவதால் மரணமும், பஞ்சபூதங்களின் ஆதாரங்கொண்டு ஜீவித்திருக்குந் தன்மையும் ஏற்படுகிறது.

## பஞ்சபூதங்களிலிருந்து வாத, பித்த, கபங்களின் உற்பத்தி

ஆகாசம், வாயு இவ்விரண்டிலிருந்தும் வாதமும் தேயுவிலிருந்து பித்தமும், ப்ருதிவி, அப்புவிலிருந்தும் கபமும் உண்டாகின்றன.

## பஞ்சபூதங்களிலிருந்து ஏழு தாதுக்களின் உற்பத்தி

எலும்பு-பிருதிவியிலிருந்தும், கொழுப்பு - அப்புவி லிருந்தும், ரசம், ரத்தம் - தேயுவிலிருந்தும், மஜ்ஜை, சுக்லம் இவ்விரண்டும் ஆகாசத்திலிருந்தும், மாமிசம் - வாயுவிலிருந்தும் உண்டாகின்றன.

## பஞ்சபூதங்களிலிருந்து அறுசுவைகளின் உற்பத்தி

இனிப்புச்சுவை அப்பு, ப்ருத்வி இவ்விரண்டிலிருந்தும்,
புளிப்புச்சுவை தேயு, ப்ருத்வி இவ்விரண்டிலிருந்தும்,
உப்புச்சுவை அப்பு, தேயு இவ்விரண்டிலிருந்தும்,
கைப்புச்சுவை வாயுவிலிருந்தும்,
உறைப்புச்சுவை வாயு,தேயு இவ்விரண்டி லிருந்தும்,
துவர்ப்புச்சுவை ப்ருத்வி, வாயு இவ்விரண்டி லிருந்தும்,

இவ்விதமாக பஞ்சபூதங்களின் மாறுபாடுகளால் அவைகளிலிருந்து அறுசுவைகளும் உண்டாகின்றன.

## பஞ்சபூதங்களின் நிறங்கள்

பிருதிவி - மஞ்சள்

அப்பு - வெண்மை

தேயு - சிவப்பு நிறம்

வாயு - புகை நிறம்

ஆகாசம் - நீலநிறம்

இவ்விதமாகப் பஞ்சபூதங்களுக்கு நிறங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

## அவயவங்களிலுள்ள பஞ்சபூத குணங்கள்

எலும்பு, மாமிசம், தோல், நாடி, மயிர் ஆகிய ஐந்து ப்ருதிவியின் குணமுடையவை.

உமிழ்நீர், மூத்திரம், சுக்லம், கொழுப்பு, ரத்தம் இவை ஐந்தும் அப்புவின் குணமுடையவை.

பஞ்சபூதங்களில் ஆகாசத்திற்குச் சப்தமும், வாயுவுக்கு சப்தம், ஸ்பரிசம் என்ற குணங்களும், தேயுவுக்குச் சப்தம், ஸ்பரிசம், ரூபம் என்ற குணங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் தேயு, அப்பு, ப்ருதிவி என்ற மூன்று பூதங்களுக்கு மாத்திரம் வர்ணம் உண்டு. ஆனால் இங்கு ஆகாசத்துக்கும் வாயுவுக்கும் வர்ணம் கூறப்பட்டிருக்கிறது. அதன் காரணம் என்னவெனில் மேலே சொல்லிய குணங்கள் ஒன்றோடொன்று கலக்காத பஞ்சமகா பூதங்களுடையவை. இந்த பஞ்சமா பூதங்கள் செயல்படுவதற்கு முன்பு பஞ்சகரணம் என்ற முறையில் சேர்ந்து பஞ்சபூதங்களாகின்றன. அம்முறைப்படி ஒவ்வொரு பூதமும் தன் அம்சம் அரைப்பங்கும் மற்ற 4 பூதங்களில் 1/8 பாகம் வீதமும் சேர்த்துக்கொள்கிறது. ஆகையால் பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றிலும் தேயுவின் அம்சம் சேர்ந்திருப்பதினால் ஆகாசம் வாயு இவைகளுக்கும் வர்ணம் உண்டு.

பசி, தூக்கம், களைப்பு, சோம்பல் இவை அக்கினியின் குணமுடையவை

ஓடுதல், நடத்தல், அசைதல், மடக்குதல், நீட்டுதல் முதலியவை வாயுவின் குணத்தினால் ஏற்படுகின்றன.

காமம், கோபம், ஆசை, பயம், மயக்கம் இவை ஆகாசத்தின் குணமுடையவை.

## ஜீவராசிகளின் பஞ்சபூதத்தின் நன்மை

தாவரம் நீங்கிய மற்ற ஜீவராசிகள் அதாவது ஜங்கம் சீவராசிகள் அதாவது பூமியில் சஞ்சரிப்பவை, நீர்வாழ்வன, ஆகாசத்தில் பறப்பன இம்மூன்று இடங்களிலும் இஷ்டப்படி சஞ்சரிப்பவை என்ற நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பூசாரங்கள் பூமியில் வாழும் பட்சிகள் ஆகாசத்தில் சஞ்சரிககும். தேவர்கள் நினைத்தபடி சஞ்சரிப்பார்கள்.

பூசாரம் முதலிய பிராணிகளில் பஞ்சபூத தேக அமைப்பு பின்வருமாறு:

பூமியில வாழும் யானை, குதிரை, மனிதவர்க்கம், பசு, பாம்பு, புழு, பூச்சி முதலிய மிகப்பெரியதும், கண்ணுக்குத் தெரியாத சிறிது உருவமுள்ளதுமான பிராணிகளின் உடம்பில் ப்ருதிவியின் அம்சம் பாதியும் மற்ற நான்கு பூதங்களின் அம்சம் 1/8 பங்கு வீதம் சேர்ந்திருக்கின்றன.

நீரில் வாழும் பிராணிகளின் உடம்பில் அப்புவின் அம்சம் பாதியும் மற்ற நான்கு பூதங்களின் அம்சம் 1/8 பாகம் வீதமும் சேர்ந்திருக் கின்றன.

ஆகாசத்தில் சஞ்சரிக்கும் பிராணிகளின் தேகதித்தில் வாயுவின் அம்சம் பாதியும் மற்ற பூதங்களின் அம்சம் 1/8 பங்கு வீதமும் சேர்ந்திருக்கின்றன. நன்றாகப் பறக்கமுடியாத கோழி முதலியவைகளின் உடம்பில் பிருதிவியும், வாயுவும் சிறிதளவே ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றன.

நினைத்தபடி சஞ்சரிககும் சக்தியுடைய தேவர்களின் சரீரங்கள் தேயு, வாயு, ஆகாசம் இம்மூன்றின் அம்சங்களால் ஆக்கப்பட்டவை. அதிலும் ஆகாசம், தேயு இவைகளின் அம்சம் அதிகமாக இருக்கிறது. அதனாலேயே தேவர்களுக்கு தேஜஸ் அபார வேகமாகச் செல்லும் சக்தி என்ற இரண்டு குணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மேலே சொன்ன வகைப் பண்பினாலே அவர்கள் அதிக பலமுள்ளவர்களாகவும், நினைத்த காரியத்தை முடிக்கும் திறனுடையவர்களாகவும், இலேசானதும், கண்ணுக்குத் தெரியாததுமான சரீரத்தையுடையவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்விதமாக எல்லா ஜீவன்களுடைய உடம்பின் அமைப்பும் தெளிவாகக் கூறப்பட்டது.

### பஞ்சபூதங்களுக்கு உரிய காலங்கள்

வாயுவிற்குறிய காலம் முதுவேனில்,

தேயுவிற்குரிய காலம் கார்காலமும், கூதிர்ப்பருவமும்,

அப்புவிற்கு முன்பனிக்காலம்,

ஆகாசத்திற்குரிய காலம் பின்பனி,

ப்ருதிவிக்குரிய காலம் இளவேனில்.

## VARIOUS ASPECTS OF PULSE IN DIFFERENT DISEASES

In diseases relating to VATHA the indications of Pulse are as under.

1. a. Assumes the zig - zag posture of a serpent.

   b. Assumes the swimming posture of a fish.

   c. Assumes the form gradually taken by a leech in its sucking out the life blood.

   d. Assumes the form of the shadow of a swinging dola (an Indian hammock made of a cloth.)

In diseases relating to PITHA the indications of Pulse are as under.

2. a. Assumes the jumping motion of a forg in water with the feet spread.

   b. Assumes the flying motion of a crow in air.

   c. Assumes the motion of a parrot shaking its head from one side to the other.

   d. Assumes the attitude of a king - fisher flying in the air watching its prey in water and suddenly darting itself on the water surface withought moving the wings and again going into the air carrying its prey.

In diseases relating to SLESHMA the indications of Pulse are as under.

3. a. Peacock. Asaumes the gait of a peacock which while strolling on the ground shakes its head and frequently contracts its comb.

b. Swan a divine bird, its actions are in conjunction with Vatha and Pitha. In the collapsed stage of Vatha and Pitha, Sleshma frequently changes its place until life expires.

c. It assumes the attitude of an elephant, subdues Vatha, and Pitha, and seems to proclaim itself fearfully. It indicates a shining splendour also.

d. It assumes the attitude of a crowing cock with its head raised and wings beating.

Various results of the different combinations of Vatha, Pitha and Sleshma.

4. Dancing movement

5. a. Symptom of looking at each other.

b. Symptom of blending with each other.

c. Symptom of speaking with each other.

6. Symptom of jumping and mixing with each other.

7. Symptom of attacking each other.

8. Symptom either (1) of a healthy pulse or (2) Meha Rogam i.e., veneral diseases.

9. Symptom when all the three viz. Vatha, Pitha and Sleshma are vitiated.

10. Curving or revolving symptom being those of venera diseases.

11. Wheeling symptom.

12. Flying running symptom.

13. Symptom running either side

14. Symptom of jumping on either side and setting.

15. Symptom of standing on either side or slightly touching and often gliding along.

16. Symptom of dissipation or jumping and blending with each other

17. Entwining with each other and revolving symptom

18. Symptom of roughness, depth and brightness

19. Symptom of acuteness.

20. Symptom of jumping in its own place.

21. Symptom of fleeing in the air or flying and playing the game of hide and seek

22. Symptom of exhaustion or that of shaking its head.

23. Symptom of changing their original places.

24. Whirling symptom.

25. Symptom of spreading out and becoming invisible.

26. Symptom of ulceration in the stomach or ulceration in the womb.

27. Symptom of lightning or that of breathing having stopped.

Persons who are desirous of mastering this science of Pulse, must first grasp without any misapprehension the above said various aspects of pulse in different diseases, and then learn systematically and in their order, the modes and pulse, the knowledge of pulse, the properties of pulse, and the end and aim of the science of Pulse. This is the only way by which a mastery over the science could be obtained.

Pulse is again sub-divided as follows to the nature, action and other characteristics, viz ;

1. one which is faster in rate than normal—Frequent pulse.

2. irregular and bounding pulse—Gost-leap pulse.

3. one that is hard or wiry—Strong pulse.

4. a pulse with no strength—Weak pulse.

5. a tense and firm pulse—Cordy pulse.

6. one with a copious volume of blood—Full pulse.

7. one which is characterised by very high tension—Hard pulse.

8. one which is abnormally slow in a rate—Slow pulse.

9. one in which various beats are dropped—Dropped-beat pulse or Intermittent pulse.

10. a pulse giving the sensation of successive waves —Undulating pulse.

11. pulse beating at a normal rate—Normal pulse.

12. a pulse in which the artery is suddenly and markedly distended—Sharp pulse.

13. a pulse in which the force of the beat is very feeble—Feeble pulse.

14. a small, nearly imperceptible pulse—Formicant pulse

15. a small tense pulse—wiry pulse.

16, a jerky pulse with full expansion, followed by a sudden collapse—Collapsing pulse.

17. a pulse in which some of the beats are strong and others week—Unequal pulse.

18. pulse indicating apoplexy.

19. pulse showing the maturity of a girl.

20. a pulse which gradually tapers away in strength-Decurtate pulse

21. a pulse which strikes the finger rapidly—Abrupt or quick pulse.

22. the pulse seen in emaciated persons over the abdominal aorta—Abdominal pulse.

23. a pulse in which two beats follow each other in rapid succession each group of two being separated from the following by a long interval—Bigeminal or coupled pulse.

24. a pulse with but small excursions and those being irregular—Running pulse.

25. a pulse in which the artery is suddenly and markedly distened—Jerky pulse.

It is so difficult and incomprehensible that many are ignorant of it even today. The result is that none can be found attempting it in preactice with perfect success. There is no royal road to the acquistion of the knowledge of pulse. There are no doubt certain rules and hints for the guidance of physicians; but a mere study of them will not enable any of them to acquire a practical knowledge of pulse. Success in the art depends on experience and practice and the much more Spiritual knowledge.

Feeling the pulse—pulse is generally felt on the radial artery just above the wrist. In males, the right wrist should be slected for examination; while in females and urchins, the left wrist should be chosen, c. f.

It is done by pressing with the physician's three fingers (index, middle and ring) of his right hand, at a place two fingers in length just below the root of the thumb i.e., a little above the wrist. The physician should feel the pulse three times by holding and letting lose the hand of the patient and then diagnose the disease with great care and caution.

## எமது வெளியீடுகள்


| | |
|---|---|
| காலபிரகாசிகா | 100-00 |
| நக்ஷத்திர சிந்தாமணி (பாகம்-II) | 100-00 |
| நக்ஷத்திர சிந்தாமணி (பாகம்-III) | 200-00 |
| அமரகோசம் (பாகம்-I) | 90-00 |
| அமரகோசம் (பாகம்-II) | 60-00 |
| அமரகோசம் (பாகம்-III) | 60-00 |
| பிரகதீஸ்வர மாகாத்மியம் | 43-00 |
| ஜைனிஸம் கேட்லாக் | 10-00 |
| தக்ஷிணாமூர்த்தி ஸம்ஹிதை | 35-00 |
| காயத்ரீ கோசம் | 35-00 |
| கீதகோவிந்தம் | 25-00 |
| கல்பலதா (ஸ்ரீருத்ரபாஷ்யம்) | 22-00 |
| பாணினீய தாதுபாடம் | 30-00 |
| விருத்தரத்னாவளி | 30-00 |
| பலவதி | 120-00 |
| நந்திநாகரி சுவடிகளின் அட்டவணை | 25-00 |
| பிரபஞ்சசாரசார ஸங்கிரஹம் (பாகம்-I) | 180-00 |
| பிரயோக ரத்னமாலா | 55-00 |
| ரத்ன பரீக்ஷை | 40-00 |
| சப்தம் தாளம் சொற்கட்டு | 40-00 |
| ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ தீபிகா | 100-00 |
| ஸ்தோத்ர ராமாயணம் | 25-00 |
| நாககுமார காவியம் | 55-00 |
| விமானார்ச்சன கல்பம் (பாகம்-II) | 75-00 |
| சூலினிகல்பம் | 50-00 |
| சூர்யசதகம் | 50-00 |
| தஞ்சை நாயக்கர் வரலாறு | 205-00 |
| யதிராஜவிஜயம் | 35-00 |
| பிரபோதசந்திரிகை | 70-00 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**

தஞ்சாவூர்

**மற்றும் இயக்குநர்**

சரசுவதி மகால் நூலகம்.